தொல்காப்பியம்

பொருளதிகாரம்

(அகத்திணையியல் - புறத்திணையியல்)

MARA PUBLIC

நச்சினார்க்கினியர் உரை

(குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ., பி.எச்.டி.,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1986

முதற் பதிப்பு: 1986

திருப்பனந்தாள் அறக்கட்டளை வெளியீடு

விலை ரு. 25 - 00

அச்சிட்டோர் :
கே. பி. டி. இண்டஸ்ட்ரி
சி. கொத்தங்குடி
அண்ணாமலை நகர் - 608002

முன்னுரை

தமிழில் காணப்பெறும் பழம் பெரும் இலக்கண முழுநூலாக விளங்குவது தொல்காப்பியம் ஒன்றே. தொல்காப்பியர் இந் நூலைத் தொலை நோக்கில் எண்ணி இயற்றியுள்ளார் என்பது அறிஞருலகம் நன்கு உணர்ந்ததே. திறக்க இயலாத பெட்டகமாய்த் திகழ்ந்த இந்நூலுக்குத் திறவு கோல்களாக இளம்பூரணர் உரை முதலில் எழுந்தது. அவர்க்குப்பின் சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டிலும் உரைகண்ட சான்றோராக விளங்கினார். அவரைப் போன்றே தெய்வச் சிலையார், கல்லாடர் போன்றோரும் சொல்லதிகாரத்திற்கு மட்டிலுமே உரை எழுதினர். இளம்பூரணரை அடுத்து நச்சினார்க்கினியர், ஒருவரே முழு நூலுக்கும் உரைகாண முயன்றவர் எனும் பெருமைக் குரியவர். எனினும் பொருளதிகார உரையில் சில பகுதிகட்குச் செய்த உரை இன்று கிடைத்திலது. மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் என்னும் நான்கு இயல்களுக்குப் பேராசிரியர் உரை போற்றிக் கொள்ளும் வழக்கு இருந்து வந்துள்ளது.

எழுத்துக்கும் சொல்லுக்கும் உள்ள ஆழ்ந்த சிந்தனை இளம்பூரணர் உரையில் பொருளதிகாரத்தில் காணப் பட்டிலது. பொருளதிகார உரையைக் காலத்தாழ்ச்சி கருதி விரைந்து முடித்தனரோ என்ற ஐயம் எழ வாய்ப்புள்ளது. நச்சினார்க்கினியர், அகத்திணை, புறத்திணை, களவியல், கற்பியல்பொருளியல் என்னும் ஐந்தியல்களுக்கு விரிவான உரை அமைத்துச் சென்றுள்ளார். இலக்கியப் புலமையும், இலக்கணப் புலமையும், ஒருங்கேயமைந்தபெரும்புலவர் என்று இவர் கருதப்பட்டுள்ளார். பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி, கலித்தொகை குறுந்தொகையிற் சில பாடல்கள்இவர் தம் கருத்து வண்ணத்தால் நயம் பெற்ற இலக்கியங்களாகும். 'உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர்' என இவர் பாராட்டப் பெற்றமைக்கு இவர்தம் அகல உரைகளே காரணம் எனலாம். அவருடைய உரைவண்ணம் பெற்ற அகத்திணையியல் புறத்திணையியல் என்னும் இரு பகுதிகளும், தனித் தொகுதியாக வெளி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, இலக்கண நூல்கள் பலவற்றுக்குக் குறிப் பெழுதிப் பதிப்பித்தவர் என்னும் பெருமைக் குரியவர். மாணவிகள் எளிதில் விளங்கிக் கொள்ளுமாறு அக்

குறிப்புக்களை எழுதியுள்ளார். அவர் பொருளதிகாரத்தின் ஒரு பகுதியாகிய அகத்திணையியல் புறத்திணையியல்களை நச்சினார்க்கினியர் உரையுடன் வெளிக் கொணர்கிறார், என்பது பி.லிட்., எம்.ஏ., எம்.ஓ.எல்., மாணவர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் இனிய செய்தியாகும். உழைப்பு மிக்க இவர் தொடர்ந்து பிற பொருளதிகாரப் பகுதிகளையும் வெளியிட வாழ்த்துகிறேன். இவரின் பொருளமைப்பு என்றும் பகுதி அகத்திணை புறத்திணை இயல்களின் உள்ளீட்டைச் சுருங்க விளக்கும் முறையில் அமைந்துள்ளது பாராட்டற் குரியது. நூற்பாக்களின் இறுதியில் விளக்கவுரையும் கருத்துப் பொருளையும் எழுதித் தெளிவுபடுத்தியுள்ளார். ஆங்காங்கு இளம்பூரணரின் உரைக் குறிப்புக்களையும் இயைபு படுத்திக் காட்டியுள்ளார். சிக்கலான இடங்களைத் தெளிவுபடுத்தியுள்ள பாங்கு பாராட்டிற் குரியதாகும்.

பழம் நூல்களை அச்சிடும் பணியில் பல்கலைக் கழக மானியக் குழு ஊக்கம் தந்து பொருளுதவி செய்வது போற்றுதற் குரியதாகும். அவ்வாற்றான் மானியக் குழுவின் உதவியுடன் இப்பதிப்பு வெளி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்களின் சொல்லதிகாரத்தை வெளியிட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இப் பொருளதிகார உரையையும் வெளியிடுவது மற்றொரு சிறப்பாகும். இந்நிலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பல்லாற்றானும் செழித்துப் பொலிவுற அயராது சிந்தித்துச் செயற்பட்ட அமரர் முத்தையவேள் அவர்கள் பெரிதும் நன்றிக்குரியவர்கள் ஆவார்கள். அருமைத் தந்தையார் சுவட்டில் ஆர்வ நடையிடும் ஆற்றல்மிகு இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் தமிழுக்குச் செய்து வரும் ஆக்கமும் ஊக்கமும், நினைந்து போற்றுதற்குரியவை. செயல்முனைவர் துணைவேந்தர் பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்கள் எல்லா வகையிலும் பதிப்புத்துறை சிறந்திடத் தொடர்ந்து பாடுபடுகிறார்கள். அவர்கட்கும் என்நன்றி உரியதாகும். இப் பதிப்பின் பயனைத் தமிழுலகம் பெற்றுய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அண்ணாமலை நகர்
4—1—85

டாக்டர். ஆறு. அழகப்பன்
தமிழ்த்துறைத்தலைவர்

பதிப்புரை

இற்றைக்கு இருக்கும். தமிழ் இலக்கண நூல்களில் தொல்காப்பியம் மிகப் பழமையுடையதாகும் இது எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரங்களை உடையது. பொருளதிகாரத்தில் முழுமையாக இளம்பூரணர் உரை உள்ளது. முற்பகுதியாக விளங்கும் அகத்திணையியல் புறத்திணையியல் களவியல் கற்பியல் பொருளியல் ஆகிய ஐந்து இயல்களுக்கும், பிற்பகுதியில் செய்யுளியளியலுக்கும் நச்சினார்கினியர் உரையும், பிற்பகுதியாக விளங்கும், மெய்ப்பாட்டியல் உவமையியல் செய்யுளியல் மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கும் பேராசிரியர் உரையும் உள்ளன.

பொருளதிகாரத்திற்குரிய இவ்விருவர் உரைகளையும் (செய்யுளியல் – நச்சினார்க்கினியம் நீங்கலாக) நன்கு ஆராய்ந்து வெளியிடுதற்குப் பல்கலைக்கழக மானிய உதவி கிடைக்கப் பெற்றது.

அவ்வகையில் எழுதப்பெற்ற முதல் இயல்களும் இதுபொழுது வெளிவருகின்றன. தொல்காப்பியரைப் பற்றியும் நச்சினார்க்கினியர் தம் உரைத்திறன் பற்றியும் அடுத்து வெளிவர இருக்கும் மூன்று இயல்களின் முன்னுரையில் விளக்கப்பெறும்.

இவ்வாய்வுரை எழுதுதற்கு உதவிய பல்கலைக்கழக மானியக் குழுவினர்க்கு என் நன்றியுரியதாகும். இவ்வகையான நூல்களை வெளியிடுதற்கு உரிய அறக்கட்டளையைப் புரந்தருளி அருள் பாலித்து வரும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனியபல நூல்களைத் தொடர்ந்து வெளியிடற்கு ஏதுவாக விளங்கும் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராய் விளங்குபவர்களும் என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர்களுமான மேதகு டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கட்கும், துணைவேந்தராக விளங்கும் மேதகு சை. வே. சிட்டிபாபு அவர்கட்கும் என் நன்றியைப் பெரிதும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொல்காப்பிய இலக்கண நூல்கள் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் பதிப்புக்களாக வெளிவர பேருதவி புரிந்தவர். அதுபொழுது வெளியீட்டுத்துறைப் பொறுப்பாளராக இருந்தவரும் இன்றையத் தமிழ்த்துறைத் தலைவராகவும் விளங்கும் கலைமாமணி டாக்டர் ஆறு அழகப்பன் ஆவார்கள். அத்தமிழ்ப் பெருந்தகைக்கும் என் நன்றியுரித்தாகுக.

கு. சுந்தரமூர்த்தி

உ

அகத்திணை இயல்

பொருளமைப்பு

பொருளதிகாரத்தில் கூறப்பட்ட பொருள் அகம், புறம் என இருவகைப்படும். அகமாவது ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப்பிறந்த பேரின்பம். அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கு ஒருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதாம். இவ்வாறன்றி எல்லாராலும் ஒருங்கு துய்த்து உணரப்படுவதும், இவ்வாறு இருந்ததெனப் பிறருக்குக் கூறப்படுவதுமாகிய பொருளைப் புறம் என்பர்.

இவ்வதிகாரத்தில் அகப்பொருள் பற்றி வரும் இயல்கள் நான்காம்.

1. அகத்திணையியல் 2. களவியல் 3. கற்பியல் 4. பொருளியல். புறப்பொருள் பற்றி வருவன இரு இயல்களாகும். ஒன்று புறத்திணையியல், பிறிதொன்று மரபியல். ஏனைய இயல்கள் இருதிணைக்கும் ஒப்ப உரியன.

நுவலும் பொருள்:

கைக்கிளையும், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என வரும் ஐந்திணைகளும், பெருந்திணையும் அகத்திணை எனப் பெறும். திணை – ஒழுக்கம். எனவே இவை அக ஒழுக்கம் பற்றியவை என விளங்கும்.

கைக்கிளை:

கை – மருங்கு; பக்கம். கிளை – உறவு, கேண்மை. எனவே ஒரு மருங்கு பற்றிய கேண்மை என்பது பொருளாம். அஃதாவது

தலைவன் தலைவியாகிய இருவருள் ஒருவரிடத்து மட்டுமே நிகழும் அன்பாகும். இதன் இலக்கணத்தை இவ்வியலில் ஆசிரியர் இரு நூற்பாக்களில் கூறுவர். காமம் நிரம்பாத இளமை வாய்ந்த பெண்ணொருத்தியினிடத்து ஒரு தலைவன் இவள் எனக்கு வாழ்க்கைத் துணையாக வேண்டுமெனக் கருதி, அவள்பால் தனக்கு ஏற்பட்ட காமநோய் பெரிதும் வருத்துகின்றது எனக்கூறி, அவளும் அவள் தமரும் தமக்கு இவ்வகையால் தீமை செய்தாராகவும், ஆயினும் தான் அதற்கு மாறாகத் தீங்கு செய்யானாகவும், அவளொடு இவ்வாற்றான் தொடர்ந்து பேசி அவள் தன் இளமையால் அதற்கு மாறு கூறாதவளாகத் தான் மட்டும் அவளிடத்தில் பேசிய வகையில் இன்புறுவதாகும். இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் காட்சி ஐயம் துணிவு குறிப்பறிதல் ஆகிய நான்கும் கைக்கிளையாம்.

ஐந்திணை:

இவ்வைந்திணைக்கும் முதல் கரு உரிப்பொருள் கூறுவாராக இவற்றின் இலக்கணத்தை ஆசிரியர் இவ்வியலில் விரித்துரைக்கின்றார். முதற்பொருளாவது அவ்வத்திணைக்குரிய நிலனும், பொழுதும் ஆம். கருப்பொருளாவது அவ்வத்திணைக்குரிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில் யாழ், பூ, நீர், ஊர் முதலியவையாம். உரிப்பொருளாவது அவ்வத்திணைக்குரிய மக்களின் அக ஒழுக்கமாகும்.

குறிஞ்சி:

முதற் பொருள்:

நிலம் : மலையும், மலை சார்ந்த இடமும் (மைவரை உலகம்.)

பொழுது : இருவகைப்படும்.

பெரும்பொழுது: கூதிர், முன் பனி.

சிறு பொழுது : யாமம்.

கருப்பொருள்:

தெய்வம் : சேயோன் (முருகன்)

உணவு : ஐவன நெல், தினை, மூங்கிலரிசி

விலங்கு : புலி, யானை, கரடி, பன்றி.

மரம் : அகில், ஆரம், தேக்கு, திமிசு, வேங்கை.
பறவை : கிளி, மயில்.
பறை : முருகியம், தொண்டகம்.
தொழில் : தேன் அழித்தல், கிழங்கு அகழ்தல், தினை முதலியன விதைத்தல், கிளி கடிதல்.
யாழ் : குறிஞ்சி.
பூ : காந்தள், வேங்கை, சுனைக்குவளை.
நீர் : அருவி, சுனை.
ஊர் : சிறுகுடி, குறிச்சி.
உரிப்பொருள் : புணர்தலும், புணர்தல் நிமித்தமும்.

முல்லை :

முதற் பொருள் :
நிலம் : காடும், காடு சார்ந்த இடமும் (காடுறை உலகம்)
பொழுது : இருவகைப்படும்.
பெரும் பொழுது : கார்காலம்
சிறு பொழுது : மாலை.

கருப்பொருள் :

தெய்வம் : திருமால் (மாயோன்)
உணவு : வரகு, சாமை, எள், கொள், பயறு முதலியன.
விலங்கு : உழை, புல்வாய், முயல்.
மரம் : கொன்றை, குருந்து.
பறவை : கானக்கோழி, சேவல்.
பறை : ஏறுகோட்பறை
தொழில் : நிரை மேய்த்தல், வரகு முதலிய புன்செய் உணவுகளை விளைவித்தல்.
யாழ் : முல்லை யாழ்.
பூ : முல்லை, பிடவு, தளவு, தோன்றி.
நீர் : கான்யாறு.
ஊர் : பாடி, சேரி, பள்ளி.
உரிப்பொருள் : இருத்தலும், இருத்தல் நிமித்தமும்.

மருதம்:

முதற்பொருள்	:	
நிலம்	:	வயலும், வயல் சார்ந்த இடமும், (தீம்புனல் உலகம்)
பெரும்பொழுது	:	நூலாசியர் கூறவில்லை. எனினும் நச்சினார்க்கினியர் அறுவகைப் பெரும்பொழுதும் உரிய என்பதன்றிக் கார், இளவேனில், முதுவேனில் ஆகியவற்றைக் கொள்ளலாம் என்பர்.
சிறுபொழுது	:	வைகறை, விடியல்.

கருப்பொருள்:

தெய்வம்	:	இந்திரன் (வேந்தன்)
உணவு	:	செந்நெல், வெண்ணெல்.
விலங்கு	:	எருமை, நீர்நாய்.
மரம்	:	வஞ்சி, காஞ்சி, மருதம்.
பறவை	:	தாரா, நீர்க்கோழி.
பறை	:	மண முழவு, நெல்லரிகிணை.
தொழில்	:	நடுதல், களைகட்டல், அரிதல், கடாவிடுதல்.
யாழ்	:	மருத யாழ்.
பூ	:	தாமரை, கழுநீர்
நீர்	:	ஆற்றுநீர், மனைக்கிணறு, பொய்கை.
ஊர்	:	ஊர்கள்.
உரிப்பொருள்	:	ஊடலும், ஊடல் நிமித்தமும்.

நெய்தல்:

முதற்பொருள்	:	
நிலம்	:	கடலும், கடல் சார்ந்த இடமும்,(வருணன் மேய பெருமணலுலகம்)
பொழுது	:	இருவகைப்படும்.

பெரும்பொழுது : ஆசிரியர் கூறவில்லை எனினும் நச்சினார்க்கினியர் அறுவகைப் பெரும்பொழுதும் உரிய என்பதன்றி, கார், இளவேனில், முதுவேனில் ஆகிய வற்றைக் கொள்ளலாம் என்பர்.

சிறுபொழுது : ஏற்பாடு, அஃதாவது மாலைக்கு முற்படு நேரம்.

கருப்பொருள்:

தெய்வம் : வருணன்
உணவு : மீனையும் உப்பையும் விற்று அதனால் கொள்ளும் உணவும், மீன் உணவுமாம்.
விலங்கு : உமண்பகடு போல்வன.
மரம் : புன்னை, ஞாழல், கண்டல்.
பறவை : அன்னம், அன்றில்.
பறை : மீன்கோட்பறை
தொழில் : மீன் படுத்தல், உப்பு விளைத்தல், அவை விற்றலுமாம்.
யாழ் : நெய்தல்
பூ : கைதை, நெய்தல்.
நீர் : சுனை, மணற்கிணறு, உவர்க்குழி.
ஊர் : பட்டினமும், பாக்கமும்.
உரிப்பொருள் : இரங்கலும், இரங்கல் நிமித்தமும்.

பாலை:

முதற் பொருள் :
நிலம் : முல்லையும் குறிஞ்சியுமே காலப்போக்கில் திரிந்து இத்தகைய வெம்மை நிலமாகுமென்பது பண்டைச் சான்றோர்க்குக் கருத்தாகலின் தொல்காப்பியர் இதற்கென நிலம் வகுத்திலர்.
பெரும்பொழுது : இருவகை – வேனில், பின்பனி.
சிறுபொழுது : நண்பகல்,

கருப்பொருள்:

தெய்வம்	:	ஞாயிற்றைத் தெய்வமாக்கி அதனிற் தோன்றிய காற்றினையும், மழையையும் அத்தெய்வப் பகுதியாக்கிக் கூறுப. எல்லாத் தெய்வத்திற்கும் அந்தணர் அவி கொடுக்குங்கால் அங்கி ஆதித்தன்கட் கொடுக்குமென்பது வேத முடிபாகலின், ஆதித்தன் அவ்வெல்லா நிலத்திற்கும் பொதுவென மறுக்க என்பர் நச்சினார்க்கினியர். குறிஞ்சி பாலையாய்த்திரியின் குறிஞ்சிக்குரிய தெய்வமே பாலைக்குத் தெய்வமெனவும், முல்லை பாலையாய்த் திரியின் முல்லைக்குரிய தெய்வமே பாலைக்குத் தெய்வமெனவும் கூறுவர்.
உணவு	:	வழிப்பறி செய்தன, சூறை கொண்டன.
விலங்கு	:	வலியிழந்த யானை, புலி, செந்நாய்.
மரம்	:	இருப்பை, ஓமை, உழிஞை, ஞெமை.
பறவை	:	கழுகு, பருந்து, புறா.
பறை	:	சூறைகோட்பறை, நிறைகோட்பறை.
தொழில்	:	வழிப்பறிசெய்தல், சூறைகோடல்.
யாழ்	:	பாலை யாழ்.
பூ	:	மரா, குரா, பாதிரி.
நீர்	:	அறுநீர்க்கூவல், சுனை.
ஊர்	:	பறந்தலை.
உரிப்பொருள்	:	பிரிதலும், பிரிதல் நிமித்தமும்.

இக்கருப்பொருள்களும் காலங்களும் அவ்வந் நிலத்திற்கே உரியவாகாது பிறநிலங்களில் பயின்று வரினும் அவை வழுவாகா; ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு வருதலைத் திணைமயக்கம் என்பர். கருப்பொருள் இவ்வாறு மயங்கி வருமேயன்றி உரிப்பொருள் மயங்கா. நால்வகை நிலத்திற்கும் உரியவாகக் கூறப்பட்ட மக்கட் பெயர்கள் இருதிறத்தனவாம். அவை நால்வகை நிலத்தும்

மரீஇ வந்த குலப்பெயரும், அவ்வத்திணைக்குரிய தலைமக்கள் பெயரும் ஆம். இவர்களுள் முன்னையோர் அவ்வந்நிலத்திலும், வதிந்து வரும் பொது மக்களாவர்.

குறிஞ்சி :

குலப்பெயர் : கானவர், வேட்டுவர், குறவர், வேட்டுவத்தியர், குறத்தியர் முதலியன.
தலைமக்கள் பெயர் : வெற்பன், சிலம்பன், பொருப்பன், கொடிச்சி முதலியன.

முல்லை :

குலப்பெயர் : கோவலர், இடையர், ஆயர் ஆய்ச்சியர் முதலியன.
தலைமக்கள் பெயர் : அண்ணல், தோன்றல், மனைவி முதலியன.

நெய்தல்:

குலப்பெயர் : நுளையவர், பரதவர், நுளைத்தியர் முதலியன.
தலைமக்கள் பெயர் : கொண்கன், துறைவன் முதலியன.

மருதம்:

குலப்பெயர் — உழவர், உழத்தியர்.
தலைமக்கள்பெயர் — மகிழ்நன், ஊரன், மனையோள் முதலியன

பாலை:

குலப்பெயர் — எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் முதலியன. தலைமக்கள் பெயர் — மீளி, விடலை, காளை முதலியன.

எனவே அவ்வந்நிலத்திலும் வாழ்வாரைத் தலைமக்கள் எனவும், பொதுமக்கள் எனவும் பாகுபடுத்தியுள்ளமை புலனுகும். இவர்களுள் பொது மக்களாய் உள்ளோரும் ஒரோவழித் தலைமக்களாதலும் உண்டு. முல்லைநிலத்திற்குரிய ஆயரும், குறிஞ்சி நிலத்திற்குரிய வேட்டுவரும் இவ்வாறே ஏனைநிலங்கட்குரியவரும் தலைமக்களாதலும் உண்டு. இவ்வாறே ஒருவர் மாட்டு இருந்து பணி

செய்வோரும், பிறர் ஏவும் தொழிலை அவ்வப்போது செய்து வருவோரும் கைக்கிளை, பெருதிணைக்குரிய தலைவராதற்கு உரியவர். எனினும் இவர்கள் அனைவரும் தலைமக்களும் சிறந்தவரா கார். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், குறுநிலமன்னர், அரசரால் சிறப்புப்பெயர் பெற்றோர் ஆகியோரே தலைமக்களா வதற்குச் சிறந்தவராவார்.

பிரிவுகளும் அவற்றிற் குரியாரும்:

ஓதற்பிரிவு: இப்பிரிவு தலைவன் இதுகாறும் பயிலாதிருந்து கற்றற்காகப் பிரிகின்றான் என்பதன்று. முன்னமேயே நன்கு கற்ற தலைமகன் கற்றாருள் கற்ற செலச் சொல்லவும், தான் கற்ற மிக்காருள் மிக்க கொள்ளவுமே இப்பிரிவை மேற்கொள்வன்.

இதற்குரிய தகுதியுடைடேயார் அந்தணர், அரசர், வணிகர், தகுதியுடைய வேளாண் மாந்தர், குறுநில மன்னர் ஆகியோராவர்.

பகைவயிற்பிரிவு: இது இருவகைப்படும். ஒன்று முடியுடை வேந்தர் தம் பகைவரைப் பொருதற்குத் தாமே செல்வதாம்.

பிறிதொன்று அவ்வாறு சென்ற வேந்தன் தனக்கு நால்வகை நிலங்களும் திறையாகப்பொருந்திய தலைமையால் அந்நிலத்து மக்கள் நெறிமுறை தப்பாது வாழப் பின்னர்ப் பிரிந்து செல்வதாம். அவர்க்காகப் பிற முடியுடை மன்னரோ அன்றிக் குறுநில மன்னரோ சென்று வருதலும் உண்டு.

தூதிற் பிரிவு: அஃதாவது அரசர் தமக்குள் ஏற்பட்ட பகைமையை நீக்கவோ அன்றி நாட்டின் நன்மைக்காகவோ அரசரிடத்துத் தூது போதலாம். இப் பிரிவிற்குரியவர் அரசர், அந்தணர், வணிகர், குறுநிலமன்னர், ஆகிய நால்வரும் ஆவர்.

பொருள்வயிற்பிரிவு:

கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறை கொடாது நெறிப்பட வாணிகம்செய்யும் வணிகர் இப்பிரிவிற் குரியவராவர். இவருக்கு இப்பிரிவு சிறப்பேனும் பிற இனத்தவரும் இப்பிரிவிற்குரியரே ஆவர். அந்தணர், ஓதலும் தூதும் மேற் கொண்டு பொருள் ஈட்டுவர். குறுநில மன்னரும் அவ்வாறு பொருள் ஈட்டுவர். உழுவித்துண்போரும் அவ்வழி நின்றே பொருளீட்டுவர். உழுதுண்பார் வாணிகத்தால் பொருளீட்டுவர். வேளாண்மாந்தர் இப்பிரிவிற்குமட்டுமே யன்றி அரசர்க்கு வரும் ஆக்கம் கருதிப் பகையிற் பிரிவையும், தூதிற் பிரிவையும் மேற் கொள்ளுதலும் உண்டு.

மேற்கூறிய ஐவகைப் பிரிவுகளுள் ஓதற்பிரிவு, தூதிற்பிரிவு, பொருள்வயிற் பிரிவு, ஆகிய மூன்று பிரிவினும் தலைவியை அழைத்துக் கொண்டு தலைவன் சேறல் வழக்கமில்லை.

சில பிரிவு நெறிகள்:

களவுக்காலத்துத் தலைவன் தலைவியை அவள் தமரிடத் தினின்றும் பிரித்து உடன் கொண்டு செல்லுதலும், அவ்வாறன்றித் தலைவன் தானே செல்லத் தலைவி பெரிதும் வருந்துவதும், பாலை நிலத்து ஒழுகலாறு எனப்படும். தலைவியைத் தலைவன் உடன் கொண்டு போம் பொழுது, புணர்ச்சி நிகழ்தற்கு இடையூறின் றேனும் தலைவியின் சுற்றத்தார்பின்வந்து இடையூறு செய்யக்கூடும் என்ற எண்ணமே இருவருக்கும் எழுதல் இயற்கை. ஆதலின் உடன் கொண்டு போதலையும் பிரிவென்றார். இவ்வொழுகலாறு பாலைக் குரிய இருவகை வேனிற்கண் நிகழும். தலைவன் பிரிந்தக்கால் தலைவி ஆறுதல் கொள்ளாது பெரிதும் வருந்துதல் இரங்கற் பொருளாமேனும் தலைவன் பிரிய இது நிகழ்தலின் இதனையும் பாலை என்றார். இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் காட்சி ஐயம் துணிவு குறிப்பறிதல் ஆகிய நான்கும் உடன் போக்கிற் குரிய இருவகை வேனிற் காலத்து நிகழ்வனவாம்.

பெண்மையின் பெருந் தகவு:

கைக்கிளை முதல் பெருந்திணை ஈறாக உள்ள எழுதிணையின் கண்ணும் பெண்பாலார் மடலேறுதலாகச் சொல்லும் மரபின்று. புறத்திரட்டு போன்ற நுல்களில் மடல் ஏறுவாளாகக் கூறும் நிலை இருப்பினும் செயலளவில் மடலேறுதல் இன்றாம்.

உடன்போக்கில் நிகழும் கூற்றுவகை :

(அ) நற்றாய்: தலைவியும் தலைவனும் உடன் போகிய காலத்து அம்மகட் பயந்த நற்றாய் தன்னையும் தலைவனையும் தன் மகளையும் நினைந்து இறப்பு நிகழ்வு எதிர்வாகிய முக்காலத்தும் வரும் நல்வினை தீவினைக்குரிய செயல்களைத் தன் நெஞ்சிற்கு விளக்கி வருந்துவாள். உடன் போக்கால் தலைவி ஆண்டிருக்கும் விலங்கு புள் ஆறலைப் போர் முதலியன கண்டு அஞ்சுவாளோ என்றும், தன் சுற்றத்தார் வந்து ஏதம் விளைவிப்பாரோ என எண்ணி அஞ்சு வாளோ என்றும், தலைவி, தலைவன் மனைக்கே சென்றுவிடுவளோ அன்றி மீண்டும் தன் மனைக்கே வருவாளோ என்றும், பல்லாற்று னும் வருந்தி, பல்லி முதலியவற்றின் சொற்கேட்டும், சான்றோர் தம் நற்சொல் கேட்டும், தெய்வம் முதலிய விரிச்சி கேட்டும் வருந்துவள். தோழியது ஆற்றாமை கண்டும் தலைவியைத் தேடிப்போய் காணாது வந்தாரைக் கண்டும் வருந்துவள். இவ் விதத்திலெல்லாம் நற்றாய் கூற்று நிகழ்த்துவாள். இவ்வாறு வருந்தும் நற்றாய் தம் மனையயற் கண் இருக்கும் சேரிவரையிலும் தலைவியைத்தேடி வருந்தலும் உண்டு. இவ்வாறு மனையயற்கண் பிரியினும் அதுவும் பிரிவேயாம்.

(ஆ) தோழி: தலைவன் தலைவியை அழைத்துச் செல்லாவிடின் அவளுக்கு வரும் துன்பம் இதுவென அவ்விருவரிடத்தும் கூறுவள். அவ்வாறு கூறக்கேட்ட தலைமக்கள் போதற்கு ஒருப்படு மிடத்தும், அவர்களை வழியனுப்புமிடத்தும், தாயாரைப் பிரிதலால் அவர்க்கு நேறும் துன்பத்திடத்தும் தோழி வருந்திக்கூறுவள். தலைவியைத்தேடிடின் சென்று அவளை மீட்டற்கு நினைந்த தாயாரின் உள்ளத்தைத் தடுத்து நிறுத்துமிடத்தும் கூற்று நிகழ்த்துவள். தலைவியைப்பிரிந்ததனால் புண்ணுற்று வருந்தும் செவிலிக்கு ஆறுதல் கூறுமிடத்தும் கூற்று நிகழ்த்துவள்.

(இ) கண்டோர்: தலைவனும் தலைவியும் உடன் போதலை வழியில் கண்டோர் பொழுதாயிற்றென்றும், அந்நேரத்தில் செல்லும் வழியில் ஆறலைப்போரானும், மா, புள் ஆகியவற்றானும் தீங்கு வருமே என்றும் அஞ்சிக் கூற்று நிகழ்த்துவர். நீர் செல்லும் ஊர் மிகத்தொலைவில் உள்ளது; எம் ஊரோ மிக அண்மையில் உள்ளது. ஆதலின் எம்மூர்க்கண் தங்கிசெல்லலாம் என்றும் கூறுவர். தம் உரை கேளாது செல்லும் தலைமக்களைத் தடுத்து அன்பு மீதூர அவர்களைத்தம் ஊர்க்கண் இருத்துவர். அன்றி அவர்கள் வழி நின்று போய்வருக என்று கூறியும் அனுப்புவர். தலைவியைத் தேடிச்செல்லும் தாயாரைத் தடுத்தும் நிறுத்துவர். ஒரோவழி விடுப்பவும் செய்வர். பிரிந்து மிகவும் தொலைவில் செல்ல வேண்டுமெனக் கருதும் தலைமக்களின் செலவிடத்தும் அவர்கள் மீண்டு வருமிடத்தும் சில கூறுவர்.

(ஈ) தலைவன்: தலைமகளை உடன் அழைத்துச் செல்லுதற்கு ஒருப்படாத சுற்றத்தாரிடத்தும், இற்செறிப்பினால் புறத்தே செல்ல இயலாத காலத்தும், உடன் போக்கிற்கு ஒருப்பட்ட தோழியிடத்தும், தலைவியை அழைத்துச் செல்லத்துணிந்த விடத்தும், அன்றி அழைத்துச்செல்லும் அருமை கருதி விடுப்பினும் இடைச்சுரத்தே தலைவியின் தமர் வந்து எய்தித் தலைவியை அழைத்துச்செல்ல விரும்ப, தலைவி தமர்பாற் படாது தலைவன் பாற்பட்டு இருக்குமிடத்தும், வாழ்க்கை நாள் சிலவாதல் கருதிப் பொருள் செய வேண்டும் என ஒரு கால் உள்ளம் செல்லப் பிறிதொருகால் இளமையது அருமை நினைந்து அவ்வுள்ளம் ஒருப் படாது இருந்த விடத்தும், தாளாற்றித்தந்த பொருளே தக்க தெனக்கருதி ஒருகால் உள்ளம் செல்லப் பிறிதொருகால் தத்தம் தகுதிக்கேற்பப் பொருள் ஈட்ட வேண்டுமே யன்றி எவ்வாற்றானும் பொருள் ஈட்டல் தகுதியன்றெனக்கருதும் தகுதியது அமைதி நினைந்து அவ்வுள்ளம் ஒருப்படாதிருந்த விடத்தும், இளமையால் வரும் இளிவரவு நினைந்து பொருள் செய வேண்டும் என ஒருகால் உள்ளம் செல்லப் பிறிதொருகால் பொருளுடைமைகாலத்து தமக்கு இருந்த உயர்ச்சி கருதி அவ்வுள்ளம் ஒருப்படாதிருந்தவிடத்தும், பிரிந்த இடத்து நிகழும் அன்புப்பெருக்கம் கருதிப் பொருள் செய வேண்டுமென ஒருகால் உள்ளம் செல்லப் பிறிதொருகால்

பிரிவாற்ருமை நினைந்து அவ்வுள்ளம் ஒருப்படாதிருந்த விடத்தும், மெய்ப்பொருளையும் அதனை அடைதற்கேற்ற ஒழுக்கத்தையும் கருதிப்பிரியுமிடத்தும், தமக்கேற்ற புகழையும் பெருமையையும் எடுத்துக்காட்டி அதனுல் தான் பிரிவதே தக்கதெனத் தலைவி தோழி ஆகியோரிடத்து வற்புறுத்துமிடத்தும், தூது காரண மாகப் பிரியுமிடத்தும், நட்புடையோர்க்கு உற்றுழி உதவு மிடத்தும், அறத்தால் பொருளாக்கி அப்பொருளான் இன்பம் நுகர்வல் எனப்பிரியுமிடத்தும், பொருள் வருவாய்க்கு ஏதுவாக வேற்று நாட்டுச் செலவு கருதி அதன் அருமை கூறி அவ்விடங் களுக்குப் பிரியுமிடத்தும், பகை வேந்தரின் வலிமை கருதி அவ் வலிமையைக் குறைத்தற்காகப் பிரியுமிடத்தும், பாசறைக்கண் சென்றுழி அவ்வினை நின்று நீட்டிப்ப அவ்விடத்துத் தனிமையாய் இருக்குமிடத்தும், வினை முடிந்த காலத்துத் தலைவியின்பால் செல்லும் அமையம் நேர அதனைப் பாங்கனிடத்துக் கூறுமிடத்தும், பரத்தையர் பிரிவு காரணமாக வருந்திய தலைவியை இரக்கு மிடத்தும், அவ்வாறு செய்ய வில்லை எனத் தெளிவாக்குமிடத்தும் தலைவன் கூற்று நிகழ்த்துவன்.

இவ்வாறு தலைவன் தலைவியை உடன் போக்காக அழைத்துச் செல்லுதற்கண் செவிலி, தலைவி, ஆயத்தோர், அயலோர் ஆகிய அனைவரும் கூற்று நிகழ்த்துவர்.

தலைவனும் தலைவியும் தத்தமக்குள் முன் நிகழ்ந்த நிகழ்ச்சி களைப் பின் நினைவு கூறுவதும் உண்டு. தலைவன் முன் தலையளி செய்த நிகழ்ச்சிகளைத் தலைவி நினைவது அவன் மீண்டும் பிரிவனே, அன்றி உடன் அழைத்துச்செல்வனே என நினைத்தற்கு ஏதுவாம். உடன் போக்கின்கண் தலைவன் கூறிய கூற்றுக்களைத் தலைவியும் தோழியும் நினைவது பாலையாம். மேற்கூறிய எழுவகைத்திணைக் கும் கூறப்பட்ட பொருள்களேயன்றி மரபு நிலை திரியாது வரும் பிற பொருள்களும் அவற்றிற்குரியவாம்.

உவமங்கள் :

அகப்பொருள் பற்றி வரும் உவமங்கள் இரண்டாம். அவை உள்ளுறை உவமம் ஏனை உவமம் என்பன. உள்ளுறை உவமம் கருப்பொருள்களுள் தெய்வம் நீங்கலாக ஏனையவற்றைத்தாம்

தோன்றுதற்கு உரிய நிலனாகக்கொள்ளும். உள்ளுறை உவமமாவது கவிஞன்தான் வெளிப்படக் கூறுகின்ற உவமத்தில் வெளிப்படக் கூறாத உவமிக்கப்படும் பொருளும் ஒத்து முடிக எனத் தன் உள்ளத்தே கருதித்தான் கருதிய கருத்து, கேட்போர் மனத்திலும் நிகழுமாறு அதற்கான சொற்களெல்லாம் அடைவு பெறக் கொண்டு செய்வதாம். ஏனை உவமம் என்பது மேற்கூறியவாறு உள்ளத்தால் கருதியுணர வேண்டாது சொல்லிய சொற்றொடரே பற்றுக் கோடாகக்கொண்டு விளங்கத்தக்கதாம்.

பெருந்திணை:

மடல்மா ஏறுவேன் என்பதன்றி உண்மையிலேயே ஏறி வருதலும், தலைவனும் தலைவியும் ஒத்த பருவத்தினராயிருந்து இன்பம் துய்த்தலும், தலைவி தலைவனின் பிரிவால் கையற இருந்து அறிவழிந்த குணத்தினளாய்ப் பேச முற்படுதலும், ஒருவர் ஒருவரை எதிர்ப்படக் காம மிகுதியால் மன அடக்கமின்றி வலிதிற் புணர்தலும் பெருந்திணையாம்.

புனைந்துரை வகையாலும் உலக வழக்கத்தாலும் பாடுதற் கமைந்த புலனெறி வழக்கத்திற்கு அமைந்த பொருள் ஐந்திணைப் பொருளுமாம். அவை கலி, பரிபாடல் ஆகிய இரு பாடல்களிலும் பாடுதற்குரியன. இவ்வைந்திணைக்கண் வரும் தலைமக்கள் பெயர் இயற்பெயராகக் கூறப் பெறா; திணைப்பெயராகவே கூறப்பெறும். அகத்திணைக்கு ஒருவரே தலைவராவர். புறத்திணைக்குத் தலைவர் பலராவர்.

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

நச்சினார்க்கினியம்

1. அகத்திணையியல்

அகத்திணை ஏழு

**1. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப.**

என்பது சூத்திரம்.

நிறுத்த முறையானே பொருளினது இலக்கணம் உணர்த்தினமையின் இது பொருளதிகாரம் என்னும் பெயர்த்தாயிற்று. இது நாண்மீனின் பெயர் நாளிற்குப் பெயராயினாற்போல்வதோர் ஆகுபெயர்.

பொருளாவன: அறம் பொருள் இன்பமும், அவற்றது நிலையின்மையும், அவற்றின் நீங்கிய வீடுபேறுமாம். பொருள் எனப் பொதுப்படக் கூறவே, அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும், காட்சிப்பொருளும், கருத்துப்பொருளும், அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூதமும், அவற்றின் பகுதியாகிய இயங்குதிணையும் நிலைத்திணையும், பிறவும் பொருளாம்.

எழுத்தும் சொல்லும் உணர்த்தி அச்சொற்றொடர் கருவியாக உணரும் பொருள் உணர்த்தலின், மேலதிகாரத்தோடு இயை புடைத்தாயிற்று. அகத்திணைக்கண் இன்பமும், புறத்திணைக்கண் ஒழிந்த மூன்று பொருளும் உணர்த்துப. இது வழக்கு நூலாதலிற்

பெரும்பான்மையும் நால்வகை வருணத்தார்க்கும் உரிய இல்லறம் உணர்த்திப் பின் துறவறமும் சிறுபான்மை கூறுப. அப்பொருள்கள் இவ்வதிகாரத்துள் காண்க.

பிரிதல் நிமித்தங் கூறவே, இன்ப நிலையின்மை மயும் கூறிக் 'காமஞ்சான்ற' என்னும் கற்பியற் சூத்திரத்தால் துறவறமுங் கூறினர். வெட்சிமுதலா வாகையீருக அறனும் பொருளும் பயக்கும் அரசியல் கூறி, அவற்றது நிலையின்மை காஞ்சியுள் கூறவே, அறனும் பொருளும் அவற்றது நிலையின்மையும் கூறினர். 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்' (தொல்-புறம்-எரு) என்னும் சூத்திரத்தான் இல்லறமும் துறவறமும் கூறினர். இந்நிலையாமையானும் பிறவாற்ருனும் வீட்டிற்குக் காரணம் கூறினர். இங்ஙனம் கூறவே, இவ்வாசிரியர் பெரிதும் பயன் தருவதோர் இலக்கணமே கூறினர் ஆயிற்று; இதனுற் செய்த புலனெறி வழக்கினை உணர்ந்தோர் இம்மை மறுமை வழுவாமற் செம்மை நெறியால் துறைபோவர் ஆதலின்.

இப்பொருளை எட்டுவகையான் ஆராய்ந்தார் என்ப; அவை அகத்திணை புறத்திணை என இரண்டு [1]திணை வகுத்து அதன்கண் கைக்கிளை முதல் பெருந்திணை இறுவாய் ஏழும் வெட்சி முதல் பாடாண்திணை இறுவாய் ஏழுமாகப் பதினன்கு [2]பால் வகுத்து, ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலி பரிபாடல் மருட்பா வென அறுவகைச் [3]செய்யுள் வகுத்து, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென நால்வகை [4]நிலம் இயற்றிச், சிறுபொழுது ஆறும் பெரும்பொழுது ஆறுமாகப் பன்னிரண்டு [5]காலம் வகுத்து, அகத்திணை வழுவேழும் புறத்திணை வழுவேழுமெனப் பதினன்கு [6]வழுவமைத்து, நாடக வழக்கும் உலகியல் வழக்குமென இருவகை [7]வழக்கு வகுத்து, வழக்கிடமும் செய்யுளிடமுமென இரண்டு [8]இடத்தான் ஆராய்ந்தாராதலின். எட்டிறந்த பல்வகையான் ஆராய்ந்தாரென்பார் முதல் கரு உரியுந், திணைதொறு மரீஇய பெயரும் திணைநிலைப் பெயரும், இருவகைக் கைகோளும், பன்னிருவகைக் கூற்றும், பத்துவகைக் கேட்போரும், எட்டுவகை மெய்ப்பாடும், நால்வகை உவமமும், ஐவகை மரபு மென்பர்.

இனி, இவ்வோத்து அகத்திணைக்கெல்லாம் பொது இலக்கணம் உணர்த்துதலின் அகத்திணையியல் என்னும் பெயர்த்தாயிற்று; என்னை? எழுவகை அகத்திணையுள் உரிமைவகையால் நிலம் பெறுவன இவையெனவும் அந்நிலத்திடைப் பொதுவகையால் நிகழ்வன கைக்கிளை பெருந்திணை பாலை யெனவும் கூறலானும், அவற்றுள் பாலைத்திணை நிலவகையால் நடுவணது எனப்பட்டு நால்வகை யொழுக்கம் நிகழாநின்றுழி அந்நான்கனுள்ளும் பிரிதற் பொருட்டாய்த் தான் பொதுவாய் நிற்குமெனக் கூறலானும், முதல் கரு உரிப்பொருளும் உவமங்களும் மரபும் பொதுவகையால் கூறப்படுதலானும் பிறவும் இன்னோரன்ன பொதுப் பொருண்மை கள் கூறலானு மென்பது. இங்ஙனம் ஓதியஅகத்திணைக்குச் சிறப்பி லக்கணம் ஏனை ஒத்துக்களால் கூறுப.

ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத் துப்பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்.] எனவே - அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகு பெயராம்;

இதனை ஒழிந்தன, ஒத்த அன்புடையார்தாமே யன்றி எல் லார்க்கும் உய்த்துணரப் படுதலானும், இவை இவ்வாறிருந்த தெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும், அவை புறம் எனவே படும். இன்பமே யன்றித் துன்பமும் அகத்தே நிகழுமால் எனின், அதுவும் காமம் கண்ணிற்றேல் இன்பத்துள் அடங்கும். ஒழிந்த துன்பம் புறத்தார்க்குப் புலனாகாமை மறைக்கப்படாமையிற் புறத்திணைப்பாலதாம். காம நிலையின்மையான் வரும் துன்பமும் 'தாபதநிலை' 'தபுதாரநிலை' (தொல் 1-1: புறம் 79 என) வேறும். திணையாவது ஒழுக்கம்; இயல்: இலக்கணம்; எனவே, அகத்திணை யியலென்றது இன்பமாகிய ஒழுக்கத்தினது இலக்கணம்என்றவா றாயிற்று. இவ்வோத்துக்கள் ஒன்றற்கொன்று இயைபுடைமை அவ்வவ்வோத்துகளுள் கூறுதும்.

விளக்கவுரை: *நிறுத்தமுறை - ஆசிரியன் தன் மனத்தகத்து நிறுத்த முறை. அன்றிப் பாயிரத்துள் நிறுத்த முறையும் ஆம். நாள்மீன் - விண்மீன் - இதனை இக்காலத்தார் நட்சத்திரம் என வழங்குப. இன்று திருவாதிரை எனில் திருவாதிரை என்னும் நாள் மீனின் பெயர் தன்னிகழ்ச்சிக்கு இடமாய நாளை அதாவது அற்றை நாளை உணர்த்திஞற்போல, பொருளதிகாரம் என்பது தன்னை யுணர்த்தற்கிடமாய படலத்தை உணர்த்தி நின்றது. இது நாள்மீனின் பெயர் நாளிற்குப் பெயராயிஞற் போல் வதோர் ஆகுபெயராம். இவ்வாறு வருதலை இக்காலத்தார் தானியாகு பெயர் என்பர். அறம் பொருள் இன்பங்கள் இம்மை மறுமைக்கு ஏதுவாவன. ஆதலின் இவற்றின் நீங்கியதே வீடுபேறு என்முர். உயிரைத் தகைத்தற்கு (கட்டுப்படுத்தற்கு) உரிய பாசங்களின்றும் விடுதலையடைவதே வீடுபேறு ஆகும்.*

> ஈதல்அறம் தீவினைவிட்டு ஈட்டல்பொருள் எஞ்ஞான்றும்
> காதல் இருவர் கருத்து ஒருமித்து — ஆதரவு
> பட்டதே இன்பம் பரனைநினைந்து இம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு.

என்பதால் இவ்வுண்மை விளங்கும்.

கருத்துப்பொருள்: *அன்பு, அறம், நாண் முதலாகக் கூறப் பெறுவன. இவற்றைக் காட்டல் ஆகர்ப் பொருள் என்பர் தொல்காப்பியர். ஐம்பெரும் பூதம்-நிலம், நீர், தீ, வளி, விண் என்பன. நிலைத்திணையைத் தாவரம் என்றும் இயங்குதிணையைச் சங்கமம் என்றும் வட நூலார் கூறுவர். நிலைத்திணை இயங்குதற் கியலாத மலை, மரம் போல்வன.*

பிரிதல் நிமித்தம் - தலைவன் தலைவியைப் பிரிதற்குரிய காரணம். அவை ஓதற்பிரிவு, தூதிற்பிரிவு முதலியன. 'காமம் சான்ற' என்னும் நூற்பாவில் 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்ற பகுதியால் துறவறம் கூறுமாறு காண்க. வெட்சி முதல் வாகை யீருக உள்ள பகுதிகளில் போர் நெறிகள் கூறப் பெறினும் அவை அறத்தினின்றும் வழாதனவேயாகும். போர்)

தொடங்கும் முன் ஆகாத்தோம்பும் அறநெறியையும், போர் முகத்து மடிந்த உள்ளத்தோனையும் மகப்பெறுதோனையும் மயிர் குலைந்தோனையும் அடி பிறக்கிட்டோனையும் பெண் பெயரோனை யும் படையிழந்தோனையும் ஒத்த படை எடாதோனையும் பிறவும் இத்தன்மையுடையோரையும் கொல்லாது விடுதலும் கூறிப் பொருதலுமாகிய அறநெறியையும் கடைப்பிடித்தலின் அறம் பற்றியதாயிற்று. ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொரு ளாகலின் பொருள் பற்றியதூமாயிற்று. புலனெறி வழக்கு - புலவரால் பாடப்பெற்ற செய்யுள் வழக்கு.

அகத்திணை வழு ஏழாவன: கைக்கிளை, ஐந்திணை, பெருந் திணை ஆகிய ஏழும் பற்றி வருவன. பொருளியல் 17-வது நூற்பாவில் கைக்கிளை பெருந்திணைக்குரிய வழுவும், 42-வது நூற்பாவில் பெருந்திணைக்குரிய வழுவும், அவ்வியலில் உள்ள ஏனைய நூற்பாக்களால் ஐந்திணைக்குரிய வழுவும் கூறப்பெறுதல் காண்க. புறத்திணைவழு ஏழாவன: வெட்சி முதல் பாடாண்திணை ஈறுக உள்ள ஏழும் பற்றிவருவன. புறத்திணையியல் 59-வது நூற்பாவிற்குரிய உரையைக் காண்க. அந்நூற்பாவில் மாபெருந் தானையர் மலைந்த பூ, கழல்நிலை, பிள்ளையாட்டு எனக் கூறப் பெறுவன வாகைக்குரிய வழுவாம். உன்னநிலை, வஞ்சி, உழிஞை, தும்பைக்குரியன. பூவைநிலை, பாடாண் திணைக்குரியது. ஆபெயர்த்துத் தருதல் வெட்சிக்குரியது. பாணன் முதலியோர் கையற்றுக் கூறுவன காஞ்சிக் குரியது. இவை தன்னுறு தொழிலாய் வரும் வழி வழுவாம்.

திணைதொறும் மரீஇய பெயர் - நால்வகை நிலங்களிலும் வாழும் மக்கட் பெயர். இவர்கள் அவ்வந் நிலம் பற்றியே வாழ்தலின் தாழ்ந்தோர் எனப்படுவர். திணைநிலைப் பெயர் - ஐந்திணைக்குரிய ஒழுக்கங்களை நுகரும் தலைமக்கள். இவர்கள் எந் நிலத்திற்கும் உரியராகலின் உயர்ந்தோர் எனப்பெறுவர். இரு வகைக் கைகோள் - களவுகற்பு என்பன. பன்னிருவகைக் கூற்று- களவின்கண் கூறற்குறிய பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய அறுவரும், கற்பின்கண் கூறற்குரிய பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவருமாகப் பன்னிருவரின் கூற்றுகும். (செய்யுளியல் 189, 190)

பத்துவகைக் கேட்போர் - மேற்கூறிய பன்னிருவருள் தலைவன், தலைவி ஒழிந்த ஏனையோராவர். எண்வகை மெய்ப்பாடு - நகை, அழுகை முதலாயின. நால் வகை உவமம் - வினை, பயன், மெய், உரு என்பன. ஐவகை மரபு - இருதிணைக்கும் பொதுவாய் ஆண், பெண், இளமை பற்றிய மரபும், நான்கு வருணத்து மரபும், அஃறிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும், அவைபற்றி வரும் உலகியல் மரபும், நூன்மரபும் ஆகிய ஐந்துமாம்.

உரிமை வகையால் நிலம்பெறுவன - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என்பன. மலை, காடு, வயல், கடல் என்பன இவற்றிற்குரியவாதலின் இவை உரிமை வகையால் நிலம் பெறுவனவாயின. நால்வகை ஒழுக்கத்திற்கும் பிரிவு பொதுவாய் நிற்குமாறு - புணர்தற்கு முன்னும் பின்னும் பிரிவு நிகழ்வதும், இப்பிரிவே தலைவி இருந்தும் இரங்கியும் ஊடல் கொண்டும் இருத்தற்குக் காரணமாதல் பற்றியுமாம். அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது இடவாகு பெயராம். இதனை யொழிந்தன - இவ்வின்ப நுகர்வின்றிப் பிறநுகர்வுகள். கண்ணிற் றேல் - கருதியதேல். தாபதநிலை - கணவனை இழந்தநிலை. தபுதார நிலை - மனைவியை இழந்த நிலை.

ஐந்திணையை அகம் என்றும், கைக்கிளை பெருந்திணைகளை அகப்புறம் என்றும் கூறுவர். 54 - வது நூற்பா உரை காண்க. பாங்கன் இடைநின்று புணர்க்கும் எண்வகை மணங்களையும் கூட அகப்புறம் என்பர். களவியல் 12-வது நூற்பா உரை காண்க.

கை-பக்கம், மருங்கு, கிளை - உறவு. எனவே ஒரு மருங்கு பற்றிய கேண்மை. தலைவன் தலைவி ஆகிய இருபக்கத்தாருள் தலைமகனாகிய ஒருபக்கத்தானது கேண்மையாதலின் இது கைக்கிளை யாயிற்று. கைக்கண் தோன்றும் கிளை என விரிதலின் ஏழாவதன் தொகையாயிற்று.

கைக்கிளை என்பது ஒரு மருங்கு பற்றிய கேண்மை. எனவே ஐந்திணை என்பது இருமருங்கும் (தலைவன், தலைவி) ஒத்த கேண்மை என்பது பெறுதும். இவைபற்றி இளம்பூரணர் தரும் கருத்து ஈண்டு எண்ணற்குரியது,

கைக்கிளை என்ற பொருண்மை யாதோ எனின், கை என்பது சிறுமைபற்றி வரும். அது தத்தம் குறிப்பில் பொருள் செய்வ தோர் இடைச்சொல். கிளை என்பது உறவு, பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு கைக்குடை, கையேடு, கைவாள், கை ஒலியல், கைவாய்க்கால் எனப் பெருமையில்லாதவற்றை வழங்குப ஆதலின். நடுவண் ஐந்திணைக்கண் நிலமும் காலமும் கருப்பொருளும் அடுத்துப் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனச் சொல்லப்பட்ட அவ்வுரிப் பொருள் ஒத்த அன்பும் ஒத்த குலனும் ஒத்த வடிவும் ஒத்த குணமும் ஒத்த செல்வமும் ஒத்த இளமையும் உள்வழி நிகழுமாதலின் அது பெருங்கிளைமை யாயிற்று.

எண்வகை மணங்களுள் கைக்கிளைக் குரியன – அசுரம், இராக் கதம், பைசாசம் என்பன. ஐந்திணைக்குரியது – காந்தருவம். பெருந்திணைக்குரியன - பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன. எனவே ஆறுதிணைகள் நான்கு மணம் பெறத்தான் (பெருந்திணை) ஒன்றுமட்டுமே நான்கு மணம் பெறுகிறது என்றார். பெருந்திணையாகிய இறுவாய்க்கண் (இறுதிக்கண்) உள்ளது என விரிதலின் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்றார். எனினும் இவ்விலக்கணக் குறிப்பிற்கேற்ப உரை எழுதப்பெறவில்லை.

பெருந்திணை எனப் பெயர் பெறற்குரிய காரணத்தை இளம் பூரணர் விரிவாக விளக்கியுள்ளார். அவ்வுரை வருமாறு:- பெருந்திணை நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்பன அத்திணைப்பாற்படுத லானும், இந்நான்கு மணமும் மேன் மக்களின் மாட்டு நிகழ்த லானும் இவை உலகினுள் பெருவழக்கினதாய்ப் பயின்று வருத லானும், அது பெருந்திணை எனக்கூறப்பட்டது. அஃதேல் நடுவண் ஐந்திணையாகிய ஒத்த கூட்டம் பெருவழக்கிற்றன்றோ எனில் அஃது அன்பும் குலனும் முதலாயின ஒத்து வருவது உலகினுள் அரிதாக லின் அருகியல்லது வாரா என்க.

இந்நூல்வழித் தொல்காப்பியர் கருத்து இதுவென இளம்பூரணர் கூறும் கருத்தும் ஈண்டு எண்ணற்குரியது. இந்நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும் குணனும் செல்வமும் ஒழுக்கமும் இளமையும் அன்பும் ஒருங்கு உள்வழி இன்பம் உளதாம் எனவும், கைக்கிளை ஒருதலை வேட்கை எனவும், பெருந்திணை ஒவ்வாக்கூட்டமாய் இன்பம் பயிற்றல் அரிது எனவும் கூறுதலான் இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறறிக என்பது அவர் கூற்று. அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றுதல் அறம் எனத் திருவள்ளுவரும் 'காமம் சான்ற கடைக்கோட்காலை ஏமம் சான்ற மக்களொடு துவன்றி அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என இவ்வாசிரியரும் கூறுதலானும் இக்கருத்து அத்துணைப் பொருத்தமுடையதன்றும்.

ஒழிந்தோர்-பன்னிரு படல ஆசிரியரும் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியரும். பன்னிரு திணையாவன: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், கைக்கிளை, பெருந்திணை, பொதுவியல் என்பன. அகத்திணைக்குப் புறத்திணை அவ்வந்நிலத்து மக்கள் வகையாற் பிறந்த செய்கை வேற்றுமை என்பது அவ்வந்நிலத்து மக்களும் தாம் தாம் கொள்ளும் அகப்புற ஒழுக்க வேறுபாடுகளைக் குறிப்பதாம். குறிஞ்சி நில மக்களின் தலைமகன் தலைவியைக் களவிற்கொள்ளின் குறிஞ்சி அகஒழுக்கமாம். ஆனிரையைக் களவிற்கொள்ளின் வெட்சிப் புறவொழுக்கமாம். முல்லைநில மக்களில் தலைவன் தலைவியைப் பிரிய தலைவி தனித்திருப்பின் முல்லை அக ஒழுக்கமாம். அம்மக்கள் மண்ணாசை காரணமாகப் பிற நாட்டின் மீது படையெடுப்பின் வஞ்சிப்புறவொழுக்கமாம். மருதநில மக்களில் தலைவன் பிரிவினால் தலைவி வாடிப் பின் அவனொடு ஊடுவாளாயின் மருத அகவொழுக்கமாம். அந்நில மக்கள் பகைவரோடு பொருது அவர்தம் மதிலைச் சூழ அம்மதிலகத்தார் அடைத்துக்கொண்டு புலந்து இருப்பாராயின் உழிஞைப் புறவொழுக்கமாம். நெய்தல் நில மக்களில் தலைவன் நெடிது பிரிய தலைவி இரங்கின் அது நெய்தல் நில அக ஒழுக்கமாம். அந்நிலத்து மக்கள் போர் முற்றிக் கண்டோர் இரங்க உயிர்துறப்பின் அது அந்நிலத்துத் தும்பைப் புறத்தொழுக்கமாம். பாலைநில மக்களில் தலைவி மனையின்கண் இல்லறம் நிகழ்த்தியிருப்பத்

தலைவன் அறங்கருதிப் பிரியின் பாலைநில அகவொழுக்கமாம். அந்நிலத்து மக்கள் சுற்றத் தொடர்ச்சியினின்றும் நீங்கி அறப் போர் செய்து வெற்றிகொள்ளின் அது வாகைப் புறவொழுக்க மாம். நால்வகை நிலத்து மக்களும் ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் மிக்க காமத்து மிடலுமாகிய பெருந்திணை ஒழுக்கங்களை அவற்றின் இழிவுநோக்கி வெறுப்பின் இது அகமாம்.

தலைவன் தலைவியைக் காண்டலும், ஐயுறலும், தேறலும் கூறலும் எல்லாம் ஒருதலைக் காமமாகவே நிகழ்வன. இது கைக்கிளை அகமாம். அதைப்போன்றே ஒருவன் அரசினிடமோ இறைவ னிடமோ வேண்டுதல் ஒருதலைக்காமமாகவே கருதப்படும். இது கைக்கிளைப்புறமாம்.

கரந்தை எழுதிணைக்கும் பொதுவாகி வருதலைப் புறத்திணை 5 ஆம் நூற்பா உரையில் காண்க. களவில் ஆநிரை கோடலை வெட்சி யென்றும், மீட்டலைக் கரந்தையென்றும் புறப்பொருள் வெண்பா மாலை கூறும்.

எண்வகை மணம்: பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய் வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. இவ் வெண்வகை மணங்களும் தலைவனே அன்றித் தலைவனைச்சார்ந் தாரோ முதற்கண் முன்னின்று முடித்தலின் அவ்வண்ணம் முடிக் கும் காறும் அது கைக்கிளையாயிற்று. காமஞ்சாலா இளமைப் பருவம், காமஞ்சான்ற பருவம், முதுமைப்பருவம் ஆகிய மூன்ற னுள் காமஞ்சாலா இளமைப்பருவமாகிய முதற்பருவமே கைக் கிளைக்குரியது. இவ்விரு காரணங்களானும் கைக்கிளை முற்கூறப் பட்டது என்றார். எதிர்சென்று - தலைமகனிடத்தோ அல்லது அவனைச்சார்ந்தாரிடத்தோ எதிர்சென்று.

2. நிலம் பெறாத பாலை

2. அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

இது முற்கூறிய ஏழனுள் தமக்கென நிலம் பெறுவனவும் நிலம் பெறாதனவும் கூறுகின்றது.

(இ. ள்.) அவற்றுள் - முற்கூறிய ஏழு திணையுள்; நடுவண் ஐந்திணை - கைக்கிளை பெருந்திணைக்கு நடுவுநின்ற ஐந்தொழுக்கத் திணை; படு திரை வையம் பாத்திய பண்பே-ஒலிக்கும் திரைசூழ்ந்த உலகிற்கு ஆசிரியன் பகுத்துக் கொடுத்த இலக்கணத்தை; நடுவணது ஒழிய - நடுவணதாகிய பாலையை அவ்வுலகம் பெறாதே நிற்கும்படியாகச் செய்தார் எ - று.

எனவே, யானும் அவ்வாறே நூல் செய்வல் என்றார்.

உலகத்தைப் படைக்கின்ற காலத்துக் காடும் மலை நாடும் கடற்கரையுமாகப் படைத்து, இந்நால்வகை நிலத்தில் ஆசிரியன் தான் படைத்த ஐவகை ஒழுக்கத்தில் பாலை ஒழிந்தனவற்றைப் பகுத்துக்கொடுத்தான். அப்பாலை ஏனையபோல ஒருபாற் படாது நால்வகை நிலத்திற்கும் உரியவாகப் புலனெறி வழக்கஞ்செய்து வருதல்பற்றிப் பாலைக்கு நடுவணது என்னும் பெயர் ஆட்சியும் குணனும் காரணமாகப் பெற்ற பெயர். 'நடுவு நிலைத்திணையே நண்பகல் வேனில் (தொல். அகத். 6) என ஆள்ப. புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பவற்றிற்கு இடையே பிரிவு நிகழ்தலானும், நால்வகை உலகத்திற்கிடையிடையே,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை யென்பதோர் படிவம் கொள்ளும்."

(சிலப். காடு. 64-66)

என முதற்பொருள் பற்றிப் பாலை நிகழ்தலானும், நடுவணது ஆகிய நண்பகல் காலம் தனக்குக் காலம் ஆகலானும், புணர்தற்கும் இருத்தற்கும் இடையே பிரிவு வைத்தலானும், உலகியல் பொருளான அறம்பொருள் இன்பங்களுள் நடுவணதாய பொருட்குத்தான் காரணம் ஆகலானும், நடுவணதெனக் குணம் காரணம் ஆயிற்று.

பாயிரத்துள் எல்லை கூறியது அன்றி ஈண்டும் எல்லை கூறினர் புறநாட்டிலிருந்து தமிழ்ச்செய்யுள் செய்வார்க்கு இதுவே இலக்கணம் ஆமென்றற்கு.

இவ்விலக்கணமும் மக்கள் நுதலிய அகன் ஐந்திணைக்கே யாதலின் இன்பமே நிகழும் தேவர்க்கு ஆகா.

'காமப் பகுதி கடவுளும் வரையார்'. (தொல்-பொருள், 83

நடுவண் நாற்றிணை யென்னுது ஐந்திணை யென்றார், பாலையும் அவற்றோடு ஒப்பச் சேறற்கு. இத்திணையை மூன்றாக மேற் பகுப்பர்.

வி – ரை: கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்னும் எழு வகைத் திணையுள் நிலம் பெறுவன குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்குமேயாம். ஏனைய மூன்றும் தமக்கென நிலம் உடையவனவல்ல என்பது கருத்து. முல்லையும் குறிஞ்சியுமாகிய நிலங்களே காலப்போக்கில் இவ்வியல்பு அழிந்து நடுங்குதுயருறுத்துச் சுரம் என்று பெயர் பெற்றது ஆதலின் பாலை தனக்கென நிலம் இல்லாததாயிற்று.

பாலையை நடுவணது என்றற்கு நச்சினார்க்கினியர் கூறும் காரணங்கள் யாவும் அமைவுடையனவல்ல. ஒரு பொருளுக்குப் பெயர் சூட்டக் காரணம் அதனை வரையறைப்படுத்திக் குறிப்பிட்டு அழைத்தற்கும் அதனகத்துள்ள குணத்தன்மை நிலை பெறுவதற்குமேயாம். இவ்வகையில் பாலையை நடுவணது எனக் கூறுதற்குக் காரணம் தொல்காப்பியராலும் அவருக்கு முந்திய சான்றோர்களாலும் அதனை அப்பெயரான் அழைத்தலே ஆகும். எனவே ஆட்சி பற்றி அமைந்தது அப்பெயர் என்றற்கு இழுக்கில்லை. குணம் காரணமாகப் பெற்ற பெயர் என்றற்குக் கூறப்பெறும் காரணங்களே பொருத்தம் இல்லை.

எனினும் சிவஞானமுனிவர் இவ்விரு காரணங்கள் பற்றிப் பெயர் பெற்றது என்பதையே முழுமையாக மறுப்பர். அது வருமாறு.

"அற்றேல் அஃது அங்ஙனமாகப் பாலைத்திணை நடுவுநிலைத் திணை என்றுயவாறு என்னையெனிற் கூறுதும். ஆசிரியர் யாதானும் ஓர் காரணம் பற்றியே குறியிட்டு ஆளுவதல்லது வடநூலார் போலக் காரணம் பற்றுதும் குறியிட்டாளுதல் யாண்டும் இன்மை யானும், ஆட்சி நோக்கிய குறியெனில் குறியீடெல்லாம் ஆட்சிப் பொருட்டே ஆகலின் ஆட்சி நோக்கிக் குறியீடு, குறியீடு நோக்கி ஆட்சி என ஒன்றனை ஒன்று பற்றுதல் என்னும் குற்றமாம் ஆகலின் ஆட்சி நோக்கிய குறி என்பது பொருந்தாமையானும்,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கிற் முன்னிய நெறித்தே."

என்புழி நடுவுநிலைத்திணை என்னும் சொல்லே தன் காரணம் இனிது விளக்கி நிற்றலானும் அது நடுவு நிற்றல் காரணத்தாற் பெற்ற பெயர் என்பது பெற்றும். ஏனை நாற்றிணையும் முறையானே கூறி இறுதிக்கண் ஓதுதலான் இஃது அவற்றின் வேறென்பது விளங்குதலானும், எஞ்சி நின்றது பாலையேயாகலானும், புறப் பொருள் கூறுங்கால்,

'வாகைதானே பாலையது புறனே'

என நடுவுநிலைத்திணை கூறுந்தானத்திற் பாலை எனக் குறியிட் டாளுதலானும், பாலைத்திணை நடுவுநிலைத்திணை என்பன ஒரு பொருட்கிளவி என்பதூஉம் பெறப்பட்டது. படவே, அஃது எவற்றின் நடுவுநிற்பதென்று அவாவுங்கால் எண்ணுமுறைக்கண் நடுவுநிற்பதென்றல் பொருந்தாது. முதற்பொருள் முறைபற்றி முல்லை முதலாக வைத்தெண்ணினர். உரிப்பொருள் முறைபற்றி யும், புறப்பொருள் முறைபற்றியும் குறிஞ்சி முதலாக வைத்து எண்ணப்படும். அம்முக்கூற்று எண்ணுமுறைமையினும் பாலைத் திணை நடுவுநிற்பது அன்றாகலின்.

இனி, ஏனை நால்வகை உரிப்பொருள்களினும் இடையிடையே பிரிவுநிகழ்தலின் அதுபற்றி நடுவுநிலைத்திணை என்றார் எனின், புணர்ச்சியும் அவ்வாறு இடையிடை நிகழ்தல்பற்றிக் குறிஞ்சியும் நடுவுநிலைத்திணை எனல் வேண்டும் ஆகலானும், நடுவணதாகிய

நண்பகல் காலம் தனக்குக் காலமாதல் பற்றி அங்ஙனம் கூறினர் எனின் நடுவணதாகிய இடையாமம் தனக்குக் காலமாதல் பற்றிக் குறிஞ்சியும் அவ்வாறு கூறப்படுமாகலானும், புணர்தற்கும் இருத்தற்கும் இடையே பிரிவு வைத்தல் பற்றிக் கூறினர் எனின் இருத்தலிரங்கலும் அவ்வாறுகலின் அதுபற்றி முல்லை நெய்தல் களும் அவ்வாறு கூறப்படும் ஆகலானும், உலகியற் பொருளாகிய அறம் பொருள் இன்பங்களுள் நடுவணதாகிய பொருட்குத்தான் காரணமாதல்பற்றி அங்ஙனம் கூறினரெனின் பரத்தையிற்பிரிவு ஓதற்பிரிவு போல்வன ஏனையவற்றிற்கும் காரணமாகலின் பொருண்மாத்திரைக்கே காரணமென்பது படாமையானும் அங்ஙனம் உரைப்பன எல்லாம் போலியென்றொழிக.

மற்று என்னையோ காரணம் பற்றிக் குறிப்பிட்டவாறு எனின்—

"நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே"

என நிலம் பகுத்து ஓதுங்கால் நடுவணது எனக் குறியிட்டார் ஆதலின் அங்ஙனம் பகுக்கப்படும் நிலங்களும் ஆகாது அவற்றின் வேறுமாகாது தனக்குரிய நிலம் நடுநிகர்த்ததாய் நிற்றல்பற்றி நடுவுநிலைத்திணை எனக் குறிப்பிட்டாருதலே ஆசிரியர் கருத்தென்க. அங்ஙனமாதல்,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

என்பதனானும் உணர்க. இங்ஙனம் குறியிட்டமையின் பாலைக்கு நிலமுண்டு என்பதூஉம், அதனை ஏனை நிலங்களின் வேறாக வைத்துப்பகுத்து எண்ணுதல் மரபு அன்று என்பதூஉம் ஆசிரியர் கருத்தாக உணர்ந்து கொள்க. இவ்வுண்மை உணராதார் பாலை சான்றசுரம் நானிலத்துள் அடங்காதென வேறு வைத்து எண்ணி ஆசிரியரோடு மாறுகொண்டு, நிலம் ஐந்தெனத் தமக்கு வேண்டிய வாறே கூறுப"

ஈண்டும் எல்லை கூறியது என்றது 'படுதிரை வையம் பாத்திய பண்பே' என்பதை உளங்கொண்டதாகும், வடவேங்கடம் தென்

குமரி என எல்லை கூறப்பட்ட பாயிரம் பனம்பாரனாரால் செய்யப் பெற்றது. இந்நூற்பா தொல்காப்பியரால் செய்யப்பெற்றது. என்னும் நச்சினார்க்கினியர் இவ்விருவர் கூற்றிலும் உள்ள தமிழ் நாட்டு எல்லையைக் கருத்தில் கொண்டு பாயிரத்துள் எல்லை கூறிய தன்றி ஈண்டும் எல்லை கூறினார் என்றார். இவ்வீரிடத்தும் தமிழ் நாட்டு எல்லை கூறப்பட்டிருப்பதால் தமிழ் நாட்டின் புறத்தே இருந்து தமிழ் இலக்கியம் செய்யினும் பாலை நிலத்திற்கு நிலம் கூறாதே செய்யவேண்டும் என்பதற்காக இவ்வாறு கூறினார் என்பர் நச்சினார்க்கினியர். படுதிரை வையம் - ஒலிக்கும் கடலால் சூழப்பட்ட உலகம். பனம் பாரனாரின் பாயிரம் தமிழ்நாட்டெல்லை யைக் குறிப்பதன்றி, இந்நூற்பாவிலுள்ள தொடர் அவ்வெல்லை யைக் குறிப்பதாகக் கோடல் பொருந்துவதன்றாம்.

நடுவண் ஐந்திணைக்குரிய முப்பொருள்கள்

3. முதல்கரு வுரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுள் பயின்றவை நாடுங் காலை.

இது நடுவண் ஐந்திணையைப் பகுக்கின்றது.

(இ - ள்.) *பாடலுள் பயின்றவை நாடும் காலை—புலனெறி வழக்கிடைப் பயின்ற பொருள்களை ஆராயும் காலத்து; முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே—முதலும் கருவும் உரிப் பொருளும் என்ற மூன்றேயாம்; நுவலும் காலை முறை சிறந் தனவே—அவைதாம் செய்யுள் செய்யுங்கால் ஒன்று- ஒன்றனிற் சிறந்து வருதல் உடைய என்றவாறு.*

இங்ஙனம் பாடலுள் பயின்ற பொருண்முறை மூன் றெனவே, இம் மூன்றும் புறத்திணைக்கும் உரியவென்பது பெறுதும். அது புறத்திணைச் சூத்திரங்களுள், 'வெட்சி தானே குறிஞ்சியது புறனே' (56) என்பன முதலியவற்றால் கூறுப.

முதலில் கருவும், கருவில் உரிப்பொருளும் சிறந்துவரும். இம்மூன்றும் பாடலுள் பயின்று வரும் எனவே வழக்கினுள் வேறு வேறு வருவதன்றி ஒருங்கு நிகழா என்பதூஉம், நாடுங் காலை யெனவே புலனெறிவழக்கில் பயின்றவாற்றான் இம்மூன் றனையும் வரையறுத்துக் கூறுவது அன்றி வழக்குநோக்கி இலக்

கணம் கூறப்படாது என்பதூஉம் பெறுதும்; 'நல்லுவகத்து, வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' (தொல். பாயிரம்) என்று புகுந்தமையின் பொருளும் அவ்விரண்டினுலும் ஆராய்தல் வேண்டுதலின்.

இஃது இல்லதெனப்படாது, உலகியலேயாம். உலகியல் இன்றேல், ஆகாயப்பூ நாறிற்று என்றுழி அது சூடக் கருதுவாரும் இன்றி மயங்கக் கூறினன் என்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும்.

இச் செய்யுள்வழக்கினை நாடக வழக்கென மேற்கூறினர். எவ்விடத்தும் எங்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது, உள்ளோன் தலைவனை இல்லது புணர்த்தல் முதலாகப் புனைந்துரைவகையாற் கூறும் நாடக இலக்கணம்போல யாதானும் ஒரோவழி ஒரு சாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுள் செய்த ஒப்புமை நோக்கி. மற்று இல்லோன் தலைவனை இல்லது புணர்க்கும் நாடக வழக்குப்போல ஈண்டுக் கொள்ளாமை, 'நாடக வழக்கு' என்னும் சூத்திரத்துள் (53) கூறுதும்.

"கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்
குறும்பொறை நாடன் நல்வய லூரன்
தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
கடும்பகல் வருதி கையறு மாலை
கொடுங்கழி நெய்தலும் கூம்பும்
காலை வரினும் களைஞரோ விலரே."

(ஐங்குறு நூறு-163)

என இவ் ஐங்குறுநூற்றுள் இடம் நியமித்துக் கூறியது செய்யுள் வழக்கு.

இனி, அவை முறையே சிறந்து வருமாறு:

முல்லைத்திணை

"முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ

இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தள்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே."

(அகம். 4)

இது குறித்த காலம் வந்ததும், அவரும் வந்தாரென ஆற்றுவித்தது. இக் களிற்றியானைநிரையுள், முல்லைக்கு முதலும் கருவும் வந்து உரிப்பொருளால் சிறப்பெய்தி முடிந்தது.

குறிஞ்சித்திணை

"கிளைபா ராட்டுங் கடுநடை வயக்களிறு
முளைதரு பூட்டி வேண்டுகுள கருத்த
வாணிற வுருவின் ஒளிருபு மின்னிப்
பருஉவுறைப் பஃறுளி சிதறிவான் நவின்று
பெருவரை நளிர்சிமை அதிர வட்டித்துப்
புயலே றுரைஇய வியலிருள் நடுநாள்
விறலிழைப் பொலிந்த காண்பின் சாயற்
றடைஇத் திரண்டநின் றோள்சேர் பல்லதைப்
படாஅ வாகுமெங் கண்ணென நீயும்
இருள்மயங் கியாமத் தியவுக்கெட விலங்கி
வரிவயங் கிரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்
பெருமலை விடரகம் வரவரி தென்னாய்

வரவெளி தாக வெண்ணுதி யதனுன்
நுண்ணுதிற் கூட்டிய பன்மா ஞரந்
தண்ணிது கமழு நின்மார் பொருநாள்
அடைய முயங்கே மாயின் யாமும்
விறலிழை நெகிழச் சாஅய்தும் அதுவே
அன்னை யறியினு மறிக அலர்வாய்
அம்பன் மூதூர் கேட்பினுங் கேட்க
வண்டிறை கொண்ட வெரிமருள் தோன்றியொடு
ஒண்பூ வேங்கை கமழுந்
தண்பெருஞ் சாரற் பகல்வந் தீமே" (அகம். 218)

இஃது இடத்துய்த்துப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டான் வரைவுகடாயது. இம்மணிமிடைபவளத்துள், குறிஞ்சிக்கு முதலும் கருவும் வந்து உரிப்பொருளால் சிறப்பெய்தி முடிந்தது.

பாலைத்திணை

"வண்டுபடத் ததைந்த கண்ணி ஒண்கழல்
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட் டியானைப் பொதினி யாங்கண்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியலம் என்ற சொற்றாம்
மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த
வேய்மருள் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக
அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
நிழல்தேய்ந் துலரிய மரத்த அறைநாய்
பறுநீர்ப் பைஞ்சுனை ஆமறப் புலர்தலின்
உகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
வழங்குநர் இன்மையின் வௌவுநர் மடியச்
சுரம்புல் லென்ற ஆற்ற அலங்குசினை
நாரின் முருங்கை நவிரல் வான்பூச்
சூரலங் கடுவளி எடுப்ப ஆருற்
றுடைதிரைப் பிதிர்விற் பொங்கிமுன்
கடல்போல் தோன்றல காடிறந் தோரே." (அகம். 1)

இது பிரிவிடையாற்ருது தோழிக்குக் கூறியது. இக் களிற்றியானை நிரையுள் பாலைக்கு முதலும் கருவும்வந்து உரிப் பொருளால் சிறப்பெய்தி முடிந்தது.

மருதம்

“சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீ கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமலர் ஆரு மூர
யாரை யோநிற் புலக்கேம் வாருற்று
உரையிறந் தொளிருந் தாழிருங் கூந்தல்
பிறரும் ஒருத்தியை நம்மனைத் தந்து
வதுவை அயர்ந்தனை யென்ப அஃதியாங்
கூறேம் வாழியர் எந்தை செறுநர்
களிறுடை அருஞ்சமந் ததைய நூறும்
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லி னள்ளூ ரன்னஎம்
ஒண்டொடி. நெகிழினும் நெகிழ்க
சென்றீ பெருமநின் தகைக்குநர் யாரோ.” (அகம். 46)

இது வாயில் மறுத்தது இக் களிற்றியானைநிரையுள். மருதத் திற்கு முதலும் கருவும் வந்து உரிப்பொருளால் சிறப்பெய்தி முடிந்தது. ‘வண்டூது பனிமல’ ரெனவே வைகறையும் வந்தது.

நெய்தல்

“கானல் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனார் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
அசைவண் டார்க்கும் அல்குறு காலைத்
தாழை தளரத் தூங்கி மாலை
அழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சங் கையறு பினையத்
துயரஞ் செய்துநம் அருளா ராயினும்

அருஅ லியரோ அவருடைக் கேண்மை
அளியின் மையின் அவணுறைவு முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்புந்
தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
அகமடற் சேக்குந் துறைவன்
இன்றுயின் மார்பிற் சென்றஎன் நெஞ்சே.'' (அகம். 40)

இது பொருள் பிரிவிடைத் தோழிக்கு உரைத்தது. இக் களிற்றியானை நிரையுள், நெய்தற்கு முதலும் கருவும் வந்து உரிப் பொருளால் சிறப்பெய்தி முடிந்தது. இச்சிறப்பானே முதல் இன்றிக் கருவும் உரிப்பொருளும் பெறுவனவும், முதலும் கருவும் இன்றி உரிப்பொருளே பெறுவனவும் கொள்க.

''திருநகர் விளங்கு மாசில் கற்பின்
அரிமதர் மழைக்கண் மாஅ யோளொடு
நின்னுடைக் கேண்மை யெவனோ முல்லை
யிரும்பல் கூந்த ஞற்றமும்
முருந்தேர் வெண்ப லொளியுநீ பெறவே.''

இது பொருள்வயிற் பிரிந்தோன் சுரத்து நினைந்து உரைத்தது இது முதற்பொருளின்றி வந்த முல்லை.

''கரந்தை விரைஇய தண்ணறுங் கண்ணி
யிளைய ரேவ வியங்குபரி கடைஇப்
பகைமுனை வலிக்குந் தேரொடு
வினைமுடித் தனர்நங் காத லோரே.''

இது வந்தாரென்று ஆற்றுவித்தது. இது முதலும் கருவும் இன்றி வந்த முல்லை.

''நறைபரந்த சாந்த மறவெறிந்து நாளா
லுறையெதிர்ந்து வித்தியவூ ழேனற் - பிறையெதிர்ந்த
தாமரை போன்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
ஏமரை போந்தன வீண்டு.'' (திணைமாலை நூற். 1)

இது மதியுடம்படுத்தது. இது முதற்பொருளின்றி வந்த குறிஞ்சி.

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே."

இஃது இளையள் விளைவிலளென்றது. முதலும் கருவும் இன்றி வந்த குறிஞ்சி இது நாணநாட்டம்.

"நாளு நாளு மாள்வினை யழுங்க
வில்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழெனு
வொண் பொருட் ககல்வர்நங் காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே."
(சிற்றெட்டகம், பக்கம் 242)

இது வற்புறுத்தாற்றியது, இஃது உரிப்பொருள் ஒன்றுமே வந்தபாலை.

"பூங்கொடி மருங்கி னெங்கை கேண்மை
முன்னும் பின்னு மாகி
யின்னும் பாண னெம்வயி னானே."

இது வாயின் மறுத்தது. இஃது உரிப்பொருள் ஒன்றுமே வந்த மருதம்,

"அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
யேதின் மாக்களு நோவர் தோழி
யென்று நோவா ரில்லைத்
தெண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே"

இது கழிபடர். இது பேரானும் உரிப்பொருளானும் நெய்தலாயிற்று.

இங்ஙனம் கூறவே உரிப்பொருள்இன்றேல் பொருள் பயன் இன்றென்பது பெற்றாம். இதனானே முதல் கரு வுரிப்பொருள் கொண்டே வருவது திணையாயிற்று. இவை பாடலுள் பயின்ற வழக்கே இலக்கணம் ஆதலின் இயற்கையாம். அல்லாத சிறு பான்மை வழக்கினைச் செயற்கையென மேற்பகுப்பர்.

(வி - ரை) ஒன்று ஒன்றனில் சிறந்து வருதலாவது, முதற் பொருளினும் கருப் பொருளும், கருப்பொருளினும் உரிப் பொருளும் சிறந்து வருதலாம்.

இஃது - இப்புலனெறி வழக்கு. இது உலகியலுள் இல்லாத வழக்கு என்பர் இறையனர் களவியல் உரையாசிரியர். அதனை நச்சினார்க்கினியர் மறுத்துள்ளார்.

உள்ளோன் தலைவனாக உள்ளது புணர்த்தலும், உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தலும், இல்லோன் தலைவனாக உள்ளது புணர்த்தலும், இல்லோன் தலைவனாக இல்லது புணர்த்தலும் என நாடக இலக்கணம் நான்கு வகைப்படும் என்பர்.

பாடல்: கணங்கொள் அருவி - தொகுதியாக வரும் அருவி இப்பாடற்கண் நால்வேறு நிலமும் கூறப்பெற்றுள்ளது. 'கான்கெழு நாடன்' என்பதால் முல்லையும், 'குறும்பறை நாடன்' என்பதால் குறிஞ்சியும், 'வயல் ஊரன்' என்பதால் மருதமும், 'கடற்சேர்ப்பன்' என்பதால் நெய்தலும் வந்தமை காண்க. இதனால் தலைவன் நானிலத்திற்கும் தலைமையுடையான் என்பதும் பெறுதும். இடம் நியமித்துக்கூறியது - அவ்வத் திணைகட்கும் உரிய இடம் கூறியது.

முல்லைவைந் நுனை:

குறித்தகாலம் - தலைவன் தான் வருவதாகக் குறித்த கார் காலம். 'கார் செய்தன்றே கலின் பெறு கானம்' என்பதால் அக் கால வரவும், 'குறும் பொறை நாடன் உதுக்காண் தோன்றும்' என்பதால் அக்காலத்தவன் தவறாது வந்தமையும் பெறப்படும். கானம் - காடுறை உலகம். கார் - கார்காலம். இவை முதற் பொருள். கருப்பொருள்கள் - இல்லம் (தேற்றாம்பூ), கொன்றை, மான். உரிப்பொருள் - தலைவன் உதுக்காண் தோன்றும் என்ப தால் தலைவி இதுகாறும் கற்பொடு புணர்ந்து கணவன் சொற் பிழையாது ஆற்றியிருந்தமை புலனாகும்.

கிளைபாராட்டும்:

இடத்துய்த்தல் தலைமகன் இருக்குமிடத்துத் தலைவியைக் கொண்டு சேர்த்தல். இரவில் வருவாரைப் பார்த்து நிற்கும் புலி இருப்பவும் வரல் அரிது என்னாது வருதி என்பதால் இரவுக்குறியின்

கண் வரும் ஏதமும், அன்னை அறியினும் அறிக, அம்பல் மூதூர் கேட்பினும் கேட்க, என்பதால் பகற்குறிக்கண் வரும் ஏதமும் உணர்த்தியதாயிற்று. பகல் வந்தீமே என்பதால் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் வரைவு கடாயதும் ஆயிற்று. முதற் பொருள் - பெருவரை, நளிர்சிமை, பெருமலை விடரகம், தண் பெருஞ்சாரல் என வருவனவற்றுன் குறிஞ்சி நிலம் கூறப் பெற்றமை காண்க. பல்துளி சிதறி என்பதால் கூதிரும், 'வியலிருள் நடுநாள்', 'இருள் மயங்கு யாமம்' என்பனவற்றுல் யாமமும் கூறப்பெற்றமை காண்க. கருப்பொருள் - களிறு, புலி, ஆரம், தோன்றி, வேங்கை என்பன. உரிப்பொருள் - தலைவியை இடத்துய்த்து இவ்வாறு கூறுதலால் புணர்தலாகிய உரிப் பொருள் வந்தது.

"வண்டு படத்ததைந்த..."

'நிலம்பக சுரம் புல்லென்ற' என்பதால் பாலைக்குரிய முதற் பொருளும், முருங்கை என்பதால் கருப்பொருளும், 'பிரியலம் என்ற சொல்தான் மறந்தனர் கொல்லோ' என்பதால் உரிப் பொருளும் வந்தமை காண்க.

"சேற்று நில முனைஇய..."

'நீர் முதிர் பழனம்'; 'வண்டூது பனிமலர்' என்பனவற்றுல் முதற்பொருளும், காரான், தாமரை, என்பவற்றுல் கருப்பொரு ளும், யாரையோ நிற் புலக் கேம் என்பதால் உரிப்பொருளும் வந்தவாறு காண்க.

"கானல் மாலை..."

'கானல் ...... பெருங்கடல்.' என்பவற்றுல் முதற் பொருளும், புன்னை, தாழை, நாரை என்பனவற்றுல் கருப்பொருளும், 'துயரம் செய்து நம் அருளாராயினும்' என்பதால் உரிப்பொருளும், வந்தவாறு காண்க. (3)

முதற் பொருட்குரிய பகுப்பு

**4. முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே.**

இது நிறுத்தமுறையானே முதல் உணர்த்துவான் அதன் பகுதியும் அவற்றுள் சிறப்புடையனவும் இல்லனவும் கூறுகின்றது.

(இ-ள்.) முதல் எனப்படுவது — முதலெனச் சிறப்பித்துக் கூறப்படுவது; நிலம் பொழுது இரண்டின் இயல்பு என மொழிப —நிலனும் பொழுதும் என்னும் இரண்டினது இயற்கை நிலனும் இயற்கைப் பொழுதும் என்று கூறுப; இயல்பு உணர்ந்தோரே— இடமும் காலமும் இயல்பாக உணர்ந்த ஆசிரியர் என்றவாறு.

இயற்கையெனவே செயற்கை நிலனுஞ் செயற்கைப் பொழுதும் உளவாயிற்று. மேற் 'பாத்திய' (2) நான்கு நிலனும் இயற்கை நிலனும்.

ஐந்திணைக்கு வகுத்த பொழுதெல்லாம் இயற்கையாம்; செயற்கை நிலனும் பொழுதும் முன்னர் அறியப்படும்.

முதல் இயற்கைய வென்றதனாற் கருப்பொருளும் உரிப் பொருளும் இயற்கையும் செயற்கையுமாகிய சிறப்பும் சிறப்பின்மையும் உடையவாய்ச் சிறுவரவின என மயக்கவகையால் கூறுமாறு மேலே கொள்க.

இனி நிலத்தொடு காலத்தினையும் முதல் என்றலின் காலம் பெற்று நிலம் பெறாத பாலைக்கும் அக்காலமே முதலாக அக்காலத்து நிகழும் கருப்பொருளுங்கொள்க. அது முன்னர்க் காட்டிய உதாரணத்துள் காண்க.

(வி-ரை) இயற்கை நிலமாயது முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பனவற்றிற்குக் கூறிய காடுறை உலகமும், மைவரை உலகமும், தீம்புனல் உலகமும், பெருமணல் உலகமும் ஆம். செயற்கை நிலமாவது பாலையாம். முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து இந்நிலமாதலின் இது செயற்கை நிலமாயிற்று.

இயற்கைப் பொழுது என்பது ஐவகைத்திணைக்கும் உரியவாகக் கூறப்பெற்ற பெரும்பொழுதும் சிறுபொழுதுமாம். செயற்கைப் பொழுதாவது ஒரு நிலத்திற்கு உரிய எனக் கூறப் பட்ட காலம் பிறிதொரு நிலத்திற்குரியதாகி மயங்கி வருவதாம்

இயற்கைக் கருப்பொருளாவதும் இயற்கை உரிப்பொருளாவதும் அவ்வத்திணைக்குரியவாகக் கூறப்பட்ட கருப்பொருளும் உரிப் பொருளுமாம். அவ்வந்நிலத்திற்குரிய கருப்பொருளும் உரிப் பொருளும் மயங்கிப் பிற நிலத்திற்கு வரின் அவை செயற்கைக் கருப்பொருளும் செயற்கை உரிப்பொருளுமாம். இதனை இந் நூற்பா உரையானும் பன்னிரண்டாவது நூற்பா உரையானும் அறியலாம். (4)

நால்வகை நிலங்கள்.

5. மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.

இது 'நடுவணது' (2) ஒழிந்த நான்கானும் அவ் 'வைய'த் தைப் பகுக்கின்றது.

(இ - ள்.) மாயோன் மேய காடு உறை உலகமும், சேயோன் மேய மை வரை உலகமும், வேந்தன் மேய தீம் புனல் உலகமும், வருணன் மேய பெரு மணல் உலகமும் — கடல்வண்ணன் காத லித்த காடுறை யுலகமும், செங்கேழ் முருகன் காதலித்த வான் தங்கிய வரைசூழ் உலகமும், இந்திரன் காதலித்த தண்புனல் நாடும், கடுங்கடற் கடவுள் காதலித்த நெடுங்கோட்டு எக்கர் நிலனும்; முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே — முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென ஒழுக்கம் கூறிய முறையானே சொல்லவும் படும் என்றவாறு.

இந்நான்கு பெயரும் எண்ணும்மையோடு நின்று எழுவா யாகிச் சொல்லவும்படும் என்னும் தொழிற்பயனிலை கொண்டன. என்றது இவ்வொழுக்கம் நான்கானும் அந்நான்கு நிலத்தையும் நிரனிறை வகையால் பெயர் கூறப்படும் என்றவாறு. எனவே ஒழுக்கம் நிகழ்தற்கு நிலம் இடம் ஆயிற்று.

உம்மை எதிர்மறையாகலின், இம்முறை அன்றிப் பிறவாற்ரு னும் சொல்லவும் படுமென்பது பொருளாயிற்று. அது தொகை களினும் கீழ்க்கணக்குகளினும் இம்முறை மயங்கிவரக் கோத்த வாறு காண்க.

முல்லைநிலத்துக் கோவலர், பல்லா பயன் தருதற்கு மாயோன் ஆகுதி பயக்கும் ஆபல காக்கவெனக் குரவை தழீஇ மடைபல கொடுத்தலின், ஆண்டு அவன் வெளிப்படும் என்ருர்.

உதாரணம்:- "அரைசுபடக் கடந்தட்டு" என்னு முல்லைக் கலியுள்,

"பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய
வாடுகொ ணேமியாற் புரவுதும்." (கலி-105)

என வரும்.

"படையிடுவான் மற்கண்டீர் காமன் மடையடும்
பாலொடு கோட்டம் புகின்." (கலி-109)

என அவன் மகனுகிய காமனும் அந்நிலத்திற்குத் தெய்வமாதல் 'அவ்வகை பிறவும் கருவென மொழிப (18) என்புழி வகை யென்றதனுல் கொள்க.

இனிக் குறிஞ்சி நிலத்திற்குக் குறவர் முதலியோர் குழீஇ வெறியயர்தற்கு வேண்டும் பொருள்கொண்டு வெறியயர்ப ஆகலின், ஆண்டு முருகன் வெளிப்படும் என்ருர்.

அஃது, "அணங்குடை நெடுவரை" என்னும் அகப்பாட்டினுள்,

"படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவ ளிவள்." (அகம்-22)

எனவரும். "சூரர மகளிரொ டுற்ற சூளே" (குறுந்-53) என்புழிச் சூரர மகளிர் அதன் வகை.

இனி ஊடலும் கூடலுமாகிய காமச்சிறப்பு நிகழ்தற்கு மருதநிலத்திற்குத் தெய்வமாக "ஆடலும் பாடலும் ஊடலும் உணர்தலும்" உள்ளிட்ட இன்பவிளையாட்டு இனிதின் நுகரும் இமையோர்க்கும் இன்குரலெழிக்கும் இறைவனுகிய இந்திரனை

ஆண்டையோர் விழவுசெய்து அழைத்தலின், அவன் வெளிப்படு மென்றார்.

அது,

'வையைப் புதுப்புன லாடத் தவிர்ந்தமை
தெய்வத்திற் றேற்றித் தெளிக்கு." (கலி-98)

என, இந்திரனைத் தெய்வம் என்றதனானும், இந்திர விழவூரெடுத்த காதையானும் உணர்க.

இனி நெய்தல் நிலத்தில் நுளையர்க்கு வலைவளம் தப்பின் அம்மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக் கோடு நட்டுப் பரவுக் கடன் கொடுத்தலின், ஆண்டு வருணன் வெளிப்படும் என்றார். அவை,

"சினைச்சுறலின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்."
(பத்து - பட்டின 86 - 7)

எனவும்,

"கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கி."
(அகம் - 110)

எனவும்,

"அணங்குடைப் பனித்துறை கைதொழு தேத்தி
யாயு மாயமொ டயரும்." (அகம் - 240)

எனவும் வரும்.

இனிப் பாலைக்குச்,

"சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற லியையவோ." -
(கலி - 16)

எனவும்,

"வளிதரு செல்வனை வாழ்த்தவு மியையவோ."
(கலி - 16)

எனவும் ஞாயிற்றைத் தெய்வமாக்கி அவனின் தோன்றிய மழையினையும் காற்றினையும் அத்தெய்வப் பகுதியாக்கிக் கூறுப

வால் எனின், எல்லாத் தெய்வத்திற்கும் அந்தணர் அவி கொடுக்குங்கால் அங்கி ஆதித்தன்கண் கொடுக்கும் என்பது வேதமுடிபு ஆகலின், ஆதித்தன் எல்லா நிலத்திற்கும் பொதுவென மறுக்க.

இவ்வாசிரியர் கருப்பொருளாகிய தெய்வத்தினை முதல் பொருளோடு கூட்டிக் கூறியது தெய்வவழிபாட்டு மரபு இதுவே, ஒழிந்தது மரபு அன்றென்றற்கு. எனவே அவ்வந் நிலத்தின் தெய்வங்களே பாலைக்கும் தெய்வமாயிற்று.

உறையுலகு என்றார், ஆவும் எருமையும் ஆடும் இன்புறு மாற்றால் நிலைபெறும் அக்காட்டின் கடவுள் என்றற்கு. மைவரை எனவே மழைவளம் தருவிக்கும் முருகவேள் என்றார். இந்திரன் யாற்றுவளனும் மழைவளனும் தருமென்றற்குத் தீம்புனல் என்றார். திரைபொருது கரை கரையாமல் எக்கர் செய்தல் கடவுள் கருத்து என்றற்குப் பெருமணலென்றார்.

இனி, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற முறையென்னை? யெனின், இவ்வொழுக்கம் எல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்கம் ஆதலின், கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறம் செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின் அது முற்கூறப்பட்டது. எனவே, முல்லையென்ற சொற்குப் பொருள் இருத்தல் ஆயிற்று. "முல்லை சான்ற முல்லையம் புறவின்" (பத்து. சிறுபாண் - 169) என்பவாகலின். புணர்தல் இன்றி இல்லறம் நிகழாமையின் புணர்தல் பொருட்டாகிய குறிஞ்சியை அதன் பின் வைத்தார். இதற்குதாரணம் "கருங்காற் குறிஞ்சி சான்றவெற் பணிந்து" (பத்து-மதுரை-300) என்பது. புணர்ச்சிப் பின் ஊடல் நிகழ்தலின் அதன்பின் மருதத்தை வைத்தார். 'மருதம் சான்ற மருதத் தண்பணை' (பத்து - சிறுபாண் - 186) என்புழி மருதமென்றது ஊடியும் கூடியும் போகம் நுகர்தலை. பரத்தையிற் பிரிவுபோலப் பிரிவொப்புமை நோக்கி நெய்தலை ஈற்றின்கண் வைத்தார், நெய்தல் பறையாவது இரங்கல் பறை யாதலின், நெய்தல் இரக்கமாம்

"ஐதக லல்குன் மகளிர்
நெய்தல் கேளன்மார் நெடுங்கடை யானே."

(புறம் - 389)

என வரும்,

இனி, இவ்வாறன்றி முல்லை முதலிய பூவால் பெயர்பெற்றன இவ்வொழுக்கங்கள் எனின், அவ்வந்நிலங்கட்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின் அவற்றுற் பெயர்கூறலும் உரியவெனக் கடாயி ஞற்கு விடையின்மை உணர்க.

இதனுனே நடுவுநிலைத்திணையொழிந்த நான்கற்கும் பெயரும் முறையும் கூறினுன். இந்நான்கும் உரிப்பொருளாதல் 'புணர்தல் பிரிதல்' (தொல் - பொருள் - 14) என்புழிக் கூறுதும். கருப் பொருளாகிய தெய்வத்தை முதற்பொருளோடு கூறியது, அவை 'வந்த நிலத்தின் பயத்தவாய் (தொல்-பொருள்-19) மயங்குமாறு போல மயங்காது இது என்றற்கும் கருப்பொருளுடைத்து எனப் பட்ட பாலைக்குத் தெய்வத்தை விலக்குதற்கும் என்றுணர்க

உதாரணம்:-

"வன்புலக் காட்டுநாட் டதுவே." (நற்றிணை-59)

எனவும்,

"இறும்புபட் டிருளிய விட்டருஞ் சிலம்பிற்
கன்மிசைச் சிறுநெறி" (அகம்-128)

எனவும்,

"அவ்வய னண்ணிய வளங்கே ழூரன்"

எனவும்,

"கானலுங் கழறுது * * * மொழியாது." (அகம்-170)

எனவும் நால்வகை யொழுக்கத்திற்கு நால்வகை நிலனும் உரியவாயின வாறு காண்க. (5)

(வி - ரை) கடல்வண்ணன் - கடல்நிறமுடையோன், திருமால், செங்கேழ் - செந்நிறம். நெடுங்கோட்டு எக்கர் - நெடிய கரை யாகிய மணற்குவியல்.

நான்கு பெயரும் - முல்லை முதலாகக் கூறப்பெற்ற நான்கு பெயரும். எண்ணும்மை - உலகமும் என நான்கிடத்தும் வரும்

உம்மை. சொல்லுதல் தொழிலாகலின் தொழிற் பயனிலை கொண்டன என்றார்.

தொகைகள் - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன. கீழ்க்கணக்கு - பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.

ஆகுதி - வேள்வி. மடை - உணவு.

இன்குரல் எழிலி - இனிய ஒலியுடைய மேகம். சுறவுக்கோடு - சுறுமீன் கொம்பு. பரவுக்கடன் - வேண்டிக்கொண்டு செய்யும் வழிபாடு.

அவி கொடுத்தல் - வேள்வித் தீ வழியாக உணவு கொடுத்தல். அங்கி - நெருப்பு.

'நால்வகை நிலனையும் கூறுங்கால் மாயோன் முதலிய அவ்வந் நிலத்திற்குரிய தெய்வங்களையும் சேர்த்துக் கூறியதற்குக் காரணம் அவ்வந்நிலங்களில் உள்ளார்க்கு அவ்வத் தெய்வங்களே வழிபடு தெய்வங்களாய் விளங்கும் என்பது பற்றியாம்.

தலைவிக்குப் பரத்தையர் பிரிவால் ஊடல் நிகழும். ஏனைய பிரிவுகளால் இரங்கல் நிகழும். எனவே பிரிவிற்குக் காரணம் வேறாயினும் தலைவன் பிரிந்துழியே ஊடலும் இரங்கலும் நிகழ் தலின் பிரிவொப்புமை பற்றி என்றார்.

நிலங்களை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என முறைப் படுத்தியிருப்பதற்குரிய காரணம் ஒழுக்கம் பற்றியதேயாம் என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும். சிவஞான முனிவர் மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் எனச் சிறுபொழுதின் வைப்பு முறை பற்றியேயாம் என்பர். அவர் கூறுமாறு:

"முல்லை முதலாக வைத்து எண்ணியது முதற் பொருள் முறைபற்றி என்றதென்னை? காடுறை உலகம் முதல் வைத்து எண்ணுதலின் நில முதற் பொருள் கூறியதே. நிலமுறை பற்றி யன்று. இனிக் கால முதற்பொருள் இரண்டனுள் பெரும்பொழுது ஞாயிற்றுக்குரிய சிங்கவோரை முதல் வைத்து எண்ணுதல் முறையாயினும் திணைகள் ஒன்றும் பலவும் பெரும்பொழுது பெறுதலின் அம்முறைபற்றி முறைகோடல் பொருத்தமன்று.

சிறுபொழுது காமத்திற்குச் சிறந்த இராக்காலத்தின் முற்கூறு முதல் வைத்து எண்ணியது முறையாயினும் எற்பாடாகிய பிற்பகலை இறுதிக்கண் வையாமையின் அதுவும் முறைபற்றிக் கூறியதன்று. இங்ஙனமாகலானும் வேறு காரணமின்மையானும் தலைவன் பிரிந்துழி தலைவி ஆற்றியிருத்தல் கற்பாகலின் இல்லறத்திற்குக் கற்பு சிறந்தமைபற்றி முல்லை முதல் வைத்து எண்ணினாரெனவே கோடுமெனின்:- அது பொருந்தாது. ஏனைத்திணைகள் அவ்வாற்றான் முறை பெருமையானும் கந்தருவ வழக்கிற் கற்பினும் களவு சிறந்ததாகலானும் என்பது. இனி நிலம் பற்றியும் பெரும் பொழுது பற்றியும் முறைகோடல் சாலாதாயினும் சிறுபொழுது பற்றி முறைகோடல் சாலுமென்க."

முல்லை முதலிய திணைப் பெயர்கள் அவ்வந்நிலத்துக் காணப்படும் மலர்களைப் பற்றியதாம் என்பது இளம்பூரணர் கருத்தாகும். இதனை நச்சினார்க்கினியர் மறுக்கின்றார். • கடாவுவார்க்கு – வினவுவார்க்கு. எனினும் ஒவ்வொரு ஒழுக்கத்தை உணர்த்தற்கு ஒவ்வொரு பூவை அடையாளமாகக் கொண்டு ஒழுகுவது பண்டைத் தமிழரது வழக்கேயாதலின் இளம்பூரணர் கருத்தே பொருத்தமுடைத்தாம். (5)

முல்லைக்கும் குறிஞ்சிக்கும் உரிய பெரும்பொழுது சிறுபொழுதுகள்

6. [1]காரும் மாலையும் முல்லை, குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.

இது முதலிரண்டனுள் நிலங்கூறிக் காலங்கூறுவான் முல்லைக்கும் குறிஞ்சிக்கும் பெரும்பொழுதும் சிறுபொழுதும் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) காரும் மாலையும் முல்லை—பெரும்பொழுதினுள் கார் காலமும் சிறுபொழுதினுள் அக்காலத்து மாலையும் முல்லையெனப்

---

1 இச் சூத்திரத்தை இரண்டு சூத்திரமாகக் கொள்வர் இளம்பூரணர்.

படும்; குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்—பெரும்பொழுதினுள் கூதிர்க்காலமும் சிறுபொழுதினுள் அதன் இடை யாமமும் குறிஞ்சி யெனப்படும் என்றவாறு.

முதல் கரு உரிப்பொருளென்னும் மூன்று பாலுங்கொண்டு ஓர் திணையாம் என்று கூறினாரேனும் ஒரு பாலினையும் திணையென்று அப்பெயரானே கூறினார்; வந்தான் என்பது உயர்திணை என்றாற்போல. இது மேலனவற்றிற்கும் ஒக்கும்.

இக்காலங்கட்கு விதந்து ஓர் பெயர் கூறாது வாளா கூறினார், அப்பெயர் உலக வழக்கமாய் அப்பொருள் உணரநிற்றலின்.

காலவுரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோரை முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடகவோரை யீறாக வந்து முடியும் துணை ஓர் யாண்டாமாதலின், அதனை இம்முறையானே அறுவகைப் படுத்து இரண்டு திங்கள் ஒரு காலம் ஆக்கினார். இனி ஒரு நாளினைப் படுசுடரமையந் தொடங்கி 'மாலையெனவும், அதன்பின் இடையாமம் எனவும், அதன்பின் விடியல் எனவும், அதன்பின் காலையெனவும், அதன்பின் நண்பகல் எனவும், அதன்பின் எற்பாடு எனவும் ஆறாகப் பகுத்தார். அவை ஓரோவொன்று பத்து நாழிகையாக இம்முறையே சூத்திரங்களுள் சிறுபொழுது வைப்பர். பின்பனியும் நண்பகலும் பிற்கூறிய காரணம் அச்சூத்திரத்துக் கூறுதும்.

முல்லைக்குக் காரும் மாலையும் உரியவாதற்குக் காரணமென்னை? யெனின், பிரிந்து மீளும் தலைவன் திறமெல்லாம் பிரிந்திருந்த கிழத்தி கூறுதலே முல்லைப் பொருளாயும், பிரிந்து போகின்றான் திறங்கூறுவனவெல்லாம் பாலையாகவும் வருதலின், அம்முல்லைப் பொருளாகிய மீட்சிக்கும் தலைவி இருத்தற்கும் உபகாரப்படுவது கார்காலமாம்; என்னை? வினைவயிற் பிரிந்து மீள்வோன், விரைபரித் தேரூர்ந்து பாசறையினின்று மாலைக் காலத்து ஊர்வயின் வரூஉம் காலம் ஆவணியும் புரட்டாசியும் ஆதலின், அவை வெப்பமும் தட்பமும் மிகாது இடை நிகர்த்தவாகி ஏவல் செய்து வரும் இளையோர்க்கு நீரும் நிழலும் பயத்தலானும், ஆர்பதம் மிக்கு நீரும் நிழலும் பெறுதலிற் களிசிறந்து மாவும் புள்ளும் துணையோடு இன்புற்று விளையாடுவன கண்டு தலைவற்கும்

தலைவிக்கும் காமக்குறிப்பு மிகுதலானும் என்பது. புல்லை மேய்ந்து கொல்லேற்றோடே புனிற்றாக் கன்றை நினைந்து மன்றில் புகுதரவும் தீங்குழல் இசைப்பவும் பந்தர்முல்லை வந்து மணம் . கஞற்றவும் வருகின்ற தலைவற்கும் இருந்த தலைவிக்கும் காமக்குறிப்புச் சிறத்தலின், அக்காலத்து மாலைப்பொழுதும் உரித்தாயிற்று.

இனிக் குறிஞ்சியாவது புணரற்பொருட்டு. அஃது இயற்கைப் புணர்ச்சி முதலியனவாம். இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின் களவு நீட்டிப்பக் கருதும் தலைவற்குக் களவினைச் சிறப்பிக்குங்கால், தலைவி அரியளாக வேண்டும். ஆகவே அவ்வருமையை ஆக்குவது ஐப்பசியும் கார்த்திகையும் ஆகிய கூதிரும் அதன் இடையாமமும் என்பது. என்னை? இருள் தூங்கித் துளி மிகுதலிற் சேறல் அரிது ஆதலானும், பானாட் கங்குலில் பரந்துடன் வழங்காது மாவும் புள்ளுந் துணையுடன் இன்புற்று வதிதலிற் காமக்குறிப்புக் கழியவே பெருகுதலானும் காவன்மிகுதி நோக்காது வருந் தலைவனைக் குறிக்கண் எதிர்ப்பட்டுப் புணருங்கால் இன்பம் பெருகுதலின், இந்நிலத்திற்குக் கூதிர்க்காலம் சிறந்ததெனப்படும்.

உதாரணம்:-

"விருந்தின் மன்ன ரருங்கலந் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை தணிந்தனன் றீம்பெயற்
காரு மார்கலி தலையின்று தேரும்
ஓவத் தன்ன கோபச் செந்நிலம்
வள்வாய் ஆழி உள்ளுறு புருளக்
கடவிக் காண்குவம் பாக மதவுநடைத்
தாம்பசை குழவி வீங்குசுரை மடியக்
கனையலங் குரல காற்பரி பயிற்றிப்
படுமணி மிடற்ற பயநிறை யாயங்
கொடுமடி யுடையர் கோற்கைக் கோவலர்
கொன்றையங் குழலர் பின்றைத் தூங்க
மனைமனைப் படரு நனைநகு மாலைத்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையிற் றீவிய மிழற்றி

முகிழ்நிலாத் திகழ்தரு மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடிநிலையே." (அகம்-54)

இது பாகற்குரைத்தது. இது முல்லைக்கண் காரும் மாலையும் வந்தது.

"மன்றுபா டவிந்து மனைமடிந் தன்றே
கொன்றோ ரன்ன கொடுமையோ டின்றே
யாமங் கொளவரிற் கனைஇக் காமங்
கடலினு முரைஇக் கரைபொழி யும்மே
இன்ன மாகவும் நன்னர். நெஞ்சம்
என்னொடும் நின்னொடுஞ் சூழாது கைம்மிக்
கிறும்புபட் டிருளிய இட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கானக நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்பு
இட்டருங் கண்ண படுகுழி யியவின்
இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே." (அகம்-128)

இது இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகத் தோழிக்கு உரைப்பாளாக உரைத்தது. இது குறிஞ்சிக்குக் கூதிரும் யாமமும் வந்தது.

நிலனும் பொழுதும் முதல் என்றமையிற் கார் முதல் ஆதல் வேண்டும், வேண்டவே, அதற்கு இடையின்றிக் கூறிய மாலையும் அதன் சினையாம் ஆதலின் கார்காலத்து மாலையென்பது பெற்றும். இது கூதிர்யாமம் என்பதற்கும் ஒக்கும்.

(வி - ரை) மூன்று பால் - மூன்று பகுதி. ஆண் பெண் பலர் எனும் முப்பாலும் கொண்டது உயர்திணையாம். எனினும் வந்தான் என ஆண்பால் மட்டுமே வரினும் அதனை உயர்திணை என அழைத்தல் மரபாகின்றது. அதைப்போன்றே முதல் கரு

உரி ஆகிய மூன்றும் கொண்டே ஒரு திணை என இருப்பினும் முதற் பொருளுள் ஒரு கூறாய பொழுது கொண்டே திணை எனக் கூறலும் பொருத்தமாம்.

விதந்து ஓர் பெயர் கூறுதல் என்பது கார், மாலை முதலிய காலங்கட்குச் சிறப்பாக ஒவ்வோர் பெயரினை எடுத்துக் கூறுதலாம்.

ஞாயிறு தோன்றி மறையும் துணையும் ஒரு நாளாகவும், ஞாயிற்றின் ஆட்சி வீடாகிய ஆவணித் திங்களை முதலாக வைத்து ஆண்டுக் கணக்கிடுதலை மரபாகவும் கொண்டிருத்தலின் கால உரிமை எய்திய ஞாயிறு என்றார். சிங்க ஓரை – ஆவணித்திங்கள். கற்கடக ஓரை – ஆடித்திங்கள். படுசுடர் அமயம்; சுடர்படு அமயம் – கதிரவன் மறைகின்ற காலம். முல்லையும் பாலையும் தலைவன் பிரிந்த வழிக் கூறப்பெறும் நிகழ்ச்சியே எனினும் பிரிந்து மீளும் தலைவன் திறத்தைப் பிரிந்திருக்கும் தலைவி கூறுதலே முல்லையாமென்றும், பிரிந்து போகின்றான் திறம் கூறுவன எல்லாம் பாலையாம் என்றும் நச்சினார்க்கினியர் கூறுவது நுண்ணிதும் பாராட்டுதற்குரியதுமாகும். ஏவல் செய்துவரும் – தலைவன் கூறிய ஏவலைச் செய்து வரும். இளையர் – தலைவனை விட்டு இரவும் பகலும் நீங்காது ஏவல் செய்து வருவோர். ஆர்பதம் – உணவு. கொல்லேற்றோடு – கொல்லும் தன்மை வாய்ந்த ஆனேற்றோடு; காளையொடு. புனிற்றா – ஈன்ற அணிமையையுடைய பசு. மன்று – இல்லத்தின் முற்றம். பந்தர் முல்லை – பந்தரில் படர்ந்துள்ள முல்லை. மணம் கஞற்றவும் – மணம் வீசவும்.

இருள் தூங்கி – இருள்மிகுந்து. பால் + நாள் = பாதுள் — பாதிநாள். கங்குலின் பாதி நாளாவது இடையாமமாம்.

கார்காலம் பெரும்பொழுதும், மாலை சிறுபொழுதும் ஆதலின் முன்னையதை முதலென்றும் பின்னையதைச் சினை என்றும் கூறினார்.

கார்காலம் – மழைகாலம். ஆவணியும் புரட்டாசியும் இக் காலமாகும். மாலை – இராப் பொழுதின் முதற்கூறு. கூதிர் – மழையோடு கூடிய குளிர்காலம். ஐப்பசியும் கார்த்திகையும் இக்கால மாகும். யாமம் - இராப் பொழுதின் நடுக்கூறு. (6)

முன்பனியும் குறிஞ்சிக்கு உரித்து.

7. பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப.

இஃது எய்தியதன்மேல் சிறப்புவிதி; முற்கூறிய குறிஞ்சிக்கு முன்பனியும் உரித்து என்றலின்.

(இ - ள்) பனி எதிர் பருவமும் உரித்து என மொழிப - பனி முற்பட்ட பருவமும் குறிஞ்சி யொன்றற்கு உரித்து என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

எதிர்தலென்பது முன்னுதல்; எனவே, முன்பனியாயிற்று; அது ஞாயிறுபட்ட அந்திக்கண் வருதலின். உரித்து என்றதனால் கூதிர்பெற்ற யாமமும் முன்பனி பெற்று வரும் எனக்கொள்க.

உதாரணம்:-

"* * * *
பனியடூஉ நின்ற பானாட் கங்குல்
தமியோர் மதுகை தூக்காய் தண்ணென
முனிய அலைத்தி முரணில் காலை
* * * *" (அகம் - 125)

என முன்பனியாமம் குறிஞ்சிக் கண் வந்தது.

(வி - ரை) ஞாயிறுபட்ட - கதிரவன் மறைந்த. குறிஞ்சிக்குக் கூதிர்க் காலம் சிறந்ததாதல்போல இம்முன்பனிக்காலம் சிறந்த தன்மையின் வேறு கூறினார். உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை என்பர் இளம்பூரணர். பின்வந்த நம்பி அகப்பொருள் ஆசிரியரும் இத்திணைக்குரிய பெரும்பொழுதுகளின் சிறப்பும் சிறப்பின்மையும் விளங்க, சிறுபொழுதினை இடைவைத்துக்

"கூதிர் யாமம் முன்பனி என்றிவை
ஓதிய குறிஞ்சிக் குரிய வாகும்" (7)

என்று கூறியது காண்க.

மருதத்திற்கும் நெய்தற்கும் உரிய சிறுபொழுதுகள்

8. [1]வைகுறு விடியல் மருதம் எற்பாடு
[2]நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.

இனிச் சிறுபொழுதே பெறுவன கூறுகின்றது.

(இ - ள்) வைகுறு விடியல் மருதம் – வைகறையும் விடியற் காலமும் மருதம் ஆதலும்; எற்பாடு நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும் – எற்படுகாலம் நெய்தல் ஆதலும் பொருள்பெறத் தோன்றும் என்றவாறு.

வைகுறுதலும் விடியலும் என்னும் உம்மை தொக்கு நின்றது. செவியறிவுறுத்தலைச் செவியறிவுறூஉ என்றாற்போல வைகுறுதலை வைகுறு என்றார். அது மாலையாமமும் இடையாமமும் கழியுந் துணையும் அக்கங்குல் வைகுறுதல்: அது கங்குல் வைகிய அறுதியா தல் நோக்கி வைகறை யெனவுங் கூறுப. அதுவும் பாடம். நாள் வெயிற் காலையை விடியலென்றார். விடியல் வெங்கதிர் காயும் வேயம லகலறை" (கலித் - 45) என்ப. "விடியல் வைகறை யிடூஉ மூரத" (அகம்-196) என்றது, விடியற்கு முன்னர்த்தாகிய வைகறை யென உருபுதொக்கு முன்மொழி நிலையலாயிற்று.

பரத்தையிற் பிரிந்த தலைவன் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் பொழுது கழிப்பிப் பிறர்க்குப் புவனாகாமல் மீளும் காலம் அதுவாதலானும், தலைவிக்குக் கங்குல் யாமம்" கழியாது நெஞ் சழிந்து ஆற்றாமை மிகுதலான் ஊட லுணர்த்தற்கு எளிதாவ தோர் உபகாரம் உடைத்து ஆதலானும் வைகறை கூறினார். இனித் தலைவி விடியற்காலம் சிறுவரைத்தாதலின் இதனால் பெறும் பயன் இன்றென முனிந்து வாயிலடைத்து ஊடல் நீட்டிப்பவே அவ்வைகறை வழித்தோன்றிய விடியற்கண்ணும் அவன் மெய்வேறு பாடு விளங்கக் கண்டு வாயில் புகுத்தல் பயத் தலின் விடியல் கூறினார்.

---

1. வைகறை விடியல் என்பது இளம்பூரணர் பாடம்.
2. இச்சூத்திரத்தை இரண்டு சூத்திரமாகக் கொள்வர் இளம்பூரணர்.

"வீங்குநீர்" என்னும் மருதக்கலியுள்,

"அணைமென்றோள் யாம்வாட அமர்துணைப் புணர்ந்துநீ
மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றே
பொதுக்கொண்ட கௌவையிற் பூவணைப் பொலிந்தநின்
வதுவையங் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை."
(கலி - 66)

என மருதத்திற்கு வைகறை வந்தது.

"விரிகதிர் மண்டிலம்" என்னும் மருதக்கலியுள்'

"தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தீயான்கொல்
கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத் துஞ்சி
யணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய." (கலி-71)

என மருதத்துக் காலை வந்தது.

"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி" (குறுந் - 45) என்பதும் அது.

இனி வெஞ்சுடர் வெப்பம் தீரத் தண்ணறும் சோலை தாழ்ந்து நீழற் செய்யவும், தண்பதம்பட்ட தெண்கழி மேய்ந்து பல் வேறு வகைப்பட்டு புள்ளெல்லாம் குடம்பை நோக்கி உடங்கு பெயரவும், புன்னை முதலிய பூவினுற்றம் முன்னின்று கஞற்றவும், நெடுந்திரை யழுவத்து நிலாக்கதிர் பரப்பவும் காதல் கைமிக்குக் கடற்கானும் கானற்கானும் நிறைகடந்து வேட்கைபுலப்பட உரைத்தலின், ஆண்டுக் காமக்குறிப்பு வெளிப்பட்டு இரங்கற் பொருள் சிறத்தலின் எற்பாடு நெய்தற்கு வந்தது,

(எ - டு)

"நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கின நிரைபறை யுகப்ப
எல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயின்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு
மதரெழில் மழைக்கண் கலுழ இவளே

பெருநாண் அணிந்த சிறுமென் சாயல்
மாணலஞ் சிதைய ஏங்கி யானுது
அழல்தொடங் கினளே பெரும அதனால்
கழிச்சுறு எறிந்த புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் இளையரோ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
பெண்ணை ஓங்கிய வெண்மணற் படப்பை
அன்றில் அகவும் ஆங்கண்
சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி நாட்டே." (அகம்-120)

பகற்குறிக்கண் இடத்துய்த்துத் தலைவனை எதிர்ப்பட்டு உரைத்தது. நெய்தற்கு எற்பாடு வந்தது.

"கானன் மாலைக் கழிப்பூக் கூம்ப" (அகம் - 40) என்பதனுண் மாலையும் வந்தது. கலியுண் மாலைக்காலம் நெய்தலின் கண் வந்தவாறு காண்க. இதுமேல் 'நிலனொருங்கு மயங்குதலின்று" (கொள் - அகம் - 12) என்பதனுற் பெறுதும்.

இவற்றிற்கு அறுவகை இருதுவும் உரிய வென்பதன்றிக் காரும் இளவேனிலும் வேனிலும் பெரும்பொழுதாகக் கொள்ப என்றற்குப் பொருள் பெறத் தோன்றும் என்றுர்.

இனி நெய்தற்கு ஒழித்த மூன்று காலமும் பற்றிவரச் சான்ருேர் செய்யுள் செய்திலர்; அக்காலத்துத். தலைவி புறம் போந்து விளையாடாமையின். அங்ஙனம் வந்த செய்யுளுளவேல் அவற்றையுங் கொள்க.

"கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மில் பெருமொழி கூறித் தம்மில்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே." (குறுந் - 8)

புறனுரைத்தாளெனக்கேட்ட பரத்தை தலைவனை நெருங்கித் தலைவன் பாங்காயினுர் கேட்ப உரைத்தது. இது முதுவேனில் வந்தது.

அரிபெய் சிலம்பி னும்பலந் தொடலை
அரம்போ ழவ்வளைப் பொலிந்த முன்கை
இழையணி பணைத்தோ ளையை தந்தை
மழைவளந் தரூஉ மாவண் தித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை யாங்கண்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தங்
குழைமா ணொள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயநா டியானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய
நெருந லாடினை புனலே யின்றுவந்
தாக வனமுலை யரும்பிய சுணங்கின்
மாசில் கற்பிற் புதல்வன் தாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை யெள்ளலஃ தமைகுந் தில்ல
சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்
தந்தூம்பு வள்ளை யாய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்
பல்வேள் மத்தி கழாஅ ரன்னவெம்
இளமை சென்று தவத்தொல் லஃதே
இனியெவன் செய்வது பொய்ம்மொழி யெமக்கே."

(அகம் - 6)

பரத்தையொடு புனலாடி வந்தமைகேட்டுத் தலைவி புலந்தது. இது இளவேனில் வந்தது. ஏனைய வந்தவழிக் காண்க.

நாடகவழக்கான் அன்றி உலகியல் வழக்கானும் அச் சிறு பொழுதும் பெரும்பொழுதிற்குப் பொருந்தும் என்றற்குத் தோன்று மென்றார். இதன் பயன் இவ்விரண்டு நிலத்துக்கும் மற்றை மூன்று காலமும் பெரும்பான்மை வாராது என்றலாம்.

(வி - ரை) வைகுறுதல் - தங்குதல். இரவு தங்கியிருக்கும் நேரம். அவ்வாறு இரவு தங்கி இறுதியாகும் நேரம் வைகறை எனப்படும். வைகு + அறை = வைகறை. இரவு தங்கி இறுதியாகும் (முடிவாகும்) நேரத்தை வைகறை என்பர்.

திரு. கணேச ஐயர் அவர்கள், வைகுறுதல் – கழிதல் என்று கொண்டு இருள்கழியும் சாலம் வைகறை என்பர். 'வைகலும் வைகல் வரக்கண்டும்' என்பதில் வைகல் – கழிதல் என்ற பொருளில் வருதலையும் இதற்கு அரணுகக்காட்டுவர்.

சிவஞான முனிவர் வைகுறு விடியல் என்பதை வினைத் தொகையாகக் கொண்டு இரவு கழிந்த விடியல் என உரை காண்பர். இவ்வாறு உரை கொண்டு சிறு பொழுது ஐவகையது எனக்கூறும் நம்பி அகப்பொருள் கருத்தைத்தழுவுவர். தொல் காப்பியர் கூறும் எற்பாட்டிற்குரிய காலம் இக்கால அமைப்பின் படி கூறின் பிற்பகல் இரண்டு மணி முதல் 6 மணி வரையுள்ள அமையமாகும். நண்பகல் உணவுக்குப்பின் இக்காலம் வருவதாகும் அடிசில்கை தொட்ட பின்னர் பயமின்றிக்கழியும் பிற்பகல் புராணக் கேள்வி முதலியவற்ருன் ஆதல் விளையாட்டு முதலிய வற்ருனுதல் பொழுது போக்கப் படுவதல்லது விதிக்கப்படும் கருமம் ஒன்றற்கும் உரித்தன்று ஆதலின் இதனை ஒன்ருக வைத்து எண்ண வேண்டியதில்லை என்பர் சிவஞான முனிவர். பொழுதுகளை வரையறைப்படுத்திக் கூறுதல் ஆசிரியர் கருத்தே அன்றி பயனுடையபொழுது பயனில் பொழுது என வகைப்படுத்தலும் அது பற்றி ஒரு கால அமயத்தை விடுப்பதும் ஆசிரியர் கருத்தன்ருதலின் முனிவர் கூறும் உரை எவ்வாற்ருனும் பொருந்துவதன்ரும்.

நாள் வெயிற்காலை – பகற் பொழுதின் முற்கூற்றில் ஞாயிறு தோன்றி வரும் காலம். மெய் வேறுபாடு – தான் பரத்தையரொடு புணர்ந்தமையால் ஆய உடல் வேறுபாடு.

தண்பதம் – குளிர்ச்சியான உணவு. குடம்பை – கூடு. உடங்கு– ஒருங்கு. கஞற்றவும் – நெருங்கவும். நெடுந்திரை அழுவம் – நெடிய அலைகள் பொருந்திய கடல். கடற்கானும் கானற் கானும் – கடலினிடத்தோ அன்றிக்கானலிடத்தோ.

'நெடுவேள் மார்பில், எனத்தொடங்கும் பாடலில் இடத் துய்த்தல் என்பதற்கு ஏற்ற குறிப்பில்லை. பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைவனிடத்து உரைத்தது என்றல் பொருந்துவதாம்.

மாமரத்திலிந்து பழம் விழும் பருவம் முதுவேனில் என்பது அறியத்தக்கது.

வைகறையாவது இராப் பொழுதின் பிற்கூறும், விடியலாவது பகற் பொழுதின் முற்கூறுமாம்.

பெரும் பொழுது வறையறைப்படுத்தாமையின் அறுவகைப் பெரும் பொழுதும் இவ்விருதிணைக்குரிய என்பர் இளம்பூரணர். அதனை மனத்துட்கொண்டே நச்சினார்க்கினியர் இவற்றிற்கு அறுவகை இருதுவும் உரிய என்பதன்றி, கார் இளவேனில் வேனில் ஆகிய மூன்றுமே உரிய என்று கூறுகின்றார். அவ்வாறு கூறிய அவரே நெய்தற்கு இம்மூன்று காலமும் உரியவாகச் சான்றோர் செய்யுளின்மை கண்டு, வருவன உளவேல் கொள்க என்றார். அதனோடும் அமையாது இவ்விரு திணைக்கும் கூதிர், முன்பனி, பின்பனி, ஆகிய மூன்று பெரும் பொழுதுகளும் வாராவென்றும் கூறினார். எனினும் இளம் பூரணர் கருத்தைத் தழுவிய நம்பியகப் பொருள் ஆசிரியர்,

'மருதம் நெய்தல் என்று இவையிரண்டிற்கும்
உரிய பெரும் பொழுது இரு மூன்றும்மே'

என்றுரைப்பர்.

எல்–சூரியன், படுதல் – மறைதல். எனவே பகற் பொழுதின் பிற்கூறும். 'எற்பாடு – சூரியன் தோன்றும் காலம். படுதல் – உண்டாதல். தலைவன் பிரிந்துழி தனித்திருந்த தலைவி இராக் காலம் முழுதும் கொன்னே கழிந்தமை பற்றி இரங்குதற் குரிய காலம் அதுவாம் என்பார், ஏற்பாடு நெய்தல் ஆதல் மெய் பெறத் தோன்றும் என்றார் என்பது சிவஞான முனிவர் உரை யாகும். "காலைக்குச் செய்த நன்று என் கொல்யான் மாலைக்குச் செய்த பகை," "காதலர் இல்வழி மாலைக் கொலைக்களத்து ஏதிலர் போல வரும்", "காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் அந்நோய்" எனப்பண்டைச் சான்றோர் இரங்கு தற்குரிய காலம் மாலையே எனக் கூறியிருப்ப, முனிவர் அதற்கு மாறாகக்காலையில் இரங்குதல் எனக்கூறுதல் எவ்வாற்றானும் பொருந்துவதன்றாம். இல்லிருந்து நல்லறம் செய்யும் கற்புடை மகளிர் காலை எழுந்தவுடனேயே இரங்குவர் என்பதும் பொருத்த மின்றாம். (8)

பாலைக்குரிய பெரும்பொழுது சிறுபொழுதுகள்

**9. நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.**

இது நிலனுடைய நான்கற்கும் காலம் கூறி அந்நான்கிற்கும் பொதுவாகிய பாலைக்குக் காலம் கூறுகின்றது.

(இ - ள்) நடுவு நிலைத்திணையே - பாலைத்திணை; நண்பகல் வேனிலொடு - எற்பாடும் காலையும் என்னும் இரு கூற்றிற்கு நடுவணதாகிய ஒரு கூறு தான் கொண்டு வெம்மை செய்து பெருகிய பெரும்பகலோடும் இளவேனிலும் வேனிலும் என்னும் இரண்டி னோடும்; முடிவு நிலை மருங்கின் பிரிவெனப்படுதற்கு முடிவுடைத் தாகிய குறிஞ்சியும் முல்லையுமாகிய ஒரு மருங்கின் கண்ணே; முன்னிய நெறித்து-ஆசிரியன் மனங்கொள்ளப்படும் நெறியை யுடைத்து என்றவாறு.

நிலையென்றது நிலைத்திணை. முடிவு நிலைப்பகுதிக்கண் முன்னப் படுமென்வே அத்துணை யாக்கமின்றி ஒழிந்த மருதமும் நெய் தலும் முடியாநிலமாய் அத்துணை முன்னப்பட்டாதாயிற்று இப் பாலைக்கு என்பதாம். பிரிவின்கண் முடிய வருவனவெல்லாம் இவ்விரண்டற்கும் முடியவருதலும் ஒழிந்த இரண்டற்கும் அவை குறுகி வருதலும் உரையாற் கொள்க. என்னை? சுரத்தருமை அறியின், இவள், ஆற்றுளாமெனத் தலைவன் செலவழுங்குதலும், துணிந்துபோதலும், உடன்போவல் எனத் தலைவி கூறுதலும், அதனை அவன் விலக்கலும், இருந்திரங்கலும் போல்வன பலவும் முடியவரும் நிலம் குறிஞ்சியும் முல்லையும் ஆகலின் சுரத்தருமை முதலியன நிகழாமையின் மருதமும் நெய்தலும் அப்பொருண் முடிய வாராவாயின.

> "நன்றே காதலர் சென்ற ஆறே
> அணிநிற இரும்பொறை மீமிசை
> மணிநிற வுருவின தோகையு முடைத்தே"

(ஐங்குறு - 431)

இது சுரத்தருமை நினைந்து வருந்தினேன் என்ற தலைவிக்கு அவ்வருமை நீங்கக் கார்க்காலம் ஆயிற்றென்று ஆற்றுவித்தது. இப்பாட்டு முதலிய பத்தும் முல்லையுள் பாலை.

"கார்செய் காலையொடு கையறப் பிரிந்தோர்
தேர்தரு விருந்தில் தவிர்குதல் யாவது
மாற்றருந் தானை நோக்கி
ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழிலே."
(ஐங்குறு - 451)

இது பருவங்கண்டு ஆற்றுளாகிய தலைவி பாசறைச் செய்தி கேட்டு வருந்தியது.

மேற்கூறிய பருவங்கண்டு கிழத்தியுரைத்த இப்பத்தும் முல்லையுள் பாலை.

"கருங்கால் வேங்கை மாத்தகட்டு ஒள்வீ
இருங்கல் வியலறை வரிப்பத் தாஅம்
நன்மலை நாடன் பிரிந்தென
ஒண்ணுதல் பசப்பது எவன்கொல் அன்னாய்."
(ஐங்குறு - 219)

இது வரைவிடைவைத்துப் பிரிந்துழித் தலைவி யாற்றாமை கண்டு தோழி கூறியது. இது குறிஞ்சியுள் பாலை.

"எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண்டுளி வீசிப்
பசலை செய்தன பனிபடு துறையே." (குறுந் - 141)

இது வரைவிடைவைத்துப் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் துறை யின்பம் உடைத்தாகலான் வருத்திற்று எனத்தலைவி கூறியது. இது சுரத்தருமை முதலியனவின்றி நெய்தற்குள் பாலை வந்தது. ஏனைய வந்துழிக் காண்க.

முந்நீர் வழக்கம் சிறுபான்மையாகலின் நெய்தற்கு முடிய வாராதாயிற்று. இக்கருத்தானே பிரிவொழுக்கம் மருதத்திற்கும் நெய்தற்கும் சிறுபான்மையாகப் புலனெறி வழக்கம் செய்யப்படும்.

எற்பாட்டுக்கு முன்னர்த்தாகிய நண்பகலைப் பாலைக்குக் கூற வேண்டிப் பின் வைத்தாரேனும் பெரும்பொழுதிற்கு முற் கூறுதலின் ஒருவாற்றால் சிறுபொழுதாறும் முறையே வைத்தார் ஆயிற்று.

காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலை தேம்பிக் கூவன் மாறி, நீரும் நிழலும் இன்றி, நிலம் பயந் துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெருகுவதொரு காலம் ஆதலின், இன்பத்திற்கு இடையூறாகிய பிரிவிற்கு நண்பகலும் வேனிலும் சிறப்புடைத்தாயிற்று.

தெள்ளறல் யாற்றுத் திரைமணல் அடைகரை
வண்டு வரிபாடத் தண்போ தலர்ந்து
தாதுந் தளிரு மேதகத் துவன்றிப்
பல்பூஞ் சோலைப் பன்மலர் நாற்றமொடு
செவ்விதிற் றென்றல் நொவ்விதிற் றூகி
குயில்கூஉக் குரலும் பயில் வதன்மேலும்
நிலவுஞ் சாந்தும் பவவுறு முத்தும்
இன்பம் விளைக்கு நன்பொருள் பிறவும்

பண்டைய போலாது இன்பம் மிகத்தரும் இளவேனிற் காலத்துப் பொழில் விளையாட்டியும், புதுப்பூக் கொய்தும், அருவியாடியும் முன்னர் விளையாட்டு நிகழ்ந்தமைபற்றிப் பிரிந்த கிழத்தி மெலிந்துரைக்கும் கிளவி பயின்று வருதலானும், உடன் போக்கின்கண் அக்காலம் இன்பம் பயக்கும் ஆதலானும், இள வேனிலோடு நண்பகல் சிறந்தது எனப்பட்டது.

பிரிந்த கிழத்தி இருந்து கூறுவன கார்காலம் அன்மையின் முல்லை ஆகா.

(எ-டு)

"கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வறனுறல் அங்கோ டுதிர வலங்கடந்து
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
இரவுக்குறும் பலற நூறி நிரைபகுத்
திருங்கல் முடுக்கர்த் திற்றி கெண்டும்
கொலைவில் ஆடவர் போலப் பலவுடன்
பெருந்தலை யெருவையொடு பருந்துவந் திறுக்கும்
அருஞ்சுரம் இறந்த கொடியோர்க் கல்கலும்
இருங்கழை இறும்பின் ஆய்ந்துகொண் டறுத்த

நுணங்குகண் சிறுகோல் வணங்கிறை மகளிரொ
டகவுநர்ப் புரந்த வன்பின் கழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் அன்னநின்
அலர்முலையாகம் புலம்பப் பலநினைந்
தாழல் என்றி தோழி யாழவென்
கண்பனி நிறுத்தல் எளிதோ குரவுமலர்ந்
தற்சிர நீங்கிய வரும்பவிழ் வேனில்
அறலவிர் வார்மணல் அகல்யாற் றடைகரைத்
துறையணி மருதோ டிகல்கொள வோங்கிக்
கலிழ்தளிர் அணிந்த இருஞ்சினை மாஅத்
திணர்ததை புதுப்பூ நிரைத்த பொங்கர்ப்
புகைபுரை அம்மஞ் சூர
நுகர்குயில் அகவுங் குரல்கேட் போர்க்கே." (அகம் - 97)

இது வற்புறுத்தும் தோழிக்குத் தலைவி கூறியது.

இக் களிற்றியானைநிரையுள் இருவகை வேனிலும் பாலைக்கண் வந்தன. நண்பகலோடுவருவன வந்துழிக் காண்க.

(விரை) நச்சினார்க்கினியர் கருத்தின்படி இந்நூற்பா பாலைக் குரிய காலம் வகுத்தலே அன்றி அதற்குரிய பொருண்மை பலவும் குறிஞ்சி முல்லையாகிய இருதிணைக்கும் பொருந்தும் எனக் கூறுவதாம். இக்கூற்று பொருத்த மற்றதாம். முடிவு நிலை மருங்கு என்பதற்கு நண்பகற் பொழுது வேனிற் காலத்தொடு புணர்ந்து நின்ற நிலை என உரை காண்பர் இளம் பூரணர். எனவே இருவகை வேனிற்காலத்தொடும் பொருந்திவரும் நன்பகற்காலம் பாலைக்குரியதாம் என்பது கருத்து. இதுவே ஆசிரியர் கருத்தொடுபட்ட உரையாம்.

முந்நீர் வழக்கம் என்பது கலத்திற்செலும் செலவாம். தலைவியைப்பிரிந்து தலைவன் கலத்திற் சேர்தல் உண்டு என்பதால் நெய்தற்கும் பிரிவொழுக்கம் உளதேயாம். அங்ஙனமாகவும் நெய்தலைக் கூறுமைக்குக் காரணம் அப்பிரிவு சிறுபான்மை பற்றியதாம். முந்நீர் வழக்கம் என்பதற்கு இவ்வாறு உரை

காணும் நச்சினார்க்கினியர் அந்நூற்பாவின் (34) உரையில் வேறு உரை கூறுவதோடு இவ்வாறு கொள்ளும் உரையை மறுப்பர். இவ்வாறு கூறுவது மாறுகொளக் கூறலாம்.

காரும் மாலையும் முல்லை என்ற நூற்பா தொடங்கி இந் நூற்பாவரை ஐந்திணைக்குரிய பெரும் பொழுது சிறுபொழுதுகள் வரையறை செய்யப்படுகின்றன அவ்வரையறையுள் சிறுபொழுது களைக் காலமுறைப்படி வைத்துள்ளதாக நச்சினார்க்கினியர் கருது கின்றார். அம்முறையில் மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என வைத்தல் வேண்டும். ஆனால் ஆசிரியர் எற்பாட்டை இதற்கு முன் நூற்பாவிலும் நண்பகலை இந்நூற்பா விலும் வைத்துள்ளார். எனினும் பெரும் பொழுதுக்கு முன் வைத்தலின் ஒருவாற்றால் சிறு பொழுது ஆறும் முறையே வைத்தார் எனக் கூறுகின்றார் நச்சினார்க்கினியர். இவ்வாறு கூறுதலும் வேண்டாத தொன்றேயாம்.

கூவல் - கிணறு. நிலம் பயந்துறந்து - நிலவளம் குன்றி, இளவேனிலாவது சித்திரை வைகாசித்திங்களாகும். முதுவேனிலா வது ஆனி ஆடித்திங்களாகும். நன்பகலாவது பகற் பொழுதின் நடுக்கூறு. ஏகாரம் இரண்டனுள் முன்னையது பிரிநிலை. ஏனையது ஈற்றசை. (9)

பின் பனியும் பாலைக்கு உரித்து.

10. பின்பனி தானும் உரித்தென மொழிப.

இஃது எய்தியதன்மேல் சிறப்புவிதி.

(இ - ள்.) நடுவுநிலைத் திணைக்கு முற்கூறிய வேனிலன்றிப் பின்பனிக்காலமும் உரித்து என்றவாறு.

இது கூதிரை, முன்பனியாகிய மார்கழியும் தையும் தொடர்ந் தாற் போல, வேனிலாகிய சித்திரை முதலிய நான்கற்கு முன் பனியாகிய மாசியும் பங்குனியும் தொடர்ந்தது என்று கூறினார்.

(எ-டு)

"பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர்
மிசையவர்
வகைகொண்ட செம்மலும் வனப்பார விடுவதோ
புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா
முகைவெண்ப னுதிபொர முற்றிய கடும்பனி."
(கலி - 31)

இது தனித்தோர்க்குப் பின்பனி ஆற்றற்கு அரிது, இஃது எவர்க்கும் ஏதமாம் என்வும், இதனுன் இறந்துபடுவேன் எனவும் கூறிற்று.

"அம்ம வாழி தோழி காதலர்
நூலறு முத்திற் றண்சிதர் உறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியு நாளும் பலவா கவ்வே." (குறுந் - 104)

தலைவி தோழிக்கு உரைத்தது.

இதுவும் அது.

பின்பனிக்கு நண்பகல் துன்பஞ்செய்யாது என்பதூஉம் அதற்குச் சிறுபொழுது வரைவில வென்பதூஉம் கூறிற்று;என்னை? சூத்திரத்துத் தான் எனத் தனித்து வாங்கிக் கூறினமையின்.

(வி - ரை) பாலைக்கு இருவகை வேனிற்காலமே அன்றி இப்பனிக்காலமும் உரியதாகும். இதனை வேறு பிரித்துக் கூறியது பாலைக்கு இருவகை வேனிலும் சிறப்புடைத்தாதல் போல இப் பெரும் பொழுது அத்துணைச் சிறப்புடைத்தன்று எனக்கருதிய தாலாம். இதனைப்பின் பற்றியே நம்பியகப்பொருள் ஆசிரியரும், 'வேனில் நண்பகல் பின்பனி என்றிவை பான்மையின் உரிய பாலை தனக்கே' எனக்கூறுவாராயினர். பின்பனிக்காலமாவது மாசி பங்குனித் திங்களாம். (10)

பாலைக்குரிய பகுதியும் அவற்றிற்குரிய பொழுதும்.

11. இருவகைப் பிரிவும் நிலைபெறத் [1]தோன்றினும் உரிய தாகும் என்மனார் புலவர்.

இது பாலைப் பகுதி இரண்டெனவும் அவ்விரண்டற்கும் பின்பனி உரித்தெனவும் கூறுகின்றது.

(இ - ள்) இருவகைப்பிரிவும் நிலைபெறத் தோன்றினும்— நான்கு வருணத்தார்க்கும் காலிற் பிரிவும் வேளாளர்க்குக் கலத் திற் பிரிவும் தத்தம் நிலைமைக்கேற்பத் தோன்றினும்; உரியது ஆகும் என்மனார் புலவர் — பின்பனிக்காலம் அவ்விரண்டற்கும் உரிமைபூண்டு நிற்குமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

கடலினை நிலம்என்னுமையின் கலத்திற் பிரிவு முன்பகுத்த நிலத்துள் அடங்காதென்று அதுவும் அடங்குதற்கு 'இரு வகைப் பிரிவும்' என்னும் முற்றும்மை கொடுத்துக், காலிற் பிரிவோடு கூட்டிக் கூறினார். கலத்திற் பிறிவு அந்தணர் முதலிய செந்தீவாழ்நர்க்கு ஆகாமையின் வேளாளர்க்கே உரித்து என்றார். வேத வணிகர் அல்லாதார் கலத்திற் பிறிவு வேதநெறி அன்மையின் ஆராய்ச்சியின்று. இக்கருத்தானே இருவகை வேனிலும் நண் பகலும் இருவகைப் பிரிவிற்கும் ஒப்ப உரிய வன்றிக், காலிற் பிரிவுக்குச் சிறத்தலும் கலத்திற் பிரிவிற்கு இளவேனி லொன்றும் காற்றுமிகாத முற்பக்கத்துச் சிறுவர விற்றாய் வருதலும் கொள்க. ஒழிந்த உரிப்பொருள்களினும் பாலை இடை நிகழும் என்றலின் பிரியவேண்டியவழி அவற்றிற்கு ஓதிய காலங்கள் கலத்திற் பிறிவுற்கும் வந்தால் இழுக்கின்று. என்னை? கார்காலத்துக் கலத் திற்பிரிவும் உலகியலாய்ப் பாடலுள் பின்று வருமாயின் என்க. தோன்றினும் என்ற உம்மை சிறப்பும்மை; இரண்டு பிரிவிற்கும் பின்பனி உரித்தென்றலின்.

இனிக் கலத்திற்பிரிவிற்கு:- (எ-டு)

"உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ

---

1. தோன்றலும் என்பது இளம்பூரணர் பாடம்.

இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரைசெலல் இயற்கை வங்கூ ழாட்டக்
கோடுயர் திணிமணல் அகன்றுறை நீகான்
மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய
ஆள்வினைப் பிரிந்த காதலர் நாள்பல
கழியா மையி னழிபட ரகல
வருவர் மன்னாற் றோழி தண்பணைப்
பொருபுனல் வைப்பின் நம்மூ ராங்கட்
கருவிளை முரணிய தண்புதற் பகன்றைப்
பெருவள மலர அல்லி தீண்டிப்
பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்
கூதள மூதிலைக் கொடிநிரைத் தூங்க
அறனின் றலைக்கு மாறு வாடை
கடிமனை மாடத்துக் கங்குல் வீசத்
திருந்திழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய
நிரைவளை யூருந் தோளென
உரையொடு செல்லு மன்பினர்ப் பெறினே." (அகம் 255)

இது தோழி தூதுவிடுவது காரணமாக உரைத்தது. இம் மணிமிடைபவளத்துப் பின்பனி வந்தவாறும் நண்பகல் கூறுமையும் அவர் குறித்தகாலம் இதுவென்பது தோன்றிய வாறும் காண்க.

"குன்ற வெண்மணல் ஏறி நின்றுநின்று
இன்னும் காண்கம் வம்மோ தோழி
களிறும் கந்தும் போல நளிகடல்
கூம்பும் கலனும் தோன்றும்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே.

வருகின்றாரெனக் கேட்ட தலைவி தோழிக்கு உரைத்தது. இது பின்பனி நின்றகாலம் வரைவின்றி வந்தது. கடலிடைக்கலத்தைச் செலுத்துதற்கு உரிய காற்றெழுபட்ட காலம் யாதானும் கொள்க. ஆசும் என்றதனால் வேதவணிகரும் பொருளின்றி இல்லறம் நிகழாத காலத்தாயின் செந்தீ வழிபடுதற்கு உரியோரை நாட்டிக் கலத்திற் பிரிதற்கு உரியரென்று கொள்க.

(வி. - ரை) இந்நூற்பாவிற்கு இருவகைப் பிரிவு என்பதற்குக் கொண்ட பொருள் சிறக்குமேனும் அவற்றிற்கு உரியார் இவர் என வரையறைப்படுத்துதற்கு இந்நூற்பாவில் யாதொரு இடனு மில்லை. என்வே இவ்வாறு கூறுவன எல்லாம் உரையாசிரியர் தம் மனப்போக்கிற்குத் தோன்றியவாறே கூறப்பட்ட உரையாம். இளம்பூரணர் தலைமகனைப் பிரிதலும் தலைமகன் உடன் கொண்டு அவள் சுற்றத்தாரினின்றும் பிரிதலும் பாலையாம் என - இந்நூற் பாவிற்கு உரைகாண்பர். அவ்வாறன்றி நச்சினர்க்கினியர் கூறு மாறு போலக் காலிற் பிரிவும் கலத்திற் பிரிவும் ஆகிய இரு வகைப் பிரிவும் எனக் கொள்ளினும் பொருத்தமே ஆம். அப்பிரி வுகள் யாதாயினும் பாலைக்குரியவாம் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும். (11)

உரிப்பொருள் மயக்கம்

12. திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே நிலனொருங்கு மயங்குதல் இன்றென மொழிப புலனன் குணர்ந்த புலமை யோரே

இஃது உரிப்பொருள் மயங்கும் என்றலின் மேலனவற்றிற்குப் புறனடை

(இ - ள்) திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே-'மாயோன் மேய' (5) என்பதனுள் ஒரு நிலத்து ஒரொழுக்கம் நிகழுமென நிரனிறுத்துக் கூறிய ஒழுக்கம் அவ்வந்நிலத்திற்கே உரித்தாய் ஒழுகாது தம்முண் மயங்கிவருதலும் நீக்கப்படா; நிலன் ஒருங்கு மயங்குதல் இன்று என மொழிப - அங்ஙனம் ஒரு நிலத்து இரண்டொழுக்கம் தம்முண் மயங்குதலின்றி இரண்டுநிலம் ஒரோ வொழுக்கத்தின்கண் மயங்குதலில்லையென்று கூறுவர்; புலன் நன்கு உணர்ந்த புலமையோர் - அங்ஙனம் நிலனும் ஒழுக்கமும் இயைபு படுத்துச் செய்யும் புலனெறி வழக்கத்தினை மெய்பெற உணர்ந்த அறிவினையுடையோர் என்றவாறு.

என்றது, ஒரு நிலத்தின்கண் இரண்டு உரிப்பொருள் மயங்கி வரும் என்பதூஉம் நிலம் இரண்டு மயங்காது எனவே காலம் இரண்டும் தம்முள் மயங்கும் என்பதூஉம் கூறினாராயிற்று.

எனவே, ஒரு நிலமே மயங்குமாறுயிற்று உரிப்பொருண் மயக் குறுதல் என்னுது திணை மயக்குறுதலும் என்முர், ஓர் உரிப் பொருளோடு ஓர் உரிப்பொருண் மயங்குதலும், ஓர் உரிப்பொருள் நிற்றற்கு உரிய இடத்து ஓர் உரிப்பொருள் வந்து மயங்குதலும், இவ்வாறே காலம் மயங்குதலும். கருப்பொருண் மயங்குதலும் பெறும் என்றற்கு; திணையென்றது அம்மூன்றனையும் கொண்டே நிற்றலின்.

(எ.டு)

"அறியே மல்லேம் அறிந்தன மாதோ
பொறிவரிச் சிறைய வண்டின மொய்ப்பச்
சாந்த நாறு நறியோள்
கூந்தல் நாறுநின் மார்பே தெய்யோ." (ஐங்குறு - 240)

இது புறத்தொழுக்கம் இன்றென்முற்குத் தோழி கூறியது.

புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை
வளைவெண் மருப்பிற் சேழல் புரக்கும்
குன்றுகெழு நாடன் மன்றதன்
பொன்போல் புதல்வனேடு என்னீத்தோனே"

இது வாயில்களுக்குத் தலைவி கூறியது.

"வன்கட் கானவன் மென்சொன் மடமகள்
புன்புல மயக்கத் துழுத வேனற்
பைம்புறச் சிறுகிளி கடியு நாட
பெரிய கூறி நீப்பினும்
பொய்வலைப் படூஉம் பெண்டுதவப் பலவே."

(ஐங்குறு - 283)

இது தலைவன் ஆற்றுமை வாயிலாகப் புணர்ந்துழிப் பள்ளி யிடத்துச் சென்ற தோழி கூறியது.

இவை குறிஞ்சிக்கண் மருதம் நிகழ்ந்தன; இவை ஓரொழுக் கம் நிகழ்தற்கு உரியவிடத்தே ஒரொழுக்கம் நிகழ்ந்தன.

"அன்னய் வாழிவேண் டன்னையென் றேழி
பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணை
கொன்னே கடவுதி யாயி னென்னதூஉ

மறிய வாகுமோ மற்றே
முறியிணர்க் கோங்கம் பயந்த மாறே"

(ஐங்குறு - 366)

இஃது இவ் வேறுபாடு என்னென்ற செவிலிக்குத் தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.

இது பாலையில் குறிஞ்சி. இஃது உரிப்பொருளோடு உரிப் பொருண் மயங்கிற்று. மேல் வருவனவற்றிற்கும் இவ்வாறு உய்த்துணர்ந்துகொள்க.

"வளமலர் ததைந்த வண்டுபடு நறும்பொழின்
முளைநிரை முறுவ லொருத்தியொடு நெருநற்
குறிநீ செய்தனை யென்ப வலரே
குரவ நீள்சினை யுறையும்
பருவ மாக்குயிற் கௌவையிற் பெரிதே."

(ஐங்குறு - 369)

இது பொழிலிடத்து ஒருத்தியொடு தங்கிவந்தும் யான் பரத்தையை அறியேன் என்றற்குத் தோழி கூறியது.

"வண்சினைக் கோங்கின் றண்கமழ் படலை
யிருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப
நீநயந் துறையப் பட்டோள்
யார ளோவெம் மறையா தீமே."

(ஐங்குறு - 370)

இது பரத்தையர்க்குப் பூவணிந்தமை கேட்ட தலைவி அஃதின்று என்றற்குக் கூறியது. இவை பாலைக்கண் மருதம் நிகழ்ந்தன. "அருந்தவம் ஆற்றியார்" (கலி - 30) என்னும் பாலைக்கலியும் அது.

"அன்னை வாழிவேண் டன்னை யுதுக்காண்
ஏர்கொடிப் பாசடம்பு பரியவூர் பிழியூஉ
நெய்தன் மயக்கிவந் தன்று நின்மகள்
பூப்போ லுண்கண் மரீஇய
நோய்க்குமருந் தாகிய கொண்கன் றேரே."

(ஐங்குறு - 101)

இஃது அறத்தொடுநின்றபின் வரைதற்குப் பிரிந்தான் வரைவொடு வந்தமை தோழி செவிலிக்குக் காட்டியது. இது நெய்தலில் குறிஞ்சி.

"கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
யொள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே." (ஐங்குறு - 122)

"கண்டிரு மல்லமோ கொண்கநின் கேளே
உறாஅ வறுமுலை மடாஅ
வுண்ணாப் பாவை யூட்டு வோளே." (ஐங்குறு - 128)

இவை பெதும்பைப் பருவத்தாள் ஓர் தலைவியொடு வேட்கை நிகழ்ந்தமையைத் தலைவி கூறித் தலைவன் குறிப்புணர்ந்தது.

"யாமெனவன் செய்கோ பாண வானாது
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
புல்லென் றனவென் புரிவளைத் தோளே."
(ஐங்குறு - 133)

இது தலைவன் புறத்துப்போன அத்துணைக்கு ஆற்றாய் ஆகுதல் தகாதென்ற பாணற்குத் தலைவி கூறியது.

இப் பத்தும் நெய்தற்கண் மருதம்.

"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
மிதிப்ப நக்க கண்போன் நெய்தல்
கட்கமழ்ந் தானாத் துறைவற்கு
நெக்க நெஞ்ச நேர்கல் லேனே." (ஐங்குறு - 151)

இது வாயில்வேண்டிய தோழிக்குத் தலைவி வாயின் மறுத்தது இப் பத்தும் நெய்தற்கண் மருதம்

"இலங்குவளை தெளிர்ப்ப வலவ னூட்டி
முகம்புதை கதுப்பினள் இறைஞ்சிநின் றோளே
புலம்புகொண் மாலை மறைய
நலங்கே ழாகநல் குவள் எனக்கே." (ஐங்குறு - 197)

இது இடந்தலைப்பாட்டில் தலைவி நிலைகண்டு கூறியது. இது நெய்தலில் புணர்தல் நிமித்தம்.

"வேப்புநனை யன்ன நெடுங்கட் கள்வன்
தண்ணக மண்ணளை நிறைய நெல்லி
னிரும்பூ வுரைக்கு மூரற்கிவள்
பெருங்கவி னிழப்ப தேவன்கொ லன்னாய்."
(ஐங்குறு - 30)

இது தோழி அறத்தொடு நின்றது.

"பழனக் கம்புள் பயிர்ப்பெடை யகவுங்
கழனி யூரநின் மொழிவ லென்றுந்
துஞ்சுமனை நெடுநகர் வருதி
யஞ்சா யோவிவ டந்தைகை வேலே." (ஐங்குறு - 90)

இது தோழி இரவுக்குறி மறுத்தது.

"நெறிமருப் பெருமை நீலவிரும் போத்து
வெறிமலர்ப் பொய்கை யாம்பன் மயக்குங்
கழனி யூரன் மகளிவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே." (ஐங்குறு - 91)

இஃது இளையள் விளைவில ளென்றது.

"கருங்கோட் டெருமைச் செங்கட் புனிற்றாக்
காதற் குழவிக் கூறுமுலை மடுக்கு
நுந்தை நும்மூர் வருது
மொண்டொடி மடந்தை நின்னையாம் பெறினே."
(ஐங் - 92)

இது நின் தமர் வாராமையின் எமர் வரைவு நேர்ந்திலர் என்று தோழி கூறக் கேட்ட தலைவன் தலைவிக்குக் கூறியது.

இவை மருதத்துக் குறிஞ்சி நிகழ்ந்தன.

இக் காட்டியவெல்லாம் ஐங்குறு நூறு. "புனையிழை நோக்கியும்" (கலி - 76) என்னும் மருதக் கலியும் அது.

"முரசுடைச் செல்வர் புரவிச் சூட்டு
மூட்டுறு கவரி தூக்கி யன்ன
செழுஞ்செய் நெல்லின் சேயரிப் புனிற்றுக்கதிர்
மூதா தின்றல் அஞ்சிக் காவலர்
பாக லாய்கொடிப் பகன்றையொடு பரீஇக்
காஞ்சியின் அகத்துக் கரும்பருத்தி யாக்குந்
தீம்புனல் ஊரதிறவ தாகக்
குவளை யுண்க ணிவளும் யானும்
கழுநீ ராம்பல் முழுநெறிப் பைந்தழை
காயா ஞாயிற் றாகத் தலைப்பப்
பொய்த லாடிப் பொலிகென வந்து
நின்னகாப் பிழைத்த தவறோ பெரும
கள்ளுங் கண்ணியும் கையுறை யாக
நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட் குளப்பட வோச்சித்
தணிமருங் கறியாள் யாஅழ
மணிமருண் மேனி பொன்னிறங் கொளலே."

(அகம் – 156)

இது தலைவியைத் தோழியிடத்துய்த்துத் தலைவனை வரைவு கடாயது. இவ்வகப்பாட்டும் அது.

இன்னும், மயக்குறுதலும் என்றதனான் அவ்வந் நிலங்கட்கு உரிய முதலும் கருவும் வந்து உரிப்பொருள் வேறுதலன்றி அவ்வந் நிலங்கட்கு உரியவல்லாத முதலும் கருவும் வந்து உரிப்பொருண் மயங்குவனவும் கொள்க. அஃது "அயந்திகழ் நறுங்கொன்றை" (கலி-கரு) என்னும் நெய்தல் கலியுள் காண்க. இக்கருத்தானே நக்கீரரும் ஐந்திணையுள்ளும் களவு நிகழுமென்று கொண்டவாறுணர்க.

இனிக் காலம் ஒருங்கு மயங்குங்கால் பெரும்பொழுது இரண்டும் பெரும்பான்மையும் சிறுபொழுதும் மயங்குதலும் கொள்க.

"மழையில் வான மீனணிந் தன்ன
குழையமன் முசுண்டை வாலிய மலர

வரிவெண் கோடல் வாங்குகுலை வான்பூப்
பெரிய சூடிய கவர்கோற் கோவலர்
எல்லுப் பெயலுழந்த பல்லா நிரையொடு
நீர்திகழ் கண்ணியர் ஊர்வயிற் பெயர்தர
நளிசேட் பட்ட மாரி தளிசிறந்
தேர்தரு கடுநீர் தெருவுதொ றொழுகப்
பேரிசை முழக்கமொடு சிறந்துநனி மயங்கிக்
கூதிர்நின் றன்றாற் பொழுதே காதலர்
நந்நிலை யறியா ராயினுந் தந்நிலை
யறிந்தனர் கொல்லோ தாமே யோங்குநடைக்
காய்சின யானைக் கங்குற் சூழ
அஞ்சுவர விறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே". (அகம் - 264)

இது தோழிக்குத் தலைவி கூறியது.

இம் மணிமிடை பவளத்துண் முல்லையுள் கூதிர் வந்தது.

"மங்குல் மாமழை விண்ணதிர்பு முழங்கித்
துள்ளுப்பெயல் கழிந்த பின்றைப் புகையுறப்
புள்ளிநுண் துவலை பூவகம் நிறையக்
காதலர்ப் பிரிந்த கையறு மகளிர்
நீர்வார் கண்ணிற் கருவிளை மலரத்
துய்த்தலைப் பூவின் புதலிவர் ஈங்கை
நெய்த்தோய்த் தன்ன நீர்நனை யந்தளிர்
இருவகிர் ஈருளின் ஈரிய துயல்வர
அவரைப் பைம்பூப் பயில் அகல்வயற்
கதிர்வார் காய்நெல் கட்கினி திறைஞ்சச்
சிதர்சினைத் தூங்கும் அற்சிர அரைநாட்
காய்சின வேந்தன் பாசறை நீடி
நந்நோ யறியா அறனி லாளர்
இந்நிலை களைய வருகுவர் கொல்லென
ஆனு தெறிதரும் வாடையொடு
நோனேன் தோழியென் தனிமை யானே"

(அகம் - 294)

இது பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குத் தலைவி கூறியது.

இம் மணிமிடை பவளத்து முல்லையுண் முன்பனி வந்து நிலமும் கருவும் மயங்கிற்று.

"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
யெல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே." (குறுந் – 47)

இஃது இரா வந்து ஒழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக நிலாவிற்கு உரைப்பாளாய் உரைத்தது.

இக் குறுந்தொகையுள் குறிஞ்சியுள் வேனில் வந்தது.

"விருந்தின் மன்னர்." (அகம் – 54

என்பது கார்காலத்து மீள்கின்றான் முகிழ்நிலாத் திகழ்தற்குச் சிறந்த வேனிலிறுதிக்கண் தலைவிமாட்டு நிகழ்வன கூறி, அனவ காண்டற்குக் கடிது தேரைச் செலுத்தென்றது.

இது முல்லைக்கண் வேனில் வந்தது.

"துஞ்சுவது போல விருளி விண்பக
இமைப்பது போல மின்னி யுறைக்கொண்டு
ஏறுவது போலப் பாடுசிறந் துரைஇ
நிலம்நெஞ் சுட்க ஓவாது சிலைத்தாங்
கார்தளி பொழிந்த வார்பெயற் கடைநாள்
ஈன்றுநா ளுலந்த வாலா வெண்மழை
வான்றோ யுயர்வரை யாடும் வைகறைப்
புதலொளி சிறந்த காண்பின் காலைத் –
தண்ணறும் படுநீர் மாந்திப் பதவருந்து
வெண்புறக் குடைய திரிமருப் பிரலை
வார்மண லொருசிறைப் பிடவவிழ் கொழுநிழற்
காமர் துணையொ டேமுற வதிய
அரக்குநிற வுருவின் ஈயல் மூதாய்
பரப்பி யவைபோற் பாஅய்ப் பலவுடன்

நீர்வார் மருங்கி னீரணி திகழ
இன்னும் வாரா ராயின் நன்னுதல்
யாதுகொல் மற்றவர் நிலையே காதலர்
கருவிக் காரிடி யிரீஇய
பருவ மன்னவர் வருதுமென் றதுவே." (அகம் - 139)

இது பிரிவிடையாற்றாது தோழிக்கு உரைத்தது.

இம் மணிமிடை பவளத்துப் பாலைக்கண் முன்பனியும் வைகறையும் ஒருங்கு வந்தன.

"தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்
அல்லாந்தா ரலவுற வீன்றவள் கிடக்கைபோற்
பல்பய முதலிய பசுமைதீ ரகன்ஞாலம்
புல்லிய புனிறொரீஇப் புதுநல மேர்தர
வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள
விளையவ ரைம்பால்போ லெக்கர்போழ்ந் தறல்வார
மாவீன்ற தளிர்மிசை மாயவ டிதலைபோல்
ஆயிதழ்ப் பன்மல ரையகொங் குறைத்தர
மேதக விளவேனி லிறுத்தந்த பொழுதின்கண்;

இது தரவு.

சேயார்கட் சென்றவென் னெஞ்சினைச் சின்மொழி
நீ கூறும் வரைத்தன்றி நிறுப்பென்மன் னிறைநீவி
வாய்விரிபு பனியேற்ற விரவுப்பன் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந் தலைத்தரூஉம்;
போழ்துள்ளார் துறந்தார்கட் புரிவாடுங் கொள்கையைச்
சூழ்பாங்கே சுடரிழாய் கரப்பென்மற் கைநீவி
வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணு மிருந்தும்பி
யாழ்கொண்ட விமிழிசை யியன்மாலை யலைத்தரூஉம்;
தொடிநிலை நெகிழ்த்தார்கட் டோயுமென் னாருயிர்
வடுநீங்கு கிளவியாய் வலிப்பென்மன் வலிப்பவு
நெடுநிலாத் திறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றங் கங்குல்வந் தலைத்தரூஉம்;

இவை மூன்றும் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

வருந்தினை வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்னோக்கா தெய்திற்
அருந்துயர் களைஞர் வந்தனர்
திருந்தெயி றிலங்குநின் றேமொழி படர்ந்தே."
(கலி - 29)

இது சுரிதகம்.

இ∴து ஒத்தாழிசை.

வந்தாரென ஆற்றுவித்தது.

இதில் வேனிலும் வாடையும் கங்குலும் மாலையும் வந்தன.

"அம்ம வாழி தோழி சிறியிலைக்
குறுஞ்சினை வேம்பி னறும்பழ முணீஇய
வாவ லுகக்கு மாலையும்
இன்றுகொல் காதலர் சென்ற நாட்டே." (ஐங்குறு-331)

இவ் ஐங்குறுநூறு பாலைக்கண் மாலை வந்தது.

"தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
கடும்பகல் வருதி கையறு மாலை
மாலை நெய்தலுங் கூம்பக்
காலை வரினுங் களைஞரோ விலரே." (ஐங்குறு - 183)

இது பருவ வரவின்கண் மாலைப்பொழுது கண்டு ஆற்றாளாய தலைவி தோழிக்குக் கூறியது.

இவ் ஐங்குறுநூறு நெய்தற்கண் மாலை வந்தது.

"தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தாற்
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட்
பெயர்ப்பான்போல்
எல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பி
னல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர
வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை
* * * *
பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழல்

இனிவரி லுயருமற் பழியெனக் கலங்கிய
தனியவ ரிடும்பைகண் டினைதியோ வெம்போல
வினியசெய் தகன்றாரை யுடையை யோநீ.'' (கலி - 129)

என நெய்தற்கலியுள் கங்குலும் மாலையும் முன்பனியும் வந்தன. ஒழிந்தனவும் மயங்குமாறு வந்துழிக் காண்க.

(வி. - ரை) ஒரு நிலத்திற்குரிய உரிப்பொருளொடு பிறிதொரு உரிப்பொருள் மயங்கலும் ஒரு உரிப்பொருள் நிற்றற்குரிய இடத்துப் பிற உரிப் பொருள் வந்து மயங்குதலும் உண்டு என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். இதனைத்திணைமயக்கம் என்பர். (12)

கைக்கிளையும் பெருந்திணையும் நால்வகை நிலத்தும் மயங்கும்

13. உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே

இஃது எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்.) உரிப்பொருள் அல்லன — உரிப்பொருளென்று ஓதப்படும் ஐந்திணையும் அல்லாத கைக்கிளையும் பெருந்திணையும்; மயங்கவும் பெறும்—நால்வகை நிலத்தும் மயங்கவும் பெறும் என்றவாறு

உம்மை, எச்சவும்மை யாதலின், உரிப்பொருளாக எடுத்த பாலையும் நால்வகை நிலத்தும் மயங்கவும் பெறும் என்றவாறும். பாலையென்பது ஒன்று பிரிந்து பலவாகிய கூற்றின் மேற்றாத லின், ஒற்றுமைப்பட்டு நிகழ்கின்றார் இருவர் பிரிந்துவரலும் பாலையாமன்றே ? அதனால், அதுவும் குணம் காரணமாய்ச் செம்பால் செம்பாலை ஆயினாற்போல நின்றது.

''ஊர்க்கா னிவந்த'' என்னும் குறிஞ்சிக்கலியுள்,

''ஆய்தூவி யனமென வணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினல
மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ.''
(கலி - 56)

என்பது நிலம்வரையாது வந்த கைக்கிளை. இதனைக் குறிஞ்சியுள் கோத்தார்; புணர்ச்சி யெதிர்ப்பாடாகலின்.

"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே யாய மகள்." (கலி - 133)

"வலியா வறியா வுயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சு நெஞ்சினர் தோய்தற்கு
எளியவோ வாய்மக டோள்." (கலி - 109)

"... . முள்ளெயிற் றேஎ ரிவளைப் பெறுமிதோர்
வெள்ளேற் றெருத்த டங்குவான்;
ஒள்ளிழை, வாருறு கூந்தற் றுயில்பெறும் வைமருப்பிற்
காரி கதனஞ்சான் கொள்பவன்..." (கலி - 104)

என்றாற்போல ஏறுதழுவினாற்கு உரியள் இவளென வந்த கைக்கிளைகளெல்லாம் முல்லைக்கலி பலவற்றுள்ளும் காண்க.

'முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே' (தொல்-பொருள்-105) என்பதனான் அவை கைக்கிளையாயின.

இனி "எழின்மருப் பெழில்வேழம்" (கலி - 138) என்றது முதலிய நாலு பாட்டும் ஏறிய மடற்றிறமான பெருந்திணை. என்னை?

"மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்
தேமொழி மாத ருறாஅ துறீஇய
காமக் கடலகப் பட்டு." (கலி - 139)

என்றாற் போல்வன வருதலின்.

"புரிவுண்ட புணர்ச்சி" (கலி - 142) என்றது முதலிய ஆறு பாட்டும் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந்திணை. இவற்றை நெய்தலுள் கோத்தார்; சாக்காடு குறித்த இரங்கல் பொருட்டாகலின். கூனும் குறளும் ஊமும் செவிடும் உறழ்ந்து கூறும் பெருந்திணையும் ஊடற்பகுதியவாகலின் மருதத்துள் கோத்தார்.

"கல்லாப் பொதுவனை நீமாறு" (கலி - 112)

எனப் பொதுவியர் கூறலும்,

"நடாஅக் கரும்பமன்ற தோளாரைக் காணின்
விடாஅலோம் பென்று ரெமர்." (கலி – 112)

எனப் பொதுவர் கூறலும் மிக்க காமத்து மிடலாகிய பெருந்திணை யாகலின் முல்லையுள் கோத்தார்.

"நறவினை வரைந்தார்" (98) "ஈண்டுநீர்மிசை" (100) என்னும் கலிகளும் காமத்து மிகுதிறத்தான் அரசனை நோக்கிச் சான்றோர் கூறியவாகலின் மருதத்துக் கோத்தார்.

இனி,

"வானமூர்ந்த வயங்கொளி மண்டில
நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட்டு." (அகம் – 111)

எனக் காடுறை யுலகத்துப் பாலைவந்தது.

"தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு
முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி
லேறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குந
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை
மறப்பருங் காத லிவளீண் டொழிய
விறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் றைஇய." (கலி – 2)

இது மைவரை யுலகத்துப் பாலை வந்தது.

"மறந்தவ ணமையார் ஆயினும்" (37) என்னும் அகப்பாட்டுத் தீம்புன லுலகத்துப் பாலை வந்தது. "அருளிலாளர் பொருள் வயினகறல்" (அகம் – 305) என்னும் பாட்டினுள் பெருமணல் உலகத்துப் பாலை வந்தது.

இன்னும் பிறவும் சான்றோர் செய்யுட்கண்ணே உரிப்பொருண் மயங்கியுங் காலங்கண் மயங்கியும் வருவனவெல்லாம் இதனான் அமைத்துக் கொள்க.

(வி - ரை) பால்-பகுதி; கூறு. செம்பால் செம்பாலை ஆயின வாறு போல: பிரிவின் பலபகுதிகளைக் கூறும் பால் என்பதும் பாலை யாயிற்று. உரிப்பொருளல்லன-உரிப்பொருளில் முதற் பொருளும் (காலம் மட்டும்) கருப்பொருளும் நால்வகை நிலனும் மயங்கலை யும் பெறும் என உரை காண்பர் இளம்பூரணர். முதல் கரு உரி என வகுத்துக்கூறிய ஆசிரியர் உரிப்பொருள் அல்லன எனக் கூறுகின்ற பொழுது ஏனைய முதலும் கருவுமாகிய பொருளே கொள்ளப்படும். அவ்வகையில் இளம்பூரணர் கருத்தே ஆசிரியர் கருத்தொடுபட்டதாம். (13)

உரிப்பொருள்கள்

14. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் [1] இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.

இதுவும் மேனிறுத்த முறையானன்றியும் அதிகாரப்பட்டமை கொண்டு உரிப்பொருள் கூறுகின்றது; உரிப்பொருள் உணர்ந் தல்லது உரிப்பொருள் அல்லன உணரல் ஆகாமையின்.

(இ - ள்) புணர்தலும் புணர்தனிமித்தமும்; பிரிதலும் பிரிதனிமித்தமும்; இருத்தலும் இருத்தனிமித்தமும்; இரங்கலும் இரங்கனிமித்தலும்; ஊடலும் ஊடனிமித்தமும் என்ற பத்தும் ஆராயுங்காலை ஐந்திணைக்கும் உரிப்பொருளாம் என்றவாறு.

தேருங்காலை என்றதனால் குறிஞ்சிக்குப் புணர்ச்சியும், பாலைக்குப் பிரிவும், முல்லைக்கு இருத்தலும், நெய்தற்கு இரங்க லும், மருதத்திற்கு ஊடலும், அவ்வந்நிமித்தங்களும் உரித் தென்று ஆராய்ந்துணர்க. இக்கருத்தே பற்றி 'மாயோன் மேய' (தொல் - பொருள் 5) என்பதனுள் விரித்துரைத்தவாறு உணர்க.

அகப்பொருளாவது புணர்ச்சியாகலானும் அஃது இருவர்க் கும் ஒப்ப நிகழ்தலானும் புணர்ச்சியை முற்கூறிப், புணர்ந்துழி யல்லது பிரிவு இன்மையாலும் அது தலைவன் கண்ணதாகிய சிறப்

1. "அவற்றின்" எனப் பாடங்கொள்வர் இளம்பூரணர்,

பானும் தலைவி பிரிவிற்குப் புலனெறி வழக்கின்மையானும் பிரிவினை அதன் பிற்கூறிப், பிரிந்துழித் தலைவி ஆற்றியிருப்பது முல்லையாகலின் இருத்தலை அதன்பின் கூறி, அங்ஙனம் ஆற்றியிராது தலைவன் ஏவலில் சிறிது வேறுபட்டிருந்து இரங்கல் பெரும்பான்மை தலைமகளதே யாதலின் அவ்விரங்கற்பொருளை அதன்பின் கூறி, இந்நான்கு பொருட்கும் பொதுவாதலானுங் காமத்திற்குச் சிறத்தலானும் ஊடலை அதன்பின் கூறி இங்ஙனம் முறைப்படுத்தினர்.

நான்கு நிலத்தும் புணர்ச்சி நிகழுமேனும் முற்பட்ட புணர்ச்சியே புணர்தல் சிறப்புடைமையில் குறிஞ்சியென்று அதனை முற்கூறினர். அவை இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் பாங்கற் கூட்டமும் தோழியிற் கூட்டமும் அதன் பகுதியாகிய இருவகைக் குறிக்கண் எதிர்ப்பாடும் போல்வன. தலைவன் தோழியைக் குறையுறும் பகுதியும் ஆண்டுத் தோழி கூறுவனவும் குறைநேர்தலும் 'மறுத்தலும் முதலியன புணர்ச்சி நிமித்தம்.

இனி, ஓதலும் தூதும் பகையும் அவற்றின் பகுதியும் பொருட்பிரிவும் உடன்போக்கும் பிரிவு. 'ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும் (தொல் - பொருள் - 41) தோழியொடு வலித்தன் முதலியன பிரிதனிமித்தம். பிரிந்தபின் தலைவி வருந்துவனவும் தோழியாற்றுவித்தனவும் பாலையாதலின் பின்னொருகால் பிரிதற்கு நிமித்தமாம்: அவை பின்னர்ப் பிரியும் பிரிவிற்கு முன்னிகழ்தலின்.

இனித் தலைவி, பிரிவுணர்த்தியவழிப் பிரியார் என்றிருத்தலும், பிரிந்துழிக் குறித்தபருவம் அன்றென்று தானே கூறுதலும், பருவம் வருந்துணையும் ஆற்றியிருந்தமை பின்னர்க் கூறுவனவும் போல்வன இருத்தல். அப் பருவம் வருவதற்கு முன்னர்க் கூறுவன முல்லைசான்ற கற்பன்மையிற் பாலையாம். இனிப் பருவங்கண்டு ஆற்றாது தோழி கூறுவனவும், பருவம் அன்றென்று வற்புறுத்தினவும், வருவரென்று வற்புறுத்தினவும் தலைவன் பாசறைக்கண் இருந்து உரைத்தனவும், அவைபோல்வனவும் நிமித்தமாதலின் இருத்தன் நிமித்தமெனப்படும்

இனிக் கடலும் கானலும் கழியும் காண்டொறும் இரங்கலும், தலைவன் எதிர்ப்பட்டு நீங்கியவழி இரங்கலும், பொழுதும் புணர்துணைப் புள்ளும் கண்டு இரங்கலும் போல்வன இரங்கல். அக்கடல் முதலியனவும் தலைவன் நீங்குவனவும் எல்லாம் நிமித்தமாம்.

புலவி முதலியன ஊடலாம். பரத்தையும் பாணனும் முதலியோர் ஊடன் நிமித்தமாம்.

ஏனையவும் வழக்கியலான் நால்வகை நிலத்தும் சிறுபான்மை வருமேனும், பெரும்பான்மை இவை உரியவென்றற்குத் 'திணைக் குரிப் பொருளே' யென்றார்.

உரிமை குணமாதலின் உரிப்பொருள் பண்புத்தொகை.

(எ - டு)

"கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிணர்க் குவளையோ டிடைப்பட விரைஇ
யைதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோண் மேனி
முறியினும் வாயது முயங்கற்கு மினிதே." (குறுந்-62)

இக் குறுந்தொகை புணர்ந்துழி மகிழ்ந்து கூறியது.

"அல்குபட ருழந்த வரிமதர் மழைக்கட்
பல்பூம் பகைத்தழை நுடங்கு மலகுற்
றிருமணி புரையு மேனி மடவோ
ளியார்மகள் கொல்லிவ டந்தை வாழியர்
துயர முறீஇயின ளெம்மே யகல்வய
லரிவன ரரிந்துந் தருவனர் பெற்றுந்
தண்சேறு தாய மதனுடை நோன்றாட்
கண்போ னெய்தல் போர்விற் பூக்குந்
திண்டேர்ப் பொறையன் றொண்டி
தன்றிறம் பெறுகவிவ ளீன்ற தாயே." (நற்றிணை - 8)

இந் நற்றிணையும், "முலையே முகிழ்முகிழ்த் தனவே" என்னும் (339) குறுந்தொகையும் புணர்தல் நிமித்தம்.

"அன்றவண் ஒழிந்தன்றும் இலையே வந்துநனி
வருந்தினை வாழியெ னெஞ்சே பருந்திருந்
துயாவிளி பயிற்றும் யாவுயர் நனந்தலை
உருள்துடி மகுளியின் பொருள்தெரிந் திசைக்குங்
கடுங்குரற் குடிஞைய நெடும்பெருங் குன்றம்
எம்மொ டிறத்தலுஞ் செல்லாய் பின்னின்
றொழியச் சூழ்ந்தனை யாயிற் றவிராது
செல்லினிச் சிறக்கநின் னுள்ளம் வல்லே
மறவல் ஓம்புமதி எம்மே நறவின்
சேயிதழ் அனைய வாகிக் குவளை
மாயிதழ் புரையு மலிர்கொள் ஈரிமை
உள்ளகங் கனல உள்ளுதொ றுலறிப்
பழங்கண் கொண்ட கதழ்ந்துவீழ் அவிரறல்
வெய்ய வுகுதர வெரீஇப் பையெனச்
சில்வளை சொரிந்த மெல்லிறை முன்கைப்
பூவீ கொடியிற் புல்லெனப் போகி
யடர்செய் ஆயகல் சுடர்துணை யாக
இயங்காது வதிந்தநங் காதலி
யுயங்குசாய் சிறுபுற முயங்கிய பின்னே." (அகம் - 19)

இது மறவல் ஓம்புமதியெனப் பிரிவு கூறிற்று.

"அறியாய் வாழி தோழி யிருளற
விசும்புடன் விளங்கும் விரைசெலல் திகிரிக்
கடுங்கதி ரெறித்த விடுவாய் நிறைய
நெடுங்கால் முருங்கை வெண்பூத் தாஅய்
நீரற வறந்த நிரம்பா நீளிடை
வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
கள்ளியங் காட்ட கடத்திடை உழிஞ்சில்
உள்ளூன் வாடிய சுரிமுக்கு நொள்ளை
பொரியரை புதைத்த புலம்புகொள் இயவின்
விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும்
அருஞ்சுரக் கவலை நீந்தி யென்றும்
இல்லோர்க் கில்லென் றியைவது கரத்தல்

வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காதல்
அருளே காதல ரென்றி நீயே." (அகம் - 53)

இது பிரிதனிமித்தம். வற்புறுத்தும் தோழிக்குத் தலைவி கூறியது.

"வண்டுபடத் ததைந்த கொடியிணை ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் ரேன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய்வழங் கலரே." (குறுந் - 21)

இது பருவங்கண்டுழியும் பொய் கூறாரென்று ஆற்றியிருந்தது.

"அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னி
சூடிய வெல்லாஞ் சிறுபசு முகையே." (குறுந் - 221)

இது பருவங்கண்டு ஆற்ருது கூறியது. இது முல்லைசான்ற கற்பாயிற்று; அவன் கூறிய பருவம் வருந்துணையும் ஆற்றி யிருத்தலின்.

"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்ருேர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணை ரூழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே." (குறுந் - 66)

இது பருவம் அன்றென்று வற்புறுத்துதலின் இருத்தன் நிமித்தமாயிற்று. "தேம்படு சிமய" (அகம் - 94) என்னும் களிற்றியானைநிரையும் இருத்தன் நிமித்தமாம்; இக்காலம் வருந் துணையும் ஆற்றினுன் எனத் தான் வருந்துதலின்.

"கானலுங் கழறுது கழியுங் கூறுது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியா
தொருநின் னல்லது பிறிதியாதும் இலனே
இருங்கழி மலர்ந்த கண்போ னெய்தல்
கமழிதழ் நாற்றம் அமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறைஇய தளருந் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ பல்காற்
கைதையம் படுசினை யெவ்வமொ டசாஅங்
கடற்சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்
வெள்ளிறுக் கனவும் நள்ளென் யாமத்து
நின்னுறு விழுமங் களைந்தோள்
தன்னுறு விழுமம் நீந்துமோ வெனவே." (அகம் - 170)

இவ் அகப்பாட்டு நெய்தல். இரங்கல் உரிப்பொருள் ஆயிற்று.

"ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
யிறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
விரைகொண் டவையும் விரையுமாற் செலவே."

(குறுந் - 92)

இஃது இரங்கல் நிமித்தம்.

"தருக்கேம் பெருமநின் னல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய்போல் வந்து தகவில செய்யாது
சூழ்ந்தவை செய்துமற் றெம்மையு முள்ளுவாய்
வீழ்ந்தார் விருப்பறக் கால்." (கலி - 99)

இஃது ஊடல்.

"பரியுடை நன்மான் பொங்குளை யன்ன
வடைகரை வேழம் வெண்பூப் பகருந்
தண்டுறை யூரன் பெண்டிர்
துஞ்சூர் யாமத்துந் துயிலறி யலரே" (ஐங்குறு - 13)

இஃது ஊடனிமித்தம்.

பிறவும் வேறுபட வருவனவெல்லாம், அறிந்து இதன்கண் அடக்கிக்கொள்க.

(வி - ரை) புணர்ச்சியிடத்தும் ஊடல் நிகழும். பரத்தையிற் பிரிவு முதலாய பிரிவிடத்தும் ஊடல் நிகழும். ஊடுதல் உடன் மாறுதல் இன்றி ஒருசில அமையத்து நீட்டித்து இருத்தலும் உண்டு. ஆதலின் இருத்தலிலும் ஊடல் நிகழும். ''ஊடி இருந்தேமாத்தும்மினூர்'' என்பதும் காண்க. இவ்வூடல் மிகுவழி இரங்குதலும் நிகழும். ஆதலின் ஊடல் ஏனைய நான்கு உரிப் பொருள் பற்றியும் வருதலின் அந்நான்கிற்கும் பொது என்றூர். (14)

குறிஞ்சியும் நெய்தலும் பாலைக்கண் மயங்குமாறு

15. கொண்டுதலைக் [1]கழியினும் பிரிந்தவ
[2]ணிரங்கினும்
உண்டென மொழிப ஓரிடத் தான.

இது முற்கூறிய ஐந்தனுள் பாலைக்கண் குறிஞ்சி மயங்குமாறும் நெய்தன்மயங்குமாறுங் கூறுகின்றது.

(இ - ள்) கொண்டுதலைக்கழியினும் — தலைவன் தலைவியை உடன்கொண்டு அவள் தமரிடத்து நின்று பிரியினும்; பிரிந்து அவண் இரங்கினும் — தலைவன் உடன்கொண்டு போகாது தானே போதலில் தலைவி மனையின்கண் இருந்து இரங்கினும்; ஓரிடத்தான—இவ்விரண்டும் ஓரிடத்தின் கண்ணே ஒரொழுக்கமாயின; உண்டென மொழிப—இவ்வொழுக்கந்தான் நான்கு வருணத்திலும் வேளாண் வருணத்திற்கு உண்டென்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

கொண்டு தலைக்கழிதலால் இடையூறின்றிப் புணர்ச்சி நிகழு எனினும், பிரிவு நிகழ்ந்தவாறு என்னையெனின்,

---

1. கழிதலும்,
2. இரங்கலும் எனப் பாடங் கொள்வர் - இளம்பூரனர்,

"இடைச்சுர மருங்கின் அவளமர் செய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞ ரெய்தி."
(தொல் - பொருள் - 41)

என மேலே கூறுவார் ஆதலின் தந்தையும் தன்னையரும் தேடிப் பின் வந்து இவ்வொழுக்கத்திற்கு இடையூறுசெய்வர் என்னும் கருத்தே இருவர் உள்ளத்தும் பெரும்பான்மை நிகழ்தலின் பிரிவுநிகழ்ந்தவாறாயிற்று. ஆகவே பாலைக்கண்ணே குறிஞ்சி நிகழ்ந்தது ஆயிற்று.

(எ - டு)

"வேனிற் பாதிரிக் கூனி மாமலர்
நறைவாய் வாடல் நாறு நாட்சுரம்
அரியார் சிலம்பிற் சீறடி சிவப்ப
எம்மொ டொராறு படீஇயர் யாழநின்
பொம்ம லோதி பொதுள வாரி
அரும்பற மலர்ந்த வாய்பூ மராஅத்துச்
சுரும்புசூ ழலரி தைஇ வேய்ந்தநின்
தேம்பாய் கூந்தற் குறும்பல மொசிக்கும்
வண்டுகடிந் தோம்பல் தேற்றாய் அணிகொள
நுண்கோ லெல்வளை தெளிர்க்கும் முன்கை
மெல்லிறைப் பணைத்தோள் விளங்க வீசி
வல்லுவை மன்னால் நடையே கள்வர்
பகைமிகு கவலைச் சென்னெறி காண்மார்
மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாஅத்து
நாரரை மருங்கின் நீர்வரப் பொளித்துக்
களிறு சுவைத்திட்ட கோதுடைத் ததரல்
கல்லா உமணர்க்குத் தீமூட் டாகுந்
துன்புறு தகுந ஆங்கண் புன்கோட்டு
அரிலிவர் புற்றத் தல்கிரை நசைஇ
வெள்ளரா மிளிர வாங்கும்
பிள்ளை யெண்கின் மலைவயி னோனே." (அகம் - 257)

இது கொண்டுதலைக்கழிதற்கண் தலைவன் நடையை வியந்தது. இஃது அகம். "அழிவிலர் முயலும்" (நற் - 9) என்பது பாலைக்கண் புணர்ச்சி நிகழ்ந்தது.

இனித் தலைவி பிரிந்திருந்து மிகவும் இரங்குதலின் இரங்கினும் எனச் சூத்திரஞ்செய்தான், அதனானே பாலைப்பொருட்கண் இரங்கற்பொருள் நிகழும் என்றும்.

(எ - டு)

"ஓங்குமலைச் சிலம்பிற் பிடவுடன் மலர்ந்த
வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன
ஊன்பொதி யவிழாக் கோட்டுகிர்க் குருளை
மூன்றுட னீன்ற முடங்கர் நிழத்த
துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிள ருழுவைப் பேழ்வா யேற்றை
யறுகோட் டுழைமான் ஆண்குர லோர்க்கும்
நெறிபடு கவலைய நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திசினால் யானே பலபுலந்து
துண்ணூ வுயக்கமொ டுயிர்செலச் சாஅய்த்
தோளுந் தொல்கவின் றொலைய நாளும்
பிரிந்தோர் பெயர்வுக் கிரங்கி
மருந்துபிறி தின்மையின் இருந்துவினை யிலனே."

(அகம் - 147)

இதனுள் வெள்ளிவீதியைப்போலச் செல்லத்துணிந்தியான் பலவற்றிற்கும் புலந்திருந்து பிரிந்து ஓரிடத்தினின்றும் பிரிந்த பெயர்வுக்குத் தோணலந்தொலைய உயிர்செலச் சாஅய் இரங்கிப் பிறிது மருந்தின்மையின் செயலற்றேன் என மிகவும் இரங்கிய வாறு மெய்ப்பாடுபற்றி யுணர்க. இஃதும் அகம்.

"வானமூர்ந்த" என்னும் (11) அகப்பாட்டினுண் "மெய்புகு வன்ன கைகவர் முயக்க-மவரும் பெறுகுவர் மன்னே" எனக் கூறி, அழுதன் மேவாவாய்க் கண்ணும் துயிலுமென இரக்கமீக் கூறியவாறு உணர்க "குன்றியன்ன" என்னும் (133) அகப் பாட்டும் அது. இவை பாலைக்கண் இரங்கல் நிகழ்ந்தன. இங்ஙனம் இச்சூத்திரவிதி உண்மையிற் சான்றோர் அகத்தினும் கலியினும் ஐங்குறு நூற்றினும் பாலைக்கண்ணே உடன்போக்கு நிகழ்ந்த செய்யுட்களைக் கோத்தாரென் றுணர்க.

இல்லிருந்து செந்தீயோம்பல் வேளாளர்க்கு இன்மையிற் கொண்டுதலைக்கழிதல் அவர்க்கு உரியதாயிற்று. ஒழிந்த மூன்று வருணத்தோரும் தமக்கு உரிய பிரிவின்கண் செந்தீயோம்புவாரை நாட்டிப் பிரிப; ஆகலான், அவர்க்கு ஏனைப் பிரிவுகள் அமைந்தன. இதனைக் "கொடுப்போர் இன்றியும் கரண முண்டே" (தொல் - பொருள் - 143) எனக் கற்பியற் கரணம் வேறாகக் கூறுமாறு ஆண்டுணர்க. "வேர் முழுதுலறநின்ற" (அகம் - 145) என்னும் மணிமிடைபவளத்துள் "கூழுடைத் தந்தை யிடனுடை வரைப்பி, னூழடி யொதுங்கினு முயங்கும்" எனவும், "கிளியும்பந்தும்" (அகம் - 46) என்னும் களிற்றியானை நிரையுள் "அல்குபத மிகுத்த கடியுடை வியனகர்" எனவும், நெல்லுடைமை கூறிய அதனானே வேளாண் வருணம் என்பது பெற்றாம்.

(வி - ரை) கொண்டு - தலைவன் தலைவியை உடன் கொண்டு தலை - இடம்: அஃதாவது தமரிடத்தினின்றும். கழியினும் - பிரியினும். பிரிந்து - தலைவனைத் தலைவி பிரிந்து. அவண் - அவ் விடத்து; அஃதாவது மனையிடத்து இரங்கினும் - வருந்தினும். இவ்விருவகை ஒழுகலாறுகளும் பாலைக்குரியவாம் என்பது நூற்பாவின் கருத்தாகும். ஓரிடத்தான உண்டென மொழிப என மாறிக் கூட்டிப் பாலையாகிய ஓரிடத்தின்கண் உளவாம் எனப் பொருள் காண்டலே நேரிதாகும். அவ்வாறன்றி உண்டென மொழிப என்றதைப் பிரித்து நிறுத்தி இவ்வொழுக்கம் வேளாண் வருணத்திற்கே உண்டு என நச்சினார்க்கினியர் கூறியிருத்தல் ஆசிரியர் கருத்தொடு பட்ட உரையன்றாம். இளம்பூரணர் கொண்டுதலைக் கழிதல் பாலைக்கண்ணும், பிரிந்தவண் இரங்கல் பெருந்திணைக் கண்ணும் வரும் என்று உரைத்து விளக்கம் காண்பர். அவர் தரும் விளக்கமாவது:- கொண்டுதலைக் கழிதலாவது உடன் கொண்டு பெயர்தல். அது நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமையானும், உடன் கொண்டு பெயர்தலின் பிரிதலின் அடங்காமையானும் வேறு ஓதப்பட்டது பிரிந்தவண் இரங்கலாவது ஒருவரை ஒருவர் பிரிந்த இடத்து இரங்கல். அது நெட்டாறு சென்றவழி இரங்குதல் இன்மையானும், ஒருவழித் தணந்தவழி ஆற்றுதலின்றி வேட்கை மிகுதியால் இரங்குதலானும் வேறு ஓதப்பட்டது. (15)

இயற்கைப் புணர்ச்சிக்குரிய காலம்

16. கலந்த பொழுதும் காட்சியும் அன்ன.

இதுவும் பாலைக்கண் குறிஞ்சி மயங்கும் என்கின்றது.

(இ - ள்) கலந்த பொழுதும் காட்சியும் —இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த காலமும் அதன் முன்னர்த்தாகிய வழிநிலைக் காட்சி நிகழ்ந்த காலமும்; அன்ன—முன்னர்ச் சூத்திரத்துள் கொண்டுதலைக் கழிந்த காலத்தை உடைய என்றவாறு.

என்றது,முன்னர்க் குறிஞ்சி பாலைக்குரிய இருவகை வேனிற் கண் நிகழ்ந்தாற்போல இவையும் இருவகை வேனிற்கண் நிகழும் என்றவாறு. மழைகூர் காலத்துப் புறம்போந்து விளையாடுதல் இன்மையின் எதிர்ப்பட்டுப் புணர்தல் அரிது ஆகலானும், அது தான் இன்பம் செய்யாமையானும் இருவகை வேனிற் காலத்தும் இயற்கைப்புணர்ச்சி நிகழும் என்றது இச்சூத்திரம்.

முன்னர்க் கூதிரும் யாமமும் முன்பனியும் சிறந்ததென்றது, இயற்கைப்புணர்ச்சிப் பின்னர்க் களவொழுக்கம் நிகழ்தற்குக் கால மென்றுணர்க.

அது,

"பூவொத் தலமருந் தகைய வேயொத்
தெல்லாரு மறிய நோய்செய் தனவே
தேமொழித் திரண்ட மென்றோண் மாமலைப்
பரீஇ வித்திய வேனற்
குரீஇ யோப்புவாள் பெருமழைக் கண்ணே."

(குறுந் - 72)

என வரும்.

இக் குறுந்தொகையுள் குரீஇயோப்புவாள் கண்ணென வழி நிலைக் காட்சியைப் பாங்கற்குக் கூறினமையின் அத்தினைக்கதிர் முற்றுதற்கு உரிய இளவேனிலும் பகற்பொழுதுங் காட்சிக்கண் வந்தன. "கொங்குதேர் வாழ்க்கை" (குறுந் - 2) என்பதும் இளவேனிலாயிற்று; தும்பி கொங்குதேரும் காலம் அதுவாகலின்.

கலத்தலும் காட்சியும் உடனிகழும் என்றுணர்க; கலத்தலின்றிக் காட்சி நிகழ்ந்ததேல் உள்ளப் புணர்ச்சியேயாய் மெய்யுறு புணர்ச்சியின்றி வரைந்துகொள்ளும் என்றுணர்க.

(வி - ரை) தலைவன் தலைவியைக்கண்டு ஐயுற்றுத் தெளிந்து அவள் குறிப்பறிந்து இயற்கைப் புணர்ச்சி நிகழ்த்தும் காலம் இருவகை வேனிலாம் என இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் உரை காணுகின்றார். அதனோடும் அமையாது கூதிர்க்காலத்து இப்புணர்ச்சி நிகழாமைக்குரிய காரணத்தையும் விளக்குகின்றார். இங்ஙனம் உரைப்பின் முன்னர்க் 'குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்' எனக்கூறிய கருத்தொடு மாறு கொள்ளுமெனக்கருதி இயற்கைப் புணர்ச்சிக்கு இருவகை வேனிலும் சிறந்த தென்றும். அதன்பின் நிகழும் களவுப் புணர்ச்சிக்குக் கூதிர்க்காலம் சிறந்த தென்றும் விளக்கம் தருகின்றார். கூதிர்க்காலம் என்பது ஐப்பசியும் கார்த்திகையுமாம். இருவகை வேனிற்காலமாவது சித்திரை முதல் ஆடித்திங்கள் வரையுள்ள காலமாகும். இயற்கைப் புணர்ச்சியை இக்காலத்து நிகழ்த்திய தலைவனும் தலைவியும் பின் களவுப்புணர்ச்சி நிகழ்த்துதற்கு ஐப்பசி கார்த்திகை ஆகிய திங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர் என்றல் சிறிதும் பொருந்துவ தன்றாம். களவுப் புணர்ச்சிக்குரிய காலம் இரண்டு திங்கட் குட்பட்டது என்பது இலக்கண நூலார் வகுத்த முறையாகும். மாறாக இவ்வாறு உரைத்திருப்பது மிகவும் பொருத்தமில் கூற்றாம். தலைவன் தலைவியை எதிர்ப்பட்டுக் காண்டலும் ஐயுறுத லும் தெரிதலும் தேறலும் ஆகிய நான்கும் கைக்கிளையாம் என இந்நூற்பாவிற்கு உரை காண்பர் இளம்பூரணர். இதுவே பொருத்தமுடைத்தாம். பின்வந்த நம்பியகப்பொருள் ஆசிரியரும் 'காட்சிஐயம் துணிபு குறிப்பறிவு என மாட்சியின் நான்கு வகைத்தே கைக்கிளை' எனக் கூறுவர். (16)

முதற் பொருளின் வகை

17. முதலெனப் படுவ தாயிரு வகைத்தே.

இது முற்கூறிய முதற்பகுதியைத் தொகுத்து எழுதிணையும் இவ்வாற்றானுரிய வென்கின்றது.

(இ - ள்) முதல் எனப்படுவது - முதலென்று கூறப்படும் நிலனும் பொழுதும்; அ இருவகைத்து - அக்கூறியவாற்றான் இரு வகைப்படும் யாண்டும் என்றவாறு.

இது 'கூறிற்றென்ற' (தொல்-பொருள்-665) லென்னும் உத்தி வகை. இதன்பயன் முதல் இரண்டுவகை என்றவாறும். தமக் கென நிலனும் பொழுதும் இல்லாத கைக்கிளையும் பெருந்திணை யும் நிலனில்லாத பாலையும் பிறமுதலோடு மயங்கிற்றேனும் அவை மயங்கிய நிலனும் பொழுதும் அவ்வத்திணைக்கு முதலெனப்படும் என்பதாம். இது முன்னின்ற சூத்திரத்திற்கும் ஒக்கும்.

(வி - ரை) 4-ஆம் நூற்பாவிலேயே இந்நூற்பாவின் கருத்துக் கூறப்பெற்றுள்ளது. ஆதலின் இதனைக் கூறிற்றென்றல் என்னும் உத்திவகையுள் அடக்கினர் நச்சினார்க்கினியர்.

கூறியது கூறல் என்னும் குற்றத்திற்கும் இவ்வுத்திக்கும் வேறுபாடுண்டு. கூறியது கூறல் என்பது யாதொரு பயனும் இன்றி முன்னர்க் கூறியதையே பின்னும் கூறுவதாகும். இவ்வாறு கூறுவது குற்றமாம். இவ்வுத்தி அன்னதன்று. முற்கூறியதையே பின்னும் ஒரு பயன் கருதிக் கூறுவதாகும். இதனாற் பயன் இனையது? என்று கூறுவது இது பற்றியே யாகும்.

முதற் பொருளாவது நிலனும் பொழுதுமாய இரண்டின் இயல்பாம் என்பது 2 ஆம் நூற்பாவின் கருத்தாகும். முதற் பொருள் எனத்தக்கன பல இருந்து இவ்விரண்டை மட்டுமே ஈண்டுக் கூறினரோ என்றும் அதனால் கருதலாம். அவ்வையத்தை நீக்கி முதற்பொருள் என்பது இவ்விரண்டல்லது வேறில்லை என இந்நூற்பா கூறுதலின் இன்றியமையாததேயாம் என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

எனினும் இவ்வமைவும் பயனும் நிறைவு தந்தில. (17)

கருப்பொருள்கள்

18. தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப.

இது நிறுத்தமுறையானேயன்றி அதிகாரப்பட்டமையின் உரிப்பொருள் கூறி ஒழிந்த கருப்பொருள் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்) தெய்வம் உணாவே மா மரம் புள் பறை செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ—எல்லாத் திணைக்கும் தெய்வம் உணா விலங்கு மரம் புள்ளுப் பறை தொழிலென்று இவற்றை யாழின் கூற்றோடே கூட்டி; அவ்வகை பிறவும் கரு என மொழிப—அவைபோல்வன பிறவும் கருவென்று கூறுவர் ஆசிரியர் எ - று.

யாழின் பகுதி என்றதனான் மற்றையபோலாது பாலைக்குப் பாலை யாழென வேறு வருதல் கொள்க. 'அவ்வகை பிறவும்' என்றதனான் எடுத்தோதிய தெய்வம் ஒழிய அவற்று உட்பகுதியாகிய தெய்வமும் உள: அவை 'மாயோன்மேய (தொல்-பொருள்-அகம்-5) என்புழிக் காட்டினாம். இதனானே பாலைக்குத் தெய்வமும் இன்றாயிற்று. இன்னும் 'அவ்வகை' என்றதனானே பாலைக்கு நிலம் பற்றாது காலம்பற்றி கருப்பொருள் வருங்கால் தம்மியல்பு திரிய வருவனவும் வருமென்று கொள்க. 'எந்நில மருங்கிற் பூ' (19) என்பதனால் பூவும் புள்ளும் வரைவின்றி மயங்கும் எனவே ஒழிந்த கருவும் மயங்குமென்பது 'சூத்திரத்துட் பொருளன்றியும்' (தொல் - பொருள் 658) என்பதனான் உரையிற் கொள்க. அது "அயர்ந்திகழ் நறுங்கொன்றை" (கலி -150) என்னும் நெய்தற்கலியுள் காண்க.

முல்லைக்கு உணா, வரகும் சாமையும் முதிரையும்: மா, உழையும் புல்வாயும் முயலும்; மரம், கொன்றையும் குருந்தும்; புள், கானக்கோழியும் சிவலும்; பறை, ஏறுகோட்பறை; செய்தி, நிரை மேய்த்தலும் வரகுமுதலியன களைகட்டலும் கடாவிடுதலும்; யாழ், முல்லையாழ். பிறவுமென்றதனால்; பூ, முல்லையும் பிடவும் தளவும் தோன்றியும்; நீர், கான்யாறு; ஊர், பாடியும் சேரியும் பள்ளியும்.

குறிஞ்சிக்கு உணா, ஐவனநெல்லும் தினையும் மூங்கிலரிசியும்; மா, புலியும் யானையும் கரடியும் பன்றியும்; மரம், அகிலும் ஆரமும் தேக்கும் திமிசும் வேங்கையும்; புள், கிளியும் மயிலும்; பறை,

முருகியமும் தொண்டகப்பறையும்; செய்தி, தேன் அழித்தலும் கிழங்கு அகழ்தலும் தினைமுதலியன விளைத்தலும் கிளிகடிதலும்; யாழ், குறிஞ்சியாழ். பிறவுமென்றதனால், பூ, காந்தளும் வேங்கையும் சுனைக்குவளையும்; நீர், அருவியும் சுனையும்: ஊர், சிறுகுடியும் குறிச்சியும்.

மருதத்திற்கு உணா, செந்நெல்லும் வெண்ணெல்லும்; மா, எருமையும் நீர்நாயும்; மரம், வஞ்சியும் காஞ்சியும் மருதமும்; புள், தாராவும் நீர்க்கோழியும்; பறை, மணமுழவும் நெல்லரிகிணையும்; செய்தி, நடுதலும் களைகட்டலும் அரிதலும் கடாவிடுதலும்; யாழ், மருதயாழ். பிறவுமென்றதனால், பூ, தாமரையும் கழுநீரும்; நீர், யாற்றுநீரும் மனைக்கிணறும் பொய்கையும்; ஊர், ஊர்கள் என்பனவேயாம்.

நெய்தற்கு உணா, மீன்விலையும் உப்புவிலையும்; மா, உமண் பகடு போல்வன; முதலையும் சுறவும் மீனாதலின் மாவென்றல் மரபன்று. மரம், புன்னையும் ஞாழலும் கண்டலும்; புள், அன்னமும் அன்றிலும் முதலியன; பறை, மீன்கோட்பறை; செய்தி, மீன்படுத்தலும் உப்பு விளைத்தலும் அவை விற்றலும்; யாழ், நெய்தல்யாழ். பிறவுமென்றதனால், பூ, கைதையும் நெய்தலும்; நீர், மணற்கிணறும் உவர்க்குழியும்; ஊர், பட்டினமும் பாக்கமும்,

இனிப் பாலைக்கு உணா, ஆறலைத்தனவும் சூறைகொண்டனவும்; மா, வலியழிந்த யானையும் புலியும் செந்நாயும்; மரம் வற்றின இருப்பையும் ஓமையும் உழிஞையும் ஞெமையும்; புள், கழுகும் பருந்தும் புறாவும்; பறை, சூறைகோட்பறையும் நிரைகோட்பறையும்; செய்தி, ஆறலைத்தலும் சூறைகோடலும்; யாழ், பாலையாழ். பிறவுமென்றதனால்; பூ, மராவும் குராவும் பாதிரியும்; நீர், அறுநீர்க்கூவலும் சுனையும்; ஊர், பறந்தலை.

இன்னும் பிறவு மென்றதனானே இக் கூறியவற்றிற்குரிய மக்கள் பெயரும் தலைமக்கள் பெயரும் கொள்க. 'அவை பெயரும் வினையும்' (தொல்- பொருள்: அகம்-20) என்னும் சூத்திரத்துள் காட்டுதும். பிறவு மென்றதனாற் கொள்வன, சிறுபான்மை திரிவுபடுதலின் பிறவு மென்று அடக்கினர்.

(வி - ரை) உணா-உணவு. செய்தி-யாழ். மற்றைய போலாது - பாலைக்கு நிலமும் தெய்வமும் இலவாயவாறு போலன்றி.

முதிரை - எள், கொள், பயறு, உளுந்து, துவரை, அவரை, கடலை, மெச்சை என எண்வகையது என்பர் அடியார்க்கு நல்லார்.

ஏறுகோட்பறை -ஆனிரை தழுவுங்கால் அடிக்கப்படும் பறை, தளவு - முல்லையுள் ஒருவகை. பாடி முதலியன முல்லை நிலத்து ஊர்களின் வேறுபாடு போலும். இக்காலத்துத் தரங்கம்பாடி, புதுச்சேரி, திருச்சிராப்பள்ளி, ஆனைப்பள்ளி என வழங்குவன அக்காலத்து இடையர்கள் வாழ்ந்த இடங்கள் போலும் எனக் கருதுவர். திரு. கணேசையர்.

நிரை கோட்பறை - களவினுல் பகைவரின் ஆனிரைகளைக் கவர்ந்து கொள்ளும் பொழுது அம்மகிழ்வால் அடிக்கப்படும் பறை. இது வெட்சிக்கண் கூறப்படும் நிரை கோடல் அன்று. அது அறங்கருதிக் கொள்வது. இது தன்னலம் கருதி வௌவிக் கொள்வது.

ஆசிரியர் தொல்காப்பியர் கருப்பொருள்கள் என இந்நூற்பாவில் கூறப்பெறுவன எட்டு 19 முதல் 23 வரையுள்ள நூற்பாக்களால் உடம்படுபுணர்த்துக் கூறப்பெறுவன மூன்று 1. பூ; 2. உயர்ந்தோர்; 3. அல்லோர் (தாழ்ந்தோர்) என்பன. எனவே கருப்பொரு஌் எனத்தக்கன பதினொன்று ஆகும். நச்சினார்க்கினியர் அவ்வகை பிறவும் என்பதால் ஊரும் நீரும் கொண்டனர். நம்பியகப் பொருள் ஆசிரியர் கருப்பொருள் பதினுன்கென்பர். (18)

கருப்பொருள் மயக்கம்.

19. எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்.

இது முற்கூறிய கருப்பொருட்குப் புறனடை,

(இ - ள்.) எந்நில மருங்கிற் பூவும் புள்ளும் - எழுதிணை நிகழ்ச்சியவாகிய நால்வகை நிலத்துப் பயின்ற பூவும் புள்ளும்; அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும் - தத்தமக்கு உரியவாகக் கூறிய நிலத்தொடும் காலத்தொடும் நடவாமல் பிற நிலத்தொடும் காலத்தொடும் நடப்பினும்; வந்த நிலத்தின் பயத்த ஆகும் - அவை வந்த நிலத்திற்குக் கருப்பொருளாம் எ - று.

ஒடு அதனோடியைந்த ஒருவினைக்கிளவியாதலின் உடன் சேறல் பெரும்பான்மையாயிற்று. வினைசெய் யிடத்தி னிலத்திற் காலத்தின் (தொல் - சொல் - 81) என்பதனான் நிலத்தின் பயத்தவாம் என்ப் பொழுதினையும் நிலமென்று அடக்கினார். பூவைக் கருவென ஓதிற்றிலரேனும் முற்கூறிய மரத்திற்குச் சினையாய் அடங்கிற்று. ஒன்றென முடித்தலான் நீர்ப்பூ முதலியனவும் அடங்கும். இங்ஙனம் வருமிடம் செய்யுளிடமாயிற்று.

(எ - டு)

"தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்." (கலி - 52

இது மருதத்துப்பூ, குறிஞ்சிக்கண் வந்தது.

"உடையிவ ளுயிர்வாழா ணீநீப்பி னெனப்பல
விடைகொண்டி யாமிரப்பவு மெமகொள்ளா யாயினை
கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
யடையொடு வாடிய வணிமலர் தகைப்பன," (கலி - 3)

இது மருதத்துப்பூ, பாலைக்கண் வந்தது.

"கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னாதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல்விளையாட்டும்
விரும்பார் கொல்" (கலி - 27)

இது குறிஞ்சிக்குப் பயின்ற மயில் பாலைக்கண் இளவேனிற் கண் வருதலின் பொழுதொடு புள் ளு மயங்கிற்று. கபிலர் பாடிய பெருங்குறிஞ்சியில் (பத் - குறிஞ்சிப்பாட்டு) வரைவின்றிப் பூமயங்

கியவாறு காண்க. பிறவும் இவ்வாறு மயங்குதல் காண்க. ஒன்றெ முடித்தலான் பிற கருப்பொருண் மயங்குவன உளவேனும் கொள்க. (19)

திணைதொறும் மரீஇய பெயரும் திணைநிலைப் பெயரும்.

20 பெயரும் வினையுமென் றாயிரு வகைய
திணைதொறு மரீஇய திணைநிலைப் பெயரே.

இது 'பிறவு' (தொல்-பொருள்-18) மென்றதனுள் தழுவிய பெயர்ப்பகுதி கூறுகின்றது.

(இ - ள்) திணைதொறும் மரீஇய பெயர் — நால்வகை நிலத்தும் மரீஇப்போந்த குலப்பெயரும், திணைநிலைப் பெயர் — உரிப்பொருளிலே நிற்றலையுடைய பெயரும்; பெயரும் வினையுமென்று அ இருவகைய—பெயர்ப்பெயரும் வினைப்பெயருமென்று அவ்விரண்டு கூற்றையுடையவாம் எ - று.

நால்வகை நிலத்தும் மருவிய குலப்பெயராவன:—குறிஞ்சிக்குக் கானவர் வேட்டுவர் இறவுளர் குன்றுவர் வேட்டுவித்தியர் குறத்தியர் குன்றுவித்தியர்; ஏனைப் பெண்பெயர் வருமேனும் உணர்க. முல்லைக்குக் கோவலர் இடையர் ஆயர் பொதுவர் இடைச்சியர் கோவித்தியர் ஆய்ச்சியர் பொதுவியர். நெய்தற்கு நுளையர் திமிலர் பரதவர் நுளைத்தியர் பரத்தியர்; ஏனைப் பெண் பெயர் வருமேனும் உணர்க. மருதத்திற்குக் களமர் உழவர் கடையர் உழத்தியர் கடைச்சியர்; ஏனைப் பெண்பெயர் வருமேனும் உணர்க.

முன்னர் 'வந்த நிலத்தின்பயத்த' (தொல்-பொருள்-19) என்புழிக் காலத்தையும் உடன்கோடலின் ஈண்டும் திணைதொறு மருவுதலும் பொழுதொடு மருவுதலும் பெறப்படுதலின் பொழுது முதலாக வரும் பாலைக்குத் திணைதொறு மரீஇய பெயரும் திணை நிலைப்பெயரும் கொள்க. எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர் எனவும், மீளி விடலை காளை எனவும் வரும்.

இனி உரிப்பொருட்குரிய தலைமக்கள் பெயராவன, பெயர்ப் பெயரும் நாடாட்சிபற்றிவரும் பெயருமாம். குறிஞ்சிக்கு வெற்பன் சிலம்பன் பொருப்பன், கொடிச்சி; இஃது ஆண்பாற்கு ஏலாத பெயராயினும் நிலை யென்றதனாற் கொள்க. முல்லைக்கு அண்ணல் தோன்றல் குறும்பொறைநாடன், மனைவி. நெய்தற்குக் கொண்கன் துறைவன் சேர்ப்பன் மெல்லம்புலம்பன். தலைவிபெயர் வந்துழிக் காண்க. மருதத்திற்கு மகிழ்நன் ஊரன், மனையோள் எனவரும். இக் காட்டிய இருவகையினும் பெயர்ப்பெயரும் வினைப்பெயரும் பாடலுள் பயின்ற வகையான் பொருணோக்கி யுணர்க.

ஈண்டுக் கூறிய திணைநிலைப்பெயரை 'ஏவன் மரபின்' (தொல்-பொருள்-24) என்னும் சூத்திரத்து அறுவகையரெனப் பகுக்கு மாறு ஆண்டுணர்க.

(வி - ரை) அகப்பொருளில் கூறப்பெறும் பெயர்கள் இரு வகையாம். ஒன்று திணைதொறும் மரீஇய பெயர். இது அவ்வந் நிலத்திலேயே வாழ்ந்துவரும் குலமக்களின் பெயராகும். பிறிதொன்று திணைநிலைப்பெயர். இது அவ்வந்நிலத்திலும் வாழும் தலைமக்கள் பெயரைக் குறிக்கும். இவ்விரு பெயர்களும் பொருள் பற்றிவரும் பெயராகவும் (இயற்பெயராகவும்), தொழில்பற்றி வரும் பெயராகவும் கூறப்படுமென்பது இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் தரும் உரையாகும். இளம்பூரணர் இந்நிலம் பற்றியே வாழும் மக்கட் பெயர்களை அவரவர் குலம்பற்றியும் தொழில்பற்றியும் பெயர் கூறப்படும் என்பது கருத்தாக இந் நூற்பாவிற்குப் பொருள் உரைப்பர். இத்தகையோரைப்பற்றி அவர் கூறும் கருத்து அறியத்தக்கதாகும். திணைநிலைப்பெயர் என்றதனால் அப்பெயருடையார் பிறநிலத்து இலர் என்று கொள்ளப்படும். அதனானே எல்லா நிலத்திற்கும் உரியராகிய மேன்மக்களை ஒழித்து நிலம்பற்றி வாழும் கீழ்மக்களையே குறித்து ஓதினார் என்று கொள்க. பெயர் என்றதனால் பெற்ற தென்னை? மக்கள் என அமையாதோ? எனின், மக்களாவார் புள்ளும் மாவும் போல வேறுபடுக்கப்படார் ஒரு நீர்மையராதலின். அவரை வேறுபடுக்குங்கால் திணைநிலைப்பெயரான் அல்லது வேறுபடுத்தல் அருமையின் பெயர் என்றார். இதனைத்தழுவியே பின்வந்த

நம்பியகப்பொருள் ஆசிரியரும் ஒவ்வோர் நிலத்தும் உள்ள மக்களை உயர்ந்தோர் என்றும் அல்லோர் என்றும் பாகுபாடு செய்தனர்.

பெர்ப்பெயர் – பொருள்பற்றி வரும் பெயர். வினைப்பெயர் – தொழில்பற்றி வரும் பெயர். (20)

திணைதொறும் மரீஇய பெயருள் தலைவராதற் குரியார்

21. ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர் ஆவயின் வரூஉங் கிழவரும் உளரே.

இது முன்னர்த் திணைதொறுமரீஇய பெயருடையோரிலும் திணைநிலைப்பெயராகிய தலைமக்களாய் வழங்குவாரும் உளரென முல்லைக்கும் குறிஞ்சிக்கும் எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்) ஆடூஉத் திணைப்பெயர் — முற்கூறிய ஆண்மக்களாகிய திணைதொறு மரீஇய பெயர்களுள்; ஆயர் வேட்டுவர் வரூஉங் கிழவரும் உளர் — ஆயரிலும் வேட்டுவரிலும் வருங் கிழவரும் உளர்; ஆவயின் (வரூஉங் கிழவியரும் உளர்) — அவ்விடத்து வரும் தலைவியரும் உளர் எ - று.

ஆயர் வேட்டுவரென்னும் இரண்டு பெயரே எடுத்தோதினு ரேனும் ஒன்றென முடித்தலான் அந்நிலங்கட்கு உரிய ஏனைப் பெயர்களான் வருவனவும் கொள்க.

"தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப் பாங்கரு
முல்லையுந் தாய பாட்டங்காற் றோழிநம்
புல்லினத் தாயர் மகளிரோ டெல்லா
மொருங்கு விளையாட வவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன் மற்றென்னை
முற்றிழை யேஎர் மடநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் புனைகோ சிறிதென்று னெல்லாநீ
பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்

கற்ற திலைமன்ற காணென்றேன் முற்றிழாய்
தாதுசூழ் கூந்த நகைபெறத் தைஇய
கோதை புனைகோ நினக்கென்று னெல்லாநீ
யேதிலார் தந்தபூக் கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் மாதரா
னைய பிதிர்ந்த சுணங்கணி மென்முலைமேற்
றெய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்
செய்புற நோக்கி யிருத்துமோ நீபெரிது
மையலை மாதோ விடுகென்றேன் றையலாய்
சொல்லிய வாறெல்லா மாறுமா றியான்பெயர்ப்ப
வல்லாந்தான் போலப் பெயர்ந்தா னவனைநீ
யாயர் மகளி ரியல்புரைத் தெந்தையும்
யாயு மறிய வுரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்." (கலி - 111)

"ஆயர் மகளையுங் காதலை கைம்மிக
ஞாயையு மஞ்சுதி யாயி னரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து" (கலி-107)

"தோழிநாங்
காணாமையுண்ட கடுங்கள்ளை மெய்கூர
நாணாது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாங் கண்டாய்நம்
புல்லினத் தாயர் மகன்." (கலி-115)

என்றாற் போல்வன பிறவும் வருவன கொள்க.

இன்னும் "ஏனலு மிறங்குகதி ரிறுத்தன" (அகம்-131) என்னும் அகப் பாட்டினுள் "வானிணைப் புகவிற் கானவர் தங்கை" எனவும், "மெய்யிற்றீரா" (அகம்-28) என்பதனுள் "வேட்டுவற் பெறலோடமைந்தனை" எனவும் வருவனவும் பிறவும் கொள்க; வேட்டு என்னும் தொழிலுடையானை வேட்டுவனென்றலின் குறிப்பு வினைப் பெயர்.

"குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் முளைவா ளெயிற்ற
ளிளைய ளாயினு மாரணங் கினளே." (ஐங்குறு-256)

இது வருத்தும் பருவத்தளல்லள் என்ற தோழிக்குக் கூறியது. இப்பத்தினுள் "குறவன்.. மகள்" என்க் கூறுவன பல பாட்டுக்கள் உள; அவையும் கொள்க. இவ்வாற்றான் இந்நிலத்து மக்கள் பெயரும் பெற்றும். ஏனைய பெயர்களில் வந்தனவுளவேல் கொள்க.

(வி - ரை) முன்னைய நூற்பாவில் அவ்வந் நிலத்துக்குரிய மக்களும் தலைமக்களுமாக மக்களை இருவகையில் பாகுபாடு செய்தார். இந்நூற்பாவில் அவ்வந்நிலம்பற்றி வாழும் மக்களும் ஓரோவழி தலைமக்களாதற்குரியர் எனக் கூறுகின்றார். அவ்வகையில் முல்லை நிலமக்களுள் ஆயரும், குறிஞ்சி நிலமக்களுள் வேட்டுவரும் தலைமக்களாதற்குரியர் என இந்நூற்பாவில் கூறுகின்றார், இளம்பூரணர் ஆயர் வேட்டுவர் ஆகிய இருவரையும் முல்லை நிலத்து மக்கள் என்றே கருதுவர். அவ்விரு திறத்தாரும் காடுபற்றி வாழ்தலின் அந்நிலத்து மக்களாயினர் என்பது அவர் கருத்து.

'தீம்பால்கறந்த' என்னும் பாடல் பொதுவன் என்னும் பெயர் வந்தமைபற்றிக் காட்டப்பட்டது. (21)

இதுவும் அது.

22. ஏனோர் [1]பாங்கினும் எண்ணுங் காலை
ஆறு வகைய திணைநிலைப் பெயரே.

இது முல்லையும் குறிஞ்சியும் ஒழிந்தவற்றுள் திணையொடு பழமரீஇய பெயருடையோரிலும் திணைநிலைப் பெயராகிய தலைமக்களாய் வழங்குவாரும் உளரென எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்) ஏனோர் பாங்கினும் திணைநிலைப்பெயர் எண்ணுங் காலை—ஒழிந்த பாலைக்கும் நெய்தற்கும் உரியராகக் கூறிய மக்கள் கூற்றினும் வரும் தலைமக்கள் பெயரை ஆராயுங்காலத்து; ஆறு வகைய—அவை பெரும்பான்மையாகிய கூறுபாட்டினையுடைய என்றவாறு.

---

1 மருங்கினும் எனப் பாடங் கொள்வர் இளம்பூரணர்.

(எ-டு)

"சிலைவிற் பகழிச் செந்துவ ராடைக்
கொலைவி லெயினர் தங்கைநின் முலைய
சுணங்கென நினைதி நீயே
யணங்கென நினையுமென் னணங்குறு நெஞ்சே".

(ஐங்குறு - 363)

இவ் வைங்குறுநூறு உடன்போகின்றான் நலம்பாராட்டிய கூற்றாம்.

"முளவுமா வல்சி யெயினர் தங்கை
யிளமா வெயிற்றிக்கு நின்னிலை யறியச்
சொல்லினே னிரக்கு மளவை
வென்வேல் விடலை விரையா தீமே". (ஐங்குறு - 364)

இவ் வைங்குறுநூறு கொண்டு உடன் போங் காலத்திற்குக் கொண்டு உடன்போக்கு ஒருப்படுத்துவ லென்றது.

"கணமா தொலைச்சித் தன்னையர் தந்த
நிணவூன் வல்சிப் படுபுள் ளோப்பு
நலமா ணெயிற்றி போலப் பலமிக
நன்னல நயவர வுடையை
யென்றோற் றனையோ மாவீன் றளிரே".

(ஐங்குறு - 365)

இவ் வைங்குறுநூறு வரைவிடைவைத்துப் போகின்றான் மாவினை நோக்கிக் கூறியது. ஏனைப்பெயர்க்கண் வருவன வந்துழிக் காண்க.

"முற்று மஞ்சட் பசும்புறங் கடுப்பச்
சுற்றிய பிணர சூழ்கழி யிறவின்
கணங்கொள் குப்பை யுணங்குதிற நோக்கிப்
புன்னையங் கொழுநிழன் முன்னுய்த்துப் பரப்புந்
துறைநணி யிருந்த பாக்கமு முறைநனி
யினிதும னளிதோ தானே துனிதீர்ந்
தகன்ற வல்குலைதமை நுசுப்பின்

மீனெறி பரதவர் மடமகள்
மானேர் நோக்கங் காணு வூங்கே". (நற்றிணை - 101)

இது வரைதல் பொருட்டுத் தலைவி வேறுபாட்டிற்கு ஆற்றாத தோழி சிறைப்புறமாகக் கூறியது.

"அறிகரி பொய்த்த லான்றோர்க் கில்லை
குறுக லோம்புமின் சிறுகுடிச் செலவே
யிதற்கிது மாண்ட தென்று ததற்பட்
டாண்டொழிந் தன்றே மாண்டகை நெஞ்ச
மயிற்க ணன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉங் கான லானே." (குறுந் - 184)

இது கழறிய பாங்கற்குக் கூறியது.

"கடுந்தே ரேறியுங் காலிற் சென்றும்
* *
என்னென நினையுங்கொல் பரதவர் மகளே."
(நற்றிணை - 349)

என வரும். இது நற்றிணை.

"இவளே, கான நண்ணிய" (45) என்னும் நற்றிணைப் பாட்டினுள் "கடுந்தேர்ச் செல்வர் காதன் மகனே" என்று அவனருமை செய்தயர்த்தலின் அவனை இகழ்ச்சிக்குறிப்பான் தலைமையாகக் கூறினாள். ஏனைப் பெண்பெயர்க்கண் வருவனவும் வந்துழிக் காண்க.

"ஏனோர் பாங்கினும்" எனப் பொதுப்படக்கூறிய அதனான் மருத நிலத்து மக்களுள் தலைமக்கள் உளராகப் புலனெறி வழக்கம் செய்த செய்யுட்கள் வந்தன உளவேல், கண்டுகொள்க.

(வி - ரை) முந்நூற்பாவில் முல்லை குறிஞ்சி ஆகிய மக்கட்குரிய பெயரை எடுத்தோதினார். ஆதலின் இந்நூற்பாவில் ஏனோர் என்றது ஒழிந்த மருதம் நெய்தல் பாலை ஆகிய நிலத்தவரைக் குறித்தலே பொருத்தமாம். ஆயினும் உரையில் ஒழிந்த பாலைக்கும் நெய்தற்கும் உரியராகிய மக்களைக் கூறி மருத நிலத்து மக்களுள்

தலைமக்கள் உளராகச் செய்யுள் வழக்கு உளவேல் கொள்க எனக் கூறியிருப்பது ஆராயத்தக்கதாகும். இளம்பூரணர் மேற்கூறிய முல்லை நிலமக்களை அன்றி ஏனைய நிலங்களிலுள்ள பெயர்களுள் குலம் பற்றி வாழ்பவரும் ஆட்சி பற்றி வாழ்பவரும் என இரு வகைப்படுத்தி உரைப்பர்.

நலம் பாராட்டியது — சுணங்கைப் பாராட்டியது.

சொல்லினேன் இரக்குமளவை — சொல்லி வேண்டுமளவும், அவள் இணங்கின் போக்கு ஒருப்படுத்துவல் என்றாள். (22)

அடியரும் வினைவலரும் தலைவராதற்குரியர்

23. அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்.

இது மேல் நால்வகை நிலத்து மக்களும் தலைமக்களாகப் பெறுவரென்றார், அவரேயன்றி இவரும் தலைமக்களாகுப கைக்கிளை பெருந்திணைக்கண் என்கின்றது.

(இ - ள்) அடியோர் பாங்கினும் — பிறர்க்குக் குற்றேவல் செய்வோரிடத்தும்; வினைவலர்பாங்கினும்-பிறர் ஏவியதொழிலைச் செய்தல் வல்லோரிடத்தும்; கடிவரையில புறத்து என்மனார் புலவர்—தலைமக்களாக நாட்டிச் செய்யுட்செய்தல் நீக்கப்படாது நடுவண் ஐந்திணைப் புறத்து நின்ற கைக்கிளை பெருந்திணைகளுள் என்றவாறு.

கூன்பாட்டினுள்,

"நம்மு ணகுதற் றொடீஇயர் நம்முணு
முசாவுவங் கோனடி தொட்டேன்". (கலி - 94)

எனவும்,

"பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டோர் நகாமை வேண்டுவல்".
(கலி - 94)

எனவும் பெருந்திணைக்கண் அடியோர் தலைவராக வந்தது. என்னை? கோன் அடிதொட்டேன் என்றமையானும் கோயில் என்றமையானும் இவர்கள் குற்றேவலன் மாக்க ளாயிற்று.

"ஏஎயிஃதொத்தன்" என்னும் குறிஞ்சிக்கலியுள்,

"போற்றாய் களைநின் முதுக்குறைமை போற்றிக்கேள்
வேட் டார்க் கினிதாயி னல்லது நீர்க்கினிதென்
றுண்பவோ நீருண் பவர்." (கலி - 62)

தீயகாமம் இழிந்தோர்க்கு உரிமையின், இதுவும் அடியோர் தலைவராக வந்த கைக்கிளை. அடியோரெனவே இருபாற் றலைமக்களும் அடங்கிற்று. கடிவரையில என்றதனான் அவருள் பரத்தையரும் உளரென்று கொள்க.

"இகல்வேந்தன்" என்னும் முல்லைக்கலியுள்,

"மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றாயோ
ராயனை யல்லை பிறவோ வமரருண்
ஞாயிற்றுப் புத்தேண் மகன்." (கலி - 108)

என்பதனான் தலைவன் வினைவல பாங்கனாயினவாறு காண்க. இதனுள்,

"புனத்துளா னெந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ
வினத்துளா னெந்தைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ".
(கலி - 108)

என்றவழி எமரேவலான் யான் செய்வதன்றி யாங்கள் ஏவ நின்னெஞ்சம் இத்தொழில்கள் செய்கின்றனவில்லை என்றலின் வினைவல பாங்கினளாய தலைவிகூற்றாயிற்று.

"யாரிவன்" என்னும் முல்லைக்கலியுள்,

"வழங்காப் பொழுதுநீ கன்றுமேய்ப் பாய்போல்
வழங்க லறிவா ருரையாரே லெம்மை
யிகழ்ந்தாரே யன்றோ வெமர்' (கலி - 112)

இதுவும் வினைவலபாங்கினளாய தலைவியை நோக்கி அத் தலைவன் கூறியது.

"நலமிக நந்திய" என்னும் முல்லைக்கலியுள்,

"பல்கால்யாங் கான்யாற் றவிர்மணற் றண்பொழி
லல்க லகலறை யாயமொ டாடி
முல்லை குருந்தொடு முச்சிவேய்ந் தெல்லை
யிரவுற்ற தின்னுங் கழிப்பி யரவுற்
றுருமி னதிருங் குரல்போற் பொருமுர
ணல்லேறு நாகுட னின்றன
பல்லா ஸினநிரை நாமுடன் செலற்கே". (கலி - 113)

இது தாழ்த்துப் போதற்குத் தலைமையின்றிக் கடிதிற் போகல் வேண்டும் என்றமையானும், நல்லேறும் நாகும்போல் நாமும் கூடப் போகல் வேண்டும் என்றமையானும், தலைவன் வினைவல பாங்கினன் ஆயிற்றென்க. வினைவல்லானென்னாது பாங்கினென்றதனால் தமரேவல் செய்வது பெறுதும். இஃது அவ்வந்நிலத்து இழிந்தோர்க்கு எஞ்ஞான்றும் தொழிலேயாய் நிகழுமென்றும், புனங்காவலும் படுபுள்ளோப்புதலும் இவ்வா றன்றி உயர்ந்தோர் விளையாட்டாகி இயற்கைப்புணர்ச்சிப் பின்னர்ச்சின்னாளில் தவிர்வரென்றும் வேறுபாடுணர்க. இக்கூறிய இருதிறத்தோரும் தமக்கு உரியரன்மையான் அறம்பொருளின் பம் வழாமை நிகழ்த்துதல் அவர்க்கரிதென்பது பற்றி இவற்றை அகப்புறமென்றார்.

(வி - ரை) அடியோர் பாங்கு — பிறர்க்குக் குற்றேவல் செய்வார். இவர் ஒருவரிடத்தேயே ஆட்பட்டிருந்து பணி புரிபவராவர். வினைவலர் பாங்கு — பிறர் ஏவிய தொழிலைச் செய்வார். இவர் ஒருவரிடத்தன்றி அவ்வப்பொழுது அவரவரும் கூறும் பணியைக் கேட்டு நாட்கூலிபெற்று வாழ்பவராவார். இவர்கள் இருவரும் ஐந்திணைக்கண் தலைமை பெறுதற்குரியர் அல்லர். கைக்கிளைப் பெருந்திணைக்கண் மட்டுமே தலைவராதற் குரியார் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

அங்ஙனமாயின் ஐந்திணைக்கண் வரும் தலைவியர் பலரும் புனங்காவலும் படுபுள் ஒப்புதலும் ஆகிய பணியைச் செய்பவராகப்

பேசப்படுகின்றனரே எனின், அவர்கள் இத்தொழில்களை விளையாட்டு வகையான் செய்கின்றனரே அன்றி வினைவகையால் செய்கின்றனர் அல்லர் என விளக்குகின்றார் நச்சினார்க்கினியர். இந்நுட்பம் அறிதற்குரியது.

இங்குக் கூறிய அடியவரும் வினைவலரும் அகப்பொருட்கு (ஐந்திணைக்கு உரியரல்லர்; அகப்புறத்திற்கே (கைக்கிளை பெருந்திணைக்கே) உரியர் எனக் கூறி அதற்குரிய காரணத்தைப் பெரிதும் விளக்குவர் இளம்பூரணர். இவர் அகத்திணைக்கு உரியல்லரோ வெனின் அகத்திணையாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும்; அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும், அவர் நாணுக் குறைபாடுடைய ராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக் கருதுபவ ராகலானும் இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதனானும் இவர் புறப் பொருட்குரியராயினர் என்க. எனவே இவ்வெழுவகைத் திணையும் அகம் புறம் என இருவகையாயின.

கோன் அடி தொட்டேன் — அரசன் அடியை நினைந்து உறுதிகூறினேன். கோயில் — அரண்மனை. தனக்கு இனிதெனப் பிறர்க்கு இன்னா செய்வது இழிந்தோர்க்குரியதாதலின் இங்ஙனம் கூறினார்.

நிரை முன் கோல் ஊன்றி நிற்றலின் வினைவலர் என்றார். புகா - உணவு. (23)

திணைநிலைப் பெயராதற்குச் சிறந்தார்

24. ஏவல் மரபின் ஏனோரும் உரியர் ஆகிய நிலைமை யவரும் அன்னர்.

இது முன்னர்ப் ‘பெயரும் வினையும்’ என்பதனுள் திணை தொறுமரீஇய பெயரும் திணைநிலைப்பெயருமெனப் பகுத்த இரண்டனுள் திணைதொறுமரீஇய பெயருள் தலைவராதற்குரி யாரை அதிகாரப்பட்டமையிற் கூறி, அங்ஙனம் தலைவராதற்

குரிமையின் அடியோரையும் வினைவலபாங்கினோரையும் அதன் பிற்கூறிப், பின்னர்நின்ற திணைநிலைப்பெயராதற்குச் சிறந்தார் அறுவகையரெனப் புகுக்கின்றது.

(இ - ள்) மரபின் - வேதநூலுட் கூறிய இலக்கணத்தானே: ஏவல் ஆகிய நிலைமையவரும் - பிறரை ஏவிக்கொள்ளும் தொழில் தமக்குளதாகிய தன்மையையுடைய அந்தணர் அரசர் வாணிகரும்; அன்னர் ஆகிய அவரும்—அம்மூவரையும்போற் பிறரை ஏவிக்கொள்ளும் தன்மையராகிய குறுநிலமன்னரும் அரசராற் சிறப்புப்பெற்றோரும்; ஏனோரும்—நால்வகை வருணமென்று எண்ணிய வகையினுள் ஒழிந்து நின்ற வேளாளரும்; உரியர் — உரிப்பொருட் டலைவராதற்கு உரியர் என்றவாறு.

ஆகிய என்பதனை ஏவலொடும் அன்னரொடும் கூட்டுக.

எனவே, திணைநிலைப்பெயர் அறுவகையாயிற்று. வேந்து விடு தொழிலிற்...... பெற்றுளே (தொல். பொருள் - பரி - 81) என்பதனுன் வேளாளரே அரசாற் சிறப்புச்செய்யப் பெறுவரென்றுணர்க. இனி வில்லும் வேலும் கழலு... ...முரிய' (தொல்-பொருள்-மர-83) என்பதனுன் ஏனோரும் சிறுபான்மை சிறப்புப்பெறுவரென்றுணர்க. உரிப்பொருட்டலைவர் இவரேயாதலைத் தான் மேற் பிரிவிற்குக் கூறுகின்றவாற்றானும் உணர்க.

"தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉ
மணங்கெண வஞ்சுவர் சிறுகுடி யோரே;
ஈர்ந்த ணுடையை யெல்லி மாலையை" (கலி - 52)

என வரும்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே."
(குறுந் - 167)

இது குறுந்தொகை. இது பார்ப்பானையும் பார்ப்பனியையும் தலைவராகக் கூறியது, கடிமனைச் சென்ற செவிலி கூற்று. வாயி னேர்வித்தலுமாம்.

"வருதும் என்ற நாளும் பொய்த்தன
அரியே ருண்கண் நீரும் நில்லா
தண்கார்க் கீன்ற பைங்கொடி முல்லை
வைவாய் வான்முகை அவிழ்ந்த கோதை
பெய்வனப் பிழந்த கதுப்பும் உள்ளார்
அருள்கண் மாறலோ மாறுக அந்தில்
அறனஞ் சலரே ஆயிழை நமரெனச்
சிறிய சொல்லிப் பெரிய புலம்பினும்
பனிபடு நறுந்தார் குழைய நம்மொடு
துனிதீர் முயக்கம் பெற்றோள் போல
உவக்குநள் வாழிய நெஞ்சே விசும்பின்
ஏறெழுந்து முழங்கினு மாறெழுந்து சிலைக்கும்
கடாஅ யானை கொட்கும் பாசறைப்
போர்வேட் டெழுந்த மன்னர் கையதை
கூர்வாட் குவிமுகஞ் சிதைய நூறி
மானடி மருங்கிற் பெயர்த்த குருதி
வான மீனின் வயின்வயின் இமைப்ப
அமரோர்த் தட்ட செல்வந்
தமர்விரைந் துரைப்பக் கேட்கும் ஞான்றே"

(அகம் - 144)

மீண்டவன் நெஞ்சிற்கு உரைப்பானாய்ப் பாகற்கு உரைத்தது. இம் மணிமிடைபவளத்து வேந்தன் தலைவனாயினவாறும் தான் அமரகத்து அட்ட செல்வத்தையே மிக்க செல்வமாகக் கருதுதற் குரியாள் அரசவருணத்தின் தலைவியே என்பதூஉம் உணர்க.

"பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மலும் வனப்பார விடுவதோ."

(கலி - 21)

இதனுள் வேந்தன் தலைவனாயினவாறும் பகைகொண்ட தலைமையின் அழகை நுகரவிரும்பினாள் என்றலின் தலைவியும்

அவ்வருணத்தாள் ஆயவாறும் உணர்க. "உலகுகிளர்ந்தன்ன" என்னும் (255) அகப்பாட்டுள் வணிகன் தலைவனாகவும் கொள்ளக் கிடத்தலின் தலைவியும் அவ்வருணத் தலைவியா மென்றுணர்க.

"தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண்டொறும் யாத்த காண்டகு நல்லிற்
கொடுங்குழை பெய்த செழுஞ்செவிப் பேதை
மோதிரம் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை யீர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண் டமர்த்த கண்ண டகைபெறப்
பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்விய
ரந்துகிற் றலையிற் றுடையின ணப்புலந்
தட்டி லோளே யம்மா வரிவை
யெமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று
சிறியமுள் ளெயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே."

(நற்றிணை - 120)

விருந்தொடு புக்கோன் கூற்று. செவிலிகூற்றுமாம். இந் நற்றிணை வாளை யீர்ந்தடிவகைஇ என்றலின் வேளாண்வருண மாயிற்று.

"மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில்
பணைமுழங் கெழிலி பௌவம் வாங்கித்
தாழ்பெயற் பெருநீர் வலனேர்பு வளைஇ
மாதிரம் புதைப்பப் பொழிதலின் காண்வர
இருநிலங் கவினிய வேமுறு காலை
நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி
அயிர்க்கண் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
நறுவீ முல்லை நாண்மலர் உதிரும்
புறவடைந் திருந்த அருமுனை இயவில்
சீறூ ரோளே ஒண்ணுதல் யாமே
எரிபுரை பன்மலர் பிறழ வாங்கி
அரிஞர் யாத்த வலங்குதலைப் பெருஞ்சூடு
கள்ளார் வினைஞர் களந்தொறும் மறுகும்
தண்ணடை தழீஇய கொடிநுடங் காரெயில்

அருந்திறை கொடுப்பவுங் கொள்ளான் சினஞ்சிறந்து
வினைவயிற் பெயர்க்குந் தானைப்
புனைதார் வேந்தன் பாசறை யேமே." (அகம் - 84)

இது தூதுகண்டு வருந்திக் கூறியது. இக் களிற்றியானை நிரையுள் தன்னூரும் அருமுனையியவிற் சீறூர் என்றலின் தான் குறுநில மன்னனென்பது பெற்றாம்.

"அகலிருவிசும்பகம்" (214) என்னும் அகப்பாட்டும் பொருளோக்கினால் இதுவேயாமா றுணர்க.

"இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்
தொருபடை கொண்டு வருபடை பெயர்க்குஞ்
செல்வ முடையோர்க்கு நின்றன்று விறலெனப்
பூக்கோள் ஏய தண்ணுமை விலக்கிச்
செல்வே மாதல் அறியான் முல்லை
நேர்கால் முதுகொடி குழைப்ப நீர்சொரிந்து
காலை வானத்துக் கடுங்குரற் கொண்மூ
முழங்குதொறுங் கையற் றொடுங்கிநப் புலந்து
பழங்கண் கொண்ட பசலை மேனியள்
யாங்கா குவள்கொ றானே வேங்கை
ஊழுறு நறுவீ கடுப்பக் கேழ்கொள
ஆகத் தரும்பிய மாசறு சுணங்கினள்
நன்மணல் வியலிடை நடந்த
சின்மெல் லொதுக்கின் மாஅ யோளே." (அகம் - 174)

இது மீள்வான் நெஞ்சிற் குரைத்தது.

இதனுள் "பூக்கோளேய தண்ணுமை விலக்கிச் செல்வே" மென்றலின் அரசனால் சிறப்புப்பெற்ற தலைவனாயிற்று. இன்னும் சான்றோர் செய்யுட்களுள் இங்ஙனம் வருவனவற்றை அவற்றின் பொருணோக்கி உணர்க.

(வி - ரை) இந்நூற்பாவால் நிலமக்களுள் தலைமக்களாதற்கு அறுவர் உரியர் என நச்சினார்க்கினியர் கருதுகின்றார். இவ்வாறு வரும் அத்தகுதிக்கு உரியரேனும் இவ்வாறு நூற்பாவைச்

சிதைத்துப் பொருள் கோடல் பொருந்துவதன்றும். பிறரை ஏவிக்கொள்ளும் தொழில் அந்தணர், அரசர், வணிகர்க்கு உரித்தெனின், அவர் ஏவிய தொழிலைச் செய்தல் வேளாளர்க்கு உரித்தெனப் பெறப்படுகிறது. இவ்வாறு வேதம் கூறுமேல் அதுவும் ஆராயத்தக்கதாம்.

இளம்பூரணர் மேற்கூறப்பட்ட அடியோரும், வினைவலருமன்றிப் பிறரை ஏவிக் கொள்ளும் மரபினராய பிறர்க்கும் கைக்கிளை பெருந்திணை உரித்தாம் என உரை காண்பர். எனவே கைக்கிளை, பெருந்திணைக்குரிய ஒழுக்கத்தை இழிந்த மக்களேயன்றி உயர்ந்த மக்களும் ஒரோவழிக் கடைபிடிப்பர் என்பது இவர் கருத்தாகின்றது. முன்னுள்ள நூற்பாவோடு இயைபுபடுத்தி உரைப்பதில் இவ்வுரை பொருந்துமாறு உளது.

தாமரைக்கண்ணி அந்தணர்க் குரித்தென்பது நச்சினார்க்கினியர் கருத்து.

ஈர்ந்தண் ஆடை - குளிர்ந்த ஆடை. நீராடி உடுப்பது அந்தணர்க்குரித்தென்பது நச்சினார்க்கினியர் கருத்து.

முளிநயிர் பிசைந்த என்பது பார்ப்பனர்க்குரியது எனற்கு இடனில்லை.

வாளை ஈர்ந்து - வாளைமீனை நறுக்கி

அகம் - 84 தூதுகண்டு கூறியது என்றதற்கு இடனின்று.

பிரிவின் வகை.

25. ஓதல் பகையே தூதுஇவை பிரிவே.

இத் துணையும் அகத்திற்குப் பொதுவாகிய முதல் கரு வுரிப் பொருளே கூறி இனி இருவகைக் கைகோளுக்கும் பொதுவாகிய பாலைத்திணை கூறிய எழுந்தது.

(இ - ள்.) பிரிவே—பாலையென்னும் பிரிதல் பொருண்மை; ஓதல் பகையே தூது இவை—ஓதற் பிரிதலும், பகைமேல் பிரிதலும், பகைவரைச் சந்துசெய்தன் முதலிய தூதுபற்றிப் பிரிதலுமென மூன்றுவகைப்படும் என்றவாறு.

ஒரோவொன்றே அறமும் துறக்கமும் பொருளும் பயத்தற் சிறப்புநோக்கி இவற்றை இவையென விதந்தோதினுர். இவை யென்றதனை எடுத்தலோசையால் கூறவே அறங்கருதாது அரசர் ஏவலால் தூதிற்பிரிதலும் போர்த்தொழில் புரியாது திறைகோடற்கு இடைநிலத்துப் பிரிதலும் சிறப்பின்மை பெறுதும். அறம் கருதாது பொருள் ஈட்டுதற்குப் பிரிதலும் பொருள்வயிற் பிரிவிற்கு உண்மையின் இவற்ருெடு ஓதாது பிற் கூறினுர். அந்தணர்க்குறிய ஓதலும் தூதும் உடன்கூறிற்றுஇலர் பகைபிறந்தவழித் தூதுநிகழ்தலின்.

(வி - ரை) கைகோள் — கொள்ளப்படுகின்ற ஒழுக்கம்.
பாலைத்திணை — பிரிவு ஒழுக்கம் (25)

ஓதற்கும் தூதிற்கும் உரியார்.

**26. அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன.**

இது முற்கூறியவற்றுள் அந்தணர் முதலிய மூவர்க்கும் இரண்டு பிரிவு உரித்தென்கிறது.

(இ - ள்.) அவற்றுள்—அம்மூன்றனுள்; ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன—ஓதற்பிரிவும் தூதிற்பிரிவும் அந்தணர் முதலிய மூவரிடத்தன என்றவாறு.

எனவே ஒழிந்த பகைவயிற்பிரிவு அரசர்க்கே உரித்தென மேலே கூறுப. உயர்ந்தோரெனக் கூறலின் வேளாளரை ஒழிந்தோர் என்றுணர்க.

(எ - டு)

"அரம்போ ழவ்வளை தோணிலை நெகிழ
நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டி
ஈர்ங்கா ழன்ன அரும்புமுதி ரீங்கை
ஆலி யன்ன வால்வீ தாஅய்
வைவா லோதி மையணல் ஏய்ப்பத்

தாதுறு குவளைப் போதுபிணி யவிழப்
படாஅப் பைங்கட் பாவடிக் கயவாய்க்
கடாஅம் மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய பொங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத் துழிதரப்
பனியடூஉ நின்ற பானாட் கங்குல்
தமியோர் மதுகை தூக்காய் தண்ணெனை
முனிய அலைத்தி முரணில் காலைக்
கைதொழு மரபிற் கடவுள் சான்ற
செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பக லொழிந்த
பீடில் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடைநீ யெமக்கே.'' (அகம் - 125)

இதனுள் பலரும் கைதொழும் மரபினையுடைய கடவுள் தன்மை அமைந்த செய்வினையெனவே ஓதற்பிரிதலென்பது பெற்றாம். ''சிறந்தது பயிற்றல இறந்ததன் பயனே'' (தொல் - பொரு - 192) என்பதனால் கிழவனும் கிழத்தியும் இல்லறத்தில் சிறந்தது பயிற்றாக்கால் இறந்ததனால் பயனின்று ஆதலின் இல்லறம் நிரம்பாதென்றற்கு நிரம்பாவாழ்க்கை யென்றார்.

இல்லறம் நிகழ்கின்ற காலத்தே மேல்வரும் துறவறம் நிகழ்த்துதற்காக அவற்றைக் கூறும் நூல்களையும் கற்று அவற்றின் பின்னர்த் தத்துவங்களையும் உணர்ந்து மெய்யுணர்தல் அந்தணர் முதலிய மூவர்க்கும் வேண்டுதலின் ஓதற்பிரிவு அந்தணர் முதலி யோர்க்கே சிறந்ததென்றார்.

''பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தான் மறுத்தர லொல்வதோ.''
(கலி - 15)

என்பதும் அது; மையற்ற படிவம் அந்தணர் முதலியோர் கண்ணதாகலின். "விருந்தின் மன்னர்" (54) என்னும் அகப்பாட்டில் வேந்தன் பகைமையைத் தான் தணிவித்தமை கூறலின் அந்தணன் தூதிற் பிரிந்தமை பெற்றும். "வயலைக் கொடியின் வாடியமருங்குல்" என்னும் புறப்பாட்டில் (305) அந்தணன் தூது சென்றவாறுணர்க. அரசன் தூதுசேறல் பாரதத்து வாசுதேவன் தூதுசென்றவாற்றான் உணர்க.

அது,

"படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே"
(சிலப் - ஆய்ச்சியர்குரவை)

என்பதனானுணர்க. வணிகன்சென்ற தூதும் வந்துழிக் காண்க.

(வி - ரை) உயர்ந்தோர் என்பதற்குச் சாதிப்பிரிவை உளங்கொண்டு அந்தணர் முதலிய மூவர் என வரையறுத்தது பொருத்தமற்றது. இவ்வாறு வரையறைப்படுத்தியதோடு அமையாது, உயர்ந்தோர் எனக் கூறலின் வேளாளரை ஒழித்தார் என உணர்க எனக் கூறியிருப்பதும் சிறிதும் பொருத்தமன்று. அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்தலும், அதன்பயனாக அருளொடு பொருந்தி இறையருள் பெறுதலும் எல்லா இனத்தவர்க்கும் ஒத்தலின் உயர்ந்தோர் என்பது இனவகையினரைக் குறிக்கும் சொல்லாய்க் கோடல் அமையாது. மெய்யுணர்வு பெற்று அதனால் பேரறிவு (ஞானம்) வாய்க்கப் பெறுதல் எல்லா இனத்தவர்க்கும் உளவாதலைச் சமய சந்தான குரவர் முதலியவர்கள் வரலாற்றான் அறியலாம். இவ்வாற்றான் இளம்பூரணர் கூறும் உரையும் பொருந்தாமை அறியலாம். எனவே உயர்ந்தோர் என்பதற்கு ஒழுக்கத்தானும் அறிவானும் குணத்தானும் உயர்ந்தோர் என உரை காண்டலே பொருந்துவதாகும்.

கடவுள் சான்ற செய்வினை எனவே தெய்வத்திறம்பற்றிப் பிரிதல் என்றல் பொருந்துவதாகும்.

மையற்றபடிவம் — குற்றம் தீர்ந்த படிவம். மனமாக கழிந்து திருவருள் தோய்வுடையார் பெறும் எவறுதற்குரியது ஆதலின் அந்தணர்க்கே உரித்து என்றலும் பொருந்துவதென்றும்.

வாசுதேவன் - கண்ணன். (26)

பகைவயிற் பிரிவுக்கு உரியார்

27. தானே சேறலும் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே.

இது பகைவயிற் பிரிவு அரசர்க்கே உரித்தென்கின்றது.

(இ - ள்.) தானே சேறலும் — தன்பகைக்குத் தானே செல்லுதலும்; தன்னொடு சிவணிய ஏனோர் சேறலும் — அவனொடு நட்புக்கொண்ட ஒழிந்தோர் அவற்குத் துணையாகிச் செல்லுதலு மாகிய இருபகுதியும்; வேந்தன் மேற்று — அரசன் கண்ணது என்றவாறு.

எனவே, வாணிகர்க்கு உரித்தன்று ஆயிற்று. தானேயென்று ஒருமை கூறிய அதனானே முடியுடைவேந்தர் தாமே சேறலும், ஏனோரெனப் பன்மைகூறிய அதனானே பெரும்பான்மையும் குறுநிலமன்னர் அவர்க்காகச் சேறலும், முடியுடைவேந்தர் அவர்க்காகச் சிறுபான்மை சேறலும் உணர்க. முடியுடை வேந்தர் உள்வழிக் குறுநில மன்னர் தாமே செல்லாமையுணர்க. இதனை "வேந்தற்குற்றுழி" யென்ப ஏனையோர். அவ்வேந்தர் இல்வழிக் குறுநிலமன்னரும் தாமே சேறல் "வேந்து வினையியற்கை" (தொல் - பொருள் - 32) என்பதன்கண் கூறுப. இதனானே தன் பகை மேலும் பிறர் பகை மேலும் ஒரு காலத்தில் சேறல் இன்றென்றார்.

"கடும்புனல் கால்பட்டு" என்னும் பாலைக்கலியுள்,

"மயங்கமர் மாறட்டு மண்வெளவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ."

(கலி - 31)

எனவும்,

"பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்"
(கலி - 31)

எனவும் மண்கோடலும் திறைகோட்லும் அரசர்க்கே உரித்தாகக் கூறியது.

"நீளுயர் கூட னெடுங்கொடி யெழவே." (கலி - 31)

எனச் சுரிதகத்துக் கூறியவாற்ருன் உணர்க.

"பொருபெரு வேந்தர்க்குப் போர்ப்புணை யாகி
யொருபெருங் காதலர் சென்ருர்—வருவது
காணிய வம்மோ கனங்குழை கண்ணேக்கா
னீணகர் முன்றின்மே னின்று"

இது வேந்தர்க்குற்றுழி வேந்தன் பிரிந்தது.

"கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட் டியானைப் பேஎர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னநின்
பிழையா நன்மொழி தேறிய விவட்கே." (நற்றிணை - 10)

இது குறுநிலமன்னர் போல்வார் சென்றமை தோன்றக் கூறியது. "மலைமிசைக் குலைஇய" (அகம் - 84) என்பதும் அது.

இனி வேட்டைமேற் சேறலும் நாடுகாணச் சேறன்முதலியனவும் பாலையாகப் புலனெறி வழக்கம் செய்யாமை உணர்க. வேந்தனென்று ஒருமையால் கூறினர், "மெய்ந்நிலை மயக்கினுஅகுநவும்" (தொல் - சொல் - 44) என்னும் விதிபற்றி. சிவணிய வென்பதனை வினையெச்சமாக்கி நட்பாடல் வேண்டியென்றுமாம்.

(வி - ரை) பகையென்றது மேல்நின்ற அதிகாரத்தான் உய்த்துணர்ந்து கொள்ளக்கிடந்தது. தானே என்பதன் ஏகாரம் பிரிநிலை: படையை ஒழிய என்றவாறு. போரைக்குறித்துப் பிரிதலும்

(பாடம்) 'குறுநில மன்னர் அவர்க்காகச் சேறல் பெரும்பான்மையும் முடியுடை வேந்தர் அவர்க்காகச் சேறல் சிறுபான்மையுமென வுணர்க.'

அரசர்க்கு உரித்தென்று கொள்க. இதனுள் அரசன் தலைவனாயுழிப் பகை தணி வினைப் பிரிவு எனவும், அவனொடு சிவணி ஏனோர் தலைவ ராய வழி வேந்தர்க்கு உற்றுழிப்பிரிவு எனவும் இதனை இருவகை யாகக் கொள்க எனவரும் இளம்பூரணர் உரை ஈண்டுக்காண்டற் குரியதாகும்.

ஏனையோர் என்றது இறையனார் களவியல் ஆசிரியரை ஆகும். 'வேந்தர்க் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்று, ஆங்கவ் விரண்டும் இழிந்தோர்க்குரிய' (39). (27)

நாடு காத்தற்கும் பொருள்வயிற் பிரிதற்கும் உரியார்.

28. **மேவிய சிறப்பி னேனோர் படிமைய**
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே.

இது முறையானே தன் பகைமேற்சென்ற அரசன் திறை பெற்ற நாடுகாத்து அதன்கண் தன்னெறிமுறை அடிப்படுத்து தற்குப் பிரிதலும் ஏனை வணிகர்பொருட்குப் பிரிதலும் கூறு கின்றது.

(இ - ள்) முல்லை முதலாச் சொல்லிய மேவிய சிறப்பின் - தானே சென்ற வேந்தன் தனக்கு முல்லை முதலாக முற்கூறப் பட்ட நால்வகைநிலனும் திறையாக வந்துபொருந்திய தலைமை யானே; பிழைத்தது - முன்னர் 'ஆள்பவர் கலக்குறுத்த அலை பெற்று' நெறிமுறைமை தப்பிய அந்நாடு; முறையால் பிழை யாதாகல் வேண்டியும் பிரிவே - தனது பழைய நாடுகளை ஆளும் நெறிமுறைமையினாலே • தப்பாமல் ஆக்கம்பெறக் காத்தலை விரும்பிப் பிரிதலும் பிரிவே; ஏனோர் படிமைய இழைத்த ஒண் பொருள் முடியவும் பிரிவே - முற்கூறிய அந்தணர் அரசரை ஒழிந்த வணிகர் தமக்கு விரதங்கள் உடையவாக வேதநூலில் கூறிய ஒள்ளிய பொருள் தேடி முடியும்படி பிரிதலும் பிரிவே என்றவாறு.

பிரிவை இரண்டற்கும் கூட்டுக. சிறப்பிற் பிரிதலும் எனச் சேர்க்க. சொல்லியவென்பதும் பிழைத்ததென்பதும் தொழில் பெயர். முறையால் காக்கவென முடிக்க. விரதமாவன 'கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது பல்பண்டம் பகர்ந்து வீசல்'' (பட்டினப்பாலை - அடி - 210 - 211) முதலியன.

(எ - டு)

''ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்
பருதியஞ் செல்வன்போ னலையூழ்த்த செருந்தியு
மீனேற்றுக் கொடியோன்போன் மிஞிறார்க்குங் காஞ்சியு
மேனோன்போ னிறங்கிளர்பு கஞலிய ஞாழலு
மானேற்றுக் கொடியோன்போ லெதிரிய விலவமும்
ஆங்கத்
தீதுதீர் சிறப்பி னைவர்க ணிலைபோலப்
போதவிழ் மரத்தோடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றா லிளவேனின் மேதக;
பல்வரி யினவண்டு புதிதுண்ணும் பருவத்துத்
தொல்கவின் றொலைந்தவென் றடமென்றோ ளுள்ளுவா
ரொல்குபு நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
வெல்புக ழுலகேத்த விருந்துநாட் டுறைபவர்;
திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்றுறை
வசைதீர்ந்த வென்னலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
மிசைபரந் துலகேத்த வேதினாட் டுறைபவர்;
அறல்சாயப் பொழுதோடெம் மணிநுதல் வேறுகித்
திறல்சான்ற பெருவனப் பிழப்பதை யருளுவா
ரறஞ்சி நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
யாறின்றிப் பொருள்வெஃகி யகன்றநாட் டுறைபவர்;
எனநீ,
தெருமரல் வாழி தோழிநங் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் வாய்மொழித் தூதே.''

(கலி - 26)

இதனுள் 'ஒல்குபு நிழல்சேர்ந்தார்க்கு' எனவே, முன்னர் ஆள்பவர் கலக்குறுத்த அலைபெற்றுப் பின் தன்னை நிழலாகச் சேர்ந்தார் என்பதூஉம், அவர்க்குப் பின்னர் உலைவு பிறவாமற் பேணிக் காத்தான் என்பதூஉம், 'விருந்துநாட்டு' என்பதனால் திறைபெற்ற புதிய நாடென்பதூஉம் பெற்றாம். ஏனையவற்றிற் கும் இவ்வாறே கூறிக்கொள்க.

ஏதிலாடு—புதிய நாடு. ஆறின்றிப் பகைவர் பொருளை விரும்பின நாட்டென்றும் அவரை யகன்ற நாட்டென்றும் பொருள் கூறுக. செருவின் மேம்பட்ட என்றது நாடுகளை. அதனால் பெற்ற வென்றியெனவே நாடு திறைபெற்றமை கூறிற்று.

''படைபண்ணிப் புனையவும்'' என்னும் பாலைக்கலியுள் (17 'வல்வினை வயக்குதல் வலித்திமன்'' என்பதற்கு வலிய போர் செய்து அப்பகைவர் தந்த நாட்டை விளக்குதற்கு வலித்தி யெனவும், ''தோற்றஞ்சா றருகுபொருள்'' என்பதற்குத் தோற்றம் அமைந்த திரண்ட பொருளாவன அந் நாடுகாத்துப் பெற்ற அறம்பொருளின்பம் எனவும், ''பகையறு பயவினை' என்பதற்குப் பகையறுதற்குக் காரணமாகிய நாடாகிய பயனைத் தரும் வினையெனவும், ''வேட்டபொருள்'' என்பதற்கு அறம் பொருளின்பம் எனவும் பொருளுரைத்துக்கொள்க,

பிறவும் இவ்வாறு வருவன உய்த்துணர்ந்து பொருள் கூறுக.

இனிக்,

''கேள்கே டூன்றவுங் கிளைஞ ராரவுங்
கேளல் கேளிர் கெழீஇயின ரொழுகவு
மாள்வினைக் கெதிரிய வூக்கமொடு புகல்சிறந்து.''
(அகம் – 13)

என வாணிகர் பொருள்வயிற் பிரிந்தவா றுணர்க.

''நட்டோ ராக்கம் வேண்டியு மொட்டிய
நின்றோ ளணிபெற வரற்கு
மன்றோ தோழியவர் சென்ற திறமே'' (நற்றிணை – 286)

என்பதனுள் அணியென்றது பூணினை.

பிறவும் இவ்வாறு வருவன உய்த்துணர்ந்துகொள்க.

(வி-ரை) நச்சினார்க்கினியர் இந்நூற்பா இருவகைப் பிரிவுகளைக் கூறுவதாகக் கருதுகின்றார். தம் கருத்திற்கேற்ப நூற்பாவின் சொற்களைப் பலபடியாகக்கொண்டு கூட்டுகின்றார். இளம்பூரணர் இந்நூற்பாவிற்குக் காணும் பொருள் மிகச்சிறப்பு உடையது. நால் வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களையல்லாத தேவரது பூசையும் விழவும் முதலாயினவும் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய நிலத்தின் மக்களும் முறைமை யில் தப்பியவழித் தப்பாது அறம் நிறுத்துதல் காரணமாகவும் செய்யப்பட்ட ஒள்ளிய பொருள் ஆக்குதல் காரணமாகவும் பிரிவு உளதாம் என்பது அவர் உரையாகும். எனவே தேவரது பூசை முதலாயினவும் மக்களும் முறைமை தப்பியவழி தப்பாது அறம் நிறுத்துதல் காரணமாகவும், பொருள் ஆக்குதல் காரணமாகவும், பிரிவு உளதாம் என்பது இவர் கருத்தாம். சொற்களை வேண்டிய வாறு கொண்டு கூட்டுதல் இன்றி ஆற்றொழுக்காகவே பொருள் கண்ட இவருரை சிறப்புடையதாகும். தேவரது பூசை முதலியன தவறிய வழி அதனைக் காத்தற்குப் பிரியும் பிரிவைப் பின்வந்த நம்பியகப் பொருள் ஆசிரியர் அறப்புறம் காவல் என்பர். ஏனையதை நாடு காவல் என்பர். 'அறப்புறங்காவல் நாடுகாவல் எனச் சிறப்புடைக் காவல் கொற்றவர்க்குரித்தே' என்பது அவர்தம் நூற்பாவாகும்.

அலைபெற்று – கொடுங்கோன்மையினால் அலைக்கப்பெற்று. ஏனோர் என்பது வணிகரைக் குறித்தற்கு இந்நூற்பாவில் யாதொரு இயைபும் இன்று. படிமை–வடிவம்; துறந்தார் படிவத் தராகி என்புழிப்போல. இது 'ப்ரதிமா' என்னும் வடமொழித் திரிபு என்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் விரதம் எனப் பொருள் கண்டதோடு அமையாது அதுவணிகர்க்கு உரிய விரதம் என்றும் கூறியுள்ளார். இவ்வாறு உரைத்தற்கு யாதொரு இயைபுமின்று.

ஏதில்நாடு – அயல்நாடு. ஆறின்றி – நெறிமுறைமையின் அன்றி.

பொருள்வயிற் பிரிவுக்குரிய நால்வர்.

29. மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே.

இஃது எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்.) மேலோர் முறைமை—மேல் அதிகாரப்பட்டு நின்ற வாணிகர்க்கு ஓதிய அறந்தலைப் பிரியாப் பொருள் செயல் வகை; நால்வர்க்கும் உரித்து—அந்தணர்க்கும் அரசர்க்கும் இருவகை வேளாளர்க்கும் உரித்து என்றவாறு.

இதற்கு வாணிகர்க்கு வேதநூலுள் இழைத்த பொருண் முடிவானே இந்நால்வரும் பொருண்முடிப்பரெனில் பிரிவொன் றாகி மயங்கக் கூறலென்னும் குற்றம் தங்குமாகலின் அது கருத் தன்று; இந்நால்வருள் அந்தணர் ஓதலும் தூதும்பற்றிப் பொருண்முடித்தலும், அரசர் பகைவயிற் பிரிவு பற்றிப் பொருண்முடித்தலும், உயர்ந்த வேளாளர் பகைவயிற் பிரிவு பற்றிப் பொருண்முடித்தலும் உழுதுண்பார் வாணிகத்தால் பொருண்முடித்தலும் கருத்து.

இவற்றுள் வேள்விக்குப் பிரிந்து சடங்கிற்கு உறுப்பாகியும் அதற்குக் குரவனாகியும் நிற்றல் உரிமையின் ஆண்டு வேள்வி செய்தான் கொடுத்த பொருள்கோடல் வேண்டுதலானும் அறங் கருதித் தூதிற்பிரியினும் அவர் செய்த பூசனை கோடல்வேண்டும் ஆகலானும் அவை அந்தணர்க்குப் பொருள் வருவாயாயிற்று. வேள்விக்குப் பிரிதல் ஓதற்பிரிவின் பகுதியாயிற்று.

(எ - டு)

> "நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தா
> மஞ்சிய தாங்கே யணங்காகு மென்னுஞ்சொ
> லின்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
> புதுவது பன்னாளும் பாராட்ட யானு
> மிதுவொன் றுடைத்தென வெண்ணியதுதேர
> மாசிலவண் சேக்கை மணந்த புணர்ச்சியுட்
> பாயல்கொண் டென்றோட் கனவுவா ராய்கோற்
> றொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்

கடிமனை காத்தோம்ப வல்லுவள மகாலலா
விடுமருப் பியானை யிலங்குதேர்க் கோடு
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்றெஞ்
செய்பொருண் முற்று மளவென்று ராயிழாய்
தாமிடை கொண்ட ததுவாயிற் றம்மின்றி
யாமுயிர் வாழு மதுகை யிலமாயிற்
றொய்யி றுறந்தா ரவரெனத் தம்வயி
னொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று கொல்லென் னுயிர்.'' (கலி - 24)

இதனுள் 'நடுநின்று' என்றதனான் இரு பெரு வேந்தரையும் சந்து செய்வித்தற்கு யான் நடுவே நிற்பலென்றும், 'எஞ் செய் பொருள் முற்றுமள' வென்றதனான் அது முடித்தபின்னர் யாம் பெறுதற்குரியவாய் அவர் செய்யும் பூசனையாகிய பொருண் முடியு மளவுமென்றும், அந்தணன் பொருள்வயிற் பிரியக் கருதிக் கூறிய கூற்றினை அவன் தலைவி கூறியவாறுணர்க இதனுள் கடிமனைகாத் தென்றதனை இல்லறமாகவும், 'ஓம்ப' வென்றதனைச் செந்தீயோம்பவென்றும் கொள்க.

மேலோர் முறைமை ஏனோர்க்கு முரித்தே என்னுது நால்வர்க்கு முரித்தே என்றது முற்கூறிய வணிகரையொழிந்த இருவகை வேளாளரையும் கூட்டியென் றுணர்க. அவர் பொருள்வயிற் பிரிந்தனவும் சான்றோர் செய்யுட்களை நோக்கி உய்த்துணர்ந்துகொள்க. அவர்களுள் உழுதுண்பார்க்குக் கலத்திற்பிரிவும் உரித்து. ஏனையோர்க்குக் காலிற்பிரிவே உரித்தென் றுணர்க.

(வி - ரை) மேல் இருபத்தாறுவது நூற்பாவில் உயர்ந்தோர் என்றும், முப்பத்தோறுவது நூற்பாவில் உயர்ந்தோர்க்கு என்றும் கூறிய தொடர்களுக்கு இனவகையில் உயர்வு கொண்டு உரைகூறிய நச்சினார்க்கினியர், இந்நூற்பாவில் மேலோர் என்பதற்கு மேல் அதிகாரப்பட்டு நின்ற வணிகர் என உரைகாணுகின்றார். இவ்வாறு தாம் கொண்ட கருத்திற்கேற்ப உரைகாண்டல் இவர்தம் பழக்கமெனினும் நூலாசிரியர் கருத்து இதுவன்றும். மேலோர் ஆகிய தேவரது முறைமையை (விழவு, பூசை முதலாயின)

நிறுத்துதற்குப் பிரியும் பிரிவு நான்கு வருணத்தார்க்கும் உரித்து என இளம்பூரணர் கூறும் உரை நூலாசிரியர் கருத்தொடுபட்ட உரையாகும்.

'நெஞ்சு நடுக்குற' எனத் தொடங்கும் கலித்தொகைப் பாடல் ஒரு அந்தணத் துறவியின் கூற்றுஎனப் பொருள் கூறியிருப் பதும் பொருத்தமில் கூற்றேயாம். நடுநின்று - அருளொடும் அன்பொடும் பொருந்திய நடு நிலைமையில் நின்று. எம் செய் பொருள் முற்றும் அளவு - எம்மால் செய்யப்படும் பொருள் ஈட்டம் முற்றுப்பெறும் அளவும். கடிமனை காத்தோம்பல்-விளக்கம் பொருந்திய இல்லறத்தைப் பாதுகாத்துப் போற்றல். இவ்வாறு அத்தொடர்களுக்குப் பொருள் காண்டலே பொருத்தமாகும்.

நால்வர் என்பதற்கு இயல்பாக உரைகாண இயலாது வேளாளரை இருவகையாகப் பிரித்துக் கூட்டலும் பொருத்தமில் கூற்றேயாம். (29)

அரசர் ஏவும் திறத்திற்கு உரியார்

30. மன்னர் பாங்கின் பின்னோ ராகுப.

இஃது இறுதிநின்ற வேளாளர்க்கு இன்னுமோர் பிரிவு விகற்பங் கூறுகின்றது.

(இ - ள்.) மன்னர் பாங்கின் - அரசரைச் சார்ந்து வாழும் பக்கத்தராகி நிற்றல் காரணமாக; பின்னோர் ஆகுப - பின்னோ ரெனப்பட்ட வேளாளர் வரையறையின்றி வேந்தன் ஏவிய திற மெல்லாவற்றினும் பிரிதற்கு ஆக்கமுடையர் ஆகுப என்றவாறு.

மன்னர் பின்னோரென்ற பன்மையான் முடியுடையோரும், முடியில்லாதோரும், உழுவித்து உண்போரும், உழுது உண் போருமென மன்னரும் வேளாளரும் பலரென்றார்.

'வேளாண் மாந்தர்க்கு' (80) வேந்துவிடுதொழிலில் (81) என்னும் மரபியற் சூத்திரங்களான் வேளாளர் இருவகைய ரென்ப.

அரசர் ஏவும் திறமாவன பகைவர்மேலும் நாடுகாத்தன் மேலும் சந்து செய்வித்தன் மேலும் பொருள்வருவாய் மேலுமாம்.

அவருள் உழுவித்துண்போர் மண்டிலமாக்களும் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலும் வல்லமும் கிழாரும் முதலிய பதியிற்றோன்றி வேளெனவும் அரசெனவும் உரிமையெய்தினோரும், பாண்டிநாட்டுக் காவிதிப்பட்டம் எய்தினோரும் குறுமுடிக் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளராகுப 'இருங்கோ வேண்மா னருங்கடிப் பிடவூர்'' (புறம் - 365), எனவும், ''ஆலஞ் சேரி மயிந்த னூருண்கேணிநீ ரொப்போன்'' எனவும் சான்றோர் செய்யுள் செய்தார். உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி அழுந்தூர்வேளிடை மகட்கோடலும், அவன் மகனாகிய கரிகால் பெருவளத்தான் நாங்கூர்வேளிடை மகட்கோடலும் கூறுவார்.

இதனானே,

> ''பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
> குடிபுறந் தருகுவை யாயின்'' (புறநா - 35)

எனவும்,

> ''ஞாலத்துக், கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
> குடிபுறந் தருநர் பார மோம்பி'' (பதிற்றுப் - 13)

எனவுஞ் சான்றோர் கூறியவாறுணர்க.

(எ - டு)

> ''வேந்தன் குறைமொழிந்து வேண்டத் தலைப்பிரிந்தார்
> தாந்தங் குறிப்பின ரல்லரா-லேந்திழாய் .
> தண்பனி வாரக் கலங்கல் பிரிவரோ
> தண்பனி நாளே தனித்து''

எனவரும்.

(வி - ரை) மன்னர்க்குரிய பக்கமாகிய காவற்பிரிவிற்கு வணிகரும் வோாளரும் உரியர் என இளம்பூரணர் இந்நூற்பாவிற்கு உரை காண்பர். (30)

நால்வகை வருணத்தார்க்கும் உரிய நூல்கள்

31. உயர்ந்தோர்க் குரிய வோத்தி னான.

இது நான்கு வருணத்தோர்க்கும் எய்தாத தெய்துவித்தது.

(இ - ள்.) ஓத்தின் ஆன - வேதத்தினால் பிறந்த வடநூல்களும் தமிழ் நூல்களும்; உயர்ந்தோர்க்கு உரிய - அந்தணர் அரசர் வணிகர்க்கும், உயர்ந்த வேளாளர்க்கும் உரிய என்றவாறு.

அவை சமயநூல்களுள் ஒன்றற்கொன்று மாறுபாடு கூறும் தருக்கநூல்களும் தருமநூல்களும் சோதிடமும் வியாகரணம் முதலியனவும், அகத்தியம் முதலாகத் தோன்றிய தமிழ்நூல்களுமாம். வேதம்தோன்றிய பின்னர் அது கூறியபொருள்களை இவையும் ஆராய்தலின் ஓத்தினானவென்று அவற்றிற்குப் பெயர் கூறினார்; ஓத்தென்பது வேதத்தையே யாதலின்.

(வி-ரை) மேல் ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன எனபதற்கு அந்தணர் முதலிய மூவகை வருணத்தாரும் உரியர் என்றார். ஈண்டு வடநூல்களையும் தமிழ் நூல்களையும் ஆய்ந்து அறிதற்குரிய தகுதி உயர்ந் தோர்க்குரிய என்கின்றார். ஓதற்பிரிவிற்கு மூவகை வருணத்தாரும் உரியர் என வரையறுத்த நச்சினார்க்கினியர், ஈண்டு இந்நூல்களை ஆராய்தற்கு நால் வரும் உரியர் என்கின்றார். இது ஆராய்தற்குரியது. இளம்பூரணர் ஓதலும் தூதும் அந்தணர்க்கும் அரசர்க்கும் உரிய என மேற் (26) கூறி, ஈண்டு ஓதற்பிரிவு வணிகர்க்கும் உரித்து என்கின்றார். இவ்விரு உரையாசிரியர்களும் ஓத்து என்பதற்கு வேதம் என்றே உரைகாண்கின்றனர். இது பொருந்துவதன்றாம். ஓத்து என்பது பொதுவாக நூலைக் குறிக்கும். (31)

வேந்தன் தொழில் வேளிர்க்கும் உரித்து.

32. வேந்துவினை யியற்கை வேந்தனின்[1] ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்திடன் உடைத்தே.

---

1 வேந்தன் என்பது இளம்பூரணர் பாடம்,

இது மலய மாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன்றொழில் உரித்தென்கிறது.

(இ - ள்.) வேந்து வினை இயற்கை-முடியுடை வேந்தர்க் குரிய தொழிலாகிய இலக்கணங்கள்; வேந்தனின் ஒரீஇய ஏனோர் மருங்கினும் எய்து இடன் உடைத்து - அம்முடியுடை வேந்தரை யொழிந்த குறுநிலமன்னரிடத்தும் பொருந்தும் இடனுடையது என்றவாறு.

அவர்க்குரிய இலக்கணமாவன், தன் பகைவயிற் றனே சேறலும், தான் திறைபெற்ற நாடுகாக்கப் பிரிதலும், மன்னர் பாங்கிற் பின்னோரெனப்பட்ட வேளாளரை ஏவிக்கொள்ளும் சிறப்புமாம்.

(எ - டு).

"விலங்கிருஞ் சிமயக் குன்றத் தும்பர்
வேறுபன் மொழிய தேஎ முன்னி
வினைநசைஇப் பரிக்கும் உரன்மலி நெஞ்சமொடு
புனைமா ணெஃகம் வலவயி னேந்திச்
செலன்மாண் புற்ற" (அகம் - 215)

என்புழி வேறு பன்மொழிய தேஎத்தைக் கொள்ளக் கருதிப் போர்த்தொழிலைச் செலுத்தும் உரன்மிக்க நெஞ்ச மென்றலின், இது குறுநிலமன்னன் தன்பகைவயின் நாடு கொள்ளச் சென்ற தாம்; வேந்தனெனப் பெயர் கூறாமையின். 'பசைபடு பச்சை நெய்தோய்த்து" என்னும் அகப்பாட்டினுண் (243) "முடிந்தன் றம்மநா முன்னிய வினையே" என்றலின் தானே குறுநிலமன்னன் சென்றதாம். ஏனைய வந்துழிக் காண்க.

(வி-ரை) மலையமாதவன்-அகத்தியன். நிலங்கடந்த நெடுமுடி அண்ணல் - திருமால். எழுத்ததிகாரத்தில் அண்ணல் வழிக்கண் என இருத்தலின் இங்கும் அதுவே பாடமாகக் கொள்ளப்பட்டது. நரபதியர் - அரசர். எனவே அகத்தியர் தென்னாட்டுக்கு வருங்கால் திருமால் வழிவந்த அரசர்களையும் பதினெண் வகைக்குடிப்பிறந்த வேளிர்களையும் கொண்டு வந்தார் என்பது கருத்தாகின்றது. இதன் உண்மை ஆராய்தற்குரியது.

நிலங்கடந்த நெடுமுடி அண்ணல் திருமால் அன்று: ஓர் அரசன் ஆவன் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. 'நிலங்கடந்த' என்பதை நிலங்கள் தந்த ,எனவும் பிரிப்பர்.

வேந்துவினை இயற்கையாவது தூது என்றும், ஏனோர் என்பார் வணிகரும் வேளாளரும் ஆவர் என்றும், இடனுடைத்து என்றதனால் அவர் தூதாம் காலம் அமைச்சராகிய வழியே நிகழும் என்றும் இளம்பூரணர் உரைப்பர். மன்னர் பாங்கில் பின்னோர் ஆகுப என்னும் நூற்பாவிற்கும் இந்நூற்பாவிற்கும் இளம்பூரணர் உரைத்த உரையை முழுமையாகத்தழுவிய நம்பியகப் பொருள் ஆசிரியர்,

சிறப்புப்பெயர் பெறின் செப்பிய இரண்டும்
உறற்குரி மரபின ஒழிந்தோர் இருவர்க்கும்

என யாத்தனர்.

விலங்கும் - குறிக்கிட்டுக் கிடக்கும். இரும் சிமயம் - பெரிய சிகரம். வேறுபல் மொழி. தமிழல்லாத பிறமொழிகள். தேம் - நாடு. வினை நசைஇ பரிக்கும் - போர்த் தொழில் விரும்பிச் செலுத்தும். எஃகம் - வேல். (32)

வேளிர்க்குப் பொருள்வயிற் பிரிதலும் உரித்து

33. [1]பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே
உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான.

இஃது அக் குறுநிலமன்னர்க்குப் பொருள்வயிற் பிரிதலும் ஓதற் பிரிதலும் உரிய வென்கின்றது.

(இ - ள்) பொருள் வயினும் - தமக்குரிய திறையாகப் பெறும் பொருளிடத்தும்; உயர்ந்தோர் ஒழுக்கத்துக்கு ஆன பொருள் வயினும் - உயர்ந்த நால்வகை வருணத்தார்க்குரிய ஒழுக்கத்திலேயான ஓத்திடத்தும்; பிரிதல் அவர்வயின் உரித்து - பிரிந்து சேறல் அக் குறுநிலமன்னரிடத்து உரித்து என்றவாறு.

---

1 இச்சூத்திரத்தை இரண்டடியாகப் பிரித்து இரு சூத்திரமாகக் கொள்வர் இளம்பூரணர்.

பொருள்வயிற்பிரிதல் பொருள்தேடுகின்ற இடத்தின்கண்ணென விண்செய்யிடமாய் நின்றது. 'உயர்ந்தோர்க் குரிய வோத்தினன' (தொல் - பொருள்: 36) என்று அவ்வோத்தினை. அவரொழுக்கத்திலேயான பொருளென்றார்; அச் சூத்திரத்தில் கூறிய ஓதற்பிரிவே இவர்க்கும் உரித்தென்று கொள்க இவற்றுக்குச் சான்றோர் செய்யுட்கள் உள்வழிப் பொருள்படுமாறு உய்த்துணர்ந்து கொள்க.

(வி - ரை) குறுநில மன்னர்க்குப் பொருள் வயிற் பிரிதலும், வேதம்அல்லாக் கல்வியான ஓதற்குப் பிரிதலும் உரிய என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும். எனினும் இது பொருந்துவதன்று. இளம்பூரணர் இந்நூற்பாவில் ஒவ்வொரு வரியையும் ஒவ்வொரு நூற்பாவாகக் கொண்டு பின்வருமாறு உரை காண்பர். அதுவே பொருத்தமுடைத்தாம். அவர் உரை வருமாறு:- பொருள்வயின் பிரிதலும் அவர் வயின் உரித்து - பொருள்வயின் பிரிவும் மேற் சொல்லப்பட்ட வணிகர் வேளார்க்கு உரியதாகும். உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான் - உயர்ந்தோராகிய அந்தணர் பொருள் வயிற் பிரியுங்காலத்து ஒழுக்கத்தானே பிரிப.

இதனாற் சொல்லியது, வணிகர்க்கும் வேளாளர்க்கும் வாணிகம் முதலாயின பொருள் நிமித்தம் ஆகியவாறு போல அந்தணர்க்கு இவை பொருள் நிமித்தம் ஆகா என்பதூஉம், அவர்க்கு இயற்கை யொழுக்கமாகிய ஆசாரமும், செயற்கை யொழுக்கமாகிய கல்வியுமே பொருட்குக் காரணமாம் என்பதூஉம் என்றவாறு. (33)

தலைவியோடு பிரிதற்குஆகாத பிரிவுகள்.

34. முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை.

இது முற்கூறிய ஓதல் பகை தூது காவல் பொருள் என்ற ஐந்தனுள் பகையும் காவலும் ஒழிந்தவற்றிற்கு ஓரிலக்கணம் கூறுகின்றது.

(இ - ள்.) ஓதலும் தூதும் பொருளுமாகிய மூன்று நீர்மையான் செல்லும் செலவு தலைவியோடு கூடச் சேறலின்று என்றவாறு.

தலைவியை உடன்கொண்டு செல்லாமை முற்கூறிய உதாரணங்களிலும் ஒழிந்த சான்றோர் செய்யுட்களுள்ளும் காண்க. இதுவே ஆசிரியர்க்குக் கருத்தாதல் தலைவியோடுகூடச் சென்றாராகச் சான்றோர் புலனெறிவழக்கம் செய்யாமையான் உணர்க.

இனித், தலைவி கற்பினுள் பிரிவாற்றாது எம்மையும் உடன்கொண்டு சென்மினெனக் கூறுவனவும் தோழி கூறுவனவும் செலவழுங்குவித்தற்குக் கூறுவனவென்று உணர்க. அக்கூற்றுத் தலைவன் மரபு அன்றென்று மறுப்பன 'மரபுநிலை திரியா' (தொல்-பொருள் - 45) என்பதனுள் அமைந்தது.

இனி, இச் சூத்திரத்திற்குப், 'பொருள்வயிற் பிரிவின்கண் கலத்திற்பிரிவு தலைவியுடன் சேறலில்லை; எனவே, காலிற் பிரிவு தலைவியுடன் சேறல் உண்டு என்று பொருள் கூறுவார்க்குச் சான்றோர் செய்த புலனெறிவழக்கம் இன்மை உணர்க. இனி, உடன்கொண்டு போகுழிக் கலத்திற் பிரிவின்று; காலிற்பிரிவே யுளது என்பாரும் உளர்.

(வி-ரை) முந்நீர்-மூன்றுநீர்மை: ஓதல் தூது பொருள் ஆகிய மூன்று நீர்மை என உரை காணுகின்றார் நச்சினார்க்கினியர். முந்நீர்-கடல். வழக்கம் - அதனிற் செல்லும் செலவு. எனவே கலத்திற் பிரிவு என்பதாயிற்று. எனவே தலைமகளுடன் கலத்திற் பிரிவின்று காலிற் பிரிவேயுளதாம் எனப்பொருள் காண்பர் இளம்பூரணர். இதனையே நச்சினார்க்கினியர் எடுத்துக் கூறி இதற்குச் சான்றோர் செய்த புலனெறி வழக்கம் இன்மையுணர்க எனக்கூறி மறுக்கின்றார். எனினும் சிலப்பதிகாரத்தில் கோவலன் உலந்த பொருள் ஈட்டுதலுற்றேன் எனப்பொருள்வயிற் பிரிவு கூறி கண்ணகியையும் உடன் கொண்டு சென்றமை கூறப்படுகின்றது. ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் ஆகிய மூன்று நீரும் உடைமைமையால் முந்நீர் என்றும், ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய மூன்று நீர்மையும் உடைமையால் முந்நீர் என்றும் கடல் பெயர் பெற்றது என்பர். அடியார்க்கு நல்லார். நச்சினார்க்கினியர் மூன்றாவது உரையாகக் கூறுவது யாருடைய் கருத்தெனத் தெரிதற்கில்லை. இரண்டாவது உரை கற்பில் பிரியும் பிரிவாகும். மூன்றாவது உரை களவில் பிரியும் பிரிவாகும். உடன் கொண்டு போகுழி - தலைமகளைக் களவுக் காலத்து உடன் கொணடு போகுங்கால். (34)

மடல் ஏறுப் பெண்ணின் பெருந்தகைமை

**35. எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான.**

இஃது இத்துணையும் பாலைக்கு உரிய இலக்கணம் கூறி, மகடூஉ அதிகாரப்படுதலின் பெருந்திணைக்கு உரியதோர் இலக்கணம் கூறுகின்றது.

(இ - ள்) எத்திணை மருங்கினும் - கைக்கிளைமுதல் பெருந்திணையிறுவாய் ஏழன்கண்ணும்; மகடூஉ மடல்மேல் நெறிமை - தலைவி மடலேறினளாகக் கூறும் புலனெறிவழக்கம்; பொற்புடைமை இன்மையான - பொலிவுடைமையின்று; ஆதலான் அது கூறப்படாது எ - று.

> "கடலன்ன காம முழந்து மடலேறாப்
> பெண்ணிற் பெருந்தக்க தில்." (குறள் - 1137)

என வரும்.

> "கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
> மடலூரார் மைந்தர்மே லென்ப—மடலூர்தல்
> காட்டுகேன் வம்மின் கலிவஞ்சி யார்கோமான்
> வேட்டமா மேல்கொண்ட போழ்து."

என்றுராலோவெனின், இது மடலேற்றன்று; ஏறுவலெனக் கூறியதுணையேயாம்.

(வி-ரை) எத்திணை மருங்கினும் - எல்லாக்குலத்தினிடத்தும் என உரைகாண்பர் இளம்பூரணர்.

மடல் ஏறு - மடல்மா ஏறுத. வேட்டமா - விரும்பிய குதிரை. (35)

உடன் போயவழி நற்றாய்க்குரிய கிளவிகள்

**36. தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்**

நன்மை தீமை யச்சம் சார்தலென்
றன்ன பிறவும் அவற்றெரடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி யுரிய.

இது பிரிவிலக்கணம் அதிகாரப்பட்டு வருதலிற் கொண்டு தலைக்கழிந்துழி வருந்துவோர் தாயர் என்பதூஉம் அதனது பகுதியும் கூறுகின்றது.

(இ - ள்.) போகிய திறத்து நற்றாய் - தலைவியும் தலைவனும் உடன்போய காலத்து அம்மகள் பயந்த நற்றாய், தன்னும் அவனும் அவளும் சுட்டிக் காலம் மூன்றுடன் மன்னும் நன்மை தீமை முன்னிய விளக்கிப் புலம்பலும் - தன்னையும் தலைவனையும் தன் மகளையும் குறித்துக் காலம் மூன்றுடன் நிலைபெற்று வரும் நல்வினை தீவினைக்குரிய காரியங்களைத் தன் நெஞ்சிற்கு விளக்கி வருந்திக் கூறுதலும்; அச்சம் சார்தல் என்று அன்ன பிறவும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம் அவற்றெரடு தொகைஇப் புலம்பலும் - அச்சம் சார்தலென்று கூறப்பட்டவற்றையும் அவை போல்வன பிறவற்றையும் பல்லி முதலியசொல் நற்சொல் தெய்வம் கட்டினும் கழங்கினும் இட்டு உரைக்கும் அத்தெய்வப் பகுதியென்றவற்றேரடு கூட்டி வருந்திக் கூறலும்; தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும் புலம்பலும் - தோழியது ஆற்றாமையைக் கண்டுழியும் தலைவியைத் தேடிப்போய்க் காணாது வந்தாரைக் கண்டுழியும் வருந்திக் கூறலும்; அவ்வழி ஆகிய கிளவியும் - அவ்வுடன்போக்கிடத்தைச் சான்றேர் புலனெறி வழக்கம் செய்தற்குரியவாய் வரும் கிளவிகளும்; உரிய - உடன் போகிய திறத்து உரிய எ - று.

நற்றாய் புலம்பலும் கிளவியும் போகியதிறத்து உரிய வென முடிக்க. என்றென்பதனையும் புலம்பலென்பதனையும் யாண்டும் கூட்டுக. இங்ஙனம் உடன்போக்கி வருந்துதல் நோக்கித், தாயை முற்கூறித் தலைவன் கொண்டுபோயினமை நோக்கித் தலைவி

முன்னர் அவனைக் கூறினர். அவளும் அவனும் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

(எ - டு)

"மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலும்
உயர்நெடுங் குன்றம் படும்மழை தலைஇச்
சுரநனி யினிய வாகுக தில்ல
அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே." (ஐங் - 371)

இதனுள் 'அறநெறி இதுவெனத் தெளிந்த என்மக' ளென்று தாய் கூறவே உடன்போக்குத் தருமமென்று மகிழ்ந்து கூறி அங்ஙனம் கூட்டிய நல்வினையைத் தன் நெஞ்சிற்கு விளக்கிப் புலம்பியவாறு காண்க.

"நாடொறுங் கலுழு மென்னினு மிடைநின்று
காடுபடு தீயிற் கனலியர் மாதோ
நல்வினை நெடுநகர் கல்லெனக் கலங்கப்
பூப்புரை யுண்கண் மடவரற்
போக்கிய புணர்ந்த வறனில் பாலே". (ஐங் - 376)

இது தீவினையை வெகுண்டு புலம்பியவாறு காண்க. பால் - பழவினை. இவை ஐங்குறுநூறு.

இனி அச்சம் இருவகைத்து; தலைவி ஆண்டை விலங்கும் புள்ளும் ஆறலைப்போரும் முதலிய கண்டு அஞ்சும் அச்சமும் தந்தை தன்னையர் பின்சென்றவர் இஃதறமென்னது தீங்கு செய்கின்றரோ என்று அஞ்சும் அச்சமுமென.

"நினைத்தொறுங் கலுழு மிடும்பை யெய்துக
புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை
மான்பிணை யணைதர வாண்குரல் விளிக்கும்
வெஞ்சுர மென்மக ளுய்த்த
வம்பமை வல்வில் விடலை தாயே." (ஐங் - 373)

இதுவும் ஐங்குறுநூறு

"கேளாய் வாழியோ மகளைநின் தோழி
திருநகர் வரைப்பகம் புலம்ப அவனொடு
பெருமலை இறந்தது நோவேன் நோவல்

கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
முடங்குதாள் உதைத்த பொலங்கெழு பூழி
பெரும்புலர் விடியல் விரிந்துவெயில் எறிப்பக்
கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல்
சிறுபுன் பெடையொடு குடையும் ஆங்கண்
அஞ்சுவரத் தகுந கானம் நீந்திக்
கன்றுகா ணாதுபுன் கண்ண செவிசாய்த்து
மன்றுநிறை பைதல் கூரப் பலவுடன்
கறவை தந்த கடுங்கான் மறவர்
கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ
முதுவாய்ப் பெண்டின் செதுகால் குரம்பை
மடமயி லன்னஎன் நடைமெலி பேதை
தோள்துணை யாகத் துயிற்றத் துஞ்சாள்
வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கண்
சேக்கோள் அறையுந் தண்ணுமை
கேட்குநள் கொல்லெனக் கலுழுமென் னெஞ்சே"

(அகம் - 63)

இவை அச்சம் கூறின.

தந்தை தன்னையர் சென்றாரென்று சான்றோர் செய்யுள் செய்திலர்; அது புலனெறிவழக்கம் அன்மையின்.

இனிச் சார்தலும் இருவகைத்து; தலைவி சென்று சாரும் இடனும், மீண்டு வந்து சாரும் இடனுமென.

(எ - டு)

"எம்வெங் காமம் இயைவ தாயின்
மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவின் துளுநாட் டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பிற்
செறிந்த சேரிச் செம்மல் மூதூர்
அறிந்த மாக்கட் டாகுக தில்ல
தோழி மாரும் யானும் புலம்பச்

சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி யன்ன கடியுடை வியன்நகர்ச்
செறிந்த காப்பிகந் தவனொடு போகி
அத்த இருப்பை ஆர்கழல் புதுப்பூத்
துய்த்த வாய துகள்நிலம் பரக்கக்
கொன்றை யஞ்சினைக் குழற்பழங் கொழுதி
வன்கை யெண்கின் வயநிரை பரக்கும்
இன்றுணைப் பிரிந்த கொள்கையொ டொராங்குக்
குன்ற வேயில் திரண்டஎன்
மென்றோள் அஞ்ஞை சென்ற ஆறே". (அகம் – 15)

"அருஞ்சுரம் இறந்தவென் பெருந்தோட் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்து மாலை நாற்றி
உவந்தினி தயரு மென்ப யானு
மான்பிணை நோக்கின் மடநல் லாளை
யீன்ற நட்பிற் கருளான் ஆயினும்
இன்னகை முறுவல் ஏழையைப் பன்னாட்
கூந்தல் வாரி நுசுப்பிவர்ந் தோம்பிய
நலம்புனை யுதவியும் உடையன் மன்னே
அஃதறி கிற்பினோ நன்றுமற் றில்ல
அறுவை தோயும் ஒருபெருங் குடுமிச்
சிறுபை நாற்றிய பஃறலைக் கொடுங்கோல்
ஆகுவ தறியும் முதுவாய் வேல
கூறுக மாதோநின் கழங்கின் றிட்பம்
மாறுது வருபனி கலுழுங் கங்குலின்
ஆனாது துயருமென் கண்ணினிது படீஇயர்
எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை உய்க்குமோ யாதவன் குறிப்பே."
(அகம் – 195)

இவ் வகைப்பாட்டு இரண்டும் தெய்வத்தொடு படுத்துப் புலம்பியது.

'இல்லெழும் வயலை யிலையு மூழ்த்தன
செல்வ மாக்களிற் செல்லு மஃகின
மயிலடி யிலைய மாக்குரல் நொச்சிப்
பயிலிணர் நறும்பொழிற் பாவையுந் தமியள்
ஏதி லாளன் பொய்ப்பப் பொய்மருண்டு
பேதை போயினள் பிறங்குமலை யிறந்தெனை
மான்ற மாலை மனையொடு புலம்ப
ஈன்ற தாயு மிடும்பைய ளெனநினைந்து
அங்கண் வானத் தகடூர்ந்து திரிதருந்
திங்களங் கடவுள் தெளித்துநீ பெயர்த்தரிற்
கடிமலர்க் கொன்றைக் காவலன் சூடிய
குடுமியஞ் செல்வங் குன்றினுங் குன்றாய்
தண்பொழில் கவித்த தமனிய வெண்குடை
ஒண்புகழ்த் தந்தைக் குறுதி வேண்டித்
தயங்குநடை முதுமை தாங்கித் தான்றனி
யியங்குநடை யிளமை பின்புற் றீந்த
மான்றே ரண்ண ரேன்றுபுகழ் போலத்
துளங்கிரு ளிரவினு மன்றி
விளங்குவை மன்னுலிவ் வியலிடத் தானே."
(தகடூர் யாத்திரை.)

இது தெய்வத்தை நோக்கிக் கூறியது:

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
யன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்தினை வல்சி
பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேல் விடலையோ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே." (ஐங்குறு-391

இவ் வைங்குறுநூறு நிமித்தத்தொடுபடுத்துப் புலம்பியது நற்சொல்லொடுபடுத்தன வந்துழிக் காண்க.

இனி 'அன்ன பிறவுமென்றதனால்'

"ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளாள்
வான்தோய் இஞ்சி நன்னகர் புலம்பத்

தனிமணி இரட்டுந் தாளுடைக் கடிகை
நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்
முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிபடுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரந்
துணிந்துபிறள் ஆயினள் ஆயினும் அணிந்தணிந்
தார்வ நெஞ்சமே டாய்நலன் அளைஇத்தன்
மார்பு துணையாகத் துயிற்றுக தில்ல
துஞ்சா முழவிற் கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கு
நெறியிருங் கதுப்பினென் பேதைக்
கறியாத் தேஎத் தாற்றிய துணையே." (அகம்-35)

இவ்வகம் தலைவன் மிகவும் அன்பு செய்கவென்று தெய்வத்திற்குப் பராஅயது.

"நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை
யியம்புணர் தூம்பி னுயிர்க்கு மத்தஞ்
சென்றனண் மன்றவென் மகளே
பந்தும் பாவையுங் கழங்குமெமக் கொழித்தே."
(ஐங்குறு-377)

இவ் வைங்குறுநூறு யாம் இவற்றைக்கண்டு வருந்த இவற்றை எமக்கு ஒழித்துத் தான் நீரிலா ஆரிடைப் போயினளென்றது.

"என்னு முள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளையோ
டழுங்கன் மூதூ ரலரெழச்
செழும்பல் குன்ற மிறந்தவென் மகளே."
(ஐங்குறு - 372)

இஃது என்னை நினைப்பாளோவென்றது.

இன்னும் இதனுனே செய்யுட்களுள் இவற்றின் வேறுபட வருவனவெல்லாம் அமைத்துக் கொள்க.

“செல்லிய முயலிற் பாஅய சிறகர்
வாவ லுகக்கு மாலையாம் புலம்பப்
போகிய வவட்கோ நோவேன் றேமொழித்
துணையிலள் கலுழு நெஞ்சின்
இணைபே ருண்கி ணிவட்குநோ வதுவே.” (ஐங்குறு-378)

இது தோழி தேளத்துப் புலம்பல். இஃது ஐங்குறுநூறு தோழி தேளத்துமெனப் பொதுப்படக் கூறியவதனுல் தோழியை வெகுண்டு கூறுவனவும் கொள்க.

“வரியணி பந்தும் வாடிய வயலையு
மயிலடி யன்ன மாக்குர னொச்சியுங்
கடியுடை வியனகர்க் காண்வரத் தோன்றத்
தமியேன் கண்டதண் டலையுந் தெறுவர
நோயா கின்றே மகளை நின்றோழி
யெரிசினந் தணிந்த இலையி லஞ்சினை
வரிப்புறப் புறவின் புலம்புகொ டெள்விளி
யுருப்பவி ரமையத் தமர்ப்பன ளோக்கி
யிலங்கிலை வெள்வேல் விடலையை
விலங்குமலை யாரிடை நலியுங்கொ லெனவே”.
(நற்றிணை - 305)

என வரும்.

“இதுவென் பாவைக் கினியநன் பாவை
யிதுவென் பைங்கிளி யெடுத்த பைங்கிளி
யிதுவென் பூவைக் கினியசொற் பூவையென்
றலம்வரு நோக்கி னலம்வருஞ் சுடர்நுதல்
காண்டொறுங் காண்டொறுங் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணோளே.” (ஐங்குறு - 375)

இவ் வைங்குறுநூறு தேடிக் காணுது வந்தாரைக் கண்டு புலம்பியது.

இனி அவ்வழியாகிய கிளவிகளுள்சில வருமாறு:-

"ஒருமக ளுடையேன் மன்னே யவளுஞ்
செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளையொடு
பெருமலை யருஞ்சுர நெருநற் சென்றனள்
இனியே,
தாங்குநி னவல மென்றனி ரதுமற்
றியாங்கன மொல்லுமோ வறிவுடை யீரே
யுள்ளி னுள்ளம் வேமே யுண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னவென்
அணியியற் குறுமக ளாடிய
மணியேர் நொச்சியுந் தெற்றியுங் கண்டே."

(நற்றிணை - 174)

இந் நற்றிணை தெருட்டும் அயலில்லாட்டியர்க் குரைத்தது.

"கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டெனக்
களிறுவிளிப் படுத்த கம்பலை வெரீஇ
ஒய்யென வெழுந்த செவ்வாய்க் குழவி
தாதெரு மருகின் மூதா ராங்கண்
எருமை நல்லான் பெருமுலை மாந்தும்
நாடுபல இறந்த நன்ன ராட்டிக்கு
ஆயமும் அணியிழந் தழுங்கின்று தாயும்
இன்றோள் தாராய் இறீஇயரென் னுயிரெனக்
கண்ணு நுதலு நீவித் தண்ணெனத்
தடவுநிலை நொச்சி வரிநிழ லசைஇத்
தாழிக் குவளை வாடுமலர் சூடித்
தருமணற் கிடந்த பாவையென்
அருமக ளேயென முயங்கின ளழுமே." (அகம் - 165)

இம் மணிமிடை பவளத்துத் தாய் நிலையும் ஆயத்து நிலையும் கண்டோர் கூறியவா றுணர்க.

"மாண்பில் கொள்கை யொடு மயங்குதுயர் செய்த
வன்பி லறனு மருளிற்று மன்ற
வெஞ்சுர மிறந்த அஞ்சி லோதி

பெருமட மான்பிணை யலைத்த
சிறுநுதற் குறுமகட் காட்டிய வம்மே.'' (ஐங்குறு-394)

இவ் வைங்குறுநூறு தலைவன் மீண்டு வந்துழித் தாய் சுற்றத்தார்க்குக் காட்டியது.

''நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினு
மெம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்
சொல்லி னெவனோ மற்றே வென்வேன்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே'' (ஐங்குறு-399)

இவ் வைங்குறுநூறு தலைவன் மீண்டு தலைவியைத் தன் மனைக்கண் கொண்டுவந்துழி அவன் தாய் சிலம்புகழி நோன்பு செய்கின்றாளெனக் கேட்ட நற்றாய் ஆண்டுநின்றும் வந்தார்க்குக் கூறியது.

இன்னும் சான்றோர் செய்யுட்களுள். வேறுபட வருவன வெல்லாம் இதனான் அமைக்க.

(வி - ரை) முன்னிய காலம் மூன்றுடன் விளக்கலாவது முன்பு இத்தன்மையளாயினாள், இப்பொழுது இத்தன்மையளாகா நின்றாள், மேல் இன்னாள் ஆகுவல் எனமூன்று காலமும் ஒருங்கு தோற்றுவித்துப் புலம்புதல் என இளம்பூரணர் உரைகாண்பர். நிமித்தம் - பல்லி முதலாயின ஒலிப்பது கொண்டு மேல் வருவனவற்றை அறிதல். மொழிப்பொருள் - பிறர் தம்முள் கூறும் மொழிப் பொருளை நிமித்தமாகக் கோடல்; இதனை விரிச்சி அல்லது நற்சொற்கேட்டல் என்பர். தெய்வம்-உலகினுள் வாழும் இயக்கர் முதலாயினார் ஆவேசித்துக் கூறும் சொல் என்பர் இளம்பூரணர்.

நன்மை தீமை அச்சம் - தனக்கும் அவர்க்கும் (தலைவன் தலைவி) உளதாகிய நன்மையும் தீமையும் அச்சமும் என உரை காண்பர் இளம்பூரணர். சார்தல் - அவள் தன்னைவந்து சார்தல் என்பர் இளம்பூரணர்.

மள்ளர்கொட்டின் - வீரர்தம் பறை முழக்கினால். மஞ்ஞை - மயில். படுமழை தழீஇ - தாழ்ந்த மேகங்கள் நீரைப்பெய்து. சுரம் - பாலைநிலம்.

கலுழும் - கலங்கும். கனலியர் - வெப்பம் பொருந்துக. அறனில்பால் - அறத்தன்மைக்கு மாறுய ஊழ். ஊழ்கனலியர் எனக்கூட்டுக.

புலிக் கோற் பிழைத்த - புலி கொல்லுதலின்றும் தப்பிய. கவைக்கோடு - கவர்த்த கொம்பு. வம்பு - புதுமை. விடலைதாய் - தலைவனின் தாய்.

மகளை என்பது மகளே என்னும் பொருள்பட நின்றது. ஐ சாரியையாம். புலம்ப - தனிப்ப. முடங்குதாள் - வளைந்த அடி பைதல் - துன்பம். செதுகால் குரம்பை - சேர்ந்த கால்களையுடைய குடில். சேகோள் - ஆனிரையைக் கொள்வதற்காக. நின்தோழி பெருமலை இறந்தது நோகேன் கள்வர் சேகோள் அறையும் தண்ணுமை கேட்குநள்கொல் என நெஞ்சு கலுழும் எனக் கூட்டுக.

எம்பெரு காமம் - எமது மிக்க விருப்பம்

பாகல் - பாகற்பழம். மாக்கட்கு - மக்களையுடையது. சூழி - நெற்றிப்பட்டம். பாழி - நன்னனுக்குரிய ஊர். துய்த்தவாய் - உண்ட வாயையுடையவாய். எண்கு - கரடி. அவள் சென்றவ்ழி பழகிய மாக்களையுடையதாகுக எனக் கூட்டுக. இஞ்சி - மதில் பூவல் - செம்மண். (36)

உடன்போயவழித் தேடிச்செல்லும் தாயர்.

37. ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்) ஏமப் பேர்ஊர்ச் சேரியும் சுரத்தும் — பதியெழு வறியாப் பேரூரிற் றெருவின்கண்ணும் அருவழிக்கண்ணும்; தாமே செல்லும் தாயரும் உளர் — தந்தையும் தன்னையரும் உணரா முன்னம் எதிர்ப்பட்டு மீட்டற்குத் தாமே போகும் தாயரும் உளர் என்றவாறு.

உம்மை எண்ணும்மை. தாயரெனப் பன்மை கூறித் தாமே யெனப் பிரித்ததனாற் சேரிக்கு நற்றாய் சேறலும், சுரத்திற்குச் செவிலித்தாய் சேறலும் புலனெறி வழக்கிற்குச் சிறந்ததென் றுணர்க.

(எ - டு)

" * * *
வெம்மலை யருஞ்சுர நம்மிவ ணொழிய
விருநில முயிர்க்கு மின்னாக் கான
நெருநற் போகிய பெருமடத் தகுவி
யைதக லல்குற் றழையணிக் கூட்டுங்
கூழை நொச்சிக் கீழ தென்மகள்
செம்புடைச் சிறுவிரல் வரித்த
வண்டலுங் காணிரோ கண்ணுடை யீரே" (அகம்-275)

வண்டலைக் காணார் தேளத்து நின்று காணில் ஆற்றீரெனக் கூறினமையின் ஆயத்தினையகன்று இற்புறம் சென்று சேரியோர்க்கு உரைத்ததாயிற்று.

"நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்
பிறங்கிரு முந்நீர்க் காலிற் செல்லார்
நாட்டி னாட்டி னூரி னூரிற்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு முளரோநங் காத லோரே" (குறுந்-130)

இது செவிலி தேடத் துணிந்தது. இக் குறுந்தொகையுள் நம்மாற் காதலிக்கப்பட்டா ரென்றது அவ்விருவரையும். தாயரும் உளரென்றதனாற் றந்தையும் தன்னையரும் வந்தால் இன்னது செய்வலென்றலும் உளவென்று கொள்க.

"நுமர்வரி னோர்ப்பி னல்ல தமர்வரின்
முந்நீர் மண்டில முழுவது மாற்றாது" (நற்றிணை)

என்றாற் போல்வன. அடி புறத்திடாதாள் புறம்போதலும் பிரிவென்றற்குச் சேரியும் கூறினார்; அஃது ஏம இல் இருக்கை யன்றாதலின்.

(வி - ரை) அருவழி - ஊரினின்றும் நீங்கிய சுரம். பதியெழு வறியாப் பேரூர்-பதியிலுள்ள குடிகள் வறுமைகருதி வேற்றூருக்குச் சென்றறியாத செல்வமிக்க பேரூர். 'பதியெழுவறியாப் பழங் குடிக்கெழீஇய பொதுவறு சிறப்பில் புகார்' எனச் சிலம்பும் கூறும். ஏமம் - பாதுகாப்பு என்பர் இளம்பூரணர். தெருவின் கண்ணும் சுரத்தின் கண்ணும்என எண்ணுதலின் உம்மை எண்ணும்மை ஆயிற்று. (37)

மனை அயற் பிரிதலும் பிரிவே.

38. அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே.

இதுவும் பாலைக்கு ஓர் வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்) அயலோர் ஆயினும் — முற்கூறிய சேரியினும் சுரத்தினுமன்றித் தம் மனைக்கு அயலே பிரிந்தாராயினும்; அகற்சிமேற்று—அதுவும் பிரிவின் கண்ணதாம் என்றவாறு.

எனவே நற்றாய் தலைவியைத் தேர்ந்து இல்லில் கூறுவனவும் சேரியில் கூறுவனவும் பிரிந்தாரைப் பின் சென்றதேயாயிற்று. இக் கருத்தான் "ஏமப்பேரூர்" என்றார். இதனானே மனையயற்கண் பரத்தையிற் பிரிவும் பாலையென்று உய்த்துணர்க.

உடன் போயவழித் தோழிக்குரிய கிளவிகள்.

39 தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித்தன் னெஞ்சுகலுழ்ந்தோளை
யழிந்தது [1]களைஇய வொழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோ
டென்றிவை யெல்லா மியல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன.

---
1 'களையென மொழிந்தது' எனப் பாடம் கொள்வர் இளம்பூரணர்.

தாயர்க்கு உரியனகூறி இது தோழிக்குக் கூற்று நிகழுமாறு கூறுகின்றது.

(இ - ள்) தலைவரும் விழும நிலை எடுத்து உரைப்பினும்— தலைவன் கொண்டுதலைக்கழியாவிடிற் றலைவிக்கட்டோன்றும் துன்பநிலையைத் தலைவற்கும் தலைவிக்கும் விளங்கக் கூறினும்; போக்கற் கண்ணும்—அதுகேட்டு இருவரும் போக்கொருப் பட்டுழித் தலைவியைப் போகவிடும் இடத்தும்; விடுத்தற்கண் ணும்—தலைவியை அவனோடு கூட்டி விடுக்குங்காற் றலைவற்குப் பாதுகாவலாகக் கூறும் இடத்தும்; நீக்கலின் வந்த தம் உறு விழுமமும்—தாயரை நீக்குதலாற் றமக்குற்ற வருத்தத்திடத் தும்; வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித் தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்—மெய்யும் பொய்யும் உணர்ந்த அறிவரது தருமநூல் துணிபும் இதுவெனக் கூறிப் பின் சென்று அவரை மீட்டற்கு நினைந்த தாயரது நிலைமை அறிந்து அவரை மீளாதபடி அவளை மீட்டுக்கொளினும்; நோய் மிகப் பெருகித் தன் நெஞ்சு கலுழ்ந்தோளை அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு— தலைவி போக்கு நினைந்து நெஞ்சு மிகப் புண்ணுற்றுத் தடுமாறும் தாயை அவ் வருத்தம் தீர்த்தல்வேண்டி உழுவலன்பு காரணத் தாற் பிரிந்தாளென்பது உணரக் கூறி அவளை நெருங்கிவந்து ஆற்றுவித்தல் கூற்றோடே; என்று இவை யெல்லாம் இயல்புற நாடின் ஒன்றித் தோன்றும் தோழி மேன—என்று இச் சொல் லப்பட்டன எல்லாவற்றுக்கண்ணும் இலக்கண வகையான் ஆராயும் காலத்துத் தான் அவள் என்னும் வேற்றுமையின்றி ஒன்றுபடத் தோன்றும் தோழி மேன கிளவி என்றவாறு.

(எ - டு)

"வெல்போர்க் குரிசினீ வியன்சுர னிவப்பிற்
பல்கா ழல்கு லவ்வரி வாடக்
குழலினு மினைகுவள் பெரிதே
விழவொலி கூந்தனின் மாஅ யோளே." (ஐங்குறு 306)

இவ் வைங்குறுநூற்றுள் குழலினும் இரங்குவளென்று பிரிந்த வள் இரங்குதற் பொருள்படத் தோழி தலைவரும் விழுமம் தலை வற்குக் கூறினள்.

"உன்னங் கொள்கையோ டுளங்கரந் துறையும்
அன்னை சொல்லும் உய்கம் என்னதூஉம்
ஈரஞ் சேரா இயல்பின் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கௌவையும் ஒழிகம்
நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவவினி வாழி தோழி யவரே
பொம்மல் ஓதி நம்மொ டொராங்குச்
செலவயர்ந் தனரால் இன்றே மலைதொறும்
மால்கழை பிசைந்த கால்வாய் கூரெரி
மீன்கொள் பரதவர் கொடுந்திமி னளிசுடர்
வான்தோய் புணரி மிசைக்கண் டாங்கு
மேவரத் தோன்றும் யாஉயர் நனந்தலை
உயவல் யானை வெரிநுச்சென் றன்ன
கல்லூர் பிழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்
ஆறுகடி கொள்ளு மருஞ்சுரம் பணைத்தோள்
நாறைங் கூந்தற் கொம்மை வரிமுலை
நிறையிதழ் உண்கண் மகளிர்க்கு
அரிய வாலென அழுங்கிய செலவே" (அகம்-65)

இதனுள் அன்னைசொல்லும் பெண்டிர் கௌவையும் தலைவரும் விழுமமென்று தலைவிக்குக் கூறினாள்.

இனிப் போக்கற்கண் கூறுவன பலவுமுள.

"இலங்குவளை செல்வளை யாய்நுதல் கவின்பெறப்
பொலந்தேர்க் கொண்கனும் வந்தன னினியே
யிலங்கரி நெடுங்க ணனந்த றீர்மதி
நலங்கவர் பசலையை நகுகம் யாமே" (ஐங்குறு-200)

இவ் வைங்குறுநூற்றில், கண் அனந்தறீர் என்றதனானே உடன்கொண்டு போதற்கு வந்தானெனப் பாயலுணர்த்திக் கூறிற்று.

"வேலும் விளங்கின வினைஞரு மியன்றனர்
தாருந் தையின தழையுந் தொடுத்தன
நிலநீ ரற்ற வெம்மை நீங்கப்
பெயனீர் தலைஇ உலவையிலை நீத்துக்
குறுமுறி யீன்றன மரனே நறுமலர்
வேய்ந்தன போலத் தோன்றிப் பலவுடன்
தேம்படப் பொதுளின பொழிலே கானமும்
நனிநன் ருகிய பனிநீங்கு வழிநாட்
பாலெனப் பரத்தரு நிலவின் மாலைப்
போது வந்தன்று தூதே நீயும்
கலங்கா மனத்தை யாகி யென்சொல்
நயந்தனை கொண்மோ நெஞ்சமர் தகுவி
தெற்றி யுலறினும் வயலை வாடினும்
நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும்
நின்னினும் மடவள் நனிநின் னயந்த
அன்னை யல்லல் தாங்கிநின் னையர்
புலிமருள் செம்மல் நோக்கி
வலியாய் இன்னுந் நோய்கநின் முலையே." (அகம்-259)

இவ் வகம் போக்குதற்கண் முயங்கிக் கூறியது.

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் ருழ்ந்த
நன்னெடுங் கூந்த னரையொடு முடிப்பினு
நீத்த லோம்புமதி பூக்கே ழூர
வின்கடுங் கள்ளி னிழையணி கொடித்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட் டியானைப் போஒர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னநின்
பிழையா நன்மொழி தேறிய விவட்கே." (நற்றிணை-10)

இந் நற்றிணை தலைவியைப் பாதுகாக்கவெனத் தோழி கைப் படுத்துவித்தது.

"புதல்வனீன்ற" (நற்றிணை 355) என்பதும் அது.

"இவளோ நின்னல நிலளே யாயுங்
குவளை யுண்கண் ணிவளல திலளே

யானு மாயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே."

இதுவும் அது.

"விளம்பழுங் கமழுங் கமஞ்சூற் குழிசிப்
பாசந் தின்ற தேய்கான் மத்த
நெய்தெரி யியக்கம் வெளின்முதன் முழங்கும்
வைகுமலர் விடியன் மெய்கரந்து தன்கா
லரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிப்புனை பந்தொடு வைஇய செல்வோ
ளிவைகாண் டோறு நோவர் மாதோ
வளியரோ வளியரென் னுயத் தோரெ
நும்மொடு வரவுதா னயரவுந்
தன்வரைத் தன்றியுங் கலுழ்ந்தன கண்ணே."

(நற்றிணை - 12)

இந் நற்றிணை போக்குதல் தவிர்ந்ததாம்.

"அவளே, யுடனம ராயமொ டோரை வேண்டாது
மடமான் பிணையின் மதர்த்த நோக்கமொ
டென்னினு நின்னினுஞ் சிறந்த மென்மொழி
யேதி லாளன் காதலி னொது
பால்பாற் படுப்பச் சென்றன ளதனுன்
முழவிமிழ் பந்தர் வினைபுனை நல்லில்
விழவயர்ந் திருப்பி னல்லதை யினியே
நீயெவ னிரங்குதி யன்னை
யாயினுஞ் சிறந்த நோய்முந் துறுத்தே."

என்னினும் நின்னினும் சிறந்தோன் தலைவ னென்று தவிர்தல் தருமநூல்விதி என்பது. இனி விழவயர்ந்திருப்பினல் லதை எனவே மீட்டற்குச் சேறல் அறனன் றென்று மீட்டாளா யிற்று.

"அன்னை வாழியோ வன்னை நின்மக
ளென்னினும் யாயினு நின்னினுஞ் சிறந்த
தன்னம ரிளந்துணை மருட்டலின் முறுது

வென்வேற் புல்லி வேங்கட நெடுவரை
மழையொடு மிடைந்த வயக்களிற் றருஞ்சுரம்
விழைவுடை யுள்ளமொ டுழைவயிற் பிரியாது
வன்கண் செய்து சென்றனள்
புன்கண் செய்தல் புரைவதோ வன்றே.''

இது தாயை வற்புறுத்தியது.

இயல்புற என்றதனனே தலைவன் கரணவகையால் வரைந்தானாக எதிர்சென்ற தோழிக்கு யான்வரைந்தமை நுமர்க்குணர்த்தல் வேண்டுமென்றற்கு அவள் உணர்த்தினே னென்றலும் தலைவி மீண்டு வந்துழி ஊரது நிலைமை கூறுதலும் கொள்க.

''கருவிரன் மந்திக் கல்லா விளம்பார்ப்பு
இருவெதி ரீர்ங்கழை யேறிச் சிறுகோன்
மதிபுடைப் பதுபோற் றோன்று நாட
வரைந்தனை நீயெனக் கேட்டியா
னுரைத்தனெ னல்லனோ வஃதென் யாய்க்கே.''

(ஐங்குறு - 280)

''புள்ளு மறியாப் பல்பழம் பழுனி
மடமா னறியாத் தடநீர் நிலை இச்
சுரநனி யினிய வாகுக வென்று
நினைத்தொறுங் கலுழு மென்னினு
மிகப்பெரிது கலங்கின்று தோழிநம் மூரே.''

(ஐங்குறு - 398)

இன்னும் இதனனே செய்யுட்கண் வேறுபட வருவன வெல்லாம் அமைத்துக்கொள்க.

''ஊஉ ரலரெழச் சேரி கல்லென
ஆனு தலைக்கு மறனி லன்னை
தானே யிருக்கதன் மனையே யானே
நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க
உணலாய்ந் திசினு லவரொடு சேய்நாட்டு
விண்டொட நிவந்த விலங்குமலைக் கவாஅற்

கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே." (குறுந் - 262)

இது போக்கு நேர்ந்தமை தோழி கூறியது பிறவுமன்ன.

(வி - ரை) தலைவரும் விழுமம் - பின்வரும் துன்பம். அதாவது தலைவன் தலைவியை அழைத்துச் செல்லாவிடில் பின்வரும் துன்பம்.

கொண்டுதலைக் கழிதல்-தலைவன் தலைவியை உடன் கொண்டு சேறல். உழுவலன்பு - எழுமையும் தொடர்ந்த அன்பு.

நிவப்பில்-கடந்து செல்வானுனல். பல்காழ்-பலமணி வடம். அவ்வரி - அழகியவரி. விழவொலி கூந்தல் - விழா நிகழும் இடம் போல நறுமணம் வீசும் தழைத்த கூந்தல். மாயோன் - மாமை நிறம் உடையவன். உண்மை கொள்கையோடு - நம் கருத்தினை உணர்ந்து கொண்ட அறிவுடன். கௌவை - அலர். நாடுகண்ண கற்றிய - தன் நாட்டினை விரிவாக்கிய. உவவினி: இனி உவ என மாற்றுக. இப்பொழுது மகிழ்வாயாக என்பதாம். பொம்மல் ஓதி - பொலிவு பெற்ற கூந்தலை உடையாய், விளி. மால்கழை பிசைந்த கால் - பெரிய மூங்கில்கள் ஒன்றற் கொன்று உராய் வதால் உண்டாகிய காற்று. கொடும் திமில் - வளைந்த படகு. யாஅ - யாமரங்கள். உயவல்யானை - பசியால் மெலிந்து வருந்திய யானை. வெறிநு - முதுகு: ஆறுகடிகொள்ளும்! வழியினைக் காவல் கொண்டிருக்கும். கொம்மை - திரண்ட. தோழிவாழி!' மகளிர்க்குச் செலவு அரிய என அழுங்கிய அவரே (தலைவரே) நம்மொடு செல வயர்ந்தனர் ஆதலின் உவ இனி எனக்கூட்டுக.

எல்வளை - ஒலி பொருந்திய வளையையுடையாய்: விளி. ஆய் நுதல் - அழகு பொருந்திய நெற்றி. விலங்கு அரி - குறுக்கிட்ட ரேகை. அனந்தல் - குறையுடைய தூக்கம்.

பாயல் உணர்த்தி - கூட்டமுண்மை உணர்த்தி. வேலும் விளங்கின - வேல்களும் நெய்பூசப்பட்டு விளக்கம் உற்றன. தாரும் தையின - மாலையும் கட்டப்பட்டன. தலைஇ - பெய்து. உலவை- மரங்கள். குறுமுறி - குறுகிய தளிர்கள். பொதுளின - செறிந்தன. பனிநீங்குவடிநாள் - பனிக்காலம் நீங்கியபின் வந்த இளவேனில். நெஞ்சமது தகுவி - என் உளம் விரும்பும் தகுதியையுடையாய்;

விளி. தெற்றி உலறினும் - மேடையின்கண் உள்ள பூச்செடிகள் சாய்ந்தாலும். வயலை - வயலைக்கொடி.

வளர்குரல் - வளர்ந்த கதிர்கள். புலிமருள் செம்மல் - புலியும் மருளுமாறு அமைந்த தலைமை. வலியாய் - உடன்போக்கிற்குத் துணிவாயாக. நெஞ்சத்துத்தகுவி! பனிநீங்கு விடிநாளும் வந்தது, மாலைப்போதும் வந்தன்று, நீயும் கலங்கா மனத்தேயாகி என், சொல் நயந்தனை கொன்மோ, இன்னும் தோய்க நின் முலையே என முடிக்க.

அண்ணாந்து ஏந்திய - நிமிர்ந்து உயர்ந்த. மணியின் தாழ்ந்த- நீலமணியின் கரியநிறத்தோடு தாழ்ந்த. கொங்கர்ப்பணிஇயர் - கொங்கு நாட்டவரை அடக்குதற்காகச் செய்த போரில். போர்க் கிழவோன் - போர் என்னும் ஊரிற்குரியவன். வேல்வாய்த்தன்ன- வேற்படை தப்பாது வெற்றியை அளித்தாற்போல. பூக்கேழூர! நின் பிழையா நன்மொழி தேறிய இவற்கு வளமுலை தளரினும் கூந்தல் நிரையொடு முடிப்பினும் நீத்தல் ஓம்புமதி எனக் கூட்டுக. நீத்தல் ஓம்புமதி - கைவிடுதலைப் பாதுகாப்பாயாக; கைவிடாது இருப்பாயாக என்றவாறு.

ஆயிடையேன் - அத்தன்மையை உடையேன்

விளம்பழம் - விளாம்பழம். கமஞ்சூழ்குரிசி - நிறைந்த பெரிய தயிர்த்தாழி. பாசம்தின்ற - கடையும் கயிற்றுல் அறைப்புண்ட. மத்தம் - மத்து. நெய்தறி இயக்கம் - வெண்ணெய்காண கடையும் ஒலி. வெளிமுதல்-வெளியில் இருக்கும் மன்றம் வரையிலும். தலைவ! தலைவி நும்மொடு வரவு அயர்வும் அவள் வரைத்தன்றி அவள்கண் கலுழ்ந்தன எனத்தோழி கூறியதன் வாயிலாகத் தலைவன் செலவு தவிர்ந்தனன் என்பதாம்.

ஓரை - விளையாட்டு. பால்பாற்படுப்ப - விதி ஆற்றுப்படுப்ப. யாய் - என்தாய்; செவிலி, அன்னை; இல்லில் விழவயர்ந்து இருப் பதன்றி நோய் முந்துறுத்தி நீயெவன் இரங்குதி என முடிக்க.

அன்னை வாழியோ - நற்றாயே வாழ்வாயாக. அன்னை நின் மகள் - அன்னையாகிய நின்மகள். தோழி, தலைவியை அன்னை என்றல் மரபு. (பொருளியல் - 52) தன்னமர் - தன்னை விரும்பிய,

இளந்துணை - தலைமகன். முன்றது - பழையதாகிய புல்லி-ஒரு குறு நில மன்னன். வன்கண்செய்து - நம்மில் பிரிதலாகிய வன்கண்மை செய்து. புன்கண் - துன்பம். புரைவதோஅன்று - ஒத்ததன்று. அன்னை நின்மகள் வன்கண் செய்து சென்றனள் ஆதலின் அதற் காகப் புன்கண் செய்தல் தக்கதன்று என முடிக்க.

கல்லா இளம்பார்ப்பு - மரம் ஏறிப்பழகாத இளைய குரங்கு. இருவிதிர் - உயர்ந்த மூங்கில். என்தாய் - என்னுடைய தாயாகிய செவிலி.

பழுனி - நிறைந்து. கலுழும் - அழும்.

நெல்லி - நெல்லிக்காய். விலங்குமலை - ஒன்று ஒன்றனோடு குறுக்கிட்டுக்கிடந்த மலை கவான் - மலையின் அடிவாரம். பெருங் களிற்று அடிவழி நிலைஇய நீர் - பெரிய களிற்று யானையினது அடிச்சுவட்டின்கண் நிலைபெற்றநீர் உணல் ஆய்ந்திசின் - உண் ணுதலை நினைந்தேன். ஊர் அலர்எழ சேரிகல்லென அன்னைதானே தன்மனையில் இருக்க யான் அவரொடு சேய்நாட்டு நெல்லிதின்ற முல்லையெனத் தயங்கப் பெருங்களிற்று அடிவழி நிலைஇய நீரை உணவாய்ந்திசின் எனக் கூட்டுக. (39)

உடன்போயவழிக் கண்டோர்க்குரிய கிளவிகள்

40 பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவி னாகிய குற்றம் காட்டலும்,
ஊரது சார்வும் செல்லும் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய[1] கிளவியும்,
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்தநெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுப்பினு, மாங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும், விடுப்பினும்,
சேய்நிலைக் ககன்றோர் செலவினும், வரவினும்,
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.

---

1 வழியினும் என்பது இளம்பூரணர் பாடம்.

இது, கொண்டுதலைக்கழிந்துழி இடைச் சுரத்துக் கண்டோர் கூறுவன கூறுகின்றது.

(இ - ள்) பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழு வின் ஆகிய குற்றம் காட்டலும்—உடன்போயவழி மாலைக் காலமும் சேறற்கரிய வழியும் அஞ்சுவரக் கூறி அவற்றது தீங்கு காரணமாகப் போகின்றார்க்கு வரும் ஏதம் அறிவித் தலும்; ஊரது சார்வும் செல்லும் தேயமும் ஆர்வநெஞ்சமொடு செப்பிய கிளவியும்—எம்மூர் அணித்தெனவும் நீர் செல்லுமூர் சேய்த்தெனவும் அன்புடை நெஞ்சத்தாற் கூறும் கூற்றுகளும்; புணர்ந்தோர் பாங்கில் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்து எதிர் கூறி விடுப்பினும் - புணர்ந்து உடன்போய இருவர் கண்ணுந் தணவா நெஞ்சினராகி ஆற்றாமை மீதூர ஏற்றுக்கொண்டு நின்று இனி இதின் ஊங்குப் போதற்கரிது நும் பதிவயிற் பெயர் தல் வேண்டுமென்று உரைத்து மீட்டலும், ஆங்கு அத்தாய் நிலைகண்டு தடுப்பினும் விடுப்பினும் - அவ்விடத்துத் தேடிச் சென்ற அச்செவிலியது நிலைகண்டு அவளைத் தடுத்து மீட்பினும் அவர் இன்னுழிச் செல்வரென விடுத்துப் போக்கினும்; சேய் நிலைக்கு அகன்றோர் செலவினும் - சேய்த்தாகிய நிலைமைக் கண்ணே நீங்கின அவ்விருவருடைய போக்கிடத்தும்; வரவினும்- செவிலியது வரவிடத்தும்; கண்டோர் மொழிதல் கண்டது என்ப - இடைச்சுரத்துக் கண்டோர் கூறுதல் உலகியல் வழக் கினுள் காணப்பட்டதென்று கூறுவர் என்றவாறு.

"எம்மூ ரல்ல தூர்நணித் தில்லை
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இளையண் மெல்லியண் மடந்தை
அரிய சேய பெருங்க லாறே." (சிற்றெட்டகம்)

இதனுள் கதிரும் ஊழ்த்தனனெனவே பொழுதுசேறலும் பெருங்க லாறெனவே ஆற்றதருமையும் பற்றிக் குற்றம் காட்டிய வாறு காண்க. "எல்லுமெல்லின்று" என்னும் குறுந்தொகைப் (390) பாட்டும் அது.

"நல்லோண் மெல்லடி நடையு மாற்றாள்
பல்கதிர் செல்வன் கதிரு மூழ்த்தனன்

அணித்தாத் தோன்றுவ தெம்மூர்
மணித்தார் மார்ப சேந்தனை சென்மே."

இஃது எம்மூர் அணித்தென்றதனால் சார்வும் அதனானே செல்லும் தேயம் சேய்த்தெனவும் கூறிற்று. மகட்பயந்து வாழ்வோர்க்கு இவளைக் கண்டு அருள் வருதலின் ஆர்வநெஞ்மென்றார்.

"இதுநும் மூரே யாவருங் கேளிர்
பொதுவறு சிறப்பின் வதுவையுங் காண்டு
மீன்றோ ரெய்தாச் செய்தவம்
யாம்பெற் றனமான் மீண்டனை சென்மே."

இஃது அழிந்தெதிர் கூறி விடுத்தது. இது 'கொடுப்போரின்றிக் கரண முண்மை' (தொல் - பொருள் - கற். 2) கூறிற்று. மீட்டுழி இன்னுழிச் சென்று இன்னது செய்ப என்றல் புலனெறிவழக்கன்று

"பெயர்ந்து போகுதி பெருமூ தாட்டி
சிலம்புகெழு சீறடி சிவப்ப
விலங்குவேற் காளையோ டிறந்தனள் சுரனே."

"சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே." (கலி - 9)

"கடன்மேய சங்கங் கழியடைந்த பெண்ணை
மடன்மேய வாழ்குர லன்றில் - கெடலருஞ்சீர்
வாமா னெடுங்கோதை வான்றீண்டு கொல்லிமேற்
றேமாவின் மேய கனி."

இவை செவிலியைத் தடுத்தன.

"சிலம்புஞ் சிறுநுதலுஞ் சில்குழலும் பல்வளையு
மொருபாற் றோன்ற
அலங்கலந் திண்டோளும் ஆடெருத்தும் ஒண்குழையு
மொருபாற் றோன்ற
விலங்க லருஞ்சுரத்து வேறுருவின் ஒருடம்பாய்
வருவார்க் கண்டே
அலங்கல் அவிர்சடையெம் அண்ணல் விளையாட்டென்
றகன்றேம் பாவம்."

இது தெய்வமென யாங்கள் போந்தேம், நுமக்கெய்தச் சேறலாமென்று விடுத்தது.

"நெருப்பவிர் கனலி யுருப்புச்சினந் தணியக்
கருங்கால் யாத்த வரிநிழ லசைஇச்
சிறுவரை யிறப்பிற் காண்டி செறிதளிர்ப்
பொன்னேர் மேனி மடந்தையொடு
வென்வே லண்ணல் முன்னிய சுரனே." (ஐங்குறு-388)

இவ் வைங்குறுநூறும் அது.

"அஞ்சுடர்நீள் வாண்முகத் தாயிழையு மாறிலா
வெஞ்சுடர்நீள் வேலானும் போதரக்கண் - டஞ்சி
யொருசுடரு மின்றி யுலகுபா ழாக
விருசுடரும் போந்தனவென் றூர்."
(திணைமாலை நூற் - 71)

இஃது இடைச்சுரத்துக் கண்டோர் கூறிய வார்த்தையைக் கேட்டோராகச் சிலர் கூறியது.

"அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்
தொலிவ லீந்தி னுலவை யங்காட்
டாறுசென் மாக்கள் சென்னி யெறிந்த
செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய
வல்லியம் பெருந்தலைக் குருளை மாலை
மானோக்கு மீண்டிவ ரீங்கைய சுரனே
வையெயிற் றையண் மடந்தை முன்னேற்
றெல்லிடை நீங்கு மிளையோ னுள்ளங்
காலொடு பட்ட மாரி
மால்வரை மிளிர்க்கு முருமினுங் கொடிதே."
(நற்றிணை - 2)

"காண்பா னவாவினுற் காதலன் காதலிபின் னடவாநிற்ப
நாண்பால ளாதலா னன்னுதல் கேள்வன்பின் னடவா நிற்ப
வாண்பான்மை குன்று வயில்வே லவன்றனக்கு மஞ்சோ லாட்கும்
பாண்பாலை வண்டினமும் பாட வருஞ்சுரமும் பதிபோன் றன்றே.'

"மடக்கண் டகரக் கூந்தற் பணைத்தோள்
வார்ந்த வாலெயிற்றுச் சேர்ந்துசெறி குறங்கிற்
பிணைய லந்தழை தைஇத் துணையிலள்
விழவுக்களம் பொலிய வந்துநின் றோளே
யெழுமினோ வெழுமினங் கொழுநர்க் காக்கம்
ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த வொள்வாண் மலையன
தொருவேற் கோடி யாங்குநம்
பன்மைய தெவனோவிவ ளன்மைதலைப் படினே.
(நற்றிணை - 170)

இஃது இடைச்சுரத்துக் குறும்பினுள்ளோர் இவரைக்கண்டு கோள்இழைப்புற்றார்க்கு அவர்பெண்டிர் கூறியது. இவை செலவின் கண் கூறியன.

"வில்லோன் காலன கழலே தொடியோண்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே" (குறுந் - 7)

என்பதும் அது.

"கடியான் கதிரெறிப்பக் கல்லலையில் வெம்பியவக்
கலங்கற் சின்னீ
ரடியா னுலகளந்த வாழியா னுக்கிய
வமிர்தென் றெண்ணிக்
கொடியான் கொடுப்பக் குடங்கையிடங் கொண்டிருந்து
குடித்துச் சென்ற
வடியோர் தடங்கணவ் வஞ்சிக்கொம் பின்றாரிவ்
வருவார் போலும்"

"நமரே யவரெனி னன்னினீர் சொன்மி
னமர்வி லொராவவதி யாய்நின் - றமரோ
விளக்கி னனையாளைத் தான்கண்டாள் கண்டேன்
களக்கனி வண்ணனை யான்".

"அறம்புரி யருமறை நவின்ற நாவிற்
றிறம்புரி கொள்கை யந்தணிர் தொழுவலென்
ருெண்டொடி வினவும் பேதையம் பெண்டே
கண்டனெ மம்ம சுரத்திடை யவளை
யின்றுணை யினிதுபா ராட்டக்
குன்றுயர் பிறங்கண் மலையிறந் தோளே" (ஐங்கூறு-387)

இவை செவிலி வரவின்கண் கூறின.

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேருேரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்ன ரிருவரைக் காணிரோ பெரும
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவர ருயிர்நீர் போறிர்;

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யு
நீனையுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே;

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே;

எனவாங்கு, இறந்த கற்பினுட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றன
னறந்தலை பிரியா வாறுமற் றதுவே" (கலி - 9)

என்னும் பாலைக்கலியும் அது. இக்கூறியவாறன்றி இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இச்சூத்திரத்தான் அமைக்க.

(வி - ரை) கண்டோர் - தலைவனையும் தலைவியையும் இடைச் சுரத்துக் கண்டோர். உட்குவர-அச்சம் வருமாறு. நெஞ்சினராகி- அன்பு கடலாத நெஞ்சையுடையராய். இதினூஉங்கு-இவ்விடத்தி னின்றும் மேற்கொண்டு. சேய்நிலைக்ககன்றோர் செலவினும் வரலினும் - மிகத் தொலைதூரத்திற்குச் சென்றோராகிய தலைவன் தலைவியரிடம் போக்கிடத்தும் அவர்தம் வரவிடத்தும் என்பதே பொருந்திய உரையாம். இளம்பூரணர் தம் உரையும் இதுவாம். இவ்வாறன்றி செலவினைத் தலைவன் தலைவியர்க்கும் வரவினைச் செவிலிக்கும் உரித்தாகக் கொண்டது பொருத்தமில் கூற்றும்.

நணித்து - அணிமையதாக. வெம்முரண் செல்வன் - வெப்ப மிகுதியால் மாறுபடுகின்ற கதிரோன். கதிரும் ஊழ்த்தனன் - ஒளிக்கதிர்களையும் உதிர்த்தனன் எனவே மறைத்தனன் என்பதாம் சேர்ந்தனைசெல் - இதுபொழுது எம்மூரை அடைந்து விடியலில் செல்வாயாக. மோ - முன்னிலை அசை.

பொதுவது - பொதுத்தன்மையினின்றும் நீங்கிய. ஈன்றோர் - நின்னையும் தலைவியையும் பெற்ற தாய் தந்தையர். மீண்டனை செல்மே - மீண்டு எம்மூர்க்கு வருவாயாக.

தலைவியின்தமர் தன்னைக்கொடுப்ப தலைவன் தன் தமருடன் இருந்து மணம் செய்துகோடல் கற்பு நெறியாம். அவ்வாறன்றி தலைவியின் தமர் கொடுப்பக் கோடலின்றித் தலைவியைத் தானே அழைத்துச் சென்று தன்னளவில் திருமணம் செய்துகொள்ளுத லும் உண்டு. இப்பாடலில் கண்டோர் வதுவையும் காண்டும் எனக் கூறுவதால் இது கொடுப்போரின்றிக் கரணமுண்மை கூறிற்று என்றார் உரையாசிரியர்.

பெருமுதாட்டி - செவிலியே! ; விளி. சுரம் இறந்தனள் - சுரத்தைக்கடந்து சென்றனள். பெயர்ந்துபோகுதி (எனவே) மீண்டுச் செல்வாயாக.

தேருங்கால் - ஆராயும் பொழுது

பெண்ணை - பனை, கோதை - சேரன். சங்கு கடலில் தோன் றினும் கடற்குப் பயன்படுவதில்லை. பனையில் அன்றிற் பறவை வாழினும் அப்பறவை பனைக்குப் பயன்படுவதில்லை. சேரன்

குதிரைமீது இவர்ந்து வரினும் குதிரைக்கு அவன் பயன்படுவ தில்லை. கொல்லிமலையில் இனிய பழம் இருப்பினும் அப்பழம் அம் மலைக்குப் பயன்படுவதில்லை. இவற்றைப்போன்றே நும்மகள் நும் மிடத்துப் பிறந்து வாழினும் நுமக்குப் பயன்படுவள் அல்லள். அவளை விரும்பிய தலைமகற்கே அவள் பயன்படுவள். ஆதலின் அவளைத் தேடிச் செல்லற்க எனக் கண்டோர் தடுத்தனர்.

அலங்கல் - மாலை. ஆடு எருத்து - அசைக்கின்ற கழுத்து. விலங்கல் - மலை. வேறு உருவின் - பெண்ணும் ஆணுமாய வெவ் வேறு உருவின். அலங்கல்- அசைதல். எம் அண்ணல்- உமையொரு கூறனுகிய சிவபெருமான். விளையாட்டு - உயிர்கள் உய்தற்காகச் செய்யும் அருட் செயல்கள்.

நுமக்கு - தேடி வந்த செவிலியாகிய நுமக்கு. கருங்கால் - கருமையான அடியையுடைய.

கனலி-கதிரவன். உருப்பு - வெப்பம். யாத்த - யாமரத்தி னுடைய. சிறுவரை இறப்பில் - சிறிய மலைகளைக் கடந்து செல்லின்.

இருசுடரும் போந்தன - ஞாயிறும் திங்களும் ஆகிய இரு சுடரும் சென்றன. தலைவன் தலைவியரை ஞாயிறும் திங்களும் என்றுர். முதிர்கடல் ஞாலம் முதிவதும் விளக்கும் கதிரொருங் கிருந்த காட்சி போல என இளங்கோவடிகளும் இவ்வாறு கூறல் காண்க.

அழுந்த படவீழ்ந்த ஈந்து - ஆழமாக வேர் வீழ்த்த ஈத்த மரங்கள். ஒலிவல் ஈந்து - தழைத்து வலியுற்று நிற்கும் ஈத்த மரங்கள். இவ்வாறு கூட்டுக. உலவை - காற்று. சென்னியெறிந்த- தலையைத்தாக்கி உண்டதால், செம்மறுத்தலை - குருதி படிதலால் சிவப்பாகும் மருப்பு பொருந்திய தலையையுடைய. வல்லியம் குருளை - புலிக்குட்டி. நெய்த்தோர் - குருதி. மரன் நோக்கும் ஈண்டு - மரங்களில் ஓங்கிப்படரும் இண்டைக் கொடி. ஈங்கையர்- ஈங்கை மரங்களை உடையன. பிளிர்க்கும் - மலையைப்பிளக்க எறி யும். உரும் - இடி.

வண்டினமும் பாண்பாலை பாட என மாறுக. பாண்பாலை - பாலைப்பண். பதிபோன்றன்றே - தலைவனும் தலைவியும் ஒருங்கு உவகையோடு சேறலின் தம்மூர் போன்றே அமைந்தது. தகரம் - மயிர்ச் சாந்து. வார்ந்த - வரிசையான. வால்எயிறு - வெள்ளிய பற்கள். குறங்கு - துடை. பிணையல் - மாலை. அம்தழை தைஇ - அழகிய தழையுடையை உடுத்துக்கொண்டு. கொழுநர்க்காக்கம் - இத்தலைவன் தலைவியரைக் காப்போம். கழித்த - உறையினின்றும் எடுத்த. முள்ளூரில் நடந்த போரில் மலையமானது ஒருவேற் படைக்கு ஆரியர் பலரும் புறக்கிட்டு ஓடினர். அதைப் போன்றே இத்தலைவன் தலைவியர்க்கு இவ்விடைச் சுரத்தின் கண் ஒருசிலரால் தவறு விளைவிக்கப்படின் நாம் பலரிருந்தும் பயனில்லாது போய் விடும். ஆதலின் இவர்களைக் காக்க எழுமினோ எழுமின் என அங்குள்ள பெண்டிர்க்குக் கூறியதாக நச்சினார்க்கினியர் துறை காணுகின்றார். கோள் இழைப் புற்றார்க்கு - தீங்கு இழைக்கப் பெற்றார்க்கு. எனினும் நற்றிணை உரையாசிரியர் இது தோழி விறலிக்கு வாயில் மறுத்தது எனத்துறை கூறி அதற்கேற்பப் பாடமும் உரையும் கண்டுள்ளார். கொழுநற் காக்குவம், இவள் நன்மை தலைப்படினே என்பதும் அவர் கொண்ட பாடமாகும்.

ஆரியர் கயிறு ஆடு பறையின் - ஆரியக் கூத்தர்கள் மூங்கிலை நட்டு அவற்றின்வழிக் கயிற்றில் ஏறி ஆடும்பொழுது முழங்கும் பறையின் ஒலியைப்போல, வாகை - மரம் அழுவம் - காடு.

கடியான் - கதிரவன். கல்அளை - கற்பாறையிலுள்ள குழி. ஆழியான் - திருமால். குடங்கை - உள்ளங்கை. இவ்வருவார் - செவிலி.

அமர்வுஇல் - அடக்கமில்லாத. ஓரா அவதியாய் - நீங்காத துன்பத்தையுடையாய். செவிலி, அடக்கமும் அமைதியுமின்றி பரபரப்பும் பேரார்வமும் கொண்டு நமரே அவர் எனில் நீ சொல்மின் எனத் தம்மை வினவின் இவ்வாறு அவரை விளித் தார். விளக்கின் அனையாள் - தலைவி. தான் கண்டாள் - என்மனைவி அவளைக் கண்டாள். களக்கனி வண்ணன் - களாம் பழத்தின் நிறம் உடையவன். தலைவன் தலைவியைத் தேடிச் சென்ற செவிலிக்குத் தலைவனும் தலைவியுமாக வந்தார் இருவருள் தலைவன் கூறிய கூற்றாகும் இது.

அந்தணர் - அந்தணர்களே: விளி. இவ்வாறு விளித்தது செவிலியாவாள். பேதையம் பெண்டே - பேதைமைத் தன்மை வாய்ந்த பெண்டே. இவ்வாறு விளித்தவர் அந்தணராம். பிறங்கல்- செறிந்த. பலை இறந்தோன் - பலைகளைக் கடந்து சென்றான். பேதையம் பெண்டே அவளைச் சுரத்திடைக் கண்டனம். (அவள்) இன் துணை இனிது பாராட்ட மலை இறந்தனள் எனச் செவிலி யால் வினவப்பட்ட அந்தணர் அவட்குச் சொல்லினர்.

எறிதருகதிர்-எறித்தலைச் செய்கின்ற ஞாயிறு. உரித்தாழ்ந்த கரகம் - உறியில் தங்கிய கமண்டலம். உரை சான்ற முக்கோல் - புகழுதல் அமைந்த முக்கோல். சுவல் - தோள். வேறு ஓரா நெஞ்சம் - தாம் குறித்த குறிக்கோள்களில் அன்றி வேறு ஒன்றையும் நினையாத நெஞ்சம். குறிப்பு ஏவல் செயல் மாலை கொளை - ஐம்பொறியும் தமக்கு ஏவல் செய்தலை இயல்பாக உடைய கோட்பாடு. நடை - ஒழுக்கம். போறீர் - போல் இருந் தீர். படுப்பவர் - மெய்யிடத்துப் பூசுபவர். இறந்த கற்பினாள் - மிகுந்த கற்பினை உடையவள்: தலைவி. சிறந்தானை - இருமுது குரவரினும் சிறந்த கணவனை. அறம் தலைப்பிரியா - அறத்தி னின்றும் மாறுபடாத. (40)

உடன்போய வழியும் பிறவழியும் தலைவற்குரிய கிளவிகள்

41. ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்
ஒன்றிய [1]தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கின் அவள்தம ரெய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞ ரெய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை யுளப்பட
அப்பாற் பட்ட ஒருதிறத் தானும்
நாளது சின்மையு மிளமைய தருமையும்
தாளாண் பக்கமும் தகுதிய தமைதியும்
இன்மையது இளிவு முடைமைய துயர்ச்சியும்

1. மொழியோடு எனப் பாடங்கொள்வர் இளம்பூரணர்.

அன்பின தகலமு மகற்சிய தருமையும்
ஒன்றுப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினும் கையினும் வகுத்த [1]பக்கமொடு
ஊதியம் கருதிய வொருதிறத் தானும்
புகழு மானமு மெடுத்துவற் புறுத்தலும்
தூதிடை யிட்ட வகையி னானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினு
மூன்றன் பகுதியு மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலு முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்
காவற் பாங்கி னாங்கோர் பக்கமும்
பரத்தையி னகற்சியிற் [2]பரிந்தோட் குறுகி
இரத்தலும் தெளித்தலு மெனவிரு வகையோடு
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன.

இஃது உடன்போக்கினுள் நற்றாயும் தோழியும் கண்டோரும் கூறுவன கூறித் தலைவன் ஆண்டும் பிறாண்டும் கூறும் கூற்றும் கூறுகின்றது. தமர் பருவம் சுரமென்னும் மூன்றற்கும் ஒன்றா வென்பதனையும் ஒன்றிய வென்பதனையும் கூட்டி ஏழனுருபு விரித்துப் பொருளுரைக்க.

(இ - ள்) ஒன்றாத் தமரினும் — உடன்போக்கிற்கு ஒன்றாத் தாயர் முதலியோர்கண்ணும்; பருவத்தும் — இற்செறிப்பாற் புறம்போகற்கு ஒன்றாமையானும் தலைவனொடு கூட்டம்பெறாது ஆற்றியிருக்கும் பருவம் ஒன்றாததானும் ஒன்றாப்பருவத்தின் கண்ணும்; சுரத்தும் - அரிய சேய கல்லதர் ஆகலிற் போதற்கு ஒன்றாச் சுரத்தின் கண்ணும்; ஒன்றிய தோழியொடு வலிப்பினும் - தலைவி வேண்டியதே தான் வேண்டுதலிற் பின் தமர் கூறும் கடுஞ்சொற் கேட்டற்கும் ஒருப்பட்டு நொதுமலர் வரைவிற்

1. பக்கமோடு, 2. பிரிந்தோட் எனப் பாடங் கொள்வர் இளம்பூரணர்.

காற்றுது உடன் போக்கிற்கேலாத கடுங்கோடையெனக் கருதாது கொண்டுதலைக்கழிதற்கு ஒன்றிய தோழியொடு தலைவன் ஆராய்ந்து உடன் போக்கினைத் துணியினும்; விடுப்பினும் - தலைவியை ஆற்றி யிருப்பளெனக் கருதி உடன் கொண்டு போகாது தலைவன் விடுப்பினும்; இடைச்சுர மருங்கின் அவள் தமர்எய்திக் கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கு அஞர் எய்திக் கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட அப்பால் பட்ட ஒரு திறத்தானும் - தந்தையும் தன்னையரும் இடைச் சுரத்திடத்தே பின்சென்று பொருந்தித் தலைவியைப் பெயர்த்தல் வேண்டுதலிற் றலைவி மிகவருந்தித் தமர்பாற்பட்டு உரையாடாது தலைவன் பாற்படுதலின் அவள் கற்பொடு புணர்ந்தமை சுற்றத்தாரும் சுரத்திடைக்கண்டோரும் உணர்ந்த வெளிப்பாடு உளப்படக் கொண்டுதலைக்கழிதற் கூற்றின்கட்பட்ட பகுதிக்கண்ணும்.

கடைக்கொண்டு எய்தியென்க. கடை - பின். தமரெனவே, தந்தை தன்னயரை உணர்த்திற்று. "முன்னர்த் தாய்நிலை கண்டு தடுப்பினு" மென்றலின், தாயர்தாமே சென்றமை முன்னத்தாற் றமர் உணர்ந்து வலிதிற்கொண்டு அகன்றுளே வென்று கருதியும் அவ்வரைவு மாட்சிமைப் படுத்தற்கும் பின் சென்று அவள் பெயராமற் கற்பொடு புணர்ந்தமை கண்டு தலைவன் எடுத்துக்கொண்ட வினைமுடித்தலும் ஒருதலையென்றுணர்ந்து பின்னர் அவரும் போக்குடன்பட்டு மீள்பவென்று கொள்க. அவ்வெளிப்பாடு கற்பதாலிற் கற்பென்றார். உளப்படவென்ற தனல் வலித்தலும் விடுத்தலும் அகப்பட வென்றாராயிற்று.

நாளது சின்மையும் இளமையது அருமையும் தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும் இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும் அன்பினது அகலமும் அகற்சியது அருமையும் ஒன்றுப் பொருள்வயின் ஊக்கிய பாலினும் - வாழ்க்கை நாள் சிலவாதல் ஏதுவாகப் பொருள்செய்தல் குறித்தாரை இளமையது அருமை இன்பத்தின் கண்ணே ஈர்த்து ஒன்றுமையும், மடியின்மை ஏதுவாகப் பொருள்செயல் குறித்தாரை யாதானும் ஓர் ஆற்றாற் பொருள் செய்யலாகாது தத்தம் நிலைமைக்கேற்பச் செயல்வேண்டு மென்னும் தகுதியதமைதி ஒன்றுமையும், இன்மையான் வரும் இளிவரவு நினைத்துப்

பொருள்செய்ய நினைந்தாரைப் பொருளுடைமைக் காலத்து நிகழும் உயர்ச்சி அதற்கு இடையூறாகிப் பொருணசை யுள்ளத்தைத் தடுத்து ஒன்றாமையும், பிரிந்துழி நிகழும் அன்பினது அகலங்காரணமாகப் பொருள்செய்யக் குறித்தாரைப் பிரிவாற்றாமை யிடைநின்று தடுத்து ஒன்றாமையுமாய், ஒன்று ஒன்றனோடு ஒன்றாது வரும் பொருட்டிறத்துப் பிரிதற்குத் தலைவன் உள்ளம் எடுத்த பகுதிக்கண்ணும்

எனவே, நாளது சின்மையும் தாளாண்பக்கமும் இன்மைய திளிவும் அன்பின தகலமும் பொருள்செயல்வகைப்பால ஆதலும் இளமையதருமையும் தகுதிய தமைதியும் உடைமைய துயர்ச்சியும் அகற்சிய தருமையும் இன்பத்தின்பால ஆதலும் கூறினர். இவ்வெட்டும் பொருள் செயற்கு ஒன்றாவென்னுமோ எனின், வாழ்நாள் சிறிதென்று உணர்ந்து அதற்குள்ளே பொருள்செய்து அறமும் இன்பமும் பெறுதற்குக் கருதியவழி ஆண்டு முயர்ச்சியும் இன்மையால்வரும் இளிவரவும் அதற்கு ஒருப்படுத்தும் கருவியாதலானும், பொருள் பின்பு அன்பிற்குப் பெருக்கம் தருமாதலானும், இந்நான்கும் பொருள்செய்தற்கு வேண்டுமென மறுக்க. இவ்வெட்டற்கும் தலைவன் கூற்றாக உதாரணம் வருவன உள வேற் கண்டுகொள்க.

> "ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
> செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
> கம்மா வரிவையும் வருமோ
> வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே" (குறுந்-63)

இக் குறுந்தொகையுள் இன்மையதிளிவு நெஞ்சிற்குக் கூறியவாறு காண்க. பகுதியென்றதனானே, தலைவன் பிரிவலெனக் கூறுவனவும் பிறவும் கொள்க.

> "இன்றே சென்று வருது நாளைக்
> குன்றிழி யருவியின்..." (குறுந் – 189)

என வரும்.

இது குறுந்தொகை.

இவை வாணிகர்க்கே உரியன.

இனித் தலைவன் கூற்றினைத் தலைவியும் தோழியும் கொண்டு கூறுவன பெரும்பான்மை. அவையெல்லாம் 'நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே' (தொல் - பொ - 44.) என மேல்வரும் சூத்திரத்துள் காட்டுதும்.

வாயினும் கையினும் வகுத்த பக்கமொடு ஊதியம் கருதிய ஒரு திறத்தானும் - உண்மைப் பொருளிடத்தும் அதற்கேற்ற ஒழுக்கத்திடத்தும் கூறுபடுத்துக் கூறிய நூல்களால் பெறும் பயனைக் கருதிய ஒரு கூற்றின் கண்ணும்;

என்றது, வீடுபேற்றிற்கு உதவியாகிய நூல்களை ஓதற்குப் பிரிவுழியு மென்றதாம். இதற்குத் தலைவன் கூற்றாக உதாரணம் வருவன உளவேற் கொள்க.

புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும் - போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறுத்தல் அரசியலன்று ஆதலிற் றமக்கேற்ற புகழும் பெருமையும் எடுத்துக்காட்டி இதனாற் பிரிது மெனத் தலைவியையும் தோழியையும் வற்புறுத்தற்கண்ணும்;

இதற்குத் தலைவன் கூற்று வந்துழிக் காண்க.

தூது இடையிட்ட வகையினானும் - இருபெரு வேந்தர் பொருவது குறித்துழி இருவரையும் சந்து செய்வித்தல் பொருட்டுக் கூட்டத்திற்கு இடையிட்ட பிரிதல் பகுதிக்கண்ணும்;

ஒருவனுழை ஒருவன் மாற்றம் கொண்டுரைத்தலின் தூதாயிற்று. வகையென்றார், வாணிகரில் அரசர்க்கும் அரசரில் அந்தணர்க்கும் தூது சிறந்ததென்றற்கும் குறுநிலமன்னர்க்குப் பெரும்பான்மை யென்றற்கும், வேந்தர் தம்மின் இழிந்தாருழைத் தூதுசேறல் உரித்தன்றென்றற்கும். இதற்குத் தலைவன் கூற்று வந்துழிக் காண்க.

ஆதித்தோன்றும் பாங்கோர் பாங்கினும் - தனக்கு ஆக்கம் சிறந்த நட்புடையோராகித் தோன்றும் நட்புடையோர்க்கு உற்றுழி உதவச் சேறற்கண்ணும்;

இதற்கு "மலைமிசைக் குலைஇய" (அகம் 84) என்பதூஉம் 'இருபெரு வேந்தர் மாறுகொள்" (அகம்-172) என்பதூஉம்

முன்னர்க் காட்டினும். அவற்றை உதாரணமாகக் கூறிக் கொள்க.

மூன்றன் பகுதியும் - அறத்திறற் பொருளாக்கி அப் பொருளால் காமநுகர்வலென்று பிரிதற்கண்ணும் ; மண்டிலத்து அருமையும் - அங்ஙனம் பொருள் வருவாய்க்கு ஏதுவாகிய வேற்றுப் புலங்களின் அருமைகூறிப் பிரிதற்கண்ணும்;

இதற்குத் தலைவன் கூற்று வந்துழிக் காண்க.

தோன்றல் சான்ற மாற்ருேர் மேன்மையும் - தோற்றம் சான்ற புகழினராகிய வேற்று வேந்தர் தமது மீக்கூற்றம் கருதிப் பிரிதற்கண்ணும்;

இதற்குத் தலைவன் கூற்று வந்துழிக் காண்க.

தோன்றல் சான்ற என்றதனுல் தெவ்வர் தன்னின் மிக்கா ரெனக் கேட்டுழி அழுக்காறு தோன்றலின் அதுவும் பிரிதற்கு ஏதுவா மென்றுணர்க. இஃது அரசர்கேயுரித்து.

பாசறைப் புலம்பலும் - தலைவன் பாசறைக்கண் இருந்து தனக்கு வெற்றி தோன்றிய காலத்தும் தான் அவட்குக் கூறிப் போந்த பருவம் வந்துழியும் தூது கண்டுழியும் அவள் வருந்துவ ளென நினைத்துத் தனிமை கூறும் இடத்தும்;

இதனைக் 'கிழவிநிலையே' (தொல் - பொ - கற் - சரு) என்னும் சூத்திரத்தான் விலங்குவரெனின், அதற்கு உம்மைவிரித்துக் கிழ்வி நிலையை வினைசெய்யாநிற்றலாகிய இடத்து நினைந்து கூறினுகக் கூருர்; வெற்றி நிகழுமிடத்தும் தான் குறித்த பருவம் வந்துழியும் தூது கண்டுழியும் வருத்தம் விளங்கிக் கூற்றுத் தோன்றுமென்று பொருளாமென்றுணர்க.

முடிந்த காலத்துப் பாகனொடு விரும்பிய வினைத்திற வகை யினும் - வகையின் வினைத்திறமுமென மாற்றுக : வேந்தன் எடுத்துக்கொண்ட வினை முடிந்தகாலத்துத் தான் போக் கொருப்பட்டு நின்று பாகனொடு விரும்பிக் கூறிய வகையின்கண் தோன்றிய வேருேர் வினைத்திறத்திடத்தும்;

என்றது, அரசனுக்குப் பின்னும் ஓர் பகைமேற் சேறல் உளதாதலே.

காவற்பாங்கின் பக்கமும் - வேந்தன் தன்னால் காக்கப்படு வனவாகிய பகுதிகளின் கூற்றில் பிரியுமிடத்தும் ;

பகுதி ஆகுபெயர் ; அவை யானை குதிரை முதலியவற்றைக் காத்தலும் அரசர்க்குத் தருமமாகிய வேட்டையிற்சென்று கடுமா கொன்று ஏனையவற்றைக் காத்தலும் முதலியன.

ஆங்கோர் பக்கமும் - அவன் காத்தற்லரிய பலதிக்கண்ணே நிற்பார் கூற்றில் பிரியுமிடத்தும்;

அவர் தாபதர் முதலியோர் பலருமாம்.

பரத்தையின் அகற்சியில் பரிந்தோட்லறுகி இரத்தலும் தெளித்தலும் என இருவகையோடு - பரத்தையிற் பிரிதற் காரணத்தால் பரிபுலம்பெய்திய தலைவியை எய்தி இரத்தலும் இரந்தபின்னர் ஊடலுணர்த்தலும் என்ற இருபகுதியோடே; உரைத்திற நாட்டம் கிழவோன் மேன - முற்கூறிய இடங்களில் கூற்று நிகழும் கூறுபாட்டை நிலைபெறுத்துதல் தலைமகனிடத்தனவாம் என்றவாறு.

(எ - டு)

"ஆறுசெல் வருத்தஞ் சீறடி சிவப்பவுஞ்
சினைநீங்கு தளிரின் வண்ணம் வாடவுந்
தான்வர றுணிந்த விவளினு மிவளுடன்
வேய்பயி லழுவ முவக்கும்
பேதை நெஞ்சம் பெருந்தகு வுடைத்தே."

இது தோழியோடு வலித்தது.

அப்பாற்பட்ட ஒருதிறத்தானும் என்றதனானே, தலைவி யிடத்துத் தலைவன் கூறுவன பலவும் கொள்க.

(எ - டு)

"வாள்வரி வயமான் கோளுகிர் அன்ன
செம்முகை யவிழ்ந்த முண்முதிர் முருக்கின்
சிதரற் செம்மல் தாஅய் மதரெழின்
மாணிழை மகளிர் பூணுடை முலையின்

முகைபிணி அவிழ்ந்த கோங்குமொ டுசைஇநனை
அதிரல் பரந்த அந்தண் பாதிரி
உதிர்வீ அஞ்சினை தாஅய் எதிர்வீ
மராஅ மலரோடு விராஅய்ப் பராஅய்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் நயவரும் அம்ம
கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பிற்
பிடிமிடை களிற்றில் தோன்றுங்
குறுநெடுந் துணைய குன்றமும் உடைத்தே." (அகம் 99)

இவ் வகப்பாட்டு தலைவியை மருட்டிக் கூறியது.

"உயர்கரைக் கானியாற் றவிரற லகன்றுறை
வேனிற் பாதிரி விரைமலர் குவைஇத்
தொடலை தைஇய மடவரன் மகளே
கண்ணினுங் கதவநின் முலையே
முலையினுங் கதவநின் றடமென் றோளே."
(ஐங்குறு - 361)

இவ் வைங்குறுநூறு உடன்போயவழித் தலைவன் புகழ்ச்சிக்கு நாணித் தலைவி கண்புதைத்துழி அவன் கூறியது.

"அழிவில முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
னலமென் பணைத்தோ ளெய்தின மாகலிற்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறு நெடிது வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ்குயி லாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே" (நற்றிணை - 9)

எனவரும். இது புணர்ச்சி மகிழ்ந்தபின் வழிவந்த நன்மை கூறி வருந்தாது ஏகென்றது. இது நற்றிணை.

பிறவும் வேறுபட வருவனவெல்லாம் இதனுள் அமைக்க.

"இரும்புலிக் கிரிந்த கருங்கட் செந்நாகு
நாட்டயிர் கடைகுரல் கேட்டொறும் வெரூஉ
மாநிலைப் பள்ளி யல்க நம்மொடு
மானுண் கண்ணியும் வருமெனின்
வாரார் யாரோ பெருங்க லாறே"

இது விடுத்தற்கண் கூறியது.

"வினையமை பாவையி னியலி நுந்தை
மனைவரை யிறந்து வந்தனை யாயிற்
றலைநாட் கெதிரிய தண்பத வெழிலி
யணிமிகு கானத் தகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டு
நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கி னிரும்புறம் மொருந்தி
யமர்வரி னஞ்சேன் பெயர்க்குவ
னுமர்வரின் மறைகுவன் மாஅ யோனே."

(நற்றிணை. 362)

இது நற்றிணை.

"நுமர்வரி னோர்ப்பி னல்ல தமர்வரின்
முந்நீர் மண்டில முழுது மாற்று
தெரிகணை விடுத்தலோ விலனே
யரிமதர் மழைக்கண் கலுழ்வகை யெவனே."

இவை தமர் வருவரென ஐயுற்றுக் கூறியன. அவர் வந்து கற்பொடு புணர்ந்தன வந்துழிக் காண்க.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்

பிரிவெண்ணிப் பொருள்வயிற் பெயர்ந்தநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி."
(கலி - (11)

இதனுள் எனவென்றதனால் தலைவன் கூற்றுப் பெற்றும். இது மூன்றன் பகுதி.

"புகழ்சால் சிறப்பிற் காதலி புலம்பத்
துறந்துவந் தோயே யருந்தொழிற் கட்டூர்
நல்லேறு தழீஇ நாகுபெயர் காலை
யுள்ளுதொறுங் கலிழு நெஞ்சம்
வல்லே யெம்மையும் வரவிழைத் தனையே."
(ஐங்குற - 445)

இது பகைவயிற் பிரிந்தோன் பருவம்கண்டு தலைவியை நினைத்து நெஞ்சொடு புலம்பியது

"முல்லை நாறுங் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவ மாஅ யோயே
பாசறை யருந்தொழி லுதவிநங்
காதல்நன் னாட்டுப் போதரும் பொழுதே."
(ஐங்குறு - 446)

இது வேந்தற்குற்றுழிப் - பிரிந்தோன் பருவவரவின்கண் உருவு வெளிப்பட்டுழிப் புலம்பியது. உதவியென்றலின் வேந் தற்குற்றுழி யாயிற்று.

"வந்தாற்றுன் செல்லாமோ வாரிடையாய் வார்கதிரால்
வெந்தாற்போற் றேன்றுநீள் வேயத்தந்—தந்தார்
தகரக் குழல்புரளத் தாழ்துகில்கை யேந்தி
மகரக் குழைமறித்த நோக்கு." (திணைமாலை நூற் - 77)

இஃது உருவு வெளிப்பட்டுழி. நின்னொடு போதுவேன் என்று அவளை ஆற்றுவித்தது. திணைமாலையிற்பாலை.

'நனிசேய்த் தென்னாது நற்றே ரேறிச்சென்
றிலங்கு நிலவி னிளம்பிறை போலக்
காண்குவெந் தில்லவவள் கவின்பெறு சுடர்நுதல்

விண்ணுய ரரண்பல வெளவிய
மண்ணுறு முரசின் வேந்துதோழில் விடினே''
(ஐங்குறு - 443)

இது வேந்தற்குற்றுழிப் பிரிந்தோன் தான் குறித்த பருவத்து வினை முடியாமையில் புலம்பியது.

''முழங்குகுரன் முரசங் காலை யியம்பக்
கடுஞ்சின வேந்தஅ ஞெழிலெதிர்ந் தனனே
மெல்லவன் மருங்கின் முல்லைப் பூப்பப்
பொங்குபெயற் கனைதுளி காரெதிர்ந் தன்றே
யஞ்சி லோதியை யுள்ளுதொறுந்
துஞ்சா தலமர ளுமெதிர்ந் தனமே.'' (ஐங்குறு-448)

இது வேந்தற்குற்றுழிப் பிரிந்தோன் பருவம்வந்துழி மீளப் பெறுது அரசன்செய்தியும் பருவத்தின் செய்தியும் தன் செய்தியும் கூறிப் புலம்பியது. இப் பாசறைப் புலம்பல் பத்தினுள்ளும் வேறுபாடு காண்க. தூதிற்பிரிந்துழிப் புலம்பின வந்துழிக் காண்க.

''நீடின மென்று கொடுமை தூற்றி
வாடிய நுதல ளாகிப் பிறிதுநினைந்
தியாம்வெங் காதலி ஞேய்மிகச் சாஅய்
சொல்லிய துரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே''. (ஐங்குறு-478

இது தூதுகண்டு அவள் கூறிய திறம் கூறெனக் கேட்டது.

''பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமொ டரும்படர் ருழப்போள்
கையறு நெஞ்சத் துயவுத்துணை யாகச்
சிறுவரைத் தங்குவை யாயிற்
காண்குவை மன்னுற் பாணவெந் தேரே'' (ஐங்குறு-477)

இது தலைவிமாட்டுப் பாணனைத் தூதாக விடும் தலைவன் கூறியது.

"படுந்தடங்கட் பல்பணைபோல் வான்முழங்கன் மேலுங்
கொடுந்தடங்கட் கூற்றமின் னுக - நெடுந்தடங்க
ணீர்நின்ற நோக்கி னெடும்பணைமென் றோளாட்குத்
தேர்நின்ற தென்னுய் திரிந்து" (திணைமாலை நூற்-115)

இஃது இளையோரைத் தூதுவிட்டது.

"ஐய வாயின செய்யோள் கிளவி
கார்நா ளுருமொடு கையறப் பிரிந்தென
நோய்நன்கு செய்தன் றெமக்கே
யாமுறு துயரமவ ளறியினோ நன்றே". (ஐங்குறு-441)

இது வினைமுடியாமையின் பருவங்கண்டு மீளப்பெறுத தலைவன் தூதர் வார்த்தை கேட்டு வருந்தியது. பிறவும் வேறுபட வருவன கொள்க.

"முரம்புகண் ணுடையத் திரியுந் திகிரியொடு
பணைநிலை முனைஇய வயமாப் புணர்ந்து
திண்ணிதின் மாண்டன்று தேரே
யொண்ணுதற் காண்குவம் வேந்துவினை விடினே"
(ஐங்குறு-449)

இது வேந்தன் திறைகொண்டு மீள்வுழித் தானும் சமைந்த தேரை அழைத்துக்கொண்டு 'திண்ணிதின் மாண்டன்று தே'ரெனப் பாகனொடு கூறியவழி அவ்வேந்தன் திறைவாங்காது வினைமேற் சென்றுழிகப் பாகனை நோக்கிக் கூறியது. இவை ஐங்குறு நூறு. "மலைமிசைக் குலைஇய்" என்னும் (84) அகப்பாட்டும் அது. கலித்தொகையுள் "புத்தியானை வந்தது காண்பான்யான் தங்கினேன்" (மருதக்கலி-32) என்பன முதலியவற்றுன் யானை முதலியவற்றையும், கடவுட் பாட்டால் (மருதக்கலி - 28) தாபதரையும் காத்தற்குப் பிரிந்தேன் எனக்-கூறினுனென்பது பெற்றும்.

"ஒரூஉக், கொடியிய னல்லார் குரனுற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிய வெமக்குநீ யாரை பெரியார்க்
கடியரோ வாற்று தவர்;

கடியர்தமக், கியார்சொல்லத் தக்கார் மற்று;
வினைக்கெட்டு, வாயல்லா வெண்மை யுரையாது
கூறுநின்
மாய மருள்வா ரகத்து;
ஆயிழாய், நின்கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா
வென்க ணெவனோ தவறு;
இஃதொத்தன், புள்ளிக்கள்வன் புனல்சேர் பொதுக்
கம்போல்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவு
மொள்ளிதழ் சோர்ந்தநின் கண்ணியு நல்லார்
சிரறுபு சீறச் சிவந்தநின் மார்புந்
தவறுதல் சாலாவோ கூறு;
அதுதக்கது, வேற்றுமை யென்கண்ணோ வோராதி
தேற்றக்கண் டீயாய் தெளிக்கு; [தீ தின்மை
இனித் தேற்றேம் யாந்
தேர்மயங்கி வந்த தெரிகோதை யந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீகூறும் பொய்ச்சூ ளணங்காயின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு." (கலி - 88)

இதனுள் இரத்தலும் தெளித்தலும் வந்தவாறு காண்க. பிறவும் இவ்வாறு வருவன கொள்க.

(வி - ரை) ஒன்றாத்தமர், ஒன்றாப்பருவம், ஒன்றாச்சுரம் எனவும். மாறாக ஒன்றியதமர், ஒன்றியபருவம், ஒன்றிய சுரம் எனவும் இயைத்துக் கொள்ளல் வேண்டும். ஒன்றாத்தமர்:- உடன் போக்கிற்கு ஒருப்படாத சுற்றத்தார். ஒன்றாப்பருவம் - இற்செறிப்பால் புறம் போதற்குரிய காலமும் தலைவனோடு கூட்டம் பெறாமையால் ஆற்றியிருக்கும் பருவமும். ஒன்றாமை ஒன்றாச்சுரம் - அரிய சேயகல்லதர் ஆதலின் உடன்போதற்கு ஒன்றாமை. சுரம் - அருஞ்சுரத்தின்கண் உள்ள வழி. அது செல்லுதற்கு அரியது சேயது கற்கள் நிறைந்தது. ஆதலின் அரிய சேய கல்லதர் என்றார்.

தமரிடத்து ஒன்றுதலாவது அவர்காணும் கடுஞ்சொல் கேட்டதற்கு ஒருப்படுதலாம். பருவத்தின் கண் ஒன்றுதலாவது நொதுமலர் வரைவிற்கு ஆற்றாமையால் உடன் போக்கிற்கு

ஏலாத கடுங்கோடை என்றும் கருதாது உடன் போக்கிற்கு உடன்படுதலாம். சுரத்தின்கண் ஒன்றலாவது அரியசேய கல்லதர் எனக் கருதாது தலைவியை அழைத்துச் சேறற்கு உடன்படுதலாம்

இற்செறிப்பு - தலைவியின் நாற்றம் தோற்றம் முதலாயின மாறுபடுதல் கண்டு அவளைப் புறத்தே செல்லவிடாது வீட்டின் கண்ணேயே இருக்குமாறு செய்தல். நொதுமல்-அயலார். கடைக் கொண்டு பெயர்த்தல் - மீட்டுக் கொண்டு பெயர்தல். கடைக் கொண்டு-பின் சென்று என்பது நச்சினார்க்கினியர் உரை. முன்னத் தால் - குறிப்பால்.

நாளது சின்மை தாளாண் பக்கம் இன்மையது இளிவு அன்பினது அகலம் ஆகிய நான்கும் பொருள் செய்தற்கு ஊக்கப்படுத்துவன. இளமையது அருமை தகுதியது அமைதி உடைமையது உயர்ச்சி அகற்சியது அருமை என்ற நான்கும் பொருள் செய்தற்குத் தடுப்பன என்பது நச்சினார்க்கினியர் கருத்து. ஆனால் இளம் பூரணர் இவ் வெட்டுமே பொருள் செய்தற்குத் தடைப்படுத்துவன என்பர். அதனை நச்சினார்க்கினியர் மறுக்கின்றார். எனினும் நூற்பா அமைதியை நோக்குமிடத்து இளம்பூரணர் கருத்தே பொருத்தம் எனத் தெரிகிறது. இவ் வெட்டும் பொருள் செய்தற்குத் தடை என்பதை இளம்பூரணர் பின்வருமாறு விளக்குகிறார்.

நாளது சின்மையை ஒன்றுமையாவது யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை. இளமையது அருமையை ஒன்றுமையாவது பெறுதற்கரிய இளமை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை. தாளாண்பக்கத்தை ஒன்றுமையாவது முயற்சியான் வரும் வருத்தத்தை உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை. தகுதியது அமைதியை ஒன்றுமை யாவது பொருள்மேல் காதல் உணர்ந்தோர்க்குத் தகாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை. இன்மையது இளிவை ஒன்று. மையாவது இன்மையான் வரும் இளிவரவினைப் பொருந்தாமை. உடைமையது உயர்ச்சியை ஒன்றுமையாவது பொருள் உடை யார்க்கு அமைவு வேண்டுமன்றே அவ்வமைவினைப் பொருந் தாமை; அஃதாவது மேன் மேலும் ஆசை செலுத்தல். அன்

பினது அகலத்தை ஒன்றாமையாவது சிறந்தார் மாட்டுச் செல்லும் அன்பினைப் பொருந்தாமை. அகற்சியது அருமையை ஒன்றாமை யாவது பிரிதலருமையைப் பொருந்தாமை. பொருள் தேடுவார் இத்தன்மையராதல் வேண்டுமென ஒருவாற்றான் அதற்கு இலக்கணம் கூறியவாறு.

வாய்மை என்பது வாய் என நின்றது எனக் கருதிய நச்சினார்க்கினியர் வாய் என்பதற்கு உண்மைப் பொருள் எனவும் மை என்பதற்கு அதற்கேற்ற ஒழுக்கம் எனவும் பொருள் கூறினர். எனவே மெய்யுணர்வு கைவரப் பெறுதற்கு உரிய நூல்களை ஓதற்கும், அதன் வழி ஒழுகுதற்கும் உரிய பிரிவு என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகின்றது. இளம்பூரணர் இத் தொடர்க்கு வேறு விதமாகப் பொருள் கூறுகின்றார். வாயிலில் வகுத்த பக்கமாவது ஓதுதல், கையால் வகுத்த பக்கமாவது படைக்கலம் பயிற்றலும் சிற்பம் கற்றலும். ஊதியம் கருதிய ஒரு திறனாவது மேற் சொல்லப்பட்ட பொருள் வயிற் பிரிதலின்றி அறத்திறம் காரணமாகப் பிரியும் பிரிவு. இது மறுமைக்கண் பயன் தருதலிற் ஊதியமாயிற்று என்பது அவர் தரும் விளக்கமாகும். எனவே அறிவுக்கல்வி, தொழிற்கல்வி, மெய்யுணர்தல் ஆகிய மூன்றற்கும் உரிய பிரிவை இத் தொடர் கூறுவதாக அவர் கூறுகின்றார். இக்காலக்கல்வி முறையோடு இணைத்துக் காண்டல் சுவை தருவதாகும்.

பொதுச் சொல் பொறுத்தல் – தான் ஆளும் நிலம் தனக்கு மட்டும் உரியதன்றிப் பிறர்க்கும் பொது எனக் கூறும் சொல்லை ஏற்றுக் கொள்ளுதல். புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும் என்பது பிரிந்ததனால் வரும் புகழும் பிரியாமையால் வருங் குற்றமும் குறித்துத் தலைமகளை யான் வருந்துணையும் ஆற்றி யிருத்தல் வேண்டும் எனக் கூறுதற் கண்ணும் தலைவற்குக் கூற்று நிகழும் எனப் பொருள் காண்பர் இளம்பூரணர். மானம் – குற்றம் என்பது இவர் கருத்து. தொல்காப்பியர் இச்சொல்லை இப் பொருளில் பலவிடத்தும் எடுத்தாண்டுள்ளனர்.

மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும் தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும் பாசறைப் புலம்பலும் என்ற பகுதிக்கு இளம்பூரணர் கூறும் உரை வேறாகும்.

மூன்றன் பகுதியாவன, நால்வகை வலியினும் தன் வலியும் துணை வலியும் வினை வலியும் என்பன அவை பகைவர் யாட்டு உள்ளன. மண்டிலத்து அருமையாவது பகைவர் மண்டிலம் கொண்ட அருமை என்றவாறு. தோன்றல் சான்ற என்பது (இவை) மிகுதல் சான்ற என்றவாறு. மாற்றோர் மேன்மையாவது மாற்றோரது உயர்ச்சியானும் என்றவாறு. ஆறன் உருபு எஞ்சி நின்றது. மூன்றும் பகுதியானும் மண்டிலத்து அருமையானும் தோன்றல் சான்ற மாற்றோர் எனக் கூட்டுக பாசறைப் புலம்பல் என்பது பாசறைக்கண் தலைமகன் தனிமையுரைத்தல் என்றவாறு. தூதிடை வகையினாலும் வேந்தர்க்கு உற்றுழியினாலும் மாற்றோர் மேன்மையினாலும் பாசறைக்கண் புலம்பல் எனக் கூட்டுக. அஃதாவது தூதினும் வேந்தற்குற்றுழியினும் பகைதணிவினை யினும் பாசறைக்கண் புலம்பல் உளதாகும் எனக் கொள்க.

வேற்று வேந்தர் தமது மீக்கூற்றம் - வேற்று வேந்தரைப் பற்றி உயர்த்திக் கூறும் சொல்.

இழுவி நிலையே வினையிடத்து உரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்

என்பது கற்பியலிலுள்ள நூற்பாவாகும். தலைவன் பாசறையின் கண் புலம்புதற்குரிய காலத்தை வரையறை செய்வதாக இச்சூத்திரம் அமைந்துள்ளது. அந்நூற்பாவில் கூறவிருக்கும் உரையையே இந் நூற்பாவிலும் தந்துள்ளார். வினை செய்யா நிற்றலாகிய இடம் - வினை செய்து கொண்டிருக்கும் காலம்.

வினை முடிந்த காலத்துத் தலைவன் பாகனொடு கூறுவதைப் பாசறைக்கண் கூறலும் மீண்டு இடைச் சுரத்துக் கூறலும் என இருவகைப்படுத்துவர் இளம்பூரணர். இன்னும் வகை என்றதனால் நெஞ்சிற்குக் கூறியனவும் கொள்க என்பர் அவர்.

கடுமா – மக்களுக்கு ஊறு செய்யும் கொடிய விலங்குகள். மாநிலம் காவலனாவான் மன்னுயிர்க் காக்கும் காலைத் தன்னாலும் தன் பரிசனத்தாலும் பகைவராலும் கள்வராலும் விலங்குகளாலும் மக்களுக்கு வரும் ஊறுபாட்டினைக் காக்க வல்லனாதல் வேண்டும் என்பது அரசர்க்குரிய அறமாகும். ஆதலின் கடுமாக் கோறல் அறமேயாம்.

தாபதர் - தவம் செய்யும் முனிவர். நாலிரு வழக்கில் தாபதப்பக்கம் (புறத் - 20) எனவரும் தொடருக்குத் தவம்புரிவார் என்றும் தவம் செய்து யோகம் செய்வார் என்றும் இருவகைப் படுத்தி விளக்குவார் இவர். அவ்வாறு பின்னர் உரைக்க இருப்பதை உளங்கொண்டே தாபதர் முதலியோர் பலருமாம் என இங்குக் கூறினர். சேரன் செங்குட்டுவன் வட இமயத்தில் படை எடுக்கச் சென்றபோது இத்தகைய தாபதரைக் காக்க வேண்டும் என வேண்டிக் கொண்டதும் ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

காவல் பாங்கின் ஆங்கோர் பக்கம் என்ற தொடரைக் காவல் பாங்கின் பக்கமும் ஆங்கோர் பக்கமும் என நச்சினர்க் கினியர் பிரித்துப் பொருள் கூறினர். இளம்பூரணர் பிரியாது ஒன்றாக வைத்து வேறு சில பிரிவுகளைக் கூறினர், அது வருமாறு: காவல் பாங்கின் ஆங்கோர் பக்கமும் என்பது காவற்பக்கத்தின் கண் ஒரு பிரிவினும் கூற்று நிகழும் என்றவாறு. 'ஆங்கு' என்பது இடங்குறித்து நின்றது. நின்னுங்கு வரூஉம் என் நெஞ்சினை (கலி - பாலை - 22) என்றாற்போலக் கொள்க. அது வாரியுள் யானை காணவும் நாடுகாணவும், புனலாடவும், கடவுளரை வழிபடவும் பிரிவே பிரிவாம் ஒருபக்கம் நாட்டெல்லை யிலிருந்து பகைவரைக் காக்க வேண்டிப் பிரிவது பகைவயிற் பிரிவின் அடங்குதலின், அஃதன் தன்மைக்கண் பிரியும் பிரிவு என்று ஓதப்பட்டது.

பரிபுலம்பு எய்திய - மிகுதியாக வருத்தமுற்ற. பக்கம் நீங்குமின் பரிபுலம்பினர் என்ற (சிலம்பு - நாடுகாண் 225) இடத்து இப் பொருளாதல் காண்க.

உரைத்திற நாட்டம் - உரையாடும் குறிப்பு எனப்பொருள் காண்பர் இளம்பூரணர்.

வேய்பயில் அழுவம் - மூங்கில் நிறைந்துள்ள காடு. இவளினும் (தலைவி) இவளை உடன் போக்கற்குத் துணிந்த பேதை (தோழி) நெஞ்சம் பெருந்தகைவுடைத்தெனத் தலைவன் கூறு கின்றான்.

வால்வரி வயமான் - வால் போலும் கோடுகளையுடைய வலிய புலி. கோலுகிர் - கொல்லும் தொழிலையுடைய நகம். சிதர் - வண்டு. நளி அதிரல்-அரும்புகளையுடைய புனலி. எதிர்வீ- மாறுபட்ட பூக்கள். பராஅம் அணங்கு - பரவுக்கடன் பூண்ட தெய்வம். நகரின் மணந்த - கோவிலின்கண் கலந்து கிடக்கும். குறுமகள் - இளைய பெண்ணே. குறுமகள் வாழியோ! பூவின் காணம் நன்று நயவரும் (அது) குறுநெடுந்துணைய குன்றமும் உடைத்து அம்ம கண்டிசின் என முடிக்க.

அவிர் அறல் - விளங்குகின்ற நுண்மணல். கதவ - மிகுசினம் உடைய. அழிவில முயலும் - என்றும் அழிவில்லனவாகிய உறுதிப் பொருள்களை நாடிமுயலும். பொரிப்பூம்புன்கின் - பொரி போன்ற பூக்களையுடைய புன்கமரத்தின். அணங்கு கொளத்திமிரி-தெய்வம் வீற்றிருக்குமாறு அணிந்து கொண்டு. வால் எயிற்றோயே! நின் அலமரல் வருத்தம் தீர நெடிய வைகியும் வண்டல் தைஇயும் வருந்தாது ஏகுதி எனக் கூட்டுக.

இரிந்த - புறக்கிட்டோடிய. வெருஉம் - அஞ்சும். ஆ நிலப் பள்ளி - பசுக்கள் தங்குமிடத்து. அல்க - தங்க.

வினையமை பாவையின் - இயந்திரம் அமைந்த கொல்லிப் பாவை போல. தலை நாட்டு எதிரிய தன் பெயல் எழிலி- முதல் முறையாகப் பெய்யத் தொடங்கிய குளிர்ந்த மழையை வுடைய மேகம். கடும் செம் மூதாய் - விரைந்த செலவினை டைய சிவந்த தம்பலப்பூச்சி. களிறு உறிஞ்சிய - களிற்றினுல் உராயப் பெற்ற, பராரை - பருத்த அடிப்பகுதி. மாயோளே! மூதாய் கண்டும் கொண்டும் நீ விளையாடுக. யானே அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவன் நுமர்வரின் மறைகுவன் எனக் கூட்டுக.

அரிதாய அறன் - பெறுதற்கரிதாகிய அறம். பேணூர்-பகைவர் புரிவு அமர் - மனம் பொருந்திய, வலிப்பல் - அவர்வந்து விடுவார் எனத் துணிகின்றேன். என - நின்னைப்பிரிவதனுல் இம் மூன்றும் கிட்டும் என்று கூறி.

காதலிபுலம்ப - தலைவி தனிமையுற, கட்டூர் - பாசறை. கட்டூரது தொழில் கூறினும் அத்துறைக்குரித்தாகும் (பு.வெ,மா.)

என்ற இடத்தும் இப்பொருளாதல் அறிக. நாகு ஆனினும் நெஞ்சமே காதலி புலம்ப துறந்து வந்தனை, எம்மையும் வர இழைத்தனை. அங்ஙனமாக நாகுபெயர் காலை உள்ளுதொறும் கழுலுவதென்னை எனத்தலைவன் நெஞ்சொடு புலந்ததாகக் கூறினான்.

மாயோயே - மாமை நிறத்தை உடையோய், கமழ்கொள நல்ல காண்குவ - மேலும் நறுமணம் மிகுமாறு நல்ல வாய்த் தோன்றுகின்றன.

உருவு வெளிப் பட்டுழி - தலைவியின் உருவு வெளிப்பட்ட போது. ஆரிடையாய் - அரிய இடையினை உடையாய். வார் கதிரால் - (கதிரவனின்) நீண்ட ஒளிக்கதிரால். அத்தம் - காடு தகரக்குழல் - மயிர்ச்சாந்து அணிந்த கூந்தல். மரித்த - சென்று மீண்ட.

மண்ணுறு முரசின் - மண்பூசிய முரசு. வேந்து தொழில் விடின் அவள் கவின் பெறு சுடர் முதல் காண்குவம் என முடிக்க.

தொழில் எதிர்ந்தனனே - வினை முடித்தலைத் தொடங்கினான். மெல் அவல் மருங்கின் - மெல்லிய பள்ளங்களின் அருகே. மெல்லிய பள்ளங்கள் என்றது ஆழமின்மை கருதிற்று. கார் எதிர்ந்தன்றே - கார்ப்பருவம் தொடங்கிற்று.

பனிமலர் - குளிர்ந்தமலர். துனிமலிதுயரம் - வெறுப்பினால் வந்த துயரம்; அவ்வெறுப்பு அன்பு மிகுதியால் வந்ததாம். உயவுத்துணை-உசாவுதற்குரிய துணை. சிறுவரை - சிறிது பொழுது

பல்பணைபோல் - பலமுரசு ஒலிபோல.

ஐயவாயின-வியக்கத் தக்க வாயின; ஐவியப் பாகும் என்பது தொல்காப்பியம். கார்நாள் - கார் காலத்துக்குரிய நாளில். உரும் - இடி.

முரம்பு - பருக்கைக் கற்கள் நிறைந்த மேட்டு நிலம். கண் உடைய - இடம் கெடும்படி. பணைநிலை முனைஇய வயமா - பந்திக்கண் நிற்றலை வெறுத்த வலிமையோடு பொருந்திய குதிரைகள்.

ஒருஉ - எம்மைவிட்டு நீங்குவாயாக. குரல் - வெண்மயிர். வாயல்லா வெண்மை - உண்மையல்லாத வெண்மைச் சொற்கள். கண் பெறின் அல்லால் - கண்ணோட்டத்தைப் பெற்றால் அல்லது. புள்ளிக் கள்வன் - புள்ளிகளையுடைய நண்டுகள். பொதுக்கம் - நடையாலாய வடு. சிரறுபு - அடிக்க. தவறுதல் சாலாவோ - தவறாக அமையாவோ. (41)

உடன்போய வழி ஏனையோர்க்குரிய கிளவிகள்

42. எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே.

இது முன்னர்க் கூற்றிற்கு உரியரெனக் கூறாதோர்க்கும் கூற்று விதித்தலின் எய்தாத தெய்துவித்தது.

(இ - ள்.) எஞ்சியோர்க்கும் - முன்னர்க் கூறாது நின்ற செவிலிக்கும் தலைவிக்கும் ஆயத்தோர்க்கும் அயலோர்க்கும்; எஞ்சுதல் இலவே - கூற்று ஒழிதலில என்றவாறு.

செவிலிக்குக் கூற்று நிகழுமாறு :—

"கிளியும் பந்துங் கழங்கும் வெய்யோள்
அளியும் அன்புஞ் சாயலும் இயல்பும்
முன்னாள் போலாள் இறீஇயரென் உயிரெனக்
கொடுந்தொடைக் குழவியொடு வயின்மரத் தியாத்த
கடுங்கட் கறவையிற் சிறுபுற நோக்கிக்
குறுக வந்து குவவுநுதல் நீவி
மெல்லெனத் தழீஇயினே னாக என்மகள்
நன்னர் ஆகத் திடைமுலை வியர்ப்பப்
பல்கால் முயங்கினள் மன்னே அன்னோ
விறன்மிகு நெடுந்தகை பலபா ராட்டி
வறனிழல் அசைஇ வான்புலந்து வருந்திய
மடமான் அசாவினந் திரங்குமரல் சுவைக்குங்
காடுடன் கழிதல் அறியின் தந்தை
அல்குபத மிகுத்த கடியுடை வியனகர்ச்
செல்வுழிச் செல்வுழி மெய்ந்நி ; ல் போலக்
கோதை யாயமோ டோரை தழீஇத்

தோடமை அரிச்சிலம் பொலிப்ப அவள்
ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே." (அகம் - 49)

இவ் வகப்பாட்டு உடன்போன தலைவியை நினைந்து செவிலி மனையின்கண் மயங்கியது.

"அத்த நீளிடை யவனொடு போகிய
முத்தேர் வெண்பன் முகிழ்நகை மடவர
ஞய ரென்னும் பெயரே வல்லா
றெடுத்தேன் மன்ற யானே
கொடுத்தோர் மன்றவவ ளாயத் தோரே."
(ஐங்குறு - 380)

இவ் வைங்குறுநூறு செவிலி தெருட்டுவார்க்குக் கூறியது. "முலைமுகம் செய்தன முள்ளெயி றிலங்கின" என்னும் அகப்பாட்டு (7) மகட்போக்கிய செவிலித்தாய் சுரத்திடைப் பின் சென்று நவ்விப்பிணையைக் கண்டு சொற்றது. செவிலி கானவர் மகளைக் கண்டு கூறியதுமாம்.

"காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
யகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே." (குறுந் - 44)

இக் குறுந்தொகை செவிலி சுடத்திடைத் தன்நெஞ்சிற்குச் சொல்லியது.

"இடிதுடிக் கம்பலையு மின்னாத வோசையு மிசையி னராக்
கடுவினை யாளர் கடத்திடைப் பைங்குரவே கவன்று
நெடுவினை மேற்செய்த வெம்மேபோ னீயும் (நின்றாய்
படுசினைப் பாவை பறித்துக்கோட் பட்டாயோ பையக்
கூறாய்."

இது செவிலி குரவொடு புலம்பியது

"தான்றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
வின்றாய்நீ பாவை யிருங்குரவே - யீன்றாள்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து." (திணைமாலை நூற் - 65)

இது குரவே வழிகாட்டென்றது.

"குடம்புகாக் கூவல் குடிகாக்குஞ் சின்னீ
ரிடம்பெறு மாதிரியு மேறுநீ ளத்த
முடம்புணர் காத லுவப்ப விறந்த
தடம்பெருங் கண்ணிக்கு யான்றுயர் கண்டீர்."

இது நீ யாரென்று வினயினார்க்குச் செவிலி கூறியது. இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதனான் அமைத்துக் கொள்க.

இனித் தலைவிகூற்று நிகழுமாறு:—

"பைபயப் பசந்தன்று நுதலுஞ் சாஅய்
ஐதா கின்றென் தளிர்புரை மேனியும்
பலரும் அறியத் திகழ்தரும் அவலமும்
உயிர்கொடு கழியின் அல்லதை நினையின்
எவனோ வாழி தோழி பொரிகால்
பொகுட்டரை யிருப்பைக் குவிகுலைக் கழன்ற
ஆலி யொப்பின் தூம்புடைத் திரள்வீ
ஆறுசெல் வம்பலர் நீளிடை யழுங்க
ஈனல் எண்கின் இருங்கிளை கவரும்
சுரம்பல கடந்தோர்க் கிரங்குப வென்னார்
கௌவை மேவல ராகி இவ்வூர்
நிரைய்ப் பெண்டிர் இன்னா கூறுவ
புரையா அல்லஎன் மகட்கெனப் பரைஇ
நம்முணர்ந் தாறிய கொள்கை
யன்னை முன்னர்யாம் என்னிதற் படலே." (அகம் - 95)

இது போக்குடன்பட்டமை தலைவி தோழிக் குரைத்தது.

அகம்.

"அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீந்துக் காங்குத்
தாங்கு மளவை தாங்கிக்
காம நெரிதரக் கைநில் லாதே." (குறுந் - 149)

இக் குறுந்தொகை நாண் நீங்கினமை கூறியது.

"சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்ப றூற்றச்
சிறுகோல் வலத்த ளன்னை யலைப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமான் பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉ மியறேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே."

(நற்றிணை - 149)

இந் நற்றிணை அலர் அச்சம் நீங்கினமை கூறியது.

"சேட்புல முன்னிய வசைநடை யந்தணிர்
நும்மொன் றிரந்தனென் மொழிவ லெம்மூர்த்
தாய்நயந் தெடுத்த வாய்நலங் கவின்பெற
வாரிடை யிறந்தன ளென்மி
னேரிறை முன்கையென் னையத் தோர்க்கே."

(ஐங்குறு - 384)

இவ் வைங்குறுநூறு 'யான் போகின்றமை ஆயத்திற்கு உரைமின்' என்றது.

"கடுங்கட் காளையொடு நெடுந்தே ரேறிக்
கோள்வல் வேங்கைய மலைபிறக் கொழிய
வேறுபல் லருஞ்சுர மிறந்தன ளவளெனக்
கூறுமின் வாழியோ வாறுசென் மாக்க
ணற்றோ ணயந்துபா ராட்டி
யெற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே."

(ஐங்குறு - 385)

இவ் வைங்குறுநூறு இன்று யான் தேரேறி வருத்தமின்றிப் போகின்றமை யாய்க்கு உரைமின் என்றது.

"கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியுஞ்
சுரநனி வாரா நின்றன ளென்பது
முன்னுற விரைந்தனி ருரைமி
னின்னகை முறுவலென் னுயத் தோர்க்கே."

(ஐங்குறு - 397)

இவ் வைங்குறுநூறு மீள்கின்றுளென்று என் வரவு ஆயத்தார்க்குக் கூறுமின் என்றது.

"வேய்வனப் பிழந்த தோளும் வெயிறெற
வாய்சவின் றுலைந்த நுதலு நோக்கிப்
பரியல் வாழி தோழி பரியி
னெல்லையி லிடும்பை தரூஉ
நல்வரை நாடனொடு வந்த வாறே." (ஐங்குறு - 392)

இவ் வைங்குறுநூறு மீண்டு வந்த தலைவி வழிவரல் வருத்தம் கண்டு வருந்திய தோழிக்குக் கூறியது.

"அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய வவர்நாட்
டுவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலுழி நீரே." (ஐங்குறு - 203)

இஃது உடன் போய் மீண்ட தலைவி 'நீ சென்ற நாட்டு நீர் இனியவல்ல; எங்ஙனம் நுகர்ந்தாயென்ற தோழிக்குக் கூறியது.

"அறஞ்சா லியரோ வறஞ்சா லியரோ
வறனுண் டாயினு மறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற வருவிக்
கோள்வரு மென்னையை மறைத்த குன்றே."

(ஐங்குறு - 312)

இவ் வைங்குறுநூறு நின் ஐயன்மார் வந்துழி நிகழ்ந்தது என்னென்ற தோழிக்குத் தலைவி தலைவனை மறைத்த மலையை வாழ்த்தியது. பிறவும் வேறுபட வருவன வெல்லாம் இதனான் அமைக்க,

இனி ஆயத்தார் கூற்று நிகழுமாறு:—

"மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
தான்வரு மென்ப தடமென் றோளி
யஞ்சின ளஞ்சின ளொதுங்கிப்
பஞ்சி மெல்லடி பரல்வடுக் கொளவே."

இனி அயலோர் கூற்று நிகழுமாறு:—

"துரந்ததற் கொண்டு துயரடச் சாஅ
யறம்புலந்து பழிக்கு மங்க ணாட்டி
யெவ்வ நெஞ்சிற் கேம மாக
வந்தன ளோநின் மடமகள்
வெஞ்சின வெள்வேல் விடலைமுந் துறவே."

(ஐங்குறு - 393)

செய்யுளியலுள் 'பார்ப்பான்பாங்கன்' (தொ - பொ - செய்-190) 'பாணன் கூத்தன்' (தொ - பொ - செய் - 191) என்னும் சூத்திரங்களால் பார்ப்பான் முதலியோர் கூற்றுக் கூறுமாறு உணர்க.

(வி - ரை) மேல் முப்பத்தாறுவது நூற்பா முதல் இந் நூற்பா வரை உடன் போக்கின் கண் கூற்று நிகழ்த்துதற் குரியாரை ஆசிரியர் கூறி வருகின்றார். நற்றாய், தோழி, கண்டோர், தலைவன் ஆகியோர் கூற்று நிகழ்த்துதற்குரியாரை இந் நூற்பா வால் தொகுத்துக் கூறுகின்றார். இந்நூற்பாவில் அவ்வாறு கூற்று நிகழ்த்துதற்கு உரியவராகத் தலைமகள், செவிலி, ஆயத் தோர், அயலோர் ஆகிய நால்வரையும் உரையாசிரியர் குறிக் கின்றார். இளம்பூரணர் தலைமகள், பாங்கன், பார்ப்பான், பாணர் கூத்தர், உழையோர், ஆகியோர் கூற்று நிகழ்த்துதற்குரியார் என்றும், அவர்களை 'எஞ்சியோர்' என்ற தொடரால் ஆசிரியர் குறிக்கின்றார் என்றும் அவர் கருதுவர். இவ்வாறு கருதும் அவர் தலைமகளை ஏனையோரோடு சேர்த்துக் கூறுதல் பொருந்துவதன்று எனக்கூறிப் பின் வருமாறு ஒரு குறிப்பினைத் தருகின்றார்.

'பாங்கர் முதலாயினாரை இச் சூத்திரத்தால் கூறுப; தலை மகள் கூற்றுத் தனித்துக் கூறல் வேண்டும், இவரோடு ஒரு

நிகரன்மையின்' எனின், ஒக்கும். தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப் பழைமையாற் பெயர்த்து எழுதுவார் விழ எழுதினர் போலும், தொல்காப்பியர் கூறிய நூற்பாக்களில் சில இக்காலத்து இல்லாது இருப்பது போலத் தொல்காப்பியர் செய்யாத நூற்பாக்கள் சில இக்காலத்தில் நூலில் இடம் பெற்றிருக்குமோ என்றும் ஆழ நினைதல் வேண்டும்.

மேல் முப்பத்தேழு முப்பத்தெட்டாவது நூற்பாக்களில் செவிலியும் நற்றாயும் தலைவியைத் தேடிச்செல்லும் மரபு கூறப்பட்டதேயன்றி முப்பத்தாறாவது நூற்பாவில் நற்றாய்க் கூற்று உணர்த்தியவாறு போல செவிலிகூற்று உணர்த்தப் பெறாமையின் இந்நூற்பாவில் செவிலியையும் நச்சினார்க்கினியர் 'எஞ்சியோர்' என்பதனால் தழுவிக் கொண்டார். இளம்பூரணர் முப்பத்தேழு முப்பத்தெட்டு ஆகிய இரு நூற்பாக்களிலும் செவிலி கூற்று உணர்த்தியதாகக் கொண்டமையின் இந்நூற்பாவில் செவிலியை அச்சொல்லால் தழுவிக் கொள்ளாராயினர்.

அளி - அருள். சாயல் - மென்மை. கொடுந்தொடைக் குழவி - வளைந்த மாலையையுடைய கன்று. கறவையின் - பசுவைப்போல. சிறுபுறம் - முதுகு. குவவுநுதல் - வளைந்த நெற்றி. வான்புலந்து - மேகத்தை வெறுத்து. மடமான் அசாஅ இனம் - தளர்ச்சியுற்ற இளையமான் கூட்டம். திரங்குமரல் - வற்றிய மரல் செடி. அல்குபதம் - நிலைபெற்ற உணவு. ஓரை தழீஇ - விளையாட்டை மேற்கொண்டு. என்மகள் காடுடன் கடிதல் அறியேன் செல்வுழிச் செல்வுழி மெய்நிழல் போல ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே எனக் கூட்டுக.

மடவரல் - தலைவி. வல்லாறு எடுத்தேன், - வல்லவகையால் பெற்றேன். தலைவிக்குத் தாயரென்னும் பெயர் பெற்றது அல்லது அவளைத் தலைவற்குக் கொடுக்கும் பேறு எனக்கு வாயாமையின் அப்பெயர் பெற்றும் பெறுதவறுனேன். தலைவியைத் தலைவர்க்குக் கொடுக்கும் பேற்றை அவள் ஆயத்தோரே பெற்றனர்.

பரிதப்பின - செலவு ஓய்ந்தன. வாள் - ஒளி. இசையின் அரா - இசைத்தலைக் கேட்டு. குரவே - குரா மரமே. பாவை - பாவை போன்றிருக்கும் குராமரத்தின்.

கோங்க மரத்தின் பூ பெண்களின் மார்பை ஒத்தலின் முலை கொடுப்ப என்றார்.

குடம்புகாக் கூவல் - குடம் சென்று முகவாத அத்துணைச் சிறிய கிணறு. இடம்பெறு - குடித்தற்கு இடம் பெறாத. மாத்திரியும் - விலங்குகள் திரியும் படியான. ஏறு நீள் அத்தம் - சென்று அடைய முடியாத காடு இறந்த - மகிழ்ந்து. சென்ற.

பைப்பயப் பசந்தன்று - மெல்ல மெல்லப் பசுந்தது. சாஅய் ஐதாகின்று - நுணுகி மெல்லிதாகின்றது. பொரிகால் - பொரிந்தஅடி. பொகுட்டு - கொட்டை. ஆலி - பனிக்கட்டி. தூம்புடை - உள்துளையுடைய. ஈனல் எண்கு - ஈன்றகரடி. சிறுசிறை - சிறியகறை. வீந்து உக்காங்கு - வீழ்ந்தால் போன்று.

அம்பல் - பழிமொழி. சிறுகோல் அலந்தனள் - சிறிய கோலைக் கொண்டு அடித்தனள். குருஉச்சுவல் - நிறம் பொருந்திய பிடரிமயிர் கடுமான் — விரைந்து செல்லும் குதிரை. செலவு அயர்ந்திசின் - நீ செல்லுதற்கு யான் உடன்படுகின்றேன். அழுங்கல் - பேரொலி.

ஆரிடை - அரியசுரங்கள். இறந்தனள்-கடந்து சென்றனள். நேரிறை - தம்மில் ஒத்த வளையல்கள்.

கடுங்கண் காளை - நல்ல ஆண்மையையுடைய தலைவன். கோள்வல் வேங்கை - கொல்லுதலில் வல்ல புலிகள். ஆறு செல் மாக்கள் - வழிநடைச் செல்லும் வழிப்போக்கர்களே: விளி. எற்கெடுத் திருந்த - என் நலத்தைத் தலைவன் நுகராதவாறு தடுத்து இற் செறித்திருந்த.

எருத்து - கழுத்து. செந்நாய் ஏற்றை - செந்நாயினது ஆண். குருளைப் பன்றி - குட்டிகளையுடைய பன்றி. சுரன் நனி வாரா நின்றனள் - சுரத்தைக் கடந்து அணித்தாக வருகின்றாள்.

பரியல் - வருந்தற்க.

படப்பை - (மனைப்புறத்திருக்கும்) தோட்டம். உவலைக் கூவல் -தாழ்வான இடத்தில் இருக்கும் பள்ளம். கலுழிநீர் - கலங்கற் செந்நீர்.

அறம் சாலியர் - அறம் நிறைந்து ஓங்குவதாகுக. வறன் உண்டாயினும் - நீர்வளம் குன்றினும். கோள்வரும் என்னை - வலிமை மிக்க என்தலை மகனே. என் தலைவனை மறைத்த குன்று அறம் சாலியரோ என வாழ்த்தியதாகக் கருதுக. அறம் சாலுதல் என்பது பிற இடத்தெல்லாம் நீர் வளம் குன்றினும் இம்மலையிடத்து வளம் குன்றுதிருக்கக் கூறியதாகும்.

ஐயன் மார் - தலைவியின் உடன் பிறந்தாரும் தந்தையரும்.

அதர் - வழி.

துறந்ததற் கொண்டும் - தலைவி தன்னைப் பிரிந்தது முதல். துயர் அடச் சாஅய் - துயரம் வருந்துதலால் உள் மெலிந்து. அங்கணுட்டி - அழகிய கண்ணினை உடையவள். விடலை - தலைவன். (42)

முன் நிகழ்ந்ததைப் பின் நினைதல்.

43. நிகழ்ந்தது நினைத்தற் கேதுவும் ஆகும்.

இதுவும் பாலையாவதோர் இலக்கணம் கூறுகின்றது.

(இ - ள்.) முன்னர் நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி பின்னர் நினைத்தற்குரிய நிமித்தமாம் என்றவாறு.

என்றது, முன்னர்த் தலைவன்கண் நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி பின்னர்த் தலைவி நினைத்தற்கும் ஏதுவுமாம். முன்னர்த் தலைவி கண் நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி பின்னர்த் தலைவன் நினைத்தற்கும் ஏதுவுமாம் என்றவாறும்.

உம்மை எச்சவும்மையாதலின் கூறுதற்குமாம் என்று கொள்க.

(எ - டு)

> "நுண்ணெழின் மாமைச் சுணங்கணி யாகந்தங்
> கண்ணொடு தொடுத்தென நோக்கியு மமையாரென்
> ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவ
> ரெண்ணுவ தெவன்கொ லறியே னென்னும்." (கலி-4)

இது, தலைவன்கண் நிகழ்ந்த மிகுதித் தலையளி வஞ்சமென்று தலைவி உட்கொண்டு பிரியுங்கொல்லென நினைத்தற்கு நிமித்தமாயிற்று. இதனானே தலைவன் செய்திகளாய்ப் பின்னர்த் தலைவி கூறுவனவற்றிற்கெல்லாம் இதுவே ஒத்தாக அமைத்துக்கொள்க.

இனி,

"அளிநிலை பொறாஅ தமரிய முகத்தள்
விளிநிலை கேளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா அளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரனுதி சிதைக்கு நிரைநிலை அதர
பரன்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப வெண்ணுதி ராயி னறத்தா
றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல
முன்னங் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைத் தெற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயின ளுயிர்த்த காலை மாமலர்
மணியுரு விழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனஞ் செலவே ஒண்டொடி
யுழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதுநாம் எனினே." (அகம் - 5)

"இருங்கழி முதலை மேந்தோ லன்ன... ஞான்றே."
(அகம் - 3)

இவை அகம்.

"வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை
கந்துபிணி யானை யயாவுயிர்த் தாஅங்
கென்றூழ் நீடிய வேய்பயி லழுவத்துக்
குன்றூர் மதிய நோக்கி நின்றுநினைந்
துள்ளினெ னல்லனோ யானே முள்ளெயிற்றுத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுத
லெமது முண்டோர் மதிநாட் டிங்க
ளுரறுகுரல் வெவ்வளி யெடுப்ப நிழல்தப
வுலவை யாகிய மரத்த
கல்பிறங்கு மாமலை யும்பரஃ தெனவே." (நற்றிணை - 62)

இது நற்றிணை. இவை தலைவிகண் நிகழ்ந்தனவும் அவடன் மையும் பின்னர்த் தலைவன் நினைந்து செலவழுங்குதற்கு நிமித்த மாயவாறு காண்க. "அறியாய் வாழி தோழி யிருளற" (அகம் - 53) என்பது தலைவன் கண் நிகழ்ந்தது தலைவி நினைந்து தோழிக் குக் கூறியது. "நெஞ்சு நடுக்குற" என்னும் (23) பாலைக்கலியும் அது.

"உறலியா மொளிவாட வுயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரொடும் விளையாடு வான்மன்னோ
பெறலரும் பொழுதொடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறலாரும் வையையென் றறைகுந ருளராயின்."
(கலி - 30)

இதுவும் அது.

"ஈன்பருந் துயவும் வான்பெரு நெடுஞ்சினை
பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்
வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்ச்
சுரன்முதல் வந்த வுரன்மாய் மாலை

யுள்ளினெ னல்லனோ யானே யுள்ளிய
வினைமுடித் தன்ன வினியோள்
மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே."

(நற்றிணை - 3)

என்னும் நற்றிணையும் அது. இவ்வாறன்றி வேறுபட வருவனவெல்லாம் இதனான் அமைக்க.

(வி - ரை) நினைத்தற்கு ஏதுவும் ஆகும் என்பதில் உள்ள உம்மை நினைத்தற்கே அன்றி கூறுதற்குமாம் என்னும் பொருள் பட உரைத்தலின் எச்சஉம்மை என்றார். இளம்பூரணர் உம்மை எதிர் மறை என்பர். அவர் கருத்தின் படி முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சி பின்பு நினைத்தற்கு ஏதுவாகவும் இருக்கலாம், அன்றி ஏது ஆகாமலும் இருக்கலாம் என்பதாகும்.

மாமை - மாந்தளிர் போன்ற நிறம். சுணங்கு - தேமல். ஆகம் -மார்பு. கண்ணொடு கொடுத்தென - தம் கண்ணிற்கு எதிராக வைத்துக் கட்டியது எனச் சொல்லுமாறு. எண்ணுவது எவன் - நினைக்கும் செயல் எதுவோ.

மிகுதித் தலையளி - மிகுதியான தலையன்பு; கண்ணொடு தொடுத்தென நோக்கலும், ஒண்ணுதல் நீவலும் மிகுதித் தலைய ளியாம். அவர் அவ்வாறு செய்தது பிரிதற் குறிப்பினால் எனத் தலைவி கருதுதலின் அது வஞ்சம் என்பதாயிற்று.

ஒத்தாக - விதியாக: இலக்கணமாக.

அளிநிலை 'பொறா அது - (நாம்) செய்யும் தலையன்பைப் பொறாமல். அமரிய முகத்தள் - மாறுபட்ட முகத்தள். விளிநிலை - அழைத்தல். வறிது அகத்து எழுந்த - சிறிதே தன்னிடத்து எழுந்த; வறிது சிறிதாகும் எனவரும் தொல்காப்பியம் நினைவு கூர்க. வாஅயல் முறுவலள் - உண்மையல்லாத முறுவலையுடைய வள். முளிந்த - காய்ந்த. முதையல்காட்டு - பழமையான காட்டில். மோடு இரும்பாறை - உயர்ந்த பெரிய பாறை. ஈட்டு வட்டு ஏய்ப்ப - ஈட்டி வைத்திருக்கும் வட்டுக்காய்களைப் போல. கவான் - பக்கமலை. பாத்தியன்ன - பகுத்துவைத்தல் ஒத்த. மாய்த்தபோல - தீட்டப்பட்டனபோல. நிரை நிலை அதர - கல்

ஒழுங்குபட்ட நிலையையுடைய வழிகள். பரல் முரம்பு - பரற் கற்களையுடைய மேட்டுநிலம் முன்னம் - குறிப்பு பாவை மாய்த்த - (தனது) கண்ணின் பாவையை மறைத்து நிற்கும். மோயினள் உயிர்த்த காலை - மோந்து பெருமூச்சு விட்ட காலத்து. மணியுரு இழந்த - பவளம் போன்ற உருவினை இழந்த. இனையோள் - வருந்துவோள். ஒண்ணுதல் பிணையல் மோயினள் உயிர்த்த காலை அணியழித் தோற்றம் கண்டு உழையம் ஆகவும். இனைவோள் பிறிதும் எண்ணில் பிழையலள் எனக் கருதிச் செலவு கடிந்தனம் எனக் கூட்டுக.

வேர்ப்பிணி வெதிரம் - வேர்கள் ஒன்றோடொன்று பிணிப் புண்ட மூங்கில். நரல் இசை - ஒலிக்கின்ற ஓசை. கந்து - தறி. அயா உயிர்த்தாங்கு - வருந்தி நெட்டுயிர்ப்புச் செய்தாற்போல. என்றூழ் - கோடை. அழுவத்து - காட்டின்கண். உரறுகுரல் - முழங்குகின்ற ஓசை. உலவையாகிய மரத்த - காய்ந்து நிற்கின்ற மரங்கள். உம்பர் - மேல். முள்ளெயிற்றையும் திருநுதலையும் உடைய நாள் நிரம்பிய மதித்திங்கள் எம்முடையதும் ஒன்றுண்டு; அஃது இப்பொழுது மாமலையின் மீதுள்ளது என உள்ளினன் அல்லனோ என முடிக்க.

இவை என்றது இங்குக் காட்டிய மூன்று பாடல்களையும் ஆம். இவற்றுள் முன்னிரண்டு பாடல்களும் தலைவிகண் நிகழ்ந் ததைத் தலைவன் நினைத்ததாம். இப்பாடல் அவள் தன்மையைத் தலைவன் நினைந்ததாம். உறலியாம் - தன்னை (தலைவனை) உறுதற் குரியயாம். உயர்ந்தவன் - மன்மதன். விறல் இழையவர் - வெற்றியை உடைய இழையினையுடைய பரத்தையர். பெறலரும் பொழுது - பெறுதற்கரிய இளவேனிற்காலம். இணர் - பூங் கொத்து. துருத்தி - ஆற்றிடைக்குறை. அறல் - நுண்மணல்.

ஈன்பருந்து - குஞ்சை ஈன்ற பருந்து. உயவும் - வருந்துமீ. பொரி அரை - பொரிந்த அடியையுடைய. கட்டளை - பொன் உறைக்கும் கல். விட்டு அரங்கு இழைத்து - (விளையாடுதற்குரிய) காய்களினாலே இடத்தை அமைத்துக் கொண்டு. நெல்லி வட்டு - நெல்லிக் காய்களை வட்டாகக் கொண்டு. சுரன்முதல் - சுரத் தினிடத்தே. முதல் - ஏழன் உருபு. உரன்மாய்-வலிமை கெடுதற் குரிய. மனைமாண் சுடர் - மனையிடத்து மாட்சிமைப்பட ஏற்றும்

விளக்கு. படர் பொழுது - துன்பம் தருகின்ற பொழுது; ஈண்டுத் துன்பம் இதுகாறும் தலைவர் வரவில்லையே என்பது (43)

தலைவன்கண் நிகழ்ந்தவற்றைத் தலைவியும் தோழியும் கூறல்.

44. நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே.

இஃது 'ஒன்றுத் தமரினும்' (தொல் - பொ - அகத் - 41) என்னும் சூத்திரத்திற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ - ள்) நிகழ்ந்தது கூறி - ஒன்றுத்தமரினும் என்னும் சூத்திரத்துத் தலைவன்கண் நிகழ்ந்த கூற்றினைத் தலைவியும் தோழியும் கூறி, நிலையலும் திணையே - அதன்கண் நிலைபெற்று நிற்றலும் பாலைத்திணையாம் என்றவாறு.

எ - டு

"அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்பப்
பிரிந்துறை சூழாதி யைய விரும்பிநீ
யென்றோ ளெழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்
சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவா
தொழிந்தவ ரெல்லாரு முண்ணாதுஞ் செல்லா
ரிளமையுங் காமமு மோராங்குப் பெற்றார்
வளமை விழைதக்க துண்டோ வுளநா
ளொரோஒகை தம்முட் டழீஇ யொரோஒகை
யொன்றன்கூ றுடை யுடுப்பவரே யாயினு
மொன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ
சென்ற விளமை தரற்கு." (கலி - 18)

இதனுள் 'உளநாள்' என்றது நாளது சின்மை; 'அரிதரோ சென்ற இளமை தரற்கு' என்றது இளமையதருமை; 'உள்ளம் துரப்ப' என்றது உள்ளத்தான் உஞற்றுதலால் தாளாண் பக்கம்; 'சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது' என்றது தகுதியது அமைதி; தத்தம் நிலைமைக்கேற்பப் பொருள் செய்ய வேண்டுதலின் அது பாணிக்கு மென்றலின்; 'ஒரோஒகை தம்முட் டழீஇ ஒரோஒ

கை ஒன்றன்கூ றுடை உடுப்பவரே யாயினும்' என்றது இன்மைய திளிவு; 'வளமை விழைதக்க துண்டோ' என்றது உடைமைய துயர்ச்சி; 'பிரிந்துறை சூழாதி ஐய' என்றது அன்பின தகலம், 'பிரிந்துறைந்து அன்பு பெருக்கல் வேண்டா தம்மு ளொன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை' என்றலின்; 'தொய்யி லும் சுணங்கு நினைத்துக்காண்' என்றது அகற்சிய தருமை. இவ் வெட்டும் தாமேகூறல் வேண்டினமையின் முன்னொருகால் தலைவன் கூறக்கேட்டுத் தோழியும் தலைவியும் உணர்ந்தமை கூறியவாறு காண்க.

"பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்து நீ
மையற்ற படிவத்தான் மறுத்தர லொல்வதோ"
(கலி - 15)

என்பது ஓதற்குப் பிரிவலெனத் தலைவன் கூறியது கேட்ட தோழி கூறியது.

"நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார்பிறர் கொளவிளிந் தோரெனத்
தாள்வலம் படுப்பச் சேட்புலம் படர்ந்தோர்
நாளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்து
ஆழல் வாழி தோழி தாழா அது
உருமெனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயருங்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்
பழகுவ ராதலோ வரிதே முனாஅது
முழவுறழ் திணிதோ ணெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்னநின்
ஒண்கேழ் வனமுலைப் பொலிந்த
நுண்பூண் ஆகம் பொருந்துதன் மறந்தே." (அகம் - 61)

இவ் வகைப்பாட்டின் மூப்பினும் பிணியினும் இறவாது அமர்க்களத்து வீழ்ந்தாரே துறக்கம் பெறுவரெனத் தன் சாதிக்கேற்பத் தலைவன் புகழும் மானமும் எடுத்து வற்புறுத் தலைத் தோழி கூறினள்.

"வேந்தன் குறைமொழிந்து வேண்டத் தலைப்பிரிந்தார்
தாந்தங் குறிப்பின ரல்லரா - லேந்திழாய்
கண்பனி வாரக் கலங்கல் பிரிவரோ
தண்பனி நாளே தனித்து."

இது குறைமொழிந்து வேண்டினமை தலைவன் கூறக்கேட்ட தோழி கூறியது. "அரிதாய வறனெய்தி" (பாலைக்கலி - 11) என்றது மூன்றன்பகுதி தலைவன் கூறக்கேட்ட தலைவி கூறியது.

"யானெவன் செய்கோ தோழி பொறிவரி
வானம் வாழ்த்தி பாடவும் அருளாது
உறைதுறந் தெழிலி நீங்கலிற் பறையுடன்
மரம்புல் லென்ற முரம்புயர் நனந்தலை
அரம்போழ் நுதிய வாளி அம்பின்
நிரம்பா நோக்கின் நிரையங் கொண்மார்
நெல்லி நீளிடை எல்லி மண்டி
நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடு மெழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
மொழிபெயர் தேஎந் தருமார் மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன
உவலிடு பதுக்கை ஆளுகு பறந்தலை
உருவில் பேஎய் ஊராத் தேரொடு
நிலம்படு மின்மினி போலப் பலவுடன்
இலங்குபரல் இமைக்கும் என்பநம்
நலந்துறந் துறைநர் சென்ற ஆறே." (அகம்-67)

இது மண்டிலத்தருமை தலைவன் கூறக்கேட்ட தோழி கூறியது.

"நம்நிலை யறியா ராயினுந் தம்நிலை
அறிந்தனர் கொல்லோ தாமே யோங்குநடைக்
காய்சின யானை கங்குல் சூழ
அஞ்சுவர விறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே." (அகம் - 264)

இது தலைவன் பாசறைப் புலம்பினமை கூறக்கேட்ட தலைவி நம்நிலை அறியா ராயினும் எனக் கூறினுள். "திசை திசை தேனார்க்குந் திருமருத முன்றுறை" என்பது (பாலைக்கலி - 26) காவற் பாங்கின்கண் தலைவன் கூறியது கேட்ட தலைவி கூறியது. பிறவும் வருவனவெல்லாம் இதனுன் அமைக்க.

(வி - ரை) இந் நூற்பாவிற்கு முன்பு ஒருகால் தலைவியைப் பிரிந்த தலைவன், தனக்கு நிகழ்ந்த நிகழ்ச்சியைப் பின்பு ஒருகால் அவ்வாறு பிரிதற்குரிய அமைத்துக் கூறிப் பின் போகாதிருத் தலும் பாலைத்திணையாம் என்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் நிகழ்ந்தது என்பதற்குத் தலைவன்பால் நிகழ்ந்தவற்றை என்றும், 'கூறி' என்பதற்கு அதனைத் தலைவனும் தோழியும் கூறி என்றும் உரை காணுகின்றார். இது அத்துணைப் பொருத்த முடைத்தன்று.

துரப்ப - செலுத்த. நின் மைந்துடை மார்பு - நின்னையே வலிமையாகக் கொண்டு வாழும் என்மார்பு ஒராங்கு- ஒருங்கு வளமை-செல்வம். ஒரோஒகை-ஒரோ ஒரு கைகளாலே. ஒன்றன் கூறு - ஓர் ஆடையின் கிழிந்த பிறதொரு பகுதியை.

பொய்யற்ற கேள்வியால் - பொய்மை அற்ற கேள்வி அறிவால். புரையோர் - அறவோர். மையற்றபடி வத்தால் மாசற்ற நோன்புகளால். மறுத்தரல் ஒல்வதோ - (இவள் மாட்டுச் சென்ற உள்ளத்தை) மீட்டல் பொருந்துமோ?

கூற்றம் கோள் உற - இயமன் உயிர்கொள்ள. விளியார் - இறவாதவராய். பிறர்கொள - பகைவரின் போர்க்களத்தில் தம் உயிர் செல. விளிந்தோர் - இறந்தோர். பிறர்கொள விளிந் தோர் நோற்றார் மன்றதாமே என இணைக்க. தாள் வலம்படுப்ப - ஊக்கத்தால் வெற்றி எய்துவிக்க. நறவு நொடைநெல்லின் - கள்ளை விற்றுக்கொண்ட நெல்லால், மழபுலம் அடக்கிய -

மழவரின் நிலத்தை வணங்கச்செய்த. புல்லி, ஆவிஎன்பார் வள்ளல்கள்.

வேந்தன் குறைமொழிந்து வேண்ட - அரசன் தன் குறைகளைச் சொல்லி அவற்றை நீக்குதற்காக வேண்டிக் கொள்ள தலைப் பிரிந்தார் - தலைவியாகிய நின்னிடத்தினின்றும் பிரிந்தார். தம் குறிப்பினர் அல்லர் - தம்கருத்துடன் பிரிந்தவர் அல்லர். அரசன் வேண்ட பிரிந்தவரல்லது தம் கருத்தால் பிரிந்திலர் தலைவர் ஆதலின் தன் பனி நாளில் தனித்துப்பிரிவரோ பிரியார். ஆதலின் கலங்கற்க எனக்கூறியவாறும். ஆல் அசைநிலை.

மூன்றன் பகுதி - அறத்தால் பொருளாக்கி அப்பொருளான் இன்பம் நுகர்தல் என விளக்கம் காண்பர் நச்சினார்க்கினியர். இதற்கு உரை முன் கூறப்பட்டது.

பொறிவரிவானம் - புள்ளிகளையும், வரிகளையும் உடைய வானம்பாடிப்பறவை. அருளாது - மேகம் மழை பொழியாது. உறை—நீர்த்துளி எழிலி - மேகம். பறைபு உடன் - இலையாவும் கெட்டுச் செழித்ததுடன். முரம்பு - கற்குவியல்கள். நனந்தலை - அகன்ற இடம். எல்லி மண்டி - இருளில் விரைந்து சென்று. (44)

அகத்திணைக்குரிய மரபுகள்.

45. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவும் என்ப.

இது மரபியலுள் கூறப்படும் மரபன்றி அகத்திணைக்கு உரிய மரபுகள் கூறுகின்றது.

(இ - ள்) மரபுநிலை திரியா, மாட்சிய ஆகி - புலனெறி வழக்கம் செய்துவருகின்ற வரலாற்றுமுறைமை திரியாத மாட்சியவாய்; விரவும் பொருளும் விரவும் என்ப - பாலைத்திணைக்கும் கைக்கிளை பெருந்திணைக்கும் உரியவாய் விரவும் பொருளும் ஏனைத் திணைக்கு உரியவாய் விரவும் பொருளும் விரவி வருமென்று கூறுவர் புலவர் எ - று.

அவை தலைவி ஆற்றுமை கண்டுழிப் பிரிந்த தலைவன் மீண்டுவந்தானெனத் தோழி கூறுவனவும், வரைவிடை வைத்துப் பிரிந்தோன் தலைவியை நினைந்து வருந்திக் கூறுவனவும், உடன் போயவழி இடைச்சுரத்து நிகழ்ந்ததனை மீண்டு வந்துழித் தலைவன் தோழிக்குக் கூறுவனவும், யானினைத்த வெல்லையெல்லாம் பொருள்முடித்து வாராது நின்னல நயந்து வந்தேனெனத் தலைவன் கூறலும், பொருள்வயிற் பிரிந்தோன் தலைவியை நினைந்து வருந்துவனவும், இடைச்சுரத்துத் தலைவன் செலவு கண்டோர் கூறுவனவும், மீட்சிகண்டோர் கூறுவனவும், ஊரின்கட் கண்டோர் கூறுவனவும் பிறவுமாம். அவை பாலைத்திணைக்கு விரவும் பொருளாமென்றுணர்க.

(எ - டு)

"கோடுயர் பன்மலை யிறந்தன ராயினு
நீட விடுமோ மற்றே நீடுநினைந்து
துடைத்தொறுந் துடைத்தொறுங் கலங்கி
*யுடைத்தரும் வெள்ள மாகிய கண்ணே."

(ஐங்குறு - 358)

இவ் வைங்குறுநூறு தலைவன் மீண்டானென்றது. "பாடின்றிப் பசந்தகண்" (பாலைக்கலி - 15.) என்பதும் அது.

"வளைபடு முத்தம் பரதவர் பகருங்
கடல்கெழு கொண்கன் காதன் மடமகள்
கெடலரும் துயர நல்கிப்
படலின் பாயல் வௌவி யோளே." (ஐங்குறு - 195)

இவ் வைங்குறுநூறு வரைவிடைவைத்துப் பிரிந்தோன் தனிமைக்கு வருந்திக் கூறியது.

"புறந்தாழ் பிருண்ட கூந்தற் போதி
னிறம்பெறு மீரிதழ்ப் பொலிந்த வுண்க
ணுள்ளம் பிணிக்கொண் டோள்வயி னெஞ்சஞ்
செல்ல நீர்க்குஞ் செல்வா மென்னுஞ்
செய்வினை முடியா தெவ்வஞ் செய்த
லெய்யா மையோ டிளிவுதலைத் தருமென
வுறுதி தூக்கத் தூங்கி யறிவே

சிறிதுநனி விரைய லென்னு மாயிடை
யொளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்லென் வருந்திய உடம்பே.''
(நற்றிணை - 284)

இந் நற்றிணையும் அது.

"கானப் பாதிரிக் கருந்தகட் டொள்
வேனில் அதிரலொடு விரைஇக் காண்வரச்
சில்லைங் கூந்த லழுத்தி மெல்லிணர்த்
தேம்பாய் மராஅம் அடைச்சி வான்கோல்
இலங்குவளை தெளிர்ப்ப வீசிச் சிலம்புநகச்
சின்மெல் லொதுக்கமொடு மென்மெல இயலிநின்
அணிமாண் சிறுபுறங் காண்கம் சிறுநனி
ஏகென ஏகல் நாணி ஒய்யென
மாகொல் நோக்கமொடு மடங்கொளச் சாஅய்
நின்றுதலை யிறைஞ்சி யோளே அதுகண்டு
யாமுந் துறுதல் செல்லேம் ஆயிடை
அருஞ்சுரத் தல்கி யேமே இரும்புலி
களிறட்டுக் குழுமும் ஓசையுங் களிபட்டு
வில்லோர் குறும்பிற் றதும்பும்
வல்வாய்க் கடுந்துடிப் பாணியுங் கேட்டே." (அகம் 261)

இது மீண்டுவந்தோன் தோழிக்கு உரைத்தது

"திருந்திழை யரிவை நின்னல முள்ளி
யருஞ்செயற் பொருட்பிணி பெருந்திரு வுறுகெனச்
சொல்லாது பெயர்தந் தேனே பல்பொறிச்
சிறுகண் யானை திரிதரு
நெறிவிலங் கதர கானத் தானே." (ஐங்குறு-355)

இவ் வைங்குறுநூறு பெற்ற பொருள்கொண்டு நின்னலம் நயத்து வந்தேன் என்றது.

"அளிதோ தானே நாணே யாள்வினை
யெளிதெனு லோம்புன்மி னறிவுடை யீரே

கான்கெழு செலவின் னெஞ்சுபின் வர்ங்கத்
தான்சென் றனனே தமிய னதாஅன்
றென்று வதுகொ ருனே பொன்னுடை
மனைமாண் டடங்கிய கற்பிற்
புனையீ ரோதி புலம்புறு நிலையே''

இது செலவுகண்டோர் கூறியது.

"மரந்தலை மணந்த நனந்தலைக் கானத்
தலந்தலை ஞெமையத் திருந்த குடிஞை
பொன்செய் கொல்லனி னினிய தெளிர்ப்பப்
பெய்ம்மணி யார்க்கு மிழைகிளர் நெடுந்தேர்
வன்பான் முரம்பி னேமி யதிரச்
சென்றிசின் வாழியோ பனிக்கடு நாளே
யிடைச்சுரத் தெழிலி யுறைத்தென மார்பிற்
குறும்பொறிக் கொண்ட சாந்தமொடு
நறுங்கண் ணியன்கொ ணோகோ யானே."

(நற்றிணை-394)

இந் நற்றிணை வரவுகண்டோர் கூறியது.

"இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தன
ளெல்லையு மிரவுங் கழிந்தன வென்றெண்ணி யெல்லிரா
நல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல
மணியிற் பிறந்தநீர் போலத் துணிவாங்
கலஞ்சிதை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்று
ணல்லெழின் மார்பனைச் சார்ந்து." (கலி-142)

இது பெருந்திணைக்கண் கண்டோர் கூறியது.

"குரவை தழீஇயா மரபுளி பாடித்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுது
மாசில்வான் முந்நீர் வளைஇய தொன்னிலம்
ஆளுங் கிழமையொடு புணர்ந்த
வெங்கோ வாழியரிம் மலர்தலை யுலகே,'' (கலி-103)

இச் சுரிதகத்துக் குரவையாடல் ஏறுகோடல் கைக்கிளையுள் விராய்வந்தவாறும் குரவைக்குரிய தெய்வத்தையன்றி அரசனை வாழ்த்திய வாழ்த்து விராய்வந்தவாறும் கொள்க. 'விரவும் பொருளும் விரவு' மெனவே ஆய்ச்சியர் குரவைக்கூத்தல்லது வேட்டுவவரிக்குரிய வெறியாடல் விரவாதுஎன்றுணர்க. இஃது எண்வகைச் சுவையான் வரும் மெய்ப்பாடும் கூத்தோடும் படுத லின் அச்சுவை பற்றிவரும் மெய்ப்பாட்டிற்கும் உரித்தாயிற்று.

இனிக் 'காவற்பாங்கின் ஆங்கோர் பக்கத்'திற் (தொல்-பொ-81-41) தலைவன் கூறியவற்றைக் கற்பியலுள், 'தலைவன் பகுதியின் நீங்கிய தகுதிக்கண் (தொல்-பொ-கற்-6) தலைவி பரத்தையராகக் கூறுவனவும் இச்சூத்திரத்தான் அமைக்க, அவை மருதக்கலியுள் (செய்-28) கடவுட்பாட்டு முதலியன. அவற்றை ஆண்டுக் காட்டுதும்; கண்டுணர்க.

இனித் தலைவி கற்பினுள் பிரிவாற்றாது எம்மையும் உடன் கொண்டு சென்மினென்பனவும் அவன் அவட்கு மறுத்துக் கூறுவனவும் இதனான் அமைக்க.

(எ - டு)

"மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்த
முண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறுஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்று
லென்னீ ரறியாதீர் போல விவைகூறி
னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு
மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு." (கலி-6)

இக் கலி எம்மையும் உடன் கொண்டு சென்மினென்றது.

"செருமிகு சினவேந்தன்" என்னும் பாலைக்கலியுள்,

"எல்வளை யெம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியன் மேவந்த சீறடித் தாமரை
யல்லிசே ராயித ழரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறி னவ்வடி கறுக்குந வல்லவோ." (கலி-13)

இது தலைவிக்குத் தலைவன் உடன் போக்கு மறுத்துக் கூறி யது. இதன் சுரிதகத்து,

"அனையவை காதலர் கூறலின் வினைவயிற்
பிரிகுவ ரெனப்பெரி தழியாதி." (கலி-13)

என வினைவயிற்பிரிவு கூறலின் இது கற்பில் கூறியதா யிற்று.

இன்னும் இச்சூத்திரத்தான் அமைத்தற்குரிய கிளவிக ளாய் வருவனவெல்லாம் அமைத்துக்கொள்க.

(வி - ரை) பாலை, கைக்கிளை, பெருந்திணை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய ஏழு திணைக்கண்ணும் சில பொருள்கள், மரபுநிலை திரியாதனவாய் விரவி வருவனஉள. அவற்றையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது இந்நூற்பாவின் கருத்தெனை நச்சினார்க்கினியர் கருதுகின்றார். ஆனால் இளம்பூரணர் அதிகாரப் பட்டு வருகின்ற பாலைத்திணைக்கண் சில பொருள்கள் மரபுநிலை திரியாதனவாய் வருவன உள. அவற்றையும் ஏற்க என இந் நூற்பாவின் கருத்தாகக் கருதுவர்.

அஃதாவது பாலைக்கு ஓதிய பாசறைப் புலம்பற்கண்ணும் தேர்ப்பாகற்குக் கூறுதற்கண்ணும் முல்லைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் விரவுதலாம். இந்நிகரன பிறவுங் கொள்க.

மரபுநிலை திரியாமையாவது பாசறைக்கண் வினை முடிந்த வழிக் கார்காலம் வந்ததாயின் ஆண்டுக்கூறும் காற்று அஃது அக்காலத்தைப் பற்றி வருதலின் மரபுநிலை திரியாத தாயிற்று என்பது அவர் உரை.

கோடு - சிகரம். இறந்தனர் - கடந்தனர். நீடவிடுமோ - (பிரிந்த தலைவரை மீள்வித்தலன்றி) நீட்டிக்க விடுமோ. உடைத் தெழும் - அணையை உடைத்து எழுகின்ற. தலைவர் மலையிறந்தன ராயினும் வெள்ளமாகிய கண்ணீர் அவரை நீட விடுமோ விடாது

என்பது கருத்து. வளைபடு-சங்கினிடத்தே பிறக்கின்ற. கொண்கன்-நெய்தல் நிலத்தலைவன். கெடலரும் - நீங்குதற்கு அரிய. பாயல் படலின் என மாறுக. பாயல் படல் - படுக்கையின்கண் தங்கல். மடமகள் துயரம் நல்கித் துயிலு நிலையும் வெளவினள் எனத் தலைவன் பிரிவிடத்துத் தனிமைக்கு வருந்தினள்.

ஈரிதழ் - குளிர்ந்த இமை. உண்கண் - மையுண்டகண். செல்லல் தீர்கம் - துன்பத்தைப் போக்கிக் கொள்ளுவோம். எவ்வம் செய்தல் - வினையை முடிவு பெறச் செய்யாது இடையில் விட்டு விடுதல். எய்யாமை - அறியாமை. இழிவு - இகழ்ச்சி களிறு மாறு பற்றிய - களிற்றுயானை ஒன்றோடொன்று மாறுகக் கைப்பற்றி இழுத்த வீவது - அழிவது. நெஞ்சம் அவளொடு செல்வாம் என்னும், அறிவு எடுத்த வினை முடிவு போதற்கு முன் தலைவியிடம் செல்லல் அறியாமையோடு இகழ்ச்சியும் தரும் என்னும், இவ்வாறு நெஞ்சும் அறிவும் மாறுபடுதலின் தேய்புரி பழங்கயிறு போல என்னுடல் வீயும் எனத் தலைவன் கூறுகின்றான்.

கானப்பாதிரி - காட்டிலுள்ள பாதிரி. கருந்தகட்டு - கரியயிதழ் வீ-மலர். அதிரல் - புன்னைமலர். காண்வர - அழகு பொருந்த. தேம்பாய் - தேன்பாயும். மராஅம் அடைச்சி - மரா மரத்தின் மலர்களைச் சூடி. ஒதுக்கம்-நடை.

பொருட்பிணி-பொருளின் இன்றியமையாமையைக் கருதி அதைப் பெற வேண்டுமென்ற உள்ளப் பிணிப்பு. நெறி விலங்கு அதர-வழியின்கண் குறுக்கிடும் சிறுவழிகள். பெருந்திரு உறுக என்றது அப்பொருள் வேண்டாம் என விலக்குதற் பொருளில் வந்த குறிப்பு மொழியாம். 'காதலன் துன்பம் காணாது கழிந்த மாதரோ பெருந்திரு உறுக' (சிலம்பு), 'திருமாலை வெம் முலைமேல் திளைக்கும் தேவர் திருவுறுக' (சிந்தாமணி 960) எனப்பிறாண்டும் இச்சொல்லாட்சி வழங்குதல் காண்க.

ஆள்வினை-முயற்சி. ஓம்பன் மின்-பாதுகாவாதீர். நெஞ்சு பின் வாங்க - தலைவியின் பால் சென்ற நெஞ்சம் பின் இழுக்கவும் அதா அன்று - அதுவன்றி. புலம்பு நிலை என்னுவது கொல் எனக் கூட்டியுரைக்க. செலவு கண்டோர் - தலை மகளின் செலவு கண்டவர்.

மரம் தலை மணந்த - மரங்கள் ஒன்றோடொன்று நெருங்கிய. அலந்தலை - (நீரின்மையால்) வாடிய; துன்புற்ற. ஞெமையம்- ஒருவகைமரம். குடிஞை - ஆந்தை. தெளிர்ப்ப - ஒலிப்ப. முரம்பு - மேட்டுநிலம். எழிலி உரைத்தன - மேகம் உலாவிய தென. குறும் பொறி - குறியபுள்ளிகள். சென்றிசின் - தன் இல்லம் நோக்கிச் செல்கின்றான். யான் நோகோ - (தலைவன் வரவுகண்டு) யான் வருந்துவனோ; மகிழ்வேன் என்றபடி. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறத்தால் வருந்திய தலைவி பலரொடு நக்கும் பிறையை மூடியும், ஞாயிறு மாந்தளிர் ஆகிய கொல்லும் மரபினையுடைய பொருள்களை நோக்கிச் சொல்லியும் நிற்றலின் பெருந்திணை யாயிற்று. தலைவன் வர இம்மிகு துன்பம் தேற்றாங்காயால் கலங்கல் நீர் தெளிவுற்றது போல மிகு துன்பம் நீங்கிற்று எனக் கண்டோர் கூறினர்.

மரபுளிப்பாடி-முறைப்படிப்பாடி. தேயாவிழுப்புகழ்-கெடாத சீரியபுகழ். எங்கோ - பாண்டியன் என்பர் நச்சினார்க்கினியர். குரவையாடல் என்பது முல்லை அல்லது குறிஞ்சிநில மக்களுக்கு உரியதாகும். இப்பாடல் முல்லை நிலமக்கள் குரவையாடலைக் குறிக்கின்றது. ஏறு தழுவிவென்றவனுக்குக் மகட்கொடுப்ப தென்பது கைக்கிளையாகும். இக்கைக்கிளைக்கண் ஆய்ச்சியர் குரவை வந்துள்ளது. அன்றியும் தெய்வத்தை வாழ்த்துதல் அன்றி அரசனையும் வாழ்த்துகிறது. ஆதலின் இதனை இந் நூற்பாவின்கண் அமைக்கின்றார்.

காவற் பாங்கின் ஆங்கோர் பக்கம் என்பது வேந்தன் தன்னால் காக்கப் படுவனவாகிய யானை குதிரை முதலாயினவும் தாம் காத்தற்குரிய பகுதிக்கண் உள்ள தாபதர் மக்கள் முதலியோரையும் காத்தற்குப் பிரிவதாகும். பகுதியின் நீக்கிய தகுதி மேற்கூறிய யானை முதலியவற்றைக் காத்தற்காகச் சென்ற நிலையைக் குறிக்கும். தலைவன் யானை முதலியவற்றைக் காக்கச் செல்வன் அவன் பரத்தையர்ப் பிரிவுழியும் அக்காரணமே பற்றிச் சென்றானாகக் கூறுவன். தலைவி அதனைப் பரத்தையராகக் கொண்டு கூறுவள். அவ்வாறு வரும் பாடல்கள் எல்லாம் இதன்கண் அமைக்க வேண்டுமென்பது நச்சினார்க்கினியர் கருத்து. அவ்வாறு வரும் பாடல்கள், (கடவுட் பாட்டு: மருதக்கலி-28).

மரையா-காட்டுப்பசு. மரல்-மரலைமரம். சுரைஅம்பு-மூட்டு வாயையுடைய அம்பு. நின்னீரவல்ல-இக்கூற்று இனிய நீர்மையை உடைய அல்ல. நும்மொடு துணையாக வருவலே நமக்கு இன்பமாக இருக்கக் காட்டது அருமை கூறி உடன் வருதற்கு மறுத்தல் தகாது என்பதாம்.

எல்வளை - ஒளிபொருந்த வளையையுடையாய்; விளி. நீ எம் மொடுவரின் நின் சீரடி கல்லுறும் அதனால் அரக்குத் தோய்ந் தவை போலக் கறுக்கும். ஆதலின் நீ என்னொடு வாரற்க எனத் தலைவன் கூறினன். (45)

உவமைகள் அகப்பொருட்கும் வரும்

46. உள்ளுறை உவமம் ஏனை உவமம்எனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே.

இஃது உவமவியலுள் அகத்திணைக் கைகோள் இரண்டற்கும் பொதுவகையான் உரியதொன்று கூறுகின்றது.

(இ-ள்.) உள்ளுறை உவமம் ஏனை உவமம் என - மேற் கூறும் உள்ளுறைஉவமந்தான் ஏனைய உவமமென்று கூறும்படி உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாய் நின்றது; திணை உணர் வகை தள்ளாது ஆகும் - அகத்திணை உணர்தற்குக் கருவி யாகிய உள்ளுறை உவமம்போல எல்லாத் திணையையும் உணரும் கூற்றைத் தன்ளாதாய் வரும்; நல்லிசைப் புலவர் செய்யுள் செய்யின் என்றவாறு.

எனவே ஏனையோர் செய்யின் தானுணரும் வகைத்தாய் நிற்கும் என்றவாறும்.

(எ-டு.)

"விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்ந்தாடி
வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுள்
துனிசிறந் திழிதருங் கண்ணினீ ரறல்வார
இனிதமர் காதலன் இறைஞ்சித்தன் னடிசேர்பு

CHENNAI

நனிவிரைந் தளித்தலி னகுபவள் முகம்போலப்
பனியொரு திறம்வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉந் தண்டுறை நல்லூர'' (கலி-71)

என்பது விரியும் கதிரையுடைய இளஞாயிறு விசும்பிலே பரவாநிற்க, விடியற்காலத்தே இதழ்கண் முறுக்குண்ட தலைகள் அம்முறுக்கு நெகிழ்ந்த செவ்விப் பூவிடத்துக், கள்ளை வண்டு நுகர்ந்து விளையாடி, அதனானும் அமையாது பின்னும் நுகர்தற்கு அவ்விடத்தைச் சூழ்ந்து திரியும் அச்செல்வமிக்க பொய்கையுள் பசிய இலைகளுடனின்ற தாமரைத்தனிமலர், தனக்கு வருத்தம் செய்யும் பனி ஒரு கூற்றிலே வடியாநிற்கத், தான் மிகச்செவ்வி யின்றி அலரும் துறையினையுடைய ஊர என்றவாறு.

இதனுள் வைகறைக்காலத்து மனைவயிற் செல்லாது, இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி, அதனா னும் அமையாது, பின்னும் அவரைப் புணர்தற்குச் சூழ்ந்து திரிகின்ற இவ்வூரிடத்தே நின்னைப்பெறாது, சுற்றத்திடத்தே யிருந்து கண்ணீர் வாராநிற்க, நீ ஒருகால் அளித்தலிற் சிறிது செவ்வி பெற்றாளாயிருக்கும்படி வைத்த தலைவியைப் போல, எம்மையும் வைக்கின்றாயென்று, காமக்கிழத்தி உள்ளுறையுவமம் கூறினாள். துனிமிகுதலாலே பெருக்கு மாறாது வீழ்கின்ற கண்ணீர் காமத்தீயாற் சுவறி அறுதலை உடைத்தாயொழுக, அவ் வருத்தத் தைக் கண்டு விரைந்து கணவன் அருளுதலிற் சிறிது மகிழ்பவள் முகம்போல என்ற ஏனையுவமம், தாமரைமலர் பனிவாரத் தளைவிடு மென்ற உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது.

இஃது,

''உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே''
(தொ-பொ-பொருளியல்-48)

என்ற பொருளியற் சூத்திரத்திற் சிறப்பென்ற உள்ளுறை இவ் வேனையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து உள்ளுறையுவமம்போலத் திணையுணர்தலைத் தள்ளாது நின்றவாறு காண்க,

இஃது,

"இனிதுறு கிளவியுந் துனியுறு கிளவியு
முவம மருங்கிற் றோன்று மென்ப"
(தொல்-பொ-உவ-28)

என உவமப்போலிக்குக் கூறுதலின் அவ்விரண்டும் தோன்றி நின்றது.

"ஏனோர்க் கெல்லாம் கிடம்வரை வின்றே"
(தொ-பொ-உவ-27)

என்று உவமப்போலியிற் கூறுதலான் காமக்கிழத்தியும் உள் ளுறையுவமம் கூறினாள்.

குறிஞ்சியிலும் மருதத்திலும் நெய்தலிலும் இவ்வாறு வரும் கலிகளும்,

"யானே ஈண்டை யேனே யென்னலனே
யேனல் காவலர் கவணொடு வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும்
கானக நாடனொ டாண்டொழிந் தன்றே." (குறுந்-54)

என்னும் இக் குறுந்தொகைபோல வருவனவும் இச் சூத்திரத் தான் அமைக்க. பேராசிரியரும் இப்பாட்டின் 'மீனெறி தூண்டி' லென்றதனை ஏனையுவமமென்றார்.

இனித் தள்ளாது என்றதனானே, 'பாஅ லஞ்செவி' என்னும் பாலைக்கலியுள் (4) தாழிசை மூன்றும் ஏனையுவமமாய் நின்று கருப் பொருளொடு கூடிச் சிறப்பியாது தானே திணைப் பொருள் தோன்றுவித்து நிற்பன போல்வனவும், "கரைசேர் வேழங் கரும்பிற் பூக்கும் துறைகே ழூரன்" (ஐங்குறு—12.) என்றாற் போலக் கருப்பொருள் தானே உவமமாய் நின்று உள்ளுறைப் பொருள் தருவனவும், பிறவும் வேறுபட வருவனவும் இதனான் அமைக்க.

இது புறத்திற்கும் பொது. இதனான் உள்ளுறையுவமமும், ஏனையுவமமுமென உவமம் இரண்டே யென்பது கூறினார்.

(வி - ரை) கைகோள் இரண்டு - களவு கற்பாகிய இருவகை ஒழுக்கம். (உள்ளுறை) உவமம் என்றது கூறப்பட்ட உவமத் தானேயே ஒரு பொருள் கொள்ளக்கிடப்பதாகும். ஏனைய உவமம் என்பது உவமும் பொருளும் ஒருங்கு நிற்பதாகும். அகத்திணை யியலில் வரும் உள்ளுறை உவமம், ஏனை உவமம் போல உவம மும் பொருளுமாய் ஒருங்கு நிற்குமென்றும், அதனால் அவ்வாறு செய்யுட் செய்தல் சான்றோர்க்கே உரியதாகும் என்றும் இந் நூற்பாவிற்கு உரைகாணுகின்றார் நச்சினார்க்கினியர். ஆதலின் நூற்பாவின் பாங்கு அவ்வாறு உரை கோடற்கு இல்லை உள்ளுறை உவமம் ஏனை உவமம் என இருவகைப்பட வரும் உவமத்தால் அவ்வத்திணை உணரும் வகை தவறுதாம் என்பதே இந்நூற்பா விற்கு உரிய பொருளாகும். இளம்பூரணரும் இவ்வாறு கூறிச் செல்வர். (46)

உள்ளுறை உவமத்தின் இலக்கணம்

47. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே.

இது முறையே உள்ளுறையுவமம் கூறுகின்றது.

(இ - ள்.) உள்ளுறை — உள்ளுறை யெனப்பட்ட உவமம்; தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்கொள்ளும் என்ப — தெய்வம் முதலிய கருப்பொருளுள் தெய்வத்தை ஒழித்து ஒழிந்த கருப் பொருள்களே தனக்குத் தோன்றும் நிலனாகக் கொண்டு புலப் படுமென்று கூறுப; குறி அறிந்தோரே — இலக்கணம் அறிந்தோர் என்றவாறு.

எனவே உணவு முதலிய பற்றிய அப்பொருள்நிகழ்ச்சி பிறி தொன்றற்கு உவமையாகச் செய்தல் உள்ளுறையுவமமாயிற்று.

(எ-டு)

"ஒன்றே னல்லே னொன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெறிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனொ
டொன்றேன் றோழிமற் றொன்றி னானே" (குறுந்-208)

இக் குறுந்தொகை பிறிதொன்றின் பொருட்டுப் பொரு கின்ற யானையான் மிதிப்புண்ட வேங்கை நசையற உணங்காது மலர்கொய்வார்க்கு எளிதாகி நின்று பூக்கும் நாடன்என்றத ஞனே தலைவன் நுகரும் காரணத்தானன்றி வந்து எதிர்ப்பட்டுப் புணர்ந்து நீங்குவான் நம்மை இறந்துபாடு செய்வியாது ஆற்று வித்துப் போயினனெனவும், அதனானே நாமும் உயிர்தாங்கி யிருந்து பலரானும் அலைப்புண்ணுநின்றனம் வேங்கை மரம் போல எனவும், உள்ளத்தான் உவமங்கொள்ள வைத்தவாறு காண்க.

ஒழிந்தனவும் வந்துழிக் காண்க.

இனி அஃது உள்ளத்தான் உய்த்துணரவேண்டுமென மேற் கூறுகின்றார்.

(வி-ரை) நசையற - பசுமை நீங்க உணங்காது - காயாது. அலைப்புண்ணு நின்றனம் - அம்பலும் அலரும் கூறக்கேட்டு நின்றனம். (47)

இதுவும் அது

48. உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருண் முடிகென உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம்

இதுவும் அங்ஙனம் பிறந்த உள்ளுறையுவமத்தினைப் பொருட்கு உபகாரம்பட உவமங்கொள்ளுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) இதனோடு ஒத்துப் பொருள் முடிகென உள்ளு றுத்து - யான் புலப்படக் கூறுகின்ற இவ்வுவமத்தோடே புலப் படக் கூறாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாகவென்று புலவன் தன் உள்ளத்தே கருதி; உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம் - தான் அங்ஙனம் கருதும் மாத்திரையே யன்றியும் கேட்டோர் மனத்தின்கண்ணும் அவ்வாறே நிகழ்த்து வித்து அங்ஙனம் உணர்த்துதற்கு உறுப்பாகிய சொல்லெல்லாம் நிறையக்கொண்டு முடிவது உள்ளுறையுவமம் என்றவாறு.

இதனானே புலவன் தான் கருதியது கூறுதவழியும் கேட்டோர்க்கு இவன் கருதிய பொருள் ஈதென்றுஆராய்ந்து கோடற்குக் கருவியாகிய சிலசொற் கிடப்பச் செய்தல் வேண்டுமென்பது கருத்தாயிற்று.

அது,

"வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்
டோங்குய ரெழில்யானைக் கனைகடாங் கமழ்நாற்ற
மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர!"
(கலி-66)

இதனுள், வீங்குநீர் பரத்தையர் சேரியாகவும், அதன்கண் அவிழ்ந்த நீலப்பூக் காமச்செவ்வி நிகழும் பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத் தேரேற்றிக்கொண்டு வரும் பாணன் முதலிய வாயில்களாகவும், அம்மலரைச் சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானையின் கடாத்தை ஆண்டுறைந்த வண்டுகள் வந்த வண்டுக்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப் பரத்தையர் தமது நலத்தை அத்தலைவனை நுகர்வித்தலாகவும் கங்குலின் வண்டு முல்லையை ஊதுதல் இற்பரத்தையருடன் இரவு துயில்உறுத லாகவும், பண்டு மருவிய பொய்கையை மறத்தல் தலைவியை மறத்தலாகவும், பொருள் தந்து ஆண்டுப் புலப்படக் கூறிய கருப்பொருள்கள் புலப்படக் கூறாத மருதத்திணைப் பொருட்கு உவமமாய்க் கேட்டோன்உள்ளத்தே விளக்கி நின்றவாறு காண்க.

பிறவும் இவ்வாறு வருவன வெல்லாம் இதனான் அமைக்க. இங்ஙனம் கோடலருமைநோக்கித் 'துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே' (தொல்-பொ-உவ-23) என்றார்.

(வி-ரை) உள்ளுறுத்து என வரும் இருசொற்களுள் முன்னையது புலவன் தன் உள்ளத்தே கருதி எனப் பொருள்பட்டு நின்றது; பின்னையது கேட்போர் மனத்தின் கண்ணும் அவ்வாறு

நிகழ்த்துவித்து என்னும் பொருள்பட நின்றது. இறுவது - முடிவது. (48)

ஏனையுவமம்

49. ஏனை யுவமம் தானுணர் வகைத்தே.

இஃது ஒழிந்த உவமம் கூறுகின்றது.

(இ-ள்.) ஒழிந்த உவமம் உள்ளத்தான் உணரவேண்டாது சொல்லிய சொற்றொடரே பற்றுகோடாகத் தானே உணர நிற்கும் கூறுபாட்டிற்று என்றவாறு.

பவளம்போலும் வாய் என்றவழிப் பவளமே கூறி வாய் கூறாவிடின் உள்ளுறையுவமமாம் அவ்வாறின்றி உவமிக்கப் படும் பொருளாகிய வாயினையும் புலப்படக் கூறலின் ஏனையுவம மாயிற்று. அகத்திணைக்கு உரித்தல்லாத இதனையும் உடன் கூறினார் உவமம் இரண்டல்லதில்லையென வரையறுத்தற்கும், இதுதான் உள்ளுறை தழீஇ அகத்திணைக்குப் பயப்பட்டு வரு மென்றற்கும்.

(வி-ரை) உள்ளுறைதழீஇ - உள்ளுறை தழுவி. பயப்பட்டு- பயன்பட்டு. தான் உணரும் வகையாவது வண்ணத்தானுதல், வடிவானுதல், பயனுனுதல், தொழிலானுதல் உவமிக்கப்படும் பொருளொடு எடுத்துக் கூறுதல் என விளக்கம் காண்பர் இளம்பூரணர். (49)

கைக்கிளைக் குறிப்பு

50. காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.

இது முன்னர் அகத்திணை ஏழென நிறீஇ, அவற்றுள் நாற்கு நிலங்கூறிப், பாலையும் நான்கு நிலத்தும் வருமென்று கூறி, உரிப்பொருளல்லாக் கைக்கிளை பெருந்திணையும் அந்நிலத்து மயங்கும் மயக்கமும் கூறிக், சருப்பொருட்பகுதியும் கூறிப், பின்னும் பாலைப்பொருளாகிய பிரிவெல்லாம் கூறி, அப்பகுதியாகிய கொண்டுதலைக்கழிவின்கண் கண்ட கூற்றுப் பகுதியும் கூறி, அதனோடொத்த இலக்கணம்பற்றி முல்லை முதலியவற்றிற்கு மரபு கூறி, எல்லாத்திணைக்கும் உவமம்பற்றிப் பொருள் அறியப்படுதலின் இவ்வுவமப்பகுதியும் கூறி, இனிக் கைக்கிளையும் பெருந்திணையும் இப்பெற்றிய வென்பார், இச்சூத்திரத்தானே கைக்கிளைக்குச் சிறந்த பொருள் இது வென்பது உணர்த்துகின்றார்.

(இ-ள்.) காமம் சாலா இளமையோள் வயின்—காமக் குறிப்பிற்கு அமைதியில்லாத இளமைப் பருவத்தாள் ஒருத்தி கண்ணே; ஏமஞ்சாலா இடும்பை எய்தி—ஒரு தலைவன் இவள் எனக்கு மனைக்கிழத்தியாக யான் கோடல் வேண்டுமெனக் கருதி மருந்து பிறிதில்லாப் பெருந்துயரெய்தி; நன்மையும் தீமையும் என்று இரு திறத்தால் தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்து—தனது நன்மையும் அவளது தீங்கையும் என்கின்ற இரண்டு கூற்றான் மிகப்பெருக்கிய சொற்களைத் தன்னோடும் அவளோடும் கூட்டிச் சொல்லி; சொல் எதிர்பெறாஅன் சொல்லி இன்புறல்—அச்சொல்லுதற்கு எதிர்மொழி பெறாதே பின்னும் தானே சொல்லி இன்புறுதல்; புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே — பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு என்றவாறு.

அவளும் தமரும் தீங்குசெய்தாராக அவளோடு தீங்கைப் புணர்த்தும், தான் ஏதஞ்செய்யாது தீங்குபட்டானாகத் தன்னோடு நன்மையைப் புணர்த்தும் என நிரனிறையாக உரைக்க. இருதிறத்தாற் றருக்கிய எனக் கூட்டுக.

(எ-டு)

"வாருறு வணரைம்பால் வணங்கிறை நெடுமென்றோட்
பேரெழின் மலருண்கட் பிணையெழின் மானோக்கிற்
காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதற்
கூரெயிற்று முகைவெண்பற் கொடிபுரை நுசுப்பினாய்

நேர்சிலம் பரியார்ப்ப நிரைதொடி வீசினை
யாருயிர் வௌவிக்கொண் டறிந்தீயா திறப்பாய்கேள்!
உளனுவென் னுயிரையுண் டுயவுநோய் கைம்மிக
விளமையா னுணராதாய் நின்றவ றில்லானுங்
களைநரி னோய்செய்யுங் கவினறிந் தணிந்துதம்
வளமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;
நடைமெலிந் தயர்வுறீஇ நாளுமென் னலியுநோய்
மடமையா னுணராதாய் நின்றவ றில்லானு
மிடைநில்லா தெய்க்குநின் னுருவறிந் தணிந்துதம்
உடைமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;
அல்லல்கூர்ந் தழிபுக வணங்காகி யடருநோய்
சொல்லினு மறியாதாய் நின்றவ றில்லானு
மொல்லையே யுயிர்வௌவு முருவறிந் தணிந்துதஞ்
செல்வத்தாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;
எனவாங்கு,
ஒறுப்பின்யா னொறுப்பது நுமரையான் மற்றிந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் புனையிழாய்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறுக்குவென் போல்வல்யா னீபடு பழியே.'' (கலி-58)

எனத் தான் உயிர்கொடுத்தானுகத் தனது நன்மைகூறி அவளது தீங்கெல்லாம் கூறுவான் மடலேறுவேன்போலும் என்று ஐயுற்றுக் கூறியவாறு காண்க. அவளைச் சொல்லுதலே தனக் கின்பமாதலின் சொல்லி யின்புறலென்றார்.

இது புல்லித்தோன்றும் கைக்கிளை யெனவே காமஞ்சான்ற இளமையோள் கண் நிகழும் கைக்கிளை இத்துணைச் சிறப்பின்று யிற்று. அஃது, "எல்லா விஃதொத்தன்" என்னும் குறிஞ்சிக் கலியுள்,

''இவடந்தை,
காதலின் யார்க்குங் கொடுக்கும் விழுப்பொருள்
யாதுநீ வேண்டியது;
பேதாஅய்,
பொருள்வேண்டும் புன்கண்மை யீண்டில்லை யாழ

மருளின் மடநோக்கி நின்றோழி யென்னை
யருளீயல் வேண்டுவல் யான்" (கலி-61)

எனவரும்.

இது கைகோளிரண்டினும் கூறத்தகாத வாய்பாட்டால் கூறலின் கைக்கிளையென்றார். குறிப்பென்றதனான் சொல்லி யின்புறினும் தலைவன்றன் குறிப்பின் நிகழ்ந்தது புறத்தார்க்குப் புலனாகாது என்பதூஉம் அகத்து நிகழ்ச்சி அறியும் மனைவியர்க் காயின் அது புலனுமென்பதூஉம் கொள்க. அது "கிழவோள் பிறள் குணம்" (தொல்-பொ-பொரு-40) என்னும் பொருளியல் சூத்திரத்து ஓதுதும்.

காமஞ் சாலா இளமையோள்வயினெனப் பொதுப்படக் கூறிய அதனால் வினைவல பாங்காயினார் கண்ணும் இவ்விதி கொள்க. இதனைக் "காராரப் பெய்த கடிகொள் வியன்புலத்து" (9) என்னும் முல்லைக்கலியான் உணர்க.

(வி-ரை) ஒருத்திகண்ணே - ஒருத்தியிடத்து. ஏமம் சாலா- மருந்து பிறிது இல்லாத. உலகத்துப் பிணிகள் ஒன்றால் வந்து பிறி தொன்றால் தீரும் இயல்பினது. காம நோயோ அது பற்றதற்குக் காரணமாயிருந்த ஒன்றாலாயே தீரும் தகையது. 'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை தன்னோய்க்குத் தானே மருந்து' எனத் திருவள்ளுவர் கூறுவதும் உணரத்தக்கது. தருக்கிய - ஒத்தன எனப்பொருள் காண்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் பொருந்திய என உணர காணுகின்றார். தீமையைத் தலைவியொடு புணர்த்தும் நன்மையைத் தன்னொடு புணர்த்தும் என நிரனிறை வகையாகப் பொருள் கூறுகின்றார் நச்சினார்க்கினியர். இளம் பூரணர் நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால் என்பதற்குப் புகழ்தலும் பழித்தலுமாய இரு திறத்தால் எனப் பொருள் காண்பர்.

பொதுப்படக் கூறியவதனால் - தலைமக்கள், வினைவலர், அடியோர் எனும் முத்திறத்தாருள் இன்ன திறத்துக்காமஞ்சாலா இளமையோள்வயின் எனக் கூறாது பொதுப்படக் கூறிய அதனால். (50)

பெருந்திணைக்குறிப்பு

51. ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே

இது முறையானே இறுதிநின்ற பெருந்திணை யிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்) ஏறிய மடற்றிறம் - மடன்மாக் கூறுதலன்றி மடலேறுதலும்; இளமை தீர் திறம்-தலைவற்கு இளையளாகாது ஒத்த பருவத்தாளாதலும்; தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறம்-இருபத்து நான்காம் மெய்ப்பாட்டில் நிகழ்ந்து ஏழாம் அவதிமுதலாக வரும் அறிவழிகுணன் உடையளாதலும்; மிக்க காமத்து மிடலொடு தொகைஇ - காமமிகுதியானே எதிர்ப் பட்டுழி வலிதிற்புணர்ந்த இன்பத்தோடே கூட்டப்பட்டு; செப்பிய நான்கும் - கந்தருவத்துட்பட்டு வழீஇயிற்ருகச் செப்பிய இந் நான்கும்; பெருந்திணைக் குறிப்பே - பெருந்திணைக் கருத்து என்றவாறு.

மடன்மா கூறுதல் கைக்கிளையாம். மடற்றிறம் என்றதனுன் அதன் திறமாகிய வரைபாய்தலும் கொள்க. இளமைதீர்திறம் என்றதனுல் தலைவன் முதிர்ச்சியும், இருவரும் முதிர்ந்த பருவத்தும் துறவின்பாற் சேறலின்றிக் காமநுகர்தலும் கொள்க. காமத்து மிகுதிறம் என்றதனுற் சிறிது தேறப்படுதலும் கொள்க.

இவை கந்தருவத்துட்படாஅ வழீஇயின. இவற்றுள் ஏறிய மடற்றிறமும் காமத்துமிகுதிறமும் புணர்ச்சிப்பின் நிகழ்வன வாம்; அது, "மடன்மா கூறுமிடனுமா ருண்டே" (தொல்-பொ கள-11) என்பதனுல் ஏறுவலெனக் கூறிவிடாதே ஏறுதலாம்.

(எ - டு)

சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்

சான்றவர்க் கெல்லாங் கடனு லிவ்விருந்த
சான்றீர் உமக்கொன் றறிவுறுப்பென் மான்ற
துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
நெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சே
னணியிலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப
வோங்கிரும் பெண்ணை மடலூர்ந்தெ னெவ்வநோய்
தாங்குத றேற்றா விடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவென் பாய்மா நிறுத்து;
யாமத்து மெல்லையு மெவ்வத் திரையலைப்ப
மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்
தேமொழி மாத ருறாஅ துறீஇய
காமக் கடலகப் பட்டு;
உய்யா வருநோய்க் குயவாகு மைய
லுறீஇயா ளீத்தவிம் மா;
காணுந ரெள்ளக் கலங்கித் தலைவந்தெ
னாணெழின் முற்றி யுடைத்துள் ளழித்தரு
மாணிழை மாதரா ளேஎரெனக் காமன
தாணையால் வந்த படை;
காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா;
அகையெரி யானுதென் னுயி ரெஞ்சும்
வகையினு லுள்ளஞ் சுடுதரு மன்னோ
முகையே ரிலங்கொயிற் றின்னகை மாதர்
தகையாற் றலைக்கொண்ட நெஞ்சு;
அழன்மன்ற காம வருநோய் நிழன்மன்ற
நேரிழை யீத்தவிம் மா;
ஆங்கதை,
யறிந்தனி ராயிற் சான்றவிர் தான்றவ
மொரீஇத் துறக்கத்தின் வழீஇ யான்றோ
ருள்ளிடப் பட்ட வரசனைப் பெயர்த்தவு

ருயர்நிலை யுலக முறீஇ யாங்கென்
றுயர்நிலை தீர்த்த னுந்தலைக் கடனே." (கலி - 139)

இஃது ஏறிய மடற் றிறம்.

"உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்கலம் புல்லினெஞ் சூன்றும் புறம்புல்லி
னக்குளுத்துப் புல்லலு மற்றே னருளீமோ
பக்கத்துப் புல்லல் சிறிது." (கலி—94)

இதனுள் கொக்குரித்தன்ன வென்பதனால் தோல் திரைந் தமை கூறலின் இளமைதீர் திறமாயிற்று.

"உளைத்தவர் கூறு முரையெல்லா நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம்—விளைத்த
பழங்கள் ளனைத்தாய்ப் படுகளி செய்யு
முழங்கு புனலூரன் மூப்பு" பு. வெ-மாலை (12—14)

"அரும்பிற்கு முண்டோ வலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல்-சுரும்போ
டதிரும் புனலூரற் காரமிர்த மன்றே
முதிரு முலையாண் முயக்கு" பு. வெ-மாலை (12—13)

என்பனவும் அது

'புரிவுண்ட புணர்ச்சி' என்னும் (25) நெய்தற்பாட்டுக் காமத்து மிகுதிறம். இதனைப் பொருளியலுள் (42) காட்டுதும், ஆண்டோதும் இலக்கணங்களும் தோன்ற இதனுள் தெளிந்து கூறுவனவும் ஆண்டுக் காண்க.

"ஏஎ யிஃதொத்த னாணிலன் றன்னொடு
மேவேமென் பாரையு மேவினன் கைப்பற்று
மேவினு மேவாக் கடையு மவையெல்லா
நீயறிதி யானஃ தறிகல்லேன் பூவமன்ற
மெல்லிணர் செல்லாக் கொடியன்னாய் நின்னையான்
புல்லினி தாகலிற் புல்லினெ னெல்லா

தமக்கினி தென்று வலிதிற் பிறர்கின்னு
செய்வது நன்ருமோ மற்று.” (கலி—62)

இது மிக்க காமத்துமிடல்.

செப்பிய நான்கெனவே செப்பாதனவாய் அத்துணைக் கந்தருவமாகக் கூறுகின்ற ‘‘பின்னர் நான்கும் பெருந்திணை பெறும்’’ (தொல் - பொ - கள - 14) என்ற பெருந்திணையும் நான்கு உள வென்று உணர்க. குறிப்பென்றதனுன் அந்நான்கும் பெருந் திணைக்குச் சிறந்தன வெனவும் ஈண்டுக் கூறியன கைக்கிளைக்குச் சிறந்தனவெனவும் கொள்க.

(வி-ரை) இருபத்து நான்காம் மெய்ப்பாடு - கையற உரைத்தல். மடல் ஏறுவன் எனக் கூறுதல் கைக்கிளையாம். அவ் வாறு கூறுதலின்றி மடன்மா ஏறுதல் பெருந்திணையாம் வரை பாய்தல் - குன்றிடத்தினின்றும் வீழ்ந்து உயிர் துறத்தல்.

கந்தர்வம் - ஒத்த அன்பால் கூடும் கூட்டம். இவை அத னெடு மாறுபட்டன ஆதலின் அதனினின்றும் வழுவி வந்தன என்ருர்.

இளம்பூரணர் தரும் விளக்கம்:

இவற்றுள் ஏறிய மடற்றிறம் தலைமகனுக்கே உரித்து என்றும் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் பெரும்பான்மையும் தலை மகனுக்கே உரித்து என்றும் வரையறை செய்வர் இளம்பூரணர். மேலும் அவர் இளமை தீர்திறம் மிக்க காமத்து மிடல் என்பன வற்றிற்குத் தரும் விளக்கம் வேருகும். இளமை தீர்திறமாவது, இளமை நீங்கிய திறத்தின்கண் நிகழ்வது. அது மூவகைப்படும். தலைமகன் முதியனுகித் தலைமகள் இளையளாயினும் தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனுதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின் மேல் மனம் நிகழ்தலின்றி காமத்தின்மேல் மனம் நிகழ்தலும் என மூன்று வகைப்படும்.

மிக்க காமத்து மிடலாவது, ஐந்திணைக்கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு வருவது. அஃதாவது, வற்புறுத்தும் துணையின்றிச்

செலவழுங்குதலும், ஆற்றருமை கூறுதலும் இரந்திரந்து கூறு தலும் இடையூறு கிளத்தலும் அஞ்சிக் கூறுதலும் மனைவி விடுதலில் பிறன்வயிற்சேறலும் இன்னோரன்ன ஆண்பாற் கிளவி யும், முன்னுறச் செப்பலும் பின்னிலை முயறலும் கணவன் உள்வழி இரவுத்தலைச் சேறலும், பருவம் மயங்கலும் இன்னோரன்ன பெண்பாற் கிளவியும், குற்றிசையும் குறுங்கலியும் இன்னோரன்ன பிறவுமாகிய ஒத்த அன்பின் மாறுபட்டு வருவன எல்லாம் கொள்ளப்படும். (51)

இயற்கைப் புணர்ச்சியின் வகை

52. முன்னைய நான்கும் முன்னதற் கென்ப.

இது 'முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே' (தொல்-பொ - கள - 14.) எனக் களவியலுள் கூறும் சிறப்பில்லாக் கைக் கிளைபோ லன்றிக் காமஞ்சாலா இளமையோள்வயிற் கைக்கிளை போல் இவையும் சிறந்தன என எய்தாத தெய்துவித்தது.

(இ - ள்) இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னிகழ்ந்த காட்சியும் ஐயமும் தெரிதலும் தேறலும் என்ற குறிப்பு நான்கும் நற் காமத்துக்கு இன்றியமையாது வருதலின், முற்கூறிய சிறப்புடைக் கைக்கிளையாதற்கு உரியவென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

களவியலுள் கூறுங் கைக்கிளை சிறப்பின்மையின் முன்னதற் குரியவெனச் சிறப்பெய்துவித்தார். களவியலுள் 'ஒத்த கிழ வனும் கிழத்தியும் காண்ப' (தொல்-பொ-கள-2) என்றது முதலாக இந்நான்கும் கூறுமாறு ஆண்டுணர்க.

இவை தலைவி வேட்கைக் குறிப்புத் தன்மே னிகழ்வதனைத் தலைவன் அறிதற்கு முன்னே தன் காதன்மிகுதியாற் கூறுவன வாதலின் கைக்கிளையாயிற்று.

இவை தலைவற்கே உரியவென்பது, 'சிறந்துழி யையஞ் சிறந்த தென்ப' (தொல் - பொ - கள-3) என்னும் சூத்திரத்திற் கூறுதும்.

இவையும் புணர்ச்சி நிமித்தமாய்க் குறிஞ்சியாகாவோ வெனின். காட்சிப்பின் தோன்றிய ஐயமும் ஆராய்ச்சியும் துணிவும் நன்றெனக் கோடற்கும் அன்றெனக் கோடற்கும் பொதுவாகலின், அவை ஒருதலையாக நிமித்தமாகா; வழிநிலைக் காட்சியே நிமித்தமா மென்றுணர்க.

(வி-ரை) கைக்கிளைக்குரிய செய்திகளை ஆசிரியர் மூன்றிடங்களில் கூறுகின்றார். ஒன்று, இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் காட்சியும் ஐயமும் தெளிதலும் தேறலும் ஆகிய நான்கும் கைக்கிளையாம் என்பது. இரண்டு, காமம் சாலா இளமையோள்வயின் ஏமாஞ்சாலா இடும்பை எய்தி அவளுடன் சில சொல் புணர்த்துக் கூறுதலாம். மூன்று, எண்வகை மணங்களுள் அசுரம் இராக்கதம் பைசாசம் ஆகிய மூன்றும் கைக்கிளையாம் என்பது. இவற்றுள் முன்னைய இரண்டும் இவ்வகத்திணையியலில் கூறப்படுகின்றன. பின்னையது களவியலில் கூறப்படுகின்றது. இம்மூன்றனுள் முன்னைய இரண்டும் சிறந்தன என்றும் பின்னையது அத்துணைச் சிறப்பிலது என்றும் நச்சினார்க்கினியர் கூறுவர். முன்னைய நான்கும் காட்சி, ஐயம், தெரிதல், தேறல் என்பன. காட்சியாவது, தலைவன் தலைவியைக் காண்டலாம். ஐயமாவது, தலைமகள் அணங்கோ, ஆய்மயிலோ எனத்தலைமகன் ஐயுறுதலாம் தெரிதலாவது, தலைமகள் சுண்ணிமைத்தலும் அவள் அடிநிலம் தோய்தலும் முதலாயின கண்டு அவள் நிலமகளே என அறிவதாம். தேறலாவது, தலைமகளின் நோக்கத்தால் தன் கருத்திற்கு உடன்படுவள் எனத் தலைமகன் தெளிவதாம். இந்நான்கும் தலைவியைக் கண்ட தலைவனிடத்தேயே நிகழ்தலின் இவை தலைமகற்கே உரிய என்றார். இந்நான்கும் தலைவியின் வேட்கைக் குறிப்பைத் தான் அறிதற்கு முன்னேயே தன் காதல் மிகுதியால் நிகழ்தலின் கைக்கிளையாயின. இந்நான்கனுள் முன்னைய மூன்றும் தலைவியின் குறிப்பு அறிதற்கு முன் தலைவன் தானே கண்டு ஐயுற்றுத் தெளிகின்றான். தெளிந்தவுடன் தலைமகள் குறிப்புத்தன் குறிப்போடு ஒத்துளது என்பதனை அறிதலே குறிப்பறிதலாம். ஆதலின் ஈதொன்றே புணர்ச்சி நிமித்தமாயிற்று. வழிநிலைக் காட்சி-குறிப்பறிதல்.

இந்நூற்பாவிற்கு இவர் கூறிய உரையை இளம்பூரணர் கலந்த பொழுதும் காட்சியும் அன்ன என்னும் நூற்பாவிற்கு உரிய உரையாகக் கூறுவர்.

அதுவே பொருத்தமுடைத்தாம். இந்நூற்பாவிற்கு ஏறு மடற்றிறம் இளமை தீராத் திறம் தேறுதல் ஒழிந்த காமகத்து மிகாத்திறம் மிக்க காமத்தின் மாறுகாத்திறம் ஆகிய நான்கும் கைக்கிளைக்குரியவாம் என உரை காண்பர். இதற்கு முன்னைய நூற்பா ஏறிய மடற்றிறம் முதலாக உள்ள நான்கும் பெருந்திணைக்குரிய எனக் கூறுகின்றது. ஆதலின் அவற்றிற்கு முன்னிலைமையாகிய இந்நான்கையும் கூறிப் பெருந்திணைக்கு முன்னுள்ளதாகிய கைக்கிளைக்குரியவாம் என உரை கூறினர். இதுவே பொருத்தமுடைத்தாம்.

ஏறுமடற்றிறம் - வெளிப்பட இரத்தலாம். இளமை தீராத் திறம் - நலம் பாராட்டலாம். தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத் திறம்-புணராவிரக்கமாம். மிக்க காமத்தின் மாறுகாத்திறம்-நயப்புறுத்தலாம். (52)

புலனெறி வழக்கத்திற்குரிய பாடல்கள்.

53. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகு மென்மனார் புலவர்.

இது புலனெறி வழக்கம் இன்னதென்பதூஉம், அது நடுவணைந்திணைக்கு உரிமையுடைத்து என்பதூஉம், இன்ன செய்யுட்கு உரித்தென்பதூஉம் உணர்த்துத னுதலிற்று.

(இ - ள்) நாடகவழக்கினும் உலகியல் வழக்கினும் - புனைந்துரைவகையானும்,உலகவழக்கத்தானும்; பாடல்சான்ற புலனெறி வழக்கம் - புலவரால் பாடுதற்கமைந்த புலவராற்று வழக்கம்; கலியே பரிபாட்டு அ இரு பாங்கினும் உரியது ஆகும் என்மனார்

புலவர் - கலியும் பரிபாடலுமென்கின்ற அவ்விரண்டுகூற்றுச் செய்யுளிடத்தும் நடத்தற்கு உரியதாமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

இவற்றிற்கு உரித்தெனவே, அங்ஙனம் உரித்தன்றிப் புலனெறி வழக்கம் ஒழிந்த பாட்டிற்கும் வருதலும், புலனெறி வழக்கம் அல்லாத பொருள் இவ்விரண்டிற்கும் வாராமையும் கூறிற்று. இவை தேவபாணிக்கு வருதலும் கொச்சகக் கலி பொருள்வேறு படுதலும் செய்யுளியலுள் வரைந்து ஓதுதும். 'மக்கணுதலிய அகனைந்திணையு' மென (தொல்-பொ-அகத்-54) மேல்வரும் அதிகாரத்தானும், இதனை அகத்திணையியலுள் வைத்தமையானும் அகனைந்திணையாகிய காமப்பொருளே புலனெறி வழக்கத்திற்குப் பொருளென் றுணர்க.

பாடல் சான்ற என்றதனாற் பாடலுள் அமைந்தனவெனவே பாடலுள் அமையாதனவும் உளவென்று கொள்ளவைத்தமையின் கைக்கிளையும் பெருந்திணையும் பெரும்பான்மையும் உலகியல் பற்றிய புலனெறி வழக்காய்ச் சிறுபான்மை வருமென்றுகொள்க.

செய்யுளியலுள்கூறிய முறைமையின்றி ஈண்டுக் கலியை முன் னோதியது, கலியெல்லாம் ஐந்திணைப்பொருளாய புலனெறி வழக் கிற் காமமும், கைக்கிளை பெருந்திணையாகிய உலகியலே பற்றிய புலனெறி வழக்கிற் காமமும்பற்றி வருமென்றற்கும், பரிபாடல் தெய்வ வாழ்த்து உட்படக் காமப்பொருள் குறித்து உலகியலே பற்றி வருமென்றற்கும் என்றுணர்க.

ஆசிரியமும் வெண்பாவும் வஞ்சியும் அகம் புறமென்னும் இரண்டிற்கும் பொதுவாய் வருமாறு நெடுந்தொகையும் புறமும் கீழ்க்கணக்கும் மதுரைக்காஞ்சியும் பட்டினப்பாலையும் என்பன வற்றுள் காண்க. மருட்பாத் 'தானிதுவென்னும் தனிநிலை' (தொ-பொ-செய்-85) இன்மையின் வரைநிலையின்று.

"மனைநெடு வயலை வேழஞ் சுற்றுந்
துறைகேழூரன் கொடுமை நாணி
நல்ல னென்றும் யாமே
யல்ல னென்னுமென் றடமென் றோளே." (ஐங்குறு-11)

இதனுள் முதல் கரு வுரிப்பொருளென்ற மூன்றும் கூறலின் நாடக வழக்கும் தலைவனைத் தலைவி கொடுமைகூறல் உலகியலா கலின் உலகியல் வழக்கும் உடன்கூறிற்று. இவ்விரண்டும் கூடி வருதலே பாடலுள் பயின்ற புலனெறி வழக்கமெனப்படும். இவ்விரண்டினும் உலகியல் சிறத்தல் 'உயர்ந்தோர்கிளவி' (தொ-பொ-பொரு-23) என்னும் பொருளியல் சூத்திரத்தானும் மர பியலானும் பெறுதும்.

"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே."
(குறுந்-167)

இஃது உலகியலே வந்தது.

இனி அவ்வந் நிலத்து மக்களே தலைவராயக்கால் அவை உலகியலேயாம்.

இனிக் கைக்கிளையுள் அசுரமாகிய ஏறுகோடல் கைக்கிளை காமப்பொருளாகிய புலனெறிவழக்கில் வருங்கால், முல்லை நிலத்து ஆயரும் ஆய்ச்சியரும் கந்தருவமாகிய களவொழுக்கம் ஒழுகி வரையுங்காலத்து, அந்நிலத்தியல்பு பற்றி ஏறுதழுவி வரைந்து கொள்வரெனப் புலனெறி வழக்காகச்செய்தல் இக்கலிக் குரித் தென்று கோடலும் பாடலுள் அமையாதன என்றதனாற் கொள்க. அது "மலிதிரையூர்ந்து" என்னும் (4) முல்லைக்கலியுள் "ஆங்கண யர்வர் தழூஉ" என்னுந்துணையும் ஏறுதழுவிய வாற்றைத் தோழி தலைவிக்குக்காட்டிக் கூறிப், "பாடுகம்வம்மின்" எனபதனால் தலைவனைப் பாடுகம் வாவென்றாட்கு, அவளும் "நெற்றிச் சிவலை ***மகள்" "ஒருக்குநாமாடுமகன்" என்பனவற்றான் அலரச்சம் நீங்கினவாறும், அவன்தான் வருத்தியவாறும் கூறிப் பாடியபின் னர்த், தோழி,

"கோளரி தாக நிறுத்த கொலையேற்றுக்
காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
யார்வுற் றெமர்கொடை நேர்ந்தா ரலரெடுத்த
வூராரை யுச்சி மிதித்து" (கலி-104)

என எமர் கொடைநேர்ந்தாரெனக் கூறியவாறும் காண்க.

இவ்வாறே இம்முல்லை நிலத்து அகப்பொருளோடு கலந்து வரும் கைக்கிளை பிறவுமுள; அவையெல்லாம் இதனுன் அமைத்துக்கொள்க.

புனைந்துரைவகையால் கூறுபவென்றலின் புலவர் இல்லனவும் கூறுபவாலோவெனின், உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்து ஒழுகுதல் அறமெனக்கருதி, அந்நல்லோர்க்குள்ளனவற்றில் சிறிது இல்லனவும் கூறுதலன்றி, யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறுரென்றற்கன்றே நாடகமென்னுது வழக்கென்பார் ஆயிற்றென்பது.

இவ்வதிகாரத்து நாடகவழக்கென்பன, புணர்ச்சி உலகிற்குப் பொதுவாயினும் மலைசார்ந்து நிழுமென்றும், காலம் வரைந்தும், உயர்ந்தோர் காமத்திற் குரியன வரைந்தும், மெய்ப்பாடுதோன்றப் பிறவாறும் கூறுவது செய்யுள் வழக்காம். இக்கருத்தானே 'முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே—நுவலும் காலை' (தொல்-பொ-அகத்-3) என்று புகுந்தார் இவ்வாசிரியர்.

இப்புலநெறிவழக்கினை இல்லது இனியது, புலவரான் நாட்டப்பட்ட தென்னுமோவெனின், இல்லதொன்று கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ்செய்யாது ஆகலானும், உடன்கூறிய உலகியல் வழக்கத்தினை ஒழித்தல்வேண்டும் ஆகலானும், அது பொருந்தாது. அல்லாதுஉம் அங்ஙனங்கொண்ட இறையனார் களவியலுள்ளும்

"வேந்துவினை யியற்கை பார்ப்பார்க் குரித்தே"
(இறையனார்-37)

"அரச ரல்லா வேனை யோர்க்கும்
புரைவ தென்ப வோரிடத் தானே" (இறையனார்-38)

எனவும்,

"வேந்தற் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்
றாங்கவ் விரண்டு மிழிந்தோர்க் குரிய." (இறையனார் -39)

எனவும் நான்கு வருணமும் கூறி, நால்வகைத் தலைமக்களை யும் உணர்த்தலின் இல்லதென்பது தொல்லாசிரியர் தமிழ் வழக்கன்றென மறுக்க. இக்கருத்தானே மேலும் 'மக்களு தலிய வகைந்திணையும்' (தொல் பொ-அகத்-54) என்பர்.

(வி-ரை) நாடக வழக்காவாவது உயர்ந்தோர்க்குரிய ஒழுகவாறுகளுடன் சிலவற்றைப் புனைந்து கூட்டி உரைப்பதாகும். 'நாடக வழக்காவது சுவைபட வருவன ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்; அஃதாவது செல்வத்தானும் குலத்தானும் ஒழுக்கத்தினானும் அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப் போருமின்றி அடுப்போருமின்றி வேட்கை மிகுதியால் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினார் எனவும் பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல்' என்பர் இளம்பூரணர்.

ஒழிந்த பாடல் - ஆசிரியம் வெண்பா வஞ்சி மருட்பா என்பன. நற்றிணை குறுந்தொகை முதலாய அகப்பொருள் பாடல்கள் ஆசிரியமாயும், திணைமாலை ஐம்பது, திணைமாலை எழுபது போன்ற அகப்பொருட்பாடல்கள் வெண்பாவாகவும் அமைந்திருப்பினும் அப்பாக்கள் புறப்பொருள் பற்றியும் வருதலின் அவற்றை விடுத்து அகப்பொருள் பற்றியே வரும் கலித்தொகை பரிபாடல் ஆகிய இரண்டையும் ஆசிரியர் எடுத்தோதினார்.

புலனறி வழக்கம் என்பது இல்லது இனியது புலவரால் நாட்டப் பெற்றது எனக் கூறுவர் இறையனார், களவியல் உரை ஆசிரியர். இதனை நான்கு காரணங்களால் நச்சினார்க்கினியர்

மறுக்கின்றார். ஒன்று, ஆசிரியர் கூறும் பொருள் இல்லது ஆயின் கேட்போர்க்கும் சுவையுண்டாகாது. இரண்டு, புலனெறி வழக்கு என்பது நாடக வழக்கும் உலகியல் வழக்கும் ஆகிய இரண்டுமாம். ஆதலின் இல்லது எனின் இதன் கண் உள்ள உலகியல் வழக்கினை நீக்குதல் வேண்டும். மூன்று, இல்லாத பொருள் எனக்கூறிய இறையனார் களவியல் உரையாசிரியரும் நால்வகை வருணத் தாரையும் குறிஞ்சி முதலிய நால்வகை நிலத்திற்குரிய தலை மக்களையும் கூறுகின்றார். இம் மக்கள் உலகியலில் உள்ளார்களே அன்றி இல்லாதவர்கள் அல்லர். நான்கு, ஆசிரியரும் மக்கள் நுதலிய ஐந்திணை என்று கூறுகின்றார். எனவே மக்களும் அவர் களால் கொள்ளப்படும் ஒழுக்கமும் உலகியலில் உள்ளனவே அன்றி இல்லன அல்ல. ஆதலின் இக்கருத்துப் பொருந்துவதன்று என மறுத்துள்ளார் நச்சினார்க்கினியர். (53)

அகத்திணைக்கண் தலைவன் இயற்பெயர் கூறார்.

54. மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்.

இது முற்கூறிய புலநெறிவழக்கிற்குச் சிறந்த ஐந்திணைக் காவதோர் வரையறை கூறுகின்றது.

(இ - ள்.) மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்—மக்களே தலைமக்களாகக் கருதுதற்குரிய நடுவணைந்திணைக்கண்ணும்; சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்—திணைப்பெயரால் கூறி னன்றி ஒருவனையும் ஒருத்தியையும் விதந்துகூறி, அவரது இயற் பெயர் கொள்ளப்பெறார் என்றவாறு.

இது நாடக வழக்குப்பற்றி விலக்கியது. அவை வெற்பன் துறைவன் கொடிச்சி கிழத்தி யெனவரும்.

மக்கள் நுதலிய என்பதனானே மக்களல்லாத தேவரும் நரகரும் தலைவராகக் கூறப்படாரெனவும் அகனைந்திணையும் என்றதனானே கைக்கிளையும் பெருந்திணையும் சுட்டி ஒருவர் பெயர் கொண்டும் கொள்ளாதும் வருமெனவும் கொள்க. அகனைந்திணை

யெனவே அகமென்பது நடுவுநின்ற ஐந்திணையாதலிற், கைக்கிளை யும் பெருந்திணையும் அவற்றின் புறத்துநிற்றலின் அகப்புற மென்றும் பெயர்பெறுதலும் பெற்றும்.

இனி அவை வரையறையுடைமை மேலைச் சூத்திரத்தான் அறிக.

"கன்று முண்ணாது கலத்தினும் படாது—நல்லான் றீம்பா லிலத்துக்... கவினே இது (குறுந்-27) வெள்ளி வீதியார் பாட்டு".

"மள்ளர் குழீஇய விழவினானும்... மகனே" (குறுந்-31) இது காதலற் கெடுத்த ஆதிமந்தி பாட்டு (அகம்-230). இவை தத்தம் பெயர்கூறின் புறமாமென் றஞ்சி வாளாது கூறினர். ஆதிமந்தி தன்பெயராலும், காதலனாகிய ஆட்டனத்தி பெய ராலும் கூறிற் காஞ்சிப்பாற்படும்.

"ஆதி மந்தி போல
ஏதஞ் சொல்லிப் பேதுபெரி துறலே" (அகம்-236)

எனவும்,

"வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர் திசினால் யானே." (அகம்-147)

எனவும், அகத்திணைக்கண் சார்த்துவகையான் வந்தன அன்றித் தலைமைவகையாக வந்தில என்பது.

வருகின்ற (55) சூத்திரத்துப் 'பொருந்தின்' என்னும் இலேசானே இச் சார்த்துவகை கோடும். இது பெயரெனப் பட்ட கருப்பொருளாதலில் கூற்றிற்கு உரிய தோழியும் பாங்கனும் முதலிய வாயிலோரையும் பொதுப்பெயரானன்றி இயற் பெயர்த் தொடக்கத்தன கூறப்பெறாரென்று கொள்க.

(எ-டு)

"முகிழ்முகிழ்த் தேவர வாயினு முலையே
யுரவெயிற் றெருடுக்கமொ டஞ்சுதக் கனவே

களவறி வாரா வாயினுங் கண்ணே
நுழைநுதி வேலி னேக்கரி யவ்வே
யிளைய ளாயினு மணங்குதக் கிவளே
முளையிள நெருப்பின் முதுக்குறைந் தனளே
யதனு, னேயில ளாகுக தில்ல
சாயிறைப் பணைத்தோ ளீன்ற தாயே.''

இது சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாக் கைக்கிளை.

''ஆள்வினை முடித்த வருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய விராம னவனொடு
மிதிலை மூதூ ரெய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மடக்கட் சீதை
கடுவிசை வின்ஞா ணிடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்ட மெய்தித்
துயிலெழுந்து மயங்கின ளதாஅன்று மயிலென
மகிழ் ....''

இது சுட்டி ஒருவர் பெயர் கொண்ட கைக்கிளை.

இஃது அசுரமாகலின், 'முன்னைய மூன்றும் கைக்கிளை' யென்றதனுல் கோடும்.

''யாமத்து மெல்லையும்'' (நெய்தற் கலி 22) என்றது சுட்டி ஒருவர் பெயர்கொள்ளாப் பெருந்திணை.

''பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பணைமுலைச் சாந்தம்
வேறு தொடங்கிய விசயனெஞ்சத்
தாரழ லாற்று தை* ....
பொதியிற் சாந்த மெல்லாம் பொருதிரை
முத்தினு முழுங்கழற் செந்திப்
பொத்துவது போலும் புலம்புமுந் துறுத்தே.''

இது சுட்டி ஒருவர் பெயர்கொண்ட பெருந்திணை.

இவை சான்றோர் செய்யுளுள் பெருவரவிற்று இன்மையின் அன்றே முற்சூத்திரத்து முன்னும் பின்னும் இவற்றை வைத்தது என்பது.

"முட்காற் காரை முதுகனி யேய்ப்பத்
தெறிப்ப விளைந்த தீங்கட் டார
நிறுத்த வாயந் தலைச்செல வுண்டு
பச்சூன் றின்று பைந்நிணம் பெருத்த
வெச்சி லீர்ங்கை விற்புறந் திமிரிப்
புலம்புக் கனனே புல்லணற் காளை
யொருமுறை யுண்ணு வளைவைப் பெருநிறை
யூர்ப்புற நிறையத் தருகுவன் யார்க்குந்
தொடுத லோம்புமதி முதுகட் சாடி
யாதரக் கழுமிய துகளன்
காய்தலு முண்டக் கள்வெய் யோனே." (புறம்-258)

இது வெட்சித்திணை பெயர்கொள்ளாது வந்தது.

"முலைபொழி தீம்பான் மண்(சறு படுப்ப
மலர்தலை யுலக மோம்பு மென்ப
பரிசிலைத் தொண்டைப் பல்லவ ஞணையின்
வெட்சித் தாயத்து வில்லே ருழவர்
பொருந்தா வடுகர் முனைச்சுரங்
கடந்து கொண்ட பல்லா னிரையே"

இது வேந்துவிடு தொழிற்கண் வேந்தனைப் பெயர் கூறிற்று. ஒழிந்தனவும் புறத்திணையியலுள் காண்க. (54)

புறத்திணைக்கண் இயற்பெயர் வரும்

55. புறத்திணை மருங்கிற் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே

இது புறத்திணைக்குத் தலைவர் ஒருவராதலும், பலராதலும் உரிப்பொருட்குத் தலைவர் பலராகாமையும் கூறலின், எய்தாத தெய்துவித்து எய்தியது விலக்கிற்று.

(இ-ள்) அகத்திணைமருங்கிற் பொருந்தின் - ஒருவனை யும் ஒருத்தியையும் விதந்து கூறும் இயற்பெயர் அகத்திணைக் கண்ணே வந்து பொருந்துமாயின்; புறத்திணை அளவுதல் மருங்

கின் அல்லது இல - ஆண்டும் புறத்திணை கலத்தலிடத்தின் அல்லது வருதலில்லை என்றவாறு.

எனவே, புறத்திணை கருப்பொருளாயும் அதுதான் உவம மாயும் அகத்திணையுள் கலக்குமென்பதூஉம் இதனுனே விரித்தா ராயிற்று. அளவுமெனவே ஒரு செய்யுட்கண்ணும் அப் புறத் திணையாகிய இயற்பெயர்களும் சிறப்புப்பெயர்களும் ஒன்றே யன்றிப் பலவும் வருதலும் கொள்க. ஒருவரென்பது அதிகாரப் பட்டமையின், அகத்திற்கு வரும் உரிப்பொருட்பெயர் ஒன்றுதல் கொள்க.

(எ-டு) "வண்டுபடத் ததைந்த" என்னும் (1) அகப் பாட்டினுள் "முருக னற்போர் நெடுவே ளாவி... யாங்கண்" எனவே புறத்திணைத்தலைவன் இயற்பெயர் ஒன்றே வந்தவாறும் அவன் நிலக் கருப்பொருளாய் அகத்திற்கு வந்தவாறும், உரிப் பொருள் தலைவன் ஒருவனேயானவாறும் காண்க. "எவ்வி யிழந்தவறுமையாழ்ப் பாணர், பூவில் வறுந்தலைபோலப் புல்லென்று" (குறுந்-19) என்பது கருப்பொருள் உவமமாய் வந்தது.

"கேள்கே டுன்றவும்" என்னும் (93) அகப்பாட்டுப் புறத் திணைத் தலைவர் பலராய் அகத்திணைக்கண் அளவிவந்தது புறத்திணைக்கண் இயற்பெயர் அளவிவரும் என்பதனுனே "முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்" என் னும் (158) புறப்பாட்டு "எழுவர் மாய்ந்த பின்றை" எனப் புறத் திணைத் தலைவர் பலராய் வந்தது. பிறவும் இவ்வாறு வருவன இதனுன் அமைக்க.

இன்னும் இதனுனே அகப்புறமாகிய கைக்கிளை பெருந் திணைக்கும் இப்பண்மை சிறுபான்மை கொள்க.

(எ-டு)

"ஏறும் வருந்தின வாயரும் புண்கூர்ந்தார்
நாறிருங் கூந்தற் பொதுமகளி ரெல்லாரு
முல்லையந் தண்பொழில் புக்கார் பொதுவரோ
டெல்லாம் புணர்குறிக் கொண்டு." (கலி - 101)

பொருந்தின் எனவே, தானும் தன்னொடு பொருந்துவதூஉம் என இரண்டாக்கிச், சார்த்துவகையான் வரும் பெயர்க்குங்கொள்க. நாடகவழக்கினுளது முன்னர்ச் சூத்திரத்துள் காட்டினும். பெயர்கள் பலவாதலின் இல வெனப் பன்மை கூறினார்.

௨

புறத்திணையியல்

பொருளமைப்பு

அகத்திணை இலக்கணத்தை நன்குணர்ந்தவர்கள் புறத்திணை இலக்கணத்தை ஆராய்ந்து கூறற்குரியர். புறத்திணையியலில் ஒன்றாகிய வெட்சித்திணை குறிஞ்சித்திணையது புறனாகும். அது அஞ்சத்தக்க பதினான்கு துறைகளையுடையது.

வெட்சித்திணையின் பொதுவிலக்கணம்

அரசனின் ஆணைவழி நின்ற தானைத்தலைவர் பகைப்புலத்துச் சென்று பகைவர்களின் ஆனிரைகளைக் களவினால் கொண்டு வந்து பாதுகாப்பது இதன் பொதுவிலக்கணமாகும். இவ்வாறு களவினால் கொண்டு வருவது உலகத்துக்களவு போன்று குற்றமுடையதன்று. இரு பெரு வேந்தர் பொருவது கருதியக்கால் ஒருவர் ஒருவர் நாட்டு வாழும் அந்தணர், பசு, பெண்டிர், பிணிவுடையவர், மகப்பெறுதார் ஆகிய பலரையும் அந்நாட்டினின்றும் தீங்கு நேரா வண்ணம் வெளியிற் செல்க என முரசறைவர். அதுகேட்டுச் செல்லுதற்கு இயலாததாயும் பகைப்புலத்தவரது உடைமையாயும் இருக்கும் ஆனிரைகளையே களவின்கண் கொள்வர் ஆதலின் இது அறனாயிற்று.

குறிஞ்சிக்குரிய களவொழுக்கமும் கங்குற்காலமும் காவலர் கடுகினும் தான் கருதிய பொருளை முடித்து மீள்தலும் போல்வன வெட்சிக்கும் ஒத்தலான் வெட்சி குறிஞ்சிக்குப்புறனாயிற்று.

அதன் வகை:

பகைப்புலத்து ஆனிரைகளைக் கொள்வோர் படைகளுடன் செல்வர். அப்பொழுது முரசுஒலி முதலிய ஒலியெழும். தாம் செய்யும் செயல் தடையின்றி வெற்றியுறுமா? என நற்சொல் கேட்பர், அதன்பின் தம் படையுடன் செல்வர். அவ்வாறு

செல்லுங்கால் மறவர்கள் சிலர் முன்னமேயே பகைப்புலத்திற்குச் சென்று அங்குள்ள ஆனிரைகளின் நிலையையும் அவற்றைக்காத்து நிற்போரின் நிலையையும் ஒற்றினால் உணர்வர். இவ்வொற்று அறிந்ததன் வாயிலாக மறவர் அனைவரும் நிரைப்புறத்திற்குச் சென்று தங்குவர். அப்பொழுது ஆண்டுள்ளோர்க்கும் இவர்க்கும் போர் நிகழும். அதன் வாயிலாகச் சிலர் இறந்துபடுதலுமுண்டு. அதன் பின்னர் அவ்வானிரைகளைத் தம் உடைமையாக்கிக் கொள்வர். அதனைப்பொருது தடுக்கும் வீரர்களைப் போரால் விலக்குவர். தாம் இவ்வாறு கொண்ட ஆனிரைகளை வழியிடத்துத் துன்புறுத்தலின்றி அழைத்து வருவர். ஆனிரைகளைப் பாடி வீட்டிலுள்ளோர் கண்டு மகிழ்வர். தாம் கொணர்ந்த ஆனிரை களைத் தம் ஊர்ப்புறத்து நிறுத்தித் தமக்குள் அதனைப் பங்கிட்டுக் கொள்வர். இவ்வெற்றிக்களிப்பினால் கள்ளுண்டு மகிழ்வர். தம்மை நாடி வந்த இரவலர்க்கு அவற்றைக் கொடையாகக் கொடுப்பர். பின் வீரம் சிறக்கத் துடிகொண்டு தம்வெற்றிக்குக் காரணமாய கொற்றவையைப் பரவுவர்.

புறத்திணை வழுக்கள்

இப்பகுதியில் கூறுவனவற்றை மூவகையாகப் பிரிப்பர்: 1. அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாய் வருவன. அவை- காந்தள், பூ, வள்ளி, கழல்நிலை, உன்னநிலை, பூவைநிலை என்பன வாம். 2. கரந்தைப்பகுதியாய் வருவன: அவை ஆரமரோட்டல் முதலாகப் பிள்ளையாட்டு ஈறாக வருவனவாம். 3. குறுநிலமன்னர், காட்டகத்து வாழும் மறவர் ஆகியோர்க்கும் பேரரசர்க்கும் பொதுவாய் வருவன. அவை காட்சி முதல் வாழ்த்தல் ஈறாக வரும் கற்கோள் வகைகளாம்.

வேந்தன் ஆணைவழியின்றித் தெய்வத்துக்குச் செய்யும் கடன் களை அறியும் சிறப்பினையும் உயிர்க்கொலை கூறும் கொடிய வாயினையும் உடைய வேலன், தெய்வம் ஏறப்பெற்றுக் காந்தளைச் சூடி ஆடுவன். இவ்வாறு ஆடுவது வேந்தன் ஆணைவழி அன்றாதலின் வழுவாயிற்று. அகத்திற்கும் இது உரித்தாகலின் பொது வாயிற்று.

சேர சோழ பாண்டியர்களின் படை வீரர்களாய் உள்ளார் தகர், யானை, நாய் முதலியவற்றால் தமக்கு வரும் வெற்றிப் புகழைத் தாம் எய்துதற்கு தம் வேந்தர் அறியாமல் தம்முள் மாறாய் வென்றுஆடுங்கால் தாம் இன்னாரெனத் தெரிதல் வேண்டித்தத்தம் பேரரசர்க்குரிய பனை, வேம்பு, ஆத்தி ஆகிய மாலைகளைச்சூடி ஆடுவர். இது தம்மரசர் அறியாது செய்தலின் வழுவாயிற்று. பெரும்பாலும் பெண்பாலாரும் சிறுபான்மை இருபாலாரும் கூடித் தத்தம் மகிழ்ச்சி தோன்ற வள்ளியம்மையின் கோலம் புனைந்து ஆடுவர். இது வள்ளியெனப் பெயர் பெறும். போர்க் களத்தில் இளமைப் பருவத்தான் ஒருவன் புறக்கிட்டு ஓடாது நின்றமை கண்டு வியந்து அவர்க்குக்காலில் கழல் கட்டுதலுமுண்டு. பொருதற்கு முன் வீரர்க்குள் சிலர் தம் அரசனது ஆக்கம் கருதி உன்ன மரத்தின் முன்னின்று எம்வேந்தர்க்கு ஆக்கம் உளதெனில் கோடுகள் தழைக, இன்றெனில் படுக, எனக்கூறி நிமித்தம் பார்ப்பர். தம் மன்னர்க்கு வெற்றியேயன்றித் தோல்வியும் வருமெனக் கருதுதலின் வழுவாயிற்று. மால், அயன், அரன் ஆகியோர் தொழில்களோடு அரசர் தொழிலையும் உவமித்துக் கூறுதலுமுண்டு. இவ்வாறு கூறுதல் பூவை நிலையாம். மிக உயர்ந்த தேவர்களை மக்கட்கு உவமையாகக் கூறலின் இது வழுவாயிற்று.

கரந்தை:— குறுநிலமன்னரும் காட்டகத்து வாழும் மறவரும் தம் அரசன் ஆணைவழியின்றி மாற்று வேந்தரைப் பொருது புறங் காண்டலுமுண்டு. தம் அரசன் ஆணையின்றியும் பேரரசரைக் குறுநிலமன்னர் பொருது புறங்காண்டல் பற்றியும் இது வழுவாயிற்று. வெட்சி மறவர் கொண்ட நிரையைக் குறுநிலமன்னர்களோ காட்டகத்து வாழும் மறவர்களோ மீட்டலும் உண்டு. சில வீரர்கள் தம்வேந்தர்க்குரிய புகழைப் பிறர்க்குரியவாகக் கூறி மகிழ்தலும் உண்டு. சில வீரர்கள் தம் அரிய போர் முயற்சியால் வஞ்சினம் கூறுதலுமுண்டு. தன்மேல் வரும் முன் படையினைத்தானே தாங்குதல் வாட்டொழில் செய்து மாற்றாரைக்கொன்று குவித்தல் ஆகிய இருவகைப்பட்ட நிலைகளையும் போருக்கு இதற்குமுன் சென்றறியாத பிள்ளைமைத் தன்மையுடைய வீரர்கள் செய்தலுமுண்டு. வாளால் பொருதுயர்ந்த அரசிளங்குமரனை அந்நாட்டிலுள்

ளோர் கண்டு மகிழ்ந்து அப்பிள்ளைப்பருவத்தோனுக்கு அரசாட்சியைக் கொடுத்து மகிழ்தலுமுண்டு.

வெட்சி யென்பது அரசன் ஆணைவழி நின்று செய்வது. கரந்தை என்பது வீரர்கள் தாமே செய்வது. நிரை கோடலாய ஒழுக்கத்தால் இதுவும் வெட்சி எனப் பெயர் பெற்றது பூச்சூடு தலாகிய ஒழுக்கத்தால் கரந்தை எனப்பெயர் பெற்றது. ஆதலின் வெட்சி போலச் சிறந்ததன்று. ஆனிரைகளைக் கோடலும் மீட்டலும் வெட்சியே என்பர் நச்சினார்க்கினியர். பிற்காலத்தார் முன்னையதை வெட்சி என்றும் பின்னையதைக் கரந்தை என்றும் பாகுபாடு செய்தனர். நச்சினார்க்கினியரும் படையியங்கரவம் முதலாகச் சொல்லப்பட்ட வெட்சிக்குரிய துறைகளைக் கரந்தைக்கும் ஏற்குமாறு விளக்கம் கூறியுள்ளனர். ஆயினும் இது தொல்காப்பியருக்கு உடன்பாடன்று. ஆதலால்தான் தொல்காப்பியர் கரந்தைப் பகுதியாகக் கருதத் தக்க சில நிகழ்ச்சிகளை மட்டும் கூறி அவற்றோடு பிறவற்றையும் இணைத்துக் கூறினர்.

கற்கோள் வகை:

பெருஞ்சிறப்போடு பொருது வெற்றி கொண்ட வீரர்களும் போரில் உயிர்கொடுத்துப் புகழ் கொண்ட வீரர்களும் அக்காலத்துப் போற்றப்பட்டனர். அவர்களுக்குப் படிவம் அமைத்து வழிபட்டனர். இவ்வகையில் அமைந்தவை இக்கல் பகுதியாகும். சிறப்பித்தற்குரிய வீரனுக்காம் கல்லினைக்காண்டலும், அதனைக் கொண்டு வருதற்குத் தொடங்குதலும், கொண்டு வந்த கல்லினை நீர்ப்படுத்தலும், நடுதலும், அக்கல்லில் அவ்வீரனின் சீரும் சிறப்பினையும் பொறித்துத் தெய்வமாக்கி வழிபடுதலும், வாழ்த்தலும் இக்கல்லின் பகுதியாகும்.

வஞ்சி:—

போர் மேற்கொள்ளுவதற்கு முன் அறம் கருதி ஆனிரையைக் களவில் கொண்டு வந்தவர்கள் பின் அந்நாட்டு அரசினைக் கைப்பற்றுதல் வேண்டிப் படை எடுத்துச் செல்வர். அவ்வாட்சிக்கு உரியார் அவரை எதிர்ப்பர். இவ்வாறு நாடாட்சியின் காரணமாக இருபெருவேந்தரும் பொருது நிற்பது வஞ்சியாம். தலைவனைப் பிரிந்து நிற்கும் தலைவிக்குக் காடுறையுலகமும் கார்காலமும் அந்-

நிலத்திற்கேற்ற கருப்பொருளும் ஆகிய சூழல் இருத்தல் போல, மண்ணசையின் காரணமாக இவ்வாறு போர் மேற்கொள்ளும் அரசர்க்கும் இச்சூழல் வேண்டுதலின் வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று.

போர்ச் செயல்கள்:

இருபடைகளும் பொருவது கருதி ஆர்ப்பரவம் செய்யும். அதன்பின் படையாளர் இருவரும் தத்தம் பகைப்புலத்தில் சென்று எரியிடுவர். (எரி-நெருப்பு). இவர்களின் போர்ச் செயல்களுக்குப் பிற வேந்தர்கள் தத்தம் தானையோடு துணைபுரிவர். போர் நிகழுமுன் படையாளர்க்குப் படைக்கலம் வழங்குவர். பரிசிலர்க்குக் கொடையளிப்பர். படையாளர்கள் மேற்சென்று காவல் புரிந்தோரைக் கொல்வர். வேந்தனால் ஏனாதி காவிதி என்ற சிறப்புப் பட்டங்களும் மருத நிலங்களும் பெற்ற மறவன் வஞ்சினம் செய்வன். அவ்வாறு செய்தோனை ஏனைய வீரர் பாராட்டித் தமக்குரிய தலைவராகவும் கொள்வர். அத்தகைய வீரன் பகைவேந்தனை ஒரு பொருளாக மதியாது தம்படையினைச் செலுத்துவன். அதுபோது போர் மிகுதியால் தன் படை நிலை யாற்றாது பெயர விரைந்தோடும் பெருநீரைக் கல்லணை தாங்கினாற்போல அவ்வீரன் தன்மேல் வரும் படைகளைத் தானே தடுத்து நிறுத்துவன். போர்க்குரிய நாளை வரையறுத்தபின் போர்குறித்த படையாளருடன், அரசன் தானும் உடன் உண்பான் போல்வதோர் முகமன் செய்தற்கு அவ்வீரருடன் இருந்து தானும் பெருஞ்சோறு உண்பன். இவ்வாறு செய்த இருபெரு வேந்தருள் ஒருவர் வெற்றி பெறப் பிறிதொருவர் அவர்க்குத் திறை கொடுப்பர். அவ்வாறு திறை கொடுத்தோரின் நிலைபற்றிச் சிலர் குறை கூறுவர். வென்றவனின் வெற்றிச் சிறப்பால் தோற்றவனின் நாடழிதற்கு இரங்கி வள்ளைப்பாட்டுப் பாடுவர். போர் முடிந்தபின் வென்றும் தோற்றும் மீண்ட வேந்தர்கள் தம்படையாளர் முன்பு போர் செய்த போழ்து கணையும் வேலும் முதலிய படைகளைத் தம்மிடத்தே தடுத்துக்கொண்டு அழிந்தவர்களைத் தாம் சென்றும் பொருள் கொடுத்தும் முகமன் கூறியும் தழுவிக்கொள்வர்.

உழிஞை:—

மண்ணசையின் காரணமாகப் போரிட்ட இரு பெரு வேந்தர்களும் ஒருவர் மதிலை ஒருவர் முற்றுகையிட அம்மதிலுக்குரியார் அம்மதிலைக் காக்க நிகழும் போரினை உழிஞை என்பர்.

இத்தகைய மதில் பெரும்பாலும் மருத நிலத்து இருத்தலானும், மதிற்புறத்தோன் உட்செல்ல விரும்ப அகத்திருப்போன் வராது தடுத்தல் தலைவன் வாயில் திறக்க வேண்டத் தலைவி உடனே திறக்காது அடைத்திருத்தலோடு ஒப்புமையுடையதாதலானும், இவ்வக ஒழுக்கத்திற்குரிய காலமே புறவொழுக்கத்திற்கும் பொருந்துதலானும் உழிஞை மருதத்திற்குப் புறனாற்று.

போர்ச் செயல்கள்:

அரசன் தன் வீர மிகுதியால் பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயும் அதனைக் கொண்டான் போல வேண்டியோர்க்கு வழங்குவன். இராமன் இலங்கை கொள்வதன் முன் அதனை வீடணனுக்குக் கொடுத்தலை இத்துறை நினைவு படுத்தும். இவ்வாறு அவ்வரசன் தான் நினைத்ததை முடிக்கும் பேராற்றலை அவன் படையினுள்ளோர் பலரும் போற்றிப் பாராட்டுவர். அதன்பின் ஒருகாலத்தும் அழிவில்லாதமதிலை இற்றைப் பகலுள் அழித்தும் என்று கூறி அதற்குரிய போரைச் செய்வர். மதிலகத்தோரின் கணை, வேல் முதலிய படைகளைத் தடுத்தற்கு மதிற்புறத்தோர் கிடுகும் கேடயமும் மிடையக் கொண்டு செல்வர். இந்நான்கு செயல்களும் மதிலின் முற்றுகையிடுவோர் செயல்களாகும்.

மதிலகத்து இருப்போரின் படை, குடி, கூழ் அமைச்சு, நட்பு முதலிய திறங்களை மதிற் புறத்தோர்க்கு விளங்கச் சிலர் எடுத்துக் கூறுவர். பாரியின் பறம்பினை மூவரும் முற்றுகையிட்ட பொழுது கபிலர் அப் பறம்பின் சிறப்பினை விரித்துரைத்தது நினைவு கூர்தற்குரியதாம். அகத்தோன் போர்த் தொழிலால் புறத்தோனை வருத்துவன். புறத்தோனின் வெற்றிச் சிறப்பால் தன்மதில் சிதைவுபடின் அகத்தோன் அதனை விடுத்துப் புறத்தே வந்து போர் புரிதலுமுண்டு. புறத்தோன் தன் மதில் மீது முழுமையாக

முற்றுகை செய்த போது அகத்தோன் அதை ஒரு பொருளாகக் கருதாது இருத்தலுமுண்டு. இவை மதிலத்தோர் செயல்க ளாகும்.

இவ்வாறு மதிற் போர் புரிவோர் நாளும் ஓரையும் தமக் கேற்ப அமைந்த காலத்தே படையெடுப்பர். அவ்வாறு நாட் குறித்த காலத்தே போருக்குச் செல்ல இயலாதாயின் தனக்கு இன்றியமையாத குடை வாள் முதலியவற்றைத் தாம் புறப்பட இருக்கும் திசை நோக்கி அக்காலத்தே முன் செல விடுப்பர். இவ்வாறு செய்தலைக் குடை நாட் கோள், வாணாட் கோள் எனக் கூறுவர். மதிற்போர் செய்வோர் ஏணியிருத்தி அதில் நின்றும் போர் புரிவர். அகத்தோரும் புறத்தோரும் தத்தம் வெற்றிச் சிறப்பால், புறத்தோன் அகத்தோனின் உள்மதிலையும்,அகத்தோன் புறத்தோனின் புறமதிலையும் சூழ்ந்து கொண்டு போர் புரிவர். இவ்வாறு போர் முதிர்ந்துழி அகத்தோன் தம்மதிலைச் சூழ்ந்தும் நிற்பர். மதிலகத்துப் போர் செய்த அவர்கள் நீரில் கிடக்கும் பாசி அதனை விட்டு நீங்காதிருத்தல் போல அகழியைப் பற்றி நின்று போர் புரிவர். அதன் முதிர்வால் ஊரிடத்துச் சென்றும் போர் புரிவர். ஊரகத்திருக்கும் கோவில் மதில்களினின்றும் போர் புரிவர். இவ்வாறெல்லாம் பொருத அரசர்கள் இருவருள் ஒருவர் பிறிதொருவரைக் கொன்று அவன் முடிக்கலம் முதலியன கொண்டு இறந்த வேந்தன் பெயரால் முடி புனைந்து நீராடுவர். இவ்வாறு தாம் வெற்றி பெறுதற்கு ஏதுவாகிய வெற்றி வாளினைக் கொற்றவை மேல் நிறுத்தி அதற்கு நீராட்டி வழி படுவர். அதன்பின் தம் படைகளை ஒருங்கழைத்து அவற்றிற்குச் சிறப்புச் செய்வர்.

தும்பை:-

வலிமையே பொருளாகக் கொண்டு போர் செய்யக் கருதும் இரு பெரு வேந்தர்களின் போர்ச் செயல்களைக் கூறுவது தும்பையாம். அகத்திணையாகிய நெய்தல் திணைக்குரிய இரங்கல் பொருளுக்கு வேண்டும் நிலனும் பொழுதும் உரிப்பொருளும் இத்தும்பைத் திணைக்கும் வேண்டுதலின் தும்பை நெய்தலது புறனாயிற்று.

இதன் சிறப்பியல்பு:

வலிமையே பொருளாகக் கொண்டு இரு பெரு வேந்தர்கள் போர் செய்தலின் இவர்களின் வீரம் வியத்தகு நிலையதாய் அமையும். ஒருவர் ஒருவர் மீது கணையையும் வேலையும் செறிவாகத் தீண்டுமாறு எய்வர். அவ்வாறு தீண்டப்பட்ட உடல் அப்படைக் கருவிகளால் தாங்கப்பெற்று நிலையுடையதாய் நிற்கும். இதற்கு மேலாகப் படைக் கலங்களால் வெட்டுண்ட தலையேயாயினும் உடலேயாயினும் அட்டையின் உடல் கூறுபட்ட போதும் அது இயங்குவது போல, நிலத்தின்கண் பொருந்தாது ஆடி நிற்கும். இவையெல்லாம் இப்போர்ச் செயலின் சிறப்பு நிலைக்களங்க ளாகும்.

போர்ச் செயல்கள்:

இப்போரினை மேற்கொண்ட இரு பெரு வேந்தர்களுக்குத் தானை யானை குதிரை என்ற மூவகைப் படைகளும் சிறந்து நிற்கும். தன்படை போர் செய்கின்றமை கண்டு தானும் படையாளர்க்கு முன்னே சென்று வேற்படையால் போர் செய்து வெற்றி பெற இருக்கும் வேந்தனை மாற்றோர் சூழ வேறோர் இடத்தே போர் செய்து கொண்டிருக்கின்ற அவனது தானைத் தலைவனாயினும் அவனுக்குத் துணையாய்ப் பிற அரசனாயினும் தான் செய்யும் போரைக் கைவிட்டு வந்து அவ்வேந்தனுக்கு உறுதுணையாக வந்து அவனைச் சூழ்ந்து நின்ற பகைவரை விலக்குவன். இப்போர் நிகழ்ச்சியைத் தார் நிலை என்று சிறப்பிப்பர். பொரை யெதிர்த்த வேந்தர் இருவரும் தம்மில் பொருது இறத்தலுமுண்டு. இரு பெரும் படையாளர்களும் போர் செய்யுமிடத்து ஒருபடை பின்னிடின் அதற்குரிய படைத்தலைவன், அவ்வாறு பின்னிடு வதற்குக் காரணமாக இருந்த மாற்று வேந்தனின் படை வீரனை யும் அவனுக்குப் பின்னணியாக இருக்கும் படைகளையும் கடாப் போலச் சீறி நிற்பன். போர் மிகுதியால் கையிலிருக்கும் படை நீங்கிவிடின் மெய்யாலும் போர் புரிவர். தன்மீது பொர நினைந்து யானை மீது இவர்ந்து வந்த அரசனையும் அவன் களிற்றினையும் ஒருங்கு தாக்கிப் போர் செய்தலுமுண்டு. அவ்வாறு களிற்றொடு இறந்து கிடந்த அரசனைக் கண்டு அதற்குக் காரணமாகிய தம்

அரசனை வீரர் புகழ்வர். போர் முதிர்வால் இரு பெரு வேந்தர்களும் அவர்க்குத் துணையாயினோரும் ஒருங்கு அழிதலுமுண்டு. போரில் வஞ்சனை மேற்கொண்டு வேந்தனின் படைத் தலைவன் கருக் கொண்டு போர் செய்து புகழ் பெறுதலுமுண்டு. அவ்வாறு வந்த வீரனிடத்து வஞ்சனையால் கொன்ற வேந்தனின் படையாளர்கள் புறக்கிட அவ்வாறு புறக்கிட்டோரைக் கோறலும் அறனன்று எனக் கருதாது அவன் அவர்களைக் கொன்று குவித்தலுமுண்டு.

வாகை:

நான்கு வருணத்தோரும் அறிவர் தாபதர் முதலியோரும் தத்தமக்குரிய இயல்பாகிய ஒழுக்கத்தாலும், பிறரொடு உறழ்ந்து பெறும் மேதகவானும் வெற்றிச் சிறப்பு எய்துவர். இவற்றுள் தத்தம் ஒழுக்கத்தால் பெறும் வெற்றிச் சிறப்பை முல்லை எனவும், உறழ்ந்து பெறும் வெற்றிச் சிறப்பை வாகை எனவும் கூறுவர். பாலைத் திணை தனக்கென நிலமில்லாதாற் போல இவ்வெற்றிச் சிறப்பும் ஒரு நிலத்தினர்க்கேயுரியதன்றி நால்வகை நிலத்திற்கும் பொதுவாய் நிற்றலானும், தலைவியை நீங்கித் தலைவன் பிரிதல் போல இவ்வெற்றிச் சிறப்புள் சிலவும் சுற்றத் தொடர்ச்சியின் நீங்கிப் பெறுதற் குரியதாய் இருத்தலானும் வாகை பாலையது புறனாயிற்று.

தத்தமக்குரிய ஒழுக்கத்தால் பெறும் வெற்றிச் சிறப்புக்கள்:

பார்ப்பனர்:

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், கோடல் ஆகிய அறுவகைச் செயல்களாலும் இவர் சிறப்பெய்துவர்.

அரசர்:

ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், ஒறுத்தல் ஆகிய ஐவகைச் செயல்களானும் இவர் சிறப்பெய்துவர்.

வணிகர்:

ஓதல், ஈதல், வேட்டல், உழவு, நிரையோம்பல், வாணிகம் ஆகிய அறுவகைச் செயல்களானும் இவர் சிறப்பெய்துவர்.

வேளாளர்:

ஓதல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம், வழிபாடு ஆகிய அறுவகைச் செயல்களானும் இவர் சிறப்பெய்துவர்.

அறிவர்:

காமவெகுளி மயக்கமின்றி நல்லொழுக்கம் தலை நின்று மூவகைக் காலத்தும் நிகழும் செய்தியினை நன்கறிவதன் வாயிலாக இவர் சிறப்பெய்துவர்.

தாபதர்:

அறிவர் கூறிய ஆகம நெறி நின்று வீடுபெற முயல்பவர் இவர். இவர் தவம் புரிவாரும், தவம் செய்து யோகம் செய் வாரும் என இரு திறத்தவராவர். தவம் செய்வார் உணவில் விருப்பமின்மை, நீரில் விருப்பமின்மை, வெப்பம் பொறுத்தல் குளிர் பொறுத்தல், கடல், காடு, மலை, முதலியவற்றில் இருப் தாக இடம் வரையறுத்துக் கொள்ளுதல், தாமரை, ஆம்பல் யாமை முதலிய இருக்கைகளுள் ஒன்றை வரையறுத்துக்கொண்டு இருத்தல், இடையிடையே உரையாடாதிருத்தல், துறந்த நாள் தொடங்கி வாய் வாளாவிருத்தல் ஆகிய எண்வகை ஒழுக்கங் களையும் கைக்கொண்டு சிறப்பெய்துவர். யோகம் செய்வார், இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகை நிலை, பொறை நிலை, நினைதல், சமாதி ஆகிய எண்வகை ஒழுக்கங்களைக் கொண்டு சிறப்பெய்துவர்.

பொருநர்

சொல், பாட்டு, கூத்து, மற்போர், சூது, முதலியவற்றுள் யாதானும் ஒன்றைப் பற்றி நின்று அச் செயலால் பிறரினும் மேம்படுவர்.

அறத்தானும் மறத்தானும் வெற்றி பெறுவோர்:

மேல் இனவகை பற்றி அவரவரின் வெற்றிச் சிறப்பு ஓதினர். இனி அவ்வாறின்றி பொதுப்பட அறத்தானும் மறத்தானும் வெற்றி பெறுவாரைக் கூறுகின்றார்.

அறத்தால் வெற்றிபெறுவோர்:

எருதும் எருமையும் கைக் கொண்டு உழுதொழிற் சிறப்பால் வெற்றி பெறுவோரும், யானை குதிரை முதலிய விலங்கினங்களைக் கொண்டு பகை நீக்கி வெற்றி பெறுவோரும்,அரசுரிமையைக் கைவிட்டு அருளியல் நெறியைக் கடைப்பிடிப்போரும், குடிப்பிறப்பு கல்வி ஒழுக்கம் வாய்மை தூய்மை நடுநிலைமை அழுக்காறின்மை அவாவின்மை ஆகிய எண் குணங்களை உடையராய் நடுநிலைமை தவறாது பகை நொதுமல் நட்பு ஆகிய முத்திறத்தாரையும் ஒப்பக் கருதித் தீர்ப்பு வழங்கும் அவையத் தோரும், இல்லறத் தார்க்கு உரியவாகக் கூறப்பெற்ற ஒழுக்க நெறிகளில் தவறாது நிலை பெற்று அவ்வொழுக்க நெறிகளைக் காத்து நிற்போரும், பெரும் புகழ் பயத்தற்குக் காரணமாய இடையீடில்லாத கொடையை வழங்குவோரும், தம்மைப் பழித்தோரைத் தாம் பொறுக்கும் தகைமையோரும், படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆகிய ஆறனும் சிறப்புற்று விளங்கும் அரசரும், அருளொடு பொருந்தித் துறவு நெறி மேற்கொண்டோரும், எப் பொருள்களிலும் பற்றற்று நிற்போரும் அறத்தின் பாற்பட்ட வெற்றியினைப் பெற்றோர் ஆவர்.

மறத்தால் வெற்றி பெறுவோர்:

கூதிர்க்காலத்தும் வேனிற்காலத்தும் போர் மேற்கொண்டு இன்பத்திறத்தில் பற்றின்றித் தாம் மேற்கொண்ட போர்த் திறத் திலேயே பற்றுக் கொண்டு கடமையாற்றுவோரும், உழுதொழில் செய்து அதனால் பெற்ற பெருவளத்தில் பொருநர் முதலாயி னோருக்கு வழங்கும் வேளாண்மக்களும், மாற்றாரை வென்று அதனால் பெற்ற பொருளைப் புலவர் பாணர் முதலாயினோர்க்கு வழங்கும் அரசரும், வெற்றிக் களிப்பால் தேர்த்தட்டில் நின்று

போர்த்தலைவரோடு குரவையாடிக்களிக்கும் அரசரும், அவ் வெற்றிச் சிறப்பை நினைந்து அரசன் செல்லும் தேரின் பின் குரவையாடும் கூளிச் சுற்றமும், பகைவரை வேல் தொழிலால் அழித்து வெற்றிகொள்ளும் போர் வீரரும், பகைவரின் மேம் பாட்டை அமைதியுடன் ஏற்றுக் கொள்ளும் அரசரும், ஆண்மையே பெரிதெனக் கருதி போரில் உயிர்விடும் வீரரும், பகைவர் நாணு மாறு இன்னது செய்யேனாயின் இன்னது செய்வல் எனக் கூறித் தான் கூறியவாறு செய்ய இயலாத பொழுது தன் உயிரையே பலியாகக் கொடுக்கும் அருமந்த வீரரும், பகைவராயினும் அவர் சுற்றமாயினும் தம்மிடம் வந்து உயிரும் உடம்பும் உறுப்பும் போல்வன வேண்டினும் மறுது கொடுக்கும் மாண்பமைந்த வீரரும் மறத்தின் பாற்பட்ட வெற்றியைப் பெற்றோர் ஆவர்.

காஞ்சி:

வீட்டின்பம் கருதி அறம் பொருள் இன்பங்களையும், அவற்றைச் செய்தற்கும் துய்த்தற்கும் ஏதுவாய உடல் செல்வம் இளமை முதலியவற்றையும் நிலைபேறில்லாதன எனக் கருதும் இயல்பினையுடையது காஞ்சித் திணையாம்.

எண்வகை மணத்தினும் நான்கு மணம் பெறும் பெருந்திணை போல, அறம் பொருள் இன்பமும் அவற்றது நிலையின்மையுமாய ஆறனுள் நிலையாமை மூன்றற்கும் இது உரிய ஆதலானும், பெருந்திணை ஒழுக்கத்தைச் சான்றோர் இகழ்தல் போல அறம் பொருள் இன்பங்களின் நிலையாமை கருதி அவற்றைச் சான்றோர் இகழ்தலானும் காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று.

இந்நிலையாமை ஆண்பாற்குரியனவும் பெண்பாற்குரியனவு மாக இருதிறப்படுத்துவர்.

ஆண்பாற்குரியன:

பிறரால் தடுத்தற்கரிய கூற்றம் என்றும் நம்பால் வருதற் குரியது எனச் சான்றோர் கூறுவனவும், காலத்தானும், அறி வானும் முதிர்ந்தோர் அவை இரண்டும் முதிராத இளையோர்க்கு அறிவுறுத்தும் அறமும், வீரத்தாற் விழுப்புண்படுதல் இயல்பெனி

னும் அதனையும் வேண்டாது அப்புண்ணைக் கிழித்து இறக்கும் மறச் செயலும், போர்க்களத்தில் இறந்துபட்டோனைப் பேயொன்றுமே காத்து நிற்கும் பேய்ச் செயலும், ஒருவன் இறந்தஇடத்து அவன் இத்தன்மையோன் என்று ஏனையோர் இரங்கும் இரக்கமும், இன்னதைச் செய்யேனாயின் இன்னதைச் செய்வேன் எனக் கூறும் வஞ்சினமும், போர்க் களத்தில் தன் கணவன் புண்ணுற்றுக் கிடப்ப அவனைப் பேய் தீண்டுதலினின்றும் நீக்கித் தானும் தீண்டாது நிற்கும் தகைமையும் ஆண்பாற் காஞ்சியாம்.

பெண்பாற்குரியன:

தன் கணவன் உயிர் நீத்தற்குக் காரணமாகிய வேலின் வடுவைக் கண்டு அஞ்சிய மனைவியின் செயலும், தம் மகளிரைப் பெண் கோடற்கு விரும்பிய அரசனிடத்து மறுத்து அதனை விரும்பாது அஞ்சிய வாணிகர் வேளாளர் தம் செய்கையும், இறந்த கணவனின் தலையையும் முகத்தையும் தம் மார்பில் சேர்த்தித் தானும் இறந்த மறமகளின் செய்கையும், பெரும் புகழுக்கு இலக்காகிய வீரன் இறந்துபட அவனது மறமகளிர் ஓலமிட்டு அழும் அழுகையும், சுற்றத்தார் யாருமின்றி மனைவியர் தாமே தம்தம் கொழுநரை தழீஇ இறந்து அழ அதனைக் கண்டோர் உருகும் நெஞ்சுருக்கமும், வீரன் இறக்க அப்பொழுதே அவன் மனைவியும் இறந்த நிலையை நினைத்துக் கண்டோர் உருகும் உருக்கமும், வீரனின் மனைவி இறக்கவும், இறந்து படாது வாழும் அவர்தம் ஆயத்தார் முதலியோர் கையறு நிலைபடக் கூறும் கூற்றும், மனைவியை இழந்து வருந்தும் கணவனின் இரக்கமும், கணவனை இழந்து வருந்தும் மனைவியின் இரக்கமும், கணவன் இறந்துபடத்தானும் இறந்துபட விரும்பும் கற்புடை மனைவி எரிபுக விரும்ப அதைத் தடுத்து நிற்பாரோடு அவள் கூறும் கூற்றும், பொருகளத்தில் பொருதுமாயும் சிறப்பினின்றும் நீங்கி தன்மகன் புறங்கொடுத்தான் எனக் கேட்டகு தாய் தான் சாவிற் ஒருப்பட்டு அம்மகனைக் கூடும் கூட்டமும், பிறந்தோர் எல்லாம் இறந்து போகவும் தான் இறவாது நிற்கும் புறங்காட்டு வாழ்த்தும் பெண்பாற் காஞ்சியின் பாற்படுவனவாம்.

பாடாண் :

பாடு ஆண் திணை என்பது பாடாண் திணை ஆயிற்று. பாடப் படுகின்ற ஆண்மகனது ஒழுகலாறு என்பது இதன் பொருளாம். ஒரு தலைவனை வாழ்த்தியும் புகழ்ந்தும் கூறுதல் அவன் மனதிற்கு ஒப்பாதிருத்தலும் கூடுமாதலின் ஒருதலை விருப்பமாகிய கைக் கிளைக்கு இது புறனாயிற்று. இது எண் வகைப்படும். அவை பாடாண் திணைக்கு ஓதுகின்ற பொருள் பகுதி பலவும் கூடியதும்., வெட்சி, பொதுவியல், வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி ஆகிய பொருள்கள் பற்றி வருவனவும் ஆம். இப்பாடாண்திணை மக்களைப் பற்றியும் வரும். தேவரைப் பற்றியும் வரும்.

தேவர்க்குரிய பாடாண்திணை :

முனிவர், பார்ப்பனர், ஆனிரை, மழை, முடியுடை வேந்தர், உலகு ஆகிய அறுவகை பற்றியும் வரும் பாடாண் பகுதி தேவர் கண்ணதாம். கீழ்த்திசைக்கண் தோன்றும் கதிரவனின் மண்டிலம், ஒரு பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பரம்பொருள், தண்கதிர் மண்டிலம் ஆகிய மூவகைத் தெய்வங்களைப் பற்றி வரும் வாழ்த்தும் தேவர்க்கு உரிய பாடாண்திணை எனப்படும்.

மக்கட்குரிய பாடாண்திணை :

ஒருவனைப் பயன் கருதி வாழ்த்தும் வாழ்த்து மக்கள் கண்ண தாம். அவ்வாறு புகழ்தலும் வாழ்த்தலும், தலைமகன் தான் விரும்பிய பொழுதும் நிகழும். அவன் விரும்பாது புலவன் தானே கருதிய வழியும் நிகழும். அறம் பொருள் இன்பங்களில் வழாது நிற்குமாறு முன்னுள்ளோர் கொண்ட குறிப்பினைப் பின்னுள் ளோர்க்கு எடுத்துச் சொல்லுங்காலும் அது மக்கட் பகுதியாகிய பாடாண் திணை எனப்படும்.

கொடுப்போரைப் புகழ்தலும், கொடாதோரைப் பழித் தலும், தலைமகன் செய்தியைக் கூறி வாழ்த்துவதும் அவன் முன்னோரின் செய்தியை அவன் மேல் ஏற்றி வாழ்த்துவதுமாகிய இயன்மொழி வாழ்த்தும், பரிசில் நாடிவரும்

புலவர்கள் வாயில் காக்கிறவனிடத்துக் கூறும் கூற்றும், அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிது வைகிய வழி மருத்துவரும் அமைச்சரும், அவர்களிடத்துக் கண்துயில் கொள்ள வேண்டும் எனக் கூறும் கூற்றும், வேள்வி செய்தற்கண் கபிலைப் பசுவினை வந்தோர்க்கு வழங்கும் கொடை நிலையும், வேலும், வேல் தலையும் ஒன்றி ஓங்கினவாறுபோல அரசனின் செங்கோலும் விளக்கும் ஒன்றி ஓங்கின எனக் கூறும் விளக்கு நிலையும், வாயுறை வாழ்த்தும், செவி அறிவுறூஉவும், புறநிலை வாழ்த்தும், கைக் கிளையும் மக்கட் பகுதிவாய பாடாண் பகுதியாம். அரசன் நெடிது துயின்ற வழிச் சூதர் முதலியோர் அவனைத் துயில் எழுப்பும் கூற்றும், கூத்தரும், பாணரும் பொருநரும், விறலியும் தாம் பெற்ற பெருவளத்தைப் பெறுதார்க்கு அறிவுறுத்தி அவர்பால் செல்லின் நீவிரும் இப்பயன் கொள்ளலாம் எனக் கூறும் கூற்றும், இறை வனிடத்துப் பெற்ற பேரின்பத்தை பிறரும் பெற வேண்டி அவ் விறைவனிடத்து ஆற்றுப் படுத்தும் ஆற்றுப் படை யும், நாளும் முறை செய்வான் வேண்டிக் கொள்ளும் சினத்தினின்றும் நீங்கித் தான் பிறந்த நாளிடத்து கொண்டாடும் பெருமங்கலமும், அரசு கட்டில் ஏறிய நாளை ஆண்டுதோறும் கொண்டாடும் மண்ணு மங்கலமும், அரசனது கொடைநிலை வாழ்த்தும், வாள் வெற்றியால் பசிப்பிணி தீர்ந்த பேய்ச் சுற்றமும் பிறரும் வாளினை வாழ்த்தும் வாள் மங்கலமும், பகைவரது மதிலினை அழித்துக் கழுதை ஏரால் உழுது வெள்ளை வரகும் கொள்ளும் விளைத்து மங்கல மல்லாத செய்தவன் பின் மங்கலமாக நீராடி மகிழும் மண்ணு மங்கலமும், பரிசில் கடா நிலையும், அது குறித்து வாயிலோனிடத்துக் கூறும் கூற்றும், பரிசில் பெற்றபின் அவனை உயர்த்திக் கூறி விடை பெற்றுக்கொள்ளும் விடையும், நாள் புள் முதலியவற்றான் அரசர்க்கு நிகழவிருக்கும் தீங்கு கண்டு அவ்வரசர்க்குப் பாதுகாவல் கருதிக் கூறும் கூற்றும் மக்கள் பற்றிய பாடாண் பாட்டாம்.

இவ்வாறன்றிக் கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பன வும், அவர் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும், பாடாண் திணையாம். பிள்ளைத்தமிழ் வகையால் பாடுவனவும், உலாவகை யால் பாடு வனவும் பாடாண்திணை எனப்படும். வெட்சி முதலிய எழுவகைத் திணைகளையும் பொருளாகக் கொண்டு பாடாண்திணை

பாடப்பெறும். உழிஞை ஒழிந்தன மக்கட் குரியனவாம். உழிஞை மக்கட்கும் தேவர்க்கும் உரியதாம். பொதுவாகப் பாடற்கண் வரும் பெயர் இரண்டு வகைப்படும். ஒன்று பாட்டுடைத் தலைவன் என்பது. இரண்டு கிளவித் தலைவன் என்பது. இவ்விருவருள் கிளவித் தலைவன் பெயர் பாடலுள் என்றும் கூறப் பெறுது. பாட்டுடைத் தலைவனின் பெயர், அகத்திணை புறத்திணை ஆகிய இரண்டிலும் கூறப்பெறும்.

2. புறத்திணையியல்

வெட்சியின் பொது இலக்கணம்

56. அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே

இவ்வோத்து முற்கூறிய அகத்திணை ஏழற்கும் புறமாகிய புறத்திணையிலக்கணம் உணர்த்தினமையிற் புறத்திணையிய லென்னும் பெயர்த்தாயிற்று. புறமாகிய திணையெனப் பண்புத் தொகையாம். அதனை 'முற்படக் கிளந்த' (தொல்-பொ-அகத்-1.) என்புழிப் பிற்படக் கிளந்தனவும் உளவெனத் தோற்றுவாய் செய்து போந்து, அவற்றது இலக்கணங்களும் பெயரும் முறையும் தொகையும் வருகின்ற சூத்திரங்களால் திறப்படக் கூறுவல் என்றலின், மேலதனோடு இயைபுடைத்தாயிற்று. இச் சூத்திரம் முற்கூறிய குறிஞ்சித்திணைக்குப் புறன் வெட்சித்திணை என்பதூஉம், அதுதான் இப்பகுதித்தென்பதூஉம் உணர்த்து தனுதலிற்று.

(இ-ள்.) அகத்திணை மருங்கின் அரிதல்தப உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்—அகத்திணை யென்னும் பொருட்கண் பிணக்கற அறிந்தோர் கூறிய புறத்திணை யது இலக்கணத்தைக் கூறுபட ஆராய்ந்து கூறின்; வெட்சி தானே குறிஞ்சியது புறனே - வெட்சியெனப்பட்ட புறத்திணை குறிஞ்சி யெனப்பட்ட அகத்திணைக்குப் புறனும்; உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே—அதுதான் அஞ்சுதகத் தோன்றும் பதினன்கு துறையினையுடைத்து எ - று

அகத்திணைக்கண் முதல் கரு வுரிப்பொருள் கூறிய குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்பனவற்றிற்கு வெட்சி வஞ்சி

உழிஞை தும்பை யென்பன அவ்வவ் விலக்கணங்களோடு ஒரு புடை யொப்புமைபற்றிச் சார்புடையவாதலும் நிலமில்லாத பாலை பெருந்திணை கைக்கிளை யென்பனவற்றிற்கு வாகையும் காஞ்சியும் பாடாண்டிணையும் பெற்ற இலக்கணத்தோடு ஒரு புடை யொப்புமைபற்றிச் சார்புடைய வாதலும் கூறுதற்கு 'அரில்தப வுணர்ந்தோ' ரென்றார். ஒன்று ஒன்றற்குச் சார்பாமாறு அவ்வச் சூத்திரங்களுள் கூறுதும். தானே யென்றார், புறத்திணை பலவற்றுள் ஒன்றை வாங்குதலின். பாடாண்டிணை ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். களவொழுக்கமும் கங்குல் காலமும் காவலர் கடுகினும் தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீடலும் போல்வன ஒத்தலின் வெட்சி குறிஞ்சிக்குப் புறனென்றார். வெட்சித்திணையாவது களவின்கண் நிரைகொள்ளும் ஒழுக்கம்: இதற்கு அப்பூச் சூடுதலும் உரித்தென்று கொள்க. வேற்றுப்புலத்து வாழும் பார்ப்பார் முதலியோர் அஞ்சி அரண் சேர்வதோர் உபாயமாதலின் உட்குவரத் தோன்றுமென்றார். மக்களும் மாவும் முதலியன சென்று நீருண்ணும் துறைபோலப் பலவகைப்பட்ட, பொருளும் ஒருவகைப்பட்டு இயங்குதலாகும் மார்க்கமாதலில் துறையென்றார்; எல்லாவழியுமென்பதனை எல்லாத்துறையும் காவல்போற்றினர் என்பவாகலின். எனவே, திணையும் துறையும் கொண்டாராயிற்று. அகத்திணைக்குத் துறையுள் பகுதிகளெல்லாம் விரித்துக்கூறிப் பின்னும் பன்முறையால் பரந்துபட்டு வரம்பிகந்தனவற்றையும் தொகுத்துத் துறைப்படுத்துக் கிளவி கூறுக என்றற்குச் செய்யுளியலுள் துறை யென்பது உறுப்பாகக் கூறினர். புறத்திணைக்கு அங்ஙனம் பரந்துபட விரித்தோதாது தொகுத்து இலக்கணம் செய்தாராயினும் அவையும் அவ்வாறே பலபொருட்பகுதியும் உடைய வென்பது உணர்த்துதற்குத் துறையெனப் பெயராகக் கொடுத்தார். இதனானே அகப்பொருட்பகுதி பலவாயினும் ஒரு செய்யுள் பலபொருள் விரா அய் வரினும், ஒரு துறையாயினாற்போலப் புறத்திணைக்கும் அவ்வப்பொருள் பகுதியும் ஒரு துறையாதலும், ஒரு செய்யுள் பலதுறை ஒருங்குவந்தும் ஒரு துறைப்படுதலும் கொள்க. இன்னும் இதனானே அகத்திணைக்கு உரியனவெல்லாம் புறத்திணைக்கும் கொள்க.

(வி - ரை) பிணக்கற - மாறுபாடு நீங்க; அஃதாவது அகத்திணையிலக்கணத்தோடு மாறுபாடு நீங்க. அஞ்சுதக - அஞ்சுதற்கு ஏதுவாக. மார்க்கம் - வழி. எல்லாத்துறையும் காவல் போற்றினர் - எல்லா வழியிலும் காவலைச் செய்தார்.

குறிஞ்சியொழுக்கம் தலைவன் தலைவியைக் காவலில் காண்பதாகும். அவ்வாறு கண்டு புணரும் புணர்ச்சி இடையாமத்ததாகும். அதுபொழுது காவலர் முதலியோர் கடுகினும் தலைவன் தான் கருதியவாறு தலைவியைப் புணர்ந்தே மீளுவன். இவ்வாறே போர் தொடங்குமுன் பகைவர் நாட்டிலுள்ள ஆனிரைகளை அவற்றிற்கு ஏதம் வாராதவாறு களவில் கொண்டு வருவர். அவ்வாறு கொண்டு வருதற்குரிய காலம் யாமம் ஆகும். பகைவர் நாட்டில் உள்ளோர் தம் ஆனிரைகளைக் கொண்டு போகாதவாறு தடுப்பினும் வெட்சியார் அதனை விலக்கித்தாம் நினைத்தவாறு அவற்றைக் கொணர்ந்து வருவர். இவ்வாறு குறிஞ்சி ஒழுக்கமும் வெட்சி ஒழுக்கமும் ஒன்று ஒன்றோடு ஒத்துவருதலின் வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயிற்று.

செய்யுளியலில் கூறும் துறை விரிந்தவற்றைத் தொகுத்துக் கூறும் இயல்பினதாம். இங்குக் கூறப்படும் துறை தொகுத்தவற்றை விரித்துக் கூறுவதாம். (1)

அதன் சிறப்பிலக்கணம்

57. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும்.

இது வெட்சியெனக் கூறிய புறத்திணைக்குப் பொது இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) வேந்து விடு முனைஞர் - வேந்தனால் விடப்பட்டு முனைப்புலம் காத்திருந்த தண்டத் தலைவர்; வேற்றுப் புலக்களவின் - பகைநிலத்தே சென்று களவினாலே; ஆ தந்தோம்பல் மேவற்றாகும் - ஆநிரையைக் கொண்டுபோந்து பாதுகாத்தலைப் பொருந்துதலை யுடையதாகும் வெட்சித்திணை எ - று.

களவுநிகழ்கின்ற குறிஞ்சிப்பொருளாகிய கந்தருவமணம் வேத விதியானே இல்லறமாயினாற்போல இருபெருவேந்தர் பொருவது கருதியக்கால் ஒருவர் ஒருவர் நாட்டு வாழும் அந் தணரும் ஆவும் முதலியன தீங்குசெய்யத் தகாத சாதிகளை ஆண்டு நின்றும் அகற்றல் வேண்டிப் போதருகவெனப் புகறலும், அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவினால் தாமே கொண்டுவந்து பாதுகாத்தலும் தீதெனப்படாது அறமே யாம் என்றற்கு ஆ தந்தோம்ப லென்றார்.

அது,

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின் என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்" (புறம்-9)

எனச் சான்றோர் கூறியவாற்றா னுணர்க. மன்னுயிர் காக்கும் அன்புடை வேந்தற்கு மறத்துறையினும் அறமே நிகழும் என்றற்கு மேவற்றாகுமென்றார். அகநாட்டன்றிப் புறஞ்சிறைப் பாடியில் ஆநிரை காக்கும் காவலரைக் கொன்றே நிரைகொள்ள வேண்டு தலின் ஊர் கொலையும் கூறினார். வேந்துவிடு வினைஞர் என்னாது முனைஞர் என்றதனானே முனைப்புலம் காத்திருந்தோர் தாமே சென்று நிரை கோடலும் குறுநிலமன்னர் நிரைகோடலும், ஏனை மறவர் முதலியோர் நிரைகோடலுமாகிய வேத்தியல் அல்லாத பொதுவியலும் கொள்க. முன்னர் (தொல்-பொ-புறத்-1) வெட்சி குறிஞ்சிக்குப் புறனெனக் களவுகூறிய அதனானே, அகத்திற்கு ஏனைத் திணைக்கண்ணும் களவு நிகழ்ந்தால் போலப் புறத்திணை ஏழற்கும் களவுநிகழுங்கொல் என்று ஐயுற்ற மாணாக்கற்கு வெட்சிக்கே களவு உள்ளதென்று துணிவுறுத்தற்கு மீட்டும் களவினென்று இத்திணைக்கே களவு உளதாக வரைந் தோதினார். வேந்துவிடு முனைஞர் என்றமையான், இரு பெரு வேந்தரும் தண்டத்தலைவரை ஏவி விடுவரென்றும், ஆ தந்தோம்பும் என்றதனால் களவின்கண் கொண்ட ஆவினை

மீட்டுத் தந்தோம்புமென்றும், பொருள் கூறுமாறு சூத்திரம் செய்தாராகலின், இருபெருவேந்தர் தண்டத்தலைவரும் அவ ரேவலான் நிரைகோடற்கும் மீட்டற்கும் உரியராயினர்; ஆகவே இருவர்க்கும் கோடற்றொழில் உளதாயிற்றாதலின் அடித்துக் கோடலும் மீட்டுக்கோடலும் வெட்சியாயின.

ஆயின் 'மீட்டல் கரந்தை' என்பரால் எனின், அதனையும் இச் சூத்திரத்தானும் வருகின்ற சூத்திரத்தானும் வெட்சி யென்றே ஆசிரியர் கொண்டார். மீட்டலை வெட்சிக்கரந்தை என்பாரும் உளர். மீட்டலைக் கரந்தை யென்பார்க்கு அது திணை யாயிற் குறிஞ்சிக்குப் புறனாகாமை உணர்க.

களவி னென்பதற்கு களவினானெனவும், களவின்கணெனவும் இருபொருட்டாகக் கூறுதல் உய்த்துக் கொண்டுணர்தலென்னும் உத்தியாம்.

புறப்பொருட்குரிய அறனும் பொருளும் கூறத்தொடங்கி, ஈண்டு அறத்தால் பொருளீட்டுமாறும் கூறினார்.

(வி-ரை) முனைப்புலம் - போர் முகத்து. தண்டத்தலைவர்- தானைத்தலைவர். போதருக - போய்விடுக. புறஞ்சிறைப்பாடி - புறமதிலகத்து இருக்கும் சேரி. ஏனைமறவர்-பாலை நிலமக்களாவர் வேத்தியல் - அரசன் ஆணைவழிநின்று ஆனிரைகளைக் கவர்தல் முதலியவற்றைச் செய்தல். பொதுவியல் - அரசன் ஆணைவழி யன்றி வீரர் தாமே செய்தல். இதனைப்பின் வந்த புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் முறையே மன்னுறு தொழில் என்றும், தன்னுறு தொழில் என்றும் கூறுவர்.

"வெட்சிதானே குறிஞ்சியது புறனே" என முன்னர் மாட் டெறிந்த அதனாலேயே களவில் ஆனிரையைக் கவர்தல் என்பது பெறப்படும். அங்ஙனமாகவும், இந்நூற்பாவிலும் களவின் எனக் கூறுதற்குரிய காரணத்தை நச்சினார்க்கினியர் நுட்பமாக ஆய்ந்து கூறுகிறார். அகத்திணைக் களவு குறிஞ்சிக்கண்ணன்றி ஏனைத் திணைக்கண்ணும் நிகழுமாறுபோல ஆனிரை கவர்தலாகிய களவும் ஏனைத்திணைக்கண்ணும் வருமோ என ஐயுற்றார்க்கு இவ்

வொழுக்கம் இவ்வொரு திணைக்கு மட்டுமே வரும் என்பது துணிய இவ்வாறு மீண்டும் கூறினர் என்பது நச்சினர்க்கினியர் தரும் கருத்தாகும்.

ஆதந்து ஓம்பல் – பகைவர் நாட்டிற்சென்று ஆனிரைகளைக் கவர்ந்து பாதுகாத்தல்; அவ்வாறு கொணர்ந்த பசுக்களை அவற்றிற்கு உரியார் மீண்டும் கொண்டு சென்று பாதுகாத்தல் என இருவகைப்படும். அடித்துக்கொண்டு வந்தார்க்கும் மீட்டுக் கொண்டு செல்வார்க்கும் பொதுப்பட நிற்றலின் அவ்விருவர்க்கும் இவ்வொழுக்கம உரிய என்பர். எனவே ஆனிரை கவர்தலும் அவற்றிற்கு உரியார் அதனை மீட்டுச் செல்லும் வெட்சியேயாம் என்பது கருத்தாகிறது.

பின்வந்த புறப்பொருள் வெணபாமாலை ஆசிரியர் முன்னையதை வெட்சி என்றும், பின்னையதைக் கரந்தை என்றும் பகுப்புச் செய்வர்.

மீட்டல் கரந்தை என்பார் பன்னிருபடல ஆசிரியரும் அவர் வழி நூல் செய்த புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியரும் ஆவர். வெட்சிக் கரந்தை என்பர் இளம்பூரணர்.

ஆகாத்தோம்பல் பேரறம் ஆதலின் அறத்தால் பொருளீட்டு மாறும் கூறினர் என்றார். (2)

வெட்சிக்குரிய துறைகள்

58. படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை[1] முற்றிய
ஊர்கொலை யாகோள் பூசன் மாற்றே
நோயின் றுய்த்த லுவலுழித் தோற்றம்
தந்துநிறை பாதீ டுண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற் றாகும்.

---

1. புறத்து இறை எனப் பாடங்கொள்வர் இளம்பூரணர்.

இது முன் ஈரேழாமென்ற துறை, இருவகைப்பட்டு இருபத்தெட்டாமென்கின்றது.

(இ-ள்.) படைஇயங்கு அரவம் - நிரைகோடற்கு எழுந்த படை பாடிப்புறத்துப் பொருந்தும் அரவமும், நிரைமீட்டற்கு எழுந்தபடை விரைந்து செல்லும் அரவமும்;

"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்லுதல் வஞ்சியா-உட்காது
எதிரூன்றல் காஞ்சி எயில்காத்தல் நொச்சி
அதுவளைத்த லாகும் உழிஞை-அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்தில் ஒன்னார்
செருவென் றதுவாகை யாம்"

என்பது.

(எ-டு)

"வெவ்வாய் மறவர் மிலைச்சிய வெட்சியால்
செவ்வானம் செல்வதுபோல் செல்கின்றார் - எவ்வாயும்
ஆர்க்கும் கழலொலி ஆங்கட் படாலியரோ
போர்க்கும் துடியொடு புக்கு"

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திட்டு-752-நிரைகோடல்)

"அடியதிர் ஆர்ப்பின ராபெயர்த்தற்கு அன்னாய்
கடிய மறவர் கதழ்ந்தார் - மடிநிரை
மீளாது மீளார் விறல்வெய்யோர் யாதாங்கொல்
வாளார் துடியர் வளம்" (763)

இவை கண்டோர் கூற்று.

பாக்கத்து விரிச்சி - நிரைகோடற்கு எழுந்தோர் போந்து விட்ட பாக்கத்துக் கங்குலின் நல்வாய்ப்புள் கேட்டலும், நிரை மீட்டற்கு எழுந்தோர் இடைப்புலத்துப் புறம்போந்தோர் கூறியவற்றை வாய்ப்புள்ளாகக் கேட்டலும்;

(எ-டு)

"திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
நரைமுதியோன் நின்றுரைத்த நற்சொல் – நிரையன்றி
எல்லைநீர் வையம் இறையோர்க்கு அளிக்குமால்
வல்லைநீர் சென்மின் வழி"

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு (756)

"வந்தநீர் காண்மின்என்று ஆபெயர்ப்போர்
மாட்டிசைத்த
பைந்தொடியார் கூறும் பறவாப்புள் – உய்ந்த
நிரையளவைத்து அன்றியு நீர்சூழ் கிடக்கை
வரையளவைத் தாவதா மண்."

இவை விரிச்சியை வியந்தன.

புடைகெடப் போகிய செலவே - நிரைகோடற்கு எழுந்தோர் ஆண்டுநின்று மீண்டுபோய்ப் பற்றார் புலத்து ஒற்றர் உணராமல் பிற்றைஞான்று சேறலும், நிரைமீட்டற்கு எழுந்தோர் ஆண்டு ஒற்றப்படாமல் சேறலும்;

(எ-டு)

"பிறர்புலம் என்னார்தாம் தாம்புலம் என்னார்
விறல்வெய்யோர் ஆயிருட்கண் சென்றார் – நிறையும்
கடாஅஞ் செருக்கும் கடுங்களி யானைப்
படாஅ முகம்படுத் தாங்கு."

(பெரும்பொருள் விளக்கம் - புறத்திரட்டு - 757–நிரை
கோடல்)

"கங்கை பரந்தாங்குக் கானப் பெருங்கவலை
எங்கு மறவர் இரைத்தெழுந்தார்—தங்கிளைக்கண்
மன்றுகாண் வேட்கை மடிசுரப்ப வேதோன்றும்
கன்றுகாண் மெய்குளிர்ப்பீர் கண்டு." 764

இவை கண்டோர் கூற்று.

புடைகெட ஒற்றின் ஆகிய வேயே—நிரைகோடற்கு எழுந்தோர் பகைப்புலத்து ஒற்றர் உணராமல் சென்று ஒற்றி அவ்வொற்றுவகையான் அவர் உணர்த்திய குறளைச்சொல்லும், நிரைமீட்டற்கு எழுந்தோர் அங்ஙனம் ஒற்றிய ஒற்றுவகையான் வந்து ஓதிய குறளைச் சொல்லும்;

(எ-டு).

"ஒருவர் ஒருவர் உணராமல் சென்றுங்கு
இருவரும் ஒப்ப இசைந்தார்—வெருவர
வீக்குங் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோடு
கோக்குஞ் சரம்தெரிந்து கொண்டு"

நெடுநிலை ஆயத்து நிரைசுவடு ஒற்றிப்
படுமணி யாயம் பகர்ந்தோய்—நெடிது
மனக்குரிய காதல் வயவேந்தன் என்று
நினக்குரிய வாக நிரை."

இவை கண்டோர் கூற்று.

வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை—நிரைகோடற்கு எழுந்தோர் வேயுரைத்தோரிடத்துச் செய்யும் சிறப்புக்கள் முடிந்தபின்னர் உளதாகிய நிரைப்புறத்து ஒடுங்கிய இருக்கைப் பகுதியும், நிரைமீட்டற்கு எழுந்தோர் தமது நிரைப்புறத்துச் சென்று விரைவொழிந்து இருக்கின்ற இருக்கையும்;

(எ-டு)

"கரந்தியல் காட்டுத்தீப் போலப் பெரிதும்
பரந்துசென் மள்ளர் பதிந்தார் – அரந்தை
விரிந்தவியு மாறுபோல் விண்டோயத் தோன்றி
எரிந்தவியும் போலும் இவ்வூர்."

இது கண்டோர் கூற்று.

"இருநில மருங்கின் எப்பிறப் பாயினும்
மருவின் மாலையோ இனிதே இரவின்
ஆகோண் மள்ளரும் அருள்வரக் கானத்து
நாம்புறத்து இறுத்தனெம் ஆகத் தாம்தம்

கன்றுகுரல் கேட்டன போல
நின்றுசெவி ஓர்த்தன சென்றுபடு நிரையே."

(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு-765-நிரைமீட்சி)

இது மறவர் கூற்று.

முற்றிய ஊர்கொலை—நிரைகோடற்கு எழுந்தோர் அவர் புறஞ்சேரியை வளைத்துக்கொண்டு ஆண்டுநின்ற நிரைகாவலரைக் கொன்று பகையறுத்தலும், நிரைமீட்டற்கு எழுந்தோர் அவ்வூரை விட்டுச் சிற்றூரைக் காத்துக்கோறலும்;

(எ-டு)

"அரவூர் மதியில் கரிதூர வீம
விரலூர் எரிகொளீஇக் கொன்று—நிரைநின்ற
பல்லான் தொழுவும் பகற்காண்மார் போர்கண்டோர்
கொல்வார்ப் பெருஅர் கொதித்து."

"சென்ற நிரைப்புறத்துச் சீறூர்த் தொடை கொண்டு
நின்ற மறவர் நிலம்சேர்ந்தார்—கொன்றுண்டு
இகலுழந்த வல்வில் இளையோர்புண் தீரத்
துகளெழுங்கொல் பல்லான் தொழு."

இவை கண்டோர் கூற்று.

ஆகோள் –நிரைகோடற்கு எழுந்தோர் எதிர்விலக்குவோர் இலராக நிரையகப்படுத்தி மீட்டலும், நிரைமீட்டற்கு எழுந்தோர் தமது நிரையை அற்றமின்றி மீட்டலும்;

(எ-டு)

"கொடுவரி கூடிக் குழுஉக்கொண்டு அனைத்தால்
நெடுவரை நீள்வேய் நரலு—நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை." (புற-வெ-மாலை-வெட்சி-9)

"கடல்புக்கு மண்எடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பெரிது எய்தின மாதோ-தொடலைக்

கரந்தை மறவர்க் கருதார் குழாஅம்
துரந்து நிறைமீட்ட தோள்."
(பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டு-767-நிரை மீட்சி)

இவை கண்டோர் கூற்று.

தொடலைக் கரந்தையெனக் கரந்தை சூடினமை கூறினர், தன்னுறுதொழிலான் நிரைமீட்டலின்; இது பொதுவியல் கரந்தையில் கூறுதும்.

பூசன்மாற்று - நிரை கொண்டு போகின்றார் தம்பின்னே உளைத்தற்குரலோடு தொடர்ந்து சென்று ஆற்றிடைப் போர் செய்தோரை மீண்டு பூசலை மாற்றுதலும், நிரையை மீட்டுக் கொண்டு போகின்றோர் தம் பின்னர் வந்து போர் செய்தோரை மீண்டு நின்று பூசலை மாற்றுதலும்;

(எ-டு)

"ஒத்த வயவர் ஒருங்கவிய நாண்படரத்
தத்தம் ஒலியுந் தவிர்ந்தன - வைத்தகன்றார்
தம்பூசன் மாற்றி நிரைகொள்வான் தாக்கினார்
வெம்பூசன் மாற்றிய வில்."

"ஆலூர் எறிந்து நிரையொடு பெயர்ந்த
வெட்சி மறவர் வீழவும் உட்காது
கயிறியல் பாவை போல வயிறிரித்
துளைக்குரற்கு உணர்ந்த வளைப்புலி போல
முற்படு பூசல் கேட்டனர் பிற்பட
நிணமிசை இழுக்காது தமர்பிணம் இடறி
நிலங்கெடக் கிடந்த கருந்தலை நடுவண்
மாக்கடல் நெருப்புப் போல நோக்குபு
வெஞ்சிலை விடலை வீழ்ந்தனன்
அஞ்சுதக் கன்றால் செஞ்சோற்று நிலையே."

இவை கண்டோர் கூற்று.

வெட்சிமறவர் வீழ்ந்தமை கேட்டு விடாது பின்வந்தோன் பாடு கூறினமையின் பூசன்மாற்றாயிற்று.

நோய் இன்று உய்த்தல் - நிரைகொண்டோர் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன்மாற்றத் தாங்கொண்ட நிரையினை இன்புறுத்திக் கொண்டுபோதலும், மீட்டோரும் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன்மாற்றத் தாம் மீட்ட நிரையினை இன்புறுத்திக்கொண்டு போதலும்;

(எ-டு)

"புன்மேய்ந் தசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்
வின்மே லசைஇயகை வெல்கழலான் - தன்மேல்
கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டு
நெடுவரை நீழ லிநிரை." (புற-வெ-மாலை-வெட்சி-11)

"கல்கெழு சீறூர்க் கடைகாண் விருப்பினன்
மெல்ல நடவா விரையுநிரை - ஒல்லெனத்
தெள்ளறல் கான்யாற்றுத் தீநீர் பருகவும்
மள்ளர் நடவா வகை."

(பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டு-763-நிரைமீட்சி)

இவை கண்டோர் கூற்று.

நுவலுழித் தோற்றம் - பாடிவீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத் தற்குக் காரணமான நிரைகொண்டோர் வரவும், ஊரிலுள்ளோர் கண்டு மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைமீட்டோர் வரவும்;

(எ-டு)

"மொய்யணல் ஆனிரை முன்செல்லப் பின்செல்லும்
மையணற் காளை மகிழ்துடி - கையணல்
வைத்த வெயிற்றியர் வாட்கண் இடனுடை
உய்த்தன் றுவகை ஒருங்கு."

(புற. வெ. மாலை-வெட்சி-12)

"காட்டகம் சென்றுஉயிர் போற்றான் கடும்சுரையா
மீட்ட மகனை வினவுறான் - ஓட்டந்து
தன்எதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக்கலுழும்
என்னெதிர்ப் பட்டாயோ வென்று"

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-769 நிரைமீட்சி

இவை கண்டோர் கூற்று.

தந்து நிறை-நிரைகொண்டோர் தாங்கொண்ட நிரையைத் தம் மூர்ப்புறத்துத் தந்துநிறுத்தலும், நிரைமீட்டோர் தாம் மீட்ட நிரையினைத் தந்துநிறுத்தலும்;

(எ-டு)

"குளிறு குரன்முரசம் கொட்டின் வெரூஉம்
களிறெருடுதேர் காண்டலும் ஆற்று - நளிமணி
நல்லான் இனநிரை நம்மூர்ப் புறங்கானம்
எல்லாம் பெறுக இடம்."

"கழுவொடு பாகர் கலங்காமல் யாத்துத்
தொழுவிடை யாமம் தொகுமின் - எழுவொழித்தால்
போமே இவை இவற்றைப் போற்றுமின் புல்லொடுநீர்
தாமேய் புலம்போலத் தந்து."

இவை கண்டோர் கூற்று.

பாதீடு - ஈத்தலும் ஈதலும் போலப் பாத்தலும் பாதலும் ஒன்றுதலில் பாதீடாயிற்று; வேந்தனேவலால் தாம்கொண்ட நிரையைப் பகுத்துக்கோடலும், மீட்டோரும் தத்தநிரையைப் பகுத்துக்கோடலும் நிரையை, இழந்தோர்க்குப் பகுத்துக் கொடுத்தலும்;

(எ-டு)

"ஒள்வாண் மலைந்தார்க்கும் ஒற்றுய்ந்து உரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் - விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தம் சீறூரில்
கூறிட்டார் கொண்ட நிரை,"

(புற. வெ. மாலை. வெட்சி-14)

"யாமே பகுத்திடல் வேண்டா இனநிரை
தாமே தமரை யறிந்தனகொல் - ஏமுற
வன்றீன்ற தம்மை அறிந்துகொள் கன்று ஏய்ப்பச்
சென்றீண்டு ஆங்கவர்பால் சேர்ந்து."

(பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டு-770-நிரைமீட்சி)

இவற்றுள் முன்னையது கண்டோர் கூற்று; ஏனையது மறவர் கூற்று.

உண்டாட்டு - நிரைகொண்டார் தாம்கொண்ட நிரையைப் பாத்துத் தாம்கொண்ட மகிழ்ச்சியால் சுற்றத்தொடு கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதலும், நிரைமீட்டார் வென்று நிரைமீட்ட கொற்றத்தான் உண்டாடுதலும்;

(எ-டு)

"நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவல் இட்ட புன்காற் பந்தர்ப்
புனறரும் இளமணல் நிறையப் பெய்ம்மின்
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉம் என்னைக்
குழையோர் தன்னினும் பெரும்சா யலரே." (புறம் 262)

இது புறம்.

"பகைவர் கொண்ட படுமணி யாயம்
ஈட்டிவட் டந்த வாட்டிறல் குரிசின்
முழவுத் துயின்மறந்த மூதூர் ஆங்கண்
விழவுத் தலைக்கொண்ட விளையாட்டு ஆயத்து
ஊன்சுடு கொழும்புகைக் கருங்கொடி உம்பஃ
மீன்சுடு புகையின் விசும்புவாய்த் தன்றே
கைவல் கம்மியர் பலகூட்டு ஆரமொடு
நெய்பிழி நறுவிரை நிலம்பரந் தன்றே
காவில் காவில் கணங்கொள் வண்டெனப்
பூவிலை மகளிர் புலம்படர்ந் தனரே
சந்தியும் சதுக்கமும் பந்தர் போகிய
வாடுறு நறவின் சாடி தோறும்
கொள்வினை மாற்றுக் கொடையொடு
கள்விலை யாட்டியும் கைதூ வாளே".

இவை கண்டோர் கூற்று.

கொடை - தாங்கொண்ட நிரையை இரலவர்க்கு வரையாது கொடுத்து மனமகிழ்தலும், நிரைமீட்டோர்க்கு வென்றிப் பொருட்டு விளைந்த கொடைப்பகுதியும்;

(எ-டு)

"இளமா வெயிற்றி இவைகாணின் னையர்
தலைநாளை வேட்டத்துத் தந்த நிரைகள்
கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றில் நிறைந்தன."

(சிலப்-வேட்டுவவரி)

"கொடைத்தொழில் எல்லாம் குறைவின்றிப் பண்டே
முடித்தனன் என்றிருந்த மூத்தோன் - கொடைக்கு
வரம்பிலன் என்றே மருண்டான் நிரைகோட்
கரந்தையாம் கண்ணியாற் கண்டு."

இவை கண்டோர் கூற்று.

என ஈரேழ் வந்த வகையிற்றாகும் - என்று கூறப்பட்ட பதினான்கும் மீட்டுமொருகால் விதந்த இருகூற்றையுடைத்தாகும் வெட்சித்திணை என்றவாறு.

எனவே ஒன்று இரண்டாய் இருபத்தெட்டாயிற்று.

இனித் துறையென முற்கூறினமையின், இது காரியமாக இதற்குக் காரணம் ஆயினவெல்லாம் படையியங்கரவம் எனவே படும்; அவை இருபெருவேந்தரும் போர் தொடங்குங்கால் பூசு கோளேவி நிரைகோடல் குறித்தோன் படைத்தலைவரைத் தருக வென்றலும், அவர் வருதலும், அவர் வந்துழி இன்னது செய்க வென்றலும், அவர் வேந்தர்க்கு உரைத்தலும், அவர் படையைக் கூஉய் அறிவித்தலும், படைச்செருக்கும், அதனைக் கண்டோர் கூறலும், அவர் பகைப்புலக் கேட்டிற்கு இரங்கி வருந்தலும், நாட்கோடலும், அவர் கொற்றவைக்குப் பரவுக்கடன் பூண்டலும் பிறவுமாம். களவில் செல்வோர்க்கும் அரவங்கூறினார், அவர் பாக்கத்தே தங்கி விரிச்சிபெற்றுப் போதலின்,

அவற்றுட் சில வருமாறு:—

"கடிமனைச் சீறூர்க் கடுங்கண் கறவை
வடிநவில் வேலோன் மறுத்தோம்பல் ஒட்டான்
அடிபுனை தோலின் அரண்சேர்ந்து மள்ளர்
வருகமன் வாயிற் கடை."

இது படைத்தலைவர் படையாளரைக் கூயினது.

"வாள்வலம் பெற்ற வயவேந்தன் ஏவலால்
ஆள்வல் இளையவர் தாஞ்செல்லி-ஞாளைக்
கனைகுரல் அல்லாத்தன் கன்றுள்ளப் பாலால்
அனைவது போலுநம் மூர்."
(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு 753, நிரைமீட்சி)

இது படைச்செருக்கு; கண்டோர் கூறியது.

"வந்த நிரையின் இருப்பு மணியுடன்
எந்தலை நின்றலை யாந்தருது-முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு."
(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு-754-நிரைகோடல்)

இது தெய்வத்திற்குப் பராஅயது; பிறவும் வருவனவெல்லாம் இதனான் அடக்குக.

இனிப் பாக்கத்து விரிச்சிக்குக் காரணங்களாவன, பாக்கத்துச் சென்றுழி இருப்புவகுத்தலும், பண்டத்தொடு வல்சி ஏற்றிச் சென்றோரை விடுத்தலும், விரிச்சி வேண்டாவென விலக்கிய வீரக்குறிப்பும், விரிச்சிக்கு வேண்டும் நெல்லும் மலரும் முதலியன தருதலும், பிற நிமித்தப் பகுதிகளும், அவை அறிந்தோர்க்குச் சிறப்புச் செய்தலும், பிறவுமாம்.

(எ-டு)

"நாளும் புள்ளும் கேளா ஊக்கமொடு
எங்கோன் ஏயினன் ஆதலின் யாமத்துச்

செங்கால் வெட்சியும் துணையும் தூஉய்
மறிக்குரற் குருதி மன்றுதுகள் அவிப்ப
விரிச்சி ஓர்த்தல் வேண்டா
வெயிற்புறம் தருதும்யாம் பகைப்புல நிரையே."
(தகடூர்யாத்திரை. புறத்திரட்டு-655-நிரைகோடல்)

இது விரிச்சி விலக்கிய வீரக்குறிப்பு; பிறவும் வந்துழிக் காண்க.

அரசன் ஏவலால் போந்தோரும் விரிச்சி கேட்டார், இன்னஞான்று வினைவாய்க்குமென்று அறிதற்கு.

இனி வேய்க்குக் காரணங்களாவன; வேய்கூறினுர்க்குச் சிறப்புச் செய்தல் போல்வன.

(எ-டு)

"மாற்றரும் துப்பின் வயவேந்தன் அல்லனே
ஏற்ற பெருஞ்சிறப்பு இன்றீதும்-வேற்றூரில்
புல்வேய் குரம்பைப் புறஞ்சிறைவாய் நின்ருற்றி
நல்வேய் உரைத்தார்க்கு நாம்"

என வரும்.

இனி ஏனைய ஒன்று பலவாய்த் துறைப்பாற் படுவன வந்துழிக் காண்க.

இங்ஙனம் புறத்திணைக்குச் சிறுவரவிற்ருதலின் அன்றே 'பாடல் சான்ற புலனெறி வழக்க' மென்று (தொல்-பொ-அகத்-53) அகத்திற்குக் கூறியது. நிரைமீட்குங்கால் அறிந்தார் அறிந்தவாற்ருனே விரைந்து சென்று மீட்பாராதலின் அரசனை உணர்த்தாதே மீட்டல் பெறுதும்: இவற்றிறகுந் துறைப்பகுதி கொள்க.

(வி ரை) அரவம் - ஒலி. பாடிப்புறம் - சேரிப்புறம்.
வெவ்வாய் - கொடியவாய் மிலேச்சிய - அணிந்த.
எவ்வாயும் - எவ்விடத்தும் படாலியர் - போகாது ஒழிக.
கதழ்ந்தார் - சினந்தார்,

போந்துவிட்ட - சென்று தங்கிய. நல்வாய்ப்புள் - நல்ல சொல் -நிமித்தம். அதாவது நல்ல வாய்ச்சொல்லாகிய சகுனம்.

திரைகவுள் - சுருங்கிய கன்னம், வல்லே - விரைந்து. பறவாப்புள் - வாய்ச்சகுனம். பறவா என்பது வினை எதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்தியது.

புடைகெட - பகைவரிடத்து உள்ள ஒற்றர் உணராதவாறு. புடை - இடம்: இங்கு ஒற்றரை உணர்த்திற்று. இளம்பூரணர் பக்கம் எனப்பொருள் கண்டு பக்கங்கெடுதலாவது மாற்றரசர் பக்கத்தாராகித் தம்மாட்டு ஒற்றுெடு நிற்பார் அறியாமல் போதல்; பக்கத்தில் உள்ளாரைப் பக்கம் என்ருர் என விளக்கம் காண்பர்.

கடாஅம் - மதம். படாஅம் -முகபடாம். யானைக்கு முக படாம் அணிந்தார்ப் போல் வீரரும் இருட்கண் சென்ருர் என இயைக்க.

கானப்பெருங்கவலை - காட்டிலுள்ள பெரிதும் கவர்த்த வழி. இரைத்து - ஆரவாரித்து. மெய் குளிர்ப்பீர் - உடல் மகிழ்வீர்.

குறளைச் சொல் - ஒற்றறிந்து வந்து உணர்த்திய சொல்.

சரம் - அம்பு

வயவேந்தன் - வலிமை உடைய அரசன். இறை - ஒடுங்கி இருக்கும் இருக்கை - பதிந்தார் - பதுங்கினர். அரந்தை - துன்பம்

மருவின் மாலை - பழகிய நட்பின் இயல்பு. இறுத்தெனம் - தங்கினேம். ஓர்த்தன - காதுகொடுத்துக் கேட்டன

பகை அறுத்தல் - பகைமையை அழித்தல்

அரவூர் மதியின் - பாம்பினல் கதுவப்பட்ட மதியைப் போல. ஆன்தொழு - பசுக்களின் தொழுவம்.

அற்றம் இன்றி - சோர்வில்லாமல்,

கொடுவரி - கொடியபுலி. நரலும் - ஒலிக்கும். கணநிரை - திரளான பசுக்கூட்டம்.

நிணம் - தசை.

கார் ஏனம் - கரிய பன்றி, திருமால். கோட்டின் - கொம்பினும். துரந்து - செலுத்தி. தன்னுறு தொழில் - அரசன் ஆணை இன்றி வீரர் தாமே செய்யும் தொழில். பொதுவியல் கரந்தை - இவ்வியல் ஐந்தாம் நூற்பாவில் அனைக்குரி மரபினது கரந்தை யன்றியும் என்ற இடத்துக் கூறப்படும்.

உளைத்தற்குரல் - வருத்த மிகுதியால் ஒலிக்கும் ஒருவகை ஒலி. ஆற்றிடை - வழியிடத்து. பூசல் - போர்.

கயிறு இயல் பாவைபோல - கயிற்றால் இயங்கும் சூத்திரப் பாவைபோல. வயிறு இரித்து - கொம்பு ஊதி. உழை - மான். செஞ்சோற்று நிலை அஞ்சுதக்கன்றால் என மாறுக

பாடு - பெருமை.

அசைஇ - இளைப்பாறி. புணர்ந்து - சேர்ந்து. அசை இயகை-வைத்தகை. கடுவரை - செங்குத்தான மலை. கடுத்து வர - விரைந்து வர. நெடுவரை நீழல் - நெடிய மலைப்பக்கத்திடத்துள்ள நிழலிடத்து.

கடை - வாயில். தெள்ளணல் - தெளிந்த மணல். தீநீர். - இனியநீர். நடவாவகை - செலுத்தாதவாறு. ஆனிரைவீரர் செலுத்தாதவாறு தாமே விரைந்து செல்லும். நுவலுழி - நுவலுதற்குக் காரணமான. உழி - ஏழாம் வேற்றுமை இடப் பொருள்பட நின்ற உருபு, அது ஈண்டு நான்கன் உருபின் பொருள்பட நின்றது. இளம்பூரணர் நுவல்வழித் தோற்றம் எனப் பாடம் கொண்டு தமர்கவன்று சொல்லிய வழித் தோன்றுதல் என உரை காண்பர்.

மொய் அணல் - செறிந்த தாடி. மையணல் - கரிய மீசை. அணல் வைத்த - கீழ்வாயில் வைத்த.கடும் சுரை - பால் மிகுதி

யால் கடுத்து நிற்கும் மடி. ஓட்டந்து-ஓடிச் சென்று. மீட்ட மகனை வினவாது ஆனிரையைத் தழுவி அழுது நிற்கும் என்பதாம்.

நிறை - நிறுத்துதல்.

குளிறு குரன் முரசம் - ஒலிக்கும் ஒலியினை உடைய முரசம்.

கழு - பால் கறக்க விடாத பசுக்களுக்குக் கழுத்திலிடுவது என்பர் கணேசய்யர். பாகர் - பசுக்களின் கழுத்தில் கட்டும் கயிறு போல்வது.

பாத்தல் - பகுத்தல்

விள்வாரை - தம்முடன் வேறுபடுவாரை.

கூறிட்டார் - பங்கிட்டார்.

ஈண்டும் - அடையும்.

கொற்றத்தால் - வெற்றியால்

நறவு - கள். விடை - ஆட்டுக்கடா ; பாசவல் - பசுமையான தழை. என்னைக்கு -என் தலைவனுக்கு. உழையோர்--அருகில் வரும் மறவர். தன்னினும் பெருஞ் சாயலரே - அவனினும் பெரிதும் மென்மையுடையவராவர். புகைக் கருங்கொடி - கரிய புகையினது ஒழுங்கு. உம்பர்மீன் - விண்மீன். கைதூவாள் - கொடுத்தலின்றும் ஒழியாள்.

தலைநாளை வேட்டம் - முதல் நாள் களவில் கொண்டு வந்த பொருள். கொளைபுணர்-இசையோடு புணர்ந்த. மீட்டும் ஒருகால் விதந்த-ஒவ்வொரு முறையும் நிரையைக் கொணர்ந்தார்க்கும் மீட்டாருக்குமாக எடுத்துக் கூறிய. பூக்கோள் ஏவி - பரிசாக நல்கும் பொற்பூவினைக் கொள்ளுமாறு ஏவி. படையைக் கூஉய் - படையைக் கூவி

மறுத்த ஓம்பல் ஒட்டான் - (ஆனிரைகளைத்) திரும்பக் கொண்டு செல்லுதற்கு ஒப்பான். அடிபுனை தோல் - செருப்பு

தாள்வல் இளையர் - முயற்சியில் வல்ல வீரர்.

எம் தலை - என்னிடத்து. நின் தலை - நின்னிடத்து.

வல்சி - உணவு.

நாளும் புள்ளும் கேளா-தீய நாளினாலும் தீய சகுனத்தாலும் தடைபடாது. மறி - ஆடு

துப்பின் - வலியால். நாம் பெரும் சிறப்பு ஏதும் இன்று என இயைக்க.

புறத்திணைக்குச் சிறு வரவிற்று-புறப்பொருட்குப் புனைந்துரை வகையால் கூறல் சிறுபான்மையது. (3)

இதுவுமது

59. மறங்கடைக் கூட்டிய [1]துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையு மத்திணைப் புறனே.

இவையும் வெட்சித்திணையா மென்கின்றது.

(இ - ள்) மறங்கடைக் கூட்டிய துடிநிலை-போர்க்களத்து மறவரது மறத்தினைக் கடைக்கூட்டிய துடிநிலையும்; சிறந்த கொற்றவை நிலையும்-அத்தொழிற்குச் சிறந்த கொற்றவைக்குப் பரவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமை கூறுதலும்; அத்திணைப்புறனே-அவ்விருவகை வெட்சிக்கும் புறனடையாம் என்றவாறு.

"நித்திலம்செய் பட்டமு நெற்றித் திலகமும்
ஒத்திலங்க மெய்பூசி யோர்ந்துடீஇத்-தத்தம்
துடியரோடு ஊர்ப்புறம் சூழ்ந்தார் மறவர்
குடிநிரை பாராட்டக் கொண்டு."

இஃது இருவகை வெட்சிக்கும் பொது; நிரைகொண்டோர்க்கும் மீட்டோர்க்குந் துடிகொட்டிச் சேறலொத்தலின்.

1. குடி நிலையென பாடங்கொள்வர் இளம்பூரணர்.

"அருமைத் தலைத்துஅரும் ஆனிரையுள் ஐயை
எருமைப் பலிகோள் இயைந்தாள் - அரசனும்
வேந்தன்மேல் செல்வான் விறல்வஞ்சி சூடான்என்று
யாந்தன்மேற் சீறுமல்இன்று."

இதனானே வருகின்ற வஞ்சித்திணைக்கும் கொற்றவைநிலை காரணமாயிற்று; தோற்றோர்க்குக் கொற்றம் வேண்டியும் வென்றோர்க்கும் மேற்சொல்லுங்கால் கொற்றம் வேண்டியும் வழிபட்டு வராதலின்.

இனிக் கொற்றவைநிலைப் பகுதியுள் சில வருமாறு :—

"நச்சிலைவேல் காளைக்கு நாளையே கொற்றவை
கைச்சிலையு நல்கும்யாம் காணேங்கொல் - மிச்சில்கூர்
வாளின்வாய்த் தீண்டாத வார்குருதி மெய்சாய்ப்பத்
தாளின்வாய் வீழ்த்தான் தலை."

இஃது உயிர்ப்பலி. இது பொதுவகையான் இருவகை வெட்சிக்கும் வஞ்சிக்கும் பொது.

"ஆடிப்பண் பாடி அளவின்றிக் கொற்றவை
பாடினி பாடல் படுத்துவந்தான்-ஆடிய
தோளுழலை ஆடுவோன் தோளினும் தூக்கமைத்த
தாளுழலை ஆடுவோன் தான்."

இது குருதிப்பலி; பொதுவகையான் இருவகை வெட்சிக்கும் வஞ்சிக்கும் பொது.

(வி-ரை) கடைக் கூட்டிய - ஒருங்கு கூட்டிய. இருவகை வெட்சி-அடித்துக் கோடலும், மீட்டுக் கோடலும் ஆகிய வெட்சி.

மெய்பூசி - நீராடி. ஓர்ந்து உடீஇ - உடுக்க வேண்டுவதை ஆராய்ந்து உடுத்து.

ஐயை - வெற்றித்திரு : கொற்றவை

மிச்சில்கூர் - எச்சில் மிகுந்த. வாள் பலரையும் கொன்றதாகலின் எச்சில் மிகுந்தாயிற்று.

தோள் உழலை ஆடுவோன் - தோளை வெட்டி அதன் குருதி பரப்ப ஆடுவோன். தூக்கமைந்த தாள் உழலை ஆடுவோன் - காலைத் தூக்கிச் சுழற்றி ஆடுவோன். (4)

அகத்திணை, புறத்திணைக்குரிய வழுக்கள்

60. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே யாரென வருஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவ ரேத்திய
ஓடாக் கழனிலை உளப்பட ஓடா
உடல்வேந் தடுக்கிய வுன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்
ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலுஞ்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலுந்
தலைத்தா ணெடுமொழி தன்னொடு புணர்த்தலும்
அனைக்குரி மரபினது கரந்தை யன்றியும்
வருதார்த்தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்
றிருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க
நாடவற் கருளிய பிள்ளை யாட்டும்
காட்சி கால்கோ ணீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தே

இது முன் இருபெருவேந்தர்க்கும் பொர்செயத் தொடங்கு தற்குரிய பொதுநிலைமை கூறிய அதிகாரத்தானே புறத்திணைக்

கெல்லாம் பொதுவாகிய வழுவேழும் உணர்த்துத னுதலிற்று; இவை வேத்தியலின் வழீஇத் தன்னுறு தொழிலாய் வருதலின் வழுவாயின. இவை அகத்திற்கும் புறத்திற்கும் உரியவாய் வருவனவும் புறத்திற்கெல்லாம் பொதுவாய் வருவனவுமாதலின் பொதுவியலும் ஆயின.

(இ - ள்) வெறி அறி சிறப்பின் - தெய்வத்திற்குச் செய்யும் கடன்களை அறியும் சிறப்பினையும்; வெவ்வாய் வேலன் - உயிர்க் கொலை கூறலின் வெவ்வாயினையும் உடையனாகிய வேலன்; வெறியாட்டு அயர்ந்த காந்தளும் - தெய்வ மேறி யாடுதலைச் செய்த காந்தளும்;

செவ்வேள் வேலைத் தான் ஏந்திநிற்றலின் வேலனென்றார். காந்தள் சூடி ஆடுதலில் காந்தளென்றார். வேலனைக் கூறினமையில் கணிகாரியையுங் கொள்க. காந்தளையுடைமையானும் பனந் தோடுடைமையானும் மகளிரை வருத்துதலானும் வேலன் வெறியாட்டயர்ந்த என்றதனானும் வேலன் ஆடுதலே பெரும்பான்மை: ஒழிந்தோர் ஆடுதல் சிறுபான்மை யென்றுணர்க.

(எ-டு)

"அமரகத்துத் தன்னை மறந்தாடி ஆங்குத்
தமர்அகத்துத் தன்மறந் தாடும் - குமரன்முன்
கார்க்காடு நாறும் களன்இழைத்துக் காரிகையார்
ஏர்க்காடும் காளை இவன்."

இது சிறப்பறியா மகளிராடுதலில் புறனாயிற்று. வேலனாடுதல் அகத்திணைக்குச் சிறந்தது.

(எ-டு)

"அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்
கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்
இதுவென அறியா மறுவரல் பொழுதில்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேள் பேணத் தணிகுவள் இவள்என
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய்க் கூறக்

களநன்கு இழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்
ஆர நாற வருவிடர்த் ததைந்த
சாரல் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்னசை உள்ளத்து நன்னசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லெனோ யானே எய்த்த
நோய்தணி காதலர் வரவீண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே." (அகம்-22)

"பனிவரை நிவந்த" என்னும் அகப்பாட்டும்-(98) அது.

இவற்றுள் சேயோன் கருப்பொருளாக மைவரை யுலகத்துக் கூதிர்யாமம் பொழுதாகச் சிறப்பறியும் வேலன் ஆடுதலின் வெறியாடிய காந்தள் அகத்திற்கு வந்தது, இது வேத்தியல் கூத்தன்றிக் கருங்கூத்தாதலின் வழுவுமாய் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாதலில் பொதுவியலுமாயிற்று. "வேலன் தைஇய வெறியயர் களனும்" (பத்து-திருமுரு-222.) என்றால் போலச் சிறப்பறியும் வேலன் தானே ஆடுதலும் சிறுபான்மை புறத்திற்கும் கொள்க.

மா வரும் புகழ் ஏந்தும் பெருந் தானையர் - மா முதலியன வற்றால் தமக்கு வரும் புகழைத் தாங்கும் மூவேந்தருடைய பெரும்படையாளர்; உறு பகை வேந்திடை தெரிதல் வேண்டிப் போந்தை வேம்பே ஆர் என மலைந்த பூவும்—அப்புகழ்தான் உறும்பகையிடத்து இன்ன வேந்தன் படையாளர் வென்றார் என்பதற்கு ஓர் அறிகுறி வேண்டிப் போந்தை வேம்பு ஆரென்று கூறிச் சூடின பூவும்;

இதன் கருத்து: ஏழகத்தகரும் யானையும் கோழியும் பூழும் வட்டும் வல்லும் சொல்லும் முதலியவாற்றால் தமக்கு வரும்

புகழைத் தாம் எய்துதற்குத் தத்தம் வேந்தர் அறியாமல் படைத்தலைவர் தம்முண் மாறுய் வென்று ஆடுங்கால் இன்ன அரசன் படையாளர் வென்ருரென்றற்கு அவரவர் பூச்சூடி ஆடுவர் என்பதூஉம், அக்கூத்தும் வேத்தியல் கூத்தின் வழீஇயின கருங்கூத் தென்பதூஉம், அது தன்னுறு தொழிலென்பதூஉம் உணர்த்தியதாம். இதனை இங்ஙனம் தன்னுறுதொழிலாக்காமல் வேந்துறு தொழிலாக்கின் அது தும்பையாம். புகழ்ந்து கூறிற்றெனில் பாடாண்டிணையாம். ஆசிரியர் வெறிக்கூத்திற்கும் வள்ளிக் கூத்திற்கும் இடையே இதனை வைத்தார் இக்கருத்தானே யென்றுணர்க.

(எ-டு)

"ஏழக மேற்கொண்டு இளையோன் இகல்வென்ருன்
வேழம் இவனேற வேந்துளவோ - ஏழுலகும்
தாம்தயங்கு நாகம் தலைதயங்க வாடாமோ
போந்தையம் கண்ணி புனைந்து."

இது போந்தை மலைந்தாடியது.

"குறும்பூழ்ப்போர் கையெறிந்து கொற்றம் பெறுதல்
இறும்பூது என்றுயாம் ஆடல் வேண்டா - செறுங்கோன்
குலமதிக்கு மாறறியில் கொற்றவன் வேம்பு
தலைமலையல் பாலதூஉம் அன்று."

இது வேம்பு மலைந்தாடியது.

"ஆர்வேய்ந்த கோலத்தோடு ஆடுவர் பாடுவர்
போர்வேந்தர் பெற்றநாள் போன்றுவப்பர் - சீர்சால்
பறைகெழு வாரணப்போர் பண்டிகழ்ந்தோர் இன்று
சிறைகெழு வாரணப்போர் செய்து."

இஃது ஆர்மலைந்தாடியது.

இவை தன்னுறு தொழிலாயவாறு காண்க.

வாடாவள்ளி-வாடுங் கொடியல்லாத வள்ளிக்கூத்தும்,

அஃது இழிந்தோர் காணும் கூத்து.

(எ.டு.)

"மண்டமர் அட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனும் கண்களித்தான் - பண்டே
குறமகள் வள்ளிதன் கோலம்கொண் டாடப்
பிறமகள் நோற்றாள் பெரிது".

இது பெண்பாற்குப் பெருவரவிற்று. இதனைப் பிற்கூறினார், வெறியறி சிறப்பன்மையானும் ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாவதல்லது அகத்திணைக்கண் வந்து பொதுவாகாமையும் பற்றி.

வயவர் ஏத்திய ஓடாக் கழனிலை உளப்பட - முன்பு கழல் கால் யாத்த வீரர் மழலைப் பருவத்தானொருவன் களத்திடை ஓடாது நின்றமைகண்டு அவனைப்புகழ்ந்து அவற்குக் கட்டிய கழனிலைக் கூத்து;

ஓடாமையால் கட்டின கழல், ஏத்திய நிலையாற் கட்டின கழல். இது வள்ளிப்பின் வைத்தலின் இருபாலாரும் ஆடுதல் கொள்க. கொடி முதலியன அவனை வியந்து கொடுத்தல் அத்துறைப் பகுதியாம்.

(எ.டு.)

"மீளாது பெற்ற விறற்கழலோன் வாளாட்டின்
வாளாடு கூத்திவந் தாடினாள் - வாளாட்டின்
மண்ணாளு மன்னரே பெண்ணாவார் வண்மைக்குப்
பெண்ணாடின் யாதாம் பிற."

ஓடா உடல் வேந்து அடுக்கிய உன்னநிலையும் - பிறக்கடியிடா உடன்ற வேந்தனை உன்னமரத்துடன் அடுக்கிக் கூறப்பட்ட உன்ன நிலையும்;

என்றது, வேந்தன் கருத்தானன்றி அவன் மறவன் வேந்தற்கு நீ வெற்றிகொடுத்தால் யான் நினக்கு இன்னது செய்வலெனப் பரவுதலும், எம்வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக்கோடு பொதுளுக எனவும் பகை வேந்தற்குக் கேடு உளதெனில் அக் கோடு படுவதாக எனவும் நிமித்தம் கோடலும் என விருவகைத்

தெய்வத்தன்மை; அஃதுடைமையான் அடுக்கிய உன்ன நிலையு மென்றார்.

(எ-டு)

"துயிலின் கூந்தல் தோளிணைப் பேதை
வெயில் நிழல் ஒழிய வெஞ்சுரம் படர்ந்து
செய்பொருட்டு இறவீ ராகிய நும்வயின்
எனக்கொன்று மொழியின ளாகத் தனக்கே
அருநகை தோன்றிய அழுகுரல் கிளவியள்
கலுழ்கண் கரந்தனள் தானே யினியே
மன்னவன் பராஅய் முன்னியது முடித்தோர்
உன்னம் சிறக்கும் ஒள்வினை நினைஇத்
தலைசாய்த் திருந்த சிலைவலம் போற்றி
வேந்து வழக்கறுத்த கானம்
நீந்தல் ஒல்லுமோ பூந்தொடி ஒழிந்தே."

இதனுள்,

"மன்னவன் பராஅய் முன்னியது முடித்தோர்
உன்னம் சிறக்கும் ஒள்வினை நினைஇ"

என்றது, வேந்தனைப் பரவுக்கடனாக அடுக்கிய உன்னநிலை.

"முன்னம் குழையவும் கோடெலாம் ஒய்தளிர் ஈன்று
உன்னம் குழையொலித்து ஓங்குவாய்—மன்னரைக்
கொன்று களங்கொள்ளும் கொல்யானை வேந்தனை
வென்றுகளம் கொள்ளுமேல் வேந்து."

இவை மறவர் செய்தலிற் றன்னுறு தொழிலாம்.

"பொன்னன்ன பூவில் சிறிய விலைப்புன்கால்
உன்னப் பகைவன் எங்கோன்"

என்பதும் அது.

இரண்டு நிலையால் பொதுவுமாயிற்று மன்னவன் வெற்றியே கருதாது இங்ஙனம் இரு நிலைமையும் கருதலின் வழுவுமாயிற்று,

மாயோன் மேய மன்பெரும் சிறப்பில் தாவா விழுப்புகழ்ப் பூவைநிலையும் என்றது: மாயோன் விழுப்புகழ் - மாயனுடைய காத்தல் புகழையும்; மேய பெரும் சிறப்பில் தாவா விழுப்புகழ் - ஏனோர்க்கு உரியவாய் மேவிய பெரிய தலைமையில் கெடாத படைத்தல் அழித்த லென்னும் புகழ்களையும்; மன்பூவைநிலையும்- மன்னர் தொழிலுக்கு உவமையாகக் கூறும் பூவைநிலையும்;

என்றது ஒன்றினை ஒன்றுபோற்கூறும் துறை. மன் எனப் பொதுப்படக் கூறியவதனன் நெடுநிலமன்னர்க்கும் குறுநில மன்னர் முதலியோர்க்கும் கொள்க. பெருஞ்சிறப்பு என்றதனல் படைத்தலும் காத்தலும் அழித்தலுமின்றி அவரவர் தாமாகக் கூறலும், முருகன் இந்திரன் முதலியோராகக் கூறலும் கொள்க.

(எ-டு)

"ஏற்றுவலன் உயரிய வெரிமருள் அவிர்சடை
மாற்றரும் கணிச்சி மணிமிடற் ருேனும்
கடல்வளர் புரிவளை புரையு மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயி லுயரிய மாறு வென்றிப்
பிணிமுக வூர்தி ஒண்செய் யோனும்என
ஞாலம் காக்கும் கால முன்பில்
தோலா நல்லிசை நால்வர் உள்ளும்
கூற்றுெத் தீயே மாற்றரும் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுநர் அடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்
ஆங்காங்கு அவரவர் ஒத்தலின் யாங்கும்
அரியவும் உளவோ நினக்கே............" (புறம் 56)

என இதனுள் அங்ஙனம் உவமித்தவாறு காண்க.

"குருந்தம் ஒசித்தஞான்று உண்டால் அதனைக்
கரந்த படிஎமக்குக் காட்டாய் - மரம்பெறுப்

போரில் குருகுறங்கும் பூம்புனல் நீர்நாட
மார்பில் கிடந்த மறு''.

இது சோழனை மாயோனாகக் கூறிற்று.

"ஏற்றூர்தி யானும் இகல்வெம்போர் வானவனும்
ஆற்றலும் ஆள்வினையும் ஒத்தொன்றின் ஒவ்வாரே
கூற்றக் கணிச்சியோன் கண்மூன்று இரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்."

இது சேரனை அரசனாகக் கூறிற்று.

"இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறூர்ந்த
வந்தரத்தான் என்னிற் பிறையில்லை – அந்தரத்துக்
கோழியான் என்னின் முகனொன்றே கோதையை
யாழியான் என்றுணரற் பாற்று."

இது சேரனைப் பலதேவராகக் கூறிற்று.

"கோவா மலையாரம் கோத்த......" (சிலப்-ஆய்ச்-உள்வரி)
"முந்நீரின் உள்புக்கு மூவாக்......" (சிலப்-ஆய்ச்-உள்வரி)
"பொன்னிமயக் கோட்டுப் புலி...... (,, ,,)

என்பனவும் அவை

"தாமரைக் கண்ணியை தண்ணறும் சாந்தினை
......சிறுகுடி யோரே." (கலி-52)

இஃது உரிப்பொருள் தலைவனை முருகனாகக் கூறியது. இங்ஙனம் புறத்தும் அகத்தும் வருதலில் பொதுவாயிற்று. இறப்ப உயர்ந்த தேவரை மக்கட்கு உவமையாகக் கூறலின் வழுவுமாயிற்று.

தாவா என்றதனானே அரசர்புகழைக் காட்டுவாழ்வோர்க்குக் கூறுதலும், அவரை அரசர் பெயரால் கூறுதலும் கொள்க.

"வீங்குசெலற் பரிதி வெவ்வெயில் எறித்தலின்
ஓங்க ணேக்காது ஆங்கு நீபோ

யரசுநுகம் பூண்ட பின்னர் நின்னிலை
முரசுடை வேந்தர் முகந்திரிந் தனரே
அஃதான்று
உவவுமதி நோக்குநர் போலப் பாணரொடு
வயிரியர் பொருநர்நின் பதிநோக் கினரே
அதனால்
அதருங் கோடு முதலிய கூட்டுண்டு
இகலின் இசைமேஎந் தோன்றிப்
பலவா கியநில நீபெறு நாளே."

இது முடியும் குடையும் ஒழித்து அரசர்க்குரியன கூறி இழித்துக்கூறியும் புகழ்மிகுத்தது.

"பல்லிதழ் மென்மலர்" என்னும் (109) அகப்பாட்டினுள் "அறனில்வேந்த னாளும் - வறனுறு குன்றம் பலவிலங் கினவே" எனக் காட்டுத் தலைவனை நாட்டுத் தலைவன் பெயரால் கூறினர்.

ஆர் அமர் ஓட்டலும் - குறுநில மன்னரும் காட்டகத்து வாழும் மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங் காண்டலும்;

(எ-டு)

"பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரற் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண
சீறூர் மன்னன் சிறியிலை எஃகம்
வேந்தூர் யானை ஏந்துமுகத் ததுவே
வேந்துடன்று எறிந்த வேலே என்னை
சாந்தார் அகலம் உளங்கழிந் தன்றே
உளங்கிழி சுடர்ப்படை ஏந்திநம் பெருவிறல்
ஓச்சினன் உரந்தத் காலை மற்றவன்
புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சரம் எல்லாம் புறங்கொடுத் தனவே" (புறம்-308)

இது சீறூர் மன்னன் வேந்தனைப் புறங்கண்டது.

"கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றில்
நாட்செருக்கு அனந்தர்த் துஞ்சு வோனே
அவனெம் இறைவன் யாமவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் இதுகொண்டு
ஈவதி லாளன் என்னுது நீயும்
வள்ளி மருங்குல் வயங்கிழை அணியக்
கள்ளுடைக் கலத்தேம் யாமகிழ் தூங்கச்
சென்றுவாய் சிவந்து மேல்வருக
சிறுகண் யானை வேந்துவிழும் உறவே" (புறம்-316)

இது மறவன் ஆரமரோட்டல் கூறியது.

இவை தன்னுறுதொழில் கூறியன.

இவை புறம்

ஆரமரோட்ட லென்பது பொதுப்படக் கூறவே, வேந்தர்க்கு உதவியாகச் செல்வோரையும் கொள்க.

(எ-டு)

"வெருக்குவிடை யன்ன வெருள்கோக்குக் கயந்தலைப்
புள்ளூன் தின்ற புலவுநாறு கயவாய்
வெள்வாய் வேட்டுவர் வீழ்துணை மகாஅர்
சிறியிலை உடையின் சுரையுடை வாள்முள்
ளூக நுண்கோல் செறித்த வம்பின்
வலாஅர் வல்விற் குலாவரக் கோலிப்
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந் தழீஇய வங்குடிச் சீறூர்க்
குமிழுண் வெள்ளை பகுவாய் பெயர்த்த
வெண்காழ் தாய வண்காற் பந்தர்
இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்
பாணரோடு இருந்த நாணுடை நெடுந்தகை

வலம்படு தானை வேந்தற்கு
உலந்துழி உலக்கு நெஞ்சறி துணையே." (புறம் 324)

இது புறம். வேந்தற்குத் துணையாகச் செல்வோரைக் கூறியது.

"இணைப்படைத் தானை அரசோடு உறினும்
கணைத்தொடை நாணும் கடுந்துடி யார்ப்பின்
எருத்து வலிய வெறுழ்நோக் கிரலை
மருப்பில் திரிந்து மறிந்துவீழ் தாடி
உருத்த கடுஞ்சினத் தோடா மறவர்" (கலி-15)

எனக் கலி அகத்தும் வந்தது.

"வயங்குமணிபொருத" என்னும் (167) அகப்பாட்டினுள்,
"சேக்குவம் கொல்லோ நெஞ்சே சாத்தெறிந்து
அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர்."

எனச் சாத்தெறிதலும் அது. இங்ஙனம் பொதுவாதலின் பொதுவியலாயிற்று. வேந்தரொடு பொருதலின் வழுவுமாயிற்று.

ஆ பெயர்த்துத் தருதலும்—வெட்சிமறவர் கொண்ட நிரையைக் குறுநில மன்னராயினும் காட்டகத்து வாழும் மறவராயினும் மீட்டுத்தருதலும்;

(எ-டு)

"ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயராது
இலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவர் ஒடுக்கம் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் உள்ளம்
முருகு மெய்ப்பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேல்
புடையிலங் கொள்வாள் புனைகழ லோயே." (புறம்-259)

இது குறுநில மன்னர் நிரைமீட்டல் கண்டோர் கூறியது.

"வளரத்தொடினும் வெளவுபு திரிந்து
விளரி உறுதரும் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சம் தலைஇ மனையோள்
உளரும் கூந்தல் நோக்கிக் களர
கள்ளி நிழல் கடவுள் வாழ்த்திப்
பசிபடு மருங்குலை கசிபு கைதொழாஅக்
காணல்என் கொல்லென வினவினை வரூஉம்
பாண கேண்மதி யாணரது நிலையே
புரவுத்தொடுத்து உண்குவை யாயினும் இரவெழுந்து
எவ்வம் கொள்குவை யாயினும் இரண்டும்
கையுள போலும் கடிதண் மையவே
முன்னூர்ப் பூசலில் தோன்றித் தன்னூர்
நெடுநிரை தழீஇய மீளி யாளர்
விடுகணை நீத்தம் துடிபுணை யாக
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற்று உய்ந்த மதியின் மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லான்
நிரையொடு வந்த உரைய ளுகி
உரிகளை அரவின் மானத் தானே
அரிதுசெல் உலகில் சென்றனன் உடம்பே
கானச் சிற்றியாற்று அருங்கரைக் காலுற்றுக்
கம்பமொடு துளங்கிய இலக்கம் போல
வம்பொடு துளங்கி ஆண்டொழிந் தன்றே
உயரிசை வெறுப்பத் தோன்றிப் பெயரே
மடஞ்சான் மஞ்ஞை அணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கன்மிசை அதுவே." (புறம்-260)

இதனுள் தன்னூரென்றலில் குறுநிலமன்னன் நிரைமீட்டுப் பட்ட நிலையைப் பாணர் கையற்றுக் கூறியது.

ஏனைய வந்துழிக் காண்க.

இனிக் கண்டோரும் மறவரும் கூத்தரும் பாணரும் விறலியரும் கூறினும், அவர்தாம் கையற்றுக் கூறினும், அத்துறைப் பாற் படும்.

(எ-டு)

"பெருங்களிற்று அடியில் தோன்றும் ஒருகண்
இரும்பறை இரவல சேறி யாயின்
தொழாதனை கழிதல் ஓம்புமதி வழாஅது
வண்டுமேம் படூஉம் இவ் வறநிலை யாறே
பல்லாத் திரள்நிரை பெயர்தரப் பெயர்தந்து
கல்லா மறவர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே"

(புறம்-263)

இது கண்டோர் கையற்றுக் கூறியது. ஏனைய வந்துழிக் காண்க.

"விசும்புற நிவந்த" என்னும் (131) அகப்பாட்டும் அது.

இதனுள் "மறவர் நாளா வுய்த்த" என வேந்துறு தொழில் அல்லாத வெட்சித்திணையும் பொதுவியல் கரந்தைக் கண்ணே கொள்க; இஃது ஏழற்கும் பொதுவாகலின்.

தருதலென்ற மிகையானே நிரையல்லாத கோடலும் அத் துறைப்பாற்படும். "வலஞ்சுரி மராஅத்து" (அகம்-83.) என்னுங் களிற்றியானை நிரையுள்,

"கறையடி மடப்பிடி கானத்து அலறக்
களிற்றுக்கன்று ஒழித்த உவகையர் கலிசிறந்து
கருங்கால் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து
பெரும்பொளி எண்ணூர் அழுந்துபடப் பூட்டி
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
நறவுநொடை நல்லில் புதவுமுதல் பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன் புல்லி"

என யானைக்கன்றைக் கவர்ந்தவாறு காண்க.

இதுவும் வேத்தியலின் வழீஇயினவாறு காண்க.

வேந்தன் சீர் சால் சிறப்பு எடுத்து உரைத்தலும்—வேந்தற்கு உரிய புகழ் அமைந்த தலைமைகளை ஒருவற்கு உரியவாக அவன்றன் படையாளரும் பிறரும் கூறலும்;

இதுவும் வழு; வேந்தர்க் குரிய புகழைப் பிறர்க்குக் கூறினமையின்.

"அத்த நண்ணிய நாடுகெழு பெருவிறல்
கைப்பொருள் யாதொன்றும் இலனே நச்சிக்
காணிய சென்ற இரவன் மாக்கள்
களிறொடு நெடுந்தேர் வேண்டினும் கடல
வுப்போய் சாகாட் டுமணர் காட்டக்
கழிமுரி குன்றத் தற்றே
எள்ளமை இன்றவன் உள்ளிய பொருளே". (புறம்-313)

இது புறம். படையாளர் கூற்று.

இதற்கு முடியுடைவேந்தன் சிறப்பெடுத் துரைத்தல் என்று கூறின், அது பொதுவியலில் கூறலாகாது என்றுணர்க.

தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும் – தன்னிடத்துளதாகிய போர்த்தொழிலின் முயற்சியாலே வஞ்சினங்களைத் தன்னோடு கூட்டிக் கூறலும்;

(எ டு)

"தானால் விலங்கால் தனித்தால் பிறன்வரைத்தால்
யானை யெறிதல் இளிவரவால் – யானை
ஒருகை உடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்"

என வரும்.

"பெருநீர் மேவல் தண்ணடை எருமை
இருமருப் புறழு நெடுமா நெற்றின்

பைம்பயறு உதிர்த்த கோதின் கோலணைக்
கன்றுடை மரையா துஞ்சும் சீறூர்க்
கோளிவண் வேண்டேம் புரவே நாரரி
நனைமுதிர் சாடி நறவின் வாழ்த்தித்
துறைநனி கெழீஇக் கம்புள் ஈனும்
தண்ணடை பெறுதலும் உரித்தே வைந்நுதி
நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையின் நிற்கு மோர்க்கே". (புறம்-297)

மடல்வன் போந்தைபோல் நிற்பலெனை நெடுமொழி தன்னோடு புணர்த்தவாறு காண்க. சீறூர் புரவாகக் கொள்ளேன்; தண்ணடை கொள்வேனெனத் தன்னுறுதொழில் கூறினான்.

இதுவும் பொது; புறம்.

வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்று இருவகைப் பட்ட பிள்ளைநிலையும் - தன்மேல் வரும் கொடிப்படையினைத் தானே தாங்குதல், வாட்டொழிலில் பொய்த்தலின்றி மாற்றுரைக்கொன்று தானும் வீழ்தலென இரண்டு கூறுபட்ட போரில் சென்றறியாத மறமக்கள் தாமே செய்யும் தறுகண்ணையும்;

வேந்தன் குடிப்பிறந்தோரும் அவன் படைத்தலைவருமாகிய இளையர் செய்யினும் தன்னுறு தொழிலாதலில் கரந்தையாம்; தும்பையாகாதென்று உணர்க.

(எ-டு)

"ஏற்றெறிந்தார் தார்தாங்கி வெல்வருகென்று ஏவினுள்
கூற்றினும் தாயே கொடியளே - போர்க்களிறு
காணு இளமையார் கண்டிவனே நின்றிலனேன்
மாணுருள் யார்பிழைப்பார் மற்று."

இது வருதார் தாங்கல்.

"ஆடும் பொழுதின் அறுகயிற்றுப் பாவைபோல்
வீடும் சிறுவன்தாய் மெய்ம்மகிழ்ந்தாள் - வீடுவோன்

வாள்வாயின் வீழ்ந்த மறவர்தம் தாயரே
கேளா அழுதார் கிடந்து."

இது வாள் வாய்த்துக் கவிழ்தல்.

"கெடுக சிந்தை கடிதிவ டுணிவே" என்னும் (279) புறப் பாட்டும் இதன்பாற் படும்.

இவை தன்னுறுதொழில். போரில் சென்று அறியாதவன் சேறலின் வழு.

வாண்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடவற்கு அருளிய பிள்ளையாட்டும் - வாளால் பொருது உயர்ந்த அரசிளங்குமரனை அந் நாட்டிலுள்ளார் கொண்டுவந்து பறை தூங்கிசையாக ஒலிக்கும்படி அவற்கு அரசுகொடுத்த பிள்ளைப் பருவத்தோனைக் கொண்டாடிய ஆட்டும்;

இதுவும் நாட்டிலுள்ளார் கொடுத்தலில் தன்னுறுதொழிலாய் வழுவுமாயிற்று.

(எ-டு)

"வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
புன்றலை ஒள்வாட் புதல்வற்கண்டு-அன் புற்றுக்
கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு
வான்கெழு நாடு வர"

என வரும்.

இதனைப் பிள்ளைத்தன்மையினின்று பெயர்த்தலில் பிள்ளைப் பெயர்ச்சியு மென்ப.

அனைக்குரி மரபில் கரந்தையும்—ஆரம ரோட்டல் முதலிய ஏழு துறைக்கும் உரிய மரபினையுடையகரந்தையும், கரந்தையாவது தன்னுறுதொழிலாக நிரைமீட்டோர் பூச்சூடுதலில் பெற்ற பெயராதலின் வெட்சித்திணைபோல ஒழுக்கமன்று.

* "பிள்ளைப் பெயர்ச்சி:- போர் தாங்கிப் புள்விலங்கியோனைத்—தார் வேந்தன் றலையளித்தன்று" என்பது புற-வெ-மாலை-கரந்தை-12.

"அந்தோவெந்தை" என்னும் (261) புறப்பாட்டினுள்,

"நாகுமுலை அன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபில் சூட்ட
நிரைஇவள் தந்து."

என்றவாறு காண்க.

அது அன்றி—அக் கரந்தையே அன்றி;

காட்சி—கல்கெழு சுரத்தில் சென்று கற்காண்டலும், அது கொணர்ந்து செய்வன செய்து நாட்டிப், பின்னர்க் கற்காண்டலும் என இருவகையாம்;

(எ-டு)

"தாழி கவிப்பத் தவஞ்செய்வர் மண்ணுக
வாழிய நோற்றனை மால்வரை—ஆழிசூழ்
மண்டலம் ஆற்று மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டனென் நின்மாட்டோர் கல்."

இது கல் ஆராய்கின்றார் காட்சி.

"ஊர்நனி இறந்த பார்முதிர் பறந்தலை
ஓங்குநிலை வேங்கை ஒள்ளிணர் நறுவீ
போந்தையந் தோட்டில் புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லா யினையே கடுமான் தோன்றல்
வானேறு புரையுநின் தாள்நிழல் வாழ்க்கைப்
பரிசிலர் செல்வம் அன்றியும் விரிதார்க்
கடும்பகட் டியானை வேந்தர்
ஒடுங்கா வென்றியு நின்னொடு செலவே." (புறம்-265)

இது கோவலர் படலைசூட்ட என்றலின் கடவுளாகியபின் கண்டது.

"கல்லாயும் ஏறெதிர்ந்து காண்டற்கு எளிவந்த
வல்லான் படலைக்கு வம்மினோ—வெல்புகழால்

சீரியல் பாடல் சிதையாமல் யாம்பாடத்
தூரியம் எல்லாம் தொட"

என்பதும் அது.

கால்கோள்—கல்லுறுத்து இயற்றுதற்குக் கால்கோடலும், நாட்டிய பின்னர் அவன் ஆண்டுவருதற்குக் கால்கோடலும் என இருவகையாம்;

(எ-டு)

"வரையறை சூழ்கிடக்கை மாத்தாட் பெருங்கல்
வரையறை செய்யிய வம்மோ—வரையறை
வாராப் பெரும்புகழ் வல்வேல் விடலைக்கும்
ஓராற்றுற் செய்வது உடைத்து."

இது வரையறை செய்யிய வம்மோ என ஒருவனைத் தெய்வமாக நிறுத்துதற்கு இடம் கொள்ளப்பட்டமையானும், அவ்விடத்துக் கால் கோடலானும் கால்கோள்.

"காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
பூப்பலி பெய்து புகைகொளீஇ—மீப்படர்ந்த
காளை நடுகல் சிறப்பயர்ந்து கால்கொண்மின்
நாளை வரக்கடவ நாள்"

இது நட்டுக் கால்கொண்டது.

"இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லின் ஆட்பலி யூட்டி
நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்
அருமுனை இருக்கைத் தாயினும் வரிமிடற்று
அரவுறை புற்றத்து அற்றே நாளும்
புரவலர் புன்கண் நோக்காது இரவலர்க்கு
அருகாது ஈயும் வண்மை
உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரே." (புறம்-329)

இதன் கண்ணும் அது வந்தவாறு காண்க.

நீர்ப்படை—கண்டு கால்கொண்ட கல்லினை நீர்ப்படுத்துத் தூய்மை செய்தலும், பின்னர்ப் பெயரும் பீடும் எழுதி நாட்டிய வழி நீராட்டுதலுமென இருவகையாம்;

(எ-டு)

"வாளமர் வீழ்ந்த மறவோன்கல் ஈர்த்தொழுக்கிக்
கேளிர் அடையக் கிளர்ந்தெழுந்து—நீள்விசும்பில்
கார்ப்படுத்த வல்லேறு போலக் கழலோன்கன்
நீர்ப்படுத்தார் கண்ணீரில் நின்று."

இது நீர்ப்படை.

"பல்லா பெயர்த்து நல்வழிப் படர்ந்தோன்
கல்சொரிந்து ஆட்டிய நீரே தொல்லை
வான்வழங்கு நீரினும் தூய்தே அதனால்
கண்ணீர் அருவியும் கழீஇத்
தெண்ணீர் ஆடுமின் தீர்த்தமாம் அதுவே."

இது நாட்டி நீராட்டியது.

நடுதல்-கல்லினை நடுதலும், அக் கல்லின்கண் மறவனை நடுதலு மென இருவகையாம்;

(எ-டு)

"சீர்த்த துகளிற்றூய்த் தெய்வச் சிறப்பெய்த
நீர்ப்படுத் தற்கு நிலைகுறித்துப்—போர்க்களத்து
மன்னட்ட வென்றி மறவோன் பெயர்பொறித்துக்
கன்னட்டார் கல்சூழ் கடத்து."

இது கல் நாட்டியது.

"கோள்வாய்த்த சீயம்போல் கொற்றவர்தம் மாவெறிந்து
வாள்வாய்த்து வீழ்ந்த மறவேலாய்—நாள் வாய்த்து
இடைகொளல் இன்றி எழுத்துடைக் கல்வாய்
மடைகொளல் வேண்டு மகிழ்ந்து."

இது மறவனை நாட்டியது.

சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை—அவன் செய்த புகழைத் தகும்படி பொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெரும் சிறப்புக்களைப் படைத்தலுமென இருவகையாம்;

(எ-டு)

"கைவினை மாக்கள் கலுழக்கண் நோக்கிழந்து
செய்வினை வாய்ப்பவே செய்தமைத்தார்—மொய்போர்
மறவர் பிணம்பிறக்கி வாள்வாய்த்து வீழ்ந்தோன்
பிறபெயர்சூழ் கன்மேல் பெரிது"

இது பெயர் முதலியன பொறித்தது.

"அன்றுகொள் ஆபெயர்த்து ஆரமரில் வீழ்ந்தோன்கற்கு
இன்றுகொள் பல்லான் இனமெல்லாம்—குன்றுமல்
செய்ம்மினோ சீர்ப்பச் சிறப்பாகத் தீபங்கள்
வைம்மினோ பீடம் வகுத்து."

இஃது இதற்குச் சிறப்புப் படைத்தது.

வாழ்த்தல் – கால் கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தலும், பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்தலுமென இருவகையாம்.

(எ-டு)

"ஆவாழ் குழக்கன்று உய்வித்துக் களத்தவிந்த
நீவாழ வாழிய நின்னடுகல் – ஓவாத
விற்கோட்ட நீண்டதோள் வேந்தன் புலிபொறித்த
பொற்கோட்டு இமயமே போன்று."

இது கல்வாழ்த்து.

"பெருங்களிற்றடியில்" என்னும் (263) புறப்பாட்டில் 'தொழாதனை கழிதலோம்புமதி' என வாழ்த்தியவாறு காண்க.

என்று இரு மூன்றுவகையில் கல்லொடு புணர – என்று முன்னர்க் கூறப்பட்ட அறுவகை இலக்கணத்தையுடைய கல்

லொடு பின்னரும் அறுவகை இலக்கணத்தையுடைய கற்கூடச்; சொல்லப்பட்ட - இக்கூறப்பட்ட பொதுவியல்; எழுமூன்று துறைத்து - இருபத்தொரு துறையினையுடைத்து என்றவாறு.

ஆரமரோட்டன் முதலிய எழுதுறைக்குரிய மரபினையுடைய கரந்தையும், அக் கரந்தையே யன்றி முற்கூறிய கல்லோடே பிற் கூறிய கல்லும் கூடக், காந்தளும் பூவும் வள்ளியும் கழனிலையும் உன்னநிலையும் பூவைநிலையும் உளப்பட இச்சொல்லப்பட்ட பொது வியல் இருபத்தொரு துறையினை யுடைத்தெனக் கூட்டுக. மாயோ னிறம்போலும் பூவைப் பூ நிறமென்று பொருவுதல் பூவைநிலை யென்றால், ஏனையோர் நிறத்தொடு பொருந்தும் பூக்களையும் பொருவுதல் கூறல்வேண்டும்; ஆசிரியர் அவை கூறாமையின், அது புலனெறி வழக்கம் அன்மை யுணர்க. இதனுள் கரந்தைப்பகுதி ஏழும் வேறு கூறினார்; காட்டகத்து மறவர்க்கும் குறுநிலமன்னர்க் கும் அரசன் படையாளர் தாமே செய்தற்கும் உரிமையின். கற் பகுதி வேத்தியல் புறத்திணைக்கும் பொதுவாகலின் வேறுகூறினார் ஏனைய அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகலின் வேறு கூறினார்.

இனித் துறையென்றதனால் ஒன்று பலவாம். அவை, கற் காணச்சேறலும், இடைப்புலத்துச் சொல்லுவனவும், கண்டுழி யிரங்குவனவும், கையறுநிலையும், பாணர் கூத்தர் முதலியோர்க் குரைப்பனவும், அவர் தமக்குரைப்பனவும் போல்வன கற்காண் டலின் பகுதியாய் அடங்கும். கால்கொள்ளும் காலத்து, மாலை யும் மலரும் மதுவும் சாந்தும் முதலியன கொடுத்தலும், அனை யோற்கு இனைய கல் தருமென்றலும், தமர்பரிந்திரங்கலும் முதலி யன கால்கோளின் பகுதியாய் அடங்கும். நீர்ப்படுக்குங்கால் ஈர்த்துக்கொண்டொழுக்கலும், ஏற்றிய சகடத்தினின்று இழிந்த வழி ஆர்த்தலும், அவர் தாயங்கூறலும் முதலியன நீர்ப்படை யாய் அடங்கும். நடுதற்கண், மடையும் மலரும் மதுவும் முதலி யன கொடுத்துப் பீலித்தொடையலும் மாலையும் நாற்றிப் பல்லி யம் இயம்ப விழவுச் செய்யும் சிறபபெல்லாம் நடுதலாய் அடங் கும்; பெயரும் பீடும் எழுதுங்காலும் இப் பகுதிகள் கொள்க நாட்டப்படும் கல்லிற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப்புக்களும் படைத்தல் பெரும்படைப்பகுதியாய் அடங்கும். வாழ்த்தற்கண்ணும் இதுதான் நெடிதுவாழ்கவெனவும் இதன்

கண்ணே அவனின்று நிலாவுக வெனவும் பிறவும் கூறுவனவும் எல்லாம் வாழ்த்துதலாய் அடங்கும். ஏனையவற்றிற்கும் இவ் வாறே துறைப்பகுதி கூறிக்கொள்க

இனிப் ''பரலுடைமருங்கில் பதுக்கை'' என்னும் (296) புறப்பாட்டினுள் ''அணிமயில் பீலிசூட்டிப் பெயர் பொறித்—தினி நட்டனரே கல்லும்'' எனக் கன்னாட்டுதல் பெரும்படைக்குப் பின்னாகக் கூறிற்றாலெனின், நீர்ப்படுத்த பின்னர்க் கற்படுத்துப் பெயர் பொறித்து நாட்டுதல் காட்டு நாட்டோர் முறைமை யென்பது சீர்த்தகு சிறப்பின் என்பதனால் கொள்க. பெயரும் பீடு மெழுதி யதர்தொறும்—பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'' என அகத்திற்கும் (அகம்-131) வருதலில் பொதுவியலாயிற்று. இவை ஒரு செய்யுட்கண் ஒன்றும் பலவும் வருதலும், அகத்தின் கண் வருதலும் சுட்டியொருவர் பெயர் கோடலும், கொள்ளா மையும் உடையவென்று உணர்க.

இப்பொதுவியலின்பின் வஞ்சி வைத்தார், வஞ்சிக்கண் ணும் பொதுவியல் வருவனவுள என்றற்கு. அது ''வேந்து வினை முடித்தனன்'' என்னும் (106) அகப்பாட்டினுள் சுட்டி யொருவர் பெயர் கூறா வஞ்சி பொதுவியலாய் வந்தவாறு காண்க.

(வி-ரை) வேத்தியலின் வழிஇ - அரசன் ஆணைவழி இயங்கு தலின்றும் வழுவி.

கணி காரிகை - சோதிடம் கூறும் பெண்.

கார்க்காடு - மேகம் போல் கறுத்துத் தழைத்திருக்கும் கூந்தல். காளை இவன் ஏர்க்கு ஆடும்-காளையாகிய இவ் வேலனின் அழகைக் கண்டு ஆடும். வேலன் வெறியாட்டின் பொருட்டு ஆடுவன். காரிகையார் இவன் அழகைக் கண்டு ஆடுவர்.

கணங்கொள் அருவி - கூட்டமாய அருவி. செல்லல்-வருத்தம்.

கருங்கூத்து - மறவர்கள் அரசன் ஆணைவழியன்றித் தாமே ஆடும் கூத்து.

விலங்கு முதலியவற்றால் தமக்கு வரும் வெற்றியைத் தாம் பெறுதற்காக வீரர்கள் ஆடுவரென்றும் அவ்வாறு ஆடுங்கால் தாம் இன்ன வேந்தரின் படையாளர் என்று தெரிதற்குப் பனை, வேம்பு, ஆத்தி ஆகிய மாலைகளைச் சூடுவர் என்றும் கூறுவது சிறிதும் பொருத்தம் இன்றாம். ஏந்து புகழ் மாபெரும் தானையர் என வருவன பண்டைத் தமிழ் வேந்தரின் மாலைச் சிறப்பையும் அவர்களின் வலிமைச் சிறப்பையும் குறிப்பனவாம். அங்ஙனமாகவும் நூற்பாவின் பகுதியைப் பெரிதும் சிதைத்துப் பொருள் கூறியிருப்பது ஆசிரியர் கருத்தொடுபட்டதன்றாம். மிகுபகை காரணமாகப் போர் புரியுங்கால், அரசர்களிடை வேறுபாடு தெரிதல் வேண்டி உயர்ந்த புகழையுடைய பனை (சேரர்) வேம்பு (பாண்டியர்) ஆத்தி (சோழர்) ஆகிய மாலைகளை மிகப்பெரும் படையினையுடைய தமிழ்நாட்டு மூவேந்தரும் சூடியபூவும் என இளம்பூரணர் கூறும் உரையே பொருந்துவதாம். ஏந்து புகழ் – உயர்ந்த புகழ். ஏழகத்தகர் - ஆட்டுக்கடா. பூழ் - காடை. வட்டு - உண்டை. வல் – சூது. சொல் – தருக்கம். இவற்றால் ஒருவர்க்கொருவர் பணயம் வைத்துப் போர் புரிதல் அக்காலத்து மரபாம்

நாகம் – ஆதிசேடன். போந்தையங்கண்ணி – பனைமாலை. ஆர் – ஆத்தி; சிறை கெழு வாரணம் -- கோழி.

வள்ளிக் கூத்து - வள்ளி நாச்சியாரின் வேடம் புனைந்து ஆடும் கூத்து.

வீரரால் புகழப்பட்ட கெடாத கழல்நிலை என உரைகாண்பர் இளம்பூரணர். நூற்பாவின் அமைதிக்கு இவ்வுரையே பொருந்துவதாகும்.

வாளாட்டு – வாள்போர்.

பிறக்கடியிடா -பின் அடியிடாது; அதாவது புறங்காட்டாது. உடன்ற-சினந்த. வேந்தன் கருத்தானன்றி-அரசன் ஆணையாலன்றி. பொதுவகை-தழைக. இருவகை-பரவல், நிமித்தங்கோடல் ஆகிய இருவகை.

திறவீர்-திறமை உடையீர், உன்னம் சுரக்கும்-அரசனுடைய சிறப்பொடு கூட்டி உணர்தற்கு ஏதுவாக உன்னமரம் சுரக்கும்.

மாயோன், நான்முகன், அரசன் ஆகிய மூவரின் ஆற்றலை வேந்தர்களின் ஆற்றலுக்கு ஒப்பிட்டுக் கூறுவது பூவைநிலை என்பர் நச்சினர்க்கினியர். பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்ததெனப் புகழ்தல் பூவைநிலை என வரை காண்பர் இளம்பூரணர். அவரே 'இஃது உரையன்று என்பார் மாயோன் முதலாகிய தேவர்களோடும் வேறு கடவுளர்களோடும் அரசனை உவமித்துக் கூறுதலைப் பூவைநிலையென்பர்' எனக் கூறியுள்ளார். இக்கருத்தையே நச்சினர்க்கினியர் பின்பற்றி இங்கு உரைத்துள்ளார். எனினும் நூற்பா அமைப்பிற்கேற்ப மாயோனது புகழை அரசரது புகழுக்கு உவமித்துக் கூறுதல் பூவைநிலை எனக் கூறி, வேறு மிகையாலோ அன்றி உத்தியாலோ பிற கடவுளரோடு உவமித்துக் கூறுதலைப் பூவைநிலையெனக் கோடலே பொருத்தமாம்.

கணிச்சி - மழு மணிமிடற்றோன் - நீலமணி போன்ற கழுத்தையுடையவன்; சிவ பெருமான். புரிவளை - முறுக்குண்ட சங்கு. நாஞ்சில் - கலப்பை. பனைக் கொடியோன் - பலராமன். புட் கொடி - கருடக் கொடி. விறல் வெய்யோன் - திருமால். பிணிமுகம் - மயில். செய்யோன் - முருகன்.

மார்பில் கிடந்த மறு கரந்த படி எமக்குக் காட்டாய் என இயைக்க. மறு - இலக்குமி.

கூற்றக் கணிச்சியோன் - இயமனை ஒத்த மழுப்படை உடையவன்; சிவ பெருமான்.

அந்தரத்தான் - விண்ணில் உள்ளான் ; சிவபெருமான்-கோழியான் - முருகன், ஆழியான் - பலராமன்

இறப்ப உயர்ந்த - மிக உயர்ந்த.

உவவுமதி - நிறைமதி, வயிரியர் - கூத்தர், அதள் - விலங்கின் தோல்.

ஆர் அமர் - அரிய போர்த் தொழில்.

புரி - முறுக்கு. பச்சை - தோல். உளம் கழிந்தன்றே - மார்பினகத்துச் சென்றது.

சீயா முன்றில் - பெருக்கப் படாத முற்றம். நாட்செருக்கு அனந்தர் - விடியற் காலத்துக் கள்ளைக் குடித்ததனாலாய மயக்கம். வாய் சிவந்து - வாய் சிவக்குமாறு பாடி.

வெருக்கு விடை - காட்டுப் பூனையின் ஆண், ஊக நுண் கோல் - ஊகம் புல்லின் நுண்ணிய கோல். கருப்பை - காரெலி, குமிழ் - குமிழம் பழம். வெள்ளை - வெள்ளாடு.

வெறும் நோக்கு - வலியினையுடைத்தாய பார்வை. மறித்து-முறுக்குண்டு.

சேக்குவம் கொல்லோ - தங்குவோமோ. சாத்து - வணிகக் கூட்டம். அதர் - காட்டிடம்; வழி.

தெரிக்கும் - துள்ளும். முருகு மெய்ப்பட்ட - முருகனாகிய தெய்வம் உடம்பின் கண் ஏறிய. வௌவுபு - உள் வாங்கி, விளரி - இரங்கற்பண், புறவு - விளைநிலம், இரவு - இரத்தல். வையெயிற்றுய்ந்த மதியின் - கூரிய பற்களையுடைய பாம்பின் வாயினின்றும் பிழைத்த சந்திரன் போல, உரிகளை யரவம் - தோல் உரித்த பாம்பு.

கொல் புனற் சிறையின் - விரைந்து வரும் நீர்ப் பெருக்கைத்தடுத்த அணை போல.

கறையடி - உரல் போன்ற அடி. பெரும்பொளி - பெரிதாக உரித்த. நியமம் - கோயில் நொடை - விலைக்குக் கொடுக்கும். புதவு - வாயில்.

வேந்தன் சீர் சால் சிறப்பு எடுத்து உரைத்தலே வேத்தியல் மரபு என்பர் ஐயனாரிதனார்

உப்பைச் சாக்காட்டு - உப்பைக் கொண்டு வருகின்ற வண்டி. எள்ள மைவின்று - இகழ்தற்குரிய தன்று.

தலைத்தாள் - தன்னிடத்துள்ள முயற்சி. தலை - இடம்.

தலைத்தாள் நெடுமொழி புணர்த்தலை நெடு மொழி கூறல் என்பர் ஐயனாரிதனார். தண்ணடை - மருத நிலம். கம்புள் - பறவை.

இரு வகைப் பிள்ளை நிலையுள் முன்னையதை ஆளெறி பிள்ளை என்பர் ஐயனாரிதனார்.

ஏற்று - எறிந்து. தார் - முன் வரும் படை.

வாளால் மாறு பட்டு எழுந்தவனை மகிழ்ந்து பறை ஒலிப்ப அவற்குத் துறக்கமாகிய நாட்டை அளித்த பிள்ளையாட்டும் என உரை காண்பர் இளம்பூரணர்.

நாகு - இளமை.

மால்வரை மறப்புகழோன் சீர் பொறிப்ப நின் மாட்டு ஓர் கல் கண்டனன் என இயைக்க.

படலை - இலை மாலை.

ஏறெறிந்து - எதிர் நோக்கி, தூரியம் - இசைக் கருவிகள். கால் கோடல் - தொடங்குதல், கால் - இடம், காலம் ஆகிய இரண்டையும் குறிக்கும் போலும் எனக் கருதுவர் கணேசய்யர். இளம்பூரணர் கல்கோள் எனப் பாடங்கொண்டு, கல்லைக் கைக் கோடல் என்று உரைப்பர். ஐயனாரிதனாரும் இவ்வாறே உரைப்பர்.

வரையறை சூழ் கிடங்கை - மலைப்பாறைகள் பலவும் சூழ்ந்து கிடக்கும் இடத்து. வரையறை செய்ய - உருவு எழுதுதலைச் செய்தற்கு. நெய் நறை - நெய்யாலிட்ட நறும்புகை. அரை உறைப் புற்றம் - பாம்பு உறையும் புற்று.

ஈர்த்து - இழுத்து. அடைய - முழுமையாக. வல்லேறு - வலிதாய இடி. சீர்த்த துகள் - திருநீறு. கடம் - காடு.

கோள் - கொலை. சீயம் - சிங்கம். மா - குதிரை. யானை முதலியன. இடை கொளல் இன்றி - தடையின்றி, மடை - படைத்தல்.

அஃதாவது நாட்டிய கல்விற்குக் கோட்டம் செய்தல் அஃது இற்கொண்டு புகுதல் என உரைத்த துறை. கோட்டம் - கோயில். படை - படைத்தல் என விளக்கம் காண்பர் இளம்பூரணர். ஐயனரிதனரும் இவ்வாறே கூறுவர்.

கைவினை மாக்கள் - கைத்தொழில் சிறந்த சிற்பியர், பிற - அசைநிலை

அன்று கொள் - அன்று கொண்ட. பீடம் - இருக்கை. ஐயனரிதனர் இதனைக் கல்முறை பழிச்சல் என்பர்.

இந்நூற்பாவின்கண் கூறப்பட்ட துறைகள் இருபத்தொன்றும். அவையாவாவன - காந்தள், மூவேந்தர் சூடிய மூவகைப் பூக்கள், வள்ளி, கழல் நிலை, உன்னநிலை, பூவை நிலை, ஆரமர் ஓட்டல் முதலாகக் கூறப்பட்ட கரந்தைத் துறை ஏழு, காட்சி முதலாகக் கூறப்பட்ட கல்கோள் நிலைஆறு ஆக இருபத்தொன்றாகும்.

பூவை நிலைக்கு இளம்பூரணர் கூறிய கருத்தை ஈண்டு மறுத்துரைக்கின்றார்.

இந்நூற்பாவில் கூறப்பட்ட மூவகைத் துறைகளும் ஒவ்வொரு வகையில் பொதுப்பட நிற்றலின் இது பொதுவியலாயிற்று. கற்பகுதி ஆறும் வீரர்க்குரியவாவன அன்றி அரசர்க்கும் உரியவாம். ஆதலின் வேத்தியல் புறத்திணைக்கும் பொது என்றார். ஆதலால் தான் பின் வந்த ஐயனரிதனரும் இவற்றுள் கரந்தைப் பகுதியாக வந்தனவற்றை நீக்கி ஏனையவற்றுள் மாபெரும் தானையர் மலைந்த பூவகை மூன்றையும், உன்ன நிலையையும் கழல் நிலையையும் கல் நிலை ஆறையும் பொதுவியற் படலத்துட் கூறினர். வெறியாட்டயர்ந்த காந்தளை வெட்சிப் படலத்துள்ளும், வள்ளிக் கூத்தினையும் பூவை நிலையையும் பாடாண் படலத்தும் கூறினர்.

ஈர்த்துக் கொண்டு ஒழுக்கல் - கல்லை இழுத்துக்கொண்டு போய் நீர்ப்படுத்துதல் (5)

வஞ்சிக்குரிய பொதுவிலக்கணம்

61. [1]வஞ்சி தானே முல்லையது புறனே.

இது, தம்முள் மாறுபாடு கருதி வெட்சித்திணையை நிகழ்த்திய இருபெரு வேந்தருள் தோற்றோ ரொருவன் ஒருவன் மேற் செல்லும் வஞ்சித்திணை அகத்திணையுள் இன்னதற்குப் புறனு மென்கின்றது. வஞ்சியென்றது ஒருவர்மே லொருவர் சேறலை. அதற்கு வஞ்சி சூடிச்சேறலும் உலகியல்.

(இ - ள்) வஞ்சி தானே - வஞ்சியெனப்பட்ட புறத்திணை; முல்லையது புறனே - முல்லை எனப்பட்ட அகத்திணைக்குப் புறனும் என்றவாறு.

ஏனை உழிஞை முதலியவற்றினின்று பிரித்தலின் ஏகாரம் பிரிநிலை. பாடாண்டிணைக்குப் பிரிதலின்மையில் 'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே' (தொ-பொ-புற-24) என்ப. ஏனைய பிரித்துக் கூறுவர். முதலெனப்பட்ட காடுறையுலகமும், கார் காலமும், அந்நிலத்திற்கேற்ற கருப்பொருளும், அரசன் பாசறைக்கண் தலைவியைப் பிரிந்து இருத்தலும், அவன் தலைவி அவனைப் பிரிந்து மனைவயின் இருத்தலுமாகிய உரிப்பொருளும் ஒப்பச் சேறலின், வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று. வெஞ்சுடர் வெப்பம் நீங்கத் தண்பெயல்பெய்து நீரும் நிழலும் உணவும் பிறவும் உளவாகிய காட்டகத்துக் களிறு முதலியவற்றோடு சென்றிருத்தல் வேண்டுதலின் வஞ்சிக்கும் அம் முதல் கருவுரியும் வந்தனவாம் - முல்லைப்பாட்டினுள்,

"கான்யாறு தழீஇய அகனெடும் புறவில்
சேணுறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப் புழையருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியில் பரந்த பாடி" (பத்து-முல்லைப்-248)

என்பதனா னுணர்க.

---

1. இச்சூத்திரத்தையும் அடுத்த சூத்திரத்தையும் இணைத்து ஒரே சூத்திரமாகக் கொள்வர் இளம்பூரணர்.

(வி-ரை) பாடாண் திணை எழு திணைக்கும் பொதுவாதலின் இவ்வெழுபுறத் திணையினின்றும் பிரிதல் இல்லை.

புறவு - காடு. சேண் நாறு பிடவம் - மிகத் தொலைவிலும் மணக்கும் பிடவ மலர். எருக்கி - வெட்டி. அருப்பம் - அரண். மாட்டி - அழித்து. புரிசை - மதில், ஏமுற - காவலமைய (6)

அதன் சிறப்பிலக்கணம்

62. எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே.

இது முல்லைக்குப் புறனென்ற வஞ்சித்திணை இன்னபொருட்டு என்கின்றது.

(இ - ள்.) எஞ்சா மண் நசை - இருபெருவேந்தர்க்கும் இடையீடாகிய மண்ணிடத்து வேட்கையானே; அஞ்சுதகத் தலைச்சென்று - ஆண்டு வாழ்வோர்க்கு அஞ்சுதலுண்டாக அந் நாட்டிடத்தே சென்று; வேந்தனை வேந்தன் அடல் குறித்தன்று —ஒரு வேந்தனை ஒரு வேந்தன் கொற்றங்கோடல் குறித்தல் மாத்திரைத்து வஞ்சித்திணை என்றவாறு.

ஒருவன் மண்ணசையான் மேற்சென்றால் அவனும் அம் மண்ணழியாமல் காத்தற்கு எதிரே வருதலின், இருவர்க்கும் மண்ணசையான் மேற்சேறல் உளதாகலின், அவ்விருவரும் வஞ்சிவேந்தர் ஆவரென் றுணர்க.

எதிர் சேறல் காஞ்சி என்பரா லெனின், காஞ்சியென்பது (தொல்-பொருள்-77) எப்பொருட்கும் நிலையாமை கூறுதலின் பெரிதும் ஆராய்ச்சிப்படும் பொதுவியல் பொருண்மைப் பெயரால் கூறலாகாமை யுணர்க. ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர் செல்லாது தன்மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின், அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதிகமான் இருந்ததாம். இங்ஙனம் இருவரும் வஞ்சிவேந்த ரெனவே, மேற்கூறும் துறைபதின்மூன்றும் இருவர்க்கும் ஒப்பக் கூறலாமென் றுணர்க,

(வி-றை) எதிர் சேறல் காஞ்சி என்பார் பன்னிரு படல ஆசிரியரும் அவரைத் தழுவிய ஐயனாரிதனாரும். காஞ்சி என்பது தொல்காப்பியர் கருத்தின்படி எப்பொருளும் நிலையாதது எனக் கூறுவதாகும். ஆதலின் அது பொதுவியல் பொருண்மைத்தாம். இங்குக் கூறப்பெறும் போர் முறைகள் அரசர்கள் குறுநில மன்னர்கள், அவர்களைச் சார்ந்த வீரர்கள் ஆகியோர்க்கே உரியவாதலின் சிறப்பியல் பொருண்மைத்தாம். (7)

வஞ்சித் திணைக் குரிய துறைகள்

63. இயங்குபடை யரவம் எரிபரந் தெடுத்தல்
வயங்க லெய்திய பெருமை யானும்
கொடுத்த லெய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
வொருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பிற் றுறைபதின் மூன்றே.

இது முற்கூறிய வஞ்சித்திணை பதின்மூன்று துறைத் தென்கின்றது.

(இ-ள்) இயங்கு படை அரவம்—இயங்குகின்ற இரு படை யெழுச்சியின் ஆர்ப்பரவமும்;

(எ-டு)

"விண்ணசைஇச் செல்கின்ற வேலினையார் ஆர்ப்பெடுப்ப
மண்ணசைஇச் செல்கின்றான் வாள்வேந்தன்-எண்ணம்

ஒருபாற் படர்தரக்கண்டு ஒன்னார்தம் உள்ளம்
இருபாற் படுவது எவன்".

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு 774 பகைவயிற் சேறல்)

"சிறப்புடைமரபின் பொருளு மின்பமும்" என்னும் (31)

புறபாட்டும் அது.

"இறும்பூதாற் பெரிதே கொடித்தேர் அண்ணல்
வடிமணி அணைத்த பணைமருள் நோன்றாள்
கடிமரத்தால் களிறணைத்து
நெடுநீர துறைகலங்க
மூழ்த்திறுத்த வியன்தானையொடு
புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்
வாண்மதி லாக வேன்மிளை உயர்த்து
வில்விசை உமிழ்ந்த வைம்முள் அம்பில்
செவ்வாய் எஃகம் வளைஇய அகழில்
காரிடி உருமின் உரறு முரசில்
கால்வழங்கு ஆரெயில் கருதில்
போரெதிர் வேந்தர் ஒருஉப நின்னே." (பதிற்று 13)

இப் பதிற்றுப்பத்தும் அது.

"போர்ப்படை ஆர்ப்பப் பொடியாய் எழுமரோ
பார்ப்புர எண்ணுன்கொல் பார்வேந்தன் · ஊர்ட்டத்து

நில்லாத தானை நிலன்நெளிய நீளிடைப்
புல்லார்மேல் செல்லும் பொழுது."

இஃது எதிர்செல்வோன் படையரவம்.

எரிபரந்து எடுத்தல் — இருவகைப் படையாளரும் இரு வகைப் பகைப்புலத்துப் பரந்துசென்று எரியை எடுத்துச் சுடு தலும்;

இவ்விரண்டற்கும் உம்மை விரிக்க.

(எ-டு)

"வினைமாட்சிய விரைபுரவியொடு
மழைஉருவின தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
எல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரில் தோன்றப்
புலங்கெட இறுக்கும் வரம்பில் தானை." (புறநா-16)

எனவும்,

"களிறு கடைஇயதாள்
கழலுரீஇய திருந்தடிக்
கணைபொருது கவிவண்கையால்
கண்ணொளிர் வரூஉங் கவின்சாபத்து"

என்னும் (எ) புறப்பாட்டினுள்,

"எல்லையும் இரவும் எண்ணாய் பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை ஆகலின்"

எனவும் வரும்.

இவை கொற்றவள்ளைப் பொருண்மையவேனும் உட்பகுதி பலவும் துறையாய் வருதலின், எரிபரந்து எடுத்தற்கும் உதாரணமாயின.

வயங்க லெய்திய பெருமையானும் - ஒருவர் ஒருவர்மேற் செல்லுங்கால் பிறவேந்தர் தத்தம் தானையோடு அவர்க்குத் துணையாயவழி அவர் விளக்கமுற்ற பெருமையும்;

(எ-டு)

"மேற்செல்லும் காலைத் துணைவந்த வேந்தர்தம்
பாற்செல்லச் செல்லும் பரிசினன் - நாற்கடல்சூழ்

மண்மகிழும் காட்சியான் மீன்பூத்த வானத்து
வெண்மதிபோன் மேம்பட்டான் வேந்து''

எனவரும்.

இஃது இருவருக்கும் பொது.

கொடுத்தல் எய்திய கொடைமையானும்—மேற்செல்லும் வேந்தர் தத்தம் படையாளர்க்குப் படைக்கல முதலியன கொடுத்தலும், பரிசிலர்க்கு அளித்தலும் ஆகிய கொடுத்தலைப் பொருந்திய கொடைத்தொழிலும்;

(எ.டு)

"வேத்தமர் செய்தற்கு மேற்செல்வான் மீண்டுவந்து
ஏத்துநர்க்கு ஈதும்என் றெண்ணுமோ - பாத்தி
யுடைக்கலி மான்தேர் உடனீந்தான் ஈந்த
படைக்கலத்திற் சாலப் பல."

எனவரும்.

"சிறுஅஅர் துடியர் பாடுவன் மகாஅர்
தூவெள் ளறுவை மாயோற் குறுகி
இரும்பூண் பூசல் ஓம்புமின் யானும்
விளரிக் கொட்பின் வெண்ணர் கடிகுவென்
எம்போல் பெருவிதுப் புறுக வேந்தே
கொன்னும் சாதல் வெய்யோற்குத் தன்தலை
மணிமருண் மாலை சூட்டி அவன்தலை
ஒருகாழ் மாலை தான்மலைந் தனனே." (புறம்-291)

என்பதும் அது.

அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத்தானும் - எடுத்துச்சென்ற இருபெருவேந்தர் படையாளர் வரவறியாமல் இரவும் பகலும் பலகாலும் தாம் ஏறி அந் நாட்டைக் காவல் புரிந்தோரைக் கொன்ற கொற்றமும்,

(எ.டு)

"நீணில வேந்தர் நாட்செல் விருப்பத்துத்
தோள்சுமந் திருத்தல் ஆற்று ராள்வினைக்

கொண்டி மாக்கள் உண்டியின் முனிந்து
முனைப்புல மருங்கின் நினைப்பரும் செய்வினை
வென்றியது முடித்தனர் மாதோ
யாங்குள கொல்லினி ஊங்குப்பெறும் செருவே"

என வரும்.

"யாண்டு தலைப்பெயர வேண்டுபுலத்து இறுத்து
முனையெரி பரப்பிய துன்னரும் சீற்றமொடு
மழைதவழ்பு தலைஇய மதின்மரம் முருக்கி
நிரைகளிறு ஒழுகிய நிரைய வெள்ளம்
பரந்தாடு கழங்கழி மன்மருங் கறுப்பக்
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
அழல்கவர் மருங்கின் உருவறக் கெடுத்துத்
தொல்கவின் அழிந்த கண்ணகன் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்துப்
பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதல்
சிவந்த காந்தண் முதல்சிதை மூதில்
புலவுவில் உழவில் புல்லாள் வழங்கும்
புல்லிலை வைப்பில் புலஞ்சிதை யரம்பின்
அறியா மையான் மறந்துதுப்பு எதிர்ந்தநின்
பகைவர் நாடும் கண்டுவந் திசினே
கடலவும் கல்லவும் ஆற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்" (பதிற்றுப்-15)

என்னும் பதிற்றுப்பத்தும் அழிவு கூறிய இடம் அப்பாற் படும்.

மாராயம் பெற்ற நெடுமொழியானும்—வேந்தனால் சிறப் பெய்திய அதனன், தானேயாயினும் பிறரேயாயினும் கூறும் மீக் கூற்றுச் சொல்லும்;

சிறப்பாவன ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதலுமாம். முற்கூறியது படைவேண் டியவாறு செய்க என்றது. இஃது அப்படைக்கு ஒருவனைத்

தலைவனுக்கி அவன் கூறியவே செய்க அப்படை என்று வரை யறை செய்தது.

(எ - டு)

"போர்க்கடல் ஆற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றே—போர்க்கெல்லாம்
தானுதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர்
ஏனுதிப் பட்டத்து இவன்".

இது பிறர் கூறிய நெடுமொழி.

"துடியெறியும் புலைய
வெறிகோல் கொள்ளும் இழிசின
கால மாரியின் அம்பு தைப்பினும்
வயற்கெண்டையின் வேல்பிறழினும்
பொலம்புனை வுடை அண்ணல் யானை
இலங்குவான் மருப்பின் நுதிமெடுத்து ஊன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் புரளும்
தண்ணடை பெறுதல் யாவது படினே
மாசின் மகளிர் மன்றல் நன்றும்
உயர்நிலை உலகத்து நுகர்ப அதனுல்
வம்ப வேந்தன் தானை
இம்பர் நின்றும் காண்டிரோ வரவே." (புறம்-87)

இது தண்ணடை பெறுகின்றது. சிறிது சுவர்க்கம் பெறு தல் நன்று என்று நெடுமொழி கூறியது. போர்க்களம் புக்கு நெடுமொழி கூறலும் ஈண்டு அடக்குக.

பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்—பகைவேந் தரை ஒரு பொருளாக மதியாது படையினைச் செலுத்தின பேராண்மை செய்யும் பகுதியும்;

(எ - டு)

"மெய்ம்மலி மனத்தின் அம்மெதிர் நின்றோள்
அடர்வினைப் பொலிந்த சுடர்விடு பாண்டில்
கையிகந்து அமரும் தையணற் புரவித்
தளையவிழ் கண்ணி இளையோன் சீறின்
விண்ணுயர் நெடுவரை வீழ்புயல் கடுப்பத்
தண்ணறும் கடாஅம் உமிழ்ந்த வெண்கோட்டு
அண்ணல் யானை எறிதல் ஒன்றோ
மெய்ம்மலி உவகையன் அம்மருங்கு வருதல்
கடியமை கள்ளுண் கைவல் காட்சித்
துடியன் உண்கண் நோக்கிச் சிறிய
கொலைமொழி மின்னுச் சிதர்ந் தனையதன்
வேறிரித் திட்டு நகுதலு நகுமே."

இஃது அதிகமானால் சிறப்பெய்திய பெரும்பாக்கனை மதியாது சேரமான் முனைப்படை நின்றானைக் கண்டு அரிசில்கிழார் கூறியது.

"பல்சான் றீரே பல்சான் றீரே
குமரி மகளிர் கூந்தல் புரைய
அமரின் இட்ட வருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான் றீரே
முரசுமுழங்கு தானைநும் அரசும் ஓம்புமின்
ஒளிறேந்து மருப்பின்நும் களிறும் போற்றுமின்
எனைநாட் டங்குநும் போரே அனைநாள்
எறியார் எறிதல் யாவண தெறிந்தோர்
எதிர்சென்று அறிதலும் செல்லான் அதனால்
அறிந்தோர் யாரவன் கண்ணிய பொருளே
பலமென் றிகழ்த லோம்புமின் உதுக்காண்
நிலனளப் பன்ன நில்லாக் குறுநெறி
வண்பரிப் புரவிப் பண்புபா ராட்டி
எல்லிடைப் படர்தந் தோனே கல்லென
வேந்தூர் யானைக் கல்ல
தேந்துவன் போலான்தன் இலங்கிலை வேலே."

(புறம்-301)

இதுவு மது.

வரு விசைப் புனலைக் [stamp]வன் தாங்கிய பெருமையானும்—தன்படை நிலையாற்றுது பெயர்ந்தவழி விசையோடும் வரும் பெருநீரைக் கல்லணை தாங்கினாற்போலத் தன் மேல் வரும் படையினைத் தானே தடுத்த பெருமையும்;

(எ.டு)

"கார்த்தரும் புல்லணற் கண்ணஞ்சாக் காளைதன்
தார்ப்பற்றி ஏர்தரு தோணோக்கித்—தார்ப்பின்னர்
ஞாட்பினுள் யானைக் கணநோக்கி யானைப்பின்
தேர்க்குழா நோக்கித்தன் மாநோக்கிக்—கூர்த்த
கணைவரவு நோக்கித்தன் வேல்நோக்கிப் பின்னைக்கு
இணைவனை நோக்கி நகும்".
(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு-881)

என வரும்.

இது பொன்முடியார் ஆங்கவனைக் கண்டு கூறியது.

"வேந்துடைத் தானை முனைகெட நெரிதலின்
ஏந்துவாள் வலத்தன் ஒருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலின் பெருங்கடற்கு
ஆழி அனையன் மாதோ என்றும்
பாடிச் சென்றோர்க்கு அன்றியும் வாரிப்
புரவிற்கு ஆற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே' (புறம்-330)

என்பதும் அது.

"வருகதில்வல்லே" என்னும் (284) புறப்பாட்டும் அதன் பாற்படும். முன்னர் மாராயம் பெற்றவனே பின் இரண்டு துறையும் நிகழ்த்துவான் என்றுணர்க.

பிண்டம் மேய பெருஞ்சோற்றுநிலையும்—வேந்தன் போர் தலைக்கொண்ட பிற்றைஞான்று தானே போர்குறித்த படையாளரும் தானும் உடனுண்பான் போல்வதோர் முகமன் செய்தற்

குப் பிண்டித்து வைத்த உண்டியைக் கொடுத்தன் மேயின பெருஞ்சோற்று நிலையும்;

(எ.டு)

''இணர்ததை ஞாழல் கரைசெழு பெருந்துறை
மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தல்
பாசடைப் பனிக்கழி துழைஇப் புன்னை
வாலிணர்ப் படுசினை குருகிறை கொள்ளும்
அல்குறு கானல் ஓங்குமணல் அடைகரைத்
தாழடும்பு மலைந்த புணரிவளை ஞால
இலங்குநீர் முத்தமொடு வார்துகிர் எடுக்கும்
தண்கடற் படப்பை மென்பா லனவும்
காந்தளம் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
செங்கோட் டாமான் ஊனொடு காட்டம்
அதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்
குன்றுதலை மணந்த புன்புல வைப்பும்
காலம் அன்றியும் கரும்பறுத்து ஒழியாது
அரிகா லவித்துப் பல்பூ விழவில்
தேம்பாய் மருத முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலில் புகன்ற ஆயம்
முழவிமிழ் மூதூர் விழவுக் காணூஉப் பெயரும்
செழும்கல் வைப்பில் பழனப் பாலும்
ஏனல் உழவர் வரகுமீ திட்ட
காண்மிகு குளவிய வன்புசேர் இருக்கை
மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்
புன்புலம் தழீஇய புறவணி வைப்பும்
பல்பூஞ் செம்மல் காடுபய மாறி
அரக்கத் தன்ன நுண்மணல் கோடுகொண்டு
ஒண்ணுதல் மகளிர் கழலொடு மறுகும்
விண்ணுயர்ந்து ஓங்கிய கடற்றவும் பிறவும்

பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
கடலவும் காட்டவும் அரண்வலியார் நடுங்க
முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினங் கடாஅய் முழங்கு மந்திரத்து
அருந்தெறன் மரபில் கடவுள் பேணியர்
உயர்ந்தோன் ஏந்திய அரும்பெறற் பிண்டம்
கருங்கண் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகிழ் இரும்பலி
எறும்பு மூசா இறும்பூது மரபில்
கருங்கண் காக்கையொடு பருந்திருந்து ஆர
ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழற்கால்
பெருஞ்சமம் ததைந்த செருப்புகன் மறவர்
உருமுநிலன் அதிர்க்கும் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோறு உகுத்தற்கு எறியும்
கடுஞ்சின வேந்தேநின் றழங்கு குரன்முரசே''
(பதிற்றுப் – 30)

என வரும்.

இது பதிற்றுப்பத்து.

துறை யெனவே கள்ளும் பாகும் முதலியனவும் அப்பாற்படும்.

''வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னோர் அன்ன விளையர் இருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டை என் சிறுவனைக்
கால்கழி கட்டிலில் கிடப்பித்
தூவெள் அறுவை போர்ப்பித்து இலதே. (புறம்-289)

''உண்டியின் முந்தாது உடனுண்பான் தண்தேறன்
மண்டி வழங்கி வழீஇயதற்கோ—கொண்டி
மறவர் மறமிக்கு உயிர்நேர்ந்தார் மன்னர்க்கு
உவவிலர் கண்ணோடாது ஓர்ந்து

என்பன கொள்க.

வென்றோர் விளக்கமும் – அங்ஙனம் பிண்டமேய இருபெரு வேந்தருள் ஒருவர் ஒருவர் மிகை கண்டு அஞ்சிக் கருமச் சூழ்ச்சியால் திறைகொடுப்ப அதனை வாங்கினோர்க்கு உளதாகிய விளக்கத்தைக் கூறலும்;

(எ-டு)

"அருஅ யாணர் அகன்கண் செறுவின்
அருவி ஆரம்பல் நெய்தலொடு அரிந்து
செறுவினை மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப்பக டுதிர்த்த மென்செந் நெல்லின்
அம்பண அளவை உறைகுவித் தாங்குக்
கடுந்தேறு உறுகிளை மொசிந்தன துஞ்சும்
செழுங்கூடு கிளைத்த விளந்துணை மகா அரின்
அலந்தனர் பெருமநின் உடற்றி யோரே
ஊரெரி கவர உருத்தெழுந்து உரைஇப்
போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப
மதில்வாய்த் தோன்றல் ஈயாது தம்பழி ஊக்குநர்
குண்டுகண் அகழிய குறுந்தாண் ஞாயில்
ஆரெயில் தோட்டி வௌவினை ஏறொடு
கன்றுடை ஆயம் தரீஇப் புகல் சிறந்து
புலவுவில் விளையர் அங்கை விடுப்ப
மத்துக்கயிறு ஆடா வைகற்பொழுது நினையூஉ
வான்பயம் வாழ்நர் கழுவுடலை மடங்கப்
பதிபா ழாக வேறுபுலம படர்ந்து
விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு அற்றென
அருஞ்சமத்து அருநிலை தாங்கிய புகர் நுதல்
பெருங்களிற் றியானையொடு அருங்கலம் தராஅர்
மெய்பனி கூரா வணங்கெனப் பராவலில்
பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்தி வாழ்கநின் ஊழி
உரவரு மடவரும் அறிவுத்தெரிந்து எண்ணி
அறிந்தனை அருளா யாயின்
யாரிவள் நெடுந்தகை வாழு மோரே." (பதிற்றுப்-71)

என வரும்.

"இருங்கண் யானையோடு அருங்கலம் தெறுத்துப்
பணிந்துகுறை மொழிதல் அல்லது பகைவர்
வணங்கார் ஆதல் யாவதோ மற்றே."

இதுவும் அது.

இவை பதிற்றுப்பத்து.

தோற்றோர் தேய்வும் – அங்ஙனம் திறைகொடுத்தோரது குறைபாடு கூறுதலும்;

(எ-டு)

"வாஅன் மருப்பில் களிற்றியானை நிரை
மாமலையில் கணங்கொண்டவர்
எடுத்தெறிந்த விறல் முரசம்
கார்மழையில் கடிது முழங்கச்
சாந்து புலர்ந்த வியன் மார்பில்
தொடி சுடர்வரும் வலிமுன்கைப்
புண்ணுடை எறுழ்த்தோள் புடையலம் கழங்கால்
பிறக்கடி ஒதுங்காப் பூட்கை ஒள்வாள்
ஒடிவில் எவ்வர் எதிர்நின் றுரைஇ
இடுக திறையே இரவுஎதிர்ந் தோர்க்கென
வம்புடை வலத்தர் உயர்ந்தோர் பரவ
அனையை ஆகன் மாறே பகைவர்
கால்கிளர்ந் தன்ன கதழ்பரிப் புரவிக்
கடும்பரி நெடுந்தேர் மீமிசை நுடங்குகொடி
புலவரைத் தோன்றல் யாவது சினப்போர்
நிலவரை நிறீஇய நல்லிசை
தொலையாக் கற்பநின் தெம்முனை யானே" (பதிற்றுப்-80)

என வரும்.

இது பதிற்றுப்பத்து.

குன்றாச் சிறப்பில் கொற்ற வள்ளையும் – வேந்தனது குறையாத வெற்றிச் சிறப்பினால் பகைவர் நாடழிதற்கு இரங்கித் தோற்றோனை விளங்கக் கூறும் வள்ளைப் பாட்டும்;

வள்ளை, உரற்பாட்டு. கொற்றவள்ளை தோற்ற கொற்றவன் கொடுக்கும் திறை என்று சொல்வாரும் உளர்.

(எ-டு)

"வேரறுகு பம்பிச் சுரைபரந்து வேளைபூத்து
ஊரறிய லாகா கிடத்தனவே—போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
அகையிலைவேல் காய்த்தினார் நாடு."

(முத்தொள்ளாயிரம். புறத்திரட்டு 798 பகைப்புலம் பழித்தல்)

என வரும்.

அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ—அங்ஙனம் வென்றும் தோற்றும் மீண்ட வேந்தர் தம்படையாளர் முன்பு போர்செய்துழிக் கணையும் வேலும் முதலிய படைகளைத் தம் மிடத்தே தடுத்துக்கொண்டு அழிந்தவர்களைத் தாம் சென்றும் பொருள் கொடுத்தும் வினாவியும் தழுவிக்கோடலுடனே முற் கூறியவற்றைத் தொகுத்து;

படைதட் டழிவோர் என்று மாறுக. தழிச்சுதல் தழிஞ்சி யாயிற்று; பொருகணை தழிச்சிய புண்டீர் மார்பின்" என்றாற் போல.

(எ.டு)

"தழிச்சிய வாட்பண்ணோர் தம்இல்லந் தோறும்
பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன் - விழுச்சிறப்பில்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்."

(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு-793-பாசறை)

என வரும்.

"வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு

பருமம் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
இடைவீழ் அந்துகில் இடவயிற் றழீஇ
வாள்தோள் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை அசைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே,"
(நெடுநல்வாடை, 176 - 188)

இதுவும் அது.

கருபெருஞ் சிறப்பின் துறை பதின்மூன்றே - மிகப்பெரும் சிறப்பினையுடையவாகிய துறை பதின்மூன்றும் என்றவாறு.

வென்றோர் விளக்கம் முதலிய மூன்றும் ஒழிந்தனவெல்லாம் இருவர்க்கும் பொதுவாய் வருமென்பது தோன்றக் கழிபெரும் சிறப்பென்றார்.

இனி இயங்குபடையரவம் எனவே இயங்காத வின்ஞாணொலி முதலியனவும் கொள்க.

இத்திணைக்கும் பலபொருள் ஒருங்கு வந்து ஒரு துறைப் படுத்தலும்கொள்க. அவை:- கொற்றவை நிலையும் குடைநாட் கோளும், வாணாட்கோளும், படையெழுச்சி கண்டோர் கூறுவனவும், பகைப்புலத்தார் இகழ்வும், இவைபோல்வன பிறவும் இயங்குபடையரவமாய் அடங்கும்.

நிரைகோடற்கு ஏவிய அரசருள் நிரைகொண்டோர்க்கும் நிரைகொள்ளப்பட்டோர்க்கும் விரைந்து ஏகவேண்டுதலின் குடைநாட்கோளும் வாணாட்கோளும் இன்றியமையாதன அன்மையின் ஈண்டுக் கூறுராயினர். அவை உழிஞைக்குக் கூறுப, அதற்கு இன்றியமையாமையின்,

இனித் துணைவந்த வேந்தரும் தாமும் பொலிவெய்திய 'பாசறைநிலை' கூறலும், அவர் வேற்றுப்புலத்து இருத்தலின் ஆண்டு வாழ்வோர் பூசலிழைத்து இரிந்தோடப் புக்கிருந்த நல்லிசை வஞ்சி முதலியனவும் 'வயங்கலெய்திய பெருமைப்' பாற்படும்.

துணைவேண்டாச் செருவென்றி நாடகவழக்கு; துணை வேண்டுதல் உலகியல்வழக்கு. "நீயே புறவினல்ல லன்றியும் பிறவும்" என்னும் (49) புறப்பாட்டும், வள்ளியோர்ப் படர்ந்து. (47) என்னும் புறப்பாட்டு முதலியனவும் 'துணைவஞ்சி' என்பார்க்கு அவை மேற்செலவின்கண் அடங்காமையிற் பாடாண்டிணை யெனப்படு மென்றுரைக்க. இனி மேற்செல்வான் மீண்டுவந்து பரிசில் தருமென்றல் வேத்தியல் என்றுகலின் பரிசிலர்க்குக் கொடுத்தலும் படைக்கல முதலியவற்றோடு கூறினர். இனிக் கடிமரந்தடிதலும், களிறும் மாவும் துறைப்படிவனவற்றைக் கோறலும், புறஞ் சேரியைச் சுடுதலும் முதலியனவும் அடுத்தூர்ந்தட்ட கொற்றத் தின்பாற்படும். அவை கருவூரிடைச் சேரமான் யானையை யெறிந்தாற் போல்வன. இனிப் புண்பட்டோரை முன்னர்ச் செய்த படைவலங்கூறி அரசராயினும் உழையராயினும் புகழ்வன போல்வனவும் தழிஞ்சிப் பாற்படும். 'இதனை முதுமொழிவஞ்சி' என்பர். ஆண்டுக் கொடுத்தல் முற்கூறிய கொடையாம். இத் தழிஞ்சியை 'அழியுநர் புறக்கொடை அயில்வா ளோச்சாக் — கழிதறுகண்மை, (புற-வெ-மாலை-வஞ்சி-20) யெனின் அது ஒருவன் தாங்கிய பெருமைப் பாற்படு மென்றுணர்க.

இச் சூத்திரத்து ஆன் எல்லாம் இடைச்சொல். இது செவ் வெண் உம்மை எண்ணினை இடையிட்டுக் கொண்டது. இனி ஏனையவற்றிற்கும் ஆன் உருபுகொடுத்து அதற்கேற்பப் பொருள் கூறலும் ஒன்று.

(வி-ரை) இரு பாற்படுவது-வெற்றி தோல்வி ஆகிய இரண்டனுள் யாது கிட்டுமோ என இருவகைப் படுவது.

மூழ்த்து - செறிந்து. இறுத்த - தங்கிய. மிளை - காவல் காடு. ஒருஉப-நீங்குப.

பார்ப் புரவு - உலகைக் காத்தல்.

வினைமாட்சி-போர்த்தொழில், முனை முருங்க- போர் முகம் அழிய, கவர்பூட்டி-கொள்ளையடித்து, கடிதுறை-காவலை உடைய குளம், எல்-விளக்கம். கொற்ற வள்ளை - வேந்தனது சிறப்பினால் பகைவர் நாடு அழிதற்கிரங்கித் தோற்றவனைப் பற்றிப் பாடும் வள்ளைப்பாட்டு.

வயங்கல் - விளக்கம்.

பாத்தியுடை - பகுதியாகப் பொருந்திய. கலிமான்-செருக்கிய குதிரை.

சிறூஅ அர் முதலியன விளிகளாய் வருவன. விளரி - ஒரு வகைப்பண். ஒரு காழ் மாலை - ஒற்றை வட மாலை.

கொண்டி மாக்கள் - கொள்ளை கொள்ளும் மாக்கள். தலைப் பெயர - கழியும் அளவு. வேண்டு புலம் - வேண்டிய பகைவரது புலம். துன்னரும் - நெருங்குதற்கரிய. தலைஇய - தங்கும். நிரை - வரிசை, நிரயம் - நரகம், குருஉ - நிறம். கால் - காற்று. பிசிர - சிதைய, வேலை - வேலைக்கொடி. கலித்து - தழைத்து, இவர்பு - ஏறி, புல்லிலை - பனையோலை, நனந்தலை - அகன்ற.

மாராயம் - உவகை என்பர் இளம்பூரணர்.

பாண்டில் - தேர்.

பல் சான்றீரே - வீரர்களே. அறியார் - தன்னையறியாதார் உதுக்காண் - இதனைப்பார். எல்லிடை - இரவு நேரத்தில். கல் சிறை - கல்லணை. ஒருவன் தாங்கிய பெருமையை ஐயனாரிதனார் ஒரு தனி நிலை என்பர்.

கார்த்தரும் - கருமை நிறம் பொருந்திய. ஞாட்பினுள் - போரில்.

ஆழி - கரை, புரவு- இறையிலி நிலம். போர்தலைக் கொண்ட- இன்ன நாளில் போர் தொடங்குவம் என உறுதிப் படுத்திக்

கொண்ட, பிண்டித் துவைத்த – தொகுத்து வைத்திருக்கும். பெருஞ்சோற்றுநிலை என்பதற்கு இவர் கூறும் உரையே திட்பமும் நுட்பமும் உடையது. இளம்பூரணரும் ஐயனாரிதனரும் தரும் விளக்கங்கள் நிறைவும் உடையன வல்ல.

இணர் – பூங்கொத்து, அடைகரை – மக்கள் சென்று தங்குதற் குரிய சோலை. புணரி – கடல். வளை – சங்கு. ஞரல - ஒலிக்க. துகிர் – பவளம், நியமம் – கடைத்தெரு. பிழி நொடை – வடித்த கள். வைப்பு – நிலம். பதப்பர் – வைக்கோல்புரி. பரிய – கரைய. ஆயம் – கூட்டம். இமிழ்தல் – முங்குதல். வைப்பு – ஊர். ஏனல் – தினை. குளவி – காட்டு மல்லிகை. நுவணை – தினைமாவு. பணை – முரசு. பிண்டம் – பலி. மூசா – மொய்க்காத. பூட்கை – மேற்கோள். சமம் – போர்.

பாகு – வெல்லப் பாகு. செச்சை – ஆட்டுக்கிடாய். மண்டை– கள்ளுண்ணும் வட்டில். கால்கழி கட்டில் – இறந்தவர்களை எடுத் துச் செல்லும் பாடை. அரசன் தந்த கள், என் சிறுவனை இயல் பாக இறக்கச்செய்யாது போர் செய்து இறக்கச் செய்தது என்பதாம்.

முந்தாது – முன் உண்ணாது. கொண்டிமறவர் – உயிரைக் கொள்ளை கொள்ளும் வீரர். இவ்விரு பாடலும் அரசர் வீரர்க்குக் கள் அளிப்பதற்கு எடுத்துக் காட்டாம்.

மிகை கண்டு – வலிமை கண்டு. அருஅ – நீங்காத. யாணர் – புது வருவாய். வெக்கை – நெற்களன். பகுஉப்பகடு – பருத்த எருமை. அம்பணம்-மரக்கால். உறை–நெல் குவியல். மகாஅர்– இளஞ்சிறுஅர் (குழந்தைகள்). அலந்தனர் – வருந்தப்பெற்றனர். உடற்றியோர் - மாறுபட்டோர்; பகைவர். மாதிரம் – திசை. ஊக்குநர்–பகைவர். வெளவுதல்–கவர்தல். பராவல்–போற்றுதல். பாசம் – பேய். உரவர் – அறிவுடையோர்.

தெறுத்து – கொடுத்து வால் – வெண்மை. எறுழ்த்தோள்– வலிமிக்க தோள். பூட்கை – மேற்கோள். ஓடிவில் – வணங்காத. தெவ்வர் – பகைவர். புரவு – திறையாகச் செலுத்தும் பொருள். கதழ் – சினம்.

தோற்ற கொற்றவன் கொடுக்கும் திறையைக் கொற்ற வள்ளை என்பர் இளம்பூரணர். நச்சினார்க் கினியர் ஐயனாரிதனார் உரையை தழுவர். "மன்னவன் புகழ்கிளந்து ஒன்னார் நாடு அழிபிரங்கின்று" என்பது அவர்கூறும் இலக்கணம் ஆகும்.

பம்பி – பரந்து. முசிறியார்கோமான் – சேரன். அகை – ஒளி. காய்த்தினார் – கொள்ளப்பட்டார்.

படைதட்டு – படைகளைத் தடுத்துக்கொண்டு. தழிஞ்சி – தழுவுதல். இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் படைதட்டு அழிவோர் என மாற்றி இயைத்துக் கொண்டு பொருள் கூறி யுள்ளனர். அழிவோர்–உளன் அழிந்தோர் என உரை காண்பர் இளம்பூரணர். ஐயனாரிதனார் "அழிகுநர் புறக்கொடை அயில் வாள் ஓச்சாக் கழிதறுகண்மை காதலித் துரைத்தன்று" என இதன் இலக்கணம் கூறுவர். இதனை இந்நூற்பாவின் இறுதியில் அது ஒருவன் தாங்கிய பெருமையின் பாற்படும் என இவர் மறுப்பர்.

தழிச்சிய – தழுவிய. புல்லணலார் – குறுந்தாடியுடையர்.

நோன்காழ் – வலியகாம்பு. கலிமா – காற்றுப் போலும் செலவினை உடைய குதிரை. சுவல் – தோள். யாத்த – கட்டிய. தவ் – ஒலிக்குறிப்பு. முரணிய – மாறுபட்ட.

இருவர்க்கும்–மண்ணசையால் மேற்சென்றோர்க்கும், அதனைக் காப்போர்க்கும். வில் நாண் ஒலி – வில்லினது நாண் ஒலி.

இயங்கு படையரவத்துள்ளும் வயங்கல் எய்திய பெருமைக் கண்ணும் அடங்குவனவாக இவர் கூறிய துறைகள் பலவும் ஐயனாரிதனார் தம் நூலில் இத்திணைக்குரிய துறைகளாக வகுத்துக் கூறியனவாம்.

போரில் துணை வேண்டாது செல்வர்என்பது புனைந்துரையே ஆகும். துணையொடு கூடச்சேறலே உண்மை நிலை ஆகும்.

'நீயே புரவின் அல்லல், வள்ளியோர் படர்ந்து எனவரும் புறப்பாடல்களைத் துணைவஞ்சி என்பார் இளம்பூரணர்.

புறநானூற்று ஆசிரியரும் இக்கருத்தினரே. துணைவஞ்சி என்பது மண் நசை காரணமாக மேற் செல்லுவோர்க்குத் துணையாக செல்வார் செய்யும் போர்த் தொழில் என நச்சினார்க்கினியர் கருதுவர். ஆதலின் இப்பாடல்கள் அத்துறையன்று என மறுக் கின்றார். ஆனால் இளம்பூரணரும், புறநானூற்றுப் பழைய உரையாசிரியரும் பிறரை வெல்லவாவது, கொல்லவாவது துணிந்து நிற்கின்றான் ஒருவனை, ஒருவனிடத்துச் சில அறிவுரை களைப் பகர்ந்து அச்செயல்களைத் தடுத்துச் சந்து செய்விப்பது துணைவஞ்சி எனக் கொண்டு இப்பாடல்களை அத்துறைப் படுத்தி யுள்ளனர்.

கடிமரம் - காவல் மரம். படை வலம் - படையின் வெற்றி.

ஐயனாரிதனார் தொல்மரபின் வாட்குடியின் முன்னோனது நிலைகிளந்தன்று என முதுமொழி வஞ்சிக்கு இலக்கணம் கூறி அவ்வாறு வந்த முன்னோர்க்குத் தண்ணடை நல்கல் தகும் என அதன் வெண்பாவில் கூறுகின்றார். அதனை உளங்கொண்டே நச்சினார்க்கினியர் ஆண்டுக் கொடுத்தல் முற்கூறிய கொடையாம் என்றனர். (8)

உழிஞையின் பொது விலக்கணம்

64. [1]உழிஞை தானே மருதத்துப் புறனே.

இஃது உழிஞைத்திணை அகத்திணையுள் மருதத்திற்குப் புறனா மென்கின்றது.

(இ - ள்) உழிஞை தானே—உழிஞை யென்று கூறப்பட்ட புறத்திணை; மருதத்துப் புறனே—மருதமென்று கூறப்பட்ட அகத் திணைக்குப் புறனும் என்றவாறு.

இருபெருவேந்தர் தம்முண் மாறுகொண்டவழி எதிர் செலற்கு ஆற்றாது போய் மதிலகத்து இருந்த வேந்தன் மதில் பெரும்

1. இச்சூத்திரத்தையும், அடுத்த சூத்திரத்தையும் ஒரே சூத்திர மாகக் கொள்வர் இளம்பூரணர்.

பான்மையும் மருதத்திடத்தது ஆதலானும், அம்மதிலை முற்றுவோனும் அந்நிலத்திருத்தலானும், ஒருவன் வாயில் வேண்டத் திறவாது அடைத்திருந்த ஒப்புமையானும், உள்ளிருந்தவனும் புறப்பட விரும்புதலானும், மருதம்போல் இதற்கும் பெரும்பொழுது வரவின்மையானும் சிறுபொழுதினும் விடியற்காலமே போர் செய்தற்குக் காலமாதலானும் உழிஞை மருதத்திற்குப் புறனாயிற்று.

மருதநிலத்து மதிலாதல் "அகநாடு புக்கவ ரருப்பம் வௌவி" யெனப் பாட்டில் (மதுரைக்காஞ்சி-149) கூறியவாற்றானும், 1"பிணங்குகதிர் கழனி நாப்ப ணேமுற் — றுணங்குகல னாழியிற் தோன்று மோரெயின் மன்னன்" (புறம்-338) என்றதனானும் "கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார், நிலைக் கெளிதா நீர தரண்" (திருக்குறள்–அரண்-5) என்றதனானும் உணர்க.

மற்று எதிர்சென்றானை வஞ்சிவேந்தன் என்னுமெனின், அஃது இருவரும் தத்தம் எல்லைக்கண் எதிர்சென்று இறுப்பரென்றலின் வஞ்சியாகாதாயிற்று.

(வி–ரை) அருப்பம் – அரண், கழனி நடுவண் இருக்கும் மதில் கடல் நடுவண் இருக்கும் கப்பலைப் போலத் தோன்றும் என்பது கருத்து. கூழ் – உணவு.

எதிர் சென்று இறுப்பர் - எதிர் சென்று தங்குவர். (9)

அதன் சிறப்பிலக்கணம்

65 முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற் றாகும் என்ப.

இது மேற்கூறிய உழிஞைத்திணையது பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

(இ - ள்) முழுமுதல் அரணம் — வேற்றுவேந்தன் குலத்துக் கெல்லாம் எஞ்சாது முதலாய் வருகின்ற முழு அரணை, முற்றலும் கோடலும்—சென்ற வேந்தன் வளைத்தலும் இருந்த வேந்தன்

கைக்கொண்டு காத்தலுமாகிய; அனைநெறி மரபிற்று ஆகும் என்ப—இரண்டு வழியாகிய இலக்கணத்தை உடைத்து அவ் வுழிஞைத்திணை என்று கூறுவர் புலவர் என்றவாறு.

முழு அரணாவது, மலையும் காடும் நீரு மல்லாத அகநாட்டுள் செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்துத், தோட்டி முள் முதலியன பதித்த காவற்காடு புறஞ்சூழ்ந்து அதனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து, யவனர் இயற்றிய பல பொறிகளும் ஏனைய பொறிகளும் பதண மும் ஏப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து, எழுவுஞ் சீப்பு முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயில் கோபுரமும் பிறவெந்தி ரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாம்.

இனி மலையரணும் நிலவரணுஞ் சென்று சூழ்ந்து நேர்த லில்லா ஆரதர் அமைந்தனவும் இடத்தியற்றிய மதில்போல அடிச் சிலம்பின் அரணமைந்தனவும் மீதிருந்து கணை சொரியும் இடமும் பிறவெந்திரங்களும். அமைந்தனவாம் இனிக் காட்டரணும் நீரரணும் அவ்வாறே வேண்டுவன யாவும் அமைந்தனவாம். இங்ஙனம் அடைத்திருத்தலும் அரணைச் சூழ்ந்து அழித்தலும் கலியூழிதோறும் பிறந்த சிறப்பில்லா அரசியலாதலின் இவை வஞ்சமுடைத்தாயிற்று.

சிறப்புடை அரசியலாவன, மடிந்த உள்ளத்தோனையும் மகப்பெறுதோனையும் மயிர்குலைந்தோனையும் அடிபிறக்கிட்டோ னையும் பெண்பெயரோனையும் படையிழந்தோனையும் ஒத்தபடை எடாதோனையும் பிறவும் இத்தன்மையுடையோரையும் கொல் லாது விடுதலும் கூறிப் பொருதலும் முதலியனவாம்.

இனி 'ஆகும்' என்றதனான் எதிர்சென்ற வேந்தன் பொருது தோற்றுச் சென்று அடைத்திருத்தலும் உழிஞையாம். மற்றை வேந்தன் வளையாது மீளின் அவனடைத்தது உழிஞையாகாது என்றுணர்க.

(வி-ரை) இடங்கர்-முதலை, பதணம்-மதிலில் உயர்ந்த மேடை. ஏப்புழை ஞாயில் – அம்பு எய்து மறையும் சிறுமதில், எழு–கதவின்

பின்புறம் இடும் கணைய மரம். சீப்பு – தாழ். ஆர் அதர்–கடத்தற் கரிய வழி. அடிச்சிலம்பின் அரண் - பக்கம் சூழ்ந்த மலையரண்.

மடிந்தவுள்ளத்தோன் – சோம்பலையுடையவன், அடிபிறக் கிட்டோன் - புறமுதுகு காட்டியவன். சிறப்புடைய அரசியலாக நச்சினார்க்கினியர் கூறுவன அக்கால அரசியலறத்தையும் ஆண்மையையும் இனிது விளக்குவனவாம்.

முற்றலும் கோடலும் – முற்றுதலும் (வளைதலும்) அழித்தலும் என உரைகாண்பர் இளம்பூரணர். இவர் கோறலும் எனப்பாடங் கொண்டார் போலும். நச்சினார்க்கினியர் முற்றலைப் புறத்தார் செயலாகவும் கோடலை அகத்தார் செயலாகவும் கூறுகின்றார். பிற் கூறப்படும் துறைகளில் சில அகத்தார் செயலுக்குரிய வாயிருப்பினும், ஆனிரைகளைக் காத்துக் கோடலும் மீட்டுக் கோடலும் வெட்சியானுற்போல இங்குக் கூறப்படும் புறத்தார் செயலும் அகத்தார் செயலும் உழிஞையேயாம் என்பது அறியத் தகும். பின் வந்த பன்னிருபடல ஆசிரியரையுள்ளிட்டோர் புறத்தார் செயலை உழிஞை என்றும், அகத்தார் செயலை நொச்சி யென்றும் கூறுவர். (10)

அது எண் துறைகளையுடைய தெனல்

66. அதுவே தானும் இருநால் வகைத்தே.

இது முற்கூறிய முற்றலும் கோடலும் ஒருவன் தொழிலன்று என்பதூஉம் முற்கூறியபோல ஒருதுறை இருவர்க்கும் உரியவா காது, ஒருவர்க்கு நான்குநான்காக எட்டாமென்பதூஉம் கூறு கின்றது.

(இ - ள்) அதுவே தானும்—அவ்வுழிஞைத் துறைதானும்; இருநால் வகைத்து –மதில்முற்றிய வேந்தன் கூறு நான்கும் அகத்தோன்கூறு நான்குமென எட்டு வகைத்தது என்றவாறு.

அது மேற்கூறுப. (11)

உழிஞைக்குரிய எண் வகைத்துறைகள்

67\. கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்
[1]தொல்லெயிற் கிவர்தலும் தோலின் பெருக்கமும்
அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும் திறப்பட
லொருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்
வருபகை பேணார் ஆரெயில் உளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே.

இது முற்கூறிய நாலிருதுறைக்கும் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

(இ - ள்.) கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்—பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயும் கொண்டான் போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றியும்;

தன்னை இகழ்ந்தோரையுந் தான் இகழ்ந்தோரையும் கொள்ளாரென்ப.

(எ - டு)

"மாற்றுப் புலந்தோறும் மண்டிலமாக்கள் செல
வேற்றுப் புலவேந்தர் வேல்வேந்தர்க்கு - ஏற்ற
படையொலியில் பாழொலி பல்கின்றால் ஒன்னார்
உடையன தாம்பெற் றுவந்து."

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-791)

என வரும் "கழிந்தது பொழிந்தென" என்னும் (203) புறப்பாட்டினுள், "ஒன்னார் ஆரெயில் அவர்கட்டாகவு நுமது

1. தொல் எயிறறு இவர்தலும்—தோலது பெருக்கமும் எனவும்
2. திறம்பட எனவும் பாடல் கொள்வர் இளம்பூரணர்,

எனப் பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்" என்பதும் அது. "ஆனுவிகை யடுபோர்" என்னும் (42) புறப்பாட்டும் அது.

இராமன் இலங்கை கொள்வதன்முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது.

உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்—அவ்வாறு குறித்த குறிப்பினை முடிக்கின்ற வேந்தனது சிறப்பினை அவன் படைத்தலைவன் முதலியோரும் வேற்று வேந்தன்பால் தூது செல்வோரும் எடுத்துரைத்தலும்;

(எ - டு)

"மழுவான் மிளைபோய் மதிலான் அகழ்தூர்ந்து
எழுவாளோன் ஏற்றுண்டது எல்லாம் – இழுமென
மட்டவிழ் கண்ணி மறவேந்தன் சீற்றத்தீ
விட்டெரிய விட்ட மிகை."
(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு–எயில் காத்தல்)

என வரும்.

"மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவன்எனத்
தான்முன்னிய துறைபோகலின்"
(பத்துப்–பட்டினப்–271–273)

என்பதும் அது, மாற்றார் மதிலும் அகழும் சுட்டிக் கூறலின்.

"அடுநை யாயினும் விடுநை யாயினும்
நீயளந் தறிதிநின் புரைமை வார்கோல்
செறியரிச் சிலம்பில் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கில் தெற்றி யாடும்
தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் இலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்

கடிமரந் தடியும் ஓசை தன்னூர்
நெடுமதில் வரைப்பில் கடிமனை இயம்ப
ஆங்கினி திருந்த வேந்தனோடு ஈங்குநின்
சிலைத்தார் முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தக உடைத்தே." (புறம்-36)

இது புறத்துழிஞையோன்கண் தூதன் அவன்சிறப்பு எடுத்துரைத்தது.

"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே
ஏணியும் சீப்பு மாற்றி
மாண்வினை யானையும் மணிகளைந் தனவே." (புறம்-305)

இது தூதருரை கேட்ட அகத்துழிஞையோன் திறம் கண்டோர் கூறியது.

இவை புறம்.

தொல் எயிற்கு இவர்தலும்—ஒருகாலத்தும் அழிவில்லாத மதிலை இற்றைப்பகலுள் அழித்துமென்று கூறி அஃது அழித்தற்கு விருப்பம் செய்தலும்;

(எ-டு)

"இற்றைப் பகலுள் எயிலகம் புக்கன்றிப்
பொற்றாரான் போனகங்கைக் கொள்ளானால் — எற்றுங்
கொல்
ஆறாத வெம்பசித்தீ யாற உயிர்பருகி
மாறா மறலி வயிறு"

எனவரும்.

"மறனுடை மறவர்க்கு ஏறவிடன் இன்றிப்
நெய்யோடு ஐயவி யப்பிஎவ் வாயும்

எந்திரப் பறவை இயற்றின நிறீஇக்
கல்லும் கவணும் கடுவிசைப் பொறியும்
வில்லும் கணையும் பலபடப் பரப்பிப்
பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும்
என்றிவை பலவும் சென்றுசென்று எறியும்
முந்தை மகளிரை இயற்றிப் பின்றை
எய்பெரும் பகழி வாயில் தூக்கிச்
சுட்டல் போயின் றுயினும் வட்டத்
தீப்பாய் மகளிர் திகழ்நலம் பேர
நோக்குநர் நோக்குநர் நொந்துகை விதிர்க்கும்
தாக்கருந் தானை இரும்பொறை
பூக்கோள் தண்ணுமை கேட்டொறும் கலுழ்ந்தே."

இப் பொன்முடியார் பாட்டும் அது. இதனாற் பூச்சூடுதல் பெற்றாம்.

தோலின் பெருக்கமும்—அங்ஙனம் மதில்மேற் சென்றுழி மதிலகத்தோர் அம்புமாரி விலக்குதற்குக் கிடுகும் கேடகமும் மிடையக் கொண்டுசேறலும்;

(எ-டு)

"இருசுடர் இயங்காப் பெருமூது இலங்கை
நெடுந்தோள் இராமன் கடந்த ஞான்றை
எண்கிடை மிடைந்த பைங்கட் சேனையில்
பச்சை போர்த்த பல்புறத் தண்டை
எச்சார் மருங்கினும் எயிற்புறத்து இறுத்தலின்
கடல்சூழ் அரணம் போன்றது
உடல்சின வேந்தன் முற்றிய வூரே"
(ஆசிரியமாலை, புறத்திரட்டு, 852-எயில் கோடல்)

என வரும்.

"நின்ற புகழ் ஒழிய நில்லா உயிரோம்பி
இன்றுநாம் வைகல் இழிவாகும்—வென்றெளிரும்

பாண்டின் நிரைதோற் பணியார் பகையரணம்
வேண்டில் எளிதென்றான் வேந்து.''
(புற-வெ-மாலை உழிஞை-21)

இதுவும் அது.

அரணத்தோர் தத்தம் பதணத்து நிற்றலில் தோல் கூறிற்றிலர்.

இந்நான்கும் முற்றுவோர்க்கே உரியவெனக் கொள்க.

அகத்தோன் செல்வமும் - அகத்து உழிஞையோன் குறைவில்லாத பெருஞ்செல்வம் கூறுதலும்;

அவை படை குடி கூழ் அமைச்சு நட்பும் நீர்நிலையும் ஏமப் பொருண் மேம்படு பண்டங்களும் முதலியனவாம்.

(எ.டு)

''பொருசினம் ஆறாப் புலிப்போத்து உறையும்
அருவரை கண்டார்போ லஞ்சி - ஒருவரும்
செல்லா மதிலகத்து வீற்றிருந்தான் தேர்வேந்தன்
எல்லார்க்கும் எல்லாம் கொடுத்து.''
(தகடூர்யாத்திரை, புறத்திரட்டு-857-எயில் காத்தல்)

''அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவர் உழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடும் குன்றம் தேன்சொரி யும்மே
வான்கண் அற்றவன் மலையே வானத்து
மீன்கண் அற்றவன் சுனையே ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்

புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யான்அறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே" (புறம்-109)

என்னும் புறப்பாட்டு அது.

அன்றி முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும்—மாறு பட்ட புறத்தோனை அகத்தோன் தன் செல்வத்தான் அன்றிப் போர்த்தொழிலான் வருத்திய கூறலும்;

(எ-டு)

"கலையெனப் பாய்ந்த மாவு மலைஎன
மயங்கமர் உழந்த யானையும் இயம்படச்
சிலையலைத் துய்ந்த வயவரும் என்றிவை
பலபுறம் கண்டோர் முன்னாள் இனியே
அமர்புறம் கண்ட பசும்புண் வேந்தே
மாக்களிறு உதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு நுங்கிற்று ஊற்றயல் கிடப்பக்
களையாக் கழற்காற் கருங்கண் ஆடவர்
உருகெழு வெகுளியர் செறுத்தனர் ஆர்ப்ப
இளைபோ யின்று நாளை நாமே
உருமிசை கொண்ட மயிர்க்கண்
இருமுரசு இரங்க வூர்கொள் குவமே."
(தகடூர் யாத்திரை)

என வரும். இது சேரமான், பொன்முடியாரையும் அரிசில் கிழாரையும் நோக்கித் தன்படைபட்ட தன்மைகூறக் கேட்டோற்கு அவர் கூறியது.

திறப்பட ஒரு தான் மண்டிய குறுமையும்—அகத்திருந்தோன் தன்னரணழிவு தோன்றியவழிப் புறத்துப் போர்செய்யுஞ் சிறுமையும்;

(எ-டு)

“வருகதில் வல்லே வருகதில் வல்என
வேந்துவிடு விழுத்தூ தாங்காங்கு இசைப்ப
நூலரி மாலை சூடிக் காலின்
தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமம் தாங்கி முன்னின்று எறிந்த
ஒருகை இரும்பிணத்து எயிறு மிறையாகத்
திரிந்த வாய்வாள் திருத்தாத்
தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே. (புறம்-284)

என வரும்.

உடன்றோர் வருபகை பேணார் ஆர் எயில் உளப்பட—புறத்தோன் அகத்தோன்மேல் வந்துழி அவன் பகையினைப் போற்றாது அகத்தோன் இகழ்ந்திருத்தற்கு அமைந்த மதிலரண் கூறுதலகப்பட;

(எ.டு)

“மொய்வேல் கையர் முரண்சிறந்து ஒய்யென
வையகம் அறிய வலிதலைக் கொண்டது
எவ்வழி அன்றி வியன்றோர் மார்ப
எவ்வழி யாயினும் அவ்வழித் தோன்றித்
திண்கூர் எஃகின் வயவர்க் காணில்
புண்கூர் மெய்யின் உராஅய்ப் பகைவர்
பைந்தலை யுதைத்த மைந்துமலி தடக்கை
ஆண்டகை மறவர் மலிந்துபிறர்
தீண்டல் தகாது வெந்துறை அரணே.”
(தகடூர் யாத்திரை)

இஃது அகத்தோன் செல்வம் போற்றுதற்கு ஏதுவாகிய முழுவரண் கூறுதலின் செல்வத்துள் அடங்காதாயிற்று. இது பொன்முடியார் தகடூரின் தன்மை கூறியது.

சொல்லப்பட்ட நாலிருவகைத்தே — மேலிருநால்வகைத்து என்று சொல்லப்பட்ட இருநான்கு பகுதியதாம் உழிஞைத்திணை என்றவாறு.

முற்கூறிய தொகையேயன்றி ஈண்டும் தொகைகூறினர், அந்நாலிரண்டுமேயன்றி அவைபோல்வனவும் நாலிரண்டு துறை தோன்று மென்றற்கு. அவை புறத்துவேந்தன் தன் துணை யாகிய அரசனையாயினும் தன் படைத்தலைவரையாயினும் ஏவி அகத்து வேந்தற்குத் துணையாகிய அரசரது முழுமுதலரண் முற்றலும் அவன்முன் அதனைக் காவல் கோடலும் நிகழ்ந்தவிடத் தும் இவ் விருநான்கு வகையும் இருவர்க்கும் உளவாதலாம்.

உதாரணம் முற்காட்டியவே. வேறுவேறு காட்டினும் அமையும். இத்திணைக்குப் 'படையியங்கரவ' (புறத்திணை - 8) முதலியனவும் அதிகாரத்தால் கொள்க. அது,

> "இலங்குதொடி மருப்பில் கடாஅம் வார்ந்து
> நிலம்புடையூஉ எழுதரும் வலம்படு குஞ்சரம்
> எரியவிழ்ந் தன்ன விரியுளை சூட்டிக்
> கால்கிளர்ந் தன்ன கடுஞ்செலல் இவுளி
> கோன்முனைக் கொடியினம் விரவா வல்லோடு
> ஊன்வினை கடுக்கும் தோன்றல பெரிதெழுந்து
> அருவியின் ஒலிக்கும் வரிபுனை நெடுந்தேர்
> கண்வேட் டனவே முரசம் கண்ணுற்றுக்
> கதத்தெழு மாதிரம் கல்லென ஒலிப்பக்
> கறங்கிசை வயிரொடு வலம்புரி ஆர்ப்ப
> நெடுமதில் நிரைஞாயிற்
> கடிமிளைக் குண்டு கிடங்கின்
> மீப்புடை ஆரரண் காப்புடைத் தேஎ
> நெஞ்சுபுகல் இழிந்து நிலைதளர் பொரீஇ
> ஒல்லா மன்னர் நடுங்க
> நல்ல மன்றஇவண் வீங்கிய செலவே." (பதிற்றுப்பத்து)

என வரும்.

இனித் தேவர்க்குரியவாக உழிஞையிற்றுறைகள் பலரும் கூறுவராலெனின், அவை உலகியலாகிய அரசியலாய் எஞ்ஞான் றும் நிகழ்வின்றி ஒருகால் ஒருவர் வேண்டியவாறு செய்வன வாகலின் தமிழ் கூறு 'நல்லுலகத்தனபனம்பாரனார் பாயிரம் அல்லவென மறுக்க. இனி முரசுழிஞை வேண்டுவார் உளரெனின் (ஐயனாரிதனார் (பு. வெ. மா. உழிஞை-4) முரசவஞ்சியும் கோடல் வேண்டுமென மறுக்க.

இனி ஆரெயிலுழிஞை (பு. வெ. மா. உழிஞை-11) முழு முதலரணம் (தொல்-பொருள்-65) என்றதன்கண் அடங்கும்.

இனி இவற்றின் விகற்பிப்பன வெல்லாம் அத் துறைப்பாற் படுத்திக்கொள்க.

(வி-ரை) கொள்ளார் - தன்னை இறை எனக்கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும் என உரைப்பர் இளம்பூரணர்.

படையொலியின் - படையொலியினும். பல் கின்று-பரந்தது. ஒன்னாருடைய - பகைவர்க்குரியவாய பொருள்கள். அவற்றைப் பரிசாகப் பெற்றமையால் பாணர் ஒலி படையொலியினும் மிகுவதாயிற்று.

அகத்தரசனை அழித்தது கூறலும் இத்துறையாம் என்பர் இளம்பூரணர். மழு - கோடரி. மிளை - காவற்காடு.

அடுநை - கொல்வாய், விடுநை - கொல்லாது ஒழிவாய், புரைமை - உயர்ச்சி, செறியரிச் சிலம்பு - செறிந்த உள்ளிடு உடைய சிலம்பு, நவியம் - கோடாலி. வீ - புதுமலர். இயம்ப - ஒலிப்ப, சிலைத்தார் - வில் போன்ற மாலை. கறங்க - ஒலிக்க.

உயவல் - வருத்தம். பயலை - இளமை. எல்லி - இரவு. புக்கு - புகுந்து.

போனகம் - உணவு. மறலி - கூற்று (இயமன்). ஐயவி - வெண்சிறுகடுகு. எந்திரப்பறவை - பறவை வடிவில் அமைக்கப்

பட்ட பொறி. பூக்கோள் - பூவினைக் கொள்ளும். எண்கு - கரடி. தண்டை - படைவகுப்பு. பாண்டில் நிரைதோல் - கண்ணடி நிரைக்கப்பட்ட தோல்படை.

ஏமப் பொருள் - இன்புறுதற்கு ஏதுவாய பொருள்.

புலிப் போத்து - ஆண்புலி.

நனிகொள் - பெருமை பொருந்திய; மூவிரும் - சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தரும்; வெதிர்-மூங்கில்; ஊழ்க்கும் - முதிர்ந்து வளைந்திருக்கும். சுகிர்புரி - வடித்து முறுக்கப்பட்ட.

கலை - குரங்கு; மூக்கறு நுங்கின்-கொம்பினின்றும் அறுபட்ட பனைநுங்கின் காய்போல. தூற்று - சிதறி. திறப்பட ஒருதான் மண்டிய குறுமை - வலிபட ஒருதானாகி நின்ற குற்றுழிஞையும் என விளக்கம் காண்பர் இளம் பூரணர். நூலறிமாலை - நூலை அரிந்து கட்டிய மாலை. காலின் - காற்றைப் போல. ஒருகை இரும்பிணத்தெயிறு - இறந்த யானையின் கொம்பு. மிறையாக - வளைவாக. திருத்தா - திருத்தி.

ஒய்யென - விரைய.

பதினெட்டு, இருபத்தொன்பது என்பார் மதம் விலக்கியமை தோன்றப் பெயர்த்தும் தொகை கூறினர். இது கூறியது கூறல் அன்று என்பர் இளம்பூரணர். இலங்குதொடி - விளங்குகின்ற வைரம்; இது யானையின் மருப்பிற்கு இடுவதாம். இவுளி-குதிரை.

தேவர்க்குரியவாக உழிஞையில் கூறப்படும் துறைகள்: கந்தழி, முற்றுழிஞை, காந்தள். இவ்வாறு கூறுவார் ஐயனரிதனர். இம் மூன்று துறைகளிலும் திருமால், சிவபெருமான், முருகன் ஆகியோரின் வீரச்செயல்கள் கூறப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் ஏதோ ஒரு அமையத்து நிகழ்ந்தனவே அன்றி உலகியல் போல தொடர்ந்து நிகழ்வன அல்ல ஆதலின் இவற்றை ஈண்டுக் கூற வேண்டுவதில்லை என நச்சினார்க்கினியர் கூறுவர். முரசுழிஞை, ஆரெயில் உழிஞை என்பனவும் ஐயனரிதனர் உழிஞையில் கூறும் துறைகளாம். (12)

உழிஞை அரசர் இருவர்க்கும் உரிய துறைகள்

68. குடையும் வாளு நாள்கோள் அன்றி
மடையமை யேணி மிசை மயக்கமுங் கடைஇச்
சுற்றம ரொழிய வென்று கைக்கொண்டு
முற்றிய முதிர்வு மன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியு மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்
நீர்ச்செரு வீழ்ந்த பாசியு மதாஅன்
றூர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்
[1]அகமிசைக் கிவர்ந்தோன் பக்கமும்
இகன் மதிற்
குடுமி கொண்ட மண்ணுமங் கலமும்
வென்ற வாளின் மண்ணோ டொன்றத்
தொகை நிலையென்னுந் துறையொடு
தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப.

இஃது எய்தாத தெய்துவித்தது; உழிஞைத்திணையுள் இரு பெரு வேந்தர்க்கும் ஒன்றாய்ச் சென்று உரியவான துறை இதற்கு முன்னர்க் கூறாமையின்.

(இ-ள்) குடையும் வாளும் நாள்கோள் அன்றி—தன் ஆக்கங்கருதிக் குடிபுறங்காத்து ஓம்பற்கெடுத்த குடைநாட் கொள்ளுதலும் அன்றிப் பிறன்கேடு கருதி வாணாட் கொள்ளுதலும் அன்றி;

புறத்தோன் புதிதாக அகத்தே புகுதற்கு நாள்கொள்ளு மென்க; தன்நாட்டினின்றும் புறப்படுதற்கு நாட்கோடல் உழிஞையெனப் படாதாகலின். அகத்தோனும் முற்று விடல்

1. மதில் மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும் எனப்பாடங் கொள்வர் இளம்பூரணர்.

வேண்டி மற்றொரு வேந்தன் வந்துழித் தானும் புறத்துப் போதருதற்கு நாட்கொள்ளும்.

நாள்கொளலாவது நாளும் ஓரையும் தனக்கேற்பக்கொண்டு செல்வுழி அக்காலத்திற்கு ஓர் இடையூறு தோன்றியவழித் தனக்கு இன்றியமையாதனவற்றை அத்திசை நோக்கி அக் காலத்தே முன்ன செல்லவிடுதல்;

(எ.டு)

"பகல்எறிப்பது என்கொலோ பான்மதிஎன் றஞ்சி
இகலரணத்து உள்ளவர் எல்லாம்—அகநலிய
விண்டஞ்சம் என்ன விரிந்த குடைநாட்கோள்
கண்டஞ்சிச் சிம்பிளித்தார் கண்."
(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எயில்கோடல்)

இது புறத்தோன் குடைநாள்கோள்.

"குலறுயர் திங்கள்போல் கொற்றக் குடைஒன்றுன்
நின்றுயர் வாயில் புறநிவப்ப—ஒன்ருர்
விளங்குருவப் பல்குடை விண்மீனபோல் தோன்றித்
துளங்கினவே தோற்றம் தொலைந்து."
(தகடூர் யாத்திரை-புறத்திரட்டு-எயில்காத்தல்)

இஃது அகத்தோன் குடை நாள்கோள்.

"தொழுது விழாக்குறைக்குத் தொல்கடவுள் பேணி
அழுது விழாக்கொள்வர் அன்றே—முழுதளிப்போன்
வாளுள்கோள் கேட்ட மடந்தையர் தம்மகிழ்நர்
நீளுட்கோள் என்று நினைந்து."
(பெரும் பொருள் விளக்கம்-புறத்திரட்டு எயில்கோடல்)

இது புறத்தோன் வாளுட்கோள்.

"முற்றரணம் என்னு முகில்உருமுப் போல்தோன்றக்
கொற்றவன் கொற்றவா ளுட்கொண்டான்-புற்றிழிந்த

நாகக் குழாம்போல் நடுங்கின என்னுங்கொல்
வேகக் குழாக்களிற்று வேந்து"
(பெரும் பொருள்விளக்கம்-புறத்திரட்டு-எயில்கோடல்)

இஃது அகத்தோன் வாணாட்கோள்.

மடையமை ஏணிமிசை மயக்கமும்—மீதிடு பலகையோடும் மடுத்துச் செய்யப்பட்ட ஏணிமிசைநின்று புறத்தோரும் அகத்தோரும் போர்செய்தலும்;

(எ.டு)

"சேணுயர் ஞாயில் திணிதோளான் ஏற்றவும்
ஏணி தவிரப்பாய்ந்து ஏறவும்—பாணியாப்
புள்ளிற் பரந்து புகல்வேட்டார் போர்த்தொழிலோர்
கொள்ளற் கரிய குறும்பு"

இது புறத்தோர் ஏணிமயக்கம்.

"இடைஎழுவிற் போர்விலங்கும் யானையோர் போலும்
மடையமை எணி மயக்கில்—படையமைந்த
ஞாயில் பிணம்பிறக்கித் தூர்த்தார் நகரோர்க்கு
வாயில் எவனுங்கொல் மற்று."

இஃது அகத்தோர் ஏணிமயக்கம்.

இனி இரண்டும் ஒருங்கு வருதலும் கொள்க.

(எ.டு)

"பொருவரு மூதூரில் போர்வேட்டு ஒருவர்க்கு
ஒருவர் உடன்றெழுந்த காலை—இருவரு
மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியயேணி
விண்ணொடு சார்த்தி விடும்."
(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எயில்கோடல்)

என வரும்,

கடைஇச் சுற்று அமர் ஒழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும்—புறத்தோன் தன்படையைச் செலுத்திப் புறமதிலில் செய்யும் போரின்றாக, அகத்தோன்படையை வென்று அப் புறமதிலைக் கைக்கொண்டு உண்மதிலை வளைத்த வினை முதிர்ச்சியும், அகத்தோன் தன்படையைச் செலுத்திப் புறமதிலில்செய்யும் போரின்றாகப், புறத்தோன் படையைத் தள்ளி வென்று அப் புறமதிலைக் கைக்கொண்டு வளைத்த வினைமுதிர்ச்சியும்;

(எ - டு)

"கடல்பரந்து மேருச்சூழ் காலம்போல் சென்றோர்
கொடிமதில் காத்தோரைக் கொல்லக்—கடலெதிர்
தோன்றுப் புலிபோல் அரண்மறவர் தொக்கடைந்தார்
மான்தேரான் மூதூர் வரைப்பு."

இது புறத்தோன் முற்றிய முதிர்வு.

"ஊர்சூழ் புரிசை உடன்சூழ் படைமாயக்
கார்சூழ்குன் றன்ன கடைகடந்து—போர்மறவர்
மேகமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல்போன்று
ஆகஞ்சேர் தோள்கொட்டி ஆர்த்து."

இஃது அகத்தோன் முற்றிய முதிர்வு.

அன்றி முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்—புறமதிலன்றி உண்மதிற்கண் புறத்தோனால் முற்றப்பட்ட அகத்தோன் விரும்பின மதில்காவலும், அவன் காத்தலின்றித் தான் சூழப்பட்ட இடத்திருந்த புறத்தோன் போர்செய்தலை விரும்பிய உள்ளத்தைக் காத்தலும்;

நொச்சியாவது காவல்; இதற்கு நொச்சி ஆண்டுச் சூடுதலும் கொள்க: அது மதிலைக்காத்தலும் உள்ளத்தைக் காத்தலுமென இருவர்க்கு மாயிற்று. இக்கருத்தானே "நொச்சி வேலித் தித்த னுறந்தை" (அகம் - 122) என்றார் சான்றோரும்.

(எ - டு)

"இருகன்றின் ஒன்றிழந்த வீற்றுப்போற் சீறி
யொருதன் பதிசுற்று ஒழியப் – புரிசையின்
வேற்றரணம் காத்தான் விறல்வெய்யோன்
வெஞ்சினத்துக்
கூற்றரணம் புக்கதுபோற் கொன்று."

இஃது அகத்துழிஞையோன் எயில்காத்த நொச்சி

"தாய்வாங்கு தின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி அன்னதோர் பெற்றித்தே—வாய்வாங்கு
வெல்படை வேந்தன் விரும்பாதார் ஊர்முற்றிக்
கொல்படை வீட்டும் குறிப்பு."
(பெரும் பொருள்விளக்கம்-புறத்திரட்டு-எயில்கோடல்)

இது புறத்தோன் மனங்காத்த நொச்சி.

"மணிதுணர்ந் தன்ன மாக்குரல் நொச்சிப்
போதுவிரி பன்மரன் உள்ளும் சிறந்த
காதல் நன்மர நீமற் றிசினே
கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
தொடியணி மகளிர் அல்குலும் கிடத்திக்
காப்புடைப் புரிசை புக்குமா றழித்தலின்
ஊர்ப்புறம் கொடாஅ நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமையு நினதே." (புறம்-272)

இது சூடின நொச்சியைப் புகழ்ந்தது.

மற்று அதன் புறத்தோன் வீழ்ந்த புதுமையானும்—இடை மதிலைக் காக்கின்ற அகத்துழிஞையோன் நின்ற இடத்தினைப் பின்னை அம்மதிலின் புறத்திருந்தோன் விரும்பிக்கொண்ட புதுக்கோளும், அங்ஙனம் புறத்தோன் கொண்ட அவ்விடத்தினைப் பின்னை அகத்தோன் தான் விரும்பிக்கொண்ட புதுக் கோளும்;

பிற்பட்ட துறைக்குப் புறத்தோன் அதனையென மாற்றிப் பொருள் கொள்க. முன்னர்ப் புறமதிலின் போர்போல இடை மதிலினும் போர் கூறினர்.

(எ - டு)

"வெஞ்சின வேந்தன் எயில்கோல் விரும்பியக்கால்
அஞ்சி ஒதுங்காதார் யார்யாவர்—மஞ்சுசூழ்
வான்றோய் புரிசை பொறியும் அடங்கின
வான்றோர் அடக்கம்போல் ஆங்கு."
(பெரும் பொருள்விளக்கம்-புறத்திரட்டு-எயில்கோடல்)

இது புறத்தோன் வீழ்ந்த புதுமை.

"தாக்கற்குப் பேரும் தகர்போல் மதிலகத்து
ஊக்கம் உடையோர் ஒதுங்கியும்—கார்க்கண்
இடிபுறப் பட்டாங்கு எதிரேற்றார் மாற்றார்
அடிபிறக் கிடும் அரிது."
(தகடூர்யாத்திரை, புறத்திரட்டு-எயில்கோடல்)

இஃது அகத்தோன் வீழ்ந்த புதுமை.

நீர்ச் செரு வீழ்ந்த பாசியும்—கொண்ட மதிலகத்தை விட்டுப் போகாத புறத்தோரும் அவரைக் கழியத் தாக்கல் ஆற்றாத அகத்தோரும் எயிற்புறத்து அகழின் இருகரையும் பற்றி நீரிடைப் படர்ந்த நீர்ப்பாசி போன்று அக்கிடங்கின்கண் போரை விரும்பின பாசியும்;

பாசிபோல் நீங்காமல் நிற்றலில் பாசி யென்றார்.

(எ.டு)

"பொலஞ்செய் கருவிப் பொறையுமிப் பண்ணாய்
நிலந்திடர் பட்டதுஇன்றுயில்—கலங்கமர்மேல்
வேத்தமர் செய்யும் விரகென்னும் வேண்மறவர்
நீத்துநீர்ப் பாய்புலிபோல் நின்று."

இஃது இருவர்க்கும் ஒக்கும். வேறு வேறு வருமெனினும் காண்க.

அதா அன்று ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்—அம் மதில் புறத்தன்றி ஊரகத்துப் போரை விரும்பிய அப்பாசி மறனும்;

பாசியென்றார், நீரிற் பாசிபோல இருவரும் ஒதுங்கியும் தூர்ந்தும் பொருதலின்.

(எ.டு)

"மறநாட்டும் தம்கணவர் மைந்தறியும் மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தார்—
எறிதொறும்போய்
நீர்ச்செறி பாசிபோல் நீங்காது தங்கோமான்
ஊர்ச்செரு உற்றாரைக் கண்டு."

இது புறத்தோன் பாசிமறம்.

"தாம்தம் கடைதொறும் சாய்ப்பவு மேல்விழுந்த
வேந்தன் படைப்பிணத்து வீழ்தலான் – ஆங்கு
மதுக்கமழும் தார்மன்னர்க்குஉள்ளூர் மறுகில்
பதுக்கையும் வேண்டாதாம் பற்று."

இஃது அகத்தோன் பாசிமறம்.

அகமிசைக்கு இவர்ந்தோன் பக்கமும்—புறஞ்சேரிமதிலும் ஊரமர்மதிலும் அல்லாத கோயில் புரிசைகளின் மேலும் ஏறி நின்று போர்செய்தற்குப் பரந்துசென்றோன் கூறுபாடும்;

(எ.டு)

"வாயிற்கு இடங்கொடுக்கி மாற்றினார் தம்பிணத்தால்
கோயிற்கு இடங்கொடுக்கிக் கோண்மறவர்—ஞாயில்
கொடுமுடிமேல் குப்புற்றார் கோவேந்தர்க் காக
நெடுமுடிதாம் கோடன் நினைந்து."

இது புறத்தோன் அகமிசைக்கிவர்தல்.

"புற்றுறை பாம்பின் விடநோக்கம் போல்நோக்கிக்
கொல்துறை வாய்த்த கொலைவேலோர்—கொற்றவன்
ஆரெயின்மேல் தோன்றினார் அந்தரத்துக் கூடாத
போரெயின்மேல் வாழவுணர் போன்று."

இஃது அகத்தோன் அகமிசைக்கிவர்தல்.

இகன் மதிற் குடுமி கொண்ட மண்ணும் மங்கலமும்—அங்ஙனம் இகல்செய்த மதிற்கண் ஒருவன் ஒருவனைக் கொன்று அவன் முடிக்கலம் முதலியன கொண்டு, பட்ட வேந்தன் பெயரானே முடிபுனைந்து நீராடும் மங்கலமும்;

(எ.டு)

"மழுவாளான் மன்னர் மருங்கறுத்த மால்போல்
பொழில்ஏழும் கைக்கொண்ட போழ்தில்—எழின்முடி
சூடாச்சீர்க் கொற்றவனும் சூடினான் கோடியர்க்கே
கூடார்நா டெல்லாம் கொடுத்து."

இது புறத்தோன் மண்ணும் மங்கலம்.

"வென்றி பெறவந்த வேந்தை இகன்மதில்வாய்க்
கொன்று குடுமி கொளக்கண்டு—தன்பால்
விருந்தினர் வந்தார்க்கு விண்விருந்து செய்தான்
பெருந்தகைஎன்று ஆர்த்தார் பிறர்."

இஃது அகத்தோன் மண்ணும் மங்கலம்.

வென்ற வாளின் மண்ணோடு ஒன்ற—இருபெருவேந்தருள் ஒருவன் ஒருவனை வென்றுழி அங்ஙனம் வென்ற கொற்றவாளினைக் கொற்றவைமேன் நிறுத்தி நீராட்டுதலோடே கூட;

(எ.டு)

"செற்றவர் செங்குருதி ஆடற்கு வாள்சேர்ந்த
கொற்றவை மற்றிவையும் கொள்ளும் கொல்—
முற்றியோன்

பூவொடு சாந்தும் புகையவி நெய்ந்நறைத்
தேவொடு செய்தான் சிறப்பு.''

இது புறத்தோன் வாண்மங்கலம்.

"வருபெரு வேந்தற்கு வான்கொடுத்து மற்றை
ஒருபெரு வேந்தற்கூரீந்தாள்—ஒருவன்வாள்
இவ்வுலகில் பெற்ற இகற்கலையேற்று ஊர்தியாள்
அவ்வுலகிற் போய்ப்பெறுங்கொல் ஆங்கு."

இஃது அகத்தோன் வாண்மங்கலம்.

ஒன்றென முடித்தலான் இருவர் வேற்கும் சிறுபான்மை மண்ணுதல் கொள்க

"பிறர்வேல் போலா தாகி இவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை உடைத்தே
இரும்புற நீறும் ஆடிக் கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினும் கிடக்கும்
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
இன்குரல் இரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர் படுவினும் தெருவினும் திரிந்து
மண்முழுது அழுங்கச் செல்லினும் செல்லுமாங்கு
இருங்கடல்தானை வேந்தர்
பெருங்களிற்று முகத்திலும் செலவா னதே.''

(புறம்-332)

என வரும்

தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ—அவ்வாண் மங்கலம் நிகழ்ந்த பின்னர் இருவருள் ஒருவர் பரந்துபட்ட படைக்கடற்கு எல்லாஞ் சிறப்புச் செய்வான் ஒருங்கு வருகெனத் தொகுத்தல் என்னும் துறையோடு முற் கூறியவற்றைத் தொகுத்து;

(எ டு)

"கதிர்சுருக்கி அப்புறம்போம் காய்கதிர்போல் வேந்தை
எதிர்சுருக்கி எந்தெயில்பா ழாக்கிப்—பதியில்
பெயர்வான் தொகுத்த படைத்துகளால் பின்னும்
உயர்வான் குறித்தது உலகு."

இது புறத்தோன் தொகைநிலை.

"தலைவன் மதில்சூழ்ந்த தார்வேந்தர்க்கு ஒன்று
வலைவன் வலைசுருக்கி ஆங்கு—நிலையிருந்த
தண்டத் தலைவர் தலைக்கூட வீற்றிருந்தான்
உண்டற்ற சோற்றூர் ஒழிந்து."

இஃது அகத்தோன் தொகைநிலை.

வகைநால் மூன்றே துறை என மொழிப—அங்ஙனம் ஒன்று இருவகைப்பட வந்து பன்னிரண்டேயாம் உழிஞைத்துறை என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

முற்றலையும் கோடலையும் இருவகையென்றார். 'துறை' என்றதனான் அவற்றின் பகுதியாய் வருவனவும் அத்துறைப்பாற் படுத்துக. உழையரை அழைத்து நாட்கொள்க என்றலும் அவர் அரசர்க்கு உரைப்பனவும் குடைச்சிறப்புக் கூறுவனவும் முரசு முதலியன நாட்கோடலும் பிறவும் குடைநாள் கோடலாய் அடங்கும். இது வாணாட் கோடற்கும் ஒக்கும்.

பொருவார்க்கும் அல்லுழிப் போவார்க்கும் குடை பொது வாகலின் முற்கூறி மேல் வருகின்ற போர்த்தொழிற்கே சிறத்தலின் வாளினைப் பிற் கூறினார். இவை போர்த்தொழிற்கு ஏதுவாகலின் முற்கூறினார்.

எயிலுள் பொருதலும் புட்போல உட்பாய்தலும் ஆண்டுப் பட்டோர் துறக்கம் புகுதலும் பிறவும் பாசிமறத்தின்பாற் படும். ஏறுந் தோட்டியும் கதவும் முதலியன கோடல் அகமிசைக்கு இவர்ந்தோன் பக்கத்தின்பாற்படும். படிவம் முதலியன கூறல்

குடுமிகொண்ட மண்ணு மங்கலத்தின்பாற்படும். புறத்தோன் இருப்பிற், ஞெருகைநிலைப்பாற்படும்.

'துறையென மொழிப' என எல்லாவற்றையும் துறையென்று கூறுகின்றவர் தொகைநிலை யென்னும் துறையெனத் தொகை நிலையை விதந்தோதினர்; அது பலவாகாது இரண்டு துறைப் பட்டு வேறு வேறு துறையாம் என்றற்கு. அது தும்பைத் தொகைநிலைபோல் இருபெருவேந்தரும் உடன்வீழ்தலும் சிறு பான்மை உளதாமென் றுணர்க. எதிர்செல்லாது அடைத்திருந் தோன் புறப்பட்டுப்படுதல் சிறுபான்மையாதலின், இதனையும் வேறோர் துறையாக்கிப் பதின்மூன்று என எண்ணினராயினர்.

(எ.டு)

"அறத்துறைபோல் ஆரெயில் வேட்ட அரசர்
மறத்துறையும் இன்னது மன்னோ—நிறைச்சுடர்கள்
ஒன்றி வரப்பகல்வாய் ஒக்க ஒளிதேய்ந்தாங்கு
இன்றிவர் வீழ்ந்தார் எதிர்ந்து"

எனவரும்.

இது வேறுவேறு வருதலும் சிறுபான்மை. இன்னும் துறை யென்றதனானே புறத்தோன் கவடிவித்துதலும் தொகை நிலைப் பாற்பட்டுழி அகத்தோர்க்குச் செல்லாமை கொள்க.

அது, "மதியேர்வெண்குடை" என்னும் (392) புறப்பாட்டினுள்,

"வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைகல் உழவ வாழிய பெரிதெனச்
சென்றியான் நின்றெனனாக"

எனவரும்.

'ஒன்ற' என்றதனான் அகத்தோன் வாண்மண்ணுதல் சிறு பான்மை என்று கொள்க.

இனி மகண்மறுத்தோன் மதிலை முற்றுதன் மகட்பாற்காஞ் சிக்கண் அடங்கும். யானையும் குதிரையும் மதிற்போர்க்குச்

சிறந்தன அன்மையின் கொள்ளாராயினர். ஈரடியிகந்து பிறக்கடி யிடுதலும் கேடு என்று உணர்க.

(வி-ரை) உழிஞை அரசன் பகைமேற் செல்லுதற்காகத் தன் நாட்டினின்றும் புறப்படுங்கால் குடையையும், வாளையும் நாட் கொள்வர் என்பர் ஐயனாரிதனார். அகத்தோன் (நொச்சியான்) அவ்வாறு நாட்கொள்ளுதலாக அவர் கூறிற்றிலர். நச்சினார்க் கினியர் குடை நாட்கொள்ளுதல் குடிபுறம் காத்தோம் புதற்கே என்றும், வாளுட் கொள்ளுதல் பிறரை அழித்தற்குச் செல்லுங்கால் செய்யப்படுமென்றும் பாகுபடுத்திக் கூறற்கு யாதொரு காரணமும் இல்லை. அவ்வாறே அகத்தோன் நாட்கொள்வன் என்று கூறுவதும் பொருந்துவதன்றாம்.

நாட் கொளல் என்பதற்கு நச்சினார்க்கினியர் தந்திருக்கும் விளக்கம் திட்பமும், நுட்பமும் உடையதாம். நாள்-விண்மீன், ஓரை-இலக்கணம். விண்தஞ்சம் என்ன – விண்ணுலக ஆட்சியைப் பெறுதலும் எளிமைஎன எண்ணுமாறு போல. கண் சிம்புளித்தார்- கண்களை மூடிக் கொண்டார். நீள் நாட் கோள் என்று – நீண்ட நாட்கள் வாழவேண்டுமென்று.

உருமு – இடி

மதிலிடத்து மடுத்தலமைந்த ஏணிசாத்தி அதன்மேல் பொரும் போர் மயக்கம் என்பர் இளம்பூரணர்.

பாணியா – காலம் தாழ்த்தலின்றி. இடையெழு – இடையே போடப்பட்ட கணையமரம். வீட்டும் – அழிக்கும்.

நொச்சி-விளி. நீ அல்குலும் கிடத்தி; நெடுந்தொகை சென்னிக் கிழமையும் நினது; ஆதலின் பல மரங்களிலும் நீ சிறந்தாயாவாய் என்பது கருத்து. புதுக்கோள் – புதிதாகக் கொள்ளப்பட்டது. மஞ்சு – மேகம். தகர் – ஆடு, கார்க்கண் – மேகத்திடத்து.

கருவிப்பொறை – படைகளின் பொறை; உமிப்பண்ணாய் – உமியினது இயல்பைப் பெற்று; திடர் – மேடு, விரகு – சூழ்ச்சி.

மறம் நாட்டும் – வீரத்தை நிலை நாட்டும், மைந்து–வலிமை. கடைத்தோறும் – போர் முகம் தொறும்; பதுக்கை – நடுகலமைத் தற்குரிய இடம். வாயிற்கிடங்கு – மதில் வாயில் இருக்கும் அகழி. ஞாயிற் கொடுமுடி – மதிலகத்து இருக்கும் கொடிய உச்சி.

பொழில் ஏழும் – ஏழுலகும். கோடியர் – கூத்தர். கலையேற்று ஊர்தியாள் – கொற்றவையாள்.

தொகைநிலை மதிலழித்தமையால் மற்றுள்ள மதில்கள் வரைப்பில் மாறுபட்ட வேந்தரும் முரண் அவிந்தபடி அடைதல் என உரை காண்பர் இளம்பூரணர். ஐயனாரிதனாரும் இதனையே தழுவி "எம்மதில் இகல் வேந்தரும் அம்மதிலின் அடி அடைந் தின்று." என உழிஞைத் தொகை நிலைக்கு இலக்கணம் கூறுவர்.

வலைவன் – மீன்பிடிப்பவன். தலைக்கூட – ஒருங்குசேர. உண்டு அற்ற சோற்றார்–செஞ்சோற்றுக்கடன் கழித்து இறந்தார்.

எயிலுள் பொருதலை எயிற்பாசி என்றும், புட்போல உட்பாய் தலை முதுஉழிஞை என்றும், துறக்கம் புகுதலை மறனுடைப்பாசி என்றும் ஐயனாரிதனார் கூறுவர்.

ஏறு – யானை. படிவம் – இறந்த வீரரின் வடிவாகச் செய்யப் படும் நடுகல்.

புறத்தோன் இருப்பினை அடிப்பட இருத்தல் எனக்கூறுவர் ஐயனாரிதனார். நிறைச்சுடர்கள் – கதிரவனும் மதியமும். இவ் விரண்டும் ஒக்க ஒலிசெய்தல் போல என்பது இப்பொருள் உவமை யாம். கவடி – வெள்வரகு.

மகள் மறுத்து மொழிதலை நொச்சித்திணைக் கண்ணும், மகட் பாற்காஞ்சியைக் காஞ்சித்திணைக் கண்ணும் கூறுவர் ஐயனாரிதனார். யானையும் குதிரையும் போர் புரியுங்கால் ஓரிரு அடி பின் வந்து பொரும் இயல்பினவாதலின் மதிற்போர்க்கு அவற்றைக் கொள் ளாராயினர் ஐயனாரிதனார். குதிரை மறத்தை நொச்சித்திணைக் கண்ணும், யானை கைக்கோளை உழிஞைத் திணைக்கண்ணும் கூறி

இருப்பதை உளங்கொண்டே நச்சினார்க்கினியர் இவ்வாறு கூறுகின்றார். (13)

தும்பையின் பொது விலக்கணம்

69. [1]தும்பை தானே நெய்தலது புறனே.

இது தும்பைத்திணை அகத்திணையுள் இன்னதற்குப் புறனு மென்கின்றது. இதுவும் மைந்துபொருளாகப் பொருதலின் மண்ணிடை யீடாகப் பொரும் வஞ்சிக்கும் மதிலிடையீடாகப் பொரும் உழிஞைக்கும் பிற்கூறினார்.

(இ - ள்) தும்பைதானே நெய்தலது புறனே—தும்பையென்னும் புறத்திணை நெய்தலெனப்பட்ட அகத்திணைக்குப் புறனும் என்றவாறு

தும்பை யென்பது சூடும் பூவினால் பெற்ற பெயர். நெய்தற்குரிய பெருமணலுலகம் போலக் காடும் மலையும் கழனியு மல்லாத களரும் மணலும் பொருகளமாக வேண்டுதலானும், பெரும்பொழுது வரைவின்மையானும், ஏற்பாடு போர்த்தொழில் முடியும் காலமாதலானும், இரக்கமும் தலைமகட்கே பெரும்பான்மை உளதாயவாறுபோலக் கணவனை இழந்தார்க்கன்றி வீரர்க்கு இரக்கமின்மையானும், அவ்வீரக்குறிப்பின் அருள்பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குப வாகலானும், ஒருவரும் ஒழியாமல் பட்டுழிக் கண்டோர் இரங்குப வாகலானும், பிற காரணங்களானும் நெய்தற்குத் தும்பை புறனாயிற்று. (14)

அதன் சிறப்பிலக்கணம்

70. மைந்து பொருளாக வந்த வேந்தனைச் சென்றுதலை யழிக்கும் சிறப்பிற் றென்ப.

1. இச் சூத்திரத்தையும், அடுத்த சூத்திரத்தையும் ஓரே சூத்திரமாகக் கொள்வர் இளம்பூரணர்.

இஃது அத்தும்பைக்குப் பொதுவிலக்கணம் கூறுகின்றது.

(இ - ள்) மைந்து பொருளாக வந்த வேந்தனை—தனது வலியினை உலகம் மீக்கூறுதலே தனக்குப் பெறுபொருளாகக் கருதி மேற்சென்ற வேந்தனை; சென்று தலையழிக்கும் சிறப்பிற் றென்ப—அங்ஙனம் மாற்றுவேந்தனும் அவன் கருதிய மைந்தே தான் பெறுபொருளாக எதிர்சென்று அவனைத் தலைமை தீர்க்கும் சிறப்பினையுடைத்து அத்தும்பைத்திணை என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

வரல் செலவாதல் "செலவினும் வரவினும்" (தொல்-சொல்-கிளவி-28) என்பதன் பொதுவிதியால் கொள்க. மைந்து பொருளாக என்பதனை வந்த என்பதற்கும் கூட்டுக; அஃது இருவர்க்கும் ஒத்தலின். எனவே இருவரும் ஒருகளத்தே பொருவாராயிற்று.

இது வேந்தனைத் தலைமையால் கூறினுரேனும் ஏனையோர்க்கும் கொள்க; அவரும் அதற்குரியராதலின்.

இதனைச் 'சிறப்பிற்று' என்றதனுன் அறத்தில் திரிந்து வஞ்சனையால் கொல்வனவும் தேவரால் பெற்ற வரங்களால் கொல்வனவும் கடையூழிக்கண் தோன்றிய ஆதலிற் சிறப்பிலவாம். அவையும் சிறுபான்மை கொள்க.

(வி-ரை) மைந்து - வலிமை.

மீக்கூர்தல் - உயர்த்துக் கூறுதல். வந்த வேந்தனை - சென்ற வேந்தனை. வரல் தன்மைக் கண்ணும் செலவு படர்க்கைக்கண்ணும் வருமென்பது இலக்கணம். அங்ஙனமாகவும் இவ்வாறு பொருளுரைத்தது 'செலவினும் வரவினும்' என்னும் பொதுவிதி பற்றியாம். (15)

இதுவும் அது

71. கணையும் வேலும் துணையுற மொய்த்தலிற்
சென்ற வுயிரி னின்ற யாக்கை

யிருநிலந் தீண்டா வருநிலை வகையோ
டிருபாற் பட்ட வொருசிறப் பின்றே.

இது தும்பைக்காவதோர் இலக்கணம் கூறுதலின் எய்திய தன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ - ள்) கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்—பலரும் ஒருவனை அணுகிப் பொருதற்கஞ்சி அகல நின்று அம்பானெய்தும் வேல்கொண் டெறிந்தும் போர் செய்ய, அவ் வம்பும் வேலும் ஒன்றேடொன்று துணையாகத் தீண்டுமாறு செறிதலின்; சென்ற உயிரின் நின்ற யாக்கை—சிறிதொழியத் தேய்ந்த உயிரானே துளங்காது நிலைநின்ற உடம்பு; இருநிலந் தீண்டா யாக்கை அருநிலை வகையோடு—வாளும் திகிரியு முதலி யவற்றால் ஏறுண்ட தலையேயாயினும் உடலேயாயினும் பெரிய நிலத்தைத் தீண்டாதெழுந்து ஆடும் உடம்பினது பெறற்கரும் நிலையுடைத்தாகிய கூறுபாட்டோடே கூடி; இருபாற்பட்ட ஒரு சிறப்பின்று — இரண்டு கூறுபட்ட ஒரு சிறப்பிலக்கணத்தை யுடைத்து முற்கூறிய தும்பைத்திணை என்றவாறு.

எனவே, முற்கூறிய மைந்துபொருளாகப் பொருதலினும் நின்ற யாக்கை சிறத்தலும் இருநிலம் தீண்டா யாக்கை அதனில் சிறத்தலும் கூறினர். இது திணைச்சிறப்பாகக் கூறியது. மொய்த்தலின் என்றது, யாக்கையற்றுஆடவேண்டுதலின் கணையும் வேலுமன்றி வாள்முதலியன ஏதுவாகக்கொள்க. பிற்கூறியதற்கு அட்டை அற்றுழியும் ஊருமாறுபோல் அலீகனிற அற்றுழியும் உடம் பாடுதலின் அட்டையாட லெனவும் இதனைக் கூறுப.

இனி மேற்றுறை கூறுகின்றது மைந்துபொருளாக வந்ததும் சென்றதுமாகிய பொது இலக்கணத்திற்கே என்றுணர்க. நிரை கொள்ளப்பட்டோன் பொருகளம் குறித்துப் போர்செய் தலும் அவன் களங்குறித்தது பொருது நிரைகொண்டானும் களங்குறித்துப் போர்செய்தலும் வெட்சிப்புறத்துத் தும்பை யாம். வஞ்சியுள்ளும் விழுப்புண்பட்ட வீரரை நோக்கி வேந்தற் குப் பொருமை நிகழ்ந்து துறக்கம் வேண்டுழி நிகழ்ந்த தும்பை யும் வஞ்சிப்புறத்துத் தும்பையாம். முற்றப்பட்டோனை முற்று

விடுத்தற்கு வேற்றூர் வேந்தன் வந்துழி, அவன் புறம்போந்து களங்குறித்துப் போர்செய்யக் கருதுதலும், அவன் களங்குறித் துழிப் புறத்தோனும் களங்குறித்துப் போர்செய்யக் கருதுதலும் உழிஞைப்புறத்துத் தும்பையாம். இவையெல்லாம் மண்ணசை யும் அரண்கோடலுமன்றி மைந்துபொருளாகச் சென்று துறக்கம் வேட்டுப் பொரும் தும்பைச் சிறப்புக் கூறிற்று.

மேற்காட்டும் துறைகளெல்லாம் இச்சூத்திரத்துக்கூறிய இரண்டற்கு மன்றி மைந்துபொருள் ஆயதற்கேயாம் என்றுணர்க.

(எ-டு)

"நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையின் நிற்கு மோர்க்கே." (புறம்-297)

"எய்போல் கிடந்தான் என் னேறு."
(புறப்-பொருள்-வெ-176)

என வருவன கணையும் வேலும் மொய்த்துநின்றன. கிடந்தா னென்புழி நிலம் தீண்டாவகையின் நின்ற யாக்கையாயிற்று.

"வான்துறக்கம் வேட்டெழுந்தார் வாண்மறவர் என்பதற்குச்
சான்றுரைப்ப போன்றன தம்குறை – மான்தேர்மேல்
வேந்து தலைபனிப்ப விட்ட உயிர்விடாப்
பாய்ந்தன மேன்மேல் பல."
(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-அமர்)

இது வஞ்சிப்புறத்துத் தும்பையாய் இருநிலம் தீண்டா வகை.

"பருதிவேன் மன்னர் பலர்காணப் பற்றார்
குருதிவாள் கூறிரண்டு செய்ய – ஒருதுணி
கண்ணிமையா முன்னம் கடிமதிலுள் வீழ்ந்ததே
மண்ணமதே மண்ணமதே என்று."

இஃது உழிஞைப்புறத்துத் தும்பையாய் இருநிலம் தீண்டா வகை.

இது *திணைக்கெல்லாம் பொது அன்மையில் திணையெனவும் படாது; திணைக்கே சிறப்பிலக்கணமாதலின் துறையெனவும் படாது; ஆயினும் துறைப்பொருள் நிகழ்ந்து கழிந்தபிற் கூறியதாமென் றுணர்க.

(வி-ரை) ஏறுண்ட - வெட்டுண்ட.

அம்பு வேல் ஆகியவற்றால் துளைக்கப்பட்ட உடல் துளங்காது நிலைநிற்றலும் வாள் திகிரி முதலியவற்றால் வெட்டுண்ட தலை அல்லது உடல் நிலந்தீண்டாது எழுந்து ஆடுதலும் ஆகிய இரு சிறப்பும் தும்பைக்கு உரியவாம். இவ்வாறு நச்சினார்க்கினியர் கூறினும் இளம்பூரணர் "கணையும் வேலும் படைத்துணையாக் கொண்டு பொருதல் காரணமாகச் சென்ற உயிரின் நின்ற யாக்கை நீர் அட்டை காலவயப்பட்டு உடலினின்றும் உயிர் பிரிக்கப்படுமாறு இருபாற் படுக்கப்படும் அற்றதுண்டம் இணைந்தது போன்று ஆடலொத்த பண்பினையுடையது என உரைகூறி "இரு நிலம் தீண்டா அரு" என்பதற்கு நீருட்கிடக்கும் அட்டை எனவும் விளக்கம் கண்டனர். இதுவே பொருத்த முடைத்தாம். கணை வேல் முதலியவற்றால் செறிவுண்ட யாக்கை இருநிலம் தீண்டாது நிற்கும் நிலையை ஐயனாரிதனார் வெருவரு நிலை என்பர். 'விலங்கமருள் வியலகலம் வில்லுதைத்த கணை கிழிப்ப, நிலந் தீண்டா வகைப்பொழிந்த நெடுந்தகைநிலை உரைத்தன்று' என்பது அவர் தரும் இலக்கணமாகும்.

அலீகன் - உயிர். தலை என்பாரும் உளர். விழுப்புண் - முகத்திலும், மார்பிலும் பட்ட புண். போந்தையின் - பனையைப் போல. எய் - முள்ளம் பன்றி. (16)

தும்பைத்திணைக்குரிய துறைகள்

72. **தானை யானை குதிரை யென்ற**
நோனா ருட்கு மூவகை நிலையும்
வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி யொருவன்
தான்மீண் டெறிந்த தார்நிலை யன்றியும்

*'துறைக்கெல்லாம்' என்றிருப்பது பொருத்தம்.

இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவன் ஒருவனை யுடைபடை புக்குக்
கூழை தாங்கிய[1] வெருமையும் படையறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்
களிறெறிந் தெதிர்ந்தோர் பாடும் களிற்றொடு
பட்ட வேந்தனை யட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்
திருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத் திறைவன் [2]வீழ்ந்தெனச் சினைஇ
[3]ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை யொருவற் குடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும்பன்னிரு துறைத்தே.

இது மைந்துபொருளாகிய தும்பைத்திணைக்குத் துறை இனைத்தென்கின்றது.

(இ-ள்.) தானை யானை குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலையும் - தானைநிலை யானைநிலை குதிரைநிலை என்று சொல்லப்பட்ட போர்செய்தற்கு ஆற்றா அரசர் தலைபனிக்கும் மூன்று கூறுபாட்டின்கண்ணும்;

'நோனார் உட்குவர்' எனவே நோன்றார் உட்காது நிற்பாரா யிற்று. அவர் போர்கண்டு சிறப்புச்செய்யும் தேவரும் பிணந்தின் பெண்டிரும் படையாளர் தாயரும் அவர் மனைவியரும் கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியரும் கண்டோரும் பிறகு மென்று கொள்க.

துறக்கம்புகு வேட்கையுடைமையில் காலாளை முற்கூறி, அதன் பின்னர் மதத்தால் கதஞ்சிறந்து தானும் போர்செய்யும்

---

1. பெருமையும், 2. வீழ்வுறச், 3. ஒருவனை - எனப் பாடங்கொள்வர் இளம்பூரணர்,

யானையைக் கூறி, மதஞ்சிறவாமையில் கதஞ்சிறவாத குதிரையை அதன்பின் கூறினர். குதிரையானன்றித் தேர் தானே செல்லாமையின் தேர்க்கு மறமின்றென்று அது கூறாராயினர்.

'நிலை' யென்னாது 'வகை' யென்றதனன் அம்மூன்று நிலையும் தாமே மறஞ்சிறப்பப் பொருதுவீழ்தலும், அரசனேவலிற் றானை பொருது வீழ்தலும், யானையும் குதிரையும் ஊர்ந்தாரேவலில் பொருதலும், படையாளர் ஒருவரொருவர் நிலைகூறலும் அவர்க்கு உதவலுமென இப்பகுதியெல்லாம் கொள்க.

இனி இவைதாமே சுறுவுகொண்டு பொருவழித் தானை மறம் யானை மறம் குதிரைமற மென்று வெவ்வேறு பெயர்பெறுமென்று கொள்க.

இனித் தாயர் கூறுவன மூதின் முல்லையாம்; மனைவியர் கூறுவன இல்லாண் முல்லையாம்; கண்டோர் கூறுவன வல்லாண் முல்லையாம்; பாணர் கூறுவன பாண்பாட்டாம் என்க.

இவை கூறி ஏனைக் கூத்தர் முதலியோர் கூறுவன கூறார் மன ஞெகிழ்ந்து போவாருமுளர். அவை ஒரோர் துறையாக முதனூற்கண் வழங்காமையினாலும் அவற்றிற்கு வரையறையின் மையானும் இவர் தானைநிலை யென அடக்கினர். இச்சிறப்பான் இதனை முற்கூறினர். அத் தானை சூடிய பூக்கூறலும், அதனெழுச்சியும், அரவமும், அதற்கரசன் செய்யும் சிறப்பும், அதனைக் கண்டு இடைநின்றோர் போரை விலக்கலும், அவர் அதற்குடம்படாமைப் போர்துணிதலும், அத்தானையுள் ஒன்றற்கிரங்கலும், அதற்கு தலைவரை வகுத்தலும், வேந்தன் சுற்றத்தாரையும் துணை அரசரையும் ஏத்துவனவும், நும்போர் ஏனைநாட்டென்றும், இருபெருவேந்தரும் இன்னவாறு பொருதுமென்று கையெறிலும் போல்வன வெல்லாம் இத்துறைப்பாற்படும்.

(எ.டு)

"கார்கருதி நின்றதிரும் கௌவை விழுப்பணையான்
சோர்குருதி சூழா நிலன்அணைப்ப—போர்கருதித்

துப்புடைத் தும்பை மலைந்தான் துகளறுசீர்
வெப்புடைத் தானைஎம் வேந்து."

(புற-வெ-மாலை-தும்பை-1)

இது பூக் கூறியது.

இதனைத் திணைப்பாட்டு மென்ப.

"வெல்பொறியு நாடும் விழுப்பொருளும் தண்ணடையும்
கொல்களிறு மாவும் கொடுத்தளித்தான்—பல்புரவி
நன்மணித் திண்தேர் நயவார் தலைபனிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு."

(புற-வெ-மாலை-தும்பை-2)

இது சிறப்புச்செய்தது.

"வயிர்மேல் வளைநரல வைவேலும் வாளும்
செயிர்மேற் கனல்விழிப்பச் சீறி—உயிர்மேல்
பலசழியு மேனும் பரிமான்தேர் மன்னர்க்கு
உலகழியும் ஓர்த்துச் செயின்."

(புற-வெ-மாலை-தும்பை-4)

இது விலக்கவும் போர் துணிந்தது.

"மின்னார் சினஞ்சொரிவேல் மீளிக் கடற்றானை
ஒன்னார் நடுங்க உலாய்நிமிரின் — என்னாங்கொல்
ஆழித்தேர் வெல்புரவி அண்ணல் மதயானைப்
பாழித்தோண் மன்னர் படை."

(புற-வெ-மாலை-தும்பை 5)

இஃது இரண்டனுள் ஒன்றற்கு இரங்கியது.

"கங்கை சிறுவனும் காய்கதிரோன் செம்மலும்
இங்கிருவர் வேண்டா எனஎண்ணிக்—கங்கை
சிறுவன் படைக்காவல் பூண்டான் செயிர்த்தார்
மறுவந்நார் தத்த மனம்."

இது பெருந்தேவனார் பாட்டு; குருக்கள் தமக்குப் படைத் தலைவரை வருத்தது.

இனிப் போர்த்தொழிலால் தானைநிலை வருமாறு:-

"குழாக்களிற்று அரசர் குறித்தெழு கொலைக்களம்
விழாக்களம் போல மெய்ம்மலி உவகையர்
ஆண்மை உள்ளம் கேண்மையில் துரத்தலின்
அழுந்துபடப் புல்லி விழுந்துகளம் படுநரும்
நீர்ப்பெயற் பிறந்த மொக்குள் போலத்
தாக்கிய இசையில் சிதர்ந்துநிலம் படுநரும்
தகரும் தகரும் தாக்கிய தாக்கின்
முகமுகம் சிதர முட்டு வோரும்
முட்டியின் முறைமுறை குத்து வோரும்
கட்டிய கையொடு கால்தட் குநரும்
கிட்டினர் கையறத் தொட்டுநிற் போரும்
சுட்டிய பெயரற விட்டழிப் போரும்
சக்கரம் போலச் சங்குவிட்டு எறிநரும்
சிலைப்புடை முரசில் தலைப்புடைக் குநரும்
மல்லில் பிடித்தும் வில்லின் எற்றியும்
ஊக்கியும் உரப்பியு நோக்கியு நுவன்றும்
போக்கியும் புழுங்கியு நாக்கடை கவ்வியும்
எயிறுடன் திருகியும் கயிறுபல வீசியும்
இனைய செய்தியின் முனைமயங் குநரும்
பிறப்பும் பெருமையும் சிறப்பும் செய்கையும்
அரசறி பெருமையும் உரைசெல் ஆண்மையும்
உடையோர் ஆகிய படைகொண் மாக்கள்
சென்றுபுகும் உலகம் ஒன்றே ஆதலின்
ஒன்றுபடு மனத்தொடு கொன்றுகொன்று உவப்பச்
செஞ்சோற்று விலையும் தீர்ந்துதம் மனைவியர்
தம்பிணந் தழீஇ நொந்துகலுழ்ந்து இரங்கவும்
புதுவது வந்த மகளிர்க்கு
வதுவை சூட்டிய வான்படர்ந் தோரே".

(புறத்திரட்டு-அமர்-10)

எனவும்,

"சென்ற உயிர்போலத் தோன்றுது உடல்சிதைந்தோன்
நின்ற வடிபெயரா நின்றவை—மன்றல்

அரமகளிர் மங்கலத்திற்கு ஆங்குஆங்கு வைத்த
மரவடியே போன்றன வந்து"

எனவும் வரும்.

"வெண்குடை மதிய மேனிலாத் திகழ்தரக்
கண்கூ டிறுத்த கடன்மருள் பாசறைக்
குமரிப் படைதழீஇக் கூற்றுவினை ஆடவர்
தமர்பிறர் அறியாஅமர் மயங்கு அழுவத்து
இறையும் பெயரும் தோற்றி நுமருள்
நாண்முறை தபுத்தீர் வம்மின் ஈங்கெனப்
போர்மலைந்து ஒருசிறை நிற்ப யாவரும்
அரவுமிழ் மணியில் குறுகார்
நிறைதார் மார்பினின் கேள்வனைப் பிறரே".

(புறம்-294)

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்." (குறள்–படைச்-4)

"நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்காழ் அன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறுஅன்
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்குநோய் எல்லாம் தானு யினனே." (புறம்-276)

"தற்கொள் பெருவிறல் வேந்துவப்பத் தானவற்
கொற்கத்து உதவினன் ஆகுமாற் பிற்பிற்
பலர்புகழ் செல்வம் தருமாற் பலர்தொழ
வானக வாழ்க்கையும் ஈயுமால் அன்னதோர்
மேன்மை இழப்பப் பழிவருவ செய்பவோ
தானேயும் போகும் உயிர்க்கு."

(தகடூர்யாத்திரை: புறத்திரட்டு, படைச்செருக்கு-6)

என வரும்.

"கோட்டம் கண்ணியும் கொடுந்திரை ஆடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும்

ஒத்தன்று மாதோ இவற்கே செற்றிய
திணிநிலை அலறக் கூழை போழ்ந்துதன்
வடிமாண் எஃகம் கடிமுகத் தேந்தி
ஓம்புமின் ஓம்புமின் இவணென ஓம்பாது
தொடர்கொள் யானையில் குடர்கால் தட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத்து எதிர்ந்ததன் தோழற்கு வருமே"
(புறம்-275)

இஃது உதவியது.

இனி யானை நிலைக்கும் குதிரைநிலைக்கும் துறைப்பகுதியாய் வருவனவும் கொள்க. அஃது அரசர்மேலும் படைத்தலைவர் மேலும் ஏனையோர்மேலும் யானை சேறலும், களிற்றின்மேலுந் தேரின்மேலுங் குதிரைசேறலும், தன்மேலிருந்து பட்டோருடலை மோந்து நிற்றலும் பிறவுமாம்.

(எ-டு)

"மாயத்தால் தாக்கு மலையு மலையும்போல்
காயத்துஊறு அஞ்சாக் களிற்றெருடும்போய்ச்—சாயும்
தொலைவறியா ஆடவரும் தோன்றினர் வான்மேன்
மலையுறையும் தெய்வம்போல் வந்து".
(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு-யானை மறம்-14)

"கையது கையோடு ஒருதுணி கோட்டது
மொய்யிலை வேன்மன்னர் முடிதலை—பைய
உயர்பொய்கை நீராட்டிச் செல்லுமே எங்கோன்
வயவெம்போர் மாறன் களிறு."

இவை யானைநிலை.

"பல்லுருவக் காலின் பரியுருவத் தாக்கித்தன்
தொல்லை உருவிழந்த தோற்றம்போல் - எல்லாம்
ஒருகணத்துத் தாக்கி உருவிழந்த பாய்மாப்
பொருகளத்து வீழ்ந்து புரண்டு"

"மாவா ராதே மாவா ராதே
எல்லார் மாவும் வந்தன எம்மில்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் தந்த
செல்வன் ஊரும் மாவா ராதே
இருபேர் ஆற்ற ஒருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல
உலந்தன்று கொல்லவன் மலைந்த மாவே." (புறம்-273)

"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்
உழுத்ததர் உண்ட வோய்நடைப் புரவி
கடன்மண்டு தோணியில் படைமுகம் போழ
நெய்ம்மிதி அருந்திய கொய்சுவல எருத்தில்
தண்ணடை மன்னர் தாருடைப் புரவி
அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொடா மகளிரின் இகழ்ந்துநின் றவ்வே."
(புறம் 299)

இவை குதிரைநிலை.

"நிலம்பிறக்கிடுவதுபோல" என்னும் (303) புறப்பாட்டும் அது.

இவை தனித்துவாராது தொடர்நிலைச் செய்யுட்கண் வரும். அவை தகடூர்யாத்திரையினும் பாரதத்தினுங் காண்க. புறநானூற்றுள் தனித்து வருவனவுங் கொள்க.

வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான் மீண்டெறிந்த தார்நிலை—தன்படை போர்செய்கின்றமை கண்டு தானும் படையாளர்க்கு முன்னேசென்று வேலாற் போர்செய்து வென்றி மிகுகின்ற வேந்தனை மாற்றோர் சூழ்ந்துழி அதுகண்டு வேறோரிடத்தே பொருகின்ற தன் தானைத்தலைவனாயினும் தனக்குத் துணைவந்த அரசனாயினும் போரைக் கைவிட்டுவந்து வேந்தனோடு பொருகின்றோரை எறிந்த தார்நிலைக்கண்ணும்;

தாரென்பது முந்துற்றுப் பொரும்படையாதலின் இது தார்நிலையாயிற்று

(எ - டு)

"வெய்யோன் எழாமுன்னம் வீங்கிருள் கையகலச்
செய்யோன் ஒளிதிகழும் செம்மற்றே—கையகன்று
போர்தாங்கு மன்னன்முன் புக்குப் புகழ்வெய்யோன்
தார்தாங்கு நின்ற தகை"
(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-தானைமறம்—4)

என வரும். "நிரப்பாது கொடுக்கும்" என்னும் (180) புறப்பாட்டினுள் "அறையுறு விழுமந் தாங்கி" என்பதும் அது.

"இறர்க்கீத்து உண்மதி கள்ளே சினப்போர்
இனக்களிற்றி யானை இயல்தேர்க் குரிசில்
நுந்தை தந்தைக்கு இவன்றந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பின் இமையான் தச்சன்
அடுத்தெறி குறட்டின் இன்றுமாய்ந் தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனும்
உறைப்புழி ஓலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே."
(புறம்-290)

இதுவும் அதன்பாற்படும்.

அன்றியும் இருவர் தலைவர் தபுதிப்பக்கமும்—இருபெரு வேந்தர் தானைத்தலைவருந் தத்தம் வேந்தர்க்காகித் தார்தாங்கு தலை யன்றி அத்தலைவரிருவருந் தம்மிற்பொருது வீழ்தலுங் கொள்க.

(எ-டு)

"ஆதி சான்ற மேதகு வேட்கையின்
நாளும் கோளு மயங்கிய ஞாட்பின்
மதியமு ஞாயிறும் பொருவன போல
ஒருத்தி வேட்கையின் உடன்வயிற்று இருவர்
செருக்கூர் தண்டின் நெருக்கினர் எனவும்
அரவணி கொடியோற்கு இளையோன் சிறுவனும்

பெருவிறல் வீமற்கு இளையோன் சிறுவனும்
உடன்றமர் தொடங்கிய காலை அடங்கார்
உடங்குவரும் சீற்றத்துக் கைப்படை வழங்கி
இழந்தவை கொடாஅர் கிடந்தன வாங்கித்
தேர்மிசைத் தமியர் தோன்றூர் பார்மிசை
நின்றுசுடர் நோக்கியும் ஒன்றுபடத் திருகியும்
தும்பியடி பிணங்கு மண்ணிற் ருேற்றமொடு
கொடிகொடி பிணங்கி வீழ்வன போல
ஒருவயின் வீழ்ந்தடு காலை
இருபெரு வேந்தரும் பெரிதுஉவந் தனரே.''

இப் பாரதப்பாட்டினுள் அவ்வாறுதல் கண்டுகொள்க.

இளித் தலைவரேயன்றிப் பிறரும் அவ்வாறு பொரினும் அதன்பாற் படுத்துக.

உடைபடை ஒருவன் புக்கு ஒருவனைக் கூழைதாங்கிய எருமையும் - தனது உடைந்த படைக்கண்ணே ஒரு படைத் தலைவன் சென்று நின்று அங்ஙனங் கெடுத்த மாற்றுவேந்தன் படைத்தலைவனை அவன் எதிர்கொண்டுநின்ற பின்னணியோடே தாங்கின கடாப்போலச் சிறக்கணித்து நிற்கு நிலைமைக் கண்ணும்;

ஒருவனொருவனைத் தாங்கின எருமையென முடிக்க.

(எ-டு)

''சீற்றம் கனற்றச் சிறக்கணித்துச் செல்லுங்கால்
ஏற்றெருமை போன்ருன் இகல்வெய்யோன் - மாற்றுன்
படைவரவு காத்துத்தன் பல்படையைப் பின்காத்து
இடைவருங்கால் பின்வருவார் யார்'' எனவரும்.

படையறுத்துப் பாழிகொள்ளும் ஏமத்தானும் - கைப் படையைப்போக்கி மெய்யாற் போர்செய்யும் மயக்கத்தின் கண்ணும்;

பாழி, வலி; இஃது ஆகுபெயர்.

(எ-டு)

“கொல்லேறு பாய்ந்துஅழிந்த கோடுபோல் தண்டிறுத்து
மல்லேறு தோள்வீமன் மாமனைப் - புல்லிக்கொண்டு
ஆருத போர்மலைந்து ஆங்கரசர் கண்டார்த்தார்
ஏருடல் ஆய ரென”

என்னும் பாரதப்பாட்டுக் கொள்க.

‘நீலக் கச்சைப் பூவார் ஆடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வரும் களிற்றொடு வேல்துரந் தினியே
தன்னும் துரக்குவன் போலும் ஒன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பின் ஊக்கி மெய்க்கொண் டனனே” (புறம்-274)

என்பதும் அது.

களிறெறிந் தெதிர்ந்தோர் பாடும் – மாற்றுவேந்தன் ஊர்ந்துவந்த களிற்றைக் கையெறிந்தானுங் கடுக்கொண்டெதிர்ந் தானும் விலக்கி அவனையும் அக்களிற்றையும் போர்செய்தோர் பெருமைக் கண்ணும்;

(எ-டு)

“இடியால் இருண்முகிலும் ஏறுண்ணும் என்னும்
படியாற் பகடொன்று மீட்டு - வடிவேல்
எறிந்தார்த்தார் மள்ளர் இமையாத கண்கொண்டு
அறிந்தார்த்தார் வானோரும் ஆங்கு”

என வரும்.

“வானவர் போரில் தானவர்க் கடந்த
மான வேந்தன் யானையில் தனுஅது
பல்படை நெரிவது ஒல்லான் வீமன்
பிறக்கிடம் கொடான்தன் முகத்தெறிந் தார்த்துத்

தானெதிர் மலைந்த காலை ஆங்கதன்
கோடுழக் கிழிந்த மார்பொடு நிலஞ்சேர்ந்து
போர்க்கோள் வளாகம் தேர்த்துகள் அனைத்தினும்
இடைகொளல் இன்றிப் புடைபெயர்ந்து புரண்டு
வருந்தா உள்ளமொடு பெயர்ந்தனன்
பெருந்தகை ஆண்மையொடு பெயர்த்தலோ அரிதே."

இப் பாரதப்பாட்டும் இதன் பாற்படும். இது களிறெறிந்தான் பெருமை கூறுதலின் யானைநிலையுள் அடங்காதாயிற்று.

களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும் - அங்ஙனம் நின்று களிற்றொடுபட்ட வேந்தனைக் கொன்ற வேந்தன் படையாளர் வியந்து பட்டோனைச் சூழ்ந்துநின்று ஆடுந் திரட்சிக்கண்ணும்:

அமலுதல் நெருங்குதலாதலின், அமலை யென்பதூஉம் அப்பொருட்டாயிற்று.

(எ - டு)

"ஆளும் குரிசில் உவகைக்கு அளவுஎன்னாம்
கேளன்றிக் கொன்றாரே கேளாகி—வாள்வீசி
ஆடினார் ஆர்த்தார் அடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து."

என வரும்.

"நான்மருப் பில்லாக் கானவில் யானை
வீமன் வீழ்த்தியது உடன்றுஎதிர்ந் தாங்கு
மாமுது மதுரை மணிநிறப் பாகனோடு
ஆடமர் தொலைத்தல் ஆற்றான் தேரொடு
மைத்துனன் பணியின் வலமுறை வந்து
கைத்தலம் கதிர்முடி ஏற்றி நிற்றந்து
இறைஞ்சினன் ஐவர்க்கு இடையோன் அதுகண்டு
மறந்தீர் மன்னனும் இறைஞ்சித் தனது
வேழம் விலக்கி வினைமடிந்து இருப்பச்

சூர்மருங் கறுத்த நெடுவேள் போல
மலைபுரை யானையும் தலைவனும் கவிழிய
வாளுகு களத்து வாள்பல வீசி
ஒன்று மன்னரும் ஆடினர் துவன்றி
இன்று இன்பம் எய்தித்
தன்னமர் கேளிரும் முன்ஆர்த் தனரே."

இப் பாரதப்பாட்டும் அது.

வாள் வாய்த்து இருபெருவேந்தர் தாமுஞ் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும் — இருபெருவேந்தர் தாமும் அவர்க்குத் துணையாகிய வேந்தருந் தானைத்தலைவருந் தானையும் வாட்டொழின்முற்றி ஒருவரும் ஒழியாமற் களத்து வீழ்ந்த தொகைநிலைக் கண்ணும்;

(எ - டு)

"வருதார் தாங்கி அமர்மிகல் யாவது
பொருதாண்டு ஒழிந்த மைந்தர்புண் தொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்தல் நீட்டி
நிறங்கிளர் உருவில் பேஎய்ப் பெண்டிர்
எடுத்தெறி அனந்தர்ப் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந்து உற்ற தானையொடு செருமுனிந்து
அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாம்மாய்ந் தனரே குடைதுளங் கினவே
உரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே
பன்னூறு அடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடங்கெட ஈண்டிய வியன்கண் பாசறைக்
களங்கொளற்கு உரியோர் இன்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்றால் அமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி ஆங்கமைந் தனரே
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்றஉணவி னோரும் ஆற்ற

வரும்பெறல் உலக நிறைய
விருந்துபெற் றனரால் பொலிகநும் புகழே'' (புறம்-92)

என வரும்.

செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்—போரிடத்தே தன்வேந்தன் வஞ்சத் தாற் பட்டானாகச் சினங்கொண்ட மனத்தனாய்ப் பெரும்படைத் தலைவன் தலைமயங்கிப் பொருத நல்ல புகழைப் பெற்ற நிலைமைக்கண்ணும்;

அது குருகுலவேந்தனைக் குறங்கறுத்தஞான்று இரவு ஊரெறிந்து பாஞ்சாலரையும் பஞ்சவர்மக்கள் ஐவரையுங் கொன்று வென்றி கொண்ட அச்சுவத்தாமாவின் போர்த்தொழில் போல்வன. தன்னரசன் அறப்போரிடத்துப் படாது வஞ்சனை யாற் படுதலின், அவனுக்குச் சினஞ்சிறந்தது இச்சிறப்பில்லாத தும்பையும் இக்கலியூழிக்கா மென்பது 'சென்று தலையழிக்குஞ் சிறப்பிற்று' (தொல்-பொ-புற-15) என்புழிக் கூறிற்று.

(எ - டு)

"மறங்கெழு வேந்தன் குறங்கறுத்து இட்டபின்
அருமறை ஆசான் ஒருமகன் வெகுண்டு
பாண்டவர் வேர்முதல் கீண்டெறி சீற்றமோடு
இரவூர் அறியாது துவரை வேந்தொடு
மாதுலன் தன்னை வாயிலின் நிறீஇக்
காவல் பூட்டி ஊர்ப்புறக் காவயின்
ஐவகை வேந்தரோடு அரும்பெறல் தம்பியைக்
கைவயிற் கொண்டு கரியோன் காத்தலில்
தொக்குடம் பிரீஇத் துறக்கம் எய்திய
தந்தையைத் தலையற எறிந்தவன் இவனெனத்
துஞ்சிடத் தெழீஇக் குஞ்சி பற்றி
வடாது பாஞ்சாலன் நெடுமுதற் புதல்வனைக்
கழுத்தெழத் திருகிப் பறித்த காலைக்
கோயில் கம்பலை ஊர்முழுது உணர்த்தலில்
தம்பியர் மூவரும் ஐம்பான் மருகரும்

உடன்சமர் தொடங்கி ஒருங்குகளத் தவிய
வாள்வாய்த்துப் பெயர்ந்த காலை ஆள்வினைக்கு
இன்னோர் இனிப்பிறர் இல்லென வொராங்குத்
தன்முதல் தாதையொடு கோன்முதல் அமரர்
வியந்தனர் நயந்த விசும்பின்
இயன்றலை உலகமும் அறிந்ததால் அதுவே."

இப் பாரதப்பாட்டினுள் அவ்வாறுதல் காண்க.

ஒருவற்குப் பல் படை உடைதலின் மற்றவன் ஒள்வாள் வீசிய நூழிலும்—அங்ஙனம் நல்லிசை எய்திய ஒருவற்கு வஞ்சத்தாற் கொன்ற வேந்தன் பல்படை புறங்கொடுத்தலின் அவரைக் கோறல் புரிதல் அறனன்றென்று கருதாது அவன் வாளாற் றடிந்து கொன்று குவித்தற்கண்ணும்;

வஞ்சத்தாற் கொன்ற வேந்தனைக் கொன்றமைபற்றித் தனக்குக் கெட்டோரையும் அடங்கக் கோறற்கு உரியானை நல்லிசை முன்னர்ப் பெற்றோனென்றார். நூழிலாவது, கொன்று குவித்தல்.

"வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழி லாட்டு"
(பத்துப்-மதுரைக், 255-257)

என்றாற்போல.

(எ-டு)

"அறத்தில் பிறழ வரசெறியும் தானை
மறத்தில் புறங்கண்டு மாறான்—குறைத்தடுக்கிச்
செல்லுங்கால் காட்டுத்தீச் சென்றாங்குத் தோன்றுமே
பல்படையார் பட்ட படி"

எனவரும்,

புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே—பொருந்தித் தோன்றும் பன்னிரு துறையினையுடைத்துத் தும்பைத்திணை என்றவாறு.

இன்னும், உளப்படப் புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்து எனவுங் கூட்டிப் பன்னிரண்டன்கண்ணும் முற்கூறிய வெட்சித் திணை முதலியவற்றான் நிகழுந் தும்பையும் வந்துகூடப் பின் அவற்றிற்கு முரியவாய்ப் பொருந்தித் தோன்றும் பன்னிரு துறையினையுடைத்துத் தும்பைத்திணை என்றும் பொருள்கொள்க. பொருள் இடமாகத் துறை இடத்தியல் பொருளாங்கால் ஏனைத் திணைக்கட் கூறினாற்போல ஒன்று நிகழ்ந்தபின் ஒன்றுநிகழாது இரண்டு படைக்கும் பொருந்த ஒரு காலத்து இத்திணை நிகழு மென்றற்குப் 'புல்லித்தோன்றும்' என்றார். பல்பெருங் காதமாகிய நெடுநெறியிடைத் துணிந்த இடத்தையும் உலகம் துறையென்பது போல் இச்சூத்திரத்துத் துறையைத் தொகுதியுடன் அறுதி காட்டிற்றென்றுணர்க. இவ்விலக்கணம் மேல்வருகின்ற திணை கட்கும் ஒக்கும்.

(வி–ரை) நோனார் - போர் செய்தற்கு இயலாதவர். உட்குவர்- அஞ்சுவர். பிணம்தின் பெண்டிர் - பேய் மகளிர். கதம் - சினம். ஐயனாரிதனார் தேர்மறம் என்றொரு துறை கூறுவர். அதனையே தேர் தானே செல்லாமையின் தேர்க்கு மறமின்று என இவர் மறுத்துக் கூறுகின்றார்.

மறம் சிறப்ப - வீரம் சிறக்க.

கறுவு கொண்டு - சினந்து.

மூதின் முல்லை - 'அடல் வேல் ஆடவர்க்கன்றியும் அவ்வில் மடவரல் மகளிர்க்கும் மறமிகுத்தன்று' இல்லாண் முல்லை - 'கழுமிய காதல் கணவனைப் பழிச்சி, இழுமென் சீர்த்தி இல்மலிபு உரைத்தன்று'; வல்லாண்முல்லை-'இல்லும் பதியும் இயல்பும் கூறி நல்லாண்மையை நலமிகுத்தன்று'; பாண்பாட்டு-'வெண்கோட்ட களிறெறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக் கைவல் யாழ்ப்பாணர் கடனிறுத்தன்று'; என விளக்கம் காண்பர் ஐயனாரிதனார். போர்க் களச் சிறப்பைக் கூறுவாருள் இவ்வகையினரை மட்டும் கூறி

ஏனைய கூத்தர் முதலியோர் கூறுவனவற்றைக் கூறுது போவார் ஐயஞரிதஞர். முதல் நூல் – அகத்தியம்.

துப்பு – வலிமை, வயிர் – ஊது கொம்பு, நரல – ஒலிக்க, பாழித்தோள் – வலிமை பொருந்திய தோள்.

கங்கை சிறுவன் – வீடுமன்; கதிரோன் செம்மல் – கர்ணன்,

மரவடி – மரக்கால்.

கண் கூடிறுத்த – ஒருங்கு கூடித்தங்கிய, குமரிப்படை – புதுமையுறச் செம்மை செய்யப்பட்ட வேல் முதலிய படை, அழுவம் – போர்க்களம், நாள் முறை தபுத்தீர் – வாழ்நாள் முறையை முடித்தவரே; ஒருசிறை – ஒருபக்கம்.

மெய்வேல் – மார்பின்கண் நின்ற வேல், பறியா – பறித்து; இரங்காழ் – இரவ மரத்தின் விதை. சில்லுறை – சிலவாகிய பிரை. ஒற்கத்து – தளர்ந்தவிடத்து.

கோட்டம் – வளைவு.

செற்றிய – கறுவுகொண்டு சூழ்ந்த.

கூழை – பின்னணிப்படை.

கடிமுகம் – படை முகம்.

காலின்பரி – காற்றின் வேகம். பாய்மா – பாய்ந்து வரும் குதிரை. செல்வன் – கணவன், கூடல் – இரு பேரரசர்களும் கூடுமிடம். உழுத்ததர் – உழுத்தம் சக்கை, ஓய்நடை – தளர்ந்த நடை. நெய்மிதி – நெய்யை வார்த்து மிதித்த உணவு. கலந் தொடா மகளிரின் – பாண்டங்களைத் தொடுதற்கு உரிய தூய்மை இல்லாத மகளிர்.

'ஒரு குடை மன்னனைப் பல குடை நெருங்கச் செருவிடைத் தமியன் தாங்கற்கும் உரித்தே' என ஐயஞரிதஞர் கூறுவது இங்குக் கூறப்பெறும் தார்நிலையொடு இணைத்து எண்ணத் தக்கது. வெய்யோன் – கதிரவன். கையகல – நீங்க. செய்யோன் – கதிரவன். புகழ் வெய்யோன் – புகழை விரும்புகின்றவன்.

குறட்டின் - தச்சன் அடுத்துத் தைத்த வண்டியின் குடம் போல; வேல்கள் தைத்த மார்பிற்கு இது உவமையாயிற்று. ஞாட்பு - போர். உறைப்புழி - மழை பெய்யுமிடத்து. ஓலை - பனை ஓலையில் செய்யப்பட்ட குடை. மறைக்குவன் - படைக் கருவிகள் தாக்காது தடுக்குவன்.

இருவர் - சுந்தோப சுந்தர். எருக்கினர் - உடன்றனர். இளையோன் - துச்சாதனன் அவன் சிறுவன் துச்சனி. வீமற்கு இளையோன் அருச்சுனன் அவன் சிறுவன் அபிமன்யு. கூழை - பின்னணிப்படை. சிறக்கணித்து - கண்ணைச் சுருக்கிப் பார்த்து. இதனை ஐயனாரிதனார் எருமை மறம் என்பர். 'பெயர் பொடிப்பச் சினங்கடைப் பெயர்படைக்குப் பின்னின்றன்று' என்பர் அவர். பாழி-வலி; வலிமையுடைய உடலுக்காயினமையின் ஆகுபெயரா யிற்று. இளம்பூரணர் கருவியை அறுத்து மல்லினால் கொள்ளும் ஏமப்போர் என்பர். பாழி - தோள் எனினும் அமையும். ஐயனாரிதனார் இதனை ஏம எருமை என்பர். 'குடைமயங்கிய வாளமருள் படை மயங்கப் பாழி கொண்டன்று' என்பது அவர் தரும் இலக்கணமாகும்.

தண்டு இறுத்து - தானையை அழித்து. மாமனை - சகுனியை. ஏருடல் - ஏறு கோடல் விழவு.

பீலிக்கண்ணி - மயிர்ப்பீலியால் ஆனமாலை. மொய்ம்பின் - உடல் வலியால். கையெறிந்தானும் - யானையினது கையை வெட்டியானும். கடுக்கொண்டு எதிர்த்தானும் - சினங்கொண்டு எதிர்த்தானும். மான வேந்தன் - அருச்சுனன்.

பட்டோன் - இறந்தோன். ஐயனாரிதனார் இவ்வமலையை ஒள்வாள் அமலை என்பர்.

மணிநிறப் பாகன் - கண்ணன். ஐவர்க்கு இடையோன் - அருச்சுனன். ஐயனாரிதனாரும் 'அழிவின்றிப் புகழ்நிறீஇ ஒழிவின்றிக் களத்தொழிந்தன்று' என இத்தொகைநிலையைத் தழுவி இலக்கணம் கூறுவர்.

தொட்டு - தோன்றி, அனந்தர் - மந்தமான ஓசை. பைந்நிலம்- மக்கள் தொகுதி. வாடாப் பூ - கற்பகப் பூ.

குருகுல வேந்தன் - துரியோதனன். குறங்கு - தொடை. அறுத்தவன் - பீமன். இவன் தனது தண்டால் துரியோதனின் தொடையை முறித்தவன். வஞ்சனையால் படுதலின் - ஒருவரை ஒருவர் தாக்குங்கால் அரைக்குக் கீழ் அடித்தல் அறமன்று. ஆதலின் வஞ்சனையாயிற்று.

அருமறை ஆசான் - துரோணர். அவன் மகன் அசுவத்தாமன். துவரை வேந்து - கிருதவன்மன். மாதுலன் - கிருபன். அரும்பெறல் தம்பி - சாத்தகி. கரியோன் - கண்ணன். தந்தையை - துரோணரை. பாஞ்சாலன் புதல்வன் - திட்டத்துய்மன். தம்பியர் மூவரும் - அவன் தம்பியராகிய உத்தமோசா, உதர்மன், சிகண்டி ஆகிய மூவரையும்.

ஐயனாரிதனார் கழல்வேந்தர் படைவிலங்கி அழல்வேல் திரித்து ஆட்டமர் தலை 'நூழில்' என்பர்.

வள்ளை - வள்ளைக்கொடி. கொள்ளை சாற்றி - விலை கூறி. முடி - வலை. வேழப்பழனம் - கொருக்கத்தி நிறைந்த வயல். மீன்கள் பலவற்றையும் கொன்று குவித்தல் 'நூழிலாட்டு' ஆதல்போல வீரர் பலரையும் கொன்று குவித்தல் நூழிலாம். (17)

வாகையின் பொது விலக்கணம்

73. வாகை தானே பாலையது புறனே

இவ் வாகைத்திணை பாலையெனப்பட்ட அகத்திணைக்குப் புறனாமென்கின்றது.

(இ-ள்) வாகை தானே—இனிக் கருதிநின்ற புறத்திணையுள் வாகையெனப்பட்டது தானே; பாலையது புறனே—பாலையென்னும் அகத்திணைக்குப் புறனும் என்றவாறு.

என்னை? பாலைக்குப் புணர்ச்சியின் நீங்கி இல்லறநிகழ்த்திப் புகழெய்துதற்குப் பிரியுமாறுபோலச், சுற்றத்தொடர்ச்சியின் நீங்கி

1. இச்சூத்திரத்தையும், அடுத்த சூததிரத்தையும் இணைத்து ஒரே சூத்திரமாகக் கொள்வர் இளம்பூரணர்.

அறப்போர் செய்து துறக்கம்பெறுங் கருத்தினுற் சேறலானும், வாளினுந் தாளினும் நிறையினும் பொறையினும் வென்றி யெய்துவோரும் மனையோரைநீங்கிச் சேறலானும் பிரிவுளதா யிற்று. பாலை தனக்கென ஓர் நிலமின்றி நால்வகைநிலத்தும் நிகழுமாறு போல, முற்கூறிய புறத்திணை நான்கும் இடமாக வாகைத்திணை நிகழ்தலிற்றனக்கு நிலமின்றாயிற்று. "நாளு நாளு மாள்வினை யழுங்க, வில்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழ்" என ஆள்வினைச் சிறப்புக்கூறிப் பிரியுமாறு போல இதற்குத் துறக்கமே எய்தும் ஆள்வினைச் சிறப்புக் கூறலுங்கொள்க. பாலை பெருவரவிற்றாய்த் தொகைகளுள் வருமாறுபோல வாகையும் பெருவரவிற்றாய் வருதலுங் கொள்க.

(வி-ரை) துறை - துணித்துத் தனித்தனியாக வரும் துறை. தொகுதி - இந்நூற்பாவில் பன்னிரு துறையாகக் கூறப்பட்டுள்ள தொகுதி. அறுதி - முடிபு. தாளினும் என்பது தோளினும் என் றிருத்தல் வேண்டும். ஆள்வினை - முயற்சி. அழுங்க - குன்ற. பெருவர விற்றாய் - பெரும்பாலாய். (18)

அதன் சிறப்பிலக்கணம்

74. தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப.

இஃது அவ் வாகைத்திணைக்குப் பொதுவிலக்கணங் கூறு கின்றது.

(இ - ள்) தாவில் கொள்கைத் தத்தங் கூற்றை—வலியும் வருத்தமுமின்றி இயல்பாகிய ஒழுக்கத்தானே நான்கு வருணத் தோரும் அறிவருந் தாபதர் முதலியோருந் தம்முடைய கூறுபாடு களை; பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப—இருவகைப்பட மிகுதிப் படுத்தலென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

இருவகையாவன, தன்னைத்தானே மிகுதிப்படுத்தலும் பிறர் மீக்கூறுபடுத்தலுமாம். இனி இருவகைக்குள் உறழ்ச்சியாற் பெற்ற வென்றியை வாகையெனவும், இயல்பாகப் பெற்ற

வென்றியை முல்லையெனவுங் கூறுவர். படுதலென்றது படுத்தலெனப் பிறவினையாற் கூறினர், அவர் தம்மினுறழாதவழியும் ஒருவன் அவரை உறழ்ந்து உயர்ந்தோன் இவனென் றுரைத்தலும் வாகையென்றற்கு. ஒன்றனோடு ஒப்பு ஒரீஇக் காணுது மாணிக்கத் தினை நன்றென்றாற்போல உலகமுழுதும் அறியும் உயர்ச்சியுடைமையும் அது. தாவில் கொள்கையெனவே இரணியனைப் போல வலியானும் வருத்தத்தானுங் கூறுவித்துக்கோடல் வாகையன்றாயிற்று.

(வி-ரை) மீக்கூறு படுத்தல்-உயர்வாகக் கூறல். ஒப்பு ஒரீஇ ஒப்பு நீக்கி. (19)

வாகைத்திணைக் குரிய துறைகள்

75. அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபி னரசர் பக்கமும்
இருமூன்று மரபி னேனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியி னாற்றிய வறிவன் றேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்
[1]அனைநிலை வகையோ டாங்கெழு [2]வகையிற்
றொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்.

இது வாகைத்திணைக்குப் பொதுவிலக்கணங் கூறினர், இன்னும் அதற்கேயாவதோர் சிறப்பிலக்கணம் பொதுவகையாற் கூறுகின்றது; மேற்கூறி வருகின்றாற்போலத் துறைப்படுத்திக் கூறுதற்கேலாத பரப்புடைச் செய்கை பலவற்றையுந் தொகுத்து ஓரோவொன்றாக்கி எழுவகைப்படுத்திக் கூறுதலின்.

(இ - ள்) அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்—ஆறு கூற்றினுட்பட்ட பார்ப்பியற் கூறும்;

1 அறநிலை,
2 வகையால் எனப்பாடம் கொள்வர் இளம்பூரணர்.

ஆறுபார்ப்பியலென்றது வகையென்றதனான் அவை தலை இடை கடையென ஒன்று மும்மூன்றாய்ப் பதினெட்டாம் என்று கொள்க; அவை ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் கொடுத்தல் கோடல் என ஆறும். இருக்கும் எசுரும் சாமமும் இவை தலையாய ஒத்து; இவை வேள்வி முதலியவற்றை விதித்தலின் இலக்கணமுமாய், வியாகரணத்தான் ஆராயப்படுதலின் இலக்கியமுமாயின. அதர்வமும் ஆறங்கமுந் தரும நூலும் இடையாய ஒத்து; அவர்தம் வேள்விமுதலிய ஒழுக்கங் கூறுது பெரும்பான்மையும் உயிர்கட்கு ஆக்கமேயன்றிக் கேடுஞ் சூழும் மந்திரங்களும் பயிறலின் அவற்றோடு கூறப்படாதாயிற்று.

ஆறங்சமாவன, உலகியற்சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடனாராயும் ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம் பாரத்துவாசம் ஆபத்தம்பம் ஆத்திரேயம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வாராகம் முதலிய கணிதங்களும், எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும், செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம்.

தருமநூலாவன, உலகியல்பற்றி வரும் மனுமுதலிய பதினெட்டும்; இவை வேதத்திற்கு அங்கமானமையின் வேறாயின.

இனி இதிகாச புராணமும் வேதத்திற்கு மாறுபடுவாரை மறுக்கும் உறழ்ச்சிநூலும் அவரவர் அதற்கு மாறுபடக்கூறும் நூல்களும் கடையாய ஒத்து. எழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய்ந்து இம்மைப்பயன் தருதலின் அகத்தியந் தொல்காப்பியம் முதலிய தமிழ்நூல்களும் இடையாய ஒத்தாமென்றுணர்க; இவையெல்லாம் இலக்கணம். இராமாயணமும் பாரதமும் போல்வன இலக்கியம்.

இனித் தமிழ்ச்செய்யுட்கண்ணும் இறையனாரும் அத்தியனாரும் மார்க்கண்டேயரும் வான்மீகனாருங் கவுதமனாரும் போல்வார் செய்தன தலையும், இடைச்சங்கத்தார் செய்தன இடையுங், கடைச்சங்கத்தார் செய்தன கடையுமாகக்கொள்க.

இங்ஙனம் ஒத்தினையும் மூன்றாகப் பகுத்தது, அவற்றின் சிறப்புஞ் சிறப்பின்மையும் அறிவித்தற்கு. இவற்றுள் தருக்கமும் கணிதமும் வேளாளர்க்கும் உரித்தாம்.

இனி ஓதுவிப்பனவும் இவையேயாகலின் அவைக்கும் இப் பகுதி மூன்றும் ஒக்கும். ஓதுவித்தலாவது கொள்வோனுணர்வு வகை அறிந்து அவன் கொள்வரக் கொடுக்கும் ஈவோன்றன்மை யும் ஈதலியற்கையுமாம். வேட்டலாவது, ஐந்தீயாயினும் முத்தீ யாயினும் உலகியற்றீயாயினும் ஒன்றுபற்றி மங்கல மரபினாற் கொடைச்சிறப்புத்தோன்ற அவிமுதலியவற்றை மந்திரவிதியாற் கொடுத்துச் செய்யுஞ் செய்தி; வேளாண்மைபற்றி வேள்வி யாயிற்று. வேட்பித்தலாவது, வேள்வியாசிரியர்க்கோதிய இலக் கணமெல்லாம் உடையனாய் மாணாக்கற்கு அவன் செய்த வேள்விகளாற் பெரும்பயனைத் தலைப்படுவித்தலை வல்லனாதல்; இவை. மூன்று பகுதியவாதல் போதாயனீயம் முதலியவற்றா னுணர்க. கொடுத்தலாவது, வேள்வியாசானும் அவற்குத் துணை யாயினாரும் ஆண்டுவந்தோரும் இன்புறுமாற்றான் வேளாண்மை யைச் செய்தல். கோடலாவது, கொள்ளத் தகும் பொருள்களை அறிந்துகொள்ளுதல். உலகுகொடுப்பினும் ஊண் கொடுப்பினும் ஒப்பநிகழும் உள்ளம் பற்றியுந், தாஞ் செய்வித்த வேள்விபற்றி யுங் கொடுக்கின்றான் உவகைபற்றியுங், கொள்பொருளின் ஏற்றிழிவு பற்றியுந், தலை இடை கடையென்பனவுங் கொள்க.

இனி வேட்பித்தன்றித் தனக்கு ஓத்தினாற்கோடலுங் கொடுப்பித்துக் கோடலுந் தான் வேட்டற்குக் கோடலுந் தாய மின்றி இறந்தோர் பொருள்கோடலும் இழந்தோர் பொருள் கோடலும் அரசு கோடலுந் துரோணாசாரியனைப் போல்வார் படைக்கலங் காட்டிக் கோடலும் பிறவுங் கோடற்பகுதியாம்.

பார்ப்பியலென்றது பக்கமென்றதனானே பார்ப்பார் ஏனை வருணத்துக்கட்கொண்ட பெண்பால்கட்டோன்றின வருணத் தார்க்குஞ் சிகையும் நூலும் உளவேனும் அவர் இவற்றிற்கெல் லாம் உரியரன்றிச் சிலதொழிற்கு உரியரென்பது கொள்க.

உதாரணம் :—

“ஓதல் வேட்ட லவைபிறர்ச் செய்த
லீத லேற்றலென் றாறுபுரிந் தொழுகு
மறம்புரி யந்தணர் வழிமொழிந் தொழுகி.”

(பதிற்றுப்-24)

இஃது அந்தணர்க்குக் கூறிய பொது.

"முறையோதி னன்றி முளரியோ னல்லன்
மறையோதி னனிதுவே வாய்மை – யறிமினோ
ஈன்றாள் வயிற்றிருந்தே யெம்மறையு மோதினான்
சான்றான் மகனொருவன் றான்."

இஃது ஓதல்.

இனி ஓதற்சிறப்பும் ஓதினாற்கு உளதாஞ் சிறப்புங் கூறுதலுங் கொள்க.

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்து யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து." (நாலடி-14. 2)

"ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை யந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாதலா
லாற்றுணா வேண்டுவ தில்". (பழமொழி)

"ஒத்த முயற்சியா னொத்து வெளிப்படினு
நித்திய மாக நிரம்பிற்றே – யெத்திசையுந்
தாவாத வந்தணர் தாம்பயிற்றிக் காவிரிநாட்
டோவாத வோந்தி னொலி."

இஃது ஓதுவித்தல்.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு" (குறள்-அறிவுடைமை-4)

இஃது ஓதுவித்தற் சிறப்பு.

"நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டி

ஞறுணர்ந்த வொருமுதுநூ
லிகல்கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
மூவேழ் துறையு முட்டின்று போகிய
வுரைசால் சிறப்பி னுரவோர் மருக
வினைக்குவேண்டி நீபூண்ட
புலப்புல்வாய்க் கலைப்பச்சைச்
சுவற்பூண்ஞாண் மிசைப்பொலிய
மறங்கடிந்த வருங்கற்பி
னறம்புகழ்ந்த வலைசூடிச்
சிறுநுதற்பே ரகலல்குற்
சிலசொல்லிற் பலகூந்தனி
னிலைக்கொத்தநின் றுணைத்துணைவியர்
தமக்கமைந்த தொழில்கேட்பக்
காடென்று நாடென்றுங்
கிரேழி னிடமுட்டாஅது
நீர்நாண நெய்வழங்கியு
மெண்ணுணப் பலவேட்டு
மண்ணுணப் புகழ்பரப்பியு
மருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் றிருந்தேந்துநிலை
யென்றுங், காண்கதில் லம்ம யாமே குடாஅது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்குந்
தண்புனற் படப்பை யெம்மூ ராங்க
ணுண்டுந் தின்று மூர்ந்து மாடுகஞ்
செல்வ லத்தை யானே செல்லாது
மழையண் ணுப்ப நீடிய நெடுவரைக்
கழைவள ரிமயம் போல
நிலீஇய ரத்தைநீ நிலமிசை யானே." (புறம்-166)

இதனுள் வேட்டவாறும் ஈந்தவாறுங் காண்க,

"ஈன்ற வுலகளிப்ப வேதிலரைக் காட்டாது
வாங்கியதா யொத்தானம் மாதவத்தோ—னீந்த
மழுவா ணெடியோன் வயக்கஞ்சால் வென்றி
வழுவாமற் காட்டியவாறு."

இது பரசுராமனைக் காசிபன் வேட்பித்த பாட்டு.

"நளிகட லிருங்குட்டத்து" என்னும் (29) புறப்பாட்டினுள், அந்தணன் வேட்பித்தலும் அரசன் வேட்டலும் வந்தது.

"இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள." (குறள்-ஈகை-3)

இஃது ஈதல்.

"ஈத்துவக்கு மின்ப மறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்." (குறள்-ஈகை-8)

இஃது ஈதற் சிறப்பு.

"நிலம்பொறை யாற்று நிதிபல கொண்டுங்
குலம்பெறுதீங் கந்தணர் கொள்ளார்—நலங்கிளர்
தீவா யவிசொரியத் தீவிளங்கு மாறுபோற்
றுவா தொளிசிறந்த தாம்."

இஃது ஏற்றல்.

"தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்." (நாலடி-48)

இஃது ஏற்றற் சிறப்பு.

ஓதுவித்தலும் வேட்பித்தலும் ஏற்றலும் அந்தணர்க்கே உரிய.

ஐவகை மரபின் அரசர் பக்கமும்—ஓதல் வேட்டல் ஈதல் காத்தல் தண்டஞ்செய்தல் என்னும் ஐவகையிலக்கணத்தை யுடைய அரசியற் கூறும்.

வகையென்றதனுன் முற்கூறிய மூன்றும் பொதுவும், பிற் கூறிய இரண்டுஞ் சிறப்புமாதல் கொள்க.

பார்ப்பார்க்குரியவாக விதந்த வேள்வியொழிந்த வேள்விக ளுள் இராசசூயமும் துரங்கவேள்வியும் போல்வன அரசர்க்குரிய வேள்வியாம். கலிங்கங் கழுத்து யாத்துக் குளம்புங் கோடும் பொன்னணிந்த புனிற்றுநிரையுங், கனகமும் கமுகு முதலியனவும் அன்னமும் செறிந்த படப்பை சூழ்ந்த மனையுந், தண்ணடையுங், கன்னியரும், பிறவுங்கொடுத்தலும் மழுவாணெடியோனைப்ப உலகு முதலியன கொடுத்தலும் போல்வன அவர்க்குரிய ஈதலாம். படைக்கலங்களாலும் நாற்படையானுங் கொடைத் தொழிலா னும் பிறவாற்றானும் அறத்தின் வழாமற் காத்தல் அவர்க்குரிய காப்பாம். அங்ஙனங் காக்கப்படும் உயிர்க்கு ஏதஞ்செய்யும் மக்களையாயினும் விலங்கையாயினும் பகைத்திறத்தையாயினும் அறஞ்செய்யா அரசையாயினும் விதிவழியால் தண்டித்தல் அவர்க்குரிய தண்டமாம். இஃது அரசர்க்கு அறமும் பொருளும் இன்பமும் பயக்கும்.

'வகை'யென்றதனானே களவுசெய்தோர் கையிற் பொருள் கோடலும், ஆறிலொன்றுகோடலுஞ், சுங்கங்கோடலும், அந் தணர்க்கு இறையிலி கொடுக்குங்கால் இத்துணைப்பொருள் நும் மிடத்து யான் கொள்வலெனக் கூறிக்கொண்டு அதுகோடலும், மறம்பொருளாகப் பகைவர்நாடு கோடலுந், தமரும் அந்தணரும் இல்வழிப் பிறன்றுயங்கோடலும், பொருளில்வழி வாணிகஞ் செய்துகோடலும், அறத்திற்றிரிந்தாரைத் தண்டத்திற்றகுமாறு பொருள்கோடலும் போல்வன கொள்க. அரசியலென்றது பக்கமென்றதனான் அரசர் ஏனைவருணத்தார்கட் கொண்ட பெண்பாற்கட் டோன்றிய வருணத்துப்பகுதியோருஞ் சில தொழிற்குரியர் என்றுகொள்க.

(எ-டு)

"சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்
றைந்துடன் போற்றி யவைதுணை யாக
வெவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கைக்
காலை யன்ன சீர்சால் வாய்மொழி
யுருகெழு மரபிற் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடரெழு தோறும்
விருப்புமெய் பரந்த பெரும்பெய ராவுதி" (பதிற்றுப்-21)

என வரும்.

“கேள்வி கேட்டுப் படிவ மொடியாது
வேள்வி வெட்டனை யுயர்ந்தோ ருவப்பச்
சாயறல் கடுக்குந் தாழிருங் கூந்தல்
வேறுபடு திருவி னின்வழி வாழியர்
கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலம்
பந்தர்ப் பாய்ந்த பலர்புகழ் முத்தம்
வரையக நண்ணிக் குறும்பொறை நாடித்
தெரியுநர் கொண்ட சிரறுடைப் பைம்பொறிக்
கவைமரங் கடுக்குங் கவலைய மருப்பிற்
புள்ளி யிரலைத் தோலூ னுதிர்த்துத்
தீதுகளைந் தெஞ்சிய திகழ்விடு பாண்டிற்
பருதி போகிய புடைகிளை கட்டி
யெஃகுடை யிரும்பி னுள்ளமைத்து வல்லோன்
சூடுநிலை யுற்றுச் சுடர்விடு தோற்றம்
விசும்பாடு மரபிற் பருந்தூ றளப்ப
நலம்பெறு திருமணி கூட்டு நற்றோள்
ஒடுங்கீ ரோதி யொண்ணுதல் கருவி
லெண்ணியன் முற்றி யீரறிவு புரிந்து
சால்புஞ் செம்மையு முளப்படப் பிறவுங்
காவற் கமைந்த வரசுதுறை போகிய
வீறுசால் புதல்வர்ப் பெற்றனை யிவணர்க்
கருங்கட னிறுத்த செருப்புகன் முன்ப
அன்னவை மருண்டனெ னல்லே னின்வயின்
முழுதுணர்ந் தொழுக்கு நரைமூ தாளனை
வண்மையு மாண்பும் வளனு மெச்சமுந்
தெய்வமும் யாவதுந் தவமுடை யோர்க்கென
வேறுபல நனந்தலை பெயரக்
கூறினை பெருமநின் படிமை யோனே.” (பதிற்று-74)

எனவும் வருவனவற்றுள் ஓதியவாறும் வேட்டவாறுங் காண்க.

“ஒருமழுவாள் வேந்த ளொருமூ வெழுகா
லரசடு வென்றி யளவோ—வுரைசான்ற

வீட்டமாம் பல்பெருந்தூ ணெங்கும் பசுப்படுத்து
வேட்டநாள் பெற்ற மிகை".

இதுவும் வேட்டல்.

"விசையந்தப்பிய" என்னும் பதிற்றுப்பத்து ஈகை கூறிற்று.

"ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்." (குறள்-கொடுங்-10)

இது காவல்கூறிற்று.

"கடுங்கண்ண கொல்களிற்றான்" என்னும் (14) புறப்பாட்டுப் படைக்கலங் கூறியவதனாற் காத்தல் கூறியவாறுங் காண்க.

"தொறுத்தவய லாரல்பிறழ்நவு
மேறு பொருதசெறு வுழாது வித்துநவுங்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்க ணெருமை யினிரைதடுக் குநவுங்
கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்
வளைதலை மூதா வாம்ப லார்நவு
மொலிதெங்கி னிமிழ்மருதிற்
புனல்வாயிற் பூம்பொய்கைப்
பாடல் சான்ற பயங்கெழு வைப்பி
னாடுகவி னழிய நாமந் தோற்றிக்
கூற்றுடன் றுநின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்
விரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்
கவைத்தலைப் பேய்மகன் கழுதூர்ந் தியங்க
வூரிய நெருஞ்சி நீறுடு பறந்தலைத்
தாதெரு மறுத்த கலியழி மன்றத்
துள்ள மழிய வூக்குநர் மிடறபுத்
துள்ளுநர் பனிக்கும் பாழா யினவே
காடே கடவுண் மேன புறவே
யொள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன

வாறே யவ்வனைத் தன்றியு ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
குடிபுறந் தருநர் பார மோம்பி
யழல்சென்ற மருங்கின் வெள்ளி யோடாது
மழைவேண்டு புலத்த மாரி நிற்ப
நோயொடு பசியிகந் தொரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே." (பதிற்றுப்-13)

இதனுண் மறத்திற் சென்று நாட்டை அழித்தவாறும் அறத்திற் றிரிந்த வேந்தனையழித்து அவன் நாட்டைக் குடியோம்பிக் காத்தவாறுங் கூறிற்று.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்." (குறள்-செங்-10)

இது தண்டம்.

இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்—ஓதலும் வேட்டலும் ஈதலும் உழவும் நிரையோம்பலும் வாணிகமுமாகிய அறுவகை இலக்கணத்தையுடைய வாணிகர்பக்கமும், வேதம் ஒழிந்தன ஓதலும் ஈதலும் உழவும் நிரையோம்பலும் வாணிகமும் வழிபாடுமாகிய அறுவகை இலக்கணத்தையுடைய வேளாளர் பக்கமும்;

வாணிகரையும் வேளாளரையும் வேறுகூறுது இருமூன்று மரபினேனேரெனக் கூடவோதினர், வழிபாடும் வேள்வியும் ஒழிந்த தொழில் இருவர்க்குமொத்தலின்.

இனி வேளாளர்க்கு வழிபாடு கொள்ளாது பெண்கோடல் பற்றி வேட்டல் உளதென்று வேட்டலைக்கூட்டி ஆறென்பாருமுளர். வழிபாடு இருவகை வேளாளர்க்கும் உரித்து. இனி வேட்டலைக் கூட்டுவார் அரசராற் சிறப்பெய்தாத வேளாளர்க்கே வழிபாடு உரித்தென்பர்.

பக்கமென்பதனுன் வாணிகர்க்கும் வேளாளர்க்கும் அன்னியராகத் தோன்றினுரையும் அடக்குக; ஈண்டுப் பக்கத்தா

ராகிய குலத்தோர்க்குந் தொழில்வரையறை அவர்நிலைகளான் வேறுவேறு படுதல்பற்றி அவர்தொழில் கூருது இங்ஙனம் பக்கமென்பதனுன் அடங்கினர். இவை ஆண்பால்பற்றி உயர்ச்சி கொண்டன.

(எ-டு)

"ஈட்டிய தெல்லா மிதன்பொருட் டென்பதே
காட்டிய கைவண்மை காட்டினர்—வேட்டொறுங்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையுஞ் சங்கும்போற் றந்து".
(பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டு-குடிமரபு)

இது வாணிகரீகை.

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னு தவரு
ளறிவுடை யோனு றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே" (புறம்–183)

இது வேளாளர் ஓதலின் சிறப்புக் கூறியது.

"ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்." (குறள்-ஈகை-8)

இஃது இருவர்க்கும் ஈதற்சிறப்புக் கூறிற்று.

"போர்வாகை வாய்ந்த புரவலரின் மேதக்கா
ரேர்வாழ்ந ரென்பதற் கேதுவாஞ்—சீர்சா

லுரைகாக்கு மன்னர்க் கொளிபெருகத் தாந்த
நிரைகாத்துத் தந்த நிதி.''

இது வேளாளர் நிரைகாத்தது.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்." (குறள்-உழவு-3)

இஃது உழவுத்தொழிற் சிறப்பு இருவர்க்குங் கூறியது.

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.'' (குறள்-நடுவு-10)

இது வாணிகச்சிறப்பு இருவர்க்குங் கூறியது.

''இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்று வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்று வுணரற்பாற் றன்று.'' (நாலடி–குடி–3)

இது வழிபாடு கூறியது; ஏனைய வந்துழிக் காண்க.

மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்—காமம் வெகுளி மயக்கமில்லாத ஒழுக லாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வுமென்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைத்த முழுதுணர்வுடை யோன் பக்கமும்;

தேயத்தைக் 'கிழவோ டேஎத்து' (இறையனுரகப்-8) என்றாற்போலக் கொள்க.

(எ–டு)

''வாய்மை வாழ்ந மூதறி வாள
நீயே யொருதனித் தோன்ற லுறைபதி
யாருமி லொருசிறையானே தேரி
னவ்வழி வந்தநின் னுணர்வுமுதற் றங்குந்

தொன்னெறி மரபின மூவகை நின்றன
காலமு நின்னொடு வேறெனை
யாரோஒ பெருமநிற் றேர்கு வோரே."

எனவரும்.

"வாடாப் போதி மரகதப் பாசடை
மரநிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கு
மருளின் றீந்தே னிறைந்துநனி ஞெகிழ்ந்து
மலரினு மெல்லி தென்ப வதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கி நிமிர்ந்தெடுத்த
வாளும் போழ்ந்தில வாயின்
யாதோ மற்றது மெல்லிய வாறே."

இதுவும் அது.

கலசயோனியாகிய அகத்தியன் முதலியோரும் அறிவரென் றுணர்க.

நாலிருவழக்கிற் றாபதப் பக்கமும்—அவ்வறிவர் கூறிய ஆகமத்தின் வழிநின்று வீடுபெற முயல்வார்க்கு உரியவாகிய எண்வகை மார்க்கத்துத் தவம்புரியுங்கூறும்;

வழக்கென்றதனான் அந்நாலிரண்டுந் தவம்புரிவார்க்கு உரியனவுந் தவஞ்செய்து யோகஞ்செய்வார்க்கு உரியனவுமென இருவகையவென்று கொள்க.

அவற்றுள் தவஞ்செய்வார்க்கு உரியன ஊணசையின்மை, நீர்நசையின்மை, வெப்பம்பொறுத்தல், தட்பம்பொறுத்தல், இடம்வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என எட்டும், 'இவற்றிற்கு உணவினும் நீரினுஞ்சென்ற மனத்தைத் தடுத்தலும், ஐந்தீநாப்பணும், நீர்நிலையினும் நிற்றலுங், கடலுங் காடும் மலையும் முதலியவற்றில் நிற்றலுந், தாமரையும் ஆம்பலும் யாமையும் முதலிய ஆசனத்

திருத்தலும், உண்டற்காலை உரையாடாமையுந், துறந்தகாற் றெட்டும் வாய்வாளாமையும் பொருளென் றுணர்க.

இனி யோகஞ்செய்வார்க்குரியன, இயமம் நியமம் ஆசனம் வளிநிலை தொகைநிலை பொறைநிலை நினைதல் சமாதி என எட்டாம். இவற்றை,

"பொய்கொலை களவே காமம் பொருணசை
யிவ்வகை யைந்து மடக்கிய தியமம்."

"பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு
நயனுடை மரபி னியம மைந்தே."

"நிற்ற லிருத்தல் கிடத்தல் நடத்தலென்
றொத்த நான்கி னொல்கா நிலைமையோ
டின்பம் பயக்குஞ் சமய முதலிய
வந்தமில் சிறப்பி னாசன மாகும்."

"உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந்
தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை."

"பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாம
லொருவழிப் படுப்பது தொகைநிலை யாமே."

"மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை."

"நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்த னினைவே."

"ஆங்கனம் குறித்த வாய்முதற் பொருளொடு
தான்பிற னாகாத் தகையது சமாதி."

என்னும் உரைச்சூத்திரங்களா னுணர்க.

பக்கமென்றதனுன், முட்டின்றி முடிப்போர் முயல்வோர் என்பனவும்,

"நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை. தாழச் சுடரோம்பி—யூரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி." (புற-வெ-மாலை-வாகை-14)

என்பனவுங் கொள்க.

"ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளி
ரிழைநிலை நெகிழ்த்த மள்ளர்க் கண்டிகுங்
கழைக்க ணெடுவரை யருவி யாடிக்
கான யானை நந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே." (புறம்-251)

எனவும்,

"வைததனை யின்சொலாக் கொள்வானு நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானு—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்." (திரிகடுகம்-48)

எனவும்,

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து" (குறள்-அடக்கம்-9)

எனவும்,

"ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்" (குறள்-அவா-10)

எனவும்,

"நீஇ ராட னிலக்கிடை கோட
ரேழ லுடுத்த றெல்லெரி யோம்ப
லூரடை யாமை யுறுசடை புனைதல்

காட்டி லுணவு கடவுட் பூசை
யேற்ற தவத்தி னியல்பென மொழிப"

எனவும் வரும்.

ஏனைய வந்துழிக் காண்க.

அறிமரபிற் பொருநர்கட் பாலும்-தாந்தாம், அறியும் இலக்கணங்களாலே போர்செய்வாரிடத்துக் கூறுபாடும்.

அவை சொல்லானும் பாட்டானும் கூத்தானும் மல்லானுஞ் சூதானும் பிறவாற்றானும் வேறலாம்.

(எ-டு:)

"விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

(குறள்-சொல்வன்மை-8)

இது சொல்வென்றி.

"வண்டுறையுங் கூந்தல் வடிக்கண்ணான் பாடினாள்
வெண்டுறையுஞ் செந்துறையும் வேற்றுமையாக்—
கண்டறியக்
கின்னரம் போலக் கிளையமைந்த தீந்தொடையா
ழந்நரம்பு மச்சுவையு மாய்ந்து."

(புறப்-வெ-மாலை-பெருந்-18)

இது பாடல்வென்றி.

"கைகால் புருவங்கண் பாணி நடைதூக்குக்
கொய்பூங்கொம் பன்னாள் குறிக்கொண்டு—பெய்பூப்
படுகளிவண் டார்ப்பப் பயில்வளைநின் றாடுந்
தொடுகழன் மன்னன் றுடி."

(புறப்-வெ-மாலை-பெருந்-17)

இஃது ஆடல்வென்றி.

"இன்கடுங் கள்ளி ளுமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
யொருகான் மார்பொதுங் கின்றே யொருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே
நல்கினும் நல்கா னாயினும் வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதி லம்ம
பசித்துப் பணைமுயலும் யானை போல
விருதலை யொசிய வெற்றிக்
களம்புகு மள்ளர்க் கடந்தடு நிலையே." (புறம்-20)

இது மல்வென்றி.

"கழகத் தியலுங் கவற்றி னிலையு
மழகத் திருநுதலா ளாய்ந்து—புழகத்துப்
பாய வகையாற் பணிதம் பலவென்று
ளாய வகையு மறிந்து. (புற-வெ-மாலை ஒழிபு-16)

இது சூதுவென்றி.

அனைநிலை வகையோடு ஆங்கு எழுவகையில் தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்—அக்கூறுபட்ட ஆறுபகுதியும் நிலைக்களமாக அவற்றுக்கண் தோன்றிய வேறுபட்ட கூறுபாட்டோடு முன்னைய ஆறுங் கூட்டி அவ்வெழுகூற்றால் துறை பல திரண்ட தொகை பெற்றது அவ்வாகைத்திணை என்று கூறுவாராசிரியர் என்றவாறு.

அனையென்றது சுட்டு. நிலை—நிலைக்களம், நிலையது வகை. ஆங்கென்றதனை அனைநிலைவகையொ டென்பதன்கண் வகைக்கு முன்னே கூட்டுக. ஓடு எண்ணிடைச்சொல்லாதலின் முன்னெண்ணியவற்றொடு கூட்டி ஏழாயிற்று.

இனிப் பார்ப்பனப்பக்கத்து வகையாவன பார்ப்பார்க்குப் பார்ப்பனக் கன்னியிடத்துக் கற்புநிகழ்வதற்கு முன்னே களவில் தோன்றினும், அவள் பிறர்க்குரியளாகிய காலத்துக்களவில் தோன்றினும், அவள் கணவனை இழந்திருந்துழித் தோன்றினும், ஒழிந்த மூவகை வருணத்துப் பெண்பாற்கண்ணும் இவ்வாறே

தோன்றினும், அவரவர் மக்கட்கண் அவ்வாறே பிறழத் தோன்றினுமாகிய சாதிகளாம். இன்னோருந் தத்தந் தொழில் வகையாற் பாகுபட மிகுதிப்படுத்தல் வாகைத்திணையாம். ஒழிந்த பகுதி ஐந்தற்கும் இஃதொக்கும். இன்னும் பெண்பாலுயர்ந்து ஆண்பாலிழிந்தவழிப் பிறந்த சாதிகளும் அனைநிலை வகைப்பாற்படும். யோகிகளாய் உபாயங்களான் முக்காலமு முணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன்றேயத்து அனைநிலை வகையோராவர்; அவர்க்கு மாணுக்கராகித் தவஞ்செய்வோர் தாபதப்பக்கத்தாராவர். தகர்வென்றி பூழ்வென்றி கோழிவென்றி முதலியன பாலறிமரபிற் பொருநர்கண் அனைநிலைவகையாம்.

ஒரு வரையறைப்படாது பலதுறைப்படுவனவற்றை யெல்லாந் தொகைநிலையெனத் தொகுத்து ஒரோவொன்றாக்கிக் கூறினார்; தொகுத்துக் கூறலென்னும் உத்திவகையான். பார்ப்பன வாகை அரசவாகையென்றோதினால் அவற்றின் பகுதி அடங்காமையிற் குன்றக்கூறலாமாதலின் இங்ஙனமோதினார். காட்டாதனவற்றிற்கு உதாரணங்கள் வந்துழி வந்துழிக் காண்க.

(வி-ரை) வியாகரணத்தால் - இலக்கணத்தால். உறழ்ச்சி நூல் - மறுப்பு நூல்.

முளரியோன் - நான்முகன். ஐயனாரிதனார் 'பார்ப்பன வாகை' 'பார்ப்பன முல்லை' என இரு துறையாக்கி முன்னையது வேள்வியால் பிறரினும் மிகுக்கு மாற்றையும், பின்னையது வேந்தர்களிடைச் சந்து செய்விப்பதாகவும் கூறுவர்.

மம்மர் - அறியாமை. ஆற்றுணா - வழிச்செலவில் உண்பதற்கென எடுத்துச் செல்லும் உணவு.

எண் பொருளவாக - எளிய பொருளவாக. ஒன்றுபுரிந்த - அறம் ஒன்றுமே பொருந்திய. ஓராது-பொய்யை மெய்யென்று கருதாது. தலைப்பச்சை - மானினது தோல். அண்ணப்ப - தலையெடுப்ப, நிலீஇயர் - நிலைபெறுவாயாக.

எவ்வம் - இகழ்ச்சி.

ஓதல், வேட்டல், ஈதல் ஆகிய மூன்றும் பார்ப்பனர்க்கும், வணிகர்க்கும் உரிய ஆதலின் பொது என்றார். துரங்க வேள்வி-

அசுவமேதயாகம். கலிங்கம்-ஆடை, படப்பை-வயல், தண்ணடை-மருதநிலத்து ஊர், மழுவாள் நெடியோன் - பரசுராமன்.

இளம்பூரணர் இங்குக் கூறிய முன்மூன்று தொழில்களுடன் படைவழங்குதலும் குடியோம்புதலுமாகிய இரண்டும் கூட்டி 'ஐவகை மரபு' என்பர். ஐயனாரிதனார் 'அரசவாகை', 'அரசமுல்லை' என இரு துறைகளாக்கி முன்னையதில் அரசனின் நடுநிலை திறம்பா காவலமைப்பையும் பின்னையதில் பொதுவாக அவன் காவல் செய்யுமாற்றினையும் கூறியுள்ளார்.

படிவம்-விரதம், சாய்அறல்-நுண்ணிய மணல். கொடுமணம், பந்தர், என்பன ஊரின் பெயர்களாம். சிரறுடை - சிதறிக்கிடக்கின்ற. பாண்டில் - தோல், ஈரறிவு - இயற்கையும் செயற்கையுமாய அறிவு. ஒருமழுவாள் வேந்தன் - பரசுராமன். மிகை - மேம்பாடு.

தொறுத்தவயல் - ஆனிரைகள் புல்மேயும் இடம், மூதா - முதிய பசுக்கள், விடத்தேர் - ஒரு வகை மரம். அழல் - செவ்வாய் என்னும் கிரகம். வெள்ளி - சுக்கிரன். பைங்கூழ்-பசியபயிர்.

இளம்பூரணர் உழவு, உழவு ஒழிந்த தொழில், விருந்தோம்பல், பகடு புறந்தருதல், வழிபாடு, வேதம் ஒழிந்த கல்வி ஆகிய அறுவகைத் தொழில்களையும் வேளாண் மாந்தர்க்கு உரியவாகக் கூறுவர். வேளாளர்க்கு வேட்டல் உளதாகக் கூறிய கருத்து யாருடையது எனத் தெரிந்திலது. இருவகை வேளாளர் - உழுதுண்பார், உழுவித்துண்பார். வழிபாடு - உயர்ந்தோர்க்குச் செய்யும் வழிபாடு. அஃதாவது உயர்ந்தோர்களைக் காணின் இருக்கையை விட்டு எழலும் எதிர்சென்று அழைத்தலும் வழி அனுப்புங்கால் அவர்கள் விடுப்ப வருதலும் முதலாயின. இவ்வாறு கொள்ளாது ஐயனாரிதனார் அரசர், பார்ப்பனர், வணிகர் ஆகிய மூவரும் மனமகிழுமாறு அவர்க்கு வழிபாடு செய்தலே வேளாளர்க்கு உரித்து என்பர். இவ்வாறு குலத்தால் உயர்ந்தார்க்கு வழிபாடு செய்தலென்பது எவ்வாற்றானும் பொருத்தமின்றாம். மேல் பார்ப்பனர்க்கும் அரசர்க்கும் வாகை, முல்லை என ஒவ்வொருவர்க்கும் இருதுறை கூறினாற்போல வாணிகர்க்கும் வேளா

ளர்க்கும் இருதுறை கூறுது வேளாண்வாகை, வாணிகவாகை என ஒரு துறையே கூறியுள்ளார். சங்க காலத்து வாழ்ந்த தமிழ்ச்சமுதாயம் வரவர செல்வாக்குக் குறைந்து போனமையை இது விளக்குகிறது. தொல்காப்பியரும் கூட, பார்ப்பனர்க்கும் அரசர்க்கும் தனித்தனி துறைகூறி வாணிகரையும் வேளாளரையும் இரு மூன்று மரபின் ஏனோர் எனத் தொகைப்படுத்திக் கூறும் திறமும் ஈண்டு நினைதற்குரியது. இதற்கு நச்சினார்க்கினியர் கூறும் அமைதி பொருத்தமுடைத்தன்றும். அவர் கூறும் அமைதியே பொருத்தமுடைத்தெனில், காத்தல், தண்டம் செய்தலாகிய இருதொழிலும் ஒழிய ஏனைய மூன்று தொழிலும் பார்ப்பனர், வணிகர் ஆகிய இருவர்க்கும் ஒத்திருத்தல்பற்றி அம் மூவரையும் ஒருங்கு கூறியிருத்தல் வேண்டும். எனவே தமிழ்ச்சமுதாயம் தொடக்க காலம் முதல் வழிவழியாகப் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. இதனை இக்கால உலகம் எண்ணி உயர்வு பெறுமாக!

பிற்றை நிலை – வழிபாடாற்றும் நிலை.

தேயம் – இடம். கிழவோள் தேஎத்து – தலைவியிடத்து என உரை காண்பது போல ஈண்டும் கொள்ளப்பட்டது. காம வெகுளி மயக்கமில்லாத ஒழுகலாற்றை முக்காலத்தினும் ஒப்ப ஒழுகுவோர் அறிவர் என்பது இவர் கருத்து. எனினும் இளம்பூரணம் கூறும் உரை இதற்கு வேறும். அவர் கருத்தாவது:- குற்றமற்ற செயலையுடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறுத்த அறிவன் பக்கமும், இறந்த காலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியினால் தோற்றிய அறிவன் பக்கம் என்றாலோ வெனின், அது முழுதுணர்ந்தோர்க்கல்லது புலப்படாமையின் அது பொருளன்றென்க. பன்னிரு படலத்துள், 'பனியும் வெயிலும் கூதிரும் யாவும், துனியில் கொள்கையொரு நோன்மையெய்திய துணிவுற்று அறிந்த கணிவன் முல்லை' எனவும் ஓதலின் மேலதே பொருளாகக் கொள்க. அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது, பகலும் இரவும் இடை விடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மீன்வீழ்வும் கோள் நிலையும் மழை நிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல்,

ஆதலால், 'மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்' என்றார். ஐயனாரிதனார் இளம்பூரணர் மறுத்த கருத்தை ஏற்பர். 'புகழ் நுவல முக்காலமும் நிகழ்பறிபவன் இயல்புரைத்தன்று' என்பது அவர் கூறும் இலக்கணமாகும். இதனின் வேறாகக் 'கணிவன் முல்லை' என்பதோர் துறை கூறிக் காலத்தைக் கணிக்கும். சோதிடரின் நிலையை அத்துறையுள் கூறுவர் ஐயனாரிதனார். இத் தொடருக்கு உரிய நச்சினார்க்கினியர் உரையே ஆசிரியர் கருத் தொடு பட்டதாம்.

உறைபதி - தங்குமிடம், ஒரு சிறை - ஒரு பக்கமாகும். இதனைக்கொந்தம் என்பர். உணர்வு - மெய்யுணர்வு. முதல் தங்கும் – முதன்மையாகப் பொருந்தும்.

அருளின் தீந்தேன் - அருளினால் நிரம்பியிருக்கும் இனிய தேன். மாரன் – காமன். மகளிர் – அவன் மகளிராகிய காமம் மோகம் முதலியன. கலசயோனி - குடத்தில் பிறந்தவன். இளம்பூரணர் நீர்பலகால் மூழ்கல் முதலிய எட்டையும் தாபதர்க் குரிய நாலிரு வழக்கம் என்பர். ஐயனாரிதனார் கருத்தும் இதுவே யாகும்.

பிழம்பு - உடம்பு பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை என்பர் திருவள்ளுவர். ஐயனாரிதனார் பொருநவாகை, எனத் துறை கூறி 'புகழொடு பெருமை நோக்கியாரையும் இகழ்தல் ஓம்பென எடுத்துரைத்தன்று' என இலக்கணம் கூறுவர். அறிவர், தாபதர், கணிவன் என அவ்வத் தகுதியுடையாரின் வாகைகளைக் கூறுதல் போல் இங்கும் 'பொருந வாகை' எனக்கூறித் தொல் காப்பியத்தைத் தழுவிச் செய்தலே தக்கதாம்.

உந்தி – கொப்பூழ். இருவகை வளி – இடை பிங்கலை என்னும் காற்று. முட்டின்றி - இடை விடுதலின்றி.

இளம்பூரணர் பாலறி மரபில் பொருநர் கண்ணும் என நூற்பாவில் உள்ளவாறே கொண்டு பாகுபாடு அறிந்த மரபினை யுடைய பொருநர் பக்கமும்; அஃதாவது வாளானும் தோளானும்

பொருதலும் வென்றி கூறுதலும் வாகையாம் என விளக்கம் காண்பர்.

முருக்கி - கெடுத்து. பணை - மூங்கில். ஓசிய - முறிய. கழகம் - சூது. புழகம் - புகழினையுடைய மனையகம். உபாய வகையால் - பல்வேறு உபாயங்களால். பணிதம் - ஒட்டிய பொருள்கள். ஆய வகையும் - ஊதியத்தின் கூறுபாட்டையும்.

பார்ப்பனவாகை, அரசவாகை என ஓதி இலக்கணம் கூறியவர் ஐயனாரிதனார். இங்கு நச்சினார்க்கினியர் கூறும் சாதி வகைகள் பலவும் வேண்டாதனொன்றும். (20)

இதுவும் அது

76. கூதிர் வேனி லென்றிரு பாசறைக்
காதலி னொன்றிக் கண்ணிய[1] மரபினும்
ஏரோர் களவழி யன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந் தேரோர்
வென்ற கோமான் முன்றேர்க் குரவையும்
ஒன்றிய மரபிற் பின்றேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கு மாற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையி னொன்றொடு[2] புணர்ந்து
தொல்லுயிர் வழங்கிய வவிப்பலி யானும்
ஒல்லா ரிடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானு மாவி னானும்
துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்
கட்டி னீத்த[3] பாலி னானும்

1. வகையினும், 2. புணர்த்து
3. கடிமனை நீத்த பாலின் கண்ணும்,
எனப் பாடங்கொள்வர் இளம்பூரணர்.

எட்டுவகை நுதலிய[1] வவையத் தானும்
கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க்[2] கொடைமை யானும்
பிழைத்தோர்த் தாங்குங் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த வகற்சி யானும்
காம நீத்த பரலி னுனுமென்
றிருபாற்பட்ட[3] வொன்பதிற்றுத் துறைத்தே.

இது மேல் தொகுத்துக் கூறிய எழுவகைத் திணையுள் அடங்காதவற்றிற்கு முற்கூறிய துறைகளேபோலத் தொடர்நிலைப் படுத்தாது மறத்திற்கு ஒன்பதும் அறத்திற்கு ஒன்பதுமாக இரு வகைப் படுத்துத் துறை கூறுகின்றது.

(இ – ள்) கூதிர் வேனில் என்று இரு பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும் – கூதிரெனவும் வேனிலெனவும் பெயர்பெற்ற இருவகைப் பாசறைக்கண்ணுங் காதலால் திரிவில்லாத மனத்தனுகி ஆண்டு நிகழ்த்தும் போர்த்தொழில் கருதிய மரபானும்;

கூதிர், வேனில் ஆகுபெயர். அக்காலங்களிற் சென்றிருக்கும் பாசறையாவது தண்மைக்கும் வெம்மைக்குந் தலைமைபெற்ற காலத்துப் போகத்திற் பற்றற்று வேற்றுப்புலத்துப் போந் திருத்தல் இக் காலங்களிற் பிரிதல் வன்மையின் இது வென்றி யாயிற்று. தலைவிமேற் காதலின்றிப் போரின்மேற் காதல்சேற லின் ஒன்றியென்றுர். இக்காலத்துச் சிறப்புப்பற்றி இரண்டையும் ஓதினுரேனும் ஓர்யாட்டை எல்லை இருப்பினும் அவற்று வழித் தோன்றிய ஏனைக் காலங்களும் இரண்டாகி அவற்றுள் அடங்கு மென்பது ஆசிரியர் கருத்தாயிற்று.

---

1. அவையகத்தானும்,
2. கொடையினுனும் எனப் பாடங்கொள்வர் இளம்பூரணர்.
3. ஒன்பதின் துறைத்தே எனப் பாடங்கொள்வர் இளம்பூரணர்.

"வினைவயிற் பெயர்க்குந் தானைப்
புனைதார் வேந்தன் பாசறை யேமே" (அகம்-84)

எனத் தலைவியை நினைவன வாகைக்கு வழுவாம், அகத்திற்கு வழுவன்றென்றற்கு மரபென்றார். ஏனைய காலங்களாற் பாசறைப் பெயர் இன்றென்றற்கு இரண்டானும் பெயர் கூறினார். இங்ஙனங் கூறவே முற்கூறிய துறைபோலத் தொடர்நிலைப் படுத்தலின்றாய் இதனானே பலவாகி ஒருதுறைப்படுத்தலும் இன்றாயிற்று.

இனி இருத்தற்பொருண் முல்லையென்பதேபற்றிப் பாசறைக் கண் இருத்தலாற் பாசறைமுல்லையெனப் பெயர் கூறுவாரும் உளர்.

(எ - டு)

"மூதில்வாய்த் தங்கிய முல்லைசால் கற்புடைய
மாதர்பாற் பெற்ற வலியளவோ—கூதிரின்
வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலா
னைங்கணை தோற்ற வழிவு."
(பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டு-பாசறை-4)

எனவரும்.

"கவலை மறுகிற் கடுங்கண் மறவ
ருவலைசெய் கூரை யொடுங்கத்—துவலைசெய்
கூதிர் நலியவு முள்ளான் கொடித்தேரான்
மூதின் மடவாண் முயக்கு" (புறப்-வெ-வாகை-15)

என வரும்.

ஏரோர் களவழி(த் தேரோர் தோற்றிய வென்றி) யன்றிக் களவழித் தேரோர் தோற்றிய வென்றியும்—வேளாண்மாக்கள் விளையுட்காலத்துக் களத்துச் செய்யுஞ் செய்கைகளைத் தேரேறி வந்த கிணைப்பொருநர் முதலியோர் போர்க்களத்தே தோற்று வித்த வென்றியன்றிக் களவழிச் செய்கைகளை மாறுது தேரேறி வந்த புலவர் தோற்றுவித்த வென்றியானும்;

என்றது நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப் போர் அழித்து, அதரிதிரித்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட் பலிகொடுத்துப் பின்னர்ப் பரிசிலாளர் முகந்து கொள்ள வரிசையின் அளிக்குமாறுபோல, அரசனும் நாற் படையையும் கொன்று களத்திற் குவித்து எருது களிறாக வாள்மடல் ஓச்சி அதரிதிரித்துப் பிணக்குவையை நிணச்சேற் றொடு உதிரப் பேருலைக்கண் ஏற்றி ஈனாவேண்மாள் இடந்துழந் தட்ட கூழ்ப்பலியைப் பலியாகக்கொடுத்து எஞ்சிநின்ற யானை குதிரைகளையும் ஆண்டுப்பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகந்துகொள்ளக் கொடுத்தலாம்.

(எ–டு)

"இருப்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பிற்
கருங்கை யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்த
வாண்மின் னாக வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய முரசுமுழக் காக
வரசராப் பனிக்கு மணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநா ணுகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
யீரச் செறுவிற் றேரே ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு செஞ்சாற்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி
விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்
பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்
கான நரியோடு கழுதுகளம் படுப்பப்
பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள
தேய்வை வெண்காழ் புரையும் விசிபிணி
வேய்வை காணா விருந்திற் போர்வை
யரிக்குரற் றடாரி யுருப்ப வொற்றிப்
பாடி வந்திசிற் பெரும பாடான்

றெழிலி தோயு மிமிழிசை யருவிப்
பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன
வோடை நுதல வொல்குத லறியாத்
துடியடிக் குழவிப் பிடியடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி
தாழா வீகைத் தகைவெய் யோயே" (புறம் 369)

என வரும்

"நளிகட லிருங்குட்டத்து" என்னும் (26) புறப்பாட்டுப் பலி கொடுத்தது.

களவழிநாற்பது புலவர் களவழியைத் தோற்றுவித்தது.

"ஓஒ வுவமை யுறழ்வின்றி யொத்ததே
காவிரிநாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெல்லாங் கீழ்மேலா
யாவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து," (களவழி நாற்பது-36)

என வரும்.

தேரோர் வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்-தேரின் கண் வந்த அரசர் பலரையும் வென்ற வேந்தன் வெற்றிக் களிப் பாலே தேர்த்தட்டிலே நின்று போர்த்தலைவரோடு கை பிணைந் தாடுங் குரவையானும்;

(எ-டு)

"சூடிய பொன்முடியும் பூணு மொளிதுளங்க
வாடிய கூத்தரின்வேந் தாடினான்—வீடிக்
குறையாடல் கண்டுவந்து கொற்றப்போர் வாய்த்த
விறையாட வாடாதார் யார்."

"விழவுவீற் றிருந்த வியலு ளாங்கட்
கோடியர் முழவின் முன்ன ராடல்
வல்லா னல்லன் வாழ்கவவன் கண்ணி

வலம்படு முரசந் துவைப்ப வாளுயர்த்
திலங்கும் பூணன் பொலங்கொடி யுழிஞையன்
மடம்பெரு மையி னுடன்றுமேல் வந்த
வேந்து மெய்ம்மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே." (பதிற்றுப்-56)

என வரும்.

ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும் — தேரோரை வென்ற கோமாற்கே பொருந்திய இலக்கணத்தானே தேரின் பின்னே கூழுண்ட கொற்றவை கூளிச்சுற்றம் ஆடுங் குரவை யானும்;

(எ-டு)

வென்று களங்கொண்ட வேந்தன்றேர் சென்றதற்பின்
கொன்ற பிணநிணக்கூழ் கொற்றவை - நின்றளிப்ப
வுண்டாடும் பேய்கண் டுவந்தனவே போர்ப்பரிசில்
கொண்டா டினகுரவைக் கூத்து".
(பெரும் பொருள் விளக்கம். புறத்திரட்டு-களம்-12

என வரும்.

"களிற்றுக் கோட்டன்ன வாலெயி றழுத்தி
விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவையினள்
குடர்த்தலைத் துயல்வரச் சூடிப் புணர்த்தின
மாணுப் பெருவளஞ் செய்தோன் வானத்து
வயங்குபன் மீனினும் வாழியர் பலவென
வுருகெழு பேஎய்மக ளயரக்
குருதித்துக ளாடிய களங்கிழ வோயே." (புறம்-371)

என்பதும் அது.

பெரும்பகை தாங்கும் வேலினானும் - போர்க்கணன்றியும் பெரியோராகிய பகைவரை அத்தொழிற்சிறப்பான் அஞ்சுவித்துத் தடுக்கும் வேற்றொழில் வன்மையானும்;

காத்தற்றொழிலன்றி அழித்தற்றொழில் பூண்ட முக்கட் கடவுட்குச் சூலவேல் படையாதலானும் முருகற்கு வேல் படை யாதலானுஞ் சான்றோர் வேற்படையே சிறப்பப் பெரும் பான்மை கூறலானும் வேலைக் கூறி ஏனைப்படைகளெல்லாம்,

"மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்
மொழியா ததனையு முட்டின்று முடித்தல்"
(தொல்-பொ-செய்-110)

என்னும் உத்தியாற் பெறவைத்தார்.

(எ-டு)

"குன்று துகளாக்குங் கூர்ங்கணையான் வேலெறிந்
தன்று திருநெடுமா லாடிஞ - னென்றும்
பனிச்சென்று மூளாத பல்கதிரோன் சேயோ
டினிச்சென் றமர்பொரா யென்று".

இது பாரதம்.

"இரும்புமுகஞ் சிதைய நூறி யொன்னார்
இருஞ்சமங் கடத்த லேனோர்க்கு மெளிதே
நல்லரா வுறையும் புற்றம் போலவுங்
கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்
மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
யுளனென வெரூஉ மோரொளி
வலனுயர் நெடுவே லென்னைகண் ணதுவே" (புறம்-309)

என்பதும் அது.

"இவ்வே, பீலியணிந்து" என்னும்! (65) புறப்பாட்டும் அது.

அரும்பகை தாங்கும் ஆற்றலானும் - வெலற்கரும் பகைவர் மிகையை நன்கு மதியாது எதிரேற்றுக்கொள்ளும் அமைதி யானும்;

(எ-டு)

“எருதுகா லுருஅ திளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாண ருண்டுகடை தப்பலி
னொக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் லாளர் முகத்தவை கூறி
வரகுகட னிரக்கு நெடுந்தகை
யரசுவரிற் றுங்கும் வல்லா ளன்னே.” (புறம்-327)

எனவரும்.

‘‘களம்புக லோம்புமின்’’ என்னும் (87) புறப்பாட்டும் அது.

வாழ்க்கை புல்லா வல்லாண் பக்கமும் – உயிர்வாழ்க்கையைப் பொருந்தாத வலிய ஆண்பாலின் கூறுபாட்டானும்;

பக்கமென்றதனாற் தாபதப்பக்கமல்லாத போர்த்தொழிலாகிய வல்லாண்மையே கொள்க.

(எ-டு)

“கலிவர லூழியின் வாழ்க்கை கடிந்து
மலிபுகழ் வேண்டு மனத்த—ரொலிகடல்சூழ்
மண்ணகலம் வேண்டாது வான்வேண்டி யீண்டினார்
புண்ணகலாப் போர்க்களத்துப் போந்து.”
(புறத்திரட்டு, அமர்-3)

இப் பாரதத்துள் அது காண்க.

ஒல்லார்நாணப் பெரியவர்க் கண்ணிச் சொல்லிய வகையின் ஒன்றொடுபுணர்ந்து தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும்—பகைவர் நாணும்படியாக உயர்ந்தோரான் நன்குமதித்தலைக் கருதி இன்னது செய்யேனாயின் இன்னது செய்வலெனத் தான் கூறிய பகுதி யிரண்டனுள் ஒன்றனோடே பொருந்திப் பல பிறப்பினும் பழகிவருகின்ற உயிரை அங்கியங்கடவுட்குக் கொடுத்த அவிப்பலியானும்;

நாணுதலாவது நம்மை அவன் செய்யாதே நாம் அவனை அறப்போர் செய்யாது வஞ்சனையால் வென்றமையால் அவன் தன்னுயிரை அவிப்பலி கொடுத்தானென நாணுதல்.

(எ-டு)

"எம்பியை வீட்டுத லெம்மனைக்கா யான்படுதல்
வெம்பகன்முன் யான்விளைப்ப னென்றெழுந்தான்-றம்பி
புறவோரிற் பாணிப்பப் பொங்கெரிவாய் வீழ்ந்தா
னறவோன் மறமிருந்த வாறு."

இப் பாரதத்துள் ஒருவன் இன்னது செய்வலென்று அது செய்ய முடியாமையின் அவிப்பலி கொடுத்தவாறு காண்க.

"இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்." (குறள்-படைச்-9)

இதுவும் அது.

ஒல்லாரிடவயிற் புல்லியபாங்கினும் — பகைவராயினும் அவர் சுற்றமாயினும் வந்து உயிரும் உடம்பும் உறுப்பும்போல்வன வேண்டியக்கால் அவர்க்கவை மனமகிழ்ந்து கொடுத்து நட்புச் செய்தலானும்;

(எ-டு)

"இந்திரன் மைந்த னுயிர்வேட் டிரந்திரவி
மைந்தனை வெல்வான் வரங்கொண்டான்—றந்தநா
ளேந்திலைவேன் மன்னனே யன்றி யிதற்குவந்த
வேந்தனும் பெற்றான் மிகை."

இப் பாரதத்துப் பகைவனுற் படுதலறிந்துந் தன் கவச குண்டலம் சொடுத்தமை கூறினமையிற் புல்லியபாங்காயிற்று. அது வீரம்பற்றிய கருணையாகலின் வாகையாயிற்று.

இத்துணையும் மறத்திற்குக் கூறியன.

பகட்டினானும் மாவினானும் துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்—எருதும் எருமையுமாகிய பகட்டினானும் யானையுங் குதிரையுமாகிய மாவினானுங் குற்றத்தினீங்குஞ் சிறப்பினால் அமைத்தோரது கூறுபாட்டானும்;

இவற்றான் உழவஞ்சாமையும் பகையஞ்சாமையுமாகிய வெற்றி கூறினார். பக்கமென்றதனாற் புனிற்றாவுங் காலாளுந் தேருங் கொள்க.

(எ-டு)

"யானை நிரையுடைய தேரோ ரினுஞ்சிறந்தோ
ரேனை நிரையுடைய வேர்வாழ்நர்—யானைப்
படையோர்க்கும் வென்றி பயக்கும் பகட்டே
ருடையோர்க் கரசரோ வொப்பு."
(பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டு-குடிமரபு-9)

"எனைப்பெரும் படையனோ சினப்போர்ப் பொறைய
னென்றனி ராயி னாறுசெல் வம்பலிர்
மன்பதை மருள வரசுகளத் தொழியக்
கொன்றுதோ ளோச்சிய வென்றாடு துணங்கை
மீபிணத் துருண்ட தேயா வாழியிற்
பண்ணமை தேரு மாவு மாக்களு
மெண்ணற் கருமையி னெண்ணின்றோ விலனே
கந்துகோ ளீயாது காழ்பல முருக்கி
யுகக்கும் பருந்தி னிலத்துநிழல் சாடிச்
சேண்பரன் முரம்பி னீர்ம்படைக் கொங்கர்
ஆபரந் தன்ன செலவிற்பல
யானை காண்பலவன் றானை யானே." (பதிற்றுப்-77)

என்பதும் அது.

கட்டில் நீத்த பாலினானும்—அரசன் அரசவுரிமையைக் கைவிட்ட பகுதியானும்;

அது பரதனும் பார்த்தனும் போல்வார் அரசு துறந்த வென்றி,

(எ-டு)

"கடலு மலையுந் தேர்படக் கிடந்த
மண்ணக வளாக நுண்வெயிற் றுகளினு
நொய்தா லம்ம தானே யிஃதெவன்
குறித்தன னெடியான் கொல்லோ மொய்தவ
வாங்குசிலை யிராமன் றம்பி யாங்கவ
னடிபொறை யாற்றி னல்லது
முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே"

இஃது அரசு கட்டினீத்தபால்.

"பரிதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநில
மொருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாதலிற்
கைவிட் டனரே காதலர் அதனால்
விட்டோரை விடாஅ டிருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே" (புறம்-358)

என்பதும் அது.

எட்டுவகை நுதலிய அவையத்தானும் – எண்வகைக் குணத்தினைக் கருதிய அவையத்தாரது நிலைமையானும்;

அவை குடிப்பிறப்புக் கல்வி ஒழுக்கம் வாய்மை தூய்மை நடுவுநிலைமை அழுக்காறின்மை அவாவின்மை எனவிவையுடையராய், அவைக்கண் முந்தியிருப்போர் வெற்றியைக் கூறுதல்.

(எ-டு)

"குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையிற்
காத லின்பத்துத் தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலு
மழுக்கா றின்மை யவாஅ வின்மையென

விருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
யுடன்மரீஇ யிருக்கை யொருநாட் பெறுமெனிற்
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே"
(ஆசிரியமாலை-புறத்திரட்டு அவையறிதல்)

என இதனுள் எட்டும் வந்தன.

கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும் – வேத முதலியவற்றாற் கட்டுதலமைந்த ஒழுக்கத்தோடு பொருந்திய காட்சியானும்;

கண்ணது தன்மை கண்மையெனப்படுதலின் அதனைக் கண்ணுமையென உகரங்கொடுத்தார்; எண்மை வன்மை வல்லோர் என்பது எளுமை வலுமை வல்லுவோர் என்றாற்போல.

இவை மனத்தான் இவ்வொழுக்கங்களைக் குறிக்கொண்டு ஐம்பொறியினை வென்று தடுத்தலாம். அவை இல்லறத்திற்கு உரியவாக நான்கு வருணத்தார்க்குங் கூறிய அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, பிறர்மனை நயவாமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை முதலியனவாம்.

(எ-டு)

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து." (குறள்-அடக்க-6)

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்." (குறள்-ஒழுக்-8)

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி (குறள்-நடுவு-8)

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனென்றோ வான்ற வொழுக்கு." (குறள்-பிறனில்-8

"படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்." (குறள்-வெஃகாமை-2)

"அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது." (குறள்-புறங்-1)

"தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு." (குறள்-தீவினை-1)

"ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாதவியல்பு". (குறள்-அழுக்கா-1)

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்." (குறள்-பொறை-8)

பிறவும் இந்நிகரனவெல்லாங் கொள்க.

"விழையா வுள்ளம் விழையு மாயினுங்
கேட்டவை தோட்டி யாக மீட்டாங்
கறனும் பொருளும் வழாமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா கும்மே முன்னிய முடித்த
லினைய பெரியோ ரொழுக்க மதனா
லரிய பெரியோர்த் தெரியுங் காலை" (அகம் 286:8-14)

என இது தொகுத்துக் கூறியது.

இடையில் வண்புகழ்க் கொடைமையானும்—இடையீடில்லாத வண்புகழைப் பயக்குங் கொடைமையானும்;

உலகமுழுதும் பிறர்புகழ் வாராமைத் தன்புகழ் பாத்தலின் இடையி லென்றார்.

வண்புகழ்-வள்ளிதாகிய புகழ்; அது வளனுடையதென விரியும். இக்கொடைப் புகழுடையான் மூப்புப் பிணி சாக்காட்டுக்கு அஞ்சாமையின் அது வாகையாம்,

(எ-டு)

"மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வ
ரின்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுத
லாடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெமக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையி
னாடுமலி யுவகையொடு வருவ
லோடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே"

(புறம்-165)

என வரும். இது புறம்.

பிழைத்தோர்த் தாங்குங் காவலானும்—தம்மைப் பிழைத்தோரைப் பொறுக்கும் பாதுகாப்பானும்;

காவலாவது இம்மையும் மறுமையும் அவர்க்கு ஏதம் வாராமற் காத்த லாதலால், இஃது ஏனையோரின் வெற்றியாயிற்று.

(எ-டு)

"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்." (நாலடி-58)

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை." (குறள்-பொறை-1)

எனவரும்.

பொருளொடு புணர்ந்த பக்கத்தானும் — அரசர்க்குரிய வாகிய படை குடி கூழ் அமைச்சு நட்பு முதலியனவும் புதல் வரைப் பெறுவனவுமாகிய பொருட்டிறத்துப்பட்ட வாகைப் பகுதியானும்;

பக்கமென்றதனன் மெய்ப்பொரு ளுணர்த்துதலுங்கொள்க.

(எ-டு)

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு." (குறள்-இறை-1)

நாடு அரண்முதலாகக் கூறுவனவெல்லாந் திருவள்ளுவப் பயனிற் காண்க.

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே." (புறம்-188)

"கேள்வி கேட்டுப் படிவமொடியாது" என்னும் (74) பதிற்றுப்பத்தும் அது.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு" (குறள்-மெய்யு-4)

என வரும்.

அருளொடு புணர்ந்த அகற்சியானும் — அருளுடைமை யோடு பொருந்திய துறவறத்தானும்;

அருளொடு புணர்தலாவது ஓருயிர்க்கு இடர்வந்துழித் தன்னுயிரைக் கொடுத்துக் காத்தலும் அதன் வருத்தந் தனதாக வருந்துதலும் பொய்யாமை கள்ளாமை முதலியனவுமாம்,

இக்கருத்து நிகழ்ந்த பின்னர்த் துறவுள்ளம் பிறத்தலின் இதுவும் அறவெற்றியாயிற்று,

(எ-டு)

"புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தனாது
முலைமருக் குழவி வாங்கி வாய்மடுத்
திரையெனக் கவர்வுற நோக்கி யாங்க
வளரிங் குழவியின் முன்சென்று தானக்
கூருகிர் வயமான் புலவுவேட்டுத் தொடங்கிய
வாளெயிற்றுக் கொள்ளையிற் றங்கினன் கதுவப்
பாசிலைப் போதி மாதவன் பெருந்தகை
யாருயிர் காவல் பூண்ட
பேரருட் புணர்ச்சியி னசலு மாறே."

"தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்," (குறள்-இன்னா-8)

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்: (குறள்-வாய்மை-1)

"களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்." (குறள்-கள்ளாமை-7)

"யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்." (குறள்-துறவு-1)

ஏனையவும் இதன்கண் அடக்குக.

காமம் நீத்த பாலினும் – அங்ஙனம் பிறந்தபின்னர் எப்பொருள்களினும் பற்றற்ற பகுதியானும்.

(எ-டு)

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்றே
னாமங் கெடக்கெடு நோய்." (குறள்-மெய்யு-10)

எனா வரும்.

பாலென்றதனால் உலகியலு ணின்றே காமத்தினைக் கை விட்ட பகுதியுங் கொள்க.

"இளையர் முதிய ரெனவிருபால் பற்றி
விளையு மறிவென்ன வேண்டா – விளையனுத்
தன்றாதை காம நுகர்தற்குத் தான்காம
மொன்றாது நீத்தா னுளன்."
(பெரும் பொருள்விளக்கம்-புறத்திரட்டு-அறிவுடைமை-15)

என வரும்.

என்று இருபாற்பட்ட ஒன்பதிற்றுத் துறைத்தே – முன்னர் ஒன்பானும் பின்னர் ஒன்பானுமாக இரண்டு கூறுபட்ட ஒன்ப தாகிய பதினெட்டுத் துறையினையுடைத்து வாகை என்றவாறு.

இதனுள் ஏது விரியாதனவற்றிற்கும் ஏது விரித்தவாற்றான் இருபாற்பட்ட பதினெட்டாத லுடைத்தென முடிக்க.

(வி-ரை) கூதிர்வேனில் என்டன காலத்தைக் குறிச்கும் பெயர் களாம். அவை அவ்வக் காலத்தின் கண் இருக்கும் பாசறைக்கு ஆயினமையின் ஆகுபெயர் என்றார்.

காதலின் ஒன்றி-போரின் மீதுகொண்ட காதலால்பொருந்தி என உரை காண்பர் இளம்பூரணர். ஐயனாரிதனார் கூதிர்ப் பாசறை வாடைப் பாசறை என்னும் துறைகளால் இக்கருத்தினை விளக்குவர். இனி இருத்தல் பொருள் முல்லை' என்பதே பற்றிய பாசறைக்கண் இருத்தலாற் பாசறை முல்லை எனப் பெயர் கூறுவாரும் உளர் என்றார். அவ்வாறு கூறுவார் யாவர் எனத் தெரிந்திலது.

மூதில்வாய் – பழமையான இல்லிடத்து. கவலை மறுகில் – கவர்த்த தெருவிடத்தே, உவலை – தழை. அதரிதிரித்து – எருது களைக் கொண்டு நெற்போரை மிதிக்கச் செய்து. வாள் மடல் ஓச்சி – பனைமட்டையாகிய மடலைக் கொண்டு எருதுகளைச்

செலுத்தி. ஈனுவேண்மாள்–ஈனுத பேய்மகள். இடந்து உழந்து அட்ட – தோண்டி வருந்திச் சமைத்த. இதனைக் களம்பாடுதலும் களவேள்வி பாடுதலுமாம் என விளக்கம் காண்பர் இளம்பூரணர். ஐயனுரிதனுர் அரசனை உழவனுக உருவகித்துக் கூறுதலை மறக்கள வழி என்றும் போர்க்களத்தில் செய்யும் செயலைக் களவேள்வி என்றும் கூறுவர்.

இருப்புமுகம் – இரும்புப் பூண், தேய்வை வெண்காழ் – கல்லில் தேய்த்து அறைக்கப்படும் வெள்ளிய சந்தனக்கட்டை, வேய்வை – குற்றம், வேழமுகவை–களிறுகளாகிய பரிசில். வென்ற அரசன் தேர்முன் ஆடுதல் முன் தேர்க்குரவையாம் என்பர் இளம்பூரணர். ஐயனுரிதனுர் தும்பை, வாகை ஆகிய இருதிணைக் கண்ணும் முன்தேர்க்குரவை என்னும் துறையைக் கூறுவர். தும்பை முன்தேர்க் குரவையில் அரசனது தேர் முன் வீரர் ஆடுதலையும், வாகை முன் தேர்க்குரவையில் வென்ற அரசனது தேர் முன் பேய்கள் ஆடுதலையும் கூறுவர்.

கோடியர் – கூத்தர், துவைப்ப – ஒலிப்ப, வாழ்ச்சி – துறக்க வாழ்வு. இளம்பூரணர் தேரின்பின் இன்னுர் ஆடுவர் எனக் குறித்திலர். ஐயனுரிதனுர் முன் தேர்க்குரவையைப் போலன்றே பின்தேர்க் குரவையையும் தும்பை, வாகை ஆகிய இருதிணைக் கண்ணும் கூறுவர். இருதிணைக் கண்ணும் பின்தேர்க் குரவையில் அரசனது தேரின் பின் வீரரும் விறலியரும் ஆடுவர் எனக்கூறுவர். இவ்விரு துறையையும் இவ்விருதிணைக் கண்ணும் கூறியதன் வேறுபாட்டைப் புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர் விளக்குவர். தும்பையில் வருவன போருக்குச் செல்லும் தேரின் முன்னும் பின்னுமாம், வாகையில் வருவன வென்று வந்த தேரின் முன்னும் பின்னுமாம் என்பர். களிற்றுக்கோடு – பன்றி யின் கொம்பு, விழுக்கொடு – தசையொடு.

பல்கதிரோன் சேய் – கர்ணன்.

புற்றம் – புற்று, மிகை – மேம்பாடு, கடவர் – கடன் கொடுத்தவர், ஒற்கம் சொலீஇய – வறுமை நீங்க,

கலிவரல் ஊழி – கலியுகம்.

அவன் செய்யாதே - அவன் வஞ்சனையைச் செய்யாதிருந்தும். இழைத்தது - தாம் செய்த வஞ்சினம். பிழைத்தது - தப்பியது. ஐயனாரிதனார் 'வெள்வாளமருள் செஞ்சோறல்லது உள்ளா மைந்தர் உயிர்ப்பலி கொடுத்தன்று' என இதற்கு இலக்கணம் கூறுவர். இது தொல்காப்பியர் கருத்தின் வேறாம். ஆவிப்பலி, அவிப்பலி என்றாயிற்று, ஆவி - உயிர்.

ஒல்லார்... பாங்கும் - இளம்பூரணர் பொருந்தாதார் இடத்தின்கண் பொருந்திய பக்கமும்; அஃதாவது போர் இல்வழி நாடுகைத்தென்று உவத்தல் என விளக்கம் காண்பர்.

இந்திரன்மைந்தன்-அருச்சுனன், இரவிமைந்தன் - கர்ணன், மன்னன் - கண்ணன், வேந்தன் - இந்திரன், மிகை - மேம்பாடு, இளம்பூரணர் பகட்டினானும் ஆவினானும் எனப்பாடம் கொண்டு பகட்டால் புரை தீர்ந்தார் வேளாளர், ஆவால் குற்றம் தீர்ந்தார் வணிகர்: இவ்விரு குலத்தினும் அமைந்தார் பக்கமும், அவர் குலத்தினுள் அளவால் மிக்க நீர்மையராதலின் வேறு ஓதப்பட்டது என விளக்கம் காண்பர். ஐயனாரிதனார் இதனைச் சால்பு முல்லை எனக்கூறி அதன்கண் சான்றோர் தம் இயல்பை உரைப்பர்.

வம்பனிர் - புதியவரே, மீபிணத்து - பிணத்தின் மீது, தேயா ஆழி - தேயாத உருள் (சக்கரம்). கந்துகோல் ஈயாது - கட்டுத்தறியால் அடங்காது.

கட்டில் - அரசு கட்டில், ஈண்டு அது, அவ்வுரிமைக் காயிற்று, பார்த்தன் - அர்ச்சுனன், இளம்பூரணர் கடிமனை நீத்தபாலும் எனப்பாடம் கொண்டு அஃதாவது பிறர்மனை நயவாமை எனப் பொருள் கூறுவர். அடிபொறை - இராமனது திருவடியைப் பொறுத்தல், படிபொறை - நில உலகத்தைத் தாங்குதல், ஐயவி- வெண்சிறு கடுகு, விட்டோர் - பற்று நீங்கியோர், விடாதோர்- பற்று நீங்காதோர். ஐயனாரிதனார் எட்டுவகை நுதலிய அவையம் என்பதை 'அவைய முல்லை' என்பர்.

கொட்கும் - சுழலும்.

இளம்பூரணர் கட்டுதலமைந்த ஒழுக்கத்தைக் குறித்த நிலையினும் என உரைகண்டு அஃதாவது இல்லறத்திற்கு உரித்தாக நான்கு வருணத்தார்க்கும் சொல்லப்பட்ட அறத்தின் கண்

நிற்றல் என விளக்கம் காண்பர். ஏமாப்புடைத்து - வலியாதலை யுடைத்து. அறனன்றே-அறன் மட்டுமோ.

மிகுதியால் - மனச்செருக்கால், மிக்கவை - தீயவை, தகுதி யால் - பொறையால். உள்ளமாகிய யானையை அறிவென்னும் தோட்டியால் அடக்குவர் பெரியோர் என்பது கருத்து.

மன்னா - நிலையாத, துன்னரும் - நெருங்குதற்குரிய. தொடர்பு அறியலர் - தன் புகழ் நிறுத்தும் தகைமை அறியலர். அருகா - மிகக் கொடுக்கும். வயமான் - வலிய குதிரை. கொன்னே - பய னின்றியே. பூட்கை - மேற்கோள்.

பிழைத்தோர் - தீங்கிழைத்தோர். உம்மை - மறுமை. எரிவாய் நிரயம் - நெருப்புப் பிழம்பாய நரகம். பரிவதூஉம் - வருந்துவதும்.

பொருளொடு ... பக்கம்: இளம்பூரணர் கூறிய உரையை முழுமையாக ஏற்றுள்ளனர் நச்சினார்க்கினியர். ஐயனாரிதனார் 'வையகத்து விழைவறுத்து மெய்யாய பொருள் நயந்தன்று' எனப்பொருளொடு புணர்ந்த பக்கத்திற்கு இலக்கணம் கூறுவர்.

கூழ் - உணவு. உடைப்பெரும் - உடைமை மிக்க, துழந்தும்- கையால் துழாவியும். விதிர்த்து - சிதறி. மயக்குறு - அறிவை இன்பத்தால் மயங்கச் செய்த. பயக்குறை - பயனுகிய இன்றி யமையாமை. ஐயுணர்வு - ஐந்தாகிய உணர்வு. பயம் - பயன்.

ஐயனாரிதனார் 'ஒலிகடல் வையகத்து நலிவுகண்டு நயப்பவிந் தன்று' என அருளொடு புணர்ந்ததற்கு இலக்கணம் கூறுவர். புனிற்றுப்பசி - ஈன்ற அணிமையை உடைமையினுல் ஏற்பட்டபசி. புலிப்பிணவு - பெண்புலி. எயிற்றுக் கொள்ளையில் - பற்களால் பற்றப்படும் நிலையில். பெருந்தகை, அருட்புணர்ச்சியால் பெண் புலி தன்குழவியை வாய்மடுத்து உண்ணுது தன்னை வாய் மடுத்து உண்ணுமாறு நின்றனன்.

காரறிவு - இருண்ட அறிவு. அளவு - உயிர் முதலியவற்றை அளத்தல். இளம்பூரணர் கடிமனைநீத்தபாலை இல்லறத்தார்க்கும் காமம் நீத்தபாலைத் துறவறத்தார்க்கும் கூறுவர்,

அறிவு, இளையர் முதியர் என்னாது யாரிடத்தும் அமையலாம் என்பது கருத்து. காமம் ஒன்றாது நீத்தான்–வீடுமன். (21)

காஞ்சியின் பொதுவிலக்கணம்

77. 1. காஞ்சி தானே பெருந்திணைப் புறனே

இத்துணையும் உரிப்பொருள்பெற்ற அகத்திணைக்குப் புறங் கூறி, இஃது உரிப்பொருளில்லாத பெருந்திணைக்குப் புறனிது வென்கின்றது. இது வாகைக்குப் பின்வைத்தார், வீரக்குறிப்பு நிலையாமைக் குறிப்போடு உறவுடைத்து என்றற்கு.

(இ–ள்). காஞ்சிதானே பெருந்திணைப் புறனே – எழுதிணை யுட் காஞ்சிதானேயெனப் பிரிக்கப்பட்ட புறத்திணை பெருந் திணைக்குப் புறனும் என்றவாறு.

அதற்கு இது புறனாயவாறு என்னையெனின், எண்வகை மணத்தினும் நான்குமணம்பெற்ற பெருந்திணைபோல இக்காஞ்சி யும் அற முதலாகிய மும்முதற்பொருளும் அவற்றது நிலையின்மை யுமாகிய ஆறனுள்ளும் நிலையின்மை மூன்றற்கும் உரித்தாய் எல்லாத்திணைகட்கும் ஒத்த மரபிற்றாகலானும், பின்னர் நான்கும் பெருந்திணை பெறும்' (தொல். களவியல்–14) என்ற நான்குஞ் சான்றோர் இகழ்ந்தாற் போல அறம் முதலியவற்றது நிலையின்மையுணர்ந்து அவற்றை அவர் இகழ்தலானும், 'ஏறிய மடற்றிற' (தொல், அகத்-51) முதலிய நான்குந் தீய காமமாயின வாறுபோல உலகியனோக்கி நிலையாமையும் நற்பொருளன்றாக லானும், உரிப்பொருள் இடைமயங்கி வருதலன்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணைபோல அறம்பொரு ளின்பம் பற்றி யன்றி வேறுவேறு நிலையாமையென்பதோர் பொருளின்றாதல் ஒப்புமையானும், பெருந்திணைக்குக் காஞ்சி புறனாயிற்று. கைக் கிளை முதலாப் பெருந்திணையிறுவாய்' (தொல். அகத்–1) ஏழனை

1 இச்சூத்திரத்தையும் அடுத்த சூத்திரத்தையும் ஒரே சூத்திரமாக்குவர் இளம்பூரணர்.

யும் அகமென்றலின் அவ்வகத்திற்கு இது புறனாவதன்றிப் புறப் புறமென்றல் ஆகாமையுணர்க. இது மேலதற்கும் ஒக்கும். (22)

அதன் சிறப்பிலக்கணம்

78. பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்[1]
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.

இது முற்கூறிய காஞ்சிக்குப் பொது இலக்கணங் கூறு கின்றது.

(இ - ள்) பாங்கருஞ் சிறப்பின்—தனக்குத் துணையில்லாத வீட்டின்பம் ஏதுவாக; பல்லாற்றானும்—அறம் பொருள் இன்ப மாகிய பொருட்பகுதியானும் அவற்றுப் பகுதியாகிய உயிரும் யாக்கையுஞ் செல்வமும் இளமையும் முதலியவற்றானும்; நில்லா உலகம் புல்லிய நெறித்து—நிலைபேறில்லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினை யுடைத்துக் காஞ்சி என்றவாறு.

எனவே, வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றுங் குறிப்பினது காஞ்சியாயிற்று. பாங்கு—துணை.

உலகிற்கு நிலையாமை கூறுங்கால் அறமுதலாகிய பொருட் பகுதி ஏதுவாகக் கூறினன்றி உலகென்பதற்கு வடிவு வேறின் மையிற் பல்லாற்றானுமென்று ஆன் உருபு கொடுத்தார். கெடுங்காற் கணந்தோறுங் கெடுவனவுங் கற்பந்தோறும் கெடு வனவுமா மென்றற்கு ஆறென்றார். நிலைபெற்ற வீட்டினான் இவற்றின் நிலையாமையுணர்தலின் வீடு ஏதுவாயிற்று. பல்லாற் றானுமென்றதனாற் சில்லாற்றானும் விடேது வாகலின்றி நிலையா மைக்குறிப்பு ஏதுவாகலுங் கொள்க. இஃது அறிவன் தேயமுந் தாபதப்பக்கமும்பற்றி நிலையின்மைக் குறிப்புப் பெற்றும்.

(எ-டு)

"மயங்கிருங் கருவிய விசும்பு முகனாக
வியங்கிய விருசுடர் கண்ணெனப் பெயரிய

1 பன்னெறியானும் என்பது இளம்பூரணர் பாடம்,

வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் குறட்டின் வயங்குமணி யாரத்துப்
பொன்னந் திகிரி முன்சமத் துருட்டிப்
பொருநர்க் காணுச் செருமிகு மொய்ம்பின்
முன்னோர் செல்லவுஞ் செல்லா தின்னும்
விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற
வுளனே வாழியர் யானெனப் பன்மா
ணிலமக ளழுத காஞ்சியு
முண்டென வுரைப்பரா லுணர்ந்திசி னோரே."
(புறம்-365)

இதனுள் உண்டென உரைப்பரால் உணர்ந்தோ ரென்றலின் வீடுபேறு ஏதுவாகத் தாபதர் போல்வார் நில்லா உலகம் புல்லியதாயிற்று. வீடுபேறு நிமித்தமாகச் சான்றோர் பல வேறு நிலையாமையை அறைந்த மதுரைக்காஞ்சி இதற்கு உதாரணமாம்.

(வி—ரை) வீரர்கள் உடலில் பற்றின்றி வீரம் அல்லது துறக்கம் என்ற ஒன்றை எய்தும் குறிப்புடையராதலின் வீரக் குறிப்பு நிலையாமைக் குறிப்போடு உறவுடைத்தாயிற்று என்றார். இத்திணையைப் புறப்புறம் என்பர் ஐயனாரிதனார். எதிர் ஊன்றல் காஞ்சி என்பது பற்றி வஞ்சியக்கு மறுதலையாகப் பொருதலைக் காஞ்சி என்பர் ஐயனாரிதனார்.

கணந்தொறும் கெடுவன வாழ்நாள் இளமை முதலியன. கற்பம் – ஊழி. கற்பந்தொறும் கெடுவன உலகும் அதன்கண் உள்ளபொருள்களும்.

கருவி – மின்னல் முதலியவற்றின் தொகுதி. பொருநர் போர்செய்யும் பகைவர். முன்பின் – வலியின். (23)

காஞ்சித் திணைக்குரிய துறைகள்

79. மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையுங்
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய
முதுமையும்

பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியு மறத்தி னானு
மேமச் சுற்ற மின்றிப் புண்ணோற்
பேஎ யோம்பிய பேஎய்ப் பக்கமு
மின்னனென் றிரங்கிய மன்னை யானு
மின்னது பிழைப்பி னிதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானு
மின்னகை மனைவி பேஎய்ப் புண்ணோற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியு
நீத்த கணவற் றீர்த்த வேலிற்
[1]பேஎத்த மனைவி யாஞ்சி யானு
நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானு
முலையு முகனுஞ் சேர்த்திக் [2]கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
யீரைந் தாகு மென்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்ற
மாய்ந்த பூசன் மயக்கத் தானுந்
[3]தாமே யேங்கிய தாங்கரும் பையுளுங்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமு
நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையுங்
கழிந்தோர் தேஎத் தழிபட ருறீஇ
யொழிந்தோர் புலம்பிய கையறு நிலையுங்
காதலி யிழந்த தபுதார நிலையும்
காதல னிழந்த தாபத நிலையு

1 பெயர்த்த
2 கொண்டான்,
3 தாமே எய்திய, எனப்பாடம் கொள்வர் இளம்பூரணர்.

நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையு
[1]மாய்பெருஞ் சிறப்பிற் [2]புதல்வன் பெயரத்
தாய்தப வரூஉந் தலைப்பெய னிலையும்
மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறையிரண் டுடைத்தே

இது முற்கூறிய காஞ்சித்திணை வீடேதுவாகவன்றி வாளாது நிலையின்மை தோன்றக் கூறும்பகுதி கூறுகின்றது. இதுவும் வாகையைத் தொகுத்தோதிய பொதுச்சூத்திரம்போலத் துறையொடும் படாது நிலையின்மைப்பொருளை வகுத்தோதிய சூத்திரமென்றுணர்க.

(இ-ள்) மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்—பிறராற் றடுத்தற்கரிய கூற்றம் வருமெனச் சான்றோர் சாற்றிய பெருங் காஞ்சியானும்.

கூற்றுவது, வாழ்நாள் இடையறுது செல்லுங் காலத்தினைப் பொருள்வகையாற் கூறுபடுத்துங் கடவுள்; அதனைத்தான் பேரூர்க் கூற்றம்போலக் கொள்க. கூற்றத்திற்குக் காலமென்பது வேறன் மையிற் 'காலம் உலகம்' என (தொல்-சொல்-கிளவி-58.) முன்னே கூறினர்.

(எ - டு)

"பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ

1 அரும்பெருஞ்சிறப்பில்,
2 புதல்வற் பயந்த எனப் பாடம் கொள்வர் இளம்பூரணர்,

நல்லது செய்த லாற்றீ ராயினு
மல்லது செய்த லோம்புமி னதுதா
னெல்லாரு முவப்ப தன்றியு
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே." (புறம்-195)

இது வீடேதுவாக வன்றி வீடுபேற்று நெறிக்கட் செல்லும் நெறியேதுவாகக் கூறியது.

"இருங்கடலுடுத்த" என்னும் (369) புறப்பாட்டும் அது.

கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்-இளமைத் தன்மை கழிந்து அறிவுமிக்கோர் இளமைகழியாத அறிவின் மாக்கட்குக் காட்டிய முதுகாஞ்சியானும்;

முதுமை மூப்பாதலான் அது காட்சிப்பொருளாக இளமை நிலையாமை கூறிற்றும்.

(எ-டு)

"இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்த
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
யளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழித்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே." (புறம்-243)

இது வீடுபெறுதற்கு வழி கூறியது.

பண்புறவரூஉம் பகுதி நோக்கிப் புண்கிழித்து முடியும் மறத்திஞனும்—நன்ருகிய குணம் உறுநிலையாகப் பெறுகின்ற பகுதி யாராய்ந்து பெறுதற்குப் பட்ட விழுப்புண் தீர்ந்து வாழும் வாழ்க்கை நிலையின்மையின் அதனை வேண்டாது புண்ணைக் கிழித்து இறக்கும் மறக்காஞ்சியானும்;

இஃது யாக்கை நிலையின்மையை நோக்கிப் புகழ்பெறுதல் குறித்தது. இதனை வாகைத்திணைப்பின்னர் வைத்தார்; இக்காஞ்சி யும் வாகையொடு மயங்கியுங் காஞ்சியாதல்பற்றி.

(எ-டு)

"பொருது வடுப்பட்ட யாக்கை நாணிக்
கொன்று முகந்தேய்ந்த வெஃகந் தாங்கிச்
சென்று களம்புக்க தானை தன்ஞெடு
முன்மலைந்து மடிந்த வோடா விடலை
நடுக னெடுநிலை நோக்கி யாங்குத்தன்
புண்வாய் கிழித்தனன் புகழோ னந்நிலைச்
சென்றுழிச் செல்க யாதோ வெண்குடை
யரசு மலைந்து தாங்கிய களிறுமடி பறந்தலை
முரண்கெழு தெவ்வர் நாண
விவன்போ லிந்நிலை பெறுகயா னெனவே"

இது போர் முடிந்தபின் களம்புக்கு நடுகல் ஆயிஞனைக்கண்டு உடம்பினது நிலையின்மையும் பண்புறவருதலையும் நோக்கி இறந்தமை கூறலிற் காஞ்சியாயிற்று.

ஏமச் சுற்றம் இன்றிப் புண்ஞேற் பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்—கங்குல் யாமத்துக் காத்தற்குரிய சுற்றக்குழாமின்மை யின் அருகுவந்து புண்பட்டோனைப் பேய்தானே காத்த பேய்க் காஞ்சியானும்;

பேய் காத்ததென்றலின் ஏமம் இரவில் யாமமாயிற்று; ஏமம் காப்புமாம். ஓம்புதலாவது அவனுயிர் போந்துணையும் ஓரியும் நரியுங் கிடந்தவன் தசையைக் கோடலஞ்சிப் பாதுகாத்தலாம்.

இது சுற்றத்தாரின்மை கூறலிற் செல்வநிலையாமையாயிற்று. பக்கமென்றதனாற் பெண்டிர் போல்வார் காத்தலும் பேயோம்பாத பக்கமுங் கொள்க.

(எ-டு)

"புண்ணனந்த ருற்றாரைப் போற்றுந ரின்மையிற்
கண்ணனந்த ரில்லாப்பேய் காத்தனவே—யுண்ணு
முளையோரி யுட்க வுணர்வொடுசா யாத
விளையோன் கிடந்த விடத்து"

என வரும்.

ஏனைய வந்துழிக் காண்க.

இன்னன் என்று இரங்கிய மன்னையானும்—ஒருவன் இறந்துழி அவன் இத்தன்மையோனென்று ஏனையோர் இரங்கிய கழிவு பொருட்கண்வந்த மன்னைக்காஞ்சியானும்.

இது பலவற்றின் நிலையாமைகூறி இரங்குதலின் மன்னைக் காஞ்சியென வேறுபெயர்க் கொடுத்தார். இது பெரும்பான்மை மன் என்னும் இடைச்சொற் பற்றியே வருமென்றற்கு மன் கூறினார். அது மன்னையெனத் திரிந்து காஞ்சியென்பதனோடடுத்து நின்றது. இஃது உடம்பொடு புணர்த்தல்.

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற்றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற்றானு நனிபல கலத்தன் மன்னே
யென்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
யம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே."
(புறம் - 235)

என இப் புறப்பாட்டு மன் அடுத்து அப்பொருடந்தது.

"பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
யாடுநர்க் கீத்த பேரன் பினனே
யறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே
மகளிர் சாயன் மைந்தர்க்கு மைந்து
துகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கி
லனைய னென்னு தத்தக் கோனை
நினையாக் கூற்ற மின்னுயி ருய்த்தன்று
பைத லொக்கற் றழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்
நனந்தலை யுலக மரந்தை தூங்கக்
கெடுவி னல்லிசை சூடி
நடுக லாயினன் புரவல னெனவே." (புறற்–221)

இது மன் அடாது அப்பொருடந்தது.

"செற்றன்று ஆயினும்" என்னும் (226) புறப்பாட்டு முதலியன வும் அன்ன.

இதனை ஆண்பாற் கையறுநிலை யெனினும் அமையும்.

இன்னது பிழைப்பின் இதுவாகியரெனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும் — இத்தன்மைய தொன்றினைச் செய்தலாற்றேனாயின் இன்னவாறாகக் கடவேனெனக் கூறிய வஞ்சினக் காஞ்சியானும்;

அது தான்செய்யக் கருதியது பொய்த்துத் தனக்கு வருங் குற்றத்தால் உயிர்முதலியன துறப்ப னென்றல். சிறப்பு-வீடு பேறன்றி உலகியலிற் பெருஞ்சிறப்பு.

(எ - டு)

"மெல்ல வந்தெ னல்லடி பொருந்தி
யீயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்ச
மின்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்

தாற்ற லுடையோ ராற்றல் போற்றுதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே."

(புறம் - 73)

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்" "மடங்கலிற் சினைஇய" என்னும் (72, 71) புறப்பாட்டுக்கள் உயிருஞ் செல்வமும் போல்வன நிலையும் பொருளென நினையாது வஞ்சினஞ் செய்தன.

இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோற் றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்—இனிதாகிய நகையினையுடைய மனைவி தன் கணவன் புண்ணுற்றோனைப் பேய் தீண்டுதலை நீக்கித் தானுந் தீண்டாத காஞ்சியானும்

என்றது, நகையாடுங் காதலுடையாள், அவனைக் காத்து விடிவளவுஞ் சுற்றுதலன்றி முயங்குதற்கு உள்ளம் பிறவாதபடி அவன் நிலையாமையை எய்திணுனென்றவாறு.

இதுவும் ஆண்பாற்காஞ்சியாம். இக் காஞ்சியென்பதனை முன்னும்பின்னுங் கூட்டுக.

"தீங்கனி யிரவமொடு வேம்பு மனைச்செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கப்
பையப் பெயர்த்து மையிழு திழுகி
யையவி சிதறி யாம்ப லூதி
யிசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி

வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே"
(புறம்-281)

என வரும்.

நீத்த கணவற் றீர்த்த வேலிற் பேஎத்த மனைவி ஆஞ்சியானும்—உயிர்நீத்த கணவன் தன்னுறவை நீக்கின வேல்வடுவாலே மனைவி அஞ்சின ஆஞ்சிக்காஞ்சியானும்;

எஞ்ஞான்றும் இன்பஞ்செய்த கணவனுடம்பு அறிகுறி தெரியாமற் புண்பட்டு அச்சநிகழ்தலின், யாக்கை நிலையாமை கூறியதாம். பேஎத்த என்பது உரிச்சொன் முதனிலையாகப் பிறந்த பெயரெச்சம். அஞ்சி என்பது ஆஞ்சியெனநின்றது.

"இன்ப முடம்புகொண் டெய்துவிர் காண்மினோ
வன்பி னுயிர்புரக்கு மாரணங்கு—தன்கணவ
னல்லாமை யுட்கொள்ளு மச்சம் பயந்ததே
புல்லார்வேன் மெய்சிதைத்த புண்"
(தகடூர்யாத்திரை-புறத்திரட்டு-மூதின் மறம்-8)

என வரும்.

இனி 'வேலிற்பெயர்த்த மனைவி' யென்று பாடமோதி, அவ்வேலான் உயிரைப்போக்கின மனைவி யென்று கூறி, அதற்குக்

"கௌவைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோ னவ்வேலே
யம்பிற் பிறழுந் தடங்க ணவன்காதற்
கொம்பிற்கு மாயிற்றே கூற்று"
(புறப்-வெ-மாலை-காஞ்சி-23)

என்பது காட்டுப.

நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும்—பெண்கோளொழுக்கத்தினொத்து மறுத்

தல் பற்றிப் பகைவனுப் வலிந்து கோடற்கு எடுத்துவந்த அரசனோடு முதுகுடித் தலைவராகிய வாணிகரும் வேளாளருந் தத்தம் மகளிரைப் படுத்தற்கு அஞ்சிய மகட்பாற் காஞ்சியானும்;

வேந்தியலாவது உயிர்போற்றுது வாழ்தலின், அவரது நிலையின்மை நோக்கி, அவரோடொத்து மகளிரைப் படுத்தற் கஞ்சி மறுப்பாராதலின் அஞ்சியவென்றும், மேல்வந்த வென்றுங் கூறினர். அம்முது குடிகள் தாம் பொருதுபடக் கருதுதலின் உயிரது நிலையாமை உணர்ந்த காஞ்சி யாயிற்று. பாலென்றதனுன் முதுகுடிகளேயன்றி 'அனைநிலைவகை' (தொல்-புறத்திணை-20) யெனப்பட்டார் கண்ணும் இத்துறை நிகழ்தல் கொள்க.

(எ-டு)

"நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
கடிய கூறும் வேந்தே தந்தையு
நெடிய வல்லது பணிந்துமொழி யலனே
இஃதிவர் படிவ மாயின் வையெயிற்
றரிமதர் மழைக்க ணம்மா வரிவை
மரம்படு சிறுதீப் போல
வணங்கா யினடான் பிறந்த வூர்க்கே" (புறம்-349)

என வரும்.

"களிறணைப்பக் கலங்கின காஅ
தேரோடத் துகள்கெழுமின தெருவு
மாமறுகலின் மயக்குற்றன வழி
கலங்கழா அலிற் றுறை கலக்குற்றன
தெறன்மறவ ரிறைகூர்தலிற்
பொறைமலிந்து நிலனெளிய
வந்தோர் பலரே வம்ப வேந்தர்
பிடியுயிர்ப் பன்ன கைகவ ரிரும்பி
னோவுற ழிரும்புறங் காவல் கண்ணிக்
கருங்கண் கொண்ட நெருங்கல் வெம்முலை
மைய னோக்கிற் றையலை நயந்தோ

ரளியர் தாமேயிவ டன்னை மாரே
செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
நிரலல் லோர்க்குத் தரலோ வில்லெனக்
கழிப்பிணிப் பலகையர் கதுவாய் வாளர்
குழாஅங் கொண்ட குருதியம் புலவொடு
கழாஅத் தலைய கருங்கடை நெடுவே
லின்ன மறவர்த் தாயினு மன்னோ
வென்னு வதுகொ றூனே
பன்னல் வேலியிப் பணைநல் லூரே. (புறம்-345)

இதனுள் "நிரலல் லோர்க்குத் தரலோ வில்லென" என்றலின், அரசர்க்கு மகட்கொடைக் குரியரல்லாத அனைநிலைவகை யோர்பாற் பட்டது.

முலையும் முகனுஞ் சேர்த்திக் கொண்டோன் தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ ஈரைந்தாகு மென்ப—தன்கணவன் தலையைத் தன்முகத்தினும் முலையினுஞ் சேர்த்திக்கொண்டு, அத்தலையான் மனைவி யிறந்த நிலைமையானுந் தொகைபெற்றுக் காஞ்சி பத்துவகைப்படுமென்று கூறுவாராசிரியர் என்றவாறு.

தலை, அவள் இறத்தற்கேதுவாகலின் அது வினைமுதலாயிற்று. மேல் துறை இரண்டென்பாராகலின், இவை பத்தும் ஒருதுறையாமென்றற்கும் இவை ஆண்பாற்குரிய வென்றற்கும் ஈரைந்தென வேறோர் தொகை கொடுத்தார். அவன் தலையல்லது உடம்பினை அவள் பெருமையின், அவன் யாக்கைக்கு நிலையின்மை யெய்தலின், இதுவும் ஆண்பாற்கே சிறந்ததாம், மனைவி இறந்துபடுதலும் அதனுலெய்துதலின் மேல்வருகின்ற பெண்பாற்கும் இயைபுபடப் பின்வைத்தார். இதற் கியைபுபடத் தொடாக்காஞ்சியும் ஆஞ்சிக்காஞ்சியும் பெண்பாலொடு பட்ட ஆண்பாற் காஞ்சியாதலின் முன் வைத்தார். இவை ஒருவகையாற் பெண்பாற்கண்ணு நிலையின்மையுடைய வாயினும் இரண்டிடத்தும் ஓதிச் சூத்திரம் பல்காமற், சிறப்புடைய ஆண்மகற்கே ஓதிப் பெண்பாற் பகுதியுந் தழீஇயினு ரென்றுணர்க. இனி வருகின்ற பத்தும் பெண்பாற்கே யுரிமையின் அவற்றிற்கும் ஈரைந்தென்பதனைக் கூட்டிமுடிக்க.

(எ-டு)

“நிலையி லுயிரிழத்தற் கஞ்சிக் கணவன்
றலையொழிய மெய்பெருள் சாய்ந்தா—டலையினல்
வண்ணம் படைத்தான் முழுமெய்யு மற்றத
னுண்ணின்ற தன்றே வுயிர்”

என வரும்.

பேரிசை மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம் ஆய்ந்த பூசன் மயக்கத்தானும்—பெரும்புகழுடையனுகி மாய்ந்தாஞெருவனைச் சுற்றிய பெண்கிளைச் சுற்றங் குரல்குறைவுபட்ட கூப்பீட்டு மயக்கத்தானும்;

என்றது, சுற்றத்தார் அழுகைக்குரல் விரவியெழுந்த ஓசையை. ஆய்ந்தவென்பது உள்ளத னுணுக்கம். ‘மாய்ந்த பூசன் மயக்க’ மென்ற பாடமாயிற், சுற்றம் ஒருங்கு மாய்ந்த வழிப் பிறரழுத பூசன் மயக்கமென்று கொள்ளினும் அமையும் ஈண்டு மாய்ந்த மகனென்றதூஉஞ் சுற்றப்படுவானை அறிவித் தற்கே; ஆண்பாலும் உடன்கூறியதன்று. மேலனவற்றிற்கும் இஃதொக்கும்.

(எ-டு)

“இரவலர் வம்மி னெனவிசைத்த லின்றிப்
புரவலன் மாய்ந்துழியும் பொங்கு—முரைமயங்க
வேற்கண் ணியரழுத வெம்பூசல் கேட்டடங்காத்
தோற்கண்ண போலுந் துடி”
(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு-இரங்கல்-2)

எனவரும்.

“மீனுண் கொக்கின் றூவி யன்ன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல் வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே.”

என்றும் (277) புறப்பாட்டும் அது.

தாமே ஏங்கிய தாங்கரும் பையுளும்—அச்சுற்றத்தாருமின்றி மனைவியர் தாமே தத்தங் கொழுநரைத் தழீஇயிருந்து அழுதது கண்டோர் பொறுத்தற்கரிய நோயானும்;

தாமேயெனப் பன்மை கூறினர், ஒருவர்க்குத் தலைவியர் பல ரென்றற்கு. ஏகாரம் சுற்றத்திற் பிரித்தலிற் பிரிநிலை.

இது செல்வமும் இன்பமும் ஒருங்கு நிலையாமை கூறியது.

"மழைகூர் பானாட் கழைபிணங் கடுக்கத்துப்
புலிவழங் கதரிடைப் பாம்புதூங் கிறுவரை
இருள்புக்குத் துணிந்த வெண்குவரற் கல்லளை
யொருதனி வைகிய தனைத்தே பெருவளத்து
வேனின் மூதூர்ப் பூநாறு நறும்பக
லெழுதுசுவர் மாடத்துக் கிளையுடை யொருசிறை
யவரின்று நிகழ்தரு முறவே யதனா
லழுதுபனி கலுழ்ந்தவெங் கண்ணே யவ்வழி
நீர்நீந்து பாவை யசைவது நோக்கிச்
சேணிடை யகன்ற துயிலே யதுவினி
யவருடைக் கனவோடிடிவ்வழி யொருநாள்
வாரா தாயினும் யாதாங் கொல்லோ
மெலிந்து மெலியுமென் யாக்கையிற்
கழிந்த கழியுமென் னுருயிர் நிலையே."

என வரும்

"கதிர்மூக் காரல் கீழ்ச்சேற் றொளிப்ப" என்னும் (249) புறப்பாட்டும் அது.

தாமே யேங்கிய என்பதற்குச் சிறைப்பட்டார் தாமே தனித் திருந்த தென்று கூறிக்,

"குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
மாளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபத

மதுகை யின்றி வயிற்றுத் தீத்தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே." (புறம்-74)

என்னும் புறப்பாட்டுக் காட்டுவாரும் உளர்.

கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச் செல்வோர் செப்பிய மூதானந்தமும்—மனைவி தன் கணவன் முடிந்தபொழுதே உடன் முடிந்துபோகிய செலவுநினைந்து கண்டோர் பிறர்க் குணர்த்திய மூதானந்தத்தானும்;

ஆனந்தம் – சாக்காடு. முதுமை கூறினார், உழுவலன்பு பற்றி. இப்படியிறத்தலின் இஃது யாக்கை நிலையின்மை.

(எ - டு)

"ஒருயி ராக வுணர்க வுடன்கலந்தார்க்
கிருயி ரென்ப ரிடைதெரியார்—போரில்
விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கு
முடனே யுலந்த துயிர்"
(புற-வெ-மாலை-சிறப்பிற்-பொது-9)

என வரும்.

நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து தனிமகள் புலம்பிய முதுபாலையும்—மிகுதிமிக்க அருநிலத்தே தன் கணவனை இழந்து தனித்த தலைமகள் தன் தனிமையை வெளிப்படுத்தின முதுபாலை யானும்;

புலம்பிய வெனவே அழுதல் வெளிப்படுத்தல் கூறிற்று. பாலை யென்பது பிரிவாகலின், இது பெரும்பிறிவாகிய பிரிவாதல் நோக்கி முதுபாலை யென்றார். நனிமிகு சுரமென்று இரு கால் அதனருமை கூறவே, பின்பனிப் பிரிவு அதற்குச் சிறந்த தன்றாயிற்று.

இதுவும் இன்பமும் செல்வமும் ஒருங்கு நிலையின்மை கூறிற்று.

"இளையரு முதியரும் வேறுபுலம் படர
வெடுப்ப வெழாஅய் மார்பமண் புல்ல
விடைச்சுரத் திறுத்த மள்ள விளர்த்த
வளையில் வறுங்கை யோச்சிக் கிளையு
ளின்ன னுயின னிளையோ னென்று
நின்னுரை செல்லு மாயின் மற்று
முன்னூர்ப் பழுனிய கோளியா லத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளு
மானது புகழு மன்னை
யாங்கா குவள்கொ லளிய டானே" (புறம்-254)

என வரும்.

கழிந்தோர் தேஎத்து அழிபடர் உறீஇ ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும் — கணவனோடு மனைவியர் கழிந்துழி அவர்கட்பட்ட அழிவுபொருளெல்லாம் பிறர்க்கு அறிவுறுத்தித் தாம் இறந்துபடா தொழிந்த ஆயத்தாரும் பரிசில்பெறும் விறலியருந் தனிப்படருழந்த செயலறு நிலைமையானும்;

ஒழிந்தோரென வரையாது கூறினமையிற் கழிந்தோராற் புரக்கப்படும் அவ்விருதிறத்தாரையும் உடன்கொள்க. கழிந்தோ ரென்ற பன்மையால் ஆண்பாலுந் தழீஇயினர் ; கையறுநிலை அவரையின்றி அமையாமையின். ஆண்பாற் கையறுநிலை மன்னைக்காஞ்சியுள் அடங்கும். அழிவாவன புனல்விளையாட்டும், பொழில் விளையாட்டும், தலைவன்வென்றியும் போல்வன.

(எ - டு)

"தேரோன் மகன்பட்ட செங்களத்து ளிவ்வுடம்பிற்
றீராத பண்பிற் றிருமடந்தை—வாரா
வுலகத் துடம்பிற் கொழிந்தனள் கொல்லோ
வலகற்ற கற்பி னவள்"

என வரும்.

காதலி இழந்த தபுதார நிலையும்—தன் மனைவியைக் கணவ னிழந்த தபுதார நிலையானும்;

என்றது தாரமிழந்த நிலை. தன் காதலியை இழந்தபின் வழிமுறைத் தாரம் வேண்டின். அது காஞ்சிக் குறிப்பன்று என்றற்கும், எஞ்ஞான்றும் மனைவியில்லாதானுந் தபுதார நிலைக்கு உரியனாயினும் அது காஞ்சியாகாதென்றற்கும், தபுதார நிலையென்றே பெயர்பெறுதன் மரபென்றற்கும், காதலியிழந்த நிலையுமென்றே ஒழியாது, பின்னுந் தபுதாரநிலையு மென்றார். தலைவர் வழிமுறைத்தாரமும் எய்துவாராகலின் அவர்க்கு நிலை யாமை சிறப்பின்மையின் ஆண்பாற் காஞ்சியன்றாயிற்று.

இஃது யாக்கையும் இன்பமும் ஒருங்கு நிலையின்மையாம்.

(எ-டு)

"யாங்குப் பெரிதாயினு நோயள வெனைத்தே
யுயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்
தொள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனண் மடந்தை
யின்னும் வாழ்வ லென்னிதன் பண்பே" (புறம்-245)

என வரும்.

காதலன் இழந்த தாபதநிலையும்—காதலனையிழந்த மனைவி தவம் புரிந்தொழுகிய நிலையாமையானும்;

இருவரும் ஒருயிராய்த் திகழ்ந்தமையின் உயிரும் உடம்பும் இன்பமும் செல்வமும் ஒருங்கிழந்தாள் தலைவியேயாம்.

இதனை இல்லறம் இழத்தலின் அறநிலையின்மையுமெண்ப.

(எ-டு)

"அளிய தாமே சிறுவெள் ளாம்ப
லிளைய மாகத் தழையா யினவே

யினியே,
பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்
தின்னு வைக லுண்ணும்
அல்லிப் படூஉம் புல்லா யினவே" (புறம்-248)

என வரும்.

நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச் சொல்லிடையிட்ட பாலைநிலையும் – கற்புடைய மனைவி தன்கணவன் இறந்துழி அவனோடு எரிபுகுதல் வேண்டி எரியை விலக்கினரோடு உறழ்ந்துகூறிய புறங்காட்டு நிலையானும்;

எல்லாநிலத்தும் உளதாகி வேறு தனக்கு நிலனின்றி வருதலானும் நண்பகல்போல் வெங்கனலான் வெதுப்புதலானும் புறங்காட்டைப் பாலை யென்றார். பாலைத்தன்மை எய்திற்று என்றதற்கு நிலையென்றார்.

(எ–டு)

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
யணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் தட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு
முயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்கோட்டுப் பண்ணிய கருங்கோட் டீம
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே" (புறம்-246)

எனவரும்.

மாய்பெருஞ் சிறப்பிற் சிறுவற் பெயரத் தாய் தப வரூஉந் தலைப்பெயல் நிலையும்—பொருகளத்துப் பொருதுமாயும் பெருஞ் சிறப்பிற் றீர்ந்து தன்மகன் புறங்கொடுத்துப் போந்தானாக, அதுகேட்டுத் தாய் சாக்காடு துணிந்து சென்று மகனைக் கூடுங் கூட்டமொன்றானும்; இனி அவன் பிறர்சிறப்பு மாய்தற்குக் காரணமாகிய பெருஞ்சிறப்பொடு களப்பட்டுத் துறக்கத்துப் போயவழி அவனோடு இறந்துபட வரும் தாயது தலைப்பெய னிலைமையொன்றானும்;

இவ் விருகூறும் உய்த்துக்கொண்டுணர்த லென்னும் உத்தி. நிலையென்றதனால் அவள் இறந்துபடாது மீடலுஞ் சிறுபான்மையாம் காஞ்சி யென்றுகொள்க. அஃது அன்பிற்கு நிலையின்மையாம்.

"வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
நோவே னத்தை நின்னீன் றனனே
பொருந்தா மன்ன ரருஞ்சம முருக்கி
யக்களத் தொழிதல் செல்லாய் மிக்க
புகர்முகக் குஞ்சர மெறிந்த வெஃக
மதன்முகத் தொழிய நீபோந் தனையே
யதனால், லெம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை யீன்ற வயிறே"
(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு, மூதின்மறம்-9)

இத் தகடூர்யாத்திரை கரியிடை வேலொழியப் போந்ததற் குத் தாய்தபவந்த தலைப்பெயனிலை.

"எற்கண் டறிகோ வெற்கண் டறிகோ
வென்மக னாத லெற்கண் டறிகோ
கண்ணே கணைமூழ் கினவே தலையின்
வண்ண மாலையும் வாளிவிடக் குறைந்தன
வாயே, பொங்குநுனைப் பகழி மூழ்கலிற் புலர்வழித்
தாவ நாழிகை யம்புசெறிந் தற்றே
நெஞ்சே வெஞ்சரங் கடந்தன குறங்கே
நிறங்கரந்து பலசர நிரைத்தன வதனால்

லவிழ்பூ வப்பணைக் கிடந்தோன்
கமழ்பூங் கழற்றீங் காய்போன் றனனே."

இத் தகடூர்யாத்திரை துறக்கத்துப்பெயர்ந்த நெடுங்கேரளன் தாய் இறந்துபட்ட தலைப்பெயனிலை.

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோண்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவன் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

இப் புறப்பாட்டு (278) மீண்டது.

"ஈன்றுபுறந்தருதல்" என்னும் (312) புறப்பாட்டும் அது.

மலர்தலை உலகத்து மரபு நன்கறியப் பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு—அகன்ற இடத்தினையுடைய உலகங்களிடத்து வரலாற்றுமுறைமையினைப் பலரும் பெரிதுணரும் படியாகப் பிறந்தோரெல்லாரும் இறந்துபோகவும் எஞ்ஞான்றும் இறப்பின்றி நிலைபெற்ற புறங்காட்டினை வாழ்த்துதலானும்;

(எ - டு)

"உலகு பொதியுருவந் தன்னுருவ மாகப்
பலர்பரவத் தக்க பறந்தலை நன்காடு
புலவுங்கொ லென்போல் புலவுக் களத்தோ
டிகனெடுவே லானை யிழந்து"
(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-இரங்கல்-19)

என வரும்.

"களரி பரந்து கள்ளி போகிப்
பகலுங் கூஉங் கூகையொடு பிறழ்பல்
வீம விளக்கிற் பேஎய் மகளிரோ
டஞ்சுவந் தன்றிம் மஞ்சுபடு முதுகாடு
நெஞ்சமர்க் காதல ரழித கண்ணீ
ரென்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
வெல்லாப் புறனுந் தான்கண் டுலகத்து
மன்பதைக் கெல்லாந் தானாய்த்
தன்புறங் காண்போர் காண்பறி யாதே." (புறம்–356)

இதுவும் அது.

தொகைஇ ஈரைந்து ஆகுமென்ப - தொகைபெற்றுக் காஞ்சி பத்துவகைப்படுமென்று கூறுவர் ஆசிரியர்; நிறையருஞ் சிறப்பிற் றுறை இரண்டு உடைத்தே-ஆதலான் அக் காஞ்சி நிறுத்தற்கு எதிர் பொருளில்லாத பெரிய சிறப்பினையுடைய ஆண்பாற்றுறையும் பெண்பாற்றுறையுமாகிய இரண்டு துறையினையுடைத்து என்றவாறு.

எனவே முற்கூறிய பத்தும் இப்பத்துமாக இருபதென்பதுங் கூறினாராயிற்று. நிறையருஞ் சிறப்பென்றதனானே மக்கட்குந் தேவர்க்கும் உள்ள நிலையாமையே காஞ்சிச் சிறப்புடைத்தாகக் கூறப்படுவது; ஏனை அஃறிணைப்பகுதிக் கண்ணுள்ள நிலையாமை காஞ்சிச் சிறப்பன்று என்றுணர்க.

(வி–ரை) வாழ்நாளைக் கூறு செய்வது கூற்று. அது அம் சாரியை பெற்று கூற்றம் என நின்றது. பேரூர்க் கூற்றம் என்பதிலும் கூற்று என்பது அம் பெற்று நின்றமையின் இதனை எடுத்துக்காட்டினார். காலம் - காலக் கடவுள் என உரை காண்டலின் அதுவும் கூற்றமும் வேறன்று. ஐயனாரிதனார் பொதுவியற் படலத்தில் பெருங்காஞ்சி என்னும் துறையில் இப் பொருண்மையைக் கூறுவார்.

திரைகவுள் - திரைந்த கதுப்பு. ஒருவன்-இயமன். தூங்கு வழித்தூங்கி-அசைந்த இடத்து அசைந்து. குட்டம் - ஆழம்,

தொடித்தலை-பூண்செறிந்த தலை. இரும் இடைமிடைந்த-இருமல் இடையே நெருங்கின.

ஐயனாரிதனார் மறக்காஞ்சி என்பதற்கு 'மண்கெழு மறவன் மாறுநிலை நோனான் புண்கிழித்து முடியினும் அத்துறையாகும்' என இலக்கணம் கூறுவர். ஐயனாரிதனார் பேய்நிலை என்பதற்குச் 'செறுபேயோன் திறம் நோக்கிப் பிரிவின்றிப் பேய் ஓம்பின்று' என இலக்கணம் கூறுவர். புண் அனந்தர் - புண்பட்டதால் உளதாய மயக்கம்; ஈண்டு இறப்பைக் குறித்து. கண் அனந்தர்-கண் துயில் கொள்ளுதல். உளை ஓரி-ஊளையிடும் நரி.

மன்-கழிவு. அதாவது இறந்த பொருள் மன் என்பதொடு தொடர்புற்றுவரும் காஞ்சி மன்னைக்காஞ்சியாம். ஆசிரியர் இதனை இச்சொல்லொடு தொடர்பு படுத்தியே கூறியிருப்பது உடம்பொடு புணர்த்தலாம். ஐயனாரிதனாரும் இதனைத்தழுவி மன்னைக்காஞ்சி எனப்பெயர் கூறி 'வியலிடம் மருள விண்படர்ந்தோன் இயல் பேத்தி அழிபிரங்கின்று' என இலக்கணம் கூறுவர். இப்பாடற் கண் வரும் மன் என்பன 'அது இதுபொழுது கழிந்தது' என்னும் பொருள்பட நின்றன. ஆய்கோலன்-திண்ணிய நட்பினையுடைய வன். பைதல்-துன்பம். அரந்தை-துன்பம். ஆண்பால் கையறு நிலை-ஒரு வீரன் இறப்ப அவன் சுற்றத்தார் அவனைக் குறித்துச் செயலற்று இரங்கிக் கூறலாம்.

துணிவு பற்றி, 'இது ஆகியர் என' இறந்த காலத்தால் கூறினார் என்பர் இளம்பூரணர். ஐயனாரிதனாரும் 'வஞ்சினக் காஞ்சி' எனப் பெயர்கூறி இதனைத் தழுவுவர்.

அரசோ தஞ்சம்-அரசு கொடுத்தலோ எளிது. 'தஞ்சக்கிளவி எண்மைப் பொருட்டே' என்பது தொல்காப்பியம். சிதடன் - குருடன். நீள்முளை-நீண்ட மூங்கில் முளை. ஒல்லா முயக்கு - மனத்தொடுபடாத முயக்கு.

நகையாடும் காதலுடையாள் - புணர்ச்சிக் காலத்திற்குமுன் நகைக் குறிப்புச் செய்யும் காதல் தன்மையுடையாள்.

ஐயனாரிதனார் மறவனொருவனின் விழுப்புண்ணைத் தொடுதற் கஞ்சிய பேய் நிலையைத் தொடாக்காஞ்சி என்பர். இதற்கு மாறாக இப்பேய், வீரனது புண்ணைத் தொடுதலைத் 'தொட்ட காஞ்சி' என்பர்.

இரவம் - இரவமரம். வாங்குமருப்பு - வளைந்தகோடு. மை விழுது-மையினது மெருகு. இழுகி-இட்டு. கடிநறை-நறுமணம். விழுமம்-துன்பம். பேஎம்-அச்சம் குறிக்கும் உரிச்சொல். 'பேஎம் நாம் உரும் என வருஉம் ஆமுறை மூன்றும் அச்சப்பொருள்' என்பது தொல்காப்பியம். பேஎ என்பதன் அடியாகப் பேஎத்த என வருதலின் உரிச்சொல் முதனிலையாகப் பிறந்தது என்றார். அது மனைவி என்னும் பெயரைத் தழுவி நிற்றலின் பெயரெச்சம் என்றார்.

கற்புடைமை - ஒருமை உடைமை.

பெயர்த்த மனைவி எனப்பாடம் ஓதி இப்பாடலை எடுத்துக் காட்டுவர் இளம்பூரணர். இதனைத் தழுவியே ஐயனாரிதனாரும் ஆஞ்சிக்காஞ்சி எனப்பெயர் தந்து "மன்னுயிர் நீத்த வேலின் மனையோள் இன்னுயிர் நீப்பினும் அத்துறையாகும்" என கூறினார்.

இளம்பூரணர் மகள் மறுத்தார் யாரெனக் கூறவில்லை. நிகர்த்து - எதிர்த்து என உரைகாண்டல் சிறப்புடையதாம். ஐயனாரிதனாரும் மகட்பாற் காஞ்சி என இதனைத் தழுவித் துறை இலக்கணம் காண்பர்.

நுதிவேல்-வேலின்நுனி. படிவம்-கொள்கை.

வம்பவேந்தர் - புதிய அரசர். நிரல்அல்லோர்க்கு - கொடுக்கும் முறைமை உடையர் இல்லாதார்க்கு. கதுவாய்-வடு. பன்னல் - பருத்தி.

ஐயனாரிதனார் தலையொடு முடிந்த நிலையைத் தலையொடு முடிதல் என்பர்.

எண்கு-கரடி

ஊண்தடி-தசை. ஆளன்று-ஆள் அல்ல என்று. வாளிற்றப் பார்-வாளால் ஒக்குதலில்தப்பார். ஞமலி-நாய். கேளல் கேளிர்-பகைவர். வேளாண் சிறுபதம் - அவர் உதவியால் வந்த தண்ணீர். மதுகை - மனவலி. பிறர் உரையாகக் கூறி இருப்பது இளம்பூரணர் உரையாம். ஐயனாரிதனாரும் இதனைத் தழுவியே பொது வியலில் மூதானந்தம் என்னும் துறை வகுப்பர்.

விடன் ஏந்தும் - நஞ்சை ஏந்தும்

ஐயனாரிதனாரும் இதனைத் தழுவியே பொதுவியலில் முதுபாலை என்னும் துறை வகுப்பர்.

முதுபாலை - பெரும் பிரிவு; இறப்பு.

கோளியாலத்து - கோளியாகிய ஆலமரத்து

தேரோன் மகன் - கன்னன்

யாங்கு-எப்படி. எனைத்து. எவ்வளவிற்று. களரியம் பறந்தலை - களர் நிலத்துள்ள சுடுகாடு. பொத்திய - மூட்டிய. ஞாங்கர் - மேல் உலகம்.

அல்லிப் படூஉம் - அல்லியிடத்து உண்டாகும். புல்லாயி னவே - புல்லரிசியாய் உதவின.

இளம்பூரணர் 'நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச் சொல்லிடை இட்ட மாலை நிலையும்' எனப் பாடம் கொண்டு மாலை சொல் நிலையும் என மாறி கணவனொடு கிழத்தி பெரிய அழல் புகுவழி இடையிட்ட மாலைக் காலத்துக் கூறும் கூற்றும் எனப் பொருள் காண்பர்.

அணில் வரிக் கொடுங்காய் - வெள்ளரிக்காய். காழ் - விதை. வேளை வேந்தை - வேளைக் கீரையின் துவட்டல். உயவல் - வருந்துதல்.

அரும் பெரும் சிறப்பின் புதல்வர் பயந்த தாய் தபவரூஉம் தலைப் பெயல் நிலையும் எனப் பாடம் கொண்டு அரும் பெரும்

சிறப்பினையுடைய மகட் பெற்ற தாய் சாதற்கண் அவனைத் தலைப் பெயல் (சேர்தல்) நிலையும் என உரை காண்பர் இளம்பூரணர்.

வாதுவல் – கிழிப்பல். கல்லாக் காளை – வீர நெறியை அறியாத மகன். கரியிடை – யானையிடத்து. கை வேல் களிற்றொடு போக்கியவன் ஒன்று அவ்வானையை இறந்து படச் செய்திருத்தல் வேண்டும்; அல்லது அவ்வேலினை மீட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். இவ் விரண்டும் செய்யாது வெறுங் கையோடு வீடு வந்தமையின் அது பழியாயிற்று. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் தன் மெய் வேல் பறியா நகும் என்றது வெறுங் கையின்றி மெய்யில் பட்ட வேலைக் கையில் தாங்கிப் போர்க் களத்தினின்றும் மீளாது நக்கிருத்தலைக் குறிப்பதாகும். இது சிறப்பாதலின் திருவள்ளுவர் அதனைச் சிறப்பித்தார்.

எற்கண்டு அறிகோ – எதனைக் கொண்டு அறிவேனோ? வாளி – அம்பு. ஆவ நாழிகை – அம்பறுத்தூணி. குறங்கு – தொடை, அப்பணை – போர்க் கருவிகளாலாய படுக்கை, கழல் தீங்காய் – இனிய கழற்காய் முட்கள் சூழ நிற்கும். இக் காய் போர்க் கருவிகள் சூழ நிற்கும் வீரற்கு உவமையாயிற்று.

உளரிய – பற்றிய. முளரி மருங்கின் – தாமரை இலை போன்ற அடி வயிறு.

துழவுவோள் – துழாவிப் பார்ப்பவள். படு மகன் – வெட்டுண்டு கிடக்கும் மகன்.

உலகு பொதி உருவம் – உலகம் முழுவதையும் தன் கைத் தடக்கிய வடிவம். புலவுக் களம் – தனித்திருக்கும் போர்க் களம்.

களரி – காடு. ஈம விளக்கு – பிணம் சுடும் விறகினின்றும் தோன்றும் விளக்கு.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்து இவ்வுலகு" எனத் திருவள்ளுவனாரும் சிறப்புடைய உயர் திணைக்கண் நிலையாமை வைத்துக் கூறுதல் காண்க (24)

பாடாண்திணையின் இலக்கணம்

**80. பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே.**

இது மேற் புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின் (தொல்-புறத்திணை-1) என்புழிக் கிடக்கைமுறை கூறிய முறையான் இறுதிநின்ற பாடாண்டிணைக்குப் பொதுவிலக்கணம் உணர்த்துவான் அதற்குப் பெயர் இன்னதெனவும், அது கைக்கிளைப்புறனுமெனவும், அஃது இத்துணைப் பொருளுடைத்தெனவுங் கூறுகின்றது.

(இ-ள்) பாடாண்பகுதி கைக்கிளைப்புறனே – பாடாணெனப் பட்ட புறத்திணையது கூறு கைக்கிளையென்று கூறப்பட்ட அகத் திணைக்குப் புறனும்; நாடுங்காலை நாலிரண்டு உடைத்து – தன்னை நாடிச் சொல்லுவார் செய்யுளுண் முடிந்த பொருள் பாடாணுகவே நிறுப்ப நாடுங்காலத்து எண்வகைப் பொருளுடைத்து என்றவாறு.

பாடாணென்பது பாடுதல் வினையையும் பாடப்படும் ஆண் மகனையும் நோக்காது. அவனதொழுகலாறுகிய திணை யுணர்த்தின மையின் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட, ஒரு புலவன் வீடு பேறு முதலிய பரிசில் வேண்டலின் அவைதம்மின் வேறுகிய ஒரு தலைக்காமமாகிய கைக்கிளையோ டொத்தலிற் பாடாண்டிணை கைக்கிளைப் புறனுயிற்று. வெட்சி முதலிய திணைகளுஞ் சுட்டி யொருவர் பெயர் கொடுத்துங் கொடாதும் பாடப்படுதலிற் பாடாண்டினையாயினும், ஒருவனை ஒன்று நச்சிக் கூறுமையின், அவர் பெறுபுகழ் பிறரைவேண்டிப் பெறுவதன்றித் தாமே தலைவ ராகப் பெறுதலின், அவை கைக்கிளைப்புறன் ஆகாமை உணர்க. இவ் விருகூறுந் தோன்றப் பகுதியென்றார். புகழை விரும்பிச் சென்றோர் வெட்சி முதலியவற்றைப் பாடின், அவை கைக்கிளைப் புறன் ஆகாதென உணர்க,

இதனானே புறத்திணை ஏழற்கும் பெயரும் முறையும் ஒருவாற்றாற் கூறினாராயிற்று. நாலிரண்டாவன இப்பாடாண்டினைக்கு ஓதுகின்ற பொருட்பகுதி பலவுங் கூட்டி ஒன்றும், இருவகை வெட்சியும் பொதுவியலும் வஞ்சியும் உழிஞையுந் தும்பையும் வாகையுங் காஞ்சியுமாகிய பொருள்கள் ஏழுமாகிய எட்டுமாம்.

இனி இக்கூறிய ஏழுதிணையும் பாடாண்டிணைப் பொருளாமாறு காட்டுங்கால் எல்லாத்திணையும் ஒத்ததாயினும், அவை பெரும்பான்மையுஞ் சிறுபான்மையுமாகி வருதலும் அவை இரண்டும் பலவும் ஒருங்குவருதலும் பாடாண்டினைக்கு மேற்கூறும் பொருளும் விராய் வருதலுமாமென்று உணர்க.

(எ-டு)

"முனைப்புலத்துக் கஃதுடை முன்னிரைபோல் வேந்தூர்
முனைப்புலம்பு முன்னிரையும் வீசி - யனைபுலத்தும்
சென்றது நின்சீர்த்தி தேர்வளவ தெவ்வர்போ
னன்றுமுண் டாக நமக்கு."

இது கூற்றுவகையானன்றிக் குறிப்பு வகையான் ஒன்று பயப்பானாக்கி நினைத்துரைத்தலின் வெட்சியும் வாகையும் வந்த பாடாண்டிணையாம்.

"அவலெறிந்த வுலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளைவயற் பரந்த
தடந்தா ணாரை யிரிய வயிரைக்
கொழுமீ னார்கைய மரந்தொறுங் குழாஅலின்
வெண்கை மகளிர் வெண்குரு கோப்பு
மழியா விழவி னிழியாத் திவவின
வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇ
மன்ற நண்ணி மறுகுசிறை பாடு
மகன்கண் வைப்பி னாடும வளிய
விரவுவேறு புலமொடு குருதி வேட்ட
மயிர்புதை மாக்கண் கடிய கழற

வமர்கோ ணேரிகந் தாரெயில் கடக்கும்
பெரும்பல் யானைக் குட்டுவன்
வரம்பி ரூனை பரவா வூங்கே.'' (பதிற்றுப்-23)

இதில் இமையவரம்பன் றம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக்கௌதமனூர் துறக்கம் வேண்டினுரென்பது குறிப்பு வகையாற் கொள்ள வைத்தலின் இது வஞ்சிப்பொருள் வந்த பாடாணாயிற்று.

"இலங்கு தொடிமருப்பின்" என்னும் பதிற்றுப்பத்து உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பாகிய உழிஞையாயினும் பதின்றுலாம் பொன் பரிசில் பெற்றமையிற் பாடாணாயிற்று.

"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே
பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலை பொருதநின் மணங்கம ழகல
மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே
நிலந்திறம் பெயருங் காலை யாயினுங்
கிளந்த சொன்னீ பொய்ப்பறி யலையே
சிறியிலை யுழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்று நிலைதளர்க்கு முருமிற் சீறி
யொருமுற் றிருவ ரோட்டிய வொள்வாட்
செருமிகு தானை வெல்போ ரோயே
யாடுபெற் றழிந்த மள்ளர் மாறி
நீகண் டனையே மென்றனர் நீயு
நுந்நுகங் கொண்டினும் வென்றோ யதனாற்
செல்வக் கோவே சேரலர் மருக
காறிரை யெடுத்த முழங்குரல் வேலி
நனந்தலை யுலகஞ் செய்தநன் றுண்டெனி
னடையடுப் பறியா வருவி யாம்ப
லாயிர வெள்ள வூழி
வாழி யாத வாழிய பலவே". (பதிற்று-63)

இது வாகைத்துறைப் பாடாண்பாட்டு.

இப் பதிற்றுப்பத்து நூறும் இவ்வாறே வருதலிற் பாடாண் டிணையேயாயிற்று. புறத்துள்ளும் இவ்வாறு வருவனவும் உணர்க.

(வி-ரை) பரவல் - வாழ்த்தல். இளம்பூரணர் கடவுள் வாழ்த்து வகை, வாழ்த்தியல் வகை, மங்கல வகை, செவியறி வுறுத்தல், ஆற்றுப் படை வகை, பரிசில் துறை வகை, கைக்கிளை வகை. வசை வகை என்பனவற்றை நாலிரண்டு வகை என்பர்.

ஒன்று பயப்பாளுக்கி - பசுவாகிய ஒன்றைத் தருவாளுகி, பகை வேந்தர் போர் முனையிலே புலம்புதற்கு முன்னமேயே அவர்களிடத்துக் கவர்ந்த ஆனிரையை அவர்களிடத்திலேயே கொடுத்து விடுவதால் அவர்களுக்கு நன்மை உண்டாகிறது. அது போன்றே நமக்கும் நன்மை உண்டாவதாகுக என்பது இப்பாடற் கருத்தாம்.

எறிந்த - இடித்த. வள்ளை - வள்ளைப்பூ. முடந்தை - தலை சாய்ந்து கிடக்கும். இரிய - நீங்க. ஆர்கைய-உண்ணும் கொக்கு முதலியன. வெண்கை - வளையல் அணியாத கை. ஓப்பும் - விரட்டும். அழியா-இடைவிடாத. திவவு - திவவுயாழ். உலம் - தானியம். குருதி வேட்ட-குருதிப்பலியூட்டிய. இகந்து-முன்னேறி.

இப்பாடல் பதிற்றுப்பத்து முதலாம் பத்து அல்லது பத்தாம் பத்திற்கு உரியதெனக் கருதுவர் (கண்டி) மணி. சு. அருளம் பல வாணர்.

பணிபு - பணிதல், கெழீஇ - பொருந்தி. கண் - கண்ணேடி. வணங்குசிலை - வளைந்த இந்திரவில். பொருத-போன்ற. அகலம்-மார்பு. திறம் பெயரும் - இயலால் திரியும். கொண்டி - கொள்ளத் தக்க பொருள். உருமு - இடியேறு, நுகம் - குலம், கடல் - காற்று. நன்று - அறம். உடை - இலை. ஆம்பல் - பூவல்லாத எண்ணிக்கை உணர்த்துவதோர் எண். (25)

தேவர்க்கு உரிய பகுதி

81. அமரர்கண் முடியு மறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி யொன்று மென்ப.

இது முன்னர் எட்டெனப் பகுத்த பாடாண்டிணையுள் ஏழொழித்துத் தன் பொருட்பகுதிகள் எல்லாங் கூடி ஒன்று மென்ற பாடாண்டிணை தேவரும் மக்களு மென இருதிறத் தார்க்கே உரிய என்பார் அவ்விரண்டினுள் தேவர்பகுதி இவை யென்ப துணர்த்துகின்றது.

(இ - ள்) அமரர்கண்முடியும் அறுவகையானும் — பிறப்பு வகையா னன்றிச் சிறப்புவகையால் தேவர்கண்ணே வந்து முடிதலுடையவாகிய அறுமுறை வாழ்த்தின்கண்ணும்; புரை தீர் காமம் புல்லிய வகையினும்—அத்தேவரிடத்தே உயர்ச்சி நீங்கிய பொருள்களை வேண்டுங் குறிப்புப் பொருந்தின பகுதிக் கண்ணும்; ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப—மேற் பாடாண் பகுதியெனப் பகுத்து வாங்கிக்கொண்ட ஒன்றனுள் தேவரும் மக்களுமெனப் பகுத்த இரண்டனுள் தேவர்க்கு உரித்தாம் பகுதியெல்லாந் தொக்கு ஒருங்குவருமென்று கூறுவார் ஆசிரியர் என்றவாறு.

அமரர்கண்ணே வந்து முடியுமெனவே அமரர் வேறென் பதூஉம் அவர்கண்ணே வந்து முடிவன வேறென்பதூஉம் பெற்றாம். அவை முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழை யும் முடியுடை வேந்தரும் உலகுமாம். இவை தத்தம் சிறப்பு வகையான் அமரர்சாதிப் பாலவென்றல் வேதமுடிவு. இதனானே பிறப்புமுறையாற் சிறந்த அமரரை வாழ்த்தலுஞ் சொல் லாமையே முடிந்தது, தந்திரவுத்தி வகையான். வகையென்ற தனானே அமரரை வேறு வேறு பெயர் கொடுத்து வாழ்த்தலும் ஏனைப் பொதுவகையாற் கூறி வாழ்த்தினன்றிப் பகுத்துக் கூறப்படாமையுங் கொள்க. புரை, உயர்ச்சியாதலின் உயர்ச்சி யில்லாத காமமாவது மறுமைப்பயன்பெறுங் கடவுள்வாழ்த்

துப்போல் உயர்ச்சியின்றி இம்மையிற் பெறும்பயனுதலின், இழிந்த பொருள்களிற் செல்லும் வேட்கைக் குறிப்பு. புல்லிய வகையாவது, அம்மனக்குறிப்புத் தேவர்கண்ணே பொருந்திய கூறுது தன் பொருட்டானும் பிறன்பொருட்டானும் ஆக்கத்து மேல் ஒருவன் காமுற்றவழி அவை அவற்குப் பயன்கொடுத்த லாம். இது ஒன்றனுடைய பகுதியென்க. இத்துணைப் பகுதியென்று இரண்டிறந்தன எனக் கூறுது, வாளாதே பகுதியென்றமையில் தேவரும் மக்களுமென இரண்டேயாயிற்று. அத் தேவருட் பெண் டெய்வங் 'கொடிநிலை கந்தழி' என்புழி அடங்கும். மக்களுட் பெண்பால் பாடுதல் சிறப்பின்மையிற் "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ" (புறம்-3) என்றுற்போலச் சிறுபான்மை ஆண் மக்களோடு படுத்துப் பாடுப. வகை யென்றதனுன் வாழ்த்தின்கண் மக்கட்பொருளும் உடன்றழுவினும் அவை கடவுள் வாழ்த்தா மென்று கொள்க.

(எ-டு)

"எரியெள்ளு வன்ன நிறத்தன் விரியிணர்க்
கொன்றையம் பைந்தா ரகலத்தன் பொன்ரு
ரெயிலெரி வீட்டிய வில்லன் பயிலிருட்
காடமர்ந் தாடிய வாட னீடிப்
புறம்புதை தாழ்ந்த சடையன் குறங்கரைந்து
வெண்மணி யார்க்கும் விழவின னுண்ணூற்
சிரந்தை யிரட்டும் விரலனிரண் டுருவா
யீரணி பெற்றவெழிற் றகைய னேரு
மிளம்பிறை சேர்ந்த நுதலன் களங்கனி
மாறேற்கும் பண்பின் மறுமிடற்றன் றேறிய
சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட் குயர்கமா வலனே." (பதிற்றுப்பத்து)

இது கடவுள் வாழ்த்து.

தொகைகளிலுங் கீழ்க்கணக்கிலும் உள்ள கடவுள் வாழ்த் தெல்லாம் இதன்கண் அடக்குக.

இனி அறுமுறை வாழ்த்தும் வருமாறு:

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." (குறள்-நீத்-8)

"கெடுப்ப தூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
யெடுப்ப தூஉ மெல்லா மழை." (குறள்-வான்-5)

"நாகின நந்தி யினம்பொலியும் போத்தென
வாய்வா ளுழவர் வளஞ்சிறப்ப வாயர்
அகன்றூர் சுரைய கறந்தபால் சீர்சிறந்த
வான்பொருள் வட்டத் தயிராகு மத்தயிர்
மெல்லக் கடைவிடத்து நெய்தோன்று நெய்பயந்து
நல்லமு தன்ன வளையாகு நல்ல
புனிதமு மெச்சிலு நீக்கித் துனியின்றி
யன்ன பெரும்பயத்த வாகலாற் றென்மரபிற்
காரார் புறவிற் கலித்த புதர்மாந்தி
யாவா ழியரோ நெடிது."

ஏனைய வந்துழிக் காண்க.

"புயல்சூடி நிவந்த பொற்கோட் டிமயத்து
வியலரைத் தவிசின் வேங்கை வீற்றிருந்தாங்
கரிமான் பீடத் தரசுதொழ விருந்து
பெருநிலச் செல்வியொடு திருவீழ் மார்பம்
புதல்வருந் தாமு மிகலின்று பெறூஉந்
துகளில் கற்பின் மகளிரொடு விளங்கி
முழுமதிக் குடையி னமுதுபொதி நீழ
லெழுபொழில் வளர்க்கும் புகழ்சால் வளவன்
பிறந்தது பார்த்துப் பிறர்வாய் பரவநின்
னறங்கெழு சேவடி காப்ப வுறந்தையோ
டூழி யூழி வாழி
யாழி மானில மாழியிற் புரந்தே."

இது கடவுள் வாழ்த்தி ஒழியாது தனக்குப் பயன்படுவோன் ஒருவனையுங் கூட்டி வாழ்த்தலின் புரைதீர்காமம் புல்லிய வகையாயிற்று.

(வி-ரை) அமரர்கண் முடியும் அறுவகையாவன:— கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப் படை, புகழ்தல், பரவல் என்பனவாம் என்பர் இளம்பூரணர். ஐயனாரிதனாரும் இவர் உரையையே தழுவி அமரர்கண் முடியும் அறுவகையாகிய கொடிநிலை, கந்தழி, வள்ளி,குணஞ் சால் புலவரை அவர் வயின் புகழ்ந்தாற்றுப் படுத்தல், புகழ்ந்தனர் பரவல்பழிச்சினர்ப் பணிதல் எனக் கூறுவர்.

எள்ளு - இகழ்ந்த. இணர் - பூங்கொத்து. பொன்று எயில் - பகைவர் மதில் (திரிபுரம்). பயில் - செறிந்த. புதை - வீழ்ந்து மறைந்த. குறங்கு - துடை. ஆர்க்கும் - ஒலிக்கும், சிரந்தை - துடி, இரண்டுரு - ஆண், பெண். ஈரணி - தோடு: குழை. நேரும் - வளரும். மாவலன் - மிக்க வென்றி.

தொகை - எட்டுத் தொகை. கீழ்க் கணக்கு - பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்.

மாந்தர் - துறந்தவர். மறை மொழி - அவராணையாகச் சொல்லியமந்திர மொழி.

சார்வாய் - துணையாய்.

தாகு - இளைய. வாய் வாள் - தப்பாத வாள். ஆயர் - இடையர். சுரை - மடி, அளை - வெண்ணெய். புறவில் - காட்டில். புதர் மாந்தி - புதராக வளர்ந்திருக்கும் பசும் புல்லை அருந்தி.

நிவந்த - உயர்ந்த, வியலறை - அகன்ற பாறை. (26)

மக்கட்கு உரிய பகுதி

82. வழங்கியன் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியுங் கருதிய பாங்கினு
முன்னோர்க் கூறிய குறிப்பினுஞ் செந்துறை
வுண்ணப் பகுதி வரைவின் றாங்கே.

இது மேல் 'ஒன்றன்பகுதி (தொல்-புறத்திணை-26) என்புழித் தோற்றுவாயாகச் செய்த இருபகுதியுண் மக்கட் பகுதி கூறு கின்றது.

(இ-ள்) பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும் - ஒரு தலை வன் தன்னைப் பிறர் வாழ்த்துதலும் புகழ்ந்துரைத்தலுங் கருதிய பக்கத்தின்கண்ணும்; வகைபட முன்னோர் கூறிய குறிப்பினும் - அறம்பொருளின்பங்களின் கூறுபாடு தோன்ற முன்னுள்ளோர் கூறிய குறிப்புப் பொருளின் கண்ணும்; செந்துறை நிலைஇ-செவ் வன கூறுந்துறை நிலை பெற்று; வழங்குஇயல் மருங்கின் - வழங் குதல் இயலுமிடத்து; ஆங்கு வண்ணப்பகுதி வரைவின்று - அச் செந்துறைக்கண் வருணங்களின் கூறுபாடு நிகழ்ந்தன நீக்கு நிலை மையின்று என்றவாறு.

பரவல் முன்னிலைக்கட் பெரும்பான்மை வரும். பரவ லும் புகழ்ச்சியும் தலைவன் கண்ணவாய்ப் பரிசில் பெறுதல் பாடுவான் கண்ணதாகலின் ஒருதலைக் காமமாகிய கைக்கிளைக்குப் புறனாயிற்று. முன்னோர் கூறிய குறிப்பும் பாடப்படுவோன்கண் வேட்கை யின்மையிற் கைக்கிளையாம். குறிப்பென்றார், அறம் பொருள் இன்பம் பயப்பச்செய்த செய்யுளைக் கேட்டோர்க்கும் அஃது உறுதிபயத்தலைக் குறித்துச் செய்தலின். செந்துறை யாவது விகாரவகையான் அமரராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தினைப் போலாது உலகினுள் இயற்கையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண்பாட் டெனப்படும்.

"வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணு" (பத்துப்-குறிஞ்சிப்-31) என்பவாகலானும் ஐவகை நிறத்தினையும் வண்ண மென்பவாகலானும் வண்ணமென்பது இயற்சொல்; வருண மென்பது வடமொழித்திரிபு.

ஆங்கு வண்ணப்பகுதி வரைவின்றெனவே வருகின்ற காமப்பகுதியிடந்து வண்ணப்பகுதி வரையப்படுமாயிற்று. கைக்கிளைக் கிழத்தியை உயர்ந்தோன் வருணத்துப்படுத்துக்

கூறுதது, 'அனைநிலை' (தொல்- புறத்திணை-20) வருணப்படுத்துத் தோன்றக்கூறலின்.

(எ - டு)

"நிலநீர் வளிவிசும் பென்ற நான்கி
னளப்ப ரியையே
நாள்கோ டிங்கள் ஞாயிறு கனையழ
லைந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை
போர்தலை மிகுத்த வீரைம் பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை
யக்குர னனைய கைவண் மையையே
யமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர்பீ டழித்த செருப்புகன் முன்ப
கூற்று வெகுண்டு வரினு மாற்றுமாற் றலையே
யெழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து
நோன்புரி தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பி
னொடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ
பல்களிற்றுத் தொகுதியோடு வெல்கொடி நுடங்கும்
படையே ருழவ பாடினி வேந்தே
யிலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப்பினிப் பொழின்முழு தாண்டநின்
முன்றிணை முதல்வர் போல நின்றுநீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாஅ லியரோவிவ் வுலகமோ டுடனே (பதிற்றுப்-14)

இது பரவற்கண் வந்த செந்துறைப் பாடாண்பாட்டு; இதனை வாழ்த்தியலென்பர்.

"வரைபுரையு மழகளிற்றின் மிசை
வான்றுடைக்குந் தகையபோல
விரவுருவின கொடி நுடங்கும்
வியன்றானை விறல்வேந்தே

நீ, யுடன்று நோக்கும்வா யெரிதவழ
நீ, நயந்து நோக்கும்வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்
வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்
வேண்டியது விளைக்கு மாற்றலை யாகலி
னின்னிழற் பிறந்து நின்னிழல் வளர்ந்த
வெம்மள வெவனோ மற்றோ யின்னிலைப்
பொலம்பூங் காவி னன்னாட் டோருஞ்
செய்வினை மருங்கி னெய்த லல்லதை
யுடையோ ரீதலு மில்லோ ரிரத்தலுங்
கடவ தன்மையிற் கையற வுடைத்தென
வாண்டுச்செய் நுகர்ச்சி யீண்டுங் கூடலி
னின்னா டுள்ளுவர் பரிசில
ரொன்னார் தேஎத்து நின்னுடைத் தெனவே"

(புறம்–38)

இது புகழ்ச்சிக்கண்வந்த செந்துறைப் பாடாண்பாட்டு இயைபியன்மொழி யென்பதும் அது.

"உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே." (புறம்–182)

இது வகைபட முன்னோர்கூறிய குறிப்பின்கண்வந்த செந்துறைப் பாடாண்பாட்டு.

இது முனிவர் கூறுமாறு போலக் கூறிப் பரவலும் புகழ்ச்சியுங் கூறுது மறுமைப்பயன் பிறர்க்குறுதி பயப்பக் கூறலிற் கைக்கிளைப் புறனாய்ப் பாடாணாயிற்று.

இவை செந்துறை மார்க்கத்து வண்ணப்பகுதியாகிய பாடல் பற்றி வருமென்பதூஉம் வெண்டுறை மார்க்கமாகிய நாடகத்துள் அவிநயத்துக் குரியவாகி வருமென்பதூஉங் கூறின், அவை ஈண்டுக் கூறல் மயங்கக் கூறலாம். அன்றியும் ஏனை அறுவகைத் திணைக்கும் இங்ஙனங் கூருது இத்திணைக்கே உரித்தாகக் கூறுதற்கோர் காரணமின்மையானும் அங்ஙனங் கூருரென்ப. பரவலும் புகழ்ச்சியும் அவ்வப் பொருண்மை கருதினுரைத் தலைவராகு வுடைமையானும், ஏனையது அக்குறிப்பிற்றன்ருகலானும், அதற்குப் பாட்டுடைத்தலைவர் பலராயினும் ஒருவராயினும் பெயர்கொடுத்துங் கொடாதுங் கூறலானும் வேறு வைத்தாரென்க. இத்துணை வேறு பாடுடையதனைப் பரவல் புகழ்ச்சியோடு கூடவைத்தார், அவை முன்னோர் கூறிய குறிப்பினுள்ளும் விராய்வரும் என்றற்கு. இன்னும் அதனுனே பாடாண்டிணைப் பொருண்மை மயங்கிவரினும் முடிந்த பொருளாற் பெயர்பெறுமென்று கொள்க.

"நிலமிசை வாழ்நர்" என்னும் (43) புறப்பாட்டுப் புலவன் அரசனை வைதுஆறி அது நன்குரைத்தல். அது இயற்கை வகையானன்றிச் செயற்கைவகையாற் பரவலும் புகழ்ச்சியுந் தொடர்ந்த முன்னோர் கூறிய குறிப்பு.

இன்னும் மயங்கி வருவனவெல்லாம் இதனுன் அமைக்க.

(வி-ரை) வண்ணம் - வருணம்; இனம். இளம்பூரணர் இந்நூற்பாவிற்குத் தரும் உரை வேருகும். மேற் சொல்லப் பட்டன வழக்கு இயலும் பக்கத்து, வகை பெற நிறுத்திப் பரவலும் புகழ்ச்சியும் கருதிய பக்கத்தினும்; முதலாசிரியர் கூறிய காமக் குறிப்பினும் செந்துறைபாடடின் கண் வரும் வண்ணப்பகுதி வரைதல் இல்லை என்பர்.

விளக்கத்து அனையை - ஒளி போல்வை. துப்புத் துறை - வலிமையாகும் நெறி.

அக்குரன் - பாரதத்தில் கூறப்படுபவனும், தலையெழுவள்ளல் களுள் ஒருவனுமாகிய அக்குரன் மெய்ம்மறை - வீரர்களுக்குக்

கவசம் போன்றவன். தொழுதி - கூட்டம். நுடங்கும் - அசையும். திகிரி - ஆணையைச் செலுத்தி.

புரையும் - ஒக்கும். உருவின - நிறம் உடையன. நன்னாட்டோர் - விண்ணுலகத்தோர்.

துஞ்சல் - மடிந்திருத்தல். அயர்வு - மனக்கவற்சி. நோன்றாள் - வலிய முயற்சி.

செந்துறை - இசை.

பக்கு நின்ற - பிரிந்து நின்ற, பகுதி - பிரிவு; ஈண்டுப் பிரிந்து நின்ற காம வேட்கைக்கு ஆயினமையின் ஆகு பெயராயிற்று.

இளம்பூரணர் கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பதாகக் கூறிற்றிலர். ஐயனாரிதனாரும் கடவுட் பக்கத்தும் ஏனோர் பக்கத்தும் மடவரல் மகளிர் மகிழ்ந்த பக்கமும் என இரண்டையே கூறுவர். (27)

அவ்விருவர்க்கும் உரிய சிறப்புவிதி

83. காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினு மென்மனார் புலவர்.

இது முற்கூறிய கடவுட்கும் மக்கட்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ - ள்) காமப்பகுதி — முன்னர்ப் 'புரைதீர் காம' (தொல்-புறத்திணை-26) மென்றதனுட் பக்குநின்ற புணர்ச்சி வேட்கை; கடவுள் பாங்கினும் வரையார்—கட்புலனாகிய கடவுளிடத்தும் நீக்கார்; ஏனோர் பாங்கினும் வரையார் என்மனார் புலவர்—மக்களிடத்தும் நீக்காரென்று கூறுவர் புலவர் என்றவாறு.

பகுதி ஆகுபெயர். அது கடவுண்மாட்டுக் கடவுட்பெண்டிர் நயப்பனவும், அவர்மாட்டு மானிடப்பெண்டிர் நயப்பனவுங், கடவுண் மானிடப்பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம்.

இன்னும் பகுதியென்றதனானே எழுதிணைக்குரிய காமமுங் 'காமஞ்சாலா இளமையோள்வயிற்' (தொல் - அகத்திணை - 50) காமமுமன்றி இது வேறோர் காமமென்று கொள்க.

(எ - டு)

"நல்கெனி னாமிசையா னென்மெனனுஞ் சேவடிமே
லொல்கெனி னுச்சியா னென்மெனனு-மல்கிரு
ளாட லமர்ந்தாற் கரிதா லுமையாளை
யூட லுணர்த்துவதோ ராறு."

(புற-வெ-மாலை-பாடாண்-48)

"பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றல் மேலிட்டு
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப நீரேறுங்
கொல்லேற்றுக் கறுகிடினுங் கொள்ளுமோ
கொள்ளாதோ."

"குடுமிப் பருவத்தே கோதை புனைந்தே
யிடுமுத்தம் பூத னிருப்பப்—படுமுத்தம்
புன்னை யரும்பும் புகாஅர்ப் புறம்பணையார்க்
கென்ன முறைய ளிவள்."

எனவரும்.

"களியானைத் தென்னன் கனவின்வந் தென்னை
யளியா னளிப்பானே போன்றான்—தெளியாதே
செங்காந்தண் மெல்விரலாற் சேக்கை தடவந்தே
னென்காண்பே னென்னலால் யான்"

(முத்தொள்ளாயிரம்)

"அணியாய செம்பழுக்காய் வெள்ளிலையோ டேந்திப்
பணியாயே யெம்பெருமா னென்று—கனியார்வாய்க்

கோணலங் கேட்பதூஉங் கொண்கர் பெருமானுர்
தோணலஞ் சேர்தற் பொருட்டு"

என வரும்.

"அடிபுனை தொடுகழன் மையணற் காளைக்கென்
ருெடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே
யடுதோண் முயங்க லவைநா ணுவலே
யென்போற் பெருவிதுப் புறுக வென்று
மொருபாற் படாஅ தாகி
யிருபாற் பட்டவிம் மைய லூரே." (புறம்-83)

இது பெருங்கோழி நாய்கன் மகள் ஒருத்தி ஒத்த அன்பி ஞற் காமமுருதவழியுங் குணச்சிறப்பின்றித் தானே காம முற்றுக் கூறியது இதனைடக்குக.

இன்னும் ஏனேர்பாங்கினும் என்பதனுனே கிளவித்தலைவ னல்லாத பாட்டுடைத்தலைவனைக் கிளவித்தலைவனுகக் கூறுவன வுங் கொள்க.

(எ-டு)

"கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்."
(கலி-67)

இது குறிப்பினுற் பாட்டுடைத்தலைவனைக் கிளவித்தலைவனுகக் கூறியது.

"மீளிவேற் றானையர் புகுதந்தார்
நீளுயர் கூட னெடுங்கொடி யெழவே" (கலி-31)

என்பதும் அது.

இவ்வாறு வருவனவெல்லாம் இதனுன் அமைக்க,

(வி-ரை) நல்குக எனின் - அருள் செய்க எனின், நாமிசை யாள் - கலைமகள். ஒல்கு - வணங்கு.

பல்லேற்ற பரிகலம் - பலரிடத்தும் இரந்த நான்முகனின் மண்டை ஓடு. வல் - சூதாடு கருவி.

குடுமிப் பருவம்: இளம் பருவம். புறம் பணையார் - ஐயனார்.

செம்பழுக்காய் - பாக்கு. வெள்ளிலை - வெற்றிலை. கணியார் வாய் - சோதிடர் மாட்டு. கோள் நலம் - ஞாயிறு திங்கள் முதலாய கோளின் பயன். மையணல் - மை போன்ற தாடி. பெருவிதுப்பு - மிக்க நடுக்கம். (28)

பிள்ளைத் தமிழ்

84. குழவி மருங்கினுங் கிழவ தாகும்

இது முன்னிற்சூத்திரத்திற் பக்குநின்ற காமத்திற்கன்றிப் 'புரைதீர் காமத்' (தொல்-புறத்திணை-25) திற்குப் புறனடை கூறுகின்றது.

(இ - ள்) குழவிமருங்கினும் கிழவதாகும்—குழவிப் பருவத்துங் காமப்பகுதி உரியதாகும் எ-று.

மருங்கென்றதனான் மக்கட்குழவியாகிய ஒருமருங்கே கொள்க; தெய்வக்குழவி யின்மையின். இதனை மேலவற்றோடொன்றாது வேறுகூறினார், தந்தையரிடத்தன்றி ஒரு திங்களிற் குழவியைப் பற்றிக் கடவுள் காக்க என்று கூறுதலானும், பாராட்டுமிடத்துச் செங்கீரையுந் தாலுஞ் சப்பாணியும் முத்தமும் வரவுரைத்தலும், அம்புலியுஞ் சிற்றிலுஞ் சிறுதேருஞ் சிறுபறையுமெனப் பெயரிட்டு வழங்குதலானு மென்பது.

இப்பகுதிகளெல்லாம் 'வழக்கொடு சிவணிய' (தொல்-புறத்திணை-31) என்னுஞ் சூத்திரத்தாற் பெறுதும். இப்பருவத்துக்கு உயர்ந்தவெல்லை மூவகை வருணத்தாரும் இருபிறப்பாளராகின்ற

பருவமாம். வேளாளர்க்கும் மூவகையோர்க்குரிய பருவமே கொள்க. குழவிப்பருவங் கழிந்தோர் அது வேண்டியக்காலும் அக்குழவிப் பருவமே கருதிப் பாடுக வென்றற்குக் கிழவதாகு மென்றார். இதற்குப் பரிசில்வேட்கை அக்குழவிக்கணன்றி அவன் தமர்க்கண்ணுமாமென் றுணர்க.

(எ-டு)

"அன்று இவனொருவ னந்தரத்தா னென்றான்
முன்ன மொருகான் மொழியினான்—பின்னுங்
கலிகெழு கூடலிற் கண்ணீடி வந்து
புலியாய்ப் பொருவான் புகும்."

அந்தரத்தானு னென்றான் அம்புலி வேறாயும் ஒருகாலத்தே விளையாட்டு நிகழ்த்துமெனை, இது மதுரையிற் பிட்டுவாணிச்சி மகற்குமங்கலக் குறிப்பாற் சான்றோர் கூறியது.

(வி-ரை) இந் நூற்பாவே பிற்காலத்துப் பிள்ளைத் தமிழ் என்னும் சிற்றிலக்கிய வகை தோன்றுதற்குக் காரணமாயிற்று. மக்கட் குழவியேயன்றி தெய்வத்தையும் குழவியாக வைத்துப் பாடும் மரபும் இதனால் தோன்றுவதாயிற்று. இளம்பூரணர் மக்கட் குழந்தைகள் விளையாட்டு மகளிரொடு பொருந்திய விடத்துக் காமப் பகுதிக் கூறல் பெறும் என உரை காண்பர். எனினும் நச்சினார்க் கினியர் உரையே பொருத்தமுடைத்தாம். ஐயனாரிதனார் 'இளம் மைந்தர் நலம் வேட்ட வளமங்கையர் வகை உரைத்தன்று' எனக் குழவிக் கண் தோன்றிய காமப்பகுதியை விளக்குவர். இளமைந்தர் -குழவிகள், நச்சினார்க்கினியர் இவ்வாறு பாடும் வழக்கு மூவகை வருணத்தார்க்கும் உரிய என முற் கூறிப் பின் அதன் ஒழிபாக வேளாளர்க்கும் உரித்தாகக் கூறுவது இனவழிக் காணும் வேறுபா டாகும். அவ்வாறு கூறுவது வேண்டாத தொன்றாகும்.

அந்தரத்தான் – விண்ணில் இயங்கும் சந்திரன். இவ்வாறு கூறியவன் பின்புலியாய்ப் பொருவன் என வியந்தவாறு (29)

உலா

85. [1]ஊரொடு தோற்றமு முரித்தென மொழிப

இது புரைதீர் காமத்திற்கன்றிப் பக்குநின்ற காமத்திற்குப் புறனடை கூறுகின்றது.

(இ – ள்) பக்குநின்ற காமம் ஊரிற் பொதுமகளிரொடு கூடி வந்த விளக்கமும் பாடாண்டிணைக்கு உரித்தென்று கூறுவர் ஆசிரியர் எ–று.

தோற்றமுமென்றது, அக்காமந் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்கும் விளக்கத்தை. அது பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம்.

இச் சூத்திரத்திற்குத் தலைவர் பிறந்த ஊரும் அவர் பிறப்பு மென்று பொருள் கூறின், மரபியற்கண்ணே 'ஊரும் பெயரும்' (தொல்-மரபியல் -27) என்னுஞ் சூத்திரத்து ஊர்பெறுதலானும், முன்னர் 'வண்ணப்பகுதி' (தொல்-புறத்திணை-27) என்பதனுற் பிறப்புப் பெறுதலானும் இது கூறியது கூறலாமென்றுணர்க.

(வி-ரை) ஊரொடு தோற்றம் என்பதற்கு ஊரின்கண் உள்ள பொது மகளிரொடு கூடிவந்த தொற்றம் எனப் பொருள் கண்டு அது பிற்காலத்து எழுந்த உலாச் செய்யுட்குத் தோற்றுவாயாக ஆக்குதல் ஆசிரியர் கருத்தொடு பட்டதன்றும். இவ்வுரை இளம் பூரணர் உரையைத் தழுவியதாகும். இந்நூற்பாவிற்குப் பிறர் கூற்றாகக் கூறி மறுத்து இருக்கும் உரை யார் உரை எனத்தெரிந் திலது. ஐயனாரிதனார் 'நீங்காக் காதல் மைந்தரும் மகளிரும் பாங் குறக்கூடும் பதியுரைத்தன்று' என ஊரின்கண் பொதுவாக மைந் தர்க்கும் மகளிர்க்கும் நிகழும் காமப் பகுதியைக் கூறுவர். (30)

---

1. இச்சூத்திரத்தையும் (85), அடுத்த சூத்திரத்தையும் (86) ஒரே சூத்திரமாகக் கொள்வர் இளம்பூரணர்.

புறனடை

86. வழக்கொடு சிவணிய வகைமை யான

இது 'அமரர்கண் முடியும்' (தொல்–புறத்திணை–26) என்னுஞ் சூத்திர முதலியவற்றுக்கெல்லாம் புறனடை.

(இ – ள்) கடவுள் வாழ்த்தும் அறுமுறை வாழ்த்தும் முதலாக ஊரொடு தோற்ற மீறாகக் கிடந்தனவெல்லாஞ் சான்றோர் செய்த புலனெறிவழக்கோடே பொருந்திவந்த பகுதிக்கண்ணே யான பொருள்களாம் எ–று.

எனவே, புலனெறிவழக்கின் வேறுபடச் செய்யற்க என்பது கருத்து.

கடவுள் வாழ்த்துப் பாடுங்கால் முன்னுள்ளோர் பாடியவாறன்றி முப்பத்துமூவருட் சிலரை விதந்துவாங்கிப் பாடப்பெறாது.

இனி அறுமுறைவாழ்த்துப் பாடுங்கால் முன்னுள்ளோர் கூறியவாறன்றி ஆவிற்கினமாகிய எருமை முதலியனவும் வாழ்த்தப்படா.

இனிப் புரைதீர் காமம் புல்லியவகையும் ஒருவன்றொழுங் குலதெய்வத்தை நோக்கியன்றி வரைவின்றிக் கூறப்படாது

இனிச் செந்துறைப்பாடாண்பாட்டு முன்னுள்ளோர் கூறிய வாறன்றி இறப்ப இழித்தும் இறப்ப உயர்த்தும் கூறப்படாது.

இனிக் காமப்பகுதிக் கடவுளரைக் கூறுங்காலும் பெண் டெய்வத்தொடு இயல்புடையாரைக் கூறினன்றி எண்வகை வசுக்கள் போல்வாரையும் புத்தர் சமணர் முதலியோரையுங் கூறப்படாது.

இனி மக்களுள் ஒருவனைத் தெய்வப்பெண்பால் காதலித் தமை கூறுங்காலும் மக்கட்பெண்பாற்குக் காதல் கூறுங்காலும் முன்னோர் கூறியவாறன்றிக் கூறப்படாது.

இனிக் குழவிப்பருவத்துக் காமங் கூறுங்காலும் முன்னர்க் காப்பும் பின்னர் ஏனையவுமாக முன்னுள்ளோர் கூறியவாறன்றிக் கூறப்படாது.

இனி ஊரொடு தோற்றமும் பரத்தையர்க்கன்றிக் குலமக ளிர்க்குக் கூறப்படாது.

இன்னுஞ் 'சிவணியவகைமை' என்றதனானே முற்கூறிய வற்றோடே நாடும் ஊரும் மலையும் யாறும் படையுங் கொடியுங் குடையும் முரசும் நடைநவில் புரவியுங் களிறுந் தேருந் தாரும் பிறவும் வருவன வெல்லாங் கொள்க.

(எ-டு)

"முற்பற்றி னாரை முறைசெய்யிற் றானென்னைக்
கைப்பற்றக் கண்டேன் கனவினு—ளிப்பெற்றித்
தன்னைத் தனக்கே முறைப்படி னென்செய்யும்
பொன்னம் புனனாட்டார் கோ."

"ஏரியு மேற்றத்தி னாலும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாந்—தேரி
னரிதாளின் கீழுகூஉ மந்நெல்லே சாலுங்
கரிகாலன் காவிரிசூழ் நாடு." (பொருந-வெண்)

இவை நாடும் யாறும் அடுத்துவந்தன.

"மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்மு
ளொலியும் பெருமையு மொக்கு—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்." (தண்டி-மேற்)

இஃது ஊர் அடுத்துவந்தது.

"மிதியற் செருப்பிற் பூழியர் கோவே
குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை
பால்பயந் தழீஇய பயங்கெழு நெடுந்தோட்டு

நீரறன் மருங்குவழிப் படாப் பாகுடிப்
பார்வற் கொக்கின் பரிவேட் பஞ்சரச்
சீருடைத் தேஎத்த முனைகெட விலங்கிய
நேருயர் நெடுவரை யயிரைப் பொருந." (பதிற்றுப்-21)

இது மலை யடுத்தது.

"ஆவஞ் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்." (புறம்-14)

இது படையடுத்தது.

"பூங்க ணெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல—வோங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி." (புற-வெ-பாடாண்-36)

இது கொடியடுத்தது.

"வெயின்மறைக் கொண்ட வுருகெழு சிறப்பின்
மாலை வெண்குடை யொக்குமா லெனவே." (புறம்-60)

இது குடையடுத்தது.

"முரசு முழங்குதானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போல." (பொருந-54,5)

இது முரசடுத்தது.

"சாலியரி சூட்டான் மடையடைக்கு நீர்நாடன்
மாலு ம ழைத்தடக்கை மாவளவன்—காலியன்மா
மன்னர் முடியுதைத்து மார்பகத்துப் பூணுழக்கிப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு."

இது புரவியடுத்தது.

"அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சான் மன்ன
ரெயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்-பனிக்கடலுட்
பாய்தோய்ந்த நாவாய்போற் றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் கிள்ளி களிறு."
(முத்தொள்ளாயிரம்-யானைமறம், 71)

இது களிறடுத்தது.

"நீயே, யலங்குளைப் பரீஇயிவுளிப்
பொலந்தேர்மிசைப் பொலிவு தோன்றி
மாக்கட னிவந்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ." (புறம் – 4)

இது தேரடுத்தது.

"மள்ளர் மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப."
(புறம்-10)

இது தாரடுத்தது.

இவற்றுட் சிலவற்றை வரைந்து கொண்டு சின்னப்பூவெனப் பெயரிட்டு இக்காலத்தார் கூறுமா றுணர்க.

(வி-ரை) நச்சினார்க்கினியர் இங்குக் கூறும் மரபுகள் பலவும் தம் கால எல்லையை வைத்துக் கூறுவனவாகும். பிள்ளைத் தமிழின் கண் உள்ள கடவுள் வாழ்த்தில் முப்பத்து மூவரையும் கூறி அவர் குழந்தையைக் காக்க எனும் மரபு பிற்காலத்தே வளர்ந்துள்ளது. மக்களுள் ஒருவனைத் தெய்வப் பெண் காதலித்ததாகக் கூறுதற்கு இலக்கியம் இருப்பதாகத் தெரிந்திலது. சிவணிய வகைமை என்ற மிகையால் கூறும் கருத்துப் பிற்காலத்தே தசாங்கங்கள் எனக்கூறும் மரபை விளக்குவதாகும். தசாங்கம் – பத்துவகை உறுப்புக்கள். அவை மலை நதி, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை என்பனவாம். இலக்கண விளக்கப் பாட்டியல் இப்பத்துவகை உறுப்புக்களையுமே கூறுகின்றன. இவற்றிற்கு மாறாக படை, தேர் என்பவற்றைக் கூட்டி ஏனையவற்றுள் எவையேனும் இரண்டை விடுத்துக் கூறினும் அமையும். இவற்றைத்

தாம்பாடும் இலக்கியங்களில் ஒரு கூறுக வைத்துப் புலவர்கள் பாடுதலும் உண்டு. இவற்றை மட்டும் வைத்துப் பாடுதலும் உண்டு. இவ்வாறு தனித்துப் பாடின் அதனைச் சின்னப்பூ என்பர். நச்சினார்க்கினியரும் இந்நூற்பா உரை இறுதிக்கண் இவ்வாறு கூறுதல் காண்க.

ஏற்றம்–நீர் இறைத்தற்குரியது. வாரி–வருவாய் கீழ்உகூஉம்–கீழே சொரியும்.

மிதியல் செருப்பு – மிதித்து நடத்தற்குரிய செருப்பில்லாத செருப்பு; எனவே மலையாயிற்று. பாகுடி-கூர்மையான. பார்வல்–பார்வை. பரிவேட்பு அஞ்சா – இறையை விரும்பிக் குத்தலுக்கு அஞ்சாத. அயிரை – அயிரை மலை.

ஆவம் – அம்புக் கூடு.

பூவைப்பூ மேனியான் – திருமால், பாம்புண்பறவை – கருடன். மன்னன்கொடி பறவைக்கொடிபோல ஓங்குக என்பது கருத்து.

சாலி அரி சூட்டால் – நெல்லொடு கூடிய தாளினையுடைய போரினால்.

அயிற்கதவம் – இரும்புக் கதவு.

அலங்குளை – அசைகின்ற தலையாட்டம்.

பரீஇ – அணிந்த. (31)

மெய்ப்பெயர் இடமாக அகத்திணை வரும் எனல்

87. மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே.

இது சுட்டி ஒருவர் பெயர்கொள்ளும் பாடாண்டிணைக் குரிய மெய்ப்பெயர்களிடமாகவும் அகத்திணை நிகழுமென்கின்றது.

(இ – ள்) மெய்ப்பெயர் மருங்கின் – புறத்திணைக்குரிய மெய்ப் பெயர்களின் மருங்கே; வழி வைத்தனர் – புறத்திணை தோன்று

தற்கு வழியாகிய அகத்திணையை வைத்தார் முதனூலாசிரியர் என்றவாறு.

என்றது எனக்கும் அதுவே கருத்தென்பதாம். வழியென்பது ஆகுபெயர். மெய்ப்பெயராவன புறத்திணைக்குரிய பாட்டுடைத் தலைவர் பெயரும் நாடும் ஊரும் முதலியனவாம்.

இதன் கருத்துச் 'சுட்டியொருவர் பெயர்கொளப் பெறூஅர்' (தொல்-அகத்திணை-54) என அகத்திணையியலுட் கூறினமையிற் கிளவித்தலைவன் பெயரை மெய்ப்பெயராகக் கொள்ளாது ஏனைப் புறத்திணையாற் கொண்ட மெய்ப்பெயரிடம் பற்றி அகத்திணைப் பொருணிகழவும் பெறுமென்பதாம்.

(எ-டு) "அரிபெய் சிலம்பின்" என்னும் (6) அகப் பாட்டினுள் தித்தனெனப் பாட்டுடைத்தலைவன் பெயரும், பிண்ட நெல்லினென நாடும், உறந்தையென ஊருங், காவிரி யாடினை யென யாறுங் கூறிப் ,பின்னர் அகப்பொருள் நிகழ்ந்தவாறுங் கொள்க.

'மருங்கு' என்றதனாற் பாட்டுடைத்தலைவன் பெயர் கூறிப் பின்னர் நாடு முதலியன கூறன் மரபென்று கொள்க. அதுவும் அச் செய்யுளாற் பெற்றும்.

"நிலம்பூத்த மரமிசை நிமிர்பாலுங் குயிலெள்ள
நலம் பூத்த நிறஞ்சாய நம்மையோ மறந்தைக்க
கலம்பூத்த வணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்பாணுக் கூடலு முள்ளார்கொல்."
(கலி - 27)

இதனுட் கூடலிடத்துத் தலைவி யென்பது கூறினர்.

"கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நணிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னுதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும்
விரும்பார்கொல்." (கலி - 27)

இதனுள் வென்வேலான் குன்றென மலை கூறினர்.

"திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்றுறை
வசைதீர்ந்த வென்னலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்த
மிசைபரந் துலகேத்த வேதினாட் டுறைபவர்." (கலி-26)

இதனுள் ஆறு கூறினார்.

"புனவளர் பூங்கொடி" என்னும் (27) மருதக்கலியும் அது.

"கரியமலர் நெடுங்கட் காரிகைமுன்
கடற்றெய்வங் காட்டிக் காட்டி
யரியசூள் பொய்த்தா ரறனிலரென்
றேழையம்யாங் கறிகோ மைய
விரிகதிர் வெண்மதியு மீன்கணமு
மாமென்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையு முத்துங்கண் டாம்பல்
பொதியவிழ்க்கும் புகாரே யெம்மூர்."
(சிலப்-கானல்-7)

இது முதலிய மூன்றும் புகாரிற் றலைவியெனக் கூறியவாறு காண்க.

இன்னுஞ் சான்றோர் செய்யுட்கள் இங்ஙனம் வருவனவெல்லாம் இதனால் அமைக்க. இக்கருத்தினாற் செய்யுள் செய்த சான்றோர் தமக்கும் பாடாண்டலைவர்கண் நிகழ்ந்த ஒருதலைக் காமமே பற்றி அகத்திணைச் செய்யுள் செய்தாரேனும் 'தம்மிசை பரந்துலகேத்த வேதினாட்டுறைபவ' ரென்று இவைபாடாண்டிணையெனப் பெயர்பெறா என்றற்கு இது கூறினார்.

(வி-ரை) கலம்பூத்த அணியவர் - அணியணிந்த மகளிர். காரிகை - அழகு. கன்மிசை - மலைமீது. உரவுநீர் - பரந்து தோன்றும் கடல். வென்வேலான் குன்று - திருப்பரங்குன்றம்.

நசை - நச்சுதல்; விரும்புதல். ஏதில்நாட்டு - தமக்கயலாகிய நாட்டு.

புரிவளை - சரிந்தசங்கு. அவிழ்க்கும் - மலரும்.

மெய்ப்பெயர் - இயற்பெயர் என்பர் இளம்பூரணர். (32)

கடவுள் வாழ்த்தொடு வருதற்கு உரியன

88. **கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற**
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

இது தேவரும் மக்களுமெனப் பகுத்த முறைமையானே அப்பகுதி யிரண்டுங் கூறி இன்னும் அத்தேவரைப்போல் ஒரு வழிப் பிறக்கும் பிறப்பில்லாத தெய்வங்களும் பாடாண்டிணைக்கு உரிய ரென்கிறது.

(இ - ள்) கொடிநிலை — கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர்மண்டிலம்; கந்தழி—ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானேநிற்குந் தத்துவங் கடந்த பொருள்; வள்ளி — தண்கதிர்மண்டிலம்; என்ற வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்—என்று சொல்லப்பட்ட குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்று தெய்வமும்; கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே—முற்கூறிய அமரரோடே கருதுமாற்றால் தோன்றும் என்றவாறு.

"பொய்தீ ருலக மெடுத்த கொடிமிசை
மையறு மண்டிலம் வேட்டனள் வையம்
புரவூக்கு முள்ளத்தே னென்னை யிரவூக்கு
மின்னா விடும்பைசெய் தாள்" (கலி-141)

என்றவழிக் கீழ்த்திசைக்கண்ணே தோன்றும் மண்டிலமென்றாற் போலக் கொடிநிலை யென்பதூஉம் அப்பொருடந்ததோர் ஆகு பெயர்.

இனி எப்புறமும் நீடுசென்று எறித்தலின் அந்நீடனிலைமை பற்றிக் கொடிநிலையென்பாருமுளர்.

"குவவுமென் முலையள் கொடிக்கூந் தலளே"

(குறுந்-132)

என்றாற்போல வள்ளியென்பதுவுங் கொடியை; என்னை? பன்மீன் தொடுத்த உடுத்தொடையைக் கொடியெனப்படுதலின், அத் தொடையினை இடைவிடா துடைத்தாதலின் அதனை அப் பெயராற் கூறினர்; முத்துக்கொடியெனவும் மேகவள்ளியெனவுங் கூறுமதுபோல. கந்தழி அவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்றலின் இடையே வைத்தார்.

இனி அமரரென்னும் ஆண்பாற்சொல்லுள் அடங்காத பெண்பாற்றெய்வமும் வள்ளியென்னுங் கடவுள் வாழ்த்தினுட் படுவனவாயின பாடா ணெனப்படா வாயினுமென்பது; என்னை? ஞாயிறு நெருப்பின்றன்மையும் ஆண்டன்மையும் உடைமை யானுந், திங்கள் நீரின்றன்மையும் பெண்டன்மையும் உடைமை யானுமென்பது. அல்லதூஉம், வெண்கதிர் அமிர்தந் தேவர்க்கு வழங்கலானும் வள்ளி யென்பதூஉமாம் என்பது.

(எ-டு)

"மேகத்தான் வெற்பா னிமையான் விழுப்பனியா
னாகத்தா னீமறைய நாட்கதிரே—யோகத்தாற்
காணாதார் நின்னை நிலையாமை கட்டுரைப்பர்
நாணாத கண்ணெனக்கு நல்கு."

இது கொடிநிலை வாழ்த்து.

"சார்பினாற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்."

இது கந்தழி வாழ்த்து.

"பிறைகாணுங் காலைத்தன் பேருருவ மெல்லாங்
குறைகாணா தியாங்கண்டு கொண்டு—மறைகாணா

தேய்ந்து வளர்ந்து பிறந்திறந்து செல்லுமென்
றுய்ந்தது நன்மாலை யாம்.''

இது வள்ளி வாழ்த்து.

''தனிக்கணிற் பாகமுந் தானுரு மாமை
பனிக்கண்ணி சாவு படுத்துப்—பனிக்கணந்
தாமுறையா நிற்குமத் தண்மதிக்குத் தாயிலளென்
றியாமுரையா நிற்கு மிடத்து.''

இது வள்ளிப்பாற்பட்ட பெண்பாற் கடவுள் வாழ்த்து.

(வி-ரை) சோதிடநூல் வல்லாரும் ஞாயிற்றை ஆண்கோள் என்றும் திங்களைப் பெண்கோள் என்றும் கூறுவர். இளம்பூரணர், கொடிநிலை என்பதற்கு அரசனது கொடியின் நிலை என்றும், கந்தழி என்பதற்குத் திருமால் 'சோ' என்னும் அரண் அழித்த நிலையது என்றும், வள்ளி என்பது வேலற்குப் பெண்டிர் வெறி யாடுவது என்றும் பொருள் கூறுவர். ஐயனாரிதனாரும் இவ்வாறே கூறுவர்,

நாட்கதிரே – கதிரவனே! நீ மேகத்தாலும் மழையாலும் கண்ணிமைத்தபொழுதும் நிறைந்த பனியிலும் பாம்பினால் கோட் படுதலாலும் நின்னை நிலையாதவன் என இவ்வுலகோர் கூறுவர். அவர் யோகத்தால் நின்னை உணராதவரே ஆவர். நின்னை எஞ் ஞான்றும் காண்பதற்குக் கூசாத கண்ணை எனக்கு அருள்வாயாக என்பது இதன் கருத்தாகும்.

மைதீர்சுடர் – குற்றம் தீர்ந்த ஒளி. அது பரஞ்சுடரைக் குறித்தது.

மறைகாணு – மறைந்து. (33)

கொற்ற வள்ளைக்கு உரியவர்

89. கொற்ற வள்ளை யோரிடத் தான,

இஃது எய்தாதது எய்துவித்தது; தேவர்க்கும் உரியவாம் ஒரு சார் அப்பாடாண்டிணைக் கொற்றவள்ளை யென்றலின்.

(இ - ள்) கொற்றவள்ளை—அதிகாரத்தாற் கைக்கிளைக்குப் புறனாய் வெட்சிமுதல் வஞ்சி யீறாகிய பாடாண் கொற்றவள்ளை; ஓரிடத்தான — மேற்கூறி நின்ற தேவர் பகுதிக் கண்ணதன்றி அவரின் வேறாகிய மக்கட் பகுதிக்கண்ணது என்றவாறு.

எனவே, உழிஞை முதலிய பாடாண் கொற்றவள்ளை நற்றிணைருங் கூளிச்சுற்றமும் ஒன்றனை நச்சிப் புகழ்ந்து வாளாதே கூறுதலும், ஈண்டுக் கூறுகின்ற கொற்றவள்ளை புலவன் ஒன்றனை நச்சி வெட்சி முதலிய ஏழனும் புகழ்ந்துரைத்தலுமாயிற் றாதலிற் 'படையியங் கரவம்' (தொல்-புறத்திணை-3) முதலாக வஞ்சியிற் 'குன்றாச்சிறப்பிற் கொற்றவள்ளை' யீறாகக் கிடந்த பொருட்பகுதியெல்லாம் பாடாண்டிணையாகப் பாடுங்கான் மக்கட்கேயுரிய என்பதூஉம், உழிஞை முதலியவற்றைப் பாடாண் டிணையாகப் பாடுங்கால் அவை மக்கட்குந் தேவர்க்கும் ஒப்ப உரியவென்பதூஉங் கூறுதலாயிற்று. என்னை? அரசியலாற் போர்குறித்து நிரைகோடலும் மீட்டலும் மேற்செல்லும் வஞ்சி யுந் தேவர்க் கேலாமையாயினும், அவுணரான் முற்றப்பட்ட துறக்கத்தினை அகத் துழிஞை யரணாக்கி மனுவழித் தோன்றிய முசுகுந்தனோடு இந்திரன் காத்தாற் போல்வனவும் பிறவுந் தேவர்க்குக் கூறுதலான் அவரும் மதின் முற்றியவழிப் போர் தோன்றுதலும் ஆண்டு வென்றியெய்துதலும் உடையராதலிற் பாடாண் பொருட்கும் உரியாரென நேர்பட்டது.

இச்சூத்திரம் மக்கட்கெய்திய பொருண்மையை மீட்டுங் கூறி நியமித்ததாம்; ஆகவே, வெட்சிமுதல் வஞ்சியிற் கொற்ற வள்ளை ஈறாய பொருண்மை உழிஞைமுதற் பாடாண்டிணைக் குரியராகி இடைபுகுந்த தேவர்க் காகாவென விதிவகையான் விலக்கியதாம். எனவே, தேவர்க்கு உழிஞை முதலிய கொற்ற வள்ளை ஆமென்பதூஉங் கூறினாராயிற்று.

கொடிநிலை முதலிய மூன்றற்குமன்றிக் கடவுளென்ப் பட்டாரை அதிகாரங்கொண்ட அளவேயாமென் றுணர்க.

(எ-டு)

"மாவாடியபுல நாஞ்சிலாடா
கடாஅஞ் சென்னிய கடுங்கண் யானை
யினம்பரந்த புலம் வளம்பரப் பறியா
நின்படைஞர், சேர்ந்த மன்றங் கழுதைபோகி
நீயுடன்றோர் மன்னெயி றோட்டி வையா
கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்துப்
பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கி
னாண்டலை வழங்குங் கானுணங்கு கடுநெறி
முனையகன் பெரும்பா ழாக மன்னிய
வுருமுறழ் பிரங்கு முரசிற் பெருமலை
வரையிழி யருவியி னொளிறுகொடி நுடங்கக்
கடும்பரிக் கதழ்சிற ககைப்பநீ
நெடுந்தே ரோட்டியபிற ரகன்றலை நாடே"

(பதிற்றுப்-25)

இது புலவன் பொருணச்சிக் கூறலிற் பாடாண்கொற்ற வள்ளை 'வல்லா ராயினும் வல்லுந ராயினும்'. 'காலனுங் காலம்' என்னும் (57. 41) புறப்பாட்டுக்களும் அது

(வி-ரை) கொற்றவள்ளை - அரசனது வெற்றிச் சிறப்பால் பகைவர்நாடு அழிதற்கு இரங்கி வென்ற அரசனைப் புகழ்ந்தும் தோற்றவனை நினைந்து இரங்கியும் பாடும் பாட்டாம். வெட்சியி லும், வஞ்சியிலும் நிகழும் இந்நிகழ்ச்சி மக்கட்கே உரியவாம். உழிஞையில் வரும் இந்நிகழ்ச்சி தேவர்க்கும், மக்கட்கும் ஒப்ப உரியவாம்.

கொடிநிலை, கந்தழி வள்ளி ஆகிய மூன்றும் தேவரை வாழ்த் துதல்போல் வாழ்த்தப்படும் எனச் சென்ற நூற்பாவால் கூறினர். இங்கு அதிகாரத்தால் என்பது மேற்கூறிய மூன்றனுள் ஒன்றன்றிப் பொதுவாகக் கடவுள் என்ற வகையில் குறிக்கப் பட்டதாம். இளம்பூரணர் இதனை வஞ்சியில் நிகழும் நிகழ்ச்சி களில் ஒன்றாகக் கூறின் குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளை எனக் கூறும் துறையாகும் என்றும் அன்றித் தனித்து ஓர் அரசன்

மாட்டுவைத்துப் புகழின் பாடாண் திணையாகும் என்றும் கருதுவர்.

மாஆடிய புலம் – குதிரைகள் சதிபாய்ந்த வயல். நாஞ்சில்- கலப்பை. பரப்பறியா – பயன்படுதல் இல. தோட்டி – கதவு முதலிய காப்பு. ஒற்றலில் - மோதுதலில். ஆண்கலே – காட்டுக் கோழி. ஒளிறுகொடி – விளங்கும் துயிற் கொடிகள். சிறகு அசைப்ப – சிறகை உயர்த்துப் பறக்க. (34)

மக்கட்குரிய பாடாண் திணைத் துறைகள்

90. கொடுப்போ ரேத்திக் கொடா அர்ப் பழித்தலு
மடுத்தூர்ந் தேத்திய வியன்மொழி வாழ்த்துஞ்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானுங்
கண்படை கண்ணிய கண்படை நிலையுங்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
[1]வேலி னோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்துஞ் [2]செவியறி வுறூஉ
மாவயின் வரூஉம் புறநிலை வாழ்த்துங்
கைக்கிளை வகையோ டுளப்படத் தொகைஇத்
தொக்க நான்கு முளவென மொழிப.

இது முன்னிற் சூத்திரத்து அதிகாரப்பட்டு நின்ற மக்கட் பாடாண்டிணைக் குரிய துறை கூறுகின்றது.

(இ – ள்) கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப்பழித் தலும் – பிறர்க்கு ஈவோரைப் பிறரி னுயர்த்துக்கூறிப் பிறர்க் கீயாதாரை இழித்துக் கூறலும்;

சான்றோர்க்குப் பிறரை யிழித்துக்கூறற்கண்ணது தக்க தன்றேனும் நன்மக்கள் பயன்பட வாழ்தலுந் தீயோர் பயன்

1. வேலேநோக்கிய 2. செவியறி அறூஉஅம் எனப்பாடங் கொள்வர் இளம்பூரணர்.

பட்டாமல் வாழ்தலுங் கூறக்கேட்டு ஏனையோரும் பயன்பட வாழ்தலை விரும்புவரென்று பயப்பக்கூறலின் இவர்க்கு இங்ஙனங் கூறுதல் தக்கதாயிற்று. இதனை ஏத்தலும் பழித்தலும் ஏத்திப் பழித்தலுமென மூவகையாகக் கொள்க.

(எ-டு)

"தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாஞ்சில
வரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
யிருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே யன்னதோர்
தேற்றா வீகையு முளதுகொல்
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே." (புறம்-140)

இது கொடுப்போர் ஏத்தியது.

"பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே," (புறம்-107)

என்பதும் அது.

"ஒல்லுவ தொல்லு மென்றலு மியாவர்க்கு
மொல்லா தில்லென மறுத்தலு மிரண்டு
மாள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே
யொல்லா தொல்லு மென்றலு மொல்லுவ
தில்லென மறுத்தலு மிரண்டும் வல்லே
யிரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயி லத்தை
யனைத்தா கியரினி யிதுவே யெனைத்துஞ்

சேய்த்துக் காணாது கண்டன மதனு
ேனயில ராகநின் புதல்வர் யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதன்
மெல்லியற் குறுமக ளுள்ளிச்
செல்வ லத்தை சிறக்கநின் னுளே" (புறம்-196)

"புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்." (குறள்-புகழ்-7)

இவை கொடா அர்ப் பழித்தல்.

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப
வீகை யரிய விழையணி மகளிரொடு
சாயின் றென்ப வாஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
யுரைசா லோங்குபுக ழொரீஇய
முரசுகெழு செல்வர் நகர்போ லாதே." (புறம்-127)

இஃது ஆயைப் புகழ்ந்து ஏனைச் செல்வரைப் பழித்தது.

"மின்னுந் தமனியமும் வெற்றிரும்பு மொன்றுகிப்
பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே - கொன்னே
யொளிப்பாரு மக்களா யெல்லுவ தாங்கே
யளிப்பாரு மக்களா மாறு."
(பெரும் பொருள் விளக்கம்-புறத்திரட்டு)

இதுவும் அது.

அடுத்து ஊர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்தும்-தலைவ னெதிர்சென்று ஏறி அவன் செய்தியையும் அவன் குலத்தோர்

செய்தியையும் அவன்மேலே ஏற்றிப் புகழ்ந்த இயன்மொழி வாழ்த்தும்;

என்றது, இக்குடிபிறந்தோர்க் கெல்லாம் இக்குணங்கள் இயல்பென்றும், அவற்றை நீயும் இயல்பாக உடையை யென்றும் அன்னோர்போல எமக்கு நீயும் இயல்பாக ஈ யென்றும் உயர்ந்தோர் கூறி அவனை வாழ்த்துதலின் இயன்மொழி வாழ்த்தாயிற்று. இதனை உம்மைத்தொகையாக்கி இயன்மொழியும் வாழ்த்துமென இரண்டாக்கிக்கொள்க.

இஃது ஒருவர் செய்தியாகிய இயல்பு கூறலானும் வண்ணப் பகுதியின்மையானும் பரவலின் வேறாயிற்று.

(எ-டு)

"மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
யறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
யதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
லதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
விவணிசை யுடையோர்க் கல்ல தவணது
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசினீ யீங்கிது செயலே." (புறம்-50)

இவை போல்வன வெல்லாம் இயன்மொழி.

"மலையுறழ் யானை வான்றோய் வெல்கொடி
வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்கக்
கடல்போ ருனைக் கடுங்குரன் முரசங்
காலுறு கடலிற் கடிய வுரற
வெறிந்து சிதைந்தவா
ளிலைதெரிந்த வேல்
பாய்ந்தாய்ந்த மா
வாய்ந்துதெரிந்த புகன்மறவரொடு
படுபிணம் பிறங்க நூறிப் பகைவர்
கெடுகுடி பற்றிய கொற்ற வேந்தே
நின்போ லசைவில் கொள்கைய ராகலி னசையா
தாண்டோர் மன்றவிம் மண்கெழு ஞால
நிலம்பயம் பொழியச் சுடர்சினந் தணியப்
பயங்கெழு வெள்ளி யாநிய நிற்ப
விசும்புமெய் யகலப் பெயல்புர வெதிர
நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த
விலங்குகதிர்த் திகிரி முந்திசி னோரே." (பதிற்றுப்-69)

இது முன்னுள்ளோர்க்கும் இயல்பென்பதுபடக் கூறிய இயன்மொழி வாழ்த்து.

"முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவு
மரசுடன் பொருத வண்ண நெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்
கொல்லி யாண்டவல்வி லோரியுங்
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரியீகை மறப்போர் மலையனு
மூரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியு
மீர்ந்தண் சிலம்பி னிருடூங்கு நளிமுழை
யருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமைப்
பெருங்க லடன் பேகனுந் திருந்துமொழி
மோசி பாடிய வாயு மார்வமுற்

றுள்ளி வருந ருலைவுநனி தீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
யிரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவ
ணுள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
யாசினிக் கவினிய பலவி னார்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
றுய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரு
மதிரா யாணர் முதிரத்துக் கிழவ
விவண்விளங்கு சிறப்பி னியறேர்க் குமண
விசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே'' (புறம்-158)

இஃது இன்னோர்போல எமக்கு ஈ யென்ற இயன்மொழி வாழ்த்து.

"இன்று செலினுந் தருமே சிறுவரை
நின்று செலினுந் தருமே பின்னு
முன்னே தந்தனெ னென்னாது துன்னி
வைகலுஞ் செலினும் பொய்யல னாகி
யாம்வேண்டி யாங்கெம் வறுங்கல நிறைப்போன்
றான்வேண்டி யாங்குத் தன்னிறை யுவப்ப
வருந்தொழின் முடியரோ திருந்துவேற் கொற்ற
னினமலி கதச்சேக் களனொடு வேண்டினுங்
களமலி நெல்லின் குப்பை வேண்டினு
மருங்கலங் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை
பிறர்க்கு மன்ன வறத்தகை யன்னே
யன்ன னாகலி னெந்தை யுள்ளடி
முள்ளு நோவ வுறாற்க தில்ல
வீவோ ரரியவிவ் வுலகத்து
வாழ்வோர் வாழவவன் றாள்வா ழியவே." (புறம்-171)

இது படர்க்கையாகிய இயன்மொழி வாழ்த்து.

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனு
மறவிலே வணிக ஞயலன் பிறருஞ்
சான்ருேர் சென்ற நெறியென
வாங்குப் பட்டன் றவன்கைவண் மையே".
(புறம்-134)

இது பிறருஞ் சான்ருேர் சென்ற நெறி யென்றமையின் அயலோரையும் அடுத்தூர்ந்தேத்தியது. இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக.

சேய்வரல் வருத்தம் வீட வாயில் காவலற்கு உரைத்த கடைநிலையானும்—சான்ருேர் சேணிடை வருதலாற் பிறந்த வருத்தந்தீர வாயில் காக்கின்றவனுக்கு என் வரவினை இசை யெனக்கூறிக் கடைக்க ணின்ற கடைநிலையும்;

இது வாயிலோனுக்குக் கூறிற்றேனும் அவ்வருத்தந் தீர்க் கும் பாடாண்டலைவனதே துறையென்பது பெற்றும்.

இழிந்தோரெல்லாந் தத்தம் இயங்களை இயக்கிக் கடைக் கணிற்றல் 'பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்' (தொல்-பொரு-புற-36) என்புழிக் கூறுதலின், இஃது உயர்ந்தோர்க்கே கூறியதாம்.

(எ-டு)

"வேற்றுச் சுரத்தொடு வேந்தர்கண் வெம்மையு
மாற்றற்கு வந்தனேம் வாயிலோய்—வேற்றூர்
திறைமயக்கு முற்றத்துச் சேணேங்கு கோயி
லிறைமகற்கெம் மாற்ற மிசை"

என வரும்.

"வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
முன்னியது முடிக்கு முரனுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்

பரிசிலர்க் கடையா வாயிலோயே
கடுமான் றோன்ற னெடுமா னஞ்சி
தன்னறி யலன்கொ லென்னறி யலன்கொ
லறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமு மன்றே யதனாற்
காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை
மரங்கொ றச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
யெத்திசைச் செலினு மத்திசைச் சோறே."

(புறம்-206)

இது தலைவனை எதிர்ப்பட்டுக் கூறாது வாயிலோனை நோக்கிக் கூறலிற் பரிசில் கடாயதின்றாம்.

ஆன் அசை; ஏழனுருபாக்கி எல்லாவற்றிற்கும் விரித்ததுமொன்று.

கண்படை கண்ணிய கண்படைநிலையும்—அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிது வைகியவழி மருத்துவரும் அமைச்சரும் முதலியோர் அவர்க்குக் கண்டுயில்கோடலைக் கருதிக் கூறிய கண்படை நிலையும்.

கண்படை கண்ணிய என்றார், கண்படை முடிபொருளாக இடைநின்ற உண்டிமுதலியனவும் அடக்குதற்கு.

(எ-டு)

"வாய்வாட் டானை வயங்குபுகழ்ச் சென்னிநின்
னேவா வீகையி னுயிர்ப்பிடம் பெறாஅர்
களிறுகவர் முயற்சியிற் பெரிது வருந்தினரே
யுலகங் காவலர் பலர்விழித் திருப்ப
வறிது துயில்கோடல் வேண்டுநின்
பரிசின் மாக்களுந் துயில்கமா சிறிதே"

என வரும்,

கபிலை கண்ணிய வேள்வி நிலையும்—சேதாவினைக் கொடுக்கக் கருதிய கொடைநிலை கூறுதலும்;

இது வரையா ஈகையன்றி இன்னலுற்றுற் கொடுக்கவென உயர்ந்தோர் கூறு நாட்காலையிலே கொடுப்பதாமாதலின் வேறு கூறினர். கண்ணிய என்றதனாற் கன்னியர் முதலோரைக் கொடுத்தலுங் கொள்க.

"பொன்னிறைந்த பொற்கோட்டுப் பொற்குளம்பிற் கற்றுதந்
தின்மகிழா னந்தணரை யின்புறுப்பச்—சென்னிதன்
மாநிலமே யானுலகம் போன்றது வான்றுகள்போர்த்
தானுலக மண்ணுலகா மன்று."

வேலின் ஒக்கிய விளக்கு நிலையும்—வேலும் வேற்றலையும் விலங்காதோங்கியவாறு போலக் கோலோடு விளக்கும் ஒன்று பட்டோங்குமாறு ஓங்குவித்த விளக்குநிலையும்.

இன்: உவமப்பொருள். இது கார்த்திகைத் திங்களிற் கார்த்திகை நாளின் ஏற்றிய விளக்குக் கீழுமேலும் வலமுமிடமுந் திரிபரந்து சுடர்ஓங்கிக் கொழுந்துவிட்டெழுந்ததென்று அறிவோராக்கங் கூறப்படுவதாம்.

(எ-டு)

"மைமிசை யின்றி மணிவிளக்குப் போலோங்கிச்
செம்மையி னின்றிலங்குந் தீபிகை—தெம்முனையுள்
வேலினுங் கோடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினுங் கோடா கொழுந்து"

என வரும்.

வேலின் வெற்றியை நோக்கிநின்ற விளக்குநிலையெனப் பொருள் கூறி,

"வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியாப் பொங்கி
யொளிசிறந் தோங்கி வரலா—லளிசிறந்து

நன்னெறியே காட்டு நலந்தெரி கோலாற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு''
(புறப்-வெ-மாலை-பாடாண்-12)

என்பது காட்டுவாரும் உளர். அவர் இதனை நிச்சம் இடுகின்ற விளக்கென்பர்.

வாயுறை வாழ்த்தும்—'வாயுறை வாழ்த்தே' என்னும் (112) செய்யுளியற் சூத்திரப்பொருளை உரைக்க.

இதற்கு ஒரு தலைவன் வேண்டானாயினும் அவற்கு உறுதி பயத்தலைச் சான்றோர் வேண்டி வாய்மொழி மருங்கினான் அவனை வாழ்ச்சிப்படுத்தலின் இதுவுங் கைக்கிளைப்புறனாகிய பாடாணா யிற்று. செவியுறைக்கும் இஃதொக்கும்.

(எ-டு)

''எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலி னின்னொன்று மொழிவ
லருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி
யளிதோ தானேயது பெறலருங் குரைத்தே.''
(புறம்-5)

இதனுள் நிரயங் கொள்வாரோ டொன்றாது காவலையோம் பென வேம்புங் கடுவும்போல வெய்தாகக்கூறி அவற்கு உறுதி பயத்தலின் வாயுறை வாழ்த்தாயிற்று.

''காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகு
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே

கோடி யாத்து நாடுபெரிது நந்து
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே'' (புறம்-184)

என்னும் புறப்பாட்டும் அது.

தத்தம் புதுநூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறி னாரேனும், அகத்தியமுந் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின், அவர் சூத்திரப்பொருளாகத் துறைகூறவேண்டு மென்றுணர்க. 'செவியுறைதானே' (தொல்-பொ-செ-114) என்னும் சூத்திரப் பொருண்மை இவ்வுதாரணங்கட்கு இன்மை உணர்க.

செவியறிவுறூஉம்—இதற்குச் 'செவியுறைதானே' என்னும் செய்யுளியற் (114) சூத்திரப் பொருளை உரைக்க.

ஒருவுதலை ஒரூஉதலெனவும் ஒரூஉவெனவுங் கூறுமாறுபோல, உறுவும் உறூதலெனவும் உறூஉவெனவுங் கூறப்படும்.

(எ-டு)

"அந்தணர் சான்றோ ரருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தையா யென்றிவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டன் முறை.''
(புற-வெ-மாலை-பாடாண்-33)

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்குங்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்குங்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்குங்
கீழதுமுப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டி
னீர்நிலை நிவப்பின் கீழு மேல

தானிலை யுலகத் தானு மானு
துருவும் புகழு மாகி விரிசீர்த்
தெரிகோன் ஞமன் போல வொருதிறம்
பற்ற லியரோ நிற்றிறஞ் சிறக்க
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி யடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதி னேவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்
பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
யிறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்து கையெதிரே
வாடுக விறைவநின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே
செலிய ரத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே
யாங்க,வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுட
ரொண்கதிர் ஞாயிறு போலவு
மன்னிய பெருமநீ நிலமிசை யானே." (புறம்-6)

இதனுள் இயல்பாகிய குணங்கூறி அவற்றோடு செவியுறையுங் கூறினான், செவியுறைப்பொருள் சிறப்புடைத்தென்று அவன் கருதி வாழ்தல் வேண்டி.

ஆவயின் வருஉம் புறநிலை வாழ்த்தும் — தெய்வவழிபாடு உடைத்தாயின் மக்கள் கண்ணதேயாகித் தோன்றும் பாட்டுடைத் தலைவன் முன்னிலையாகத் தெய்வம் படர்க்கையாக வாழ்த்தும் வாழ்த்தும்;

தெய்வஞ் சிறந்ததேனும் மக்கள் அதிகாரப்படுதலின் அவர் கண்ணதேயாதற்கு 'ஆவயின் வருஉம்' என்றார். இதற்கு

'வழிபடு தெய்வம்' என்னும் செய்யுளியற் (110) சூத்திரப் பொருளை யுரைக்க.

இதுவுந் தலைவன் குறிப்பின்றித் தெய்வத்தால் அவனை வாழ்விக்கும் ஆற்றலுடையார்கண்ணதாகலிற் கைக்கிளைப் புறனாயிற்று.

(எ-டு)

"கண்ணுதலோன் காப்பக் கடன்மேனி மால்காப்ப
வெண்ணிருதோ ளேந்திழையா டான்காப்பப்-
பண்ணியனூற்
சென்னியர்க் களிக்குந் தெய்வநீ
மன்னுக நாளுமிம் மண்மிசை யானே".

என வரும்.

கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைஇ - மேற் காமப்பகுதியென்ற கைக்கிளையல்லாத கைக்கிளையின் பகுதி யோடே வாயுறை வாழ்த்துஞ் செவியறிவுறூஉம் புறநிலைவாழ்த் துங்கூட நான்காகிய தொகைபெற்ற நான்கும்;

வாயுறை வாழ்த்து முதலிய மூன்றுந் தத்தம் இலக்கணத் திற் றிரிவுபடா; இக்கைக்கிளை திரிவுபடுமென்றற்கு எண்ணும் மையான் உடனோதாது உளப்படவென வேறுபடுத்தோதினர். அகத்திணையியலுள் இருபாற்குங் கூறிய கைக்கிளையுங், 'காமஞ் சாலா இளமையோள்வயிற்' (தொல்-பொ-அகத்-50) கைக்கிளை யும், 'முன்னைய நான்கும்' (தொல்-பொ-அகத்-52) என்ற கைக்கிளையும், 'காமப்பகுதி' (தொல்-பொ-அகத்-58) என்ற கைக்கிளையும், களவியலுண் 'முன்னைய மூன்றும்' (தொல்-பொ-கள-14) என்ற கைக்கிளையும் போலாது எஞ்ஞான்றும் பெண் பாலார் கூறுதலின்றி இடைநின்ற சான்றோராயினும் பிறரா யினுங் கூறுதற்கு உரித்தாய் முற்காலத்து ஒத்த அன்பினராகிக் கடைநிலைக்காலத்து ஒருவன் ஒருத்தியைத் துறந்ததனால் துறந்த பெண்பாற் கைக்கிளையாதலின் திரிபுடைத்தாயிற்று. இது முதனிலைக்காலத்துத் தான்குறித்து முடித்துப்பின்னர் அவளை

வருத்தஞ்செய்து இன்பமின்றி யொழிதலான் ஒருதலைக் காம மாயிற்று.

(எ-டு)

"அருளா யாதலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக
நீனறு நெய்தலிற் பொலிந்த வுண்கண்
கலுழ்ந்துவா ரரிப்பனி பூணக நனைப்ப
வினைத லானு ளாக வினையோய்
கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென
யாந்தற் றொழுதனம் வினவக் காந்தண்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரே மல்லேங் கேளினி
யெம்போ லொருத்தி நலனயந் தென்றும்
வரூஉ மென்ப வயங்குபுகழ்ப் பேக
னொல்லென வொலிக்குந் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே." (புறம்-144)

இது கண்ணகி காரணமாக வையாவிக்கோப் பெரும்பேகனைப் பரணர் பாடிய கைக்கிளை வகைப் பாடாண்பட்டு.

'கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென' வினவ, யாங் கிளையல்லேம் முல்லை வேலி நல்லூர்க்கண்ணே வருமென்று சொல்வாளெனக் கூறுதலின், அஃது ஏனைக் கைக்கிளைகளின் வேறாயிற்று.

'கன்முழை யருவி' என்னும் (147) புறப்பாட்டும் அது.

தொக்க நான்கும் உள என மொழிப - அந்நான்கும் முற் கூறிய ஆறனோடே தொக்குப் பத்தாய்ப் பாடாண்பகுதிக் கண்ணே உளவாய் வருமென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

'தொக்க நான்' கென்றதனான் இந்நான்கும் வெண்பாவும் ஆசிரியமுந் தொக்குநின்ற மருட்பாவானும் வருமென்பதூஉங்

கொள்க. இவற்றை மேல்வருகின்றவற்றோடு உடன்கூறாயினர், அவை இழிந்தோர் கூறுங் கூற்றாகலின்.

(வி - ரை) கொடுப்போர் ஏத்திக் கொடார்ப்பழித்தல் - கொடுப்போர் ஏத்தலெனவும், கொடார்ப்பழித்தலெனவும், கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தலெனவும் மூவகையாகப் பிரிப்பர் இளம்பூரணர். அதனையே நச்சினார்க்கினியர் தழுவி இவ்வாறு உரைத்தார்.

தடவுநிலை - பெரியநிலை. மடவன் - அறிவில் மென்மை யானவன்.

படப்பை - மனைப்பக்கம். அடகு - இலை கண்ணுறை - தூவு தற்குரிய மாவு. இருங்கடறு - பெரியசுரம்.

ஆள்வினை - தாளாண்மை. வல்லே - விரைவாக.

குயின்றன்ன-செய்தாற்போல. வளிமறை-காற்றை மறைப்ப தாகிய இல்லம்.

களங்கனி-களாம்பழம். நெடுவெளில்-நெடியதறி. சேப்ப - தங்க. இழையணி-திருமங்கலநாண். சாய்-பொலிவு. குய்யுடை-தாளிப்பையுடைய.

தமனியம் - பொன்.

வண்ணப்பகுதி - இனவகை. இயன்மொழி வாழ்த்து: இதனை இயல்மொழி எனவும், வாழ்த்து எனவும், இயன்மொழி வாழ்த்து எனவும் மூவகையாகப் பிரிப்பர். ஐயனாரிதனார் 'இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும், அன்னோர்போல் அவை எமக்கு ஈகென என்றோரும் அறிய எடுத்துரைத்தன்று'' என இதற்கு இலக்கணம் கூறுவர். இவ்வாறன்றி அரசனது இயல்பை மட்டும் மொழியினும் இயன் மொழி வாழ்த்து என்பர் அவர்.

விசித்த - கட்டிய. வள்பின் - வாரினையும். மைபடு - கருமை பொருந்திய. தெறுவர - சினம் தோன்ற. இவண் - இவ்விடம்' இம்மைக்கண் மாறுகொல் தன்மையாலோ அங்ஙனம் செய்தது என்க.

உரற-முழங்க. ஆய்ந்தமா - ஓய்தலுற்ற குதிரை. வெள்ளி பயங்கெழு ஆநியம் நிற்ப-சிறிது வடக்கு இறைஞ்சிய வெள்ளி மழைக்குப் பயன்படும் மற்றைக் கோட்களுடனே தான் நிற்கும் நாளிலே நிற்க.

நால்வேறு நனந்தலை-நான்காய் வேறுபட்டு அகன்ற திசைகள். ஓராங்கு நந்த-ஒன்று போல் பகையின்றி விளங்க.

இகுப்பவும்-அறையவும். துவைப்பவும்-முழங்கவும். பிறங்கு மிசை-மிக உயர்ந்து விளங்குகின்ற. காரி-குதிரை. ஊராது ஏந்திய குதிரை - ஊர்தற்கு இயலாத ஓங்கிய குதிரைமலை. அற்றம் - துன்பம். கையிடூ உப்பயிரும்-கையால் குறி செய்து அழைக்கும்.

சிறுவரை நின்று-சில நாள் கழித்து. துன்னி-பயின்று.

கதச் சேய்-சின மிகுந்த காளைகள்.

அறவிலை வணிகன் - இம்மையில் அறம் செய்து மறுமையில் அதன் பயனைப் பெறக் கருதுவோன்.

கடைக்கண் நின்ற-வாயிலின் கண் நின்ற. வயங்கு மொழி-விளங்குதற்குரிய மொழி. காவினம்-கட்டினம்.

உயிர்ப்பிடம்-பெருமூச்சு விடுதற்குரிய இடம். வறிது-சிறிது. சேதா-கபிலைப் பசு. நாட்காலை-விடியற் காலம்.

கற்று-கன்றினை ஈன்ற பசு. இன் மகிழான்-இனிய மகிழ்ச்சி. யால். சென்னிதன் கொடையால் மாநிலம் ஆனுலக மாயிற்று. அவ்வானினத்தின் துகளால் ஆனுலகு மண்ணுலகாயிற்று ஆனுலகம்-பசு உறையும் உலகம்.

கோல்-அரசனது செங்கோல்; வேலும் வேலினது தலையும் பிரிவின்றி ஓங்கியவாறு போல விளக்கொளியும் செங்கோற் சிறப்பும் பிரிவின்றி ஓங்கிய தென்பது கருத்து. மை-திரியில் உச்சியில் இருக்கும் கருமை.

பிறர் கருத்தாக உரைத்திருப்பது இளம்பூரணருடையதாம். நிச்சம்-நாளும். வளி துரந்த-காற்றுப் பெருக வீசிய; வலம் திரியா-வலமாகச் சுழன்று. வெல் நெறி-வெல்லும் முறைமை.

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும்போல வெஞ் சொல்
தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே'

என்பது இதன் இலக்கணமாகும். கடு-கடுக்காய். வாய்மொழி மருங்கினல் - வாய் மொழியின் இடமாக; மருந்தினல் என இருத்தல் பொருத்தம் என்பர் கணேசய்யர்.

இடைதோறு - இடம்தொறும்; ஆனில்-பெற்றம் போல;

நிரையம்-நரகம்.

நூறு செரு ஆயினும்-நூறு செய் ஆயினும். யாத்து-ஈட்டிக் கொடுத்து. நந்தும்-தழைக்கும்; பரிவுதப - அன்புகெட.

இப் பாடலைச் 'செவியறி உறூஉ' என்னும் துறைப்பாற் படுத்துவர் புறநானூற்று உரையாசிரியர். அதனையே இவ் வாசிரியர் மறுத்துள்ளார்.

'செவியுறை தானே
பொங்கு தலின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத்தற்றே'

என்பது இதன் இலக்கணமாகும்.

முந்தை வழி-முன்னோர் தம் நெறி.

முப்புணர்-நிலம், விண், துறக்கம் என்பன. தெரிகோல்-துலாக்கோல். ஞமன்-சமனுய. பாசவல்-பசிய விளை நிலம். தண்டா-தணியாத.

'வழிபடு தெய்வம் நிற்புறங்காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறனிலை வாழ்த்தே'

என்பது இதன் இலக்கணமாம்.

எண்ணிருதோள் ஏந்திழையாள்-பதினாறு தோள்களையுடைய வெற்றித் திரு; துர்க்கை.

கடை நிலைக் காலத்து-பிற்காலத்து.

இருள் வர-மாலைக் காலம் வர; செவ்வழி-இரங்கற்பண்.

அரிப்பணி-இடைவிட்ட கண்ணீர்த்துளி. இனைதல் ஆனாளாக-வருந்துதல் அமையாதவளாக. வெய்யோற்கு-விரும்புவோர்க்கு.

தொக்குநின்ற - சேர்ந்துநின்ற. மேல்வருகின்றவற்றோடு - அடுத்துவரும் நூற்பாவோடு. (35)

இதுவும் அது

91. தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமுஞ்
சிறந்த [1]நாளணி செற்ற நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமுஞ்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமு
நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபு
மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமு
மன்னெயி லழித்த மண்ணுமங் கலமும்

1 நாளில், எனப்பாடம் சொள்வர் இளம்பூரணர்.

பரிசில் கடை இய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவள னேத்தி
[1]நடைவயிற் றோன்று மிருவகை விடையு
மச்சமு முவகையு மெச்ச மின்றி
நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமுங்
காலங் கண்ணிய வோம்படை யுளப்பட
ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பிற்
கால மூன்றொடு கண்ணிய வருமே.

இதுவும் அது.

(இ - ள்) தாவில் கிடந்தோர்க்கு நல்லிசை கருதிய சூதர் ஏத்திய துயிலெடை நிலையும் - தமது வலியாலே பாசறைக்கண் ஒரு மனக்கவர்ச்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் அத்துயிலெடுப்பின் ஏத்தின துயிலெடை நிலையும்;

'கிடந்தோர்க்' கெனப் பன்மைகூறவே, அவர் துயிலெடுப்புத் தொன்றுதொட்டு வருமென்பதூஉஞ், சூதர் மாகதர் வேதாளிகர் வந்திகர் முதலாயினோருட் சூதரே இங்ஙனம் வீரத்தால் துயின்றாரைத் துயிலெடுப்புவரென்பதூஉம், யாண்டும் முன்னுள்ளோரையும் பிறரையுங் கூறப்படுமென்பதூஉங் கொள்க. அவர் அங்ஙனந் துயின்றமை பிறர்க்கும் புலப்படப் புகழல் அவர் கருத்தாகலின் ஒரு தலைக் காமம் உளதாயிற்று.

(எ-டு)

"கானம் பொருந்திய கயவாய் மகளிரின்
யானுறுந் துயர நந்திய பானா
ளிமையாக் கண்ணோ டமையாக் காத்தநின்
மூதின் முதல்வன் றுயில்கொண் டாங்குப்
போற்றா மன்னரை யெள்ளிச் சிறிதுநீ
சேக்கை வளர்ந்தனை பெரும தாக்கிய

1 நடைவயின் தோன்றிய எனப்பாடங் கொள்வர் இளம்பூரணர்

வண்கை யவுண னுயிர்செல வாங்கவ
னன்றுணர்ந் தாங்கு வென்றி மேய
வாடா வஞ்சி மலைந்த சென்னிப்
போரடு தானைப் பொலந்தேர் வளவ
நின்றுயி லெழுமதி நீயு
மொன்று வேந்தர் பொன்றுதுயில் பெறவே"

என வரும்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்—ஆடன்மாந்தரும் பாடற்பாணரும் கருவிப் பொருநரும் இவருட் பெண்பாலாகிய விறலியுமென்னும் நாற்பாலருந் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச்சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும்;

கூத்தராயிற் பாரசவரும் வேளாளரும் பிறரும் அவ்வாடற் றொழிற்கு உரியோர்களும் பாரதிவிருத்தியும் விலக்கியற் கூத்துங் கானகக்கூத்துங் கழாய்க்கூத்தும் ஆடுபவராகச் சாதி வரையறை யிலராகலின் அவரை முன்வைத்தார்: பாணரும் பொருநருந் தத்தஞ் சாதியில் திரியாது வருதலிற் சேரவைத்தார்; முற்கூறிய முப்பாலோருட் கூத்தராயினார் எண்வகைச் சுவையும் மனத்தின் கட்பட்ட குறிப்புக்களும் புறத்துப் போந்து புலப்பட ஆடுவார்; அது விறலாகலின் அவ்விறல்பட ஆடுவாளை விறலியென்றார். இவளுக்குஞ் சாதிவரையறை யின்மையாற் பின்வைத்தார். பாணரும் இசைப்பாணரும் யாழ்ப்பாணரும் மண்டைப்பாணரு மெனப் பலராம். பொருநரும் ஏர்க்களம் பாடுநரும் போர்க்களம் பாடுநரும் பரணிபாடுநருமெனப் பலராம். விறலிக்கு அன்னதோர் தொழில் வேறுபாடின்றித் தொழிலொன்றாகலின் விறலியென ஒருமையாற் கூறினார்.

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்றுபயனெதிரச் சொன்ன பக்கமும் — இல்லறத்தை விட்டுத் துறவறமாகிய நெறியிடத்து

நிற்றல் நன்றென்றுங் கண்டகாட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினுலே தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழி யாகிய செல்வத்தை யாண்டுந்திரிந்து பெருதார்க்கு இன்ன விடத்தே சென்முற் பெறலாமென்று அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று அக் கந்தழியினைப் பெறும்படி சொன்ன கூறுபாடும்;

பக்கமென்றதனுனே அச்செய்யுட்களைக் கூத்தராற்றுப் படை பாணுற்றுப்படை பொருநராற்றுப்படை விறலியாற்றுப் படை முருகாற்றுப் படையென வழங்குதலும் ஆற்றினருமையும் அவனூர்ப் பண்புமுதலியனவுங் கூறுதலுங் கொள்க.

(எ - டு)

"வான்றோய் வெண்குடை வயமா வளவ
னீன்றோர் தம்மினுந் தோன்ற நல்கினன்
சுரஞ்செல் வருத்தமோ டிரங்கி யென்று
மிரந்தோ ரறியாப் பெருங்கலஞ் சுரக்குவன்
சென்மதி வாழிய நீயே நின்வயி
னுடலு மகிழான் பாடலுங் கேளான்
வல்லே வருகென விடுப்பி னல்லது
நில்லென நிறுக்குவ னல்ல னல்லிசைப்
பெருந்தகை வேந்தர் கோலமொடு
திருந்தா வாழ்க்கையின் வருந்து வோயே."
"திருமழை தலைஇய விருணிற விசும்பின்."
(பத்து-மலைபடு கடாம்-1)

இவை கூத்தராற்றுப்படை.

"பாணன் சூடிய பசும்பொற் ருமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
யூரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானுக்
காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென்வே லண்ணற் காணு வூங்கே

நின்னினும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே யென்று
முடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேக
னெத்துணை யாயினு மீத்த னன்றெனை
மறுமைநோக் கின்றோ வன்றே
பிறர் வறுமைநோக் கின்றவன் கைவண் மையே."
(புறம்-141)

"மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை."
(பத்துப்-சிறுபாண்-1)

இவை பாணாற்றுப்படை.

"சிலையுலாய் நிமிர்ந்த சாந்துபடு மார்பி
னொலிபுனற் கழனி வெண்குடைக் கிழவோன்
வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்
வள்ளிய னாதல் வையகம் புகழினு
முள்ள லோம்புமி னுயர்மொழிப் புலவீர்
யானும், இருணிலாக் கழிந்த பகல்செய் வைகறை
யொருகண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றிப்
பாடிமிழ் முரசி னியறேர்த் தந்தை
வாடா வஞ்சி பாடினே னாக
வகமலி யுவகையொ டணுகல் வேண்டிக்
கொன்றுசினந் தணியாப் புலவுநாறு மருப்பின்
வெஞ்சின வேழ நல்கின னஞ்சி
யானது பெயர்த்தனெ னாகத் தானது
சிறிதென வுணர்ந்தமை நாணிப் பிறிதுமோர்
பெருங்களிறு நல்கி யோனே யதற்கொண்
டிரும்பே ரொக்கல் பெரும்புலம் புறினுந்
துன்னரும் பரிசி றருமென
வென்றுஞ் செல்லேனவன் குன்றுகெழு நாட்டே."
(புறம்-394)

"அருஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட்." (பத்துப்-பொருநர்-1-2)

இவை பொருநராற்றுப்படை.

"சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினு மருவி
கொள்ளுழு வியன் புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரு
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே." (புறம்-105)

"மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியில்." (புறம்-133)

இவை விறலியாற்றுப்படை.

கூத்தராற்றுப்படை தடுமாறுதொழிலாகாமற் கூத்தரை ஆற்றுப் படுத்தென விரிக்க. ஏனையவும் அன்ன.

முருகாற்றுப்படையுட் 'புலம்பிரிந் துறையுஞ் சேவடி' யெனக் கந்தழிகூறி, 'நின்னெஞ்சத் தின்னசைவாய்ப்பப் பெறுதி' யெனவுங் கூறி, அவனுறையும் இடங்களும் கூறி, ஆண்டுச் சென்றால் அவன் 'விழுமிய பெறலரும் பரிசி னல்கும்' எனவுங் கூறி, ஆண்டுத் தான் பெற்ற பெருவளம் அவனும்பெறக் கூறியவாறு காண்க. இதனைப் புலவராற்றுப்படை என்று உய்த்துணராது பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப்படை யென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க. இனி முருகாற்றுப்படை யென்பதற்கு முருகன்பால் வீடுபெறுதற்குச் சமைந்தான் ஒரிரவலனை ஆற்றுப்படுத்ததென்பது பொருளாகக் கொள்க. இனிக் கூத்தர் முதலியோர் கூற்றாகச் செய்யுட் செய்யுங்கால் அவர்மேல் வைத்துரைப்பினன்றிப் புலனுடை மாந்தர் தாமே புலனெறி வழக்கஞ் செய்யாமையுணர்க.

இனி இசைப்புலவர்க்கும் நாடகப்புலவர்க்கும் இங்ஙனங் கூறலமையாது ; அவருள் உயர்ந்தோரல்லாதாரும் அத் தொழிற்குப் பெரும்பான்மையும் உரியராய் நடத்தலின்.

நாளணி செற்ற நீக்கிச் சிறந்த பிறந்த நாள்வயிற் பெரு மங்கலமும்—நாடொறுந் தான் மேற்கொள்ளுகின்ற செற்றங் களைக் கைவிட்டுச் சிறந்த தொழில்கள் பிறந்தற்குக் காரண மான நாளிடத்து நிகழும் வெள்ளணியும்;

அரசன் நாடோறும் தான் மேற்கொள்கின்ற செற்றமாவன சிறைசெய்தலுஞ் செருச்செய்தலுங் கொலைபுரிதலும் முதலியன. சிறந்த தொழில்களாவன, சிறைவிடுதலுஞ் செருவொழிதலுங் கொலையொழிதலும் இறைதவிர்த்தலுந் தானஞ்செய்தலும் வேண்டின கொடுத்தலும் பிறவுமாம்.

மங்கலவண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து எவ்வுயிர்க் கண்ணும் அருளே நிகழ்தலின் அதனை வெள்ளணி யென்ப. ஆகுபெயரான் அப்பொருள் கூறிய செய்யுளும் வெள்ளணி யாயிற்று.

(எ-டு)

"அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்திரம்போன் மாண்ட களிறூர்ந்தா—ரெந்தை
யிலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு." (முத்தொள்ளாயிரம்-40)

இது சிலம்பி கூடிழக்குந்துணை அடங்கலும் வெளியாயிற் றென்றலின் வெள்ளணியாயிற்று.

"செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை யொருவனாற் போந்தரமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்தி
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்."

இது சிறைவிடுதல் கூறிற்று.

"கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர்
பண்ணார் நடைபுரவி பண்விடுமின்—நண்ணாதீர்
தேர்வேந்தன் றென்னன் றிருவுத் திராடநாட்
போர்வேந்தன் பூச லிலன்." (முத்தொள்ளாயிரம்-37)

இது செருவொழிந்தது.

"ஏமாரு மன்னீ ரெயிறிறமி னெங்கோமான்
வாமான்றேர்க் கோதை சதயநா—ளாமாறு
காம நுகருமின் கண்படுமி னென்னுமே
யேம முரசின் குரல்."

இதனுள் இழிகுலத்தோன் பறைசாற்றினமை கூறுதலின் இழிந்தோர் கூறுதல் ஒழிந்த மங்கலங்கட்கும் ஒக்கும். பெருமங் கல மென்றதனானே பக்கநாளுந் திங்கடோறும் வரும் பிறந்த நாளும் பாடலுட் பயிலாமை யுணர்க.

சிறந்த சீர்த்தி மண்ணும் மங்கலமும்—அரசர்க்குச் சிறப் பெய்திய மிக்க புகழை எய்துவிக்கும் முடிபுனைந்து ஆடும் நீராட்டு மங்கலமும்;

இதனைப் பிறந்தநாளின் பின்வைத்தார் பொன்முடி புனைந்த ஞான்று தொடங்கி யாண்டுதோறும் இது வருமென்றற்கு. குறு நில மன்னர்க்காயின் அவர்க்குரிய பட்டத்தோடு கூடிய மண்ணு மங்கலமுங் கொள்க :

(எ-டு)

"அளிமுடியாக் கண்குடையா னுகுதிநாள் வேய்ந்த
வொளிமுடி பொன்மலையே யொக்கு—மொளிமுடிமேன்
மந்திரத்தா லந்தணர் வாக்கியநீ ரம்மலைமே
லந்தரத்துக் கங்கை யனைத்து"

என வரும்.

இதனானே யாண்டு இத்துணைச் சென்றதென்று எழுதும் நாண்மங்கலமும் பெறுதும்.

நடைமிகுத்து ஏத்திய குடைநிழன் மரபும்—உலகவொழுக்கத்தை இறப்ப உயர்த்துப் புகழ்ந்து கூறப்பட்ட குடைநிழலதிலக்கணமும் ;

இங்ஙனம் புனைந்துரைத்தற்கு ஏதுவாயது நிழலாம்; என்னை? அந்நிழல் உலகுடனிழற்றியதாகக் கூறுதலும்பட்டுக் குடி புறங்காத்தற்குக் குறியாகக் குடைகொண்டேனென்று அக் கொற்றவன் குறிக்கவும் படுதலின்.

மரபென்றதனாற் செங்கோலுந் திகிரியும் போல்வனவற்றைப் புனைந்துரையாக்கலுங் கொள்க.

(எ - டு)

''மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்
திங்க ளதற்கோர் திலதமா—வெங்கணு
முற்றுநீர் வைய முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை''

(முத்தொள்ளாயிரம்-62)

எனவரும்.

''அறநீர்மை தாங்கி யளப்பரிதாய் வானப்
புறநீர்போன் முற்றும் பொதியும்—பிறரொவ்வா
மூவேந்த ருள்ளு முதல்வேந்தன் முத்தமிழ்க்குக்
கோவேந்தன் கண்டன் குடை''

எனவும்,

''ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ'' (புறம்-35)

எனவும்,

"திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்"
(சிலப்-மங்கல-புகார்க்காண்டம்)

எனவும்,

"திங்கண் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ
லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி
காவேரி." (சிலப்-கானல்வரி)

"ஞாயிறு போற்றுது ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்" (சிலப்-மங்கல.)

எனவும் இவை குடையையும் செங்கோலையுந் திகிரியையும் புனைந்தன.

மாணார்ச்சுட்டிய வாண்மங்கலமும்—பகைவரைக் குறித்த வாள் வென்றியாற் பசிப்பிணி தீர்ந்த பேய்ச்சுற்றமும் பிறரும் வாளினை வாழ்த்தும் வாண்மங்கலமும்;

இது பிறர் வாழ்த்தப்படுதலிற் கொற்றவையைப் பரவும் 'வென்ற வாளின் மண்' (புறத்திணை-13) ணென்பதனில் வேறு யிற்று. புகழ்ச்சிக்கட் பகைவரை இகழ்ந்து புகழ்தலின் மாணார்ச்சுட்டிய' என்றார்.

(எ - டு)

"ஆளி மதுகை யடல்வெய்யோன் வாள்பாடிக்
கூளிகள் வம்மினோ கூத்தாடக்—காளிக்குத்
தீராத வெம்பசி தீர்த்துநாஞ் செங்குருதி
நீராட்டி யுண்ட திணம்"

என வரும்.

"அரும்பவிழ்தார்க் கோதை யரசெறிந்த வொள்வாள்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச்—சுரும்பொடு
வண்டாடும் பக்கமு முண்டு குறுநரி
யுண்டாடும் பக்கமு முண்டு."

(முத்தொள்ளாயிரம்-10?)

இது பிறர் கூறியது.

இது பாணியிற் பயின்றுவரும்.

மன்னெயில் அழித்த மண்ணு மங்கலமும் - மாற்றரசன் வாழ்ந்த மதிலையழித்துக் கழுதையேரான் உழுது வெள்ளைவரகுங் கொள்ளும் வித்தி மங்கலமல்லாதன செய்தவன் மங்கலமாக நீராடுமங்கலமும்;

அழித்ததனுன் மண்ணுமங்கலம்.

(எ - டு)

"கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்" (புறம்-15)

என எயிலழித்தவாறு கூறி,

"வியாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட." (புறம்-15)

எனவே, ஒருவாற்ருன் மண்ணியவாறுங் கூறியவாறு காண்க.

குடுமிகொண்ட மண்ணுமங்கலம் எயிலழித்தல் கூருமையின் இதனின் வேருயிற்று.

பரிசில் கடைஇய நிலையும் - பரிசிலரை நீக்குதலமையாது நெடிது கொண்டு ஒழுகிய தலைவர்க்குப் பரிசில் வேட்டோன் தன் கடும்பினது இடும்பை முதலியன கூறித் தான் குறித்தபொருண் மையினைச் செலுத்திக் கடாவின நிலையும்;

கடைக்கூட்டு நிலையும் - வாயிலிடத்தே நின்று தான் தொடங்கிய கருமத்தினை முடிக்கும் நிலையும்;

இதுவும் இழிந்தோர் கூற்றுயிற்று, இருத்தலே அன்றிக் கடா வுதலின். நிலையென்றதனுனே பரிசில்பெறப் போகல்வேண்டு மென்னுங் குறிப்பும் பரிசினிலையும் பல்வகையாற் கூறுதல் கொள்க.

(எ-டு)

"ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பி
ளும்பி பூப்பத் தேம்பசி யுழவாப்
பாஅ லின்மையிற் றேலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே." (புறம்-164)

இது பரிசில் கடா நிலை.

"மதியேர் வெண்குடை யதியர் கோமான்
கொடும்பூ ணெழினி நெடுங்கடை நின்றியான்
பசலை நிலவின் பனிபடு விடியற்
பொருகளிற் றடிவழி யன்ன வென்கை
யொருகண் மாக்கிணை யொற்றுபு கொடாஅ
வுருகெழு மன்ன ராரெயில் கடந்து
நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்
தணங்குடை மரபி னிருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்

வைக லுழவ வாழிய பெரிதெனச்
சென்றியா னின்றனெ னாக வன்றே
யூருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை
நுண்ணூற் கலிங்க முடீஇ யுண்மெனத்
தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்
கோண்மீ னன்ன பொலங்கலத் தளைஇ
யுண்முறை யீத்த லன்றியுங் கோண்முறை
விருந்திறை நல்கி யோனே யந்தரத்
தரும்பெற லமிழ்த மன்ன
கரும்பிவட் டந்தோன் பெரும்புறங் கடையே."
(புறம் - 392)

இது கடை நிலை.

"நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
விசும்பா டெருவைப் பசுந்தடி தடுப்பப்
பகைப்புல மரீஇய தகைப்பெருஞ் சிறப்பிற்
குடுமிக் கோமாற் கண்டு
நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே." (புறம் - 64

இது போகல்வேண்டுங் குறிப்பு

"ஊனு மூனு முனையி னினிதெனப்
பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவு
மளவுபு கலந்து மெல்லியது பருகி
விருந்துறுத் தாற்றி யிருந்தனெ மாகச்
சென்மோ பெருமவெம் விழவுடை நாட்டென
யாந்தன் னறியுந மாகத் தான்பெரி
தன்புடை மையி னெம்பிரி வஞ்சித்
துணரியது கொளாஅ வாகிப் பழமூழ்த்துப்
பயம்பகர் வறியா மயங்கரின் முதுபாழ்ப்

பெயல்பெய் தன்ன செல்வத் தாங்க
ணீயா மன்னர் புறங்கடைத் தோன்றிச்
சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி
யூன்சுகிர் வலந்த தெண்கண் ணொற்றி
விரல்விசை தவிர்க்கு மாலையில் பாணியி
னிலம்பா டகற்றல் யாவது புலம்பொடு
தெருமர லுயக்கமுந் தீர்க்குவோ மதனா
னிருநிலங் கூலம் பாறக் கோடை
வருமழை முழக்கிசைக் கோடிய பின்றைச்
சேயை யாயினு மிவணை யாயினு
மிதற்கொண் டறிநை வாழியோ கிணைவ
சிறுநனி, யொருவழிப் படர்கென் றோனே யெந்தை
யொலிவெள் ளருவி வேங்கடநாட
னுறுவருஞ் சிறுவரு மூழ்மா றுய்க்கு
மறத்துறை யம்பியின் மான மறப்பின்
றிருங்கோ வீராப் பூட்கைக்
கரும்ப னூரன் காதன் மகனே." (புறம்-381)

இது மேலும் இக்காலத்தும் இங்ஙனந் தருவலென்றா னெனக் கூறினமையின் அவன் பரிசினிலை கூறிற்று.

"குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டீங்ஙனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே." (புறம்-208)

என்னும் புறப்பாட்டும் அப்பரிசினிலையைக் கூறியது காண்க

பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி நடைவயின் தோன்றும் இருவகை விடையும்—அங்ஙனம் பரிசில் பெற்றபின் அவ

னும் அவன் கொடுத்த பெருவளனை உயர்த்துக்கூறி உலகவழக்கியலால் தோன்றும் இரண்டு வகைப்பட்ட விடையும்;

இருவகையாவன, தலைவன் தானே விடுத்தலும் பரிசிலன் தானே போகல் வேண்டுமெனக் கூறிவிடுத்தலுமாம்.

(எ–டு)

"தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய
தொடையமை கண்ணித் திருந்துவேற் றடக்கைக்
கடுமா கடைஇய விடுபரி வடிம்பி
னற்றூர்க் கள்ளின் சோழன் கோயிற்
புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்துப்
பனிக்கயத் தன்ன நீணகர் நின்றெ
னரிக்கூடு மாக்கிணை யிரிய வொற்றி
யெஞ்சா மரபின் வஞ்சி பாட
வெமக்கென வகுத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பி னருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே யதுகண்
டிலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநருஞ்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரு
மரைக்கமை மரபின மிடற்றியாக் குநரு
மிடற்றமை மரபின வரைக்கியாக் குநருங்
கடுந்தே ரிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்
கறாஅ வருநகை யினிதுபெற் றிகுமே
யிருங்கிளைத் தலைமை யெய்தி
யரும்பட ரெவ்வ முழந்ததன் றலையே." (புறம்-378)

இது தானே போவென விடுத்தபின் அவன் கொடுத்த வளனை உயர்த்துக் கூறியது.

"உயிர்ப்பிடம் பெறூஅ தூண்முனிந் தொருநாட்
செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெந் தொல்பகுதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
யகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யானு
மென்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மைதீர வந்தனென்."

(பத்துப்-பொருநராற்-119-29)

இது யான் போகல்வேண்டுமெனக் கூறி விடுத்தபின், அவன் தந்த வளனை உயத்துக் கூறியது. 'நடைவயின் தோன்று' மென்றதனாற் சான்றோர் புலனெறிவழக்கஞ் செய்துவரும் விடைகள் பலவுங் கொள்க. அவை பரிசில் சிறிதென்று போக லும், பிறர்பாற் சென்று பரிசில்பெற்றுவந்து காட்டிப் போக லும், இடைநிலத்துப் பெற்ற பரிசிலை இடைநிலத்துக் கண் டார்க்குக் கூறுவனவும், மனைவிக்கு மகிழ்ந்து கூறுவனவும், பிற வும் வேறுபட வருவனவெல்லாங் கொள்க.

(எ-டு)

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே மாவண் டோன்ற
லதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே." (புறம்-121)

இது சிறிதென்ற விடை.

"இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்ல
ரிரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்

நீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே.'' (புறம்-162)

இது பிறன்பாற் பெரிதுபெற்றுச் சிறிது தந்தவற்குக் காட்டிய விடை.

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி'' என்னும் (152) புறப்பாட்டு இடைநிலத்திற் பரிசுபெற்றமை கண்டார்க்குக் கூறியது.

''நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
னெடுங்குறி யெதிர்ப்பை நல்கியோர்க்கு
மின்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயு
மெல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
றிருந்துவேற் குமண னல்கிய வளனே.'' (புறம்-193)

இது மனைக்கு கூறியது.

நாளும் புள்ளும் பிறவற்று நிமித்தமும் அச்சமும் உவகையும் எச்சமின்றிக் காலங்கண்ணிய ஓம்படை உளப்படை— நாணிமித்தத்தானும் புண்ணிமித்தத்தானும் பிறவற்றினிமித்தத் தானும் பாடாண்டலைவர்க்குத் தோன்றிய தீங்குகண்டு அஞ்சிய அச்சமும் அது பிறத்தற்குங் காரணமாகிய அன்பும் ஒழிவின் றிப் பரிசிலர்க்கு நிகழ்தலின் அவர் தலைவர் உயிர்வாழுங் காலத் தைக் கருதிய பாதுகாவன் முற் கூறியவற்றோடே கூட;

ஒருவன் பிறந்தநாள்வயின் ஏனைநாள்பற்றிப் பொருந் தாமை பிறத்தலும், அவன் பிறந்த நாண்மீனிடைக் கோண்மீன் கூடியவழி அவன் நாண்மீனிடைத் தீதுபிறத்தலும், வீழ்மீன்

தீண்டியவழி அதன்கண் ஒரு வேறுபாடு பிறத்தலும் போல்வன நாளின்கண் தோன்றிய நிமித்தம் "புதுப்புள் வருதலும் பழம்புட் போதலும்" (புறம்-20) பொழுதன்றிக் கூகை குழறலும் போல்வன புள்ளின்கண் தோன்றிய நிமித்தம்; ஓர்த்து நின்றுழிக் கேட்ட வாய்ப்புள்ரும் ஓரிக்குர லுள்ளிட்டனவுங் கழுதுடன் குழீஇய குரல்பற்றலும் வெஞ்சுடர் மண்டிலத்துக் கவந்தம் வீழ்தலும் அதன்கண் துளைதோன்றுதலுந் தண் சுடர் மண்டிலம் பகல் நிலவெறித்தலும் போல்வன பிறவற்றுக்கண் தோன்றிய நிமித்தம்.

உவகை-அன்பு. இந்நிமித்தங்கள் பிறந்துழித் தான் அன்பு நிகழ்த்திஞல் ஒரு பாடாண்டலைவனது வாழ்க்கை நாளிற்கு ஏதம் வருங்கொலென்று அஞ்சி அவற்குத் தீங்கின்றாகவென்று ஓம்படை கூறுதலின் அது காலங்கண்ணிய ஓம்படையாயிற்று. எஞ்ஞான்றுந் தன் சுற்றத்து இடும்பை தீர்த்தாரொருவற்கு இன்னுங்கு வந்துழிக் கூறுதலின், இற்றைஞான்று பரிசிலின் றேனும் முன்னர்ப் பெற்ற பரிசிலை நினைந்து கூறினுமாகவே கைக்கிளைக்குப் புறனாயிற்று. இவன் இறத்தலான் உலகுபடுந் துயரமும் உளதாகக் கூறலிற் சிறந்த புகழுங் கூறிற்று.

"நெல்லரியு மிருந்தொழுவர்" என்னும் (24) புறப்பாட்டினுள் "நின்று நிலைஇயர்நின் னுண்மீன்" என அவனுளிற்கு முற்கூறிய வாற்றான் ஓரிடையூறு கண்டு அவன்கண் அன்பால் அஞ்சி ஓம்படை கூறியது.

(எ-டு)

"ஆடிய லழற்குட்டத்
தாரிரு ளரையிரவின்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனி யுயரழுவத்துத்
தலைநாண்மீ னதனெதிரேர்தரத்
தொன்னுண்மீன் றுறைபடியப்
பாசிச் செல்லா தூசி முன்னு
தளக்கர்த்திணை விளக்காகக்

கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
யொருமீன் வீழ்ந்தன்றால் விசும்பி னானே
யதுகண் டியாமும் பிறரும் பல்வே றிரவலர்
பறையிசை யருவி நன்னாட்டுப் பொருந
னோயில னாயி னன்றுமற் றில்லென
வழிந்த நெஞ்ச மடியுளம் பரப்ப
வஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
மைந்துடை யானை கைவைத் துறங்கவுந்
திண்பிணி முரசங் கண்கிழிந் துருளவுங்
காவல் வெண்குடை கால்பரிந் துலறவுங்
காலியற் கலிமாக் கதியின்றி வைகவு
மேலோ ருலக மெய்தின னாகலி
னொண்டொடி மகளிர்க் குறுதுணை யாகித்
தன்றுணை யாய மறந்தனன் கொல்லோ
பகைவர்ப் பிணிக்கு மாற்ற லசைவர்க்
களந்து கொடையறியா வீகை
மணிவரை யன்ன மாஅ யோனே.'' (புறம்-229)

இதனுட் பாடாண்டலைவனது நாண்மீனை வீழ்மீன் நலிந்தமை பற்றிக் கூறியது.

''இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமு மென்றாங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை
யறிவு மீரமும் பெருங்கண் ணோட்டமுஞ்
சோறுபடுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்று தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவி லல்லது கொலைவில் லறியார்
நாஞ்சி லல்லது படையு மறியார்
திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்
பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் னாட்டு

வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவ ருண்ணா வருமண் ணினையே
யம்புதுஞ்சுங் கடியரணா
லறந்துஞ்சுஞ் செங்கோலையே
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
யனையை யாகன் மாறே
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே." (புறம்-20)

இப் புறப்பாட்டும் அது.

புதுப்புள் வந்ததும் பழம்புட் போயதுங் கண்ட தீங்கின் பயன் நின்மேல் வாராமல் விதுப்புறவறியா ஏமக் காப்பினையாக என்று ஓம்படை கூறியது அது மேல் நின்னஞ்சுமென்று அச்சங் கூறி வெளிப்படுத்ததனுன் உணர்க.

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயுந்
தீமுரணிய நீரும், என்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடையோய்
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
வலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
பாஅல்புளிப்பினும் பகலிருளினு
நாஅல்வேத நெறிதிரியினுந்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி

நடுக்கின்றி நிலியரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தி யந்தண ரருங்கட னிறுக்கு
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே"
(புறம்-2)

என்னும் புறப்பாட்டுப் பகைநிலத்தரசற்குப் பயந்தவாறு கூறிப் பின்னர்த் திரியாச் சுற்றமொடு விளங்கி நடுக்கின்றி நிற்பா யென அச்சந்தோன்றக் கூறி ஓம்படுத்தலின் ஓம்படை வாழ்த் தாயிற்று. "காலனுங் காலம்" என்னும் (41) புறப்பாட்டும் அது.

ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பிற் கால மூன்றொடு கண்ணிய வருமே - உலகத்துத் தோன்றும் வழக்கினது கருத் தினானே மூன்று காலத்தோடும் பொருந்தக் கருதுமாற்றான் வரும் மேற்கூறிவருகின்ற பாடாண்டிணை என்றவாறு.

என்றது, இவ்வழக்கியல் காலவேற்றுமைபற்றி வேறுபடு மாயின், அவையும் இப்பொருள்களின் வேறுபடா என்ப துணர்த்தியவாறு.

அவை, பகைவர்நாட்டுப் பார்ப்பார் முதலியோரை ஆண்டு நின்றும் அகற்றிப் பொருதல் தலையாய அறம்; அதுவன்றிப் பொருள் கருதாது பாதுகாவாதான் நிரையைத் தான்கொண்டு பாதுகாத்தல் அதனினிழந்த இடையாய அறம்; அதுவன்றிப் பிறர்க்கு அளித்தற்கு நிரைகோடல் நிகழினும், அஃது அதனினு மிழிந்த கடையாய அறமெனப்படும். இனிப் பகைவன் போற் றுத நாட்டைக் கைக்கொண்டு தான் போற்றச் சேறலும், பொருள் வருவாய்ப்பற்றிச் சேறலும், வஞ்சித்துச் சேறலும் போல்வன ஒன்றனின் ஒன்றிழிந்த ஞாலத்து நடக்கைக் குறிப்பு; மாற்றரசன் முற்றியவழி ஆற்றாதோன் அடைத்திருத்தலும், அரசியலாயினும் அவன் வென்றியுள்ளமொடு வீற்றிருத்தலுந், தனக்கு உதவிவரவேண்டியிருத்தலும், ஆற்றலன்றி ஆக்கங் கருதாது காத்தேயிருத்தலும் ஒன்றனினொன்றியழிந்த நடக்கைக் குறிப்பு.

இனி வாகைக்குப் பார்ப்பன ஒழுக்க முதலியன நான்கற்கும் வேறுபட வருதலுங் கொள்க. காஞ்சிக்கும் அவரவர் அறிவிற்கேற்ற நிலையாமை கொள்க; உயிரும் உடம்பும் பொருளுமென்ற மூன்றும் பற்றி. இது பாடாண்டிணையுட் கூறினார், எல்லாத்திணைக்கும் புறனடையாதல் வேண்டி. இனிக் கடவுள் வாழ்த்திற்குத் தலை இடை கடைகோடலும், அறுமுறை வாழ்த்திற்கும் அவற்றின் ஏற்றிழிவு பற்றிக்கோடலும், பிறவுஞ் சான்றோர் செய்யுட்கண் வேறுபட வருவனவெல்லாம் இதனான் அமைக்க. முற்கூறியனவெல்லாம் ஓம்படையுளப்படக் கண்ணிய வருமென்பது.

(வி-ரை) தாவில் - வலியால்; "தாவே வலியும் வருத்தமும் ஆகும்" என்பது தொல்காப்பியம். சூதர் - நின்று ஏத்துவார். மாகதர் - இருந்து ஏத்துவார். வேதாளிகர்-வேதாளி ஆடுவார். (சிலம்பு: இந்திர விழா எடுத்த காதை - அடியார்க்கு நல்லார்) வந்திகர் - புகழ்ந்து பாடுவார். தாவில் நல்லிசை - கேடில்லாத நற்புகழ் என உரை காண்பர் இளம்பூரணர்.

நந்திய - கெட. சேக்கை வளர்ந்தனை-துயில்கொண்டனை. அன்று - அந்நாள். உணர்ந்தாங்கு - துயில் எழுந்தாற்போல.

பாரசவர் - பார்ப்பனருக்குப் பிற இனத்துப் பெண்வழிப் பிறந்தவர்.

பாரதிவிருத்தி - கூத்தன் தலைவனாக நடன்நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது. விலக்கியற் கூத்து - பொருள் யோனி முதலிய பதினான்கு வகைப்பட நடிக்கும் கூத்தாம். இவற்றின் இயல்பையும் விரிவையும் சிலப்பதிகாரத்து அரங்கேற்று காதை கொண்டு அறிக. கானகக்கூத்து - இன்னதெனத் தெரிந்திலது. கழாய்க்கூத்து - மூங்கிலில் ஆடுவது; இதனைக் கம்பங் கூத்து என்பர்.

மண்டைப் பாணர்-இரப்பதற்குரிய கலத்தை ஏந்தி வருவார். திருமுருகாற்றுப் படைக்குரிய இலக்கணத்தைத் தொல்காப்பியத்தின் வழிப்பெற வேண்டுமெனக்கருதி நச்சினார்க்கினியர் நூற்

பாவின் கிடக்கை முறையை மாற்றிக் கூறியுள்ளார். நூற்பாவின் கிடக்கை முறையை மாற்றாது இளம்பூரணர் கூத்தராயினும் பாணராயினும் பொருநராயினும் விறலியாயினும் நெறியிடைக் காட்சிக் கண்ணே எதிர்ந்தோர் உறழ்ச்சியால் தாம் பெற்ற பெருவளன் நுமக்குப் பெறலாகும் எனச் சொன்ன பக்கமும் என உரைத்திருப்பதே பொருத்தமுடைத்தாம். ஆற்றிடைக்காட்சி - நெறியிடத்தே கண்ட. உறழ - தன்முன்எதிர்ப்பட. நச்சினார்க்கினியருக்கு ஆற்றிடைக் காட்சி என்பது இல்லறத்தின் கண்டதென்பது பொருளாகும்.

பூட்டுவிட்டு - பிணிப்புவிட்டு. அசைஇ - இளைப்பாறி.

புல்லியேம் - வறியேம்.

கலிமான் - மனம் செருக்கிய குதிரை.

தெளிர்ப்ப ஒற்றி - ஒலிக்குமாறு ஒலிப்பித்து.

சாறு கழி வழி நாள் - திருவிழா கழிந்த பின்பு

தடவுவாய் - பெரிய இடத்தையுடைய சுனையின் கண். கலித்த - தழைத்த.

மால்புடை - பக்கம் திரண்ட.

கூத்தராற்றுப்படை - கூத்தரால் ஆற்றுப் படுத்துதல்.

கூத்தரை ஆற்றுப்படுத்தல், கூத்தர்கண் ஆற்றுப்படுத்துதல் எனப் பிரிக்கலாம். ஆதலின் அது தடுமாறு தொழிலாயிற்று, அவ்வாறு ஆகாது இரண்டனுருபை விரித்தல் வேண்டுமென்பது கருத்து.

புலவராற்றுப் படையெனப் பெயர் கூறுவார் ஐயனாரிதனார். 'இருங்கன் வானத்து இமையோருழைப் பெரும்புலவனை ஆற்றுப் படுத்தன்று' என்பது அவர் கூறும் இலக்கணமாகும். அதனையே இங்கு மறுக்கின்றார்.

இறைதவிர்த்தல் - வரிதவிர்த்தல். இளம்பூரணர் நூற்பா அமைந்திருக்குமாறே சிறந்த நாள் எனப் பொருள் காண்பர்.

மந்தரம் - மலை; வெளியாயிற்று - தூய்மை செய்யப்பட்டது.

களவழிப்பா - களவழி என்னும் நூல். வேந்துக்குழாம் ஒருவனால் போந்தரமோ எனக் கூட்டுக.

பண்விடுமின் - போர்க்கோலத்தை நீக்கிவிடுமின்;

ஏமம் ஆரும் மன்னீர் - இன்படையத்தக்க மன்னரே!.

வாமான் - தாவுகின்ற குதிரை.

பக்கநாள் - பிறந்த நாளுக்கு முன்னும் பின்னுமாய நாள்;

அளிமுடியாக்கண் - அருளுதலில் முடிவடையாதகண்; அத்தகைய கண்ணையும் குடையையும் உடையான் என்பதாம்.

யாண்டு இத்துணைச் சென்றதென்று எழுதுவதாவது; ஐம்பதாண்டு நிறைவிலும் அறுபதாண்டு நிறைவிலும் செய்யும் மங்கலம் போன்றன.

வானப்புறநீர்-வானவெளியின் தன்மை; கண்டன்-சோழன்.

உழிஞையில் வரும் வாள்மங்கலம் வேந்தர் தாம் வென்றியெய்துதற்குக் காரணமாய் இருந்த வாளினைக் கொற்றவைமேல் நிறுத்திக் கொற்றவையை வழிபடுவதாகும இது பேய்ச் சுற்றமும் பிறரும் தம் பசிப்பிணி தீர்தற்குக் காரணமாய் இருந்த வாளினை வாழ்த்துவதாகும். இவை தம்முள் வேற்றுமை.

ஆளிமதுகை - சிங்கத்தின் வலிமை.

தேர்குழித்த - தேரினால் குழியாக்கப்பட்ட. ஞெள்ளல் தெரு

கடும்பின திடும்பை - சுற்றத்தினது துன்பம்

அடு என்பது ஆடு என நீண்டது. அடுநனி மறந்த - (உணவு) அடுதலை மிகவும் மறந்த. கோடு - பக்கம், இல்லி - துளை; தொடுத்தும்-வளைத்தும்; மண்ணுல்-மாற்சினை (ரவை) அமைந்த

பசலைநிலவு - இளநிலவு. சிதாஅர் - கந்தைத்துணி

பிறங்கடை - வழித்தோன்றல்; ஆகுளி - சிறுபறை; சிதாஅர்வள் பின் - துண்டித்த வார்களால் கட்டப்பட்ட. அரலையில் - தாளத் தோடுகூடிய. அம்பியின்மான - தெப்பத்தைப்போல.

மிடல் - வலிமை; அரிக்கூடு - அரித்ததசை; இழை - அணி. சிதறியவன் - சினந்தவன்

பொதுநோக்கு - புலவர்களின் அறிவுநிலைக்கேற்பக் கருதாது ஒப்பக் கருதுதல்

புரவலை-பாதுகாப்பவனாய். கடிமரம்-காவல் மரம். கடுமான்-விரைந்து செல்லும் குதிரை.

குறியெதிர்ப்பை - குறித்த அளவு வாங்கிக் குறித்த அளவு கொடுத்தல்

முதிரம் - மலை

நாள்மீன்-விண்மீன் (நட்சத்திரம்) கோள்மீன்-பன்னிருவகைக் கோள்கள் (கிரகங்கள்). வாய்ப்புள் - சொல்நிமித்தம்.

ஆடு - மேடராசி. அழற்கூட்டம் - கார்த்திகைநாள். முடப்பனை - அனுடநாள். குளத்துக்கயம் - புனர்பூசம். தலைநாண்மீன் - உத்திரம். நிலைநாள்மீன் - மூலம். தொன்நாண்மீன் - மிருகசீரிடம், பாசி - கீழ்த்திசை. ஊசி - வடதிசை. அளக்கர்த்திணை - நிலவுலகம்.

முந்நீர்க்குட்டம் - கடலது ஆழம். திருவில் - இந்திரவில். வயவுறு மகளிர் - கருவுற்ற மகளிர்.

சூழ்ச்சி - ஆராய்ச்சி. ஈரைம்பதின்மர் - துரியோதனன் முதலிய நூற்றுவர்.

நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை

அகத்திணை மருங்கின்	— 56	காமஞ்சாலா	— 50
அடியோர் பாங்கினும்	— 23	காமப் பகுதி	— 83
அதுவே தானும்	— 66	காரும் மாலையும்	— 6
அமரர்கண் முடியும்	— 81	குடையும் வாளும்	— 68
அயலோர் ஆயினும்	— 38	குழவி மருங்கினும்	— 84
அவற்றுள், ஓதலும்	— 26	கூதிர் வேனில்	— 76
அவற்றுள், நடுவண்	— 2	கைக்கிளை முதலா	— 1
அறுவகைப்பட்ட	— 75	கொடிநிலை கந்தழி	— 88
ஆயர் வேட்டுவர்	— 21	கொடுப்போர் ஏத்தி	— 90
இயங்கு படையரவம்	— 63	கொண்டுதலைக்	— 15
இருவகைப் பிரிவும்	— 11	கொள்ளார்தோம்	— 67
உயர்ந்தோர்க்குரிய	— 31	கொற்றவள்ளை	— 89
உரிப்பொருள் அல்லன	— 13	தலைவரு விழுமம்	— 37
உழிஞைதானே	— 64	தன்னும் அவளும்	— 36
உள்ளுறுத் திதனோடு	— 48	தாவில் கொள்கை	— 74
உள்ளுறை உவமம்	— 46	தாவில் நல்லிசை	— 91
உள்ளுறை தெய்வம்	— 47	தானையானை	— 72
ஊரொடு தோற்றமும்	— 85	தானே சேறலும்	— 27
எஞ்சா மண்ணசை	— 62	திணை மயக்குறுதலும்	— 12
எஞ்சியோர்க்கும்	— 42	தும்பைதானே	- 69
எத்திணை மருங்கினும்	— 35	தெய்வம் உணாவே	— 18
எந்நில மருங்கிற்	— 19	நடுவு நிலைத்திணையே	— 9
ஏமப் பேரூர்	— 37	நாடக வழக்கினும்	— 53
ஏவல் மரபின்	— 24	நிகழ்ந்தது கூறி	— 44
ஏறிய மடற்றிறம்	— 51	நிகழ்ந்தது நினைத்தற்கு	— 43
ஏனை உவமம்	— 49	படையியங் கரவம்	— 58
ஏனோர் மருங்கினும்	— 22	பனியெதிர் பருவமும்	- 7
ஒன்றாத் தமரினும்	— 41	பாங்கரும் சிறப்பின்	— 78
ஓதல் பகையே	— 25	பாடாண் பகுதி	— 80
கணையும் வேலும்	— 71	பின்பனிதானும்	— 10
கலந்த பொழுதும்	— 16	புணர்தல் பிரிதல்	— 14
காஞ்சி தானே	— 77	புறத்திணை மருங்கிற்	— 55

பெயரும் வினையுமென் — 20
பொருள் வயிற்பிரியி — 33
பொழுதும் ஆறும் — 40
மக்கள் நுதலிய — 54
மரபுநிலை திரியா — 45
மறங்கடை கூட்டிய — 59
மன்னர் பாங்கின் — 30
மாயோன் மேய — 5
மாற்றரும் கூற்றம் — 79
முதல் எனப்படுவது — 17
முதல் எனப்படுவது — 4
முதல் கருவுரிப் — 3
முந்நீர் வழக்கம் — 34
முழுமுதல் அரணம் — 65
மெய்ப்பெயர் மருங்கின் — 87
மேலோர் முறைமை — 29
மேவிய சிறப்பின் — 28
மைந்து பொருளாக — 70
வஞ்சிதானே — 61
வழக்கொடு சிவணிய — 86
வழங்கியன் மருங் — 82
வாகை தானே — 73
வெறியறி சிறப்பின் — 60
வேந்துவிடு முனைஞர் — 57
வேந்துவினை இயற்கை — 32
வைகுறு விடியல் — 8